மக்கள் தகவல் தொடர்பியல்

கலைச் சொல் அகராதி

டாக்டர் அ. ஆலிஸ்

மக்கள் தகவல் தொடர்பியல்

கலைச் சொல் அகராதி

டாக்டர் அ.ஆலிஸ்
எம்.ஏ., (தமிழ்), எம்.ஏ., (மொழியியல்), எம்.ஏ., (இதழியல் & மக்கள் தகவல் தொடர்பியல்), எம்.ஃபில்., பிஎச்.டி.,
விரிவுரையாளர்
தமிழியல் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - 620 024.

மதுமதி வெளியீடு
திருச்சிராப்பள்ளி

மக்கள் தகவல் தொடர்பியல்
கலைச் சொல் அகராதி

டாக்டர் அ.ஆலிஸ்

முதற்பதிப்பு : நவம்பர் 1995

வெளியீடு : மதுமதி பப்ளிகேஷன்ஸ், திருச்சிராப்பள்ளி.

நூல் கிடைக்குமிடம் :

1) மதுமதி பப்ளிகேஷன்ஸ்
1, விஸ்வகர்மா நகர்
விமான நிலையம்
திருச்சிராப்பள்ளி - 620 007

2) மீனாட்சி புத்தக நிலையம்
மயூரா காம்ப்ளக்ஸ்
48/11 & 12 தானப்பமுதலி தெரு
மதுரை - 625 001

விலை : ரூ. 140/-

அச்சிட்டோர் : ஜெயகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சிவகாசி.
லேசர் டைப்செட்டிங் : லாசூன் லேசர் டைப்செட்டர்ஸ், சிவகாசி.

வாழ்த்துரை

முனைவர் மா. இராமலிங்கம்
பேராசிரியர் & துறைத்தலைவர்
தமிழியல் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - 620 024.

துறைதோறும் துறைதோறும் நம் தமிழ் வளர வேண்டும் என்று பேசி வருகிறோம். பேச்செல்லாம் வெறும் வாய்ப்பந்தலாகவே முடிகிறது. அதற்காகத் தம்மை ஆட்படுத்திக் கொண்டு உழைப்போரைத்தான் நாட்டில் காணமுடிவதில்லை. அப்படி உழைப்போர்க்கும் நாட்டில் மரியாதை இல்லை. இந்த நாட்டின் அவலம் இது. ஆனாலும், எந்தக் கனவுகளையும் இலக்காக்கிக் கொள்ளாமல் அறிவுத் தாகம் காரணமாகவே உழைப்போர் இல்லாமல் போய்விடவில்லை. தமிழ் இன்றும் வாழ்ந்து வருவதற்கும்/ வளர்ந்து வருவதற்கும் இப்படி உழைப்போரே காரணம்.

டாக்டர் அ.ஆலிஸ் ஒரு புதிய துறையில் நுழைந்து பல ஆண்டுக் கால உழைப்பிற்குப் பின் ஓர் அரிய கருவி நூலைத் தமிழுக்குத் தந்திருக்கிறார். பத்து நூல்களைப் படித்துவிட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்துச் சேர்த்து ஒரு புதிய நூலை உருவாக்குவது போன்றதன்று இது. புதியன காணும் வேட்கை, வரையறை சான்ற திட்டம், முறையான உழைப்பு, தெளிவான சிந்தனை, எதையும் பிறர்க்கு எளிதாகப் புரிய வைக்கும் திறன் இத்தனையும் உடையோரே அடிப்படையான கருவி நூல்களை உருவாக்க முடியும். டாக்டர் அ.ஆலிஸ் தம் முயற்சியில் வெற்றி பெற்றிருக்கிறார். 'மக்கள் தகவல் தொடர்பியல் கலைச்சொல் அகராதி' என்னும் இந்நூல் இத்துறையில் நுழைவோர்க்கு வழிகாட்டவல்ல கைவிளக்கு ; வேண்டும்போதெல்லாம் பயன்படுத்திக் கொள்ளத்தக்க வைப்புநிதி.

'நெட்வொர்க்' என்பதை 'வலைப்பிணைப்பு' என்று தமிழாக்கம் செய்கிறார். 'பிரைட்னர்' என்பதனைப் 'பொலிவூட்டி' என்று மொழி பெயர்க்கிறார். சில இடங்களில் ஆங்கிலச் சொற்களை அதன் வாழ்வாற்றல் கருதி அப்படியே எடுத்தாளுகிறார். ஒவ்வொரு பதிவிலும் அமையும் விளக்கங்களைத் தெளிவாகவும் செறிவாகவும் அமைத்துப் போகிறார். 'லாபி நிருபர்கள்' என்பதை மிகச் சில வாக்கியங்களிலேயே விளக்கிவிடுகிறார். அறிவாண்மையும், சிந்தனைத் தெளிவும் உடையோரே இப்படியெல்லாம் செய்ய முடியும்.

எங்கள் பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழியல்துறை ஆய்வறிஞர் பாசறை ; சிந்தனையாளர் பட்டறை. ஒவ்வொரு வகையில் பட்டை தீட்டப்பட்டு ஒளிரும் மணிகளின் பேழை. இங்கே இருந்து ஒரு நல்ல நூல் வெளிவருவது எங்கட்குப் பெருமையேயல்லவா?

நூலாசிரியர் அ.ஆலிசைப் பாராட்டுகிறேன் ; வாழ்த்துகிறேன். இவர் கல்வித்துறையில் மேன்மேலும் சிறந்து விளங்க இறைவன் திருவருள் புரிவானாக !

மா. இராமலிங்கம்

அணிந்துரை

டாக்டர் அ.சாந்தா
இணைப்பேராசிரியர்
தலைவர் – பொறுப்பு
இதழியல் மற்றும் அறிவியல் தகவல் தொடர்புத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 625 021

தகவல் யுகத்தின் தலைவாயிலில் நாம் இப்போது நின்று கொண்டிருக்கிறோம். டெலக்ஸ் என்றும், ஃபேக்ஸ் என்றும் ரேடியோ பேஜர் என்றும், செல்லுலர் ஃபோன் என்றும் நாளொரு கண்டுபிடிப்பு நுழைந்த வண்ணம் இருக்கிறது. ஒன்றைப் புரிந்து கொள்ளுமுன் மற்றொன்று, ஒன்றைத் தெரிந்து கொள்ளுமுன் வேறொன்று. விலையில், வேகத்தில் வேறுபாடு. அளவில், ஆற்றல் பயன்பாட்டில் வேறுபாடு. எண்களைச் சுழற்றித் தொலைவில் இருப்பவரோடு உரையாட மட்டுமே பயன்பட்டுவந்த தொலைபேசி இணைப்புகள் மோடமாக மாறி கத்தை கத்தையான தகவல்களைக் கண நேரத்தில் கடத்துகின்றன. ஃபேக்ஸாக மாறி ஆவணங்களை அனுப்புகின்றன. அதனால் சாதாரண தொலைபேசிக் கேபிள்கள் அவற்றின் மிகுமதிப்பு சேவையால் (Value added services) தகவல் பெருவழியை (information super highway) உருவாக்கியுள்ளன. இந்த விந்தைகளெல்லாம் எங்கோ நிகழ்கின்றன, நமக்கென்ன, என்று விட்டேற்றியாக இருப்பது இனிமேலும் சாத்தியமில்லை. ஏனெனில் இந்த மாற்றங்கள் நமது அன்றாட செயல்பாடுகளைப் பாதிக்கின்றன. நமது உறவு முறைகளையும் பொருளாதாரத்தையும் பாதிக்கின்றன. இந்த ஊடகங்கள் நம் மத்தியில் வாழவில்லை. நாம்தான் இவற்றின் மத்தியில் வாழ்கிறோம். எனவே இந்த ஊடகச் சூழலைப் புரிந்து கொள்ள வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

ஊடகங்களைப் பற்றிய தகவல் நமக்கு மூன்று நிலைகளில் தேவைப்படுகின்றது. முதலாவது ஊடகம் பற்றிய தொழில் நுட்பத் தகவல். இரண்டாவது அவற்றில் பயன்படும் உள்ளடக்கத்தை உருவாக்குவது பற்றிய தகவல். மூன்றாவது ஊடகங்களில் இடம்பெறும் உள்ளடக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைப் பற்றிய தகவல். இந்த மூன்று வகைத் தகவலையும் பல்வேறு நூல்களிலிருந்து திரட்டித் தொகுத்து, மொழிபெயர்த்து செறிவான நூலாக்கித் தந்திருக்கிறார் டாக்டர் ஆலிஸ். நான்கைந்து அறிஞர்கள் சேர்ந்து செய்யக்கூடிய ஒரு பெரிய பணியைத் தாம்

ஒருவராக நின்று முனைந்து முடித்திருக்கிறார். இளநிலை வகுப்புக்களிலும், முதுநிலை வகுப்புக்களிலும், இதழியல், மக்கள் தகவலியல், விளம்பரம் ஆகியவற்றைக் கற்கும் மாணவர்க்கு இந்நூல் ஒரு கிடைத்தற்கரிய பொக்கிஷம். தவிர தகவல் தொடர்பியலைப் பற்றி தெரிந்து கொள்ள விரும்பும் ஒவ்வொரு சாதாரண வாசகர்க்கும் இது ஒரு தகவல் புதையல்.

'அகர ஆதி' என்று இந்த நூலுக்குப் பெயரிட்டிருந்தாலும் ஆங்கில எழுத்துக்களின் வரிசைப்படிதான் கலைச் சொற்களைத் தொகுத்திருக்கிறார். ஏனெனில் ஆங்கிலக் கலைச் சொற்களே பெரிதும் புழக்கத்தில் இருக்கின்றன. அவற்றுக்கு இணையான தமிழ்ச்சொற்கள் பல உருவாக்கப்படவில்லை. உருவாக்கப்பட்ட சிலவற்றிலும் ஒருமித்த கருத்து இல்லை. மொழிபெயர்க்கும்போது தமிழ் இலக்கியத்திலும், மொழியியலிலும் பெற்றுள்ள பயிற்சி இவருக்குக் கைகொடுத்திருக்கின்றது. கலைச் சொற்களின் பொருளை உள்வாங்கிக் கொண்டு, மொழியின் கட்டமைப்புக்கு ஏற்பவும், பொருள் சிதையாதவாறும் மொழிபெயர்த்திருப்பது பாராட்டுக்குரியது. சில இடங்களில் ஆங்கிலச் சொற்களை அப்படியே ஒலி பெயர்த்திருக்கிறார் (லைஞே டைப்பு). சில இடங்களில் நேரடியாக மொழி பெயர்த்திருக்கிறார் (local news- உள்ளூர்ச் செய்தி). சில இடங்களில் வழக்கிலிருக்கும் வேறு ஆங்கிலச் சொல்லை மொழி பெயர்ப்பாகத் தருகிறார் (line up- மார் ஜின்). சில இடங்களில் நீளமான தொடர்களைப் பயன்படுத்தியிருக்கிறார் (limbo- படப்பிடிப்பு தொடர்பான புறக்காட்சிப் பொருட்கள்). மொத்தத்தில் புரியுமாறு சொல்ல வேண்டும் என்ற வேட்கை இருப்பது புலப்படுகின்றது.

மூன்றாண்டு காலம் கடுமையாக உழைத்து 1560 கலைச் சொற்களை அகராதியாக்கித் தந்திருக்கிறார். இந்நூலை அகராதி என்று சொல்வதைவிடக் கலைக் களஞ்சியம் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அந்த அளவுக்குத் தகவல்கள் இதில் செறிந்திருக்கின்றன.

தமிழ் இதழியல் வரலாற்றில் டாக்டர் ஆலிஸின் கலைச் சொல் அகராதிக்கு நிச்சயமாக இடமுண்டு.

அ. சாந்தா

முன்னுரை

இந்நூற்றாண்டில் மக்கள் தகவல் தொடர்பு சாதனங்கள் மக்களின் வாழ்வில் பெரும்பங்கு வகிக்கின்றன. சென்ற நூற்றாண்டில் நிகழ்ந்த புதுமைகளுள் ஒன்றாகிய அச்சு இயந்திரத்தின் வரவால் விளைந்த பத்திரிகைகளும் இதழ்களும் மக்களுடன் பின்னிப் பிணைந்தவையாகிவிட்டிருக்கின்றன. பத்திரிகைகள் மட்டுமல்லாமல் மின்னணுச் சாதனங்களாகிய வானொலியும் தொலைக்காட்சியும் இல்லையெனில் மக்கள் தகவல் தொடர்பே இல்லை என்று கூறுமளவிற்கு இவை சமுதாயத்தில் நிலைத்த இடம் பெற்றுள்ளன. தொலைக் காட்சியின் புதுமைகளாகிய கேபிள் தொலைக்காட்சியும் செயற்கைக் கோள் வழி ஒளிபரப்பும் வந்த பின்னர் தொலைக்காட்சியும் பொதுமக்களின் பெரு விருப்பத்திற்குரிய ஒரு தகவல் தொடர்பு சாதனமாக ஆகி இருக்கிறது.

சமுதாயத்தோடு இணைந்துள்ள இத்தகைய மக்கள் தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் மக்கள் தகவல் தொடர்பு பற்றிய கல்வி பல்வேறு நிலைகளில் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங் களிலும் பாடமாக வைக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழி வழி இவற்றைக் கற்கும் நிலையும் பல்வேறு கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் உள்ளது. ஆனால் இவற்றிற்கான நூல்கள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே உள்ளன. ஒரு சில நூல்கள் மட்டுமே தமிழில் வெளிவந்துள்ளன. குறிப்பாக. மக்கள் தகவல் தொடர்பு சாதனங்களின் தொழில் நுட்ப முன்னேற்றம், வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றிற்கு நிகழ்ச்சி எழுதும் முறை, பத்திரிகைச் சட்டங்கள் போன்றவற்றிற்கான நூல்கள் தமிழில் இல்லை. மக்கள் தகவல் தொடர்பியல் பற்றிய ஆங்கில நூல்கள் இத்துறை சார்ந்த பல்வேறு கலைச் சொற்களையும் அவற்றிற்கான விளக்கங்களையும் உள்ளடக்கியுள்ளன. இத்துறை சார்ந்த பல்வேறு ஆங்கிலக் கலைச்சொற்களையும் அவற்றிற்கான வரைவிலக் கணங்கள், விளக்கங்கள், சான்றுகள் போன்றவற்றையும் பல்வேறு நூல்களிலிருந்து திரட்டித் தொகுத்துத் தருவது இதழியல் மற்றும் மக்கள் தகவல் தொடர்புத் துறை சார்ந்த பேராசிரியர்களுக்கும், இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கும் ஆய்வு மாணவர்களுக்கும் மக்கள் தகவல் தொடர்பு சாதன நிலையத் தாருக்கும் மிகுதியும் பயனுடையதாய் இருக்கும் என்ற நோக்கில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் தரப்பட்டுள்ள அனைத்துக் கலைச் சொற்கள், விளக்கங்கள், கோட்பாடுகள், சான்றுகள் போன்ற யாவும் பல்வேறு நூல்களிலிருந்து தொகுக்கப்பட்டவை. இத் தொகுப்பிற்கு உதவிய நூல்கள் நூலின் இறுதியில் துணை நூற் பட்டியலில் தரப்பட்டுள்ளன. இந்நூலில் தரப்பட்டுள்ள ஆங்கிலக் கலைச் சொற்கள் பிற நூல்களிலிருந்து தொகுக்கப்பட்டு பின்னர் அவற்றிற்கு இணையான தமிழ்க் கலைச் சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் ஏற்கனவே சில தமிழ்க் கலைச்சொற்கள் வழங்கப்பட்டு வருமாயின் அவை அப்படியே பயன்படுத்தப்பட்டுள்ளன ; மக்கள் மத்தியில் ஆங்கிலக் கலைச் சொல்லே செல்வாக்குப் பெற்று புழக்கத்தில் இருக்குமாயின் அவ்வாங்கிலக் கலைச் சொல்லே அப்படியே தமிழிலும் தரப்பட்டுள்ளது ; புழக்கத்தில் எந்தச் சொல்லும் இல்லாத சூழலில் புதிய தமிழ்ச் சொற்கள் இந்நூலில் புதிதாக உருவாக்கிக் கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு கலைச் சொல் பதிவிற்கும் வரைவிலக்கணமும் தேவைப்பட்டால் விளக்கமும் சான்றும் தரப்பட்டுள்ளன.

> *"வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக*
> *விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாங் கண்டு*
> *தெளிவுறுத்தும் படங்களோடு சுவடியெலாம் செய்து*
> *செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்"*
>
> (பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், ப. 95)

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் தமிழ் வளர்ச்சி குறித்த கனவின் நிறைவேற்றலில் ஒரு சிறு கடுகளவாவது இந்நூல் பங்கு வகிக்குமாயின் மகிழ்வேன்.

திரு. என். ரெங்கநாதன் அவர்களும் முனைவர் ஆர். விஜயராணி அவர்களும் விளம்பரம் தொடர்பாக உருவாக்கிய விளம்பரக் கலைச் சொற்கள் (Adman's Language) என்ற நூலுக்கு அடுத்தபடியாக மக்கள் தகவல் தொடர்பியல் முழுமைக்குமாகத் தமிழில் வெளிவரும் அகராதி என்ற வகையில் இந்நூல் புதிய முயற்சி. ஆதலால் இதில் பல குறைகள் இருக்கலாம். இத்துறையினுள்ளேயே சில களங்கள் சார்ந்த கலைச் சொற்கள் விடுபட்டிருக்கலாம். அடுத்த பதிப்பில் இக்குறைகளைக் களைய முயல்வேன்.

இந்நூல் வெளிவருவதற்கு எனக்குப் பலரும் பல விதங்களில் துணையாக இருந்தனர். அவர்கள் அனைவருக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

முதன்முதலில் மக்கள் தகவல் தொடர்பியல் சார்ந்த கலைச் சொற்பட்டியல் (Glossary) ஒன்று தயாரிக்குமாறு என்னைத் தூண்டியவர் எம் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் மா.இராமலிங்கம் அவர்களே. அதன்பேரில் நான் கலைச்சொற் பட்டியல் ஒன்று தயாரித்தபோதுதான் இப்பணியினைக் கலைச்சொல் அகராதியாக விரிவாக்கினால் நல்லது என்ற எண்ணம் எனக்குத் தோன்றிற்று. எனவே பேராசிரியர் மா. இராமலிங்கம் அவர்கள் தந்த ஆரம்பம் இந்நூலுக்கு அடிப்படையாக அடைந்தது. பேராசிரியர் அவர்கள் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்திருக்கிறார்கள். மதிப்பிற்குரிய டாக்டர் மா. இராமலிங்கம் அவர்களுக்கு எனது நன்றியினை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கலைச்சொற்பட்டியல் தயாரிக்க முனைந்த போது இத்துறை சார்ந்த கலைச் சொற்களைச் சேகரிக்கத் தேவையான ஆலோசனைகளை எனக்கு வழங்கி இப்பணியைச் செம்மையாகச் செய்ய என்னை ஊக்குவித்தவர் மதுரை காமராசர் பல்கலைக்கழக இதழியல் மற்றும் அறிவியல் தகவல் தொடர்புத் துறையின் துறைத்தலைவர் டாக்டர் அ.சாந்தா அவர்கள். எவ்வெந் நூல்களைப் படித்துக் கருத்துக்களைத் தொகுக்க வேண்டும் என்று ஒரு நூற்பட்டியலே தந்தார்கள். மேலும் இப்பணி இடையிடையே பல்வேறு நிலைகளில் தடைப்பட்டபோதெல்லாம் அதுபற்றி விசாரித்து ஊக்குவித்ததுடன் நான் தொகுத்த இக்கருத்துக்கள் நூலாக அவசியம் வெளிவர வேண்டும் என்றும் கூறி என்னை உற்சாகப்படுத்தினார்கள். நான் இந்நூலை எழுதி முடித்தபோது தனது பல்வேறு பணிகளுக்கிடையேயும் நேரம் ஒதுக்கி நூல் முழுமையையும் பொறுமையுடன் திருத்தித் தந்து தேவையான மாற்றங்களைக் குறிப்பிட்டு ஆலோசனை வழங்கினார்கள். இவை மட்டுமன்றி இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியும் இந்நூலினைச் சிறப்பித்திருக்கிறார்கள். மதிப்பிற்குரிய எனது பேராசிரியை டாக்டர் அ.சாந்தா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்ளுகிறேன்.

இந்நூல் முழுவதையும் படித்துத் தன் கருத்துக்களை வழங்கு மாறு நான் கேட்டபோது இன்முகத்துடன் ஒத்துக் கொண்டவர் மதுரை காமராசர் பல்கலைக்கழக இதழியல் மற்றும் அறிவியல்தகவல் தொடர்புத்துறை விரிவுரையாளர் எஸ். அருள்செல்வன் அவர்கள். நூல் முழுமையும் படித்துத் தேவையான மாற்றங்கள், விளக்கங்கள், சான்றுகள் முதலியவற்றைக் குறிப்பிட்டதுடன் பல படங்களையும்

சேர்க்குமாறு அறிவுறுத்தினார்கள். நண்பர் அருள்செல்வன் அவர்களுக்கு என் அன்பான நன்றி.

வானொலி தொடர்பான கலைச்சொற்கள் குறித்த சில அய்யங்களை நான் கேட்டபோது, திருச்சி வானொலி நிலையத்தில் பணியாற்றும் நண்பர் சித்தார்த்தன் அவர்கள் அவ் அய்யங்களுக்கான விளக்கங்களை அவை தொடர்பான கருவிகளை நேரில் காட்டி விளக்கிக் கூறித் தெளிவு பெறச் செய்தார். அவருக்கும் என் நன்றி உரியது.

இந்நூல் எழுதி முடிக்கப்பட்டபோது அதனைத் தெளிவாகத் தட்டச்சு செய்து கொடுத்த எம் அலுவலக நண்பர் முருகானந்தம் அவர்களுக்கும் இந் நூலுக்குத் தேவையான படங்களை நன்கு வரைந்து தந்த மதுரை ஓவியர் டேவிட் அவர்களுக்கும் என் நன்றி. மற்றும் இந்நூல் எழுதுவதற்குத் தேவையான நூல்களுள் சிலவற்றைப் பல்வேறு நண்பர்கள் தந்துதவினர். அவர்களையும் நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

எனது கல்வி தொடர்பான செயற்பாடுகளிலும் முன்னேற்றத்திலும் என்றும் அக்கறை கொண்டு அதற்கான உதவிகளை மிகுந்த அன்புடன் செய்து என்னை எந்நாளும் ஊக்குவித்துவரும் மரியாதைக்குரிய எனது சித்தப்பா சிவகாசி இந்து நாடார் விக்டோரியா மேல் நிலைப்பள்ளி முன்னாள் தலைமை ஆசிரியர் உயர்திரு மா.பால்ராஜ், எம்.ஏ., பி.டி., அவர்கள் இந்நூல் வெளிவருவதற்கு எனக்குப் பக்கபலமாக இருந்து பெரிதும் உதவி செய்திருக்கிறார்கள் ; அவர்களுக்கு எனது நன்றியினைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்நூலினை அச்சாக்கம் செய்வதற்கு ஒப்புதல் தந்து மிகவும் நல்லவண்ணம் அச்சிட்டு உதவிய சிவகாசி ஜெயகர் ஆஃப்செட் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு. வேம்பார் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக, நான் இந்த நூலினை எழுதும் பணியில் தொடர்ந்து சில ஆண்டுகள் ஈடுபட்டபோது அனைத்து நேரங்களிலும் அதற்குத் தேவையான சூழலை உருவாக்கித் தந்து பொறுமையுடன் உதவிய எனது அன்பு அம்மாவுக்கு என் நன்றி என்றும் உரியது.

அ. ஆலிஸ்

A

AAAA : (அமெரிக்க விளம்பர நிறுவனங்களின் கழகம்)'American Association of Advertising Agencies' என்ற சொற்றொடரின் முதல் எழுத்துச் சுருக்கம் ஆகும். விளம்பரத் தயாரிப்பின் வண்ணம், அளவு மற்றும் பிற கூறுகள் தொடர்பானவை இன்னின்னவாறு அமைதல் சிறப்பு என இவ்வமைப்பு வரையறை செய்கிறது. இவ்வாறு வரையறுத்தல் விளம்பரங்கள் செம்மையாக அமைவதற்கும் விளம்பரங்கள் குறித்து மேலும் ஆய்வு செய்வதற்கும் உதவுகிறது. இந்நிறுவனம் 4A க்கள் (4 As) என்றும் அழைக்கப்படுகிறது.

ABC : 1. (நாளிதழ்கள் விற்பனைக் கணிப்பு நிறுவனம்) 2. (அமெரிக்க, ஆஸ்திரேலிய ஒலிபரப்பு நிறுவனங்கள்) 1) 'Audit Bureau of Circulations' என்ற சொற்றொடரின் முதலெழுத்துச் சுருக்கம் ஆகும். இது விளம்பர தாரர்கள், விளமபர நிறுவனங்கள் மற்றும் இதழாளர் களுக்காகச் செயல்படும் நிறுவனம் ஆகும். பொதுமக்களுக்கும் விளம்பர தாரர்களுக்கும் இதழ்களின் விற்பனையைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் ஏற்படுவதுண்டு. நாளிதழ்களின் விற்பனை குறித்த கணக்குகளைத் தொகுத்துச் சரி பார்த்துப் பதிவு செய்து நாளிதழ்களுக்கு அது குறித்த சான்றிதழைத் தருதல் இந் நிறுவனத்தின் பணி ஆகும். இந்தியாவில் 1949-ஆம் ஆண்டு பம்பாயில் இவ்வமைப்பு தோன்றியது. நம் நாட்டில் வெளியாகும் எல்லா நாள், வார, மாத இதழ்களின் நாடு முழுவதுமான விற்பனையை ஆண்டுக்கு இருமுறை கணக்கிடும் இந்நிறுவனம், ஆண்டு இறுதியில் விற்பனைக்கான சான்றிதழை அளிக்கிறது. இச்சான்றிதழ் அறிவிக்கும் விறபனை எண்ணிக்கையே அனைவரும் ஏற்றுக் கொள்வதாக உள்ளது. இந் நிறுவனத்தின் 1994-ஆம் ஆண்டு அறிக்கையின்படி இந்தியாவில் அதிக விற்பனையாகும் நாளிதழ்களின் விபரம் பின்வருமாறு.

அதிக விற்பனையாகும் நாளிதழ்கள்- 1994

	செய்தித்தாள்கள்	*பதிப்புகள்*	*மொழி*	*விற்பனை*
1.	மலையாள மனோரமா	ஐந்து	மலையாளம்	7,48,783
2.	டைம்ஸ் ஆஃப் இந்தியா	ஆறு	ஆங்கிலம்	7,11,063
3.	பஞ்சாப் கேசரி	மூன்று	ஹிந்தி	6,13,903
4.	இந்தியன் எக்ஸ்பிரஸ்	பதினைந்து	ஆங்கிலம்	5,37,727
5.	மாத்ருபூமி	ஐந்து	மலையாளம்	4,92,658
6.	தி ஹிந்து	ஏழு	ஆங்கிலம்	4,78,139
7.	ஈநாடு	ஏழு	தெலுங்கு	4,75,830
8.	ஆனந்த பஸார் பத்திரிகை	-	வங்காளி	4,58,104
9.	சந்தேஷ்	நான்கு	குஜராத்தி	4,39,186
10.	நவபாரத் டைம்ஸ்	நான்கு	ஹிந்தி	3,85,499
11.	ஹிந்துஸ்தான் டைம்ஸ்	இரண்டு	ஆங்கிலம்	3,77,190
12.	தினத்தந்தி	பத்து	தமிழ்	3,60,456
13.	ராஜஸ்தான் பத்திரிகை	ஐந்து	ஆங்கிலம	3,42,921
14.	நவ்கல்	-	மராத்தி	2,94,654
15.	லோக் சத்தா	மூன்று	குஜராத்தி	2,73,149

2) அமெரிக்க ஒலிபரப்பு நிறுவனமும் (American Broadcasting Corporation) ஆஸ்திரேலிய ஒலிபரப்பு நிறுவனமும் (Australian Broadcasting Corporation) அவற்றின் முதலெழுத்துச் சுருக் கத்தைக் கொண்டு ABC என்றே அழைக்கப்படுகின்றன. ஆஸ்திரேலியா ஒலிபரப்புக் கழகத்தின் ஒரு நிலைத்த பிரிவான, 'ரேடியோ ஆஸ்திரேலியா', 1930-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-ஆம் நாள் தொடங்கப்பட்டு 1950-இல் ABCஇன் நிலைத்த பிரிவாகச் செயல்பட ஆரம்பித்தது. 50 மில்லியன் வாடிக்கை நேயர்களைக் கொண்ட 'ரேடியோ ஆஸ்திரேலியா", ஆசிய, பசிபிக் நாடுகளில் பல நேயர்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

ABP : (வணிக வெளியீட்டாளர் கழகம்) 'Association of Business Publishers' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம். வணிகம் குறித்த இதழ் வெளியீட்டாளர்களின் சங்கம் இது. சிறப்பு வணிகச் செய்தி வெளியீடுகள் தொடர்பான அமைப்பு ஆகும்.

ABU : (ஆசிய ஒலிபரப்புச் சங்கம்) 'Asian Broadcasting Union' என்ற ஆங்கிலச் சொற்றொடரின் முதலெழுத்துச் சுருக்கம்.

Academy leader : (செய்தித் திரைப்பட முன்விளக்கப் படம்) தொலைக்காட்சியில் அல்லது திரைப்பட அரங்கில் செய்தித் திரைப்படத்தின் ஆரம்பத்தில் ஓரிரு வினாடிகளுக்கு மட்டும் முகப்பு போல ஓடும் சிறு குறிப்புப் படம்.

Access : (நுழைவுரிமை அல்லது கருத்துரிமை) ஒரு சமுதாயத்தில் உள்ள எல்லோரது நோக்குகளும் தெரிவிக்கப்படுவதற்கு உள்ள உரிமை கருத்துரிமை ஆகும். மக்கள் தகவல் தொடர்பு சாதனங்களுக்கிடையே காணப்படும் பன்முகத்தன்மைகள் (Diversity) பத்திரிகைச் சுதந்திரத்தின் விரும்பத்தக்க விளைவாகும். ஜனநாயக நாடுகளில் வெவ்வேறுபட்ட அரசியல் கருத்துக்களும் புதிய கருத்துக்களும் மக்களிடையே போட்டி போட்டுக் கொண்டு தோன்றுகின்றன. மேலும் பல்வேறு சமுதாயங்களில் காணப்படும் சமுதாய, வட்டார, பண்பாட்டு, மொழி, மத வேறுபாடு களுக்கிணங்கவும் பல்வேறு பத்திரிகை கள் அல்லது பல்வேறு ஒலிபரப்பு அலைவரிசைகள் தேவையாகின்றன. இத்தகு காரணங்களினால் மக்கள் தகவல் தொடர்பு சாதனங்களுக் கிடையேயும் ஒரு மக்கள் தகவல் தொடர்பு சாதனத்திற்குள்ளேயும் (சான்றாக ஒரு நாளிதழுக்குள்ளேயே) பன்முகத் தன்மைகள் நிலவுகின்றன.

இத்தகு பன்முகத்தன்மைகள் இரு துணைக்கொள்கைகளின் அடிப்படை யில் எழுகின்றன. அவை : 1) பிரதி பலிப்புப் பன்முகத்தன்மை (Reflective diversity) 2) திறந்த கருத்துரிமை (Open access). இதில் இரண்டாம் கொள் கைப்படி ஒரு சமுதாயத்தில் உள்ள எல்லோரது நோக்குகளும் அல்லது ஒரு சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளும் ஒரே மதிப்புடையன. ஒருவர் சேர்ந்திருக்கும் குழுவின் அளவு எந்த அளவாய் இருப்பினும் எல்லாக் குரல்களும் தெரிவிக்கப்படுவதற்கு ஒரே மாதிரியான வாய்ப்பு உண்டு. இக்கொள்கையின் அடிப்படையிலேயே எல்லோரது கருத்துக்களும் தெரி விக்கப்பட்டு, மக்கள் தகவல் தொடர்பு சாதனப் பன்முகத்தன்மைகள் அமை கின்றன. இக்கொள்கை பெரிதும் சமுதாய மாற்றத்தோடு தொடர்பு டையது.

Access time : (நுழைவு வேளை) கணிப்பொறியின் செயலைத் தெரிவு

செய்வதற்கும் அது திரையில் தோன்றுவதற்கும் இடைப்பட்ட இடைவேளை.

Accreditation : (அங்கீகாரம்) அரசின் சார்பில் செய்தியாளர்களுக்கு வழங்கப் படும் அங்கீகாரம். அரசு அங்கீகாரம் பெற்றவர்களுக்கென ஒரு அட்டை வழங்கப்படும். அவ்வட்டையைக் கொண்டு வருபவர் ஒரு அங்கீகரிக் கப்பட்ட நிருபர் என்று அவ்வட்டை இனங்காட்டும். இந்த அரசு ஒப்புதல் அட்டையின் (Accreditation Card) உதவியோடு மக்கள் தகவல் தொடர்பு சாதன நிருபர்கள் பிரச்சினைகள் உள்ள இடங்களுக்குச் செல்ல முடியும். அங்கீகாரம் பெற்ற நிருபர்களுக்கென அரசு பல சலுகைகளை வழங்கியுள்ளது. செய்தியாளர்களுக்கு வழங்கப்படுவது போல, விளம்பர நிறுவனங்களுக்கும் அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

Accuracy : (துல்லியம்) தகவல் தொடர்பு சாதனம் தரும் செய்தியின் துல்லியம் மற்றும் உண்மை ; ஒரு நிருபர் காலத்தோடு போட்டி போட்டுக்கொண்டு முந்திச் சென்று செய்தி சேகரிக்க வேண்டும். செய்தி வெளியீட்டிற்காகச் செய்தியை வழங்கக் கொடுக்கப் பட்டிருக்கும் காலக் கெடுவின் (dead line) மீது அவர் கவனம் வைத்துக் கொண்டே செய்திக் கதைகளை உரிய நேரத்தில் சரியாகச் சேகரித்து எழுதித் தரவேண்டும். இவ்வளவு துரிதத்திற்கிடையிலும் துல்லியமாகத் தவறின்றிச் செய்தியை அவர் சேகரித்துத் தரவேண்டும். 'சரியாக எழுது ; இப்பொழுதுதே எழுது' (Get it right and Get it now), 'அய்யமிருப்பின் அகற்றிவிடு' (When in doubt cut it out) என்ற வாசகங்கள் பொதுவாக எல்லா நிருபர்களும் பின்பற்ற வேண்டிய வழிகாட்டி வாசகங்கள் ஆகும்.

துல்லியமாகத் தவறின்றிச் செய்தியை அவர் சேகரித்துத் தரவேண்டும். 'சரியாக எழுது ; இப்பொழுதே எழுது' (Get it right and Get it now), 'அய்யமிருப்பின் அகற்றிவிடு' (When in doubt cut it out) என்ற வாசகங்கள் பொதுவாக எல்லா நிருபர்களும் பின்பற்ற வேண்டிய வழிகாட்டி வாசகங்கள் ஆகும்.

செய்தி அறையின் முதல் கட்டளையே துல்லியமாகச் செய்தி தருதல் என்பதுதான். அதுவே இறுதியானதும் கூட. செய்தி மேசைதான் (Copy desk) தவறுகளைக் கண்டுபிடித்துத் திருத்திக்கொள்ளும் செயல்களின் இறுதி இடம் ஆகும். செம்மையாளரின் (Sub Editor) மனதிலும் எல்லா நேரத்தும் உச்சநிலையில் இருக்க வேண்டிய ஒன்று துல்லியமாகச் செய்தி தருதல் என்பது ஆகும். செய்தித் தாள்கள் தனது வாசகர்களிடம் நம்பிக்கையைப் பெற வேண்டு மேயானால் அதன் முதன்மைப் பணியே உண்மையான செய்தியைக் கூறுதலாக இருக்க வேண்டும். ஒரு இதழாசிரியர் (Editor) செய்தி சரியல்லாத தவறான தகவலைத் தந்திருக்கிறது என்று எண்ணினால அதனைத் திருத்திக்கொள்ள அவர் மேற் கொள்ளக் கூடிய செயல்கள் பின்வருமாறு : 1) அச்செய்தி தொடர்பாக எது தவறு : அதனைச் சரியாக்க என்ன செய்யவேண்டும் என்று தெளிவாக அய்யமின்றித் தெரிந்தால் இதழாசிரியர் அச்செய்தி யில் உள்ள தவறைத் திருத்திவிடலாம். 2) அத்தகவல் சரியானதுதானா என்று உறுதியாகத் தெரியாவிட்டால் இதழாசிரியர் அத்தகவலை நீக்கி விடலாம். 3) அத்தகவல் உண்மை யானதுதானா என நிருபருடன் இதழாசிரியர் பேசித் தெரிந்து கொள்ளலாம். 4) செய்தி அறையில்

நிருபர் இல்லாதபோது அல்லது உடனடியாக அவருடன் தொடர்பு கொள்ள முடியாதபோது இதழாசிரியர் மீண்டும் ஒருமுறை அத்தகவல் குறித்து ஏற்கனவே விவாதிக்கப்பட்ட குறிப்புக்களைப் பார்த்துச் சரி செய்யலாம்.

A Copy : (A· செய்திப்படி) பல்வேறு வழியாகச் செய்தி அலுவலகத்திற்கு வந்து சேரும் செய்திகள் : செய்தி அல்லது 'மேட்டர்' என்று அழைக்கப்படும் : ஒரு செய்திக் கதையின் மிக முக்கியச் செய்தி அலலது ஏற்கனவே வந்த செய்தி தவிர அப்போதுதான் அது தொடர்பாக வந்த கடைசிச் செய்தியைக் குறிக்கும். இதன் முதல் பகுதியில் ஒரு செய்தி முகப்பைச் (lead) சேர்த்துவிட்டால் பொதுவாக நாளிதழுக்குரிய முழுச் செய்தியாக ஆகிவிடும்.

Acoustic : (எதிர்வு அலை) வானொலித் துறையில் வழங்கும் சொல் இது. ஓசை எதிர்வு அலைகளைப் பற்றிய சொல். நான்கு சுவர்களுக்குள்ளே எழுப்பப்படும் ஓசை எந்த அளவிற்கு எதிர்வு அலைகளை அளிக்கிறது என்பது பற்றிய அளவை.

Acoustical setting : (ஒலிச்சூழல்) வானொலி நேயர் வானொலி நிகழ்ச்சிகளைக கேட்கும்போது நிகழ்ச்சியின் பின்னணியைக் (நிகழ்ச்சி நடைபெற்ற/நடைபெறும் இடத்தை) கணணால் பார்க்காமல் ஒரு இடத்தைத் தன் மணத்தால் கற்பனை செய்கிறார் : அக்கற்பனைக்கு உதவும் வண்ணம் தரப்படும் ஒலிகளால் அச்சூழல் செம்மையாகக் கோடி காட்டப்பட வேண்டும். ஒரு ஒலி எந்தச் சூழலுக்சேற்ப எவ்வாறு ஒலிக்க வேண்டுமோ அவ்வாறே ஒலிக்கும்படி செய்தல் ஒலிச்சூழல் அமைத்தல் ஆகும். நிகழ்ச்சியை எழுதுவோர் ஒலிச்சூழல் குறித்துத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தால்தான் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் அவ்வாறே நிகழ்ச்சியைச் சிறப்பாகத் தயாரிக்க முடியும். சான்றாக வானொலி நாடகம் ஒன்றின் ஒரு காட்சியில் கிணற்றுக்குள்ளிருந்து ஒருவர் 'உதவுங்கள்', 'என்னைக் காப்பாற்றுங்கள்' என்று கூவினால் அவ்வொலி கிணற்றுக்கு வெளியே இருப்பவருக்கு எவ்வாறு (எந்த அளவில்) கேட்குமோ அதே முறையில் அக்குறிப்பிட்ட காட்சியில் அவ்வொலியை ஒலிக்கச் செய்து பதிவு செய்தல் அவசியம் ஆகும். இதே போல் எல்லாக் காட்சிகளிலும் ஒலிச்சூழல் கவனிக்கப்பட வேண்டும்.

Acoustic screen : (எதிர்வு அலைத் தடுப்புத் திரை) தனிப்பட்ட எதிர்வு அலைகளை உண்டாக்கவும் தடுக்கவும் தேவையற்ற ஓசையானது ஒலிவாங்கியை வந்து அடையாதபடி தடுக்கும் திரை. ஒருபக்கம் மென்மையாய்த் தாங்கிக் கொள்ளக்கூடியதாயும் மற்றொரு பக்கம் கரடுமுரடாய் எதிர் ஓசை தரக்கூடியதாயும் அமைந் திருக்கும்.

Action area : (சம்பவக் களம்) ஒரு குறிப்பிட்ட சூழலில் குறிப்பிட்ட நிகழ்ச்சி நடந்த இடம் : அந்நிகழச்சிக் குறிப்புக்களே மக்கள் தொடர்பு சாதனங்களில் செய்திகளாகின்றன. சான்று : 'இன்ன சூழலில் இனக் கலவரம் இன்ன இடத்தில் நடந்தது' என்ற செய்தியில் இனக்கலவரம் தொடர்பான கலகங்கள், வெட்டு, குத்து முதலியன நடந்த ஊர் அச்செய்தி நடந்த சம்பவக் களம் ஆகும்.

Active voice : (செய்வினை) இதழ் மற்றும் ஒலிபரப்பு நடையில் அடிக்கடி பயன்படுத்தப்படும் தொடரமைப்பு செய்வினையே, இத்தொடர்

வலிவுடையதும், ஆற்றல் மிக்கதும், செய்தி அல்லது விளம்பரத்தை உயிருள்ளது போல் தோன்றச் செய்வதும் ஆகும். செயப்பாட்டு வினையை (Passive Voice) எப்போதாவது பயன் படுத்தினால் ஒரே வகையான அமைப்பிலிருந்து செய்தியை வேறுபடுத்திக் காட்ட உதவும். அதனை அடிக்கடி பயன் படுத்தும் போது செய்திக் கதை நேயர்களிடம் ஏற்படுத்தும் பாதிப்பைக் குறைத்து விடும். எனவே செய்வினைத் தொடரமைப்பே இதழ் மற்றும் ஒலிபரப்பு நடைக்கு ஏற்றது.

Actual audience : (நேயர்கள்) நேயர்கள் என்ற இவ்வகை வானொலி, தொலைக்காட்சி நேயர்கள் சிறிய குழுவினரே ஆவர். இப்படிப்பட்ட நேயர்கள் ஏற்கனவே குறிப்பிட்ட நேரத்தில் தவறாமல் வானொலி கேட்கும் அல்லது தொலைக்காட்சி பார்க்கும் நேயர்கள் ஆவர். இவர்கள் உண்மையிலேயே ஆர்வத்துடன் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைக் கவனிப்பவர்கள் ஆவர். சாத்திய நேயர்கள் (Potential audience) போலல்லாது இவர்கள் நேரத்திற்கு நேரம் மாறுபவர்கள். காலத்திற்கேற்ப மாறுபவர்கள். நேயர்கள் என்ற இவர்கள் பொதுவாகத் தொலைக் காட்சி பார்ப்பது பெரும்பாலும் தொலைக்காட்சியின் முதன்மை நேரங்களிலேயே.

Actuality : (மெய்க்காட்சி) தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கெனக் காட்சிப் பதிவுக் கருவியில் பதிவான காட்சிகள் மெய்க்காட்சிகள் எனப்படும். வானொலி நிகழ்ச்சியாயின் நிகழ்ச்சியில் பங்கேற்கும் குறிப்பிட்ட நபரின் பதிவு செய்யப்பட்ட உண்மையான குரல் மெய்க்குரல் எனப்படும். தொலைக்காட்சி விளக்கப்படம் (Documentary) போன்றவற்றில் நேயர்கள் குறிப்பிட்ட காட்சியை மிக அருகாமையில் நடப்பதாக உணருமாறு சூழல் படைக்கப்பட்டிருந்தால்தான் நேயர் களின் கவனத்தைப் பெறமுடியும். நேயர்களுக்கு உண்மையான ஈடுபாட்டை அல்லது அனுபவத்தை ஏற்படுத்த மெய்க் காட்சிகள் பயன்படும்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவோரின் உண்மைக் குரலையே பதிவான காட்சியோடு பயன்படுத்தும் போது அந்த உண்மைக்குரல் 'ஒலித் துணுக்கு' (Sound bite) என அழைக்கப் படுகிறது. விளக்கப்படம் போன்ற வற்றில் விளக்கத்துடன் உண்மைக் காட்சியாகிய படக் காட்சியும் சேர்த்துத் தரப்படுகிறது. விளக்கப் படங்களில் விளக்கம் அளிக்கும் நிருபரது குரலைவிட பங்கு பெறு வோரைப் பேசச் சொல்வதன் மூலம் தொடர்புடையவரின் குரலையே அளிப்பது மேலும் நம்பகத்தன்மைக்கு வலுவூட்டுகிறது.

தொலைக்காட்சிச் செய்தி நிகழ்ச்சியில் (News Programme) கூறப்படும் செய்திக்கதைக்குத் துணைமையாகப் படம் (மெய்க்காட்சி) அமைகிறது. விளக்கப்படங்களில் செய்திப் படத்திற்குத் (மெய்க் காட்சிக்குத்) துணையாக விளக்கம் இடம் பெறுகிறது.

Ad : (விளம்பரம்) விளம்பரம் என்ற பொருள்தரும் ஆங்கிலச் சொல்லாகிய 'Advertisement' என்பதன் சுருக்கம் 'ad' ஆகும். மக்கள் தொடர்பு சாதனங் களில் வணிக நோக்கில் குறிப்பிட்ட பொருட்கள் குறித்தோ அல்லது வணிக நோக்கில் அல்லாமல் வேறு சில பணிகள், இடங்கள், நிறுவனங்கள் குறித்தோ விளம்பரதாரரால் பொது மக்களுக்குத் தரப்படும் செய்தி விளம்பரம் ஆகும்.

Add : (சேர்ப்பு) ஏற்கனவே எழுதப்பட்ட செய்திக் கதையோடு சேர்த்துக்

கொள்ளப்பட வேண்டிய கூடுதல் விபரம். சேர்த்துக் கொள்ளப்படும் விபரம் செய்திப்படி-1 (Copy 1) என்று குறிக்கப்படும். ஏற்கனவே எழுதப்பட்ட செய்திக் கதையோடு சேர்த்துக் கொள்ளப்பட் வேண்டிய எந்த விபரமும் இவ்வகைப்படும். சான்றாக "add 1 fire" என்று குறிப்பிட்டால் தீப்பிடித்தது பற்றிய செய்தியோடு சேர்க்க வேண்டிய விபரம் என்று பொருள்.

Ad-lib : (நேரடி ஒலி–ஒளிக் கூறு) ஏற்கனவே ஒத்திகை எதுவும் பார்க்கப்படாததும் எழுதித் தயாரிக் கப்பட்ட எழுத்துப் படிவத்தைப் (Script) பயன்படுத்தாததுமான பேச்சு அல்லது செயல். தொலைக்காட்சி நிகழ்ச்சியின் முழுப் பகுதிக்குள் ஏதாவது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளை நேரடிச் செயலாக அல்லது நடிப்பாகக் காட்டுதல் 'ad lib' எனப்படும். வானொலியைப் பொறுத்தவரை எழுதி வைக்காமல் நேரடியாய்ப் பேசுவது நேரடி ஒலிக் கூறு (ad lib) எனப்படும். சில குறிப்புக்களை மட்டும் வைத்துக் கொண்டு பேசுவது இதன்பாற்படும்.

Adoption : (தழுவல்) தகவல் தொடர்பு சாதனங்கள் தம் மொழியிலோ அல்லது பிற மொழியிலோ உள்ள படைப்புக் களை நிகழ்ச்சியாகத் தயாரிக்கும் போது அப்படைப்பைத், தழுவி எழுதுவதோ அல்லது அப்படியே தயாரிப்பதோ உண்டு. தழுவல் முறையில் கதையின் மொத்தப் பகுதியும் அப்படியே எடுத்துக் கொள்ளப்பட்டு சிற்சில மாற்றங் களுடன் தயாரிக்கப்படும்.

Advance story : (ஆயத்த செய்திக் கதை) நிகழப்போகும் ஒரு நிகழ்ச்சி யைப் பற்றி முன்கூட்டியே வெளியிடப் பட்டுள்ள செய்திக் கதை. சான்றாக ஒருவரது பேச்சு, அரசியல் தலைவர் ஒருவரது வரவு, நடைபெறப்போகும் பேரணி, விளையாட்டு விழா போன்ற நிகழ்ச்சிகள் மாலை நடைபெறப் போகின்றன என்றால் காலையில் வெளியிடும் நாளிதழில் அதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதைப் பற்றிய செய்தி வெளிவருமாயின் அவை ஆயத்த செய்திக்கதைகள் எனப்படும். முன்னமேயே ஒன்றனைப் பற்றிய அறிவிப்பாக அமையும் இத்தகைய செய்திக் கதைகள் ஒரு சூழல் முகப்பு மற்றும் சம்பவத்தின் பின்னணி பற்றிய மீதி செய்திக் கதை முதலிய இருபகுதிகளைக் கொண்டதாக அமையும். ஒரு விளையாட்டு நிகழ்ச்சி பற்றிய ஆயத்த செய்திக் கதையாயின் மோதுகின்ற இரு அணிகள் எவை எவை என்பது பற்றிய முகப்பும், அரங்க அமைப்பு, கூட்டம் பற்றிய உடற் பகுதியும் கொண்டதாக அமையும்.

Advertisement : (விளம்பரம்) தகவல் தொடர்பு சாதனங்களில் வணிக நோக்கில் குறிப்பிட்ட பொருட்கள் குறித்தோ அல்லது வணிக நோக்கில் அல்லாமல் வேறு சில பணிகள், இடங்கள் குறித்தோ அவை சார்ந்தோரால் பொதுமக்களுக்குத் தரப்படும் செய்தி 'விளம்பரம்' ஆகும். குறைந்த செலவில் நிறையப் பேருக்கு அவர்களை வாங்கத் தூண்டும் வகையில் கருத்துக்களை, பொருள் களை, பணிகளைப் பற்றிக் கவர்ச்சியாகச் சொல்லுகின்ற ஒரு முறை. ஒலிபரப்பு சாதனங்களில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் இடையே ஒலிப்பதிவாக்கி வைத்துள்ள பல்வேறு நிறுவனங்களின் விளம்பரங்கள் ஒலி பரப்பப்படும். இவற்றில் காலை, மாலை என்று குறிப்பிட்ட 'விலை போகும்' முதன்மை நேரங்களில் ஒலிபரப்பப்பட/ ஒளிபரப்பப்பட விளம்பரக் கட்டணம் மிகுதி. ஏனைய வேளைகளில் கட்டண விகிதம் குறைவு.

Advertisers : (விளம்பரதாரர்கள்) தங்கள் பொருட்கள் குறித்து

வணிகநோக்கில் மக்கள் தொடர்பு சாதனங்களில் விளம்பரம் செய்வோர் 'விளம்பரதாரர்' ஆவர். விளம்பர தாரர்கள், பத்திரிகை அலுவலகத்தார், ஒலிபரப்பு நிலைய நிர்வாகிகள், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் முதலியோரால் வணிக அடிப்படையில் நிகழ்ச்சியின் உள்ளடக்கம், வடிவம், வரிசை முறை, நடை முதலியன தீர்மானிக்கப்பட்டு நிகழ்ச்சிகள் ஒரு வடிவத்திற்குக் கொண்டு வரப் படுகின்றன. வானொலி, தொலைக் காட்சி நிலையங்கள் தம் வருமானத் திற்காக விளம்பரதாரர்களுக்கு அவர்களது வணிகச் செய்திகளை ஒரு நிகழ்ச்சியின் இடையிலேயோ அல்லது ஒரு நிகழ்ச்சிக்கும் மற்றொரு நிகழ்ச்சிக்கும் இடையிலேயோ ஒலிபரப்பும் பொருட்டு தனது ஒலிபரப்பு நேரத்தை விற்கின்றன. மேல் நாடுகளில் தங்கள் பொருட்களுக்கு விளம்பரம் கருதிச் சில தனி நபர்கள், தனியார் நிறுவனங்கள் முதலியோர் ஒலிபரப்பு நிலையங்களில் பணத்தை முதலீடு செய்வது உண்டு. நம் நாட்டில் விளம்பரதாரர்கள் அச்சில் அல்லது ஒலிபரப்பில் வெளியாகும் விளம்பரங் களுக்குரிய கட்டணங்களைச் செலுத்துகின்றனர். சில நிறுவனங்கள் நிகழ்ச்சிகள் சிலவற்றை ஒலிபரப்பு நிலையம் மூலம் தாம் வழங்க முன்வருகின்றன. அந்நிகழ்ச்சிகளின் போது அவர்தம் விளம்பரங்கள் காட்டப்படுகின்றன.

Advertising : (விளம்பரம் செய்தல்) பொருள் குறித்த விளம்பரங்கள் அனுப்பப்படுவது பொருளை விற்க விரும்பும் பொருளின் உடைமை யாளரின் ஆர்வத்தினாலேயே அன்றி பொருளைப் பெறுவோரின் ஆர்வத் தினால் அல்ல. விளம்பரங்கள் எப்போதும் திட்டமிடப்பட்டு அமைக்கப் படுகின்றன. அவை குறிப்பிட்ட நோக்கங்களைக் கொண்டனவாய் அமைகின்றன. தத்தம் நோக்கங்களில் அவை வேறுபடுகின்றன.

விளம்பரங்களைப் பார்த்து அதற்கேற்ப நேயர்கள் பொருளை நுகர்வது பெரும்பாலும் எப்போதாவது மட்டுமே நிகழும். சில சமயம் சில குறிப்பிட்ட பொருளின் நல்ல தன்மைகள் குறித்து அதன் பெயர், பொருளின் தொழில் முத்திரை, நிறுவனப் பெயர் முதலியன நெடுநாள் நுகர்வோரிடம் நிலைத்து நிற்கும். விளம்பரங்களைப் பார்ப்போர் விளம்பரங்களில் எதிர்பார்க்கும் கவர்ச்சி (appeal) யாகக் குறியீட்டுத் தடுப்பு (Symbolic coercion), சுட்டிக் கூறும் அதிகாரம், (reference power) வல்லுநர்ப் பயன்பாடு (Use of experts) முதலியவற்றைக் குறிப்பிடலாம். உளவியல் ரீதியிலான ஈர்ப்புக்குட் படுத்தப்படும் கவர்ச்சிகளும் பயன் படுத்தப்படுவதுண்டு. விளம்பரங்களின் செய்தியை முக்கியப்படுத்திக் காட்டுதலே மிக முக்கியமானது. அப்படியானால்தான் விளம்பரத்தின் விளைவு சிறப்பாக இருக்கும். செய்தி பெறுபவரைவிட செய்தி தருநர். செய்தி தரப்படும் தொடர்பு சாதனம், செய்தி முதலியனவே இங்கு மிக முக்கிய மானவை.

Advertising agencies : (விளம்பர நிறுவனங்கள்) விளம்பரம் செய்கின்ற பத்திரிகைக்கும் விளம்பரம் கொடுக் கின்றோர்க்கும் இடையில் பாலமாகச் செயல்படுகின்ற நிறுவனங்கள் ; இவை பத்திரிகைகளுக்கு விளம்பரங்களைச் சேகரித்துத் தருவதால் இவற்றிற் கெனக் கழிவுத்தொகை தரப்படும். வணிகர்களிடமும் பெருந்தொழிலதிபர் களிடமும் விளம்பரம் செய்வதன் அவசியத்தை வற்புறுத்தி அப்பழக் கத்தை ஏற்படுத்துவர். இந்திய அரசின் விளம்பரங்கள் அனைத்தும் இந்திய விளம்பர நெறியகத்தின் (Directorate of Advertising and Visual Publicity - DAVP) அலுவலகத்திலிருந்து நேரடியாகவே இவைதம் இடை யீடின்றிப் பத்திரிகைகளுக்குக் கிடைக் கின்றன. இந்தியாவில் பம்பாய்,

கல்கத்தா, சென்னை, பெங்களூர் போன்ற இடங்களில் மிகப் பெரிய விளம்பர நிறுவனங்கள் செயல்படுகின்றன.

Advertising manager : (விளம்பர மேலாளர்) பத்திரிகை அலுவலகங்களில் விளம்பர மேலாளரின் பதவி மிகவும் பொறுப்பானது. இதழ்களுக்கு வருவாய் தேடித்தரும் பொறுப்புள்ள பதவியாளர் இவர். விளம்பர மேலாளர் மற்ற செய்தித் தாள்களைக் காட்டிலும் தமது தாளுக்கு அதிக விளம்பரங்களைப் பெறுவதற்காகத் தம் பிரதிநிதிகளை வெளியிடங்களுக்கு அனுப்பி இரவு பகலாக விளம்பரங்களைச் சேகரிப்பார். இதழின் பொருத்தமான இடங்களில் விளம்பரங்களை அமைத்துக் கொடுக்கும் தனித்திறமையும் இவருக்கு இருக்க வேண்டும்.

Advisory Committee on Radio : (வானொலி ஆலோசகர் குழு) ஒரு வானொலி நிலையத்தின் ஒலிபரப்பு எல்லைக்குட்பட்ட பரப்புக்குள் வாழும் கலைஞர்கள், அறிவியலார், சமூக சேவையாளர்,தொழில் வல்லுநர்கள், அறிஞர் பெருமக்கள், கல்வியாளர் முதலானோர் அங்கம் வகிக்கும் குழுவாகும். நிலைய இயக்குநர் பல பெயர்களைப் பரிந்துரைக்க, நிலையத் தலைமை இயக்ககம் சிலரை ஏற்று ஒப்புதல் அளித்துக் குறிப்பிட்ட இரண்டு ஆண்டுக் காலத்திற்கு நிலையத்திற்கு ஆலோசனை வழங்க அனுமதிப்பர். ஆண்டுக்கு மூன்று முறை இக் குழுவினா நிலையத்தில் கூடி, நிலைய நிகழ்ச்சிகள் பற்றி விவாதிப்பர். தேவையான ஆலோசனை வழங்குவர்.

Ad wing : (விளம்பரப் பகுதி) நாளிதழ் அலுவலக நிர்வாக அமைப்பில் வாணிபப் பிரிவின் ஒரு பகுதி இது. இப்பகுதிக்குத் தனியாக ஒரு விளம்பர நிர்வாகி இருப்பார். இந்தப் பகுதி உள்ளூர் விளம்பரப் பிரிவு, பொது விளம்பரப் பிரிவு, வகைப்படுத்தப்பட்ட விளம்பரப் பிரிவு என பிரிக்கப்பட்டுச் செயல்படுகின்றது.

Agate : ($5\frac{1}{2}$ புள்ளி அளவுடைய அச்செழுத்து) இது $5\frac{1}{2}$ புள்ளி அளவுடைய அச்செழுத்து ($5\frac{1}{2}$ Points in depth) ஆகும். பொதுவாகச் செய்தித் தாள்களில் பயன்படுத்தப்படும் மிகச் சிறிய அச்செழுத்து இது. இவ்வெழுத்துக்களாலான 14 வரிகளின் அளவு செய்தித்தாளின் ஒரு பத்தியில் (column) ஒரு அங்குலம் அளவுள்ளதாக இருக்கும். இந்த ஒரு அங்குல அளவே விளம்பரத்தின் ஒரு அலகாகக் கொள்ளப்படுகிறது.

Agency commission : (விளம்பர நிறுவன தரகு) விளம்பர நிறுவனங்களில் பொதுவான பணிகளுக்கு விளம்பரதாரர் தரவேண்டிய கட்டணத் தொகை. பொதுவாக விளம்பரதாரர் தரும் மொத்தத் தொகையில் இது 15% ஆக இருக்கும்.

Agenda setting : (விவாதத் தூண்டல்) ஒன்றைவிட பிறிதொரு பிரச்சினையின் மீது மக்கள் கவனத்தைத் திருப்பி விடும் தகவல் தொடர்பு சாதனத் திறமை; தகவல் தொடர்பு சாதனங்கள் குறிப்பிட்ட விவாதத்திற்கான உள்ளடக்கங்களை நிர்ணயிக்கும் திறன் உடையன என்பதுவே இக் கொள்கை. ஒரு கருத்து மீது தகவல் தொடர்பு சாதனம் கொடுக்கும் கவனத்தின் அளவு (செய்திக் கதையின் அளவு, எழுத்து, பக்கம்) அதன் முக்கியத்துவத்தை நேயர்கள் மனதில் உருவாக்குகிறது. ஒரு கருத்து குறித்த விவாதங்களை அமைப்பது என்பது அதுபற்றிய எல்லா வாதங்களையும் சுதந்திரமாக முன்வைத்தல், அக்கருத்திற்கு நேர் எதிரான கருத்துக்களைப் பேசுவதையும் தடைப்படுத்தாமை முதலிய உரிமைகளை உள்ளடக்க

வேண்டும். ஆனால் விவாதத்திற்கான கருத்துக்களை முன்வைத்தல் என்பதுவே விவாதம் எவ்வரையறைக்குள் நிகழ வேண்டும் என்ற எல்லைகளையும் விதித்து விடுகிறது. சான்றாக ஒரு ஆசிரியர் தனது மாணவர்களில் ஒரு குழுவினர் ஏன் குறிப்பிட்ட தேர்வில் வெற்றிபெறத் தவறினார்கள் என்பதை அவர்களே விவாதிக்குமாறு விவாதத்தை ஏற்படுத்தினால் அவ்விவாதம் பின்வரும் கருத்துக்களாகிய மாணவர்களின் சோம்பல், பாடத் திட்டத்தைப் புரிந்துகொள்ளப் போதிய அறிவுக் கூர்மை இன்மை, மாணவர்களை வெற்றி பெறும் பொருட்டுச் சரியாக ஒருமுகப்படுத்தி ஈர்க்காமை, மாணவர்கள் தத்தம் வீடுகளில் சிறிதளவே தூண்டுதல் பெறுதல் முதலியவற்றையும் உள்ளிட்டதாக அமையுமாறு விவாதத்தை அமைக்கிறார் என்றே பொருள். அத்தகைய விவாதத்தினை ஜனநாயக முறையிலான சுதந்திரமான விவாதம் என்று கூறுவோமாயின் ஒருவகையில் ஏமாற்றுவேலையே. ஏனெனில் கல்வி போதிக்கப்படும் தரம், போதிய பாடப் புத்தகங்கள் கிடைக்கும் வசதி இன்மை, மாணவர்கள் நசுக்கப்பட்ட நிலையின் கீழ் வகுப்பில் கல்வி கற்க வேண்டி இருத்தல் போன்றவை பேசப்படுவதே இல்லை. இத்தகைய நோக்கிலேயே தகவல் தொடர்பு சாதனச் சமுதாய வியலார் தகவல் தொடர்பு சாதன விளைவுகளைத் திறனாய்கின்றனர். தகவல் தொடர்பு சாதனங்கள் எல்லாக் கருத்துக்களையும் விவாதிக்க இடமளிப்பது போன்ற ஒரு மாயையை ஏற்படுத்து கின்றன. ஆயின் அவை உண்மையில் எவை சமுதாயத்தால் முக்கியமாக விவாதிக்கப்படலாம். எவை எவை விவாதிக்கப்படக் கூடாது என்ற வரையறைகளை விதித்து விடுகின்றன.

Agreement : (இயைபு) செய்தி பதிப்பித்தலின் போது கண்டு திருத்தப்பட வேண்டிய ஒரு பிழை இயைபின்மை. செய்தி எழுதுவோர் இலக்கணப் பிழைகளுடன் செய்தி எழுதி விடுதல் உண்டு. பொதுவாக அவ்விலக்கணப் பிழைகள் தொடர மைப்பில் ஒருமை பன்மை இயைபின்மையாக அமைகிறது. வேற்றுமை உருபுகளைப் பயன்படுத்தும் போதும் இயைபுடன் எழுதுதல் செய்தி எழுதுவோருக்குச் சிக்கலாக அமை கிறது. இத்தகைய தொடர் இயைபு குறித்த பிழைகள் இதழாசிரியரால் கவனித்துத் திருத்தப்பட வேண்டும்.

Agressive cues theory : (வன்முறைப் பெருக்குக் கொள்கை) வன்முறைச் சம்பவங்கள் அடங்கிய நிகழ்ச்சி யினைத் தொலைக்காட்சியில் காட்டினால் அது ஒரு நபரின் ஏற்கனவே அவர் கொண்டுள்ள உடல் ரீதியான, மனரீதியான எழுச்சியின் அளவைத் தூண்டி, அதுவே பின்னர் அவரது வாழ்க்கைச் சூழலில் தொடர்ந்து வன்முறையான நடத்தை களுக்கு வழிவகுப்பதாய் அமைந்து விடும் என்பதுவே வன்முறைப் பெருக்குக் கொள்கை ஆகும்.

AIBD : (ஆசிய பசிபிக் ஒலிபரப்பு வளர்ச்சி நிறுவனம்) 'Asia-Pacific Institute for Broadcasting Development' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம். இந்நிறுவனம் மலேசியாவில் உள்ளது. ஆசிய பசிபிக் நாடுகளில் ஒலிபரப்பு அமைப்புக்களை வளர்ச்சியடையச் செய்வதற்கும் மேலும் அவற்றின் நிலையை உயர்த்துவதற்கும் ஆதரவளிப்பது இதன் நோக்கமாகும். இந்நிறுவனம் வானொலி மற்றும் தொலைக்காட்சி தொடர்பாக ஒலிபரப்பு நிர்வாகம், நிகழ்ச்சித் தயாரிப்பு, இயந்திரக் கட்டுமானம், இயக்கம், செய்தி மற்றும் அன்றாட

நடப்புக்கள், நேயர் ஆய்வு மற்றும் மதிப்பீடு, பயிற்சி ஆய்வு முறை மற்றும் பிறபொதுக் களங்களில் பயிற்சி அளிக்கிறது. பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள் போன்றவற்றை மாநில அளவிலும் நாடுகள் அளவிலும் நடத்துகின்றது. ஒலிபரப்புப் பயிற்சி வளர்ச்சி தொடர்பான பாடத்திட்ட நூல்கள், மற்றும் ஆய்வு நெறிமுறைகள் தயாரிப்பதுடன் தேவையான களங்களில் ஆலோசனையும் வழங்குகிறது.

AIR : (அகில இந்திய வானொலி நிலையம்) 'All India Radio' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம். இந்தியாவில் ஒலிபரப்பு முதன்முதலாகப் பொழுது போக்குக் கலைஞர்களது வானொலிச் சங்கத்தால் கல்கத்தா, பம்பாய், சென்னை, லாகூர் ஆகிய நகரங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்தகு சங்கங்களுள் ஒன்று சென்னை பிரஸிடென்ஸி வானொலிச் சங்கம். அது 1924-ஆம் ஆண்டு மே 16-ஆம் நாள் நிறுவப்பட்டது. ஜூலை 31-ஆம் நாள் அச்சங்கம் தன் ஒலிபரப்பைத் தொடங்கியது. நிதி நெருக்கடி காரணமாக அச்சங்கம் மூடப்பட்டு அதன் மரபு உரிமை சென்னை மாநகராட்சிக்குத் தரப்பட்டது. 'இந்திய ஒலிபரப்பு கம்பெனி லிமிடெட் என்ற ஒரு தனியார் நிறுவனம் பொறுப் பெடுத்துக் கொண்டபோது ஓர் ஒழுங்கான ஒலிபரப்புப் பணி 1927-இல் ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின்னர் அரசு நடத்தும் ஒலிபரப்பமைப்பு இந்திய நாட்டு ஒலிபரப்புப் பணி (Indian State Broadcasting Service) என்ற பெயரில் 1930-இல் தொடங்கப்பட்டது. முதலெழுத்துச் சுருக்கத்தால் ISBS என்று இது அழைக்கப்பட்டது. அதன் கட்டுப்பாட்டாளராக இருந்த .'.பீல்டன் என்பவர் அதன் பெயரை அகில இந்திய வானொலி (All India Radio) என்று மாற்ற எண்ணியதன் விளைவாக 1936-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8-ஆம் நாள் அவ்வாறே மாற்றப்பட்டது.

அகில இந்திய வானொலி தனது வலைப்பிணைப்பினால் 150க்கும் அதிகமான நிலையங்களை உள்ளடக்கியுள்ளது. மேலும் அகில இந்திய வானொலி இரு துணைநிலை மையங்களையும் கொண்டுள்ளது. அவற்றில் ஒன்று புவனேஷ்வரிலும் மற்றொன்று சாந்திநிகேதனிலும் உள்ளது. 12,000 பணியாளர்களை உள்ளடக்கி உலகில் பெரிய செய்தி நிலையங்களுள் ஒன்றாக விளங்கும் அகில இந்திய வானொலி ஒவ்வொரு நாளும் 70 தேசியச் செய்தி அறிக்கைகளை 19 மொழிகளிலும், 118 மாநிலச் செய்தி அறிக்கைகளை 22 மொழிகள் மற்றும் 33 மலைவாழ் மக்களது வட்டார வழக்குகளிலும் 63 வெளிநாட்டுச் செய்தி அறிக்கைகளை 7 இந்திய மற்றும் 18 வெளிநாட்டு மொழிகளிலும் வெளியிடுகிறது.

மேலும் அகில இந்திய வானொலியின் உள்நாட்டுச் சேவை நிகழ்ச்சிகள் ஒவ்வொரு வருடமும் 5 இலட்சம் மணி நேரங்களுக்கு மேலாக, இந்தியாவின் 86% நிலப்பரப்பில் உள்ள 96% மக்களுக்குச் சென்று சேரும் வண்ணம் ஒலிபரப்பு வசதியைப் பெற்றுள்ளது. ஆல் இந்தியா ரேடியோவில் 149 வானொலி நிலையங்கள் உள்ளன. இவ்வாறு நாட்டின் எல்லா முக்கியப் பண்பாட்டு, மொழி வட்டாரங்களுக்கும் தனது ஒலிபரப்பை நிகழ்த்துகிறது. தேசியச் சேவைகள், மாநிலச் சேவைகள், விவிதபாரதி ஒலிபரப்பு, வெளிநாட்டு ஒலிபரப்பு, பல்கலைக்கழக ஒலிபரப்பு என்று அகில இந்திய வானொலியின் பணிகள் பல்வாறாக அமைந்து 'அகில இந்திய வானொலி' நாட்டின் தகவல் தொடர்பில் முக்கிய இடம் வகிக்கிறது. ஆல் இந்தியா ரேடியோ தற்போது தினமும் 285 செய்தி அறிக்கைகளை (News Bulletins) 38 மணி 45 நிமிடங்களுக்கு

ஒலிபரப்பி வருகின்றது. நிகழ்ச்சிகளில் 37.57 சதவிகிதம் இசை நிகழ்ச்சிகள் தான். இதில் 11.77 சதவிகிதம் நாட்டுப்புற இசைக்காக ஒதுக்கப் பட்டுள்ளது. விவிதபாரதி நிகழ்ச்சிகள் 32 மையங்கள் வழி ஒலிபரப்பப் படுகின்றன.


Alive : (உயிர்ப் பொருள்) இன்னும் பயன்பாட்டிலிருக்கும் செய்திப்படி (Copy), எழுத்து அல்லது அச்சு 'alive' எனப்படும்.

Alley : (அச்சுக்கோர்ப்பு அறைக் கூறு) அச்சுக் கோர்க்கும் அறையின் ஒரு பிரிவு 'Alley' எனப்படும். இப்பிரிவில் பணியாற்றுபவர்கள் ஏதாவது குறிப்பிட்ட அச்சுக்கோர்ப்புப் பணி ஒன்றிற்காக நியமிக்கப்பட்டிருப்பர்.

All in hand : (முடிந்த நிலை) அனைத்துச் செய்திப் படிகளும் அச்சுக் கோர்ப்பு அறைக்கு அனுப்பப்பட்டு விட்ட முடிந்த நிலை all in hand எனப்படும். எல்லாப்படிகளும் செய்தி மேசை யிலிருந்து அச்சுக்கோர்ப்பு அறைக்குச் சென்றுவிட்டால் ஒரு பதிப்பு முடிந்துவிட்டது என்பது பொருள்.

All up : (எல்லாம் அச்சில்) எழுதித் தயாரிக்கப்பட்ட எல்லாச் செய்திப் படிகளும் அச்சில் இருக்கின்றன என்பதைக் குறிக்கும்.

AM : 1. (காலை நாளிதழ்) 2. (வானொலி அலை அகல மாற்றமைப்பு) 1) காலை யில் வெளியாகும் ஒரு நாளிதழ். 2) 'வானொலி அலை அகல மாற்றமைப்பு' என்ற பொருள்தரும் 'Amplitude modulation' என்பதன் சுருக் கத்தையும் குறிக்கும். வானொலியின் ஒரு குறிப்பிட்ட ஒலிபரப்பு முறை இது. வானொலி நிலைய நிகழ்ச்சி ஒலிகளை-ஒலிச் சமிக்ஞைகளை ஒலிபரப்பி அலைகளில் மத்திய அலைவரிசைக்கு ஏற்பச் செலுத்து வதைக் குறிக்கும். இம்முறையில் அதிக அதிர்வுடைய அலையின் அகலத்தைக் குறைந்த அதிர்வுடைய சமிக்ஞையின் அகலத்திற்கு இணையாக மாற்றுதல் மேற்கொள்ளப்படும். அகல அதிர்வு மாற்றப்பட்ட அலைவரிசை தொடர்ந்து வலு குறைக்கப்படுகிறது. மேலும் உண்மையான குறைந்த அதிர்வுடைய சமிக்ஞைகள் மீண்டும் பெறப்படு கின்றன. AM அலை வகையில் அலையின் அதிர்வு மாறாமல் இருக்கிறது. ஆனால் அலை அகலம் உண்மையான ஒலியின் இயல்புக்கேற்ப மாறுகிறது.



அலை அகல அதிர்வு மாற்றத்தில் நிகழ்ச்சி ஒலி ஒலிபரப்பப்படும்போது வானொலி இயக்கியால் அனுப்பப்படும் மின்காந்த அலைகளின் வலிமை கூட்டவோ குறைக்கவோ செய்யப் படுகிறது. AM ரேடியோ அலைகளுக் கிடையில் உள்ள அதிர்வுகள் நிரந்தர மானவை. AM ரேடியோ நிலையத்தின் இரும்பு கோபுர ஆன்டெனா ரேடியோ அலைகளை எல்லாத் திசைகளுக்கும் ஒலிபரப்புகிறது. ஆன்டெனாவின் உயரம் நிலையத்தின் நிர்ணயிக்கப் பட்ட அலை அதிர்வின் நீளத்தைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படுகிறது. மின்சக்தி எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக இருக்குமோ அந்த அளவு ஒரு நிலையத்தின் ஒலிபரப்பு எல்லைப் பரப்பு அமையும்.

Ambiguity : (குழப்பம்) செய்தித் தலைப்புக்களில் மற்றும் செய்தியில் குழப்பம் தருமாறு செய்தி எழுதுதல் கூடாது. குழப்பம் தரும் வகையில் செய்தித் தலைப்புக்கள் தரப்பட்டி ருப்பின் செய்தி மேசையில் ஆசிரியருக்கு அவைமிகுந்த சிக்கலை விளைவிக்கும். ஆனால் ஆசிரியர் மிகுந்த கவனத்துடன் இதனைக் கையாண்டு

குழப்பத்தைக் குறைக்கலாம். சான்றாக,

3College Professors, Scholars Win Years Guggenheim Awards

என்ற தலைப்பு குழப்பம் விளைவிக்கும். பேராசிரியர்கள் அறிஞர் பெருமக்கள் இல்லையா என்ற கேள்வி எழும். எனவே, இக் குழப்பத்தைத் தவிர்க்க 3 College Professors, Alumnus Win Years Guggenheim Awards என்று சொல்லை மாற்றி எழுதுதல் வேண்டும்.

AMPEX : (ஆம்பெக்ஸ்) ஒளி நாடாப் (Video tape)பதிவுக் கருவிகளின் முன்னோடிகள். எல்லா ஒளி நாடாப் பதிவுக் கருவிகளுக்கும் பொதுவான சொல்லாகவும் சில சமயம் பயன் படுத்தப்படுகிறது.

Analysis : (பகுப்பு) இதழியல் ஒரு தொழில் என்ற அளவில் அதன் வளர்ச்சியே செய்திகளுக்கு விளக்கம் தருதல் (Interpretation), செய்திகளைப் பகுத்தல் (Analysis) என்ற இரு பணிகளில்தான அடங்கி இருக்கிறது. செய்தி சேகரித்தலில் முக்கியப் பணி களாகிய இவை செய்தி தயாரித்தலை மிகவும் சிறப்புடையதாக்கும்.

Anchor man/woman : (செய்தி வழங்கும் ஆண்/பெண்) ஒலிபரப்புச் சாதனங்களில் செய்தி பரப்புபவர்களில் செய்தி தருபவராகிய செய்தி வாசிப்பவரே தலைமையானவர். ஒரு செய்தி நிகழ்ச்சியை வழங்குவதில் பெரும்பங்கு வகிக்கும் முக்கியமானவர் களையும் அல்லது ஒரு செய்தி நிகழ்ச்சியை வழங்குபவரையும் இச்சொல் குறிக்கும்.

Anecdotal lead : (நிகழ்ச்சி முகப்பு) இதழ்கள் பல செய்திக் கதைகளைச சுவையான உண்மை நிகழ்ச்சிகளை உடைய முகப்பைக் கொண்டு ஆரம்பிக்கும் பழக்கத்தைக் கொண் டுள்ளன. அந்நிகழ்ச்சிகள் பொருத்த மானவையாகவும் சுருக்கமாகவும் அதிக இடம்பிடிக்காதவையாகவும் அமையும். பொதுமக்களை ஈர்க்கும் வண்ணம் இந்நிகழ்ச்சிகள் சுவையான முகப்புக்களாக மாற்றப்படுகின்றன.
சான்று : கடந்த டிசம்பர் மாதம் 1-ஆம் தேதி........ சென்னை அண்ணா சாலையில் தலைபோகும் அவசரத்தில் வாகனங்களும் மனிதர்களும் பறந்து கொண்டிருக்க..... தேனாம்பேட்டை யிலுள்ள ஒரு அரசு அலுவலகம் முன்பு படு ஆவேசமான குரல்! "அரசே நீதி வழங்கு ... விசாரனை நடத்து ... நீதி எங்கே? தர்மம் எங்கே?" இப்படி கூச்சலிட்டுக் கொண்டே தன்னுடைய கையிலிருந்த மண்ணெண்ணையை எடுத்துத் தலையில் ஊற்றிக்கொண்டு தீபெட்டியை எடுத்து உரச அந்த இளைஞர் முயன்றார். அதற்குள் அங்கு பாதுகாப்புக்கு நின்றிருந்த போலீசார் சட்டென்று அவரைப்பாய்ந்து பிடித்தனர். (தினமணிகதிர 5.2.95, பக.16) என்று செய்திக்கட்டுரையை ஆரம்பிப்பது இவ்வகை.

Angle : (கோணம்) ஒரு செய்தித் கதையினை அல்லது ஒரு செய்திக் கதையின் வெவ்வேறு பாகங்களை அணுகும் முறை : ஒரு செய்திக் கதையில் வலியுறுத்தப்படும் பண்புக் கூறு இதழாசிரியர் ஒரு செய்திக் கதையை நேரடியாகச் சொல்லு வதைவிட அச்சம்பவத்தின் பின்னணியை வலியுறுத்தியோ அல்லது ஏற்கனவே கூறிய செய்திக் கதையை இப்பொழுதுதான் புதிதாகச் சொல்வது போன்ற சொற்றொடர்களாலோ அல்லது பிரச்சினையான செய்திக் கதையை மென்மையான குரலிலோ அல்லது மென்மையான செய்திக் கதையைப் பிரச்சினைக்குரியதைப் போல கடின குரலிலோ தான் விரும்பியவாறு சொல்லுதல் இவ்வகைப்பாற்படும். முதற்சுற்றில் ஒரு போட்டிப் பத்திரிகையில் இச்செய்தி ஏற்கனவே சொல்லப்பட்டு விட்டால்

அச்செய்திக் கதையின் வளர்ச்சி நிலையில் உள்ள புதிய உண்மைகளையும் நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளையும் முக்கியப்படுத்திக் காட்டுவது விரும்பத்தக்கது. இவ்வாறு தேவைக்கேற்ற விதத்தில் எழுதுவது செய்திக் கதையின் கோணம் ஆகும்.

Animation : (உயிர்த்தன்மை) திரைப்படங்களிலும் தொலைக் காட்சிகளிலும் தொடர் வரிசையுடைய வரைபடங்களை நிழற்படம் எடுப்பதன் மூலம் உயிர்த்தன்மையுடைய கார்ட்டூன் படங்கள் தயாரிக்கப் படுவதுண்டு. இதன் விளைவாக வரைபடங்களின் உருவங்கள் உயிரோட்டமுள்ள உருவங்களாக அமையும்.

Announcements : (அறிவிப்புக்கள்) ஒலிபரப்புச் சாதனங்களில் ஒவ்வொரு நிகழ்ச்சியின் முன்னரும் முடிவிலும் தரப்படும் அறிவிப்புக்கள். சில நிகழ்ச்சியின் இடையேயும் அறிவிப்புக்கள் தரப்படுவது உண்டு. சில வினாடிகள் முதல் மூன்று மணித்துளிகள் வரை நிலைக்கும் அறிவிப்புக்கள் 'spots' என அழைக்கப்படுகின்றன. தமிழில் இதனைச் 'சிறு அறிவிப்புக்கள்' எனலாம். பொதுநல சேவைகளுக்கென அடிக்கடி கூறப்படும் அறிவிப்புக்களும் உண்டு.

Announcer : (அறிவிப்பாளர்) வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் அன்றைய மொத்த நிகழ்ச்சிகளையும் தனிப்பட்ட நிகழ்ச்சிகளையும் அவ்வந் நிகழ்ச்சி குறித்து முன் விளக்கம் போல அறிவிக்கும் அறிவிப்பாளர்.

ANPA : (அமெரிக்க நாளிதழ் வெளியீட்டாளர் சங்கம்) 'American Newspaper Publishers Association' என்ற சொற்றொடரின் முதலெழுத்துச் சுருக்கம்.


ANPARI : (அமெரிக்க நாளிதழ் வெளியீட்டாளர் சங்க ஆய்வு மையம்) "American Newspaper Publishers Research Institute' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம். அமெரிக்க நாளிதழ் வெளியீட்டாளர் சங்கத்தின் ஆய்வு நிலையம். இதன் தலையாய பணி ஆய்வு செய்தல் மற்றும் செய்தித்தாள் உலகின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருத்தல் ஆகியன.

Anti comic campaign : (படக்கதை எதிர்ப்புப் பிரச்சாரக் குழு) நாளிதழ்களில் மற்றும் இதழ்களில் இடம்பெறும் படக்கதைகள் சிறுவர்களிடம் ஏற்படுத்தும் பாதிப்பைக் கருத்தில் கொண்டு படக் கதைகளை எதிர்த்து இலண்டனில் 1949-இல் ஒரு குழு தொடங்கப்பட்டு தன் முயற்சியால் 1955-இல் செய்தியிலிருந்து இத்தகைய படக் கதைகளை நீக்கும் சட்டத்தைப் பெற்று வெற்றி பெற்றது. இச்சட்டம் 1970-இல் வலுவிழந்தது. பொதுவாக தேசிய ஒழுங்கைப் பாதுகாத்தல் என்ற அடிப்படையில் இத்தகைய படக்கதை எதிர்ப்பு ஏற்பட்டது. 'Tales from the crypt', 'Crime Detective Superman' போன்றன இத்தகைய எதிர்ப்புக்குள்ளான படக்கதைகள்.

A.P. : (அசோஷியேடட் பிரஸ்) இது அமெரிக்காவின் மிகப்பெரிய செய்தி நிறுவனம். இந்நிறுவனம் நியூயார்க் நகரில் 1848-இல் ஜேம்ஸ் பென்னட் என்பவரால் 'ஹார்பர் நியூஸ் அசோசியேசன்' என்ற பெயரில் தொடங்கப்பட்டது. 1857-இல் டெலிகிராபிக் அண்டு ஜெனரல் நியூஸ் அசோசியேசன் என்ற நிறுவனத்துடன் இணைந்தபோது 'நியூயார்க் அசோசியேட்டட் பிரஸ்' என்ற பெயருடன் அமெரிக்காவில் மிகப்பெரிய செய்தி நிறுவனமாகச்

செயல்படத் தொடங்கியது. தகவல் துறையில் பத்தாயிரம் நிறுவனங்கள் இந்நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு செய்திகளைப் பெறு கின்றன. இந்நிறுவனம் செயற்கைக் கோள்களின் (Satellites) வழியாகவும் செய்திகளையும் புகைப் படங்களையும் அனுப்புகிறது. இது ஒரு கூட்டுறவு நிறுவனம். இலாபத்தை நோக்கமாகக் கொண்டதல்ல.

Aperture : (ஆடி இடைவெளி) ஒளிப்படம் எடுப்பதற்கு உதவும் படக்கருவி (காமிரா) ஒளி பிறவழிகளில் உட்புகாத வாறு அமைக்கப்பட்டுள்ள ஒரு இறுக்கமான பெட்டி. இதன் முன்பகுதியில் ஆடி (லென்ஸ்) பொருத்தப்பட்டுள்ளது. உட்பகுதியில் காமிராவின் பின்சுவரில் ஒளிப் பாதிப்புடைய (light sensitive) பொருளாகிய ஒளிப்படச் சுருள் (film) பொருத்தப்பட்டுள்ளது. தனக்கெதிரில் உள்ள பொருளை அதன் வடிவம் இச்சுருள் மீது விழுமாறு ஆடி குவிமையப்படுத்துகிறது (focusses). சுருளில் ஒரு மாற்றம் நிகழுகிறது. அப்பொருளின் பரப்பு எந்த அளவிற்குச் சுருளில் விழும் என்றால், சுருள் மீது விழும் ஒளியின் அளவுக்கேற்ற வகையில் எனலாம். ஆடியின் ஊடே கடந்து செல்லும் ஒளியின் அளவு ஒளியின் பரவுகதிர் தடுக்கவல்ல மையப் புழையுடைய ஒரு உலோகத் தகட்டின் (diaphragm) வாயிலாகக் கட்டுப் படுத்தப்படுகிறது. இத்தகடு ஆடியின் ஒளிக்கதிர் ஊடறுத்துச் செல்லும் இடைவெளியைக் (lens aperture) கட்டுப்படுத்துவதற்கு உதவும் ஒரு கருவி ஆகும். தெளிவான முறையில் ஒளிப்படம் எடுப்பதற்குக் கவனத்தில் கொள்ள வேண்டியவற்றுள் இந்த ஆடி இடைவெளியும் ஒன்று ஆகும்.



APMEA : (அசோஷியேடட் பிரஸ் நிர்வாக ஆசிரியர் சங்கம்) 'Associated Press Managing Editors Association' *என்பதன் முதலெழுத்துச் சுருக்கம்.*

Apostrophe : (உடைமைப்புள்ளி மற்றும் சுருக்கக் குறியீடு) அபாஸ்ட்ரபி வடிவம் (') உடைமைப் பொருள் குறித்த வேற்றுமைப் (Possessive Case) பயன்பாட்டின் போதும் சுருக்கங் களைக் குறிக்கவும் செய்திப் பதிப்பில் பயன்படுத்தப்படுகின்றது. பல இதழாசிரியர்கள் தலைப்பில் சுருக்கம் கொண்டுவர மட்டுமே இக் குறியீட்டைப் பயன்படுத்துகின்றனர். சான்றாக ஆங்கிலத்தில் MC, MAC என்று ஆரம்பிக்கும் பெயர்கள் M' என்று இச் சுருக்கக் குறியீட்டைப் பயன்படுத்தி எழுதப்படுகின்றன (M'Carthy).

Approach : (நிகழ்ச்சி அணுகுமுறை) ஒலிபரப்பில் ஒவ்வொரு நிகழ்ச்சித் தயாரிப்பிற்கெனவும் ஒவ்வொரு அணுகுமுறை உண்டு. செய்தி ஒலிபரப்பு பலருடைய பணியை உள்ளடக்கியது. செய்தி எழுதும் பணி தயாரிப்பாளர், நிருபர், யாருடையதாக வேண்டுமாயினும் அமையலாம். அல்லது பல பணிகளைச் செய்யும் ஒருவரே எழுதலாம். உரைச் சித்திரத்தைப் (Features) பொறுத்த வரை அவற்றைப் பற்றி ஆய்வு மதிப்பீடு செய்து அதன் பின்னரே எழுதப்பட வேண்டும். முழுவதும் எழுதித் தயாரிக்கப்பட்ட எழுத்துப் படிவம் (Script) தேவை இல்லை. பொதுவாகக் கருத்து செய்தி தருவதாகவும் பயிற்று விப்பதாகவும் அமையும். முழுதும் செய்தியாகவும் அல்லது முழுவதும் பயிற்றுவிப்பதாகவும் அமைய வேண்டிய தில்லை. உரை நிகழ்ச்சிகளில் (Talk Programmes) எழுத்துப் படிவம் குறித்த திட்டம் முதலிலேயே தயாரிக்கப்பட வேண்டும். நோக்கம், கேள்வி, வடிவம் முதலியன கேள்வி கேட்பவரால் முதலில் தயாரிக்கப்படுகின்றன. எப்படிப்பட்ட பதில்கள் பேட்டியில் வரும்

என்று அறியும் திறன் உள்ளவராகக் கேள்வி கேட்பவர் இருக்க வேண்டும். தேவைப்பட்டால் பேட்டி தருபவரின் உதவியுடன் ஒரு முன் பேட்டி நடத்திப் பார்க்க வேண்டும். முன் பேட்டி நடத்தினால்தான் தொடர்ந்து வரும் வினாக்கள், திடீரென எழும் வினாக்கள், வினா வரிசை முதலியவற்றைச் சிறந்த முறையில் உருவாக்க முடியும். முன் பேட்டிக்கு நேரமில்லையெனில் பேட்டி நடத்துபவருக்கு இன்ன பதில் வரும் என ஊகிக்கும் அறிவு வேண்டும். கலந்துரையாடல் (Discussion) நிகழ்ச்சிக்கு முடிந்த முடிபான எழுத்துப் படிவம் எழுதித் தயாரிப்பது இயலாது. ஏனென்றால் கொடுக்கப்பட்ட கலந்து உரையாடும் உரையாடல் எந்தத் திசையில் திரும்பும் என்பது தெரியாது. அதே நேரம் முழுவதுமாகத் தயாரித்தல் இல்லாத கலந்துரையாடல்களும் தீது. ஒரு முன்கூட்டிய திட்டம் இருப்பின் நன்று. ஒரு திட்டமிட்ட ஆரம்பம், முடிவு இடைக்கூறுகள் கொண்டனவாய் நிகழ்ச்சி அமையும். கலந்துரையாடல் பற்றிய முன்திட்டம் பங்குகொள்வோர் அனைவருக்கும் முதலில் தரப்பட்டுவிட வேண்டும். அப்படியானால்தான் அவர்கள் தன் பங்கு என்ன என்று திட்டமிடுவார்கள். கலந்து பேசித் தத்தம் பங்கைத் தீர்மானிப்பர். மாறுபட்ட தலைப்பை இடையே அமைப்பதா இல்லையா என்பதும் முன்கூட்டித் தீர்மானிக்கப்பட வேண்டும்.

Arbitron : (நேயர் கணக்கீட்டலகு) அமெரிக்க நேயர் ஆய்வுப் புள்ளிவிபரச் சேகரப் பணிமனையால் பயன்படுத்தப் படும் நேயர்களின் எண்ணிக்கை போன்ற நேயர்களோடு தொடர்பான குறிப்புக்களைக் கணக்கிடும் அலகு.

Arc : (வில் வடிவ அசைவு) காமிரா வில் வடிவில் நகரும் அசைவினைக் குறிக்கும் சொல்.

Area composition : (முழுப்பக்கத் தயாரிப்பு) 1) ஒரு விளம்பரத்தையோ அல்லது நாளிதழின்/இதழின் ஒரு முழுப் பக்கத்தையோ முழுப் பக்கப் படிவ விரிப்பு ஆக்கத்தில் (Full Page Pagination) செய்யப்படுவது போலவே ஒரு இணைப்புப் பகுதியின் மீது தயாரித்தல். 2) ஒரு பத்தி முழுவதும் நிரப்புவதை விட பல பத்திகள் உள்ளிட்டு தான் விரும்பியவாறே ஒரு நாற்கட்ட வடிவத்தில் அச்செழுத்துக்கள் நிரம்பியிருக்குமாறு ஆடம்பரமாகத் தோன்றும் வண்ணம் அச்சுக் கோர்த்தல்.

Ariel : (ஒலிபரப்புப் பெறு நீள் கம்பி) வானொலி நிகழ்ச்சியை ஒலிபரப்பவும், ஒலிபரப்பிலிருந்து வானொலி அலைகளைப் பெறவும் கட்டிவைக்கப்பெறும் நீள் கம்பிகள்.

Armed forces programmes : (போர்ப்படையினருக்கான வானொலி நிகழ்ச்சிகள்) போர்ப் படையினருக்காகப் பொழுதுபோக்குக் கருதியும் தகவல் கருதியும் தரப்படும் வானொலி நிகழ்ச்சிகள். நாட்டின் எல்லைப் புறங்களில் இயங்கும் சில நிலையங்கள் (இந்தியாவில் ஜோத்பூர் போன்றவை) இவற்றை ஒலிபரப்பி வருகின்றன.

Arriflex : (திரைப்பட காமிரா) மேற்கு ஜெர்மனியின் 16 எம்.எம். (mm) திரைப்பட காமிரா ; இது மின்னணுத் தகவல்கள் சேகரிப்பு (Electronic News Gathering) புழக்கத்திற்கு வருவதற்கு முன்பு தொலைக்காட்சிச் செய்திப் பணிக்குச் சேகரித்துத் தந்த ஒலியும் அமைதியான காட்சி விளக்கங்களும் மிகவும் செல்வாக்குப் பெற்றவையாக இருந்தன.

Art : (நாளிதழ்ப் படங்கள்/கலை) 1) எல்லாச் செய்தித் தாள்களின் படங்களுக்கும் உரிய ஒரு பொதுச் சொல். 2) கலை.

Artist ledger : (கலைஞர் பட்டியல் கையேடு)

Artists : (கலைஞர்கள்) திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றில் நடிப்பு, இசை, நடனம் போன்றன தொடர்பாகப் பங்குபெறும் கலைஞர்கள்.

ASBU : (அரபு நாடுகளின் ஒலிபரப்பு ஒன்றியம்) "Arab States Broadcasting Union" என்பதன் முதல் எழுத்துச் சுருக்கம்.

Ascender : (மேல் நோக்கு எழுத்து அல்லது ஏறுமுக அச்செழுத்து) எழுத்துக்களின் முகம் அமைக்கப பட்டிருக்கும் விதத்தைப் பொதுவாக மூன்றுவகையாகப் பிரிக்கலாம். அவற்றுள் ஒன்று மேல்நோக்கு எழுத்து. இவ்வகை எழுத்துக்களில் அச்சின் எழுத்துப் பாகத்தில் எழுததின் மையப் பகுதிக்கு மேல் எழுமபியுள்ள ஒரு சிறு கோடு (stroke) அமைந்திருக்கும். சான்று : ஆங்கிலத்தில் b,f,h,l போன்ற எழுத்துக்களும் தமிழில் கி,கீ, மே போன்ற எழுத்துக்களும் இவ்வகை.

ASNE : (அமெரிக்க நாளிதழ் ஆசிரியர் சங்கம்) "American Society of Newspaper Editors" என்பதன் முதல் எழுத்துச் சுருக்கம.

Aspect ratio : (தொலைக்காட்சிக் காட்சி வடிவ விகிதாச்சாரம்) ஒரு தொலைககாட்சிப் படத்தின் உயரத்திற்கும் அகலத்திற்கும் இடையே உள்ள விகிதாசசாரம். 3அலகுகள் உயரமும் 4 அலகுகள் அகலமும் இருக்கும் (3:4).

Assembly reporter : (சட்டசபை நிருபர்) மாநிலங்களில் சட்டசபை, சட்ட மேலவை (Legislative Assembly, Legislative Council) என்ற 2 சபைகள் உண்டு. மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடிய முடிவுகளையும் சட்டங்களையும் இவை இயற்றுவதால் இவற்றின் செய்திகளை அறிந்து கொள்ள மக்களுக்கு மிகுந்த ஆர்வம் உள்ளது. இவ்வவை உறுப்பினர் களுக்குள்ள உரிமைகளைப் பற்றியும் இந்த சபைகள் நடத்தப்படுவதற்கான விதிமுறைகள் பற்றியும் நன்கு தெரிந்துகொள்ளாத நிருபர்கள் தவறிழைக்கக்கூடும். இதனால் பத்திரிகைக்குத் துன்பம் நேரிடும். எனவே சட்டமன்றச் செய்திகளைச் சேகரிக்க அனுபவம் வாய்ந்த நிருபர்கள் அனுப்பப்படுவர். இந்நிருபருக்கு அரசியல் சட்ட வரலாறு, சட்டசபை அமைப்பின் படிப்படியான வளர்ச்சி, அரசியல் கட்சிகளின் வரலாறு, உறுப்பினர்கள் குறித்த விவரங்கள், சட்டமன்ற விதிமுறைகள், எழுதாச் சட்டங்கள் தெரிந்திருக்க வேண்டும். அன்றாட நாட்டு நடப்புக்கள் தெரிந்திருக்க வேண்டும். தங்கள் பத்திரிகைகள் விற்கக் கூடிய பகுதிகளைச் சேர்ந்த எதிர்க்கட்சி, ஆளும் கட்சிப் பிரமுகர்களைப் பற்றித் தெரிந்து வைத்திருக்க வேண்டும். சுருக்கெழுத்து அறிவு கட்டாயம் தேவை. நீண்ட நேரப் பேச்சுக்களைக் கேட்கும் பொறுமை வேண்டும். அனைத்துக் கட்சியினருடனும் கலகலவென்று பேசும் சுபாவம் வேண்டும். செய்தியின் மதிப்பை அறியும் கண்ணோட்டம் தேவை. பாரபட்சமின்றிச் செய்தியை அளிக்கும் நேர்மையும் நாணயமும் தேவை. சட்டமன்றத்தில் பத்திரிகையாளருக் கென ஒரு தனி இடம் ஒதுக்கப் பட்டிருக்கும். இதை 'காலரி' (Press Gallery) என்பர். இங்குதான் சுருக்கெழுத்தில் வல்ல நிருபர்கள் அமர்ந்திருப்பர். உறுப்பினர்கள் கூறுவதையும் சபையில் நடக்கும் நிகழ்ச்சிகளையும் அவர்கள் எழுதிக்

கொள்வார்கள். சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் அமர்ந்திருக்கக் கூடிய இடத்திற்கு வெளியேயுள்ள பிரகாரம் போன்ற பகுதியாகிய தாழ்வாரம் 'லாபி' (Lobby)என்று அழைக்கப்படும். இங்குதான் மெம்பர்கள் கூடி நின்று கொண்டோ அமர்ந்துகொண்டோ பேசுவார்கள். அவ்வாறு கோஷ்டி கோஷ்டியாக நின்று பேசும் இடங்களில் பல அரசியல் ரகசியங்கள் காதில் விழக்கூடுமாதலால் இங்கு வந்து நிருபர்கள் மற்ற உறுப்பினர்களுடன் அளவளாவுவர். இந்நிருபர்கள 'லாபி நிருபர்', அரசியல் நிருபர் என்று அழைக்கப்படுவர்.

Assignment : (ஒப்படைப்புப் பணி) ஒரு நிருபருக்கு அல்லது ஒரு இதழாளருக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் ஏதாவதொரு குறிப்பிட்ட பணியைக் குறிக்கும்; அல்லது ஒரு நிருபரின் தற்காலிகப் பணியைக் குறிக்கும்; அல்லது ஒரு நிருபர் வழக்கமாகச் செய்தி சேகரிக்கச் செல்லும் இடங்களையும் குறிக்கும். சான்றாக காவல்துறை மற்றும் நகர அரங்குகள் போன்றவை. ஒரு குறிப்பிட்ட செய்தி சேகரிக்கும் இடத்திற்கு அல்லது ஒரு குறிப்பிட்ட செய்தி சேகரிப்பிற்கென நியமிக்கப் படாமல் நகர்ச் செய்தி ஆசிரியருக்கு (City Editor) என்னென்ன செய்திப் பணிகள் உடனடியாக வரு கின்றனவோ அத்தனை செய்தி களுக்கும் பயன்படுமாறு அவருடன் இருந்து செய்தி சேகரித்துக் கொடுப்பவர் பொது-ஒப்படைப்புப் பணி நிருபர் (General assignment reporter) எனப்படுவார்.

Assignment book : (ஒப்படைப்புப் பணிக் குறிப்பேடு) நகர்ச் செய்தி ஆசிரியர் வைத்திருக்கும் கையேடு. அதில் வரவிருக்கும் ஒவ்வொரு சிறப்புக் கட்டுரையும் எந்தெந்த நிருபருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விபரங் களும் குறிக்கப்பட்டிருக்கும்.

Aston : (படத் தலைப்பு ஆக்குவோர்) மின்னணுச் சாதனங்களைப் பயன் படுத்திப் படத் தலைப்புக்கள் பட விளக்கங்களை உருவாக்குபவர்கள்.

Atmosphere : (சூழ்நிலை) 1) காற்றுச் சூழல். 2) தொலைக்காட்சி நிகழ்ச்சி களில் ஒரு காட்சியை மிகவும் இயற்கையானதாகக் காட்டும் உணர்வுச் சூழலைத் தோற்றுவித்தல் ; வானொலி நிகழ்ச்சிகளில் சூழ்நிலை யைக் காட்ட ஒலிக்குறியீட்டைப் பயன்படுத்துதலையும் குறிக்கும்.

Atmospherics : (காற்று மண்டல மின் தொல்லை) காற்று மண்டலத்தில் உள்ள மின்சாரத் தொல்லைகள் அல்லது குறியீடுகள்.

Attention attractions : (கவன ஈர்ப்பிகள்) கவன ஈர்ப்பிகள் குறிப்பாக ஒலிபரப்புக் கருத்துப் பரிமாற்றத்தில் முக்கியம் வாய்ந்தவை. கருத்துப் பரிமாறும் ஒருவர் கேட்போராது கவனத்தைப் பல வழிகளில் ஈர்க்க முடியும். அவ்வாறு ஈர்க்கக் கூடிய வழிகள் பின்வருமாறு : அ. **Surveil-lance (கவனக் கண்காணிப்பு)** சூழலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் பற்றி அறிக்கை செய்யும் கருத்துப் பரிமாற்றங்கள் ஒருவகை. வானொலி ஒலிபரப்பில் செய்தி ஒலிபரப்பு, வெப்ப நிலை அறிக்கை போன்ற செய்தி தரும் நிகழ்ச்சிகளில் கவன ஈர்ப்புக் கூறுகளைக் காண முடியும். தொலைக்காட்சி ஒளிபரப்பில் சத்தம், வேகம், அதிக ஒளி போன்ற குறியீடு களால் நேயர்களின் கவனத்தைக் கவரலாம். திறமை வாய்ந்த ஈர்ப்பு சக்திகள் உளவியல் தொடர்பான தூண்டுதல் உடையனவாய்த் திகழுகின்றன. ஆ. **Prescription**

(விதி அமைப்பு) நேயர் தன் சுற்றுச் சூழலுக்கு ஏற்பக் கூறப்படும் அறிவுரையாகக் கருத்தைக் கொள்ளல் மற்றொரு வகை. சான்றாக நலவாழ்வு உரைகள், வணிக விளம்பரம் போன்றவை இவ்வகையின. இ. **Cultural transmission :** (பண்பாட்டுப் பரிமாற்றம்) சமுதாயத்தின் இளைய தலைமுறையினருக்கு அச்சமுதாயத்தின் முந்திய தலைமுறையினரின் நம்பிக்கைகள், கொள்கைகள் முதலியவற்றைத் தெரிவித்தல் மூன்றாம் வகை. சான்றாக, கிறிஸ்தவ தேவாலயப் பாதிரியார் பேச்சு, கல்வி, பண்பாடு தொடர்பான விரிவுரைகள் முதலியவற்றைக் குறிப்பிடலாம். ஈ. **Entertainment** (பொழுதுபோக்கு) பொழுதுபோக்குக்கு உதவும் வகையிலான நிகழ்ச்சிகளைத் தருதல் மற்றொரு வகை. வினா விடைப் போட்டி, திரைப்படப் பாடல் காட்சிகள் போன்றன சான்றுகள்.

Attention span : (கவன நேர அளவு) ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை நேயர் எவ்வளவு நேரம் தொடர்ந்து கவனிக்கிறாரோ அந்த கவன நேரம் இவ்வாறு குறிப்பிடப்படும். தொலைக் காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் பெரும்பாலும் பொழுதுபோக்கு நோக்கிலேயே பார்க்கவும் கேட்கவும்படுவதால் நேயர்களைப் பொழுது போக்குக் கூறு அல்லாத நிகழ்ச்சிகளைப் பார்க்கும்படி கட்டாயப் படுத்த முடியாது. எனவே நிகழ்ச்சியே மக்களின் கவனத்தைத் திருப்புவதாய் அமையவேண்டும். கவனிக்கக் கூடிய சக்தியை அதிகப்படுத்துவதாய் (கவனத்தை அதிக நேரம் திருப்புவதாய்) நிகழ்ச்சிகள் அமைதல் வேண்டும்.

Attribution : (உடமையாக்கம்) மிகச் சரியாகச் செய்தி தெரிவித்தலின் அடிப்படை விதி இது. செய்தி குறித்த எல்லா விபரங்களும சம்பவம் நடந்தபோது சரியாக அவ்விடத்தில் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட யாராவது ஒருவரால் தவறாக விளக்கப்பட்டு விடலாம். எனவே சரியாக ஆராய்ந்து இன்ன அரசு அதிகாரி இச்சம்பவம் நடந்தது பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என்று செய்தி ஆதாரத்துடன் செய்தி எழுதுதலே மிகச் சரியாகச் செய்தி எழுதும் முறை ஆகும். சான்றாக 'தீப்பிடித்த சம்பவம்' ஒன்று நடந்த இடத்தில் நிற்கும் எந்த ஒரு மனிதனும் தீப்பிடித்த காரணம் 'இன்னவாக இருக்கும்' என்ற ஒரு கருத்து கொண்டிருப்பார். நேரடியாக அவர் அதைக் கவனித்ததை வைத்து அவரது கருத்து அமையும். இவரது கணிப்பு ஓரளவு சரியாகக் கூறப்பட்டிருப்பதாகப் பிறர் கருதினும் இவரது இக்கணிப்பு ஒரு மிகச் சரியான செய்தியைத் தந்துவிட முடியாது. சாதாரண கவனிப்பாளன் செய்தியைத் தெரிவிப்பதற்குப் பொருத்தமான ஆதாரம் அன்று. தீயைக் கவனித்து, அது பிடித்ததற்கான காரணத்தைக் கண்டுபிடித்துத் தீர்மானிக்க வேண்டிய அரசு அதிகாரியின் கருத்து செய்தியில் சொல்லப்பட்டிருந்தால் அது மட்டுமே சரியான கருத்தாக அமையும்.

Audience : (பெறுநர்) மக்கள் தொடர்பு சாதனங்களாகிய நாளிதழ்கள், வானொலி, தொலைக்காட்சி முதலியன பரப்பும் கருத்துக்களை முறையே வாசிப்போர், கேட்போர், பார்ப்போர் ஆகியவர்கள் பெறுநர் ஆவர். பத்திரிகைகள் தம் செய்தி பெறுவோரைக் குறிப்பதற்கு வாசகர்கள் என்ற சொல்லையும் வானொலியும் தொலைக்காட்சியும் இரண்டுக்கும் பொதுவான நேயர்கள் என்ற சொல்லையும் இச்சொல்லுக்கு (Audience) இணையாகப் பயன் படுத்துகின்றன. தகவல் தொடர்புச் செய்தி பெறுவோரின் அளவு

பொதுவாகக் குறிப்பிட்ட ஒன்றனுக்குச் சந்தா கட்டிச் சேரும் நபர்களின் எண்ணிக்கையை விட அளவில் கூடியது. ஏனெனில் 'Audience' என்ற இச்சொல் செய்தியை வாசிக்கும், கேட்கும், பார்க்கும் எல்லோரையும் உள்ளடக்குகிறது. நேயர்கள் நிகழ்ச்சிகளின் உள்ளடக்கத்தைத் தீர்மானிப் பவர்களாக அமைகின்றனர். 'நடைமுறையிலிருந்து விலகல்' என்ற ஒன்றைத் தகவல் தொடர்பு சாதனங்கள் தத்தம் நேயர்களின் விருப்பத்திற் கேற்பப் பிரதிபலிக்கின்றன என்பதை எவரும் மறுக்க இயலாது. இது தகவல் தொடர்பு சாதனங்களே ஏற்றுக் கொள்ளும் கொள்கையாகும். ஒலிபரப்பு நேயர்கள் நடப்பியல் சார்ந்த உள்ளடக்கத்தில் அதாவது செய்திக் கதைகள், விளக்கப் படங்கள் போன்ற நடப்பியல் சார்ந்த நிகழ்ச்சிகளில் மிகச் சிறிதளவே ஆர்வம் கொண்டிருக் கின்றனர் என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன. புனைகதைகள் மற்றும் வழக்கத்திற்கு மாறுபட்டு வியப்பூட்டுபவை போன்றன உண்மையாகத் தோற்றமளிக்கா விட்டாலும் தொல்லைப்படுத்துவனவாக இல்லாத அளவில் அவை குறித்து நேயர்கள் ஆழமான விருப்பம் தெரிவிக்கின்றனர். தகவல் தொடர்பு சாதனங்கள் ஆசுவாசப்படுத்திக் கொள்ளவும் ஓய்வு நேரங்களில் பொழுதுபோக்கவும் பயன்படும் ஒன்று என்றே பெரும்பாலும் வரையறைப் படுத்தப்படுகின்றன. அதிகமான பொது மக்கள், நடப்பியல் என்றாலே கடமை, பொறுப்புக்கள் முதலியவை என்றும் அவை பாரமானவை என்றும் எண்ணுவதால் தகவல் தொடர்பு சாதனங்கள் அவற்றிலிருந்து ஒரு மாற்றினைத் தருவன என்றும் எண்ணுகின்றனர்.

Audience analysis : (பெறுநர் பகுப்பாய்வு) ஒரேபோல் இல்லாமல் வெவ்வேறு வகைப்பட்ட நோக்குகள், ஆர்வங்கள் மற்றும் வெவ்வேறு பொருளதார, சமூக, அரசியல், மத நிலைகள் கொண்டு பெரிய நிலப்பரப்பில் வாழும் வாசகர்களும் நேயர்களும் ஆகிய தம் நேயர்களைப் பற்றி அதாவது குறிப்பிட்ட நிகழ்ச்சியைக் கவனிக்கும் நேயர்களைப் பற்றி செய்தி தருநர் கணித்துக் கொள்ளுதல் அவசிய மானது ஆகும். நேயர்களை வகைப் படுத்துதல் பலகாலமாக இருந்து வரினும் அவர்களைப் பற்றிய புள்ளிவிவரக் குறிப்புக்களின்படி (demographics) அணுகும் ஆய்வுமுறை புதிது. சான்றாக, தொலைக்காட்சியில் குறிப்பிட்ட வணிக விளம்பர கருத்து, உத்திக்கென்று சில நேயர்கள் உருவாதலின் அடிப்படை யாது? வானொலியில் குறிப்பிட்ட நிலைய நிகழ்ச்சி, வடிவம், ஒலி முதலிய வற்றிற்கென நேயர்கள் உருவாதலின் அடிப்படை யாது? போன்றனவற்றை அறிவியல் முறையில் ஆராயும் ஒரு கலையே நேயர்களது புள்ளிவிபரக் குறிப்புக்களைக் கொண்டு நேயர்கள் குறித்து ஆராயும் முறை ஆகும். இம்முறைப்படி வகைப்படுத்து வதற்கெனச் சில அடிப்படைக் கூறுகள் உள்ளன. அவை நேயர்களது வயது, பால், பொருளாதாரம், அரசியல் தொடர்பு, முதன்மை விருப்பங்கள், தொழில், நிலையான எண்ணங்கள், கணிப்புக்கள், நம்பிக்கைகள், கல்வி அறிவு, இனப்பின்னணி, வாழும் ஊர், அக்குறிப்பிட்ட நிகழ்ச்சி பற்றிய அறிவு முதலியன ஆகும். இவற்றின் வாயி லாகத் தம் நேயர்கள் இத்தகையோர் என்று கணக்கிட்டுக் கொள்ளலாம்.

Audience gratifications : (நேயர் நுகர்வுக் காரணிகள்) வாசகர்/நேயர் ஆகியோரது கணிப்பில் சில நிகழ்ச்சிகள் அவர்களால் விரும்பப் படுவதற்கான காரணங்கள் உள்ளன. பதட்டம், வீரதீரச் செயல்கள், பால் உணர்வு, நகைச்சுவை, செய்தி

முக்கியத்துவம், சமுதாய மதிப்புக்கள், சுய வெளிப்பாடு, ஆர்வம், நடப்பியல், புதுமை ஆகிய அவா நிறைவு செய் இயல்புகளுள் ஒருசில கூறுகள் இருந்தாலும் அந்நிகழ்ச்சிகளை நேயர்கள் விரும்பிக் கவனிக்கின்றனர். நேயர்கள் ஒலிபரப்பு நிகழ்ச்சியில் ஏதோ சில காரணங்கள் அவர்களை ஈர்ப்பதால் அவற்றை விரும்பிப் பார்க்கின்றனர். அதற்கேற்ற படி எழுதுவோர் மற்றும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் கருத்து (உள்ளடக்கம்), நடிப்போர் போன்ற நேயர் விருப்பங் களை மனதில் கொண்டு நிகழ்ச்சி களைத் தயாரிக்கின்றனர். நேயர் களாகிய தனி நபர்களைக் கவனத்தில் கொள்கின்றனர்.

Audience involvement : (நேயர்கள் ஈடுபாடு) மக்களைக் கவரும் கவர்ச்சி யூட்டிகளுள் ஒன்றாலோ சிலவாலோ நேயர்கள் ஈர்க்கப்படுவதனால் நிகழ்ச்சியை நேயர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் கவனிக்கின்றனர். சான்றாக, செய்தி நிகழச்சியில் (News Programme) முக்கியமானவை செய்தி முக்கியத்துவம், செய்தி மதிப்பு ஆகியன. நாடக நிகழ்ச்சியில் முக்கியமானவை பாத்திரங்கள், உணர்ச்சி போன்றவை. விளக்கப்படம் (Documentary) செய்தி நிகழ்ச்சியை விட பெரிதும் நாடகத்தையே ஒத்திருக்கிறது. விளக்கப்படம் உள்ளடக்கம், செய்தி மதிப்பு, நிகழ்ச்சியில் தன்னை இனங்கானல் (Personalization) முதலியவற்றை உள்ளடக்கியது. இவை மூன்றும் இருந்தால் நேயர்கள் விளக்கப் படத்தால ஈாககப்பட்டு ஈடுபாட்டுடன் கவனிப்பர்.

Audience participation : (நேயர் பங்கேற்பு) தொலைபேசி மூலமாக வானொலி, தொலைக்காட்சி நேயர்கள் தம் கருத்தை நிகழ்ச்சி நடந்துகொண்டிருக்கும் போதே தெரிவிப்பது உண்டு : அவர்களது கருத்து அப்படியே நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும். இது நிகழ்ச்சியில் நேயர்கள் பங்குகொள்ளக் கூடிய ஒரு முறை ஆகும். வானொலி தொலைக்காட்சி போன்றவற்றில் தரப்படும் செய்தி உரை (News Talk) என்ற நிகழ்ச்சியில் இம்முறை கையாளப்படும். குறிப்பிட்ட தலைப்பில் ஏதாவது ஒரு பகுதியை நிகழ்ச்சி தர வந்திருப்பவர் தெரிந்தெடுத்துப் பேசுவார். அதைக் கேட்டுக் கொண்டி ருக்கும் நேயர் தொலைபேசி மூலமாகத் தம் கருத்துக்களை, அய்யங்களைத் தெரிவிக்குமாறு கேட்கப்படுவதுண்டு. இவற்றுடன் பல நிகழ்ச்சிகள் நேரடி ஒலி-ஒளிக் கூறு (ad-lib) ஒலிபரப் பாகவே செய்யப்படுகின்றன. இது தொடர்பாக ஏற்கனவே எழுத்துப் படிவம் தயாரித்து வைத்துக்கொள்ளப் படுவது என்பது பெரிதும் இல்லை.

Audience research : (நேயர் ஆய்வு) ஒரு குறிப்பிட்ட ஒலிபரப்பு நிகழ்ச்சிக்கு அல்லது வாராந்திர நிகழ்ச்சிகளுக்கு ஒட்டுமொத்தமாய் நேயர்கள் குறித்து ஆய்வு செய்வது உண்டு. இவை விழுக்காட்டில் மதிப்பிடப்படும்.

Audience research unit : (நேயர்கள் ஆய்வுப் பிரிவு) நேயர்களது கருத்துக்கள் வாயிலாக நிகழ்ச்சிகளின் தரம் பற்றி ஆயும் பிரிவு. நேயர்கள் எந்த நிகழ்ச்சியை விரும்பிப் பார்க்கிறார்கள் என்று ஆராய்வதன் மூலமாகவே நேயர்கள் எப்படிப்பட்ட வர்கள் என்று இனங்காண முடியும். எனவே தகவல் தொடர்பு சாதன அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் பொது மக்களோடு தொடர்பு கொள்ளும் முயற்சியின் விளைவாக நேயர்கள் குறித்த விபரங்கள் கிடைக்கின்றன. நேயர்களின் கடிதங்கள் மற்றும் தொலைபேசி மூலம் அவர்கள் தெரிவிக்கும் கருத்துக் களைக் கொண்டு இப்பிரிவினர்

நிகழ்ச்சிகளின் தரத்தினை ஆய்வர். நேரிடையாக நேயர்களைச் சந்தித்துப் பேசி அவர்களது கருத்தைக் கண்டறிவதும் உண்டு. சான்றாக, நாளிதழ்களில் இடம்பெறும் வாசகர் கடிதங்களையும் அகில இந்திய வானொலியில் இடம்பெறும் நேயர் கடிதம் நிகழ்ச்சியையும் சென்னைத் தொலைக்காட்சியில் இடம்பெறும் எதிரொலி நிகழ்ச்சியையும் குறிப்பிடலாம். இவற்றைக் கொண்டு செய்தி வெளியீட்டின்/நிகழ்ச்சிகளின் தரத்தை இப்பிரிவு ஆராயும். இவை மட்டுமன்றி நேயர்கள், நேயர்களின் கருத்துக்கள் பற்றிய 'சர்வே'யும் இந்நிலையத்தாரகளால் எடுக்கப்படுகிறது. தொடர்பு சாதனச் செய்திகளில் நேயர்களைத் திருப்திப்படுத்தும் கூறுகளாகவும் நுகர்வுக் காரணிகளாகவும் காணப்படுவனவாக 1) செய்தி (Information) 2) தன்னை இனங்காணல் (Personal Identity) 3) ஒருமைப்பாடு மற்றும் சமுதாயத் தொடர்பு (Integration and social interaction) 4) பொழுதுபோக்கு (Entertainment)என்ற நான்கையும் மேக்வெல் முதலானோர் வகைப்படுத்துவர்.

Audio : (ஒலி/ஒலிபரப்பு சாதனங்கள்/ஒலி கேட்டல்) 1) ஒலி: ஒரு ஒலிபரப்பின் ஒலிப்பகுதி. 2) கேட்பதற்கு உதவும் தகவல் தொடர்பு சாதனங்களை இச்சொல் குறிக்கும். இசைத் தட்டுக்கள் (discs), ஒலி நாடாக்கள் (Audio tapes) போன்றன வானொலி போன்ற செவிப்புலனால் கேட்கக் கூடிய தகவல் தொடர்பு சாதனங்களுக்கு உதவுவன ஆகும். இவற்றுள் ஒலி நாடாக்கள் மூலம் ஒலிப்பதிவை எளிதாகவும் விரைவாகவும் வசதியாகவும் செய்ய முடிகிறது. பதிப்பித்தலுக்கும், மீண்டும் ஒலிக்கச் செய்து கேட்டலுக்கும் இவை உதவியாய் இருக்கின்றன. ஒலிப்பதிவுக் கருவி, நாடா இரண்டும் குறைந்த விலையில் கிடைக்கின்றன. இவை மூன்று வகையின. அ) Open reel tape machines : (திறப்பு நாடாச்சுருள் இயந்திரங்கள்) எவ்விதத் தடையுமின்றி நீண்ட நேரம் விரைவாக ஒலிப்பதிவு செய்ய உதவுகிறது. எளிதில் பதிப்பிக்க வழிவகை இருக்கிறது. ஆ) Cassettee Units : (ஒலி நாடாப்பேழை அலகுகள்) சிறியதாக, உபயோகிக்க எளியதாக, தூக்கிச் செல்ல வசதியானவையாக இருக்கின்றன. குரல்களை உன்னதமாகப் பதிவு செய்கின்றன. இ) Cartridge : (ஒரு நடுப்பகுதி (one core) கொண்ட ஒலி நாடாச் சுருள் கலம்) சிறிய நேரம் மட்டுமே உள்ள பதிவுகளுக்கு சான்றாக, தனியார் பொருள் விளம்பரம் போல உள்ள பதிவுகளுக்கு இவ்வொலி நாடாச் சுருள் அலகுகள் (Cartridge units) பயன்படுகின்றன. ஒரு செய்திக் கதையில் சேர்க்கப்பட வேண்டிய மிகச் சிறிய கேட்புக் கூறுகளை (ஒலிகளை) இது வேகமாக அதன் பதிவுக் கருவியில் செருகிவிடும். ஒலிபரப்புக் கருவிகளில் 'Carts' விரைவாக மாற்றப்பட முடியும். எனவே இவை தனியாகத் தயாரிக்கப்பட்டு சில நிலையங்களில் ஒலிபரப்பு வேளையில் செய்திக் கதையில் செருகப்படும். 3) ஆடியோ-'நான் கேட்கிறேன்' என்ற பொருளைத் தரும் இலத்தீன் சொல். ஒலியைப் பரப்புதல் அல்லது ஒலியைப் பெறுதல் என்பதைக் குறிக்கும்.

Audio consoles : (ஒலிபரப்புக் கட்டுப்பாட்டுத் திட்டம்) ஒரு நிகழ்ச்சித் தயாரிப்பில் உள்ளே அனுப்பப்படும் பல்வேறு ஒலிகளைக் கட்டுப்படுத்தும் ஒரு திட்டம். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் பல்வேறு ஒலிவாங்கிகள், சுழல் தட்டுக்கள், பதிவுக் கருவிகள், இணைப்புக் கம்பிகள் முதலியவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்ய அனுமதிப்பதும்

அவ்வாதாரங்களின் ஒலி அளவைக் கட்டுப்பாட்டில் வைக்க அனுமதிப்பதும் பல்வேறு ஆதாரங்களைத் (Sources) தேவையான அளவுகளில் கலக்க அனுமதிப்பதும் ஆகிய அனுமதிகள் இத்திட்டத்தைச் செயல்படுத்து பவருக்குக் கிடைக்கின்றன.

சான்று : ஒலிபரப்புக் கருவிக்கும் பதிவுக் கருவிக்கும் ஒலிபரப்பப் படுவதற்காகச் சேமித்து வைக்கவும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள கேபிளுக்குச் செலுத்தி அங்கிருந்து மற்றொரு திட்டத்திற்கு அல்லது மற்றொரு இடத்திற்கு அனுப்பப்படும் வகையில் இக்கட்டுப்பாட்டுத் திட்டம் செயல் புரியும்.

Audio engineer : (ஒலிபரப்புப் பொறியியல் வல்லுநர்)

Audio frequency : (பொது அளவு ஒலி அதிர்வுகள்) மனிதனது செவிப்புலன் பொதுவாகக் கேட்கக் கூடிய அளவிலான ஒலி அதிர்வுகள்.

Audio meter : (கேள்வி மானி) ஏ.சி. நீல்சன் நிறுவனத்தாரால் நேயர்களை அளவிடப் (மதிப்பிட) பயன்படுத்தப்படும் அலகு.

Aural style : (கேட்பு மொழிநடை) ஒலிபரப்பில் அச்சுச் சாதனங்களைப் போல நிறுத்தி, பார்த்து வாசிக்கும் வசதி நேயருக்கு இல்லை. சிறிது நேரம் கேட்பதன் மூலமே கருத்துக்களை நேயர் பெற வேண்டும். எனவே ஒலிபரப்பு மொழிநடை கலவை வாக்கியம், மறைபொருள் முதலிய வற்றை உள்ளடக்கிய செயற்கையான அச்சுநடையிலிருந்து வேறுபட்டிருக்க வேண்டும். கலவை வாக்கியம், எதிர்மறை வாக்கியம், தெளிவைத் தராத திரும்பத் திரும்ப வரும் சொற்கள் முதலியன தவிர்க்கப்பட வேண்டும். செவி உணரக்கூடிய வகையில் நேயர்கள் அதிகக் கவனமும் முயற்சியும் மேற்கொள்ள வேண்டிய தாய் இல்லாமல், தனி வாக்கியம், காலம், நேரம் பற்றிய சொற்கள், குரலாலான வழிகாட்டும் குறிப்புக்கள் (Vocal cues), கேட்புத் திறனுக்கேற்ற இடைவெளி, செய்வினை, கூறுவோர் மற்றும் கேட்போரிடையே நட்பினை ஏற்படுத்தும் பாணி, தன்மைப் பெயர்கள், விளக்கச் சொற்கள், இலக்கிய நயமிக்க (Connotative) சொற்கள் முதலியவற்றைப் பயன் படுத்தி எழுதப்பட வேண்டும்.

Authoritarian theory : (ஆள்வோர் உரிமைக் கோட்பாடு) அரசுக்கும் பத்திரிகைகளுக்கும் இடையே உள்ள உறவின் அடிப்படையில் நான்கு பத்திரிகைக் கோட்பாடுகள் வகுக்கப் பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஆள்வோர் உரிமைக் கோட்பாடு. ஒரு மனிதன் அல்லது குழு (அரசு) தலைமை அங்கம் வகிக்கும் நிலையில் அம்மனிதன் அல்லது அக்குழுவால் சமுதாயம் கட்டுப்படுத்தப்படுகிறது. அவ்வாறு சமுதாயக் கட்டுப்பாட்டிற்கு உதவும் வலிமை மிக்க கருவிகள் தகவல் தொடர்பு சாதனங்கள் என்று இக்குழு கருதுவதால் இக்குழு தகவல் தொடர்பு சாதனங்களையும் கட்டுப் பாட்டில் வைக்கிறது. இக்கட்டுப் பாட்டு நிலையில் இத்தகைய கோட்பாடு நடைமுறையில் நிலவுகிறது. இக் கொள்கைப்படி தகவல் தொடர்பு சாதனங்கள் பொதுமக்களைப் பயிற்றுவிப்பவை மட்டுமல்ல ; பிரச்சாரத் திற்கு உதவுவன மட்டுமல்ல. தம் அதிகாரச் சிறப்பம்சத்தால் மக்களைக் கட்டுப்படுத்துபவையும் கூட. பொது வாக அச்சு தொடர்பான தகவல் தொடர்பு சாதனங்களின் நிறுவனப் பிரிவுகளைத் தனியார் உடமைப் படுத்திக் கொண்டாலும் அவை கட்டுப்படுத்தற்குரியன என்பது இக்கொள்கை. இக்கருத்துரு

வாக்கத்தின்படி இதழ்ப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ஒருவர் தலைமைப் பதவி அளிக்கப்பட்டது போன்ற சிறப்புச் சலுகைகளுக்கு உரியவராவது போலவே குறிப்பிட்ட நேரங்களில் ஆர்வ மிகுதியில் தரப்படும் சுதந்திரத்தை மட்டுமே அனுபவிக்கக் கூடியவரே யன்றிப் பிற நேரங்களில் கட்டுப் படுத்தப்படும் அதிகாரம் உடையவரே. பத்திரிகைகள் அறிவாளிகளால் (அரசு) கட்டுப்படுத்தப்பட வேண்டும் அல்லது கட்டுப்பாடு அறிவாளிகள் கையில் இருக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் இத்தத்துவம் இயங்கு கிறது. அரசு நாட்டின் நன்மை கருதித் தனி மனிதர்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்துவதைப் போலவே தகவல் தொடர்பு சாதனங்களின் மீதும் கட்டுப்பாட்டை விதிக்க முடியும் என்பது இக்கொள்கை ஆகும் இக்கொள் கைப்படி உண்மையான சுதந்திரம் பத்திரிகைகளுக்குக் குறைவு. இக்கொள்கை முன் தணிக்கை, அரசியல் செய்திகள் போன்றவற்றை வெளியிடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் போன்றவற்றிலிருந்து விலகினால் பத்திரிகைகளுக்குத தண்டனை தருதல முதலியவற்றை நியாயப் படுத்துகிறது. பத்திரிகைச் சட்டம், நாளிதழ் தயாரிப்பில் மாநில அரசின் தலையீடு, பத்திரிகை நடத்தை குறித்து கட்டாய விதிமுறைகள், வரி, பொருளாதாரச் சலுகைகள் கட்டுப்பாடு, வெளிநாட்டுப் பொருட் களை இறக்குமதி செய்வதற்குக் கட்டுப்பாடு விதித்தல், தலையங்கம் எழுதுவதற்குரிய ஆசிரியர்களை அரசே நியமித்தல், வெளியீடுகளை நிறுத்தி வைத்தல் முதலிய வகைகளில் அரசு பத்திரிகைகளைக் கட்டுப் படுத்தும். இக்கொள்கைப்படி,

1) தகவல் தொடர்பு சாதனம் அரசு அதிகாரிகளைக் குறை கூறியோ அல்லது நாட்டில் ஒழுங்கைக் குலைக்கும் வண்ணமோ எதுவும் செய்யக்கூடாது.

2) அரசு அதிகாரிகளுக்கு எப்போதும் தகவல் தொடர்பு சாதனங்கள் துணை உறுப்பாகவே இயங்கவேண்டும்.

3) அரசியல் மதிப்புக்கள், தலைமை, பெரும்பான்மை முதலியவற்றிற்கு எதிரியாக இருப்பதைத் தகவல் தொடர்பு சாதனங்கள் தவிர்க்க வேண்டும்.

4) இக்கொள்கைக்கு வலுவூட்டும் வகையில் முன் தணிக்கை நியாயப் படுத்தப்படலாம்.

5) அரசு அதிகாரிகள் மீது ஒத்துக்கொள்ள முடியாத வகையில் தாக்குதல், அரசுக் கொள்கை யிலிருந்து விலகல், அறம் குறித்த கோட்பாடுகளை மறுத்தல முதலியவை குற்றவியல் தவறுகள் ஆகும்.

6) இதழாளர்கள் அல்லது பிற தகவல் தொடர்பு சாதனப் பணியாளர்கள் தத்தம் தகவல் தொடர்பு சாதன அமைப்புக்குள்ளேயே எவ்விதச் சுதந்திரமும் இல்லாதவர்கள்.

Author's alteration : (ஆசிரியர் செய்யும் திருத்தங்கள்) தான் எழுதித் தயாரித்த செய்தி அச்சுக் கோர்க்கப் பட்ட பின்னர் ஒரு ஆசிரியர் செய்யும் மாற்றங்கள்.

Auto composition : (தானியங்கு அச்சுக்கோர்ப்பு) தடடெழுததுப் பொறி அச்சுக்கோர்ப்பு (Typewriter composition) முறையில் அச்சுக் கோர்ப்பவர் விரலால் அழுத்தக் கூடிய அச்சுப் பொறியில் அதாவது பொத்தான் பலகை உள்ள அமைபபில் பொத்தான்களை முறைப்படி இயக்கு வதன் மூலம் ஒரு வரியை உருவாக்குகிறார். தானே அச்சடுக்கும் பொறிகளில் லைனோ டைப்பு, (Line-o-type), மோனோ டைப்பு (Monotype) ஆகியவையும் அடங்கும்.

Auto cue : (தானியங்கு செயற் தூண்டு கருவி) தொலைக் காட்சிச் செய்தி சேகரித்தலில் களத்தில் அல்லது நிலைய அரங்கில் பயன்படுத்தப் படும் ஒரு தூண்டு கருவி. இது தகவல்

தருபவர் காமிராவைப் பார்த்துக் கொண்டே எழுதப்பட்ட அல்லது மின்னணு மூலம் உருவாக்கப்பட்ட படிவத்தை வாசிக்க உதவும். சான்றாக, தொலைக் காட்சியில் செய்தி வாசிப்பவர் காமிராவைப் பார்த்துக் கொண்டே அதன் வெகு அருகில் (ஏறக்குறைய அதற்கு மேல்) 'டெலிபிராம்ப்டரில்' ஓடும் படிவத்தை வாசித்தலைக் கூறலாம். இதனால் செய்திக் கதைகளைச் செய்தி வாசிப்பவர் நேயர்களைப் பார்த்து நேரே சொல்வது போல் தெரியும். இக் கருவியை உருவாக்கிய நிறுவனமே இக்கருவிக்கு இப்பெயரைத் தந்துள்ளது. இக்கருவியைப் பல்வேறு நிறுவனத்தார் உருவாக்கியுள்ளனர். இக்கருவிகள் 'Portaprompt' என்றும் 'Teleprompter' அழைக்கப் படுகின்றன.

Auto functions : (தானியங்கு பணிகள்) கணிப்பொறிக்குத் தரப்பட வேண்டிய அச்செழுத்துக்களின் வடிவம், பத்தியின் அகலம் போன்ற குறிப்புக்களை எழுததுபபடியின் மீது எழுதி ஆணையாகக் கொடுப்பர். இவ்வாணைகள் தானியங்கு பணிகள் என்று அழைக்கப்படும்.

Automatic purge : (தானியங்கு நீக்கம்) 24 மணி நேரங்களுக்கு மேல் பாதுகாதது வைததிருந்த எழுத்துப் படிகளை மாற்றமின்றி முற்றிலும் அழிக்கக் கூடிய கணிப்பொறி மாதிரிகள் உள்ளன. அவறறை வைத்துப் பணியாற்றும் போது வேண்டாதவற்றை நீக்கும் பணி எளிது.

Automation : (இயந்திர வழித் தம்மியக்கம்) அச்சுக் கலையில் ஏறபட்டுள்ள பல்வேறு முன்னேற்றங் களால அச்செழுத்துக்களை அப்போதைக்கப்போது இயந்திரங்கள் மூலம் தானியங்கு முறையில் உடனடி யாக நாம் உருவாக்க முடியும். செய்தியை மீண்டும் எளிதில் அச்சுக் கோர்க்கவும் முடியும்.

Autonomy : (தன்னாட்சி) 'தன் னாட்சி' என்ற கொள்கை "பண்பாடு என்பது மரபுவழிப் பட்டது : அது வரலாற்றின் சந்தர்ப்ப வெளிப்பாடு" என்பதோடு உடன்பாடுடைய ஒன்று. மாறாக தன்னாட்சி 'சமுதாய, பண்பாட்டுக் குவிவு' எனபதோடு ஒத்துப்போகாமல் சுய நிறைவிற்கு வழிதேடும் 'குவிவுக் கொள்கை'யை எதிர்க்கிறது. தன்னாட்சிக் கட்டாய மின்மை என்பது சமுதாயத்தின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் தகவல் தொடர்பு சாதனங்களைத் தேர்ந் தெடுக்கவும் பிற பண்பாட்டு வடிவங் களைத் தேர்ந்தெடுக்கவும் தேவைப் பட்டால் எதிர்க்கவும் பயன்படும். சுயாட்சி இவ்வாறு தகவல் தொடர்பு சாதனங்களை முறைப்படி சமுதாய மாற்றத்தோடு தொடர்புபடுத்துகிறது.

Availabilities : (பயன்படு வெற்றி டங்கள்) ஒலிபரப்பு நிகழ்ச்சிகளுக் குள்ளேயே இடம்பெறும் விளம்பர முறைபங்கு கொள் விளம்பரம் செய்தல் (Participation advertising) எனப்படும். வானொலி, தொலைக்காட்சி நிலை யங்கள், வலைப்பிணைப்பு (Network) மற்றும் தனித் தயாரிப்பாளர்கள் போன்றோரால் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளுக்குள் அவர்களால் விளம்பரங்களுக்கெனச் சிறிதளவு நேரம் அவ்விடத்து ஒன்றும் பதிவு செய்யப்படாமல் விடப்பட்டிருக்கும். அவ்விடங்கள் விளம்பரதாரர் களுக்கு அவர்களது வணிகச் செய்திகளை அவ்விடங்களில் சேர்த்துக்கொள்ளப் பயன்படும் பொருட்டு விற்கப்படும். நிகழ்ச்சி அமைப்பில் உள்ள இவ்வெற்றி டங்கள் 'availabilities' எனப்படும். இந்த வெற்றிடங்களில் ஒலிபரப்பப்படும் விளம் பரங்கள் குறுவிளம்பரங்கள் (Spots) அல்லது பங்கு கொள் விளம்பரங்கள் என்று கூறப்படுகின்றன.

Back bone : **(புத்தக இணைப்புப் பகுதி)** ஒரு இதழ் அட்டை போட்டு இதழ் வடிவமாக்கப்படும் பொருட்டு இணைக்கப்படும் ஓரம்.

Background : (பின்னணி/பின்னணி இசை/பின்னணி அலங்காரங்கள்) ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் ஒரு காட்சி உண்மையாகவே நடப்பதுபோல் தோன்றுமாறு செய்வதற்கு அக் காட்சிக்குப் பின்னணியாகத் தேவையான அலங்காரங்கள் உள்ள சூழலைத் தொலைக்காட்சி நிகழ்ச்சி களிலும் அல்லது பின்னணி இசையை வானொலி, தொலைக்காட்சி இரண்டின் நிகழ்ச்சிகளிலும் படைத்தல் உண்டு. இத்தகைய பின்னணி அலங்காரங்களும் இசைகளும் அவ்வந் நிகழ்ச்சிகளின் 'பின்னணி' என்று அழைக்கப்படும்.

Backgrounding : (பின்னணி சேர்த்தல்) செய்திக் கதைகளில் செய்தி நடந்த பின்னணியையும் அது தொடர்பான அறிக்கைகளையும் சேர்த்து எழுதுதல் பின்னணி சேர்த்தல் எனப்படும். நேரடியாகச் சொல்லப்படும் செய்திக் கதையுடன் அச்செய்திக் கதையின் பின்னணியையும் அது குறித்த பொருத்தமான அறிக்கை களையும் சேர்த்து எழுதலாம். மதிப்பீட்டு அறிக்கைகளையும் ஆதரவுக் கருத்துடைய உரைகளையும் தவிர்த்தல் வேண்டும். ஏனெனில் அவற்றில் ஒருவரது விருப்பு வெறுப்பு டைய சொந்தக் கருத்துக்கள் இடம் பெற்றுவிட வாய்ப்பு உண்டு.

விளக்கச் செய்திக் கதையில் (interpretative story) பின்னணி தருவதுடன் பொருத்தமான அறிக்கைகளையும் சேர்க்கலாம். இத்தகைய செய்திக் கதையில் விளைவு ஏற்படுத்தும் அறிக்கைகளை அவை சரியான கருத்துக்களுடனானதாக இருக்கு மாயின் மட்டுமே சேர்த்தல் வேண்டும். 'இது நல்லது' அல்லது 'இது கெட்டது' என்ற நேரடியாக மதிப்பீடு செய்யும் வகைகளைச் சார்ந்த மதிப்பீட்டு அறிக்கைகளைச் சேர்ப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆனால் தகுந்த கருத்துக் களின் துணையுடன் ஆதரவூட்டும் அறிக்கைகளைச் சேர்த்தால் விளக்கச் செய்திக் கதைக்கு மெருகூட்டுவதாய் அமையும். மதிப்பீடுகளையும் ஒருவருக்கே ஆதரவாகப் பேசு வதையும் சேர்க்க ஏற்பாடு செய்வது நிருபர்களுக்கு அவர்தம் சொந்தக் கருத்துக்களுக்கு ஆதரவு தேடும் வகையில் முழுச் சுதந்திரம் அளிக்காத தாகி விடும். விளக்கச் செய்திக்கதை எழுதும் நிருபர்கள் எதிரும் புதிருமான வாதங்களைக் கொண்டு கட்டாயமான ஒரு விவாதக் களத்தை உருவாக்கி அதிலிருந்து தகுதியான நியாயங்களை எடுத்துரைத்து அதன் முடிவில் 'ஏதாவது ஒன்று செய்யப்பட வேண்டும்' என்ற முடிவிற்கு வருமாறு எழுதலாம். செய்தித் தாள்களுக்குத் தனது கருத்துக்கு வலுவூட்டிப் பேசும் உரிமை இருப்பினும் அது செய்திக் கதையின் பகுதிகளில் அல்ல.

Background music : (பின்னணி இசை) ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் ஒரு நிகழ்ச்சித் தொடரின் உள்ளடக்கம், நிகழ்ச்சியில் பங்குகொள்வோரின் மனநிலை போன்றவற்றை இசை உயர்த்திக் காட்டும். குறிப்பாக நாடகம் போன்றவற்றில் பின்னணி இசை மேற்குறிப்பிட்டவாறு பயன்படுகிறது. திரைப்பட உருவாக்கத்திலும் பின்னணி இசை மிக முக்கியமான ஒன்று. தொலைக்காட்சியில் இசை என்பது உள்ளடக்கமாக அமையாத நாடகங்களிலும் பின்னணி இசை

பயன்படுத்தப்படுகிறது. பின்னணி இசை நிகழ்ச்சிக்குத் துணை உதவியாக இருக்க வேண்டுமே தவிர மிகுதியும் வெளிப்பட்டுத் தெரிவதாக இருக்கக் கூடாது. நிகழ்ச்சியைக் கவனிக்கும் நேயர்கள் பின்னணி இசையை உணராத வகையில் பின்னணி இசை இருக்க வேண்டும். எல்லோருக்கும் ஏற்கனவே தெரிந்த இசை அமைப்புக்கள் பயன்படுத்தப் படுதலும் தவறு. ஏனெனில் நேயர்கள் நிகழ்ச்சியின் உரையாடலைக் கவனிப்பதிலிருந்து விலகிவிடுவர்.

Backing protection : (பின்னணி உருவாக்கப் பாதுகாப்பு) தொலைக் காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புக்களின் பின்னணி எல்லையை வரை-யறைப்படுத்தும் வகையில் பின்னணித் தடுப்புக்களை வைத்தல் உண்டு. இவ்வாறு வைப்பது பின்னணிக்கு அப்பாற்பட்டு தேவை இல்லாத பகுதிகளைக் காமிரா பார்ப்பதைத் தடுக்க உதவுகிறது.

Back jacket blop : (புத்தக அட்டை) ஒரு புத்தகத்தின் இருபுறமும் உள்ள கனமான அட்டை.

Back leading : (பின்னோக்கி மாற்றுதல்) தற்கால நவீன அச்சுக் கோர்க்கும் இயந்திரங்களில் எழுத்துக் களை அசசுக்கோர்த்த பின்னர் மீண்டும் பின்னோக்கிச் சில மாறுதல் களைச் செய்தல் அதாவது இரண்டு வரிகளுக்கிடையேயான வெற்றி-டத்தைக் குறைத்தல், ஏற்கனவே கூறப்பட்டது மீண்டும் ஒருமுறை கூறப்பட்டிருக்குமாயின் அதனைத் தவிர்த்தல், ஒரே தலைப்பின் கீழ் உள்ள செய்திகள் பல பத்திகளில் அச்சாகி இருப்பதைத் தவிர்த்தல் போன்ற பல மாறுதல்களைச் செய்துகொள்ளும் ஒரு வசதி ஆகும்.

Back light : (பின்னணி ஒளி) ஒளிபரப்பு நிகழ்ச்சிகளில் காட்சியில் உள்ள பாத்திரத்திற்குப் பின்னாலிருந்து தரப்படும்ஒளி. இவ்வொளி தரப்படு வதானல் பாத்திரங்கள் அல்லது பொருளைப் பின்னணியோடு இயைத்துக் (இரண்டும் தனித்துத் தெரியாமல்) காட்ட முடியும். ஒளிபரப்பு நிகழ்ச்சிகளில் பின்னணி ஒளி காட்சியின் எல்லை வரையறை களையும் காட்சிக்குரிய உயிர்ப்பையும் தரும்.

Back list : (புத்தகப் பெயர்ப் பட்டியல்) ஆசிரியர் ஒருவரால் ஏற்கனவே எழுதப்பட்ட புத்தகங்கள் அல்லது வேறு பிற புத்தகங்களின் பெயர்கள் அடங்கிய பெயர்ப் பட்டியல்.

Back room : (பத்திரிகை அலுவலகப் பொறியியல் பிரிவு) சிறிய அளவிலான ஒரு நாளிதழ் அலுவலகத்தின் செய்தித் தயாரிப்பு அறை ; பத்திரிகை அலுவலகத்தின் பொறியியற் பிரிவு.

Back shed : (நாளிதழ் மடிப்பு அறை) பத்திரிகை அலுவலகத்தின் ஒரு பிரிவாகிய பத்திரிகைகளை மடித்து ஒழுங்குபடுத்தும் பிரிவு. பெரிய நாளிதழ் களில் இவ்வறைக்கு **'back shop'** என்ற பெயர் வழங்கப்படுகிறது.

Back timing : (இறுதிச் செய்திக் கூறின் மொத்த ஒளிபரப்பு நேரம்) செய்தி ஒளிபரப்பில் மொத்தச் செய்தியின் இறுதிச் செய்தியாகச் சேர்க்கப்படும் செய்திக் கூறின் மொத்த ஒளிபரப்பு நேரம். இக்கூறின் ஒளிபரப்பு நேரத்தை முன்கூட்டியே கணக்கிடுதல் செய்தி ஒளிபரப்பில் செய்தியை முடிக்கும்போது எந்த இடத்தில் இதைச்சேர்த்து வாசிக்கத் தொடங் கலாம் என்ற முடிவு செய்ய உதவும்.

Backward reader : (பின்னோக்கு வாசகர்) ஓர் இதழை அதன் இறுதிப்

பக்கத்திலிருந்து தொடங்கி முன்பக்கம் வரை வாசிக்கும் அல்லது பார்க்கும் வாசகர். பொதுவாக வாசகர்கள் இதழ்களைப் பிரித்து வாசிக்கும் முறையினின்று இவரது அணுகுமுறை மாறுபடுவதால் இவர் மாறுபட்ட வாசகர் ஆவார்.

Bad break : (மோசப் பிரிப்பு) இதழை அச்சிடுபவர்களாலும் பக்க அமைப்பு ஆசிரியர்களாலும் செய்திக் கதையை ஒரு பத்தியிலிருந்து மறு பத்திக்குக் கொண்டு செல்வதற்கும் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்திற்குக் கொண்டு செல்வதற்கும் சொற்களைப் பிரிப்பதில் எழும் சிக்கல்கள் குறிப்பிடத்தக்கன. பிரிக்க வேண்டிய பகுதி ஒரு பாராவின் இறுதிப் பகுதியில் வருதலும் அவ்வாறு பிரிப்பதனால் செய்தி முடிந்து விட்டது என்று வாசகர்களுக்குத் தோற்றமளித்தலும் அல்லது ஒரு செய்திப் பாராவின் ஆரம்பத் தொடர் மிகச் சிறியதாக அமைந்து விடுவதும் இவ்வகைச் சிக்கல்கள். ஒரு சிறிய சொல் அல்லது ஒரு சொல்லின் பகுதி ஒரு பாராவின் இறுதி வரியில் தான் மட்டுமே நிற்குமாறு பிரிக்கப்பட வேண்டிய கட்டாயம் வந்துவிடும். இவ்வாறு அமையும் சொல்லைக் குறிக்க 'Widow' என்ற சொல்லைச் செய்தி அச்சீட்டாளர்கள் பயன்படுத்து கின்றனர். இவ்வாறு பிரிப்பது மோசப் பிரிப்பு ஆகும்.

Bad leads : (மோச முகப்புகள்) ஒரு செய்தியின் முதல் பத்தியாக அமையும் முகப்புப் பகுதியை (lead)எழுதும்போது அச்செய்தி எங்கு நடந்தது? ஏன் நடந்தது? யாரால் நடந்தது? என்பவற்றுடன் 'இன்ன செய்தி நடந்தது என இன்னார் கூறினார்' என யார் மீதாவது அப்பொறுப்பைக் குறிப்பிட்டு விட வேண்டும் ; அதுவும் குறிப்பாகக் கொலைச் செய்தியாயின் அச்செய்தி இன்னவாறு நடந்ததாகக் குறிப்பிட்ட அரசு அதிகாரி குறிப்பிடு வதாக எழுதிவிட வேண்டும் என்று பல நிருபர்கள் கருதுகின்றனர். இது செய்திக்கு அதிக ஆதாரத்தை எடுத்த எடுப்பிலேயே தந்துவிடுவதாய் அமைகிறது. மேனாடுகளில் வானொலியின் பகல் நேர ஒலிபரப்புச் செய்திகள் ஆர்வமூட்டுவனவாய் இல்லாமல் அமைவதற்குச் செய்தி முகப்பை இவ்வாறு எழுதுவதே காரணம் ஆகும். இவ்வாறு செய்தி ஆதாரத்தைக் கட்டாயம் முகப்புக்களில் எப்போதும் தந்து எழுத வேண்டும் என்ற தேவை இல்லை.

Balance : (சமநிலை) 1) வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் உள்ளடக்க அளவிலும் உத்தியளவிலும் சமநிலையில் சிறப்புற அமைந்து மகிழ்வூட்டுதல். 2) ஒரு நாளிதழின் பக்க அமைப்பைச் சமன் செய்வதையும் சமநிலை செய்தல் எனலாம். ஒரு பக்கத்தில் கீழே அல்லது மேலே மட்டும் வாசகனது கவனம் நின்றுவிடாமல் பக்கம் முழுவதும் வாசகனது கவனம் பரவுமாறு பக்க அமைப்பைச் சமன் செய்வதே சமநிலை செய்தல் எனப்படும். இக்கலையைப் பயன்படுத்திப் பக்க அமைப்பு நிருணயிக்கப் படுமாயின் அப் பக்கத்தின் படிதன்மையும் (readability) பார்வை அழகும் (legibility) சிறப்பாக அமையும்.

Balop : (மின்னணுத் திடீரொளிப் படம்) பார்வையாளர்கள் பார்க்கும் ஒரு திரையில் மின்னணு முறையில் கணநேரம் ஒளிபாய்ச்சப்பட்ட ஒரு அட்டை, படம் அல்லது அதே போன்ற ஒன்று ஆகும். இச்சொல் பௌஸ்க் மற்றும் லாம்ப் (Bausch & Lomb) நிறுவனத்தாரால் ஒளியை ஊடுருவிச் செல்லவிடாத திரைப்பட ஒளியுருப் படிவுக் கருவி (Projector) ஒன்றன் பெயராகிய 'Balopticon' என்ற

சொல்லிலிருந்து உருவாக்கப் பட்டது ஆகும். 'Balopticon' என்ற அவ் ஒளியுருப்படிவுக் கருவி இத்தகைய மின்னணு முறையில் ஒளி பாய்ச்சும் ஒளிபரப்புப் பணிக்கென உருவாக் கப்பட்டது.

Bandwidth : (பட்டை அகலம்) காட்சி, ஒலி முதலியன குறித்த சமிக்கைகளை ஒளிபரப்பும் ஒரு மின்னணு அமைப்பு இயங்கும்போது சூழும் வட்ட வடிவான அதிர்வின் வீச்சு. செய்திகளைக் கொண்டு செல்லும் அதிர்வுகளின் வீச்சு ; இவை ஒரு வினாடிக்கு இத்தனை ஹெர்ட்ஸ் என அறியப்படும். கருத்துத் தொடர்பு அலைவரிசை கொண்டு செல்லக்கூடிய அளவு ஏறக்குறைய அதன் அதிர்வுகளின் வீச்சு அளவை ஒத்ததாக இருக்கும். சான்றாக, ஒரு தொலைபேசி அமைப்புக்கு 4 கிலோஹெர்ட்ஸ் பட்டை அகலம் ஒன்று தேவைப்படு கிறது. 625-லைன் டி.வி. அலைவரிசை ஒன்றுக்கு ஏறக்குறைய 8 மெகா ஹெர்ட்ஸ் தேவைப்படுகிறது.


Banner : (தலைமைத் தலைப்பு) ஒரு நாளிதழின் முதல் பக்கத்தில் அப்பக்கத்தின் ஒரு முனையிலிருந்து மறு முனைவரை தொடர்ந்து அமைந்தி ருக்கும் தலைப்பு தலைமைத் தலைப்பு எனப்படும். ஒரு பத்திரிகையின் முதல் பக்கத்தில் பெரிய அளவில் வெளியாகும் முக்கியச் செய்திக்கு இததகைய தலைப்பு இடப்படும். 'Streamer' என்றும் அழைக்கப்படும் இத்தலைப்பு தமிழில் முழுப்பக்கத் தோரணத் தலைப்பு என்றும் குறிப்பிடப்படுகின்றது. 'line', ribbon' ஆகிய ஆங்கிலச் சொற்களும் இத்தலைப்பைக் குறிக்கப் பயன்படுத்தப் படுகின்றன. நாளிதழின் உள்ளே உள்ள பக்கத்தில் இவ்வாறு ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை அமைந்திருக்கும் தலைப்பு 'binder' எனப்படும். 'banner' என்ற தலைமைத் தலைப்பு 'binder' என்ற செய்தித் தலைப்புதான் என்று பலர் அடிக்க குழப்பிக் கொள்வர்.

Barn doors : (தடுப்பு விளிம்புகள்) படப்பிடிப்பிற்கு உதவும் கள விளக்கின் (spot light) ஒளிக்கதிர் வடிவத்தைக் கட்டுப்படுத்த அவ்விளக்கில் பொருத்தப் பட்டிருக்கும் நான்கு மூடு விளிம்புகள்.

Barter : (பண்டமாற்று விளம்பரம்) கடந்த சில வருடங்களாக ஒலிபரப்பிலும் ஒளிபரப்பிலும் கையாளப்படும் மற்றொரு விளம்பர முறை 'barter' எனப்படும் பண்டமாற்று விளம்பர முறை ஆகும். ஒரு நிகழ்ச்சியானது வெளியில் உள்ள ஒரு தயாரிப்பாளரால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு தொலைக் காட்சி நிலையத்திற்குப் பண்டமாற்றாக வழங்கப்படுகிறது. அந்நிகழ்ச்சியில் ஏற்கனவே ஏறக்குறைய பாதி வெற்றிடங்களில் வணிக விளம்பரங்கள் செருகப் பட்டிருக்கும். செருகப்பட்ட விளம்பரங்கள் நிகழ்ச்சியைத் தயாரித்து அந்நிகழ்ச்சியைத் தொலைக்காட்சி நிலையத்திற்குப் பண்டமாற்றாக வழங்கியவர் யாரோ அவரது வணிகப் பொருள் பற்றிய விளம்பரங்கள் ஆகும். இங்கு தம் விளம்பரம் செருகப்பட்டு மீதி வெற்றி டங்களுடனான நிகழ்ச்சி விளம்பர தாரரால் தொலைக்காட்சி நிலையத் திற்குத் தரப்பட அதற்குப் பதில் பண்டமாற்றாக அதனை ஒளிபரப்பும் அனுமதி தொலைக்காட்சி நிலை யத்தால் தரப்படுகிறது. இந்நிகழ்ச்சியை ஒளிபரப்ப நிலையம் ஒத்துக்கொள்ளும் போது தொலைக் காட்சி நிலையம் அந்நிகழ்ச்சிக்கென அதன் தயாரிப் பாளருக்குப் பணம் தருவதில்லை. அதே போல் தன் விளம்பரம் ஒளிபரப்பாவதற்கு என விளம்பரதாரரும் நிலையத்திற்குப் பணம் தருவதில்லை. இங்கு பண்ட மாற்று முறை கையாளப் படுகிறது. மீதி உள்ள வெற்றிடங்களில் வேறு

விளம்பரங்களைப் போட்டு நிலையம் பணம் ஈட்டிக் கொள்ளும். கடந்த சில வருடங்களில் இப்பண்ட மாற்று விளம்பர முறை ஒளிபரப்புத் தொழில் துறையில் மிகப்பெரிய அங்கமாகி இருக்கிறது.

Base line : (அடிக்கோடு) அச்சு எழுத்து தொடர்ந்து வரும்போது இயல்பு எழுத்துக்களில் (center body) அடிப்பாகத்தாலும் எல்லா பெரிய தலைப்பு எழுத்துக்களாலும் (Capital letters) உருவாக்கப்படும் கோடு. இறங்கு எழுத்துக்களின் கோடுகள் (descending strokes) அடிக்கோட்டின் கீழ் இருக்கும்.



அச்செழுத்தின் உடலே அச்செழுத்தின் வடிவத்தைத் தீர்மானிக்கிறது. அச்சின் உடல் ஏறு எழுத்து, இறங்கு எழுத்து, இயல்பு எழுத்து ஆகிய அனைத்தையும் உள்ளடக்க வாய்ப்பு உடையதாய் இருக்க வேண்டும்.

Base Production Centre : (ஆதார நிகழ்ச்சித்தயாரிப்பு மையம்) இந்தியாவில் தொலைக்காட்சியின் அடிப்படையான நிகழ்ச்சித் தயாரிப்பு நிலையங்களாக முதலில் உருவானவை டில்லி, கட்டாக், ஹைதராபாத் ஆகிய இடங்களில் அமைந்திருந்தன. தூர்தர்ஷனின் மையத் தயாரிப்பு (Central Production Centre) நிலையம் நியூடெல்லியில் அமைந்துள்ளது. தேசிய வலைப் பிணைப்பில் (National Network) வரும் சிறந்த நிகழ்ச்சிகள், நாட்டிய நிகழ்ச்சிகள், சிறந்த இசை முதலியவற்றைத் தயாரிப்பது இதன் பணி. இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகம் (IGNOU = Indra Gandhi National Open University) கல்வி தொடர்பான நிகழ்ச்சித் தயாரிப்பு மையத்தை ஆரம்பித்துள்ளது. ஜப்பான் அரசின் உதவியுடன் ரூ 68 கோடி திட்டத்தில் கல்வி ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்கான அனைத்து நவீன வசதிகளும் இங்கு உள்ளன.

Bashers : (ஒளி வெள்ள விளக்கு) ஒரு பிரதிபலிப்பானில் அல்லது பின்னணியில் அமைக்கப்பட்டுள்ள 500 வாட்ஸ் மின்சக்தி கொண்ட சாதாரண ஒளிவெள்ள விளக்கு.

Basic cable service : (அடிப்படை கேபிள் ஒளிபரப்பு) நேயர்கள் நேரடியாகவே பணம் செலவு செய்து தாம் விரும்பிய நிகழ்ச்சிகளை வாங்கும் சூழல்கள் உள்ளன. பணம் கொடுத்து வாங்கக்கூடிய ஒளிபரப்புச் சேவைகள் பல வகைகள் ஆகும். கேபிள் தொலைக்காட்சி உரிமையாளர்கள் தொலைக்காட்சி நிலையங்களுக்கு மேலும் ஒரு அடிப்படை ஒளிபரப்பைத் (basic service) தந்து அதனால் சில சிறப்பு அலைவரிசைகளைத் தருவர். அதாவது கேபிள் தொலைக்காட்சி உரிமையாளர்கள் அடிப்படை கேபிள் ஒளிபரப்பிற்கான நிகழ்ச்சிகளைச் சந்தையில் தம் 'சாத்திய நேயர்களுக்கு' (Potential Audience) விற்கும்போது தொலைக்காட்சி நிலையத்தாரே நல்ல நிகழ்ச்சிகளை அதாவது தம் நேயர்களை ஈர்க்கக் கூடியவற்றைத் தெரிவு செய்வர். சிறப்பாகத் தரப்படும் இவ்வலைவரிசை இரண்டாம் நிலை கூடுதல் படைப்பாகும். உள்ளூர் தயாரிப்பு நிலையங்கள் இக்கூடுதல் சேவைக்காக (basic service) மேலும் ஒரு அலைவரிசை தரப்படுவர்.

அதனுடன் தேசிய பணிகள், விளம்பர தாரர்கள் வழங்குபவை முதலியவற்றிற் காகச் சில சிறப்பு அலைவரிசைகளும் தரப்படும். கேபிள் செய்தி வலைப் பிணைப்பு (Cable News Network) இந்த அடிப்படை ஒளிபரப்புடன் (basic service) சேர்க்கப் படலாம். இந்த கூடுதல் சேவைக்காக ஒரு மாதத்திற்கு இவ்வளவு என கூடுதலாகப் பணம் வாடிக்கை நேயர்களிடமிருந்து வசூலிக்கப்படும். சான்றாக தூர்தர்ஷனின் DD5(தமிழ்) DD7 (மூவிகிளப்) முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

Basic elements : (அடிப்படை ஆக்கக் கூறுகள்) இதழ் கருத்துப் பரிமாற்றத்தில் செய்தி சேகரித்தல், செய்தி எழுதுதல், செய்தி பதிப்பித்தல், அச்சில் செய்தி தயாரித்தல் முதலியன எவ்வளவு முக்கியமானவையோ அதுபோல ஒலிபரப்பு கருத்துப் பரிமாற்றத்தில் வானொலியில் ஒலிவாங்கி, ஒலித்திட்டம், இசை முதலிய அடிப்படை ஆக்கக் கூறுகளும் தொலைக்காட்சியில் ஒலிவாங்கி, ஒலித்திட்டம், இசை, ஒளித்திட்டம் முதலிய அடிப்படை ஆக்கக் கூறுகளும் இன்றியமையாதன ஆகும்.

Basic paper weight : (தாளின் அடிப்படை எடை) ஓரளவு தரமுடையதும் பொதுவான வடிவத்தில் உள்ளதுமான ஒரு ரீம் எடையுள்ள தாளின் பவுண்டு கணக்கிலான எடை : நூல் 25"x38" எனவும் அட்டை 20"x26"எனவும் அமையும்.

Bass cut : (கீழ்நிலை ஒலி அதிர்வு வெட்டு) கீழ்நிலை ஒலி அதிர்வுகளை மின்னணு வழி நீக்க ஒலிவாங்கியில் அமைக்கப்பட்டுள்ள ஒரு வழிமுறை.

Bastard type : (கள்ளெழுத்து) அச்செழுத்துக்களின் பொதுவான அமைப்பு அளவுக்குப் (Point system) பொருந்தாத அச்செழுத்துக்களாகிய தவறான எழுத்துக்கள் ; எழுத்துக் குழியில் தவறுதலாக விழுந்திருக்கும் வேறு எழுத்து.

Basys : (ஒலிபரப்பில் இயந்திரவழித் தாமியங்கும் அமைப்புக்கள்) செய்தித் தயாரிப்பில் வானிலைச் செய்திச் செய்தி அறையில் உதவும் கணிப்பொறி அமைப்புக்கள்.

B.B.C.: (பிரிட்டிஷ் ஒலிபரப்பு நிலையம்) 'British Broadcasting Corporation' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம். இங்கிலாந்தில் உள்ள இந்நிறுவனம் செய்தி அறிக்கை நிகழ்ச்சியை 1922-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தொடங்கியது. அப்பொழுது சான்ரெய்த்து என்பவர் அதன் செய்தி அறிவிப்பாளராக இருந்தார். இவர் மக்கள் விரும்பும் செய்திகளை மக்கள் விரும்பும் முறையில் வழங்க வேண்டும் எனக் கூறினார். அதன் பின்னர் செய்திகள் தனி வடிவம் பெற்றன. அதனால் வானொலிச் செய்திகளில் உயிர் இருந்தது. இங்கிலாந்தில் 1926-ஆம் ஆண்டு மே திங்களில் செய்தித்தாள்கள் வேலை நிறுத்தம் செய்தன. அப்போது இங்கிலாந்து மக்கள் வானொலிச் செய்தியின் சிறப்பை உணர்ந்தனர். இன்று உலகில் பல நாடுகள், பி.பி.சி. செய்தி அறிக்கையைப் பின்பற்றிச் செய்தி அறிக்கை படிக்கின்றன. இவ்வானொலி நிலையம் 'தமிழோசை' என்னும் பெயரில் தமிழ் நிகழ்ச்சிகளைச் சிற்றலை வரிசை 41.49 மீட்டரில் இரவு 9.00 மணி முதல் 9.30 மணிவரை ஒலிபரப்புகிறது. 1936-இல் முதலில் தொடங்கப்பட்டுப் பின்னர் மீண்டும் 1946-இல் ஒளிபரப்பைச் செயல்படுத்த ஆரம்பித்த BBC TV மிகத்திறம்பட ஒளிபரப்புப் பணியினைச் செய்து

வருகிறது. 1949-இல் BBC TVக்கான 5 ஆண்டுத்திட்டம் உருவாகியது. 1955-இல் BBC-இன் வர்த்தக TV ஆரம்பமானது. BBC TVஉலக மக்கள் பல்லோரது உடனடிக் கருத்துக்களை ஒளிபரப்புகிறது. உலக நடப்புக்களை மிகத் துல்லியமாக நம் இல்லத்தின் நடுக் கூடத்திற்கே கொண்டு வருகிறது. செய்தித் தேவைகளை நிரப்புவதுடன் மேலும் மேலும் அறிந்து கொள்ள வேண்டும் என்று ஆர்வத்தை ஊட்டும் வகையில் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையும் தருகிறது.

B COPY : (Bசெய்திப்படி) செய்திக் கதையின் ஒரு பகுதி ; முக்கியமாக ஏற்கனவே எழுதி வைக்கப்பட்டிருக்கும் செய்திக் கதைஆகும். இக்கதையுடன் முதற்பகுதியில் அதுதொடர்பாக அப்போதுதான் வந்த முக்கியச் செய்தியாகிய Aசெய்திப்படியும் (A copy) அதன் பின்னர் ஒரு முகப்பும் சேர்க்கப்பட்டவுடன் செய்தி முழுமை யடையும். பல செய்தித் தாள்கள் அப்போதுதான் வந்த Aசெய்திப் படியைச் (A copy) சேர்க்காமல் நீக்கிவிட்டு செய்திப் படியுடன் நேரடியாக முகப்பைச் சேர்த்துச் செய்தி ஆக்கிவிடுகின்றனர். Bமேட்டர் (B matter) என்றும் சொல்லப்படுகிறது.

B.E. : (மின்னணு வழிச் செய்தி சேகரிப்புக்கு முந்தைய நிலை) 'Before ENG' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம். ENG என்பது மின்னணு வழிச் செய்தி சேகரிப்பு என்ற பொருள்படும் 'Electronic News Gathering' என்பதாகும். (பார்க்க : E.N.G.)

Beam : (ஒளிக்கற்றை) ஒரு காமிராவில் அல்லது தொலைக்காட்சிப் பெட்டியில் உள்ள மின்னணுத் துப்பாக்கியில் இருந்து பாய்ச்சி அனுப்பப்பட்ட மின்னணுக்களின் தொகுதியாகிய ஒளிக்கற்றை.

Beat : (செய்திக்களம்) ஒரு நிருபர் வழக்கமாகச் சென்று செய்தி சேகரிக்கும் செய்திக்களம் ; சான்றாக 'காவல் நிலையம்', 'நகர நீதிமன்றம்' போன்ற இடங்களில் சென்று சேகரிப்பதைக் குறிக்கலாம்.

Beat reporter : (செய்திக்கள நிருபர்) குறிப்பிட்ட இடங்களில் சென்று செய்தி சேகரிக்க வேண்டிய குறிப்பிட்ட கள நிருபர் 'நடமாடும் நிருபர்' (run reporter) என்றும் அழைக்கப்படுகிறார். அமெரிக்க நாளிதழ் பதிப்பாசிரியர் சங்கத்தில் முன்பு தலைவராக இருந்த இ.சி.ஹாப்வுட் என்பவர், "நடமாடும் நிருபர்கள் தம்மிடமே செய்தி வைத்துக்கொண்டு ஆனால் தம்மிடம் செய்தி இருக்கிறது என்று அறியாமல் இருப்பவர்களையும், தம்மிடம் செய்தி இருக்கிறது என்று தெரிந்து அதை வெளியிட விரும்புபவர்களையும், தம்மிடம் செய்தி இருக்கிறது என்று தெரிந்துகொண்டு ஆனால் அதை வெளியிட மறுப்பவர்களையும் இனம் காண்கிறார். செய்தி தருபவரிடம் அவர் செய்தி தந்தால் அச்செய்தி கவனமாகவும் துல்லியமாகவும் பரிவுடனும் சரியான முறையில் கையாளப்படும் என்ற நம்பிக்கையை ஊட்டாவிட்டால் ஒருவரிடமிருந்து செய்தியைப் பெறுவதில் யாரும் வெற்றி பெற முடியாது" என்று கூறுகிறார். செய்தி பெறும் ஒரு தனிநபராக இருப்பதால், நிருபர் சமுதாயத்தின் ஒரு முக்கிய அங்கமாகச் செயல்படுகிறார். அவர் செய்தி தருபவர்களைப் பெருக்கிக் கொள்ளும் திறமுடைய வராகவும் வழக்கத்திற்கு மாறுபட்ட சூழல்களில் 'இன்னவிடத்துச் செய்தி உள்ளது ; அது இன்ன செய்தி' என அறிந்து கொள்பவராகவும் இருக்க வேண்டும். 'ஒரு நிருபரும் அவர் தொடர்பு கொள்ளும் தொடர்புக்ளைப் போலவே மதிக்கத்தக்கவராவார்' என்று சொல்லப்படுவது வழக்கம்.

Beeper : (தொலைபேசிப் பேட்டி) வானொலி போன்ற செவிப்புலன் தொடர்பான தகவல் சாதன நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தப்படும் வகையில் ஒலி நாடாக்களில் பதிவு செய்ய உதவும் ஒரு தொலைபேசிப் பேட்டி ஆகும். பேட்டி நிகழ்த்தும் நபர்களுக்கு அவ்வுரையாடல் பதிவாகிக் கொண்டிருக்கிறது என்பதை அறிவிக்கும் பொருட்டு இதற்கெனவே குறிப்பிட்ட சிறப்புத் தொலைபேசி மின்சுற்று ஒழுங்கான ஓர் ஒலியை அனுப்புகிறது.

Below super : (கீழ்ப் பதிவு) கீழ்ப்பதிவு எழுத்துக்கள். தொலைக்காட்சி ஒளிபரப்பில் காட்சியில் உள்ள நபர் தோன்றும் போது அக்காட்சியின் அடிப்பாகத்தில் இணைந்து தெரிவதுபோல் அவரது பெயர் போன்ற குறிப்புக்களை எழுதித் தோன்றச் செய்தல்.

Ben day : ('பென் டே' வண்ணந்தீட்டு முறை) நிழறபடம் அல்லது வரை கோட்டுப் படம் ஒன்றனை ஒரு உலோகத் தகட்டில் பதித்து அச்சுக்குத் தயார் செய்யும் பணியில் அப்படத் திற்குப் பின்னணியாகப் புள்ளிகள் அல்லது கோடுகளை நிழற்படி வண்ணமாகக் (shade) கொடுக்கும் ஒரு முறை. இத்தகைய வண்ணந் தீட்டு முறைக்கு (shading) நியூயார்க் சன் என்ற பத்திரிகையின் ஆசிரியர் பென் டே என்பவர் நினைவாக அவர் பெயரே இடப்பட்டுள்ளது.

Betacam : (அரை அங்குல ஒளிநாடா) சோனி கம்பெனியால் அறிமுகப் படுத்தப்பட்ட அரை அங்குல அளவிலான ஒளிநாடா வடிவாக்க அமைப்பு.

Betacart : (ஒளிபரப்பி) பீட்டா (Beta) ஒளி நாடாப் பேழைகளை இயக்கி ஒளிபரப்ப உதவும் காட்சி அமைப்புக்கள்.

Bias : (உச்ச அதிர்வலை அடையாளக் குறி) வானொலியில் உச்ச அதிர்வலை நிகழுமாயின் அதைக் குறிக்கும் அடையாளம். இது ஒலிப்பதிவுக் கருவியில் தேவையற்ற அதிர்வுகளைத் தவிர்க்க உதவும்.

Bibliography : (குறிப்புப் புத்தக விபரம்) 1. ஒரு குறிப்பிட்ட தகவல் தொடர்பாகத் தேவையான குறிப்புகள் அடங்கிய புத்தகங்களின் பட்டியல்.
2. ஒரு புத்தகத்திற்குத் தேவைப்பட்ட கருத்துக்களை எடுத்துக்கொண்ட புத்தகங்களின் பட்டியல்.
3. ஒரு கருத்தைப் பற்றி மேலும் படிக்க விரும்பினால் அது தொடர்பான புத்தகம் பற்றிய குறிப்புக்கள். அந்தக் குறிப்பிட்ட புத்தகத்தை வாங்கப் பயன்படக்கூடிய வகையில் அந்தப் புத்தகத்தின் ஆசிரியர் பெயர், வெளியீட்டாளர், கிடைக்கும் இடங்கள் ஆகியவை பற்றிய விவரக் குறிப்புக்கள்.
4. அச்சிடப்பட்ட ஒரு புத்தகத்தைப் பற்றிய எல்லா விவரங்களையும் உள்ளடக்கிய முகப்புப் பகுதிக் குறிப்பு.

Bi-directional : (இருபக்க ஒலிவாங்கி) எதிரும் புதிருமான இரண்டு பக்கங்களிலிருந்தும் ஒலியைப் பெறக் கூடிய ஒலிவாங்கிக் கருவி.

Big close up shot : (நுண் அருகாமைக் காட்சி) ஒளிபரப்புக் காட்சியில் காட்டப்படும் நபர் அல்லது பொருளின் ஒரு மிகச் சிறிய பகுதியை மட்டும் மிக அருகில் காட்டும் படக் காட்சி (shot); இத்தகைய படக் காட்சி 'Extreme close up shot' என்றும் கூறப்படும். இவ்வாறு குறிப்பிடப் பட்டிருந்தால் குறிப்பிட்ட நபரின் முகத்தை மட்டுமே காட்டுதல் அல்லது பொருளின் குறிப்பிட்ட பகுதியை மட்டுமே காட்டுதல் வேண்டும் என்பது பொருள்.



Bingo card : (விளம்பரப் பொருள் குறித்த கூடுதல் விபர அட்டை) வாசகர்கள் பயன் படுத்தக்கூடிய அட்டை; அவ்வட்டையைப் பயன்படுத்தி ஒரு வாசகர் ஒரு பொருளை அவ்வட்டையில் உள்ள குறிப்புக் களோடு ஒப்பிட்டுப் பரிசோதித்துக் கொள்ளலாம். அல்லது அவ்விதழில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ள ஒரு பொருளைப் பற்றிய கூடுதல் செய்திகளைத் தெரிந்துகொள்ளலாம்.

Bird : (ஒளிபரப்புக் கோள்) முதல் INTELSAT கோளின் பெயராகிய 'Early Bird' என்பதே ஒளிபரப்புக் கோள்களுக்குப் பெயராக 'Bird' எனப் பயன்படுத்தப் படுகிறது.

Bird-in card : (புத்தக உள் இணைப்பு அட்டை) இதழ் அட்டை போடப்பட்ட பின்னர் இதழில் அட்டையுடன் இணைக்கப் பட்டிருக்கும் ஒரு வளர்ச்சி ஊக்க அட்டை (Promotional card).

Bit : ('பிட்' அல்லது துணுக்கு) கணிப்பொறிச் செய்தியின் ஆரம்ப அலகு. 'பிட்' எனப்படும் இது பூஜ்யம் அல்லது ஒன்றின் மதிப்பைக் கொண்டது. ஒன்று என்பதற்கு மேல் இலக்கமற்ற எண்மான கருத்துப் பரிமாற்றத்திற்கு இவ்விரண்டில எதைக் கொள்வது எனத் தெரிந்தெடுப்பது ஒரு மிகக் குறைந்த அளவு (bit) ஆகும். ஒரு நாடா அல்லது அட்டையில் இடப்பட்ட ஒரு துளையாக அது இருக்கலாம். ஆறு முதல் எட்டு துளைகளாலான ஒரு பட்டை ஒரு தனிப்பண்பினை விளக்கப் போதுமான செய்தியைக் கொண்ட கூறாக அமைகிறது. எட்டு 'பிட்'களைக் கொண்டது ஒரு 'பைட்' (byte) எனப்படும். 'பைட்' எனப்படும் அளவுதான் கணிப்பொறியின் உட்செலுத்தப்பட்ட குறியீடுகளின் (தனிப்பண்புகளின்) வழக்கமான நீளத்தையும் கணிப் பொறிச் சேமிப்பின் அளவையும் கணிக்கும் அலகு. 'பைட்' ஒரு கணிப்பொறிச் சொல்லை விடச் சிறியது.

Biting off : (செய்திப் பகுதிகளை நீக்குதல்) இருக்கும் இடத்தில் செய்தியை நிரப்பும் பொருட்டு ஒரு செய்திக் கதையின் இறுதியில் உள்ள பத்திகளை நீக்குதல் 'biting off' எனப்படும். நேரடியாகச் சொல்லப்படும் செய்தி ஒன்று செய்தியின் மிகவும் முக்கியமான பகுதியை முதலில் கூறி பின் முக்கியத்துவம் குறைந்தவற்றைக் கூறும் தலைகீழ் பிரமிடு அமைப்பில் எழுதப்படுதலின் அடிப்படைத் தத்துவத்தின் ஒரு கூறு என்னவெனில் செய்திக் கதையை எந்த இடத்தி லாயினும் குறைத்துக்கொள்ள அனுமதிப்பதே ஆகும். யார் இப்பணி யைச் செய்தாலும் ஒரு செய்திக் கதையைக் குறைக்கும் பணியில் இதுவே சிறந்த முறை ஆகும். தலைகீழ் பிரமிடு அமைப்பில் அமைந்ததும் கட்டுப் பத்திகள் (block paragraphs) கொள் கையிலானதும் ஆகிய செய்திக் கதையாயின் எந்தப் பத்தியின் இறுதிப் பகுதியிலும் வெட்டிவிடலாம். ஒரு செய்திக் கதையைக் கீழிருந்து குறைத்துக்கொண்டு வருவதுவே அதனை நீக்குவதற்கான எளிய முறை ஆகும். எந்த ஒரு பத்தியும் தன் பொருளைத் தெரிவிக்கும் பொருட்டு அதன் கீழ் காணப்படும் பத்திகளைச் சார்ந்து இருக்காது. அதாவது, ஒவ்வொரு பத்தியின் பொருளும் அவ்வப் பகுதிகளில் தெரிவிக்கப்பட்டு விடும். நேரடியாகச் சொல்லும் செய்தி, தலைகீழ்பிரமிடு அமைப்பில் இன்றும் அதன் பயன் கருதிப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பொருளைச் சற்றும் பார்க்காமல் செய்திக் கதையின் அடிப்பகுதியை நீக்கிவிடுதல் என்பது தீது. செய்தித் தயாரிப்பு வல்லுநர்களே எப்பத்தியை நீக்குவது என்று தீர்மானிப்பர். ஒரு சிறந்த ஆசிரியரே

இப்பணியைச் செம்மையாகச் செய்ய முடியும். (காண்க : Inverted pyramid)

Bit news : (துணுக்குச் செய்திகள்) செய்திகளைச் சுருக்கி நான்கு அல்லது அய்ந்து வரிகளில் எழுதித் துணுக்குச் செய்திகளாக நாளிதழ்களிலும் இதழ்களிலும் வெளியிடுவது உண்டு.

Biz : (நடிப்புக் குறிப்பு) தொலைக் காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பிற்குப் பயன் படுத்தப்படும் டி.வி. பகுப்புப் பக்க வடிவமைப்பில் (TV split page layout) பயன்படுத்தப்படும் குறிப்பு ஆகும். இக்குறிப்பு நடிகரின் நடிப்போடு தொடர்புடைய செய்கைகள் பற்றிய குறிப்புக்களை இனங்காட்டப் பயன்படுத்தப்படும்.

Black : (வெற்றுத்திரை) காட்சிச் செய்தி எதுவும் காட்டாத திரை ; ஒரு வெற்றுத்திரை.

Black edge : (கறுப்பு ஓரம்) ஒளிபரப்பில் மேலே விரிக்கப்பட்ட ஒளியின் ஓரங்களில் மின்னணு மூலம் ஒரு மெல்லிய கறுப்பு வடிவத்தை உருவாக்குவதற்காக ஏற்பட்டுள்ள வசதி ஆகும். இவ்வாறு செய்வதன் மூலம் பொருளைப் போன்றே உள்ள ஒரே மாதிரியான பின்னணியிலிருந்து பொருளை 'ஒழுங்கான வடிவமைப்பில்' காட்டலாம்.

Black letter type : (கறுப்பு அச்செழுத்து) அச்செழுத்துக்களின் வகைகளுள் ஒன்று. இது கறுப்பு எழுத்து அச்சு எனபபடும். இவவெழுத் துக்கள் கறுப்பு வண்ணம், அழகு மற்றும் இடைக்காலக் கையெழுத்துப் பிரதி எழுத்துக்களை ஒத்திருத்தல் ஆகிய இயல்புகளைக் கொண்டவை.

Blade : (தகடு) 1) அரைவட்ட வடிவ அச்சு உலோகத் தகடு. இதுதான் தாளில் அச்சுகளைப் பதிக்கிறது. உருளை வடிவிலும் இருக்கும். 2)அச்சுப் பதிவு (பிளாக்) செய்யப் பயன்படும் தகடு. சிங்க் (Zinc) என்ற உலோகத்தால் ஆனது.

Blanket head : (மூடு தலைப்பு) ஒரு நாளிதழின் உட்பக்கத்தில் உள்ள செய்திப் பத்திகள் அனைத்தையும் உள்ளடக்கும் விதத்தில் தரப்படும் தலைப்பு அல்லது ஒரு செய்தித் தாளின் பெயரைக் குறிப்பிடும் ஒரே வரியிலான சொற்றலைப்பு முதலியவற்றைக் குறிக்கும்.

Bleed : (விளிம்பு மீறிய படப்பகுதி) செய்தித்தாளின் ஓரத்திற்கு அப்பாற் பட்டு அதாவது அச்சாவதற்குள்ளான இடத்தை விட்டு அச்சடிக்காது விடுபட வேண்டிய பக்க ஓர இடங்களில் அச்சிடப்பட்டு நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு படத்தின் பகுதி.

Blending : (ஒலிக்கலப்பு) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒலிகள் இணைந்து ஒரேசமயத்தில் ஒலிபரப்பப்படுதல். உரையாடல்+ இசை ; உரையாடல்+ஒலித்திட்பம்; ஒலித்திட்பம்+இசை; அல்லது உரையாடல்+இசை+ஒலித்திட்பம் என்று அமையும். தம்ளர்கள் உரசும் ஒலி, பின்னணியில் கோபமான பேச்சு, தானியங்கு இசைப்பெட்டி வழங்கிக் கொண்டிருக்கும் இசை முதலிய மூன்று ஒலிகளும் கலத்தல் பல ஒலிகள் இணைந்து ஒலிபரப்பப்படுவதற்குச் சான்று.

Blimp : (ஒலி உறிஞ்சு திரை) இத்திரை தேவைப்படாத ஒலிகளை அதாவது திரைப்பட காமிராக்கள் போன்ற இயந்திரங்களில் இயங்கு ஒலிகளை வடிகட்டிவிட பயன்படுகிறது. எனவே இதன் உதவியால் தேவையான ஒலிகள் மட்டுமே பதிவாகும்.

Blind interview : (கண்கட்டுப் பேட்டி) தகவல் தொடர்பு சாதனங்களில் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட பேட்டிச் செய்தி குறிப்பிடப்படும்போது பேட்டி தந்தவர் யார் என்ற செய்தியை வெளியிடாமலே பேட்டி தருதல் 'கண்கட்டுப் பேட்டி' எனப்படும். பேட்டி தந்தவர் 'இது தொடர்பாக அதிகமாக அறிந்தவர்' என்றோ அல்லது 'அரசு அலுவலக உயர் அதிகாரி' என்றோ அல்லது 'மிக நெருங்கிய வட்டா ரத்தைச் சேர்ந்தவர்' என்றோ குறிப்பிடப்படுவார்.

Block letter type : (படிமை அச்செழுத்து) முடிவில் முடிக்கப்பட்ட குறுகிய பகுதியும் சம எடையுடைய வீச்சும் இல்லாத இயல்புடையனவாகிய அடிப்படை இன எழுத்து வகைகளுள் ஒன்று.

Block paragraph : (கட்டுப்பத்தி) அச்சுப் பத்திகள் பாணியில் ஒரு செய்திக்கதை எழுதப்படும்போது முதல் பத்தியைத் தவிர பிற பத்திகள் அனைத்தும் ஒன்றிலிருந்து ஒன்று பிரித்துக் காட்டப்படக் கூடிய அளவில் ஒரே செய்தியின் தனித்தனிச் செய்திக் கூறுகளை உள்ளடக்கி இருக்கும். இப்பத்திகளைத் தனியே எடுத்து குலுக்கிப் போட்டு மீண்டும் அவற்றைத் தொகுத்தாலும் முதலில் எழுதப்பட்ட செய்திக்கதை அமைப்பினின்று பெரிதும் மாறுபடாமலேயே இருக்கும். இது ஒரு அழகான மற்றும் நடப்பியலுக்கு ஒத்துவராத கொள் கையும் ஆகும். ஒரு பெரிய செய்திக் கதை கிடைத்திருக்கும் போது அவசரமாக அதன் கூறுகளைப் பிரித்துப் பத்திகளாக்கி முதல் பக்கத்தில் வெளியிட இம்முறை உதவும். மேலும் தேவைப்பட்டால் கீழிருந்து செய்திக் கதையைக் குறைத்துக்கொண்டு வரவும் இம்முறை உதவும். (பார்க்க : biting off மற்றும் Inverted pyramid).

Bloom : (ஒளிப் பொலிவு) அதிக ஒளிக்களம்; இதன் விளைவாக வெற்று வெள்ளைப் பரப்பு கிடைக்கும். தொலைக்காட்சித் திரை, அதிக ஒளி பாய்ச்சப்படும்போது வெள்ளைத் திரையாக அமைவதைச் சுட்டலாம்.

Blooper : (தடுமாற்றுப் பிழை) தடுமாற்றம் விளைவிக்கும் பிழை. ஒலிபரப்புச் சாதனங்களில் செய்திக் கருத்துப் பரிமாற்றத்தில் தடுமாற்றம் விளைவிக்கும் பிழைகள் நேயரைக் குழப்பத்தில் ஆழ்த்தும்.

Blotter : (ஒற்றத் தகு குறிப்புக்கள்) காவல்துறைச் செய்திகளைச் சேகரிக்கும் நிருபர்கள் வந்து செய்தி களைச் சேகரித்துச் செல்வதற்காக எல்லாக் காவல் நிலையங்களிலும் பதிந்து வைக்கப் பட்டிருக்கும் அன்றைய காவல்துறைச் செய்திகள் பற்றிய குறிப்புக்கள்.

Blow-in card : (செய்தி பரப்புச் செருகு அட்டை) இதழில் இணைக்கப்படாமல் குறிப்பிட்ட செய்தியைப் பரப்பும் பொருட்டுத் தனியே இதழில் செருகி வைக்கப்பட்டிருக்கும் ஒரு வளர்ச்சி ஊக்க அட்டை.

Blow up : (படப் பெருக்கம்) நிழற்படம், அட்டவணை, தேசப்படம் போன்ற வற்றின் பகுதிகளை மிகப் பெரிய-தாக்குதல். அவ்வாறு மிகப் பெரிய-தாக்கப்பட்ட நிழற்படம் 'புளோ-அப்' எனப்படுகிறது. பல தமிழ் இதழ்கள் இவ்வாறு பெருக்கப்பட்ட நிழற்படங் களை இலவச இணைப்பாகத் தம் இதழ்களுடன் தருவதைச் சான்றாகக் குறிப்பிடலாம்.

Blue line : (நீலக் கோடு அல்லது நீல அச்சு) எதிரீட்டு எழுத்தச்சுப் படிமை முறையில் (offset lithography) தரப்படும் தாள் மெய்ப்புக்கள்(paper

proofs) ஏன் இவ்வாறு அழைக்கப் படுகிறதெனில் அச்சிடப்பட்ட பகுதி நீல வண்ணத்தில் அமைந்திருக்கும். 'நீல அச்சு' என்றும் அழைக்கப்படும்.

Blurb : (இதழ் மேல் அட்டை விளம்பரங்கள்) ஒரு செய்திக் கட்டுரை குறித்து அதன் தலைப்பிலிருந்து பெறப்படும் தகவலை விட அதுபற்றிய விளம்பரத்திலிருந்து அதிகமாகப் பெறும் கூடுதல் செய்திகள்; வாசகனை இதழுக்குள்ளே ஈர்க்கும் பொருட்டு அட்டையில் தரப்பட்டுள்ள வரிகள் அல்லது அடடையில் தரப்பட்டிருக்கும் கட்டுரைத தலைப்புகள் இவ்வகையின.

Body : (செய்தி உடற்பகுதி) செய்திப் பகுதிகளுள் ஒன்று ; முகப்புச் செய்தியைத் தொடாந்து வரும் செய்தியின் உடற்பகுதி ; முகப்பில் சிறிதாகக் கோடிகாட்டிக் கூறப்பட்ட செய்தியை உடற்பகுதி விளக்குகிறது. இப்பகுதி உடனடி விளக்கங்களைத் தருகிறது. அவையும் செய்தியின் முக்கியத்துவம் குறித்த வரிசையில் அடுக்கப்பட்டிருக்கும். குறைந்த அளவு முக்கியத்துவம உள்ள செய்திகள் கடைசியில் வைககப்பட்டிருக்கும். கடைசியில உள்ள செய்திகள் நாளிதழில் இடமில்லையெனில் நீக்கப்பட்டுவிடலாம் செய்திக் கதையை எழுதும்போது பின்வருவன கவனிக்கப்பட வேண்டும்.

1. தகவல்கள் சரியாகவும் முறை யாகவும் கூறபபட்டுள்ளதா? அப்படி யானாலதான வாசகர்கள் நடந்த வற்றை உண்மையாக நடந்தபடியே உணர்வர். 2. செய்திக் கதையில் விவாதத்திற்குரிய கருத்துக்கள் இருந்தால் இருபககக கருத்துக்களும் சரிசமமாக எழுதப்பட்டுள்ளதா என கவனிக்க வேண்டும். 3. '5 எ', '1 யா'வக்குப பதில் உள்ளதா? என பாாக்க வேண்டும் 4 முக்கியச் செய்தி யாயின் தகவல் தந்தவர் யார் எனற விளக்கமுள்ளதா என பார்த்துக் கொள்ள வேண்டும். 5. எல்லாக் கோணங்களையும் செய்தி உள்ள டக்குகிறதா என்பதையும் பார்க்க வேண்டும்.

செய்தியின் உடற் பகுதியைப் பலவகை களில்எழுதுகின்றனர்.அவை: 1. தர்க்க முறை அமைப்பு (logical order), 2. உச்சநிலைப்படுத்தும் முறை (High-light method) 3. கால வரிசை அமைப்பு முறை (Chronological order) 4. தலைகீழ் கூம்பு முறை (Inverted pyramid type) . ஒரு செய்தியை அதன் இயல்பான முறையில் விளக்குவது தர்க்கமுறை அமைப்பு. முகப்பினை வலுவலாக ஆதரித்து நிற்பதாகச் செய்தியின் உடல் இருக்கும். இவ்வகை அமைப்பில் சில சொற்களில் செய்தியைக் கூறிவிடலாம். குறைந்த அளவு நேரத்தில் செய்தியை எழுதலாம். அச்சிட பத்திரிகையில் குறைந்த அளவு இடம்போதும். இதனை எழுத மிகுதியாகத் திறமை வேண்டாம். விரைந்து செய்தியைப் படிக்க விரும்பும் வாசகருக்கு ஏற்ற முறை. உச்ச நிலைப்படுத்தும் முறையில் ஒரு நிகழ்ச்சியை முழுக்க விளக்க வேண்டியதில்லாமல் அதன் உச்ச நிலையை மட்டும் விளக்கிச் செய்தியைக் கூறலாம். இம்முறையின் சிறப்பு செய்தியின் சாரமாக இருப்பதை மட்டும் வெளிச்சம் போட்டுக் காட்டு வதாகும். முக்கியமற்றவற்றைக் கூற வேண்டியதில்லை. கால வரிசை அமைப்பு முறை என்பது ஒரு நிகழ்ச்சி எப்படி நடைபெற்றதோ அதே காலவரிசையில் செய்தியை விளக்குவது ஆகும். பொதுவாக ஒரு குற்றம் தொடர்பான செய்தியையோ அரசின் விசாரணை அறிக்கையையோ வளர்ச்சித் திட்டம் பற்றிய விபரங் களையோ இம்முறையில் வெளி யிடலாம். வாசகர் செய்தியின் வளர்ச்சி முறையை அறிந்துகொள்ள உதவுவது இம்முறை. ஒரு செய்தி எப்படி என்ன

வரிசையில் நடந்தது என்பதைப் புரிந்து கொள்ளலாம். செய்தியின் இறுதியை மிகவும் முக்கியமான பகுதியை முதலில் கூறி பின் முக்கியத்துவம் குறைந்த வற்றை அதாவது முக்கியத்துவத்தின் இறங்கு வரிசையில் கூறுவது தலை கீழ்க் கூம்பு அமைப்பு முறை ஆகும். இச்செய்தி அமைப்பில் மிகவும் முக்கியமானது செய்தியின் தலைப்பா கின்றது. மிகவும் முக்கியமற்றவை செய்தியின் இறுதியில் இடம் பெறு கின்றன.

Body type : (செய்தி உடற்பகுதி அச்செழுத்துக்கள் அல்லது புத்தக வேலை எழுத்துக்கள்) மிகச்சிறிய அளவுள்ள அச்செழுத்து ; (13 புள்ளி மற்றும் அதைவிடச் சிறிது) எல்லா நாளிதழ்களின் வாசிக்கப்படும் செய்திப் பகுதிகளை அதாவது ஒரு செய்தியின் மையப் பகுதியாகிய உடற்பகுதியை அச்சுக் கோர்க்கப் பயன்படுத்தப்படும் அச்செழுத்துக்களின் பெயர்.

Boiler plate : (சிறு இட நிரப்பிகள்) சிறிய நாளிதழ்களால் வழக்கமாகச் செய்தி நிரப்பிகளாகப் பயன் படுத்தப்படும் செய்திகள். பொதுவாக எப்போதும் ஒரே மாதிரியாக அமையும் பருவநிலை குறித்த செய்திகள், நாட்பலன் போன்றன இவ்வகையில் அடங்கும்.

Boiling : (குறைத்தல்) பொதுவாக ஒரு செய்திக் கதையின் தேவையற்ற பகுதிகளையும் கூடுதல் சொற் களையும் வெட்டியெடுத்தலைக் குறிக்கும். செய்திக் கதையில் உள்ள தேவையற்ற பகுதிகளையும் கூடுதல் சொற்களையும் குறைப்பதன் மூலம் செய்திக் கதையைச் செறிவாக்க முடிகிறது. இவ்வாறு குறைத்தல் 'boil-down' என்றும் கூறப்படும். செய்திக் கதையின் முக்கியத்துவம் கருதியும் இட அளவைக் கருத்தில்கொண்டும் செய்திக் கதை இவ்வாறு குறைக்கப் படுகிறது. தேவையில்லாத விளக் கங்கள், விடை இல்லாத வினாக்கள் போன்றவற்றையும் நீக்கலாம். 'Boil-ing' என்பது தரப்பட்டுள்ள இடத்தில் செய்தியைப் பொருத்துவதற்காக மட்டுமல்லாமல் செய்தியின் தெளிவு கருதியும் செய்யப்படும். செய்திக்கு எவ்விதப் பங்களிப்பும் செய்யாத சொற்களை நீக்குவதில் மட்டுமல்லாமல் செய்தியைச் சொல்லும் போக்கு சிறப்பாக அமைவது கருதியும் ஆசிரியர்கள் இச்செயலில் கவனமாக இருப்பர். இவ்வாறு செய்வதால் செய்திக் கதை சிறியதாக்கப்படுகிறது என்பது ஒருபுறம் இருக்க, இப்பணியால் செய்திக்கதை மிகுதியும் நேரடியான தாகவும் அமைவதோடு வாசிக்கவும் விளங்கிக் கொள்ளவும் எளிதான தாகவும் ஆக்கப்படுகிறது.

Bold face : (தடித்த எழுத்து) தடித்த முக அச்செழுத்து ; அச்செழுத்துக் களின் வகைகளுள் ஒன்று தடித்த எழுத்து ; வழக்கமான அச்செழுத்துக் களை விட இது கனமானதாகவும் தடிமனானதாகவும் இருக்கும். "B.F.", "BF", "Bf", "bf" என்று சுருக்கியும் அழைக்கப்படுகிறது.

Bond : (தாள் வகை) அச்சிடுவதற் காகப் பயன்படுத்தப்படும் ஒருவகைத் தாள் ; இத்தாள் முதலில் அரசு ஒப்பந்தக் குறிப்புக்களைப் பதிந்து வைப்பதற்கு மட்டும் பயன்படுத்தப்பட்டது. அதனாலேயே இத்தாள் பாண்டு பேப்பர் என்று அழைக்கப்பட்டது. அதன் திண்மை, நீண்டகாலத்திற்கு இருக்கும் தன்மை முதலியவற்றைக் கருத்தில் கொண்டு பிற்காலத்தில் எல்லா முக்கிய நிலைத்த பதிந்து வைக்கப்பட வேண்டிய குறிப்புக்களைப் பதிந்து வைக்கவும் பயன்படுத்தப்பட்டது. இதன் வகைகள் மூன்று 1) பாலிஸி-வோவ் : இன்ஷ் யூரன்ஸ் பாலிஸி போன்ற சட்ட மற்றும்

நிதி ஆவணக் குறிப்புக்களைத் தயார் செய்யப் பயன்படுகிறது. 25 ஆண்டு களுக்கும் மேல் நிலைத்திருக்கும். எடையுள்ளது. 2) பாண்டு பேப்பர் : 49 gsm எடையுள்ளது. பாலிஸிவோவ் போலவே நிலைத்திருக்கும். அரசு ஒப்பந்த அறிக்கைகள் வருடாந்திர அறிக்கைகள், முக்கியக் குறிப்புக்கள் தரவுகள், வணிகத் தொடர்புக் கடித முகப்புக்கள் போன்றன தயாரிக்கப் பயன்படுகிறது. 3) பேங்க் பேப்பர் : பாண்டு பேப்பரை விட மெல்லியது. 49 Gsm எடை உள்ளது. பாண்டு பேப்பர் பயன்படுத்தப்படுவது போன்ற பணி களுக்கே பயன்படுத்தப்படுகிறது.

Book base : (புத்தக/இதழ் அச்செழுத்து) புத்தகப் பதிப்பு எழுத்து : புததகத்தை அச்சிடுவதற்குப் பயன் படுத்தும குறிப்பிட்ட வகை எழுத்து.

Book block : (தைக்கப்படாத புத்தகம்) அச்சாகி ஆனால் தைக்கப்பட்டு பைண்டு செய்யப்படாத நிலையில் உள்ள புத்தகம்.

Booking of commercials : (வர்த்தக ஒலிபரப்புப் பதிவு) தம் விளம்பரங்களை ஒலிபரப்பும் பொருட்டு தமக்குரிய வர்த்தக ஒலிபரப்பு நேரங்களை விளம்பர நிறுவனங்கள் முன்கூட்டிப் பதிவு செய்தல்.

Booklet : (சிற்றேடு) சிறு அறிவிப்புத் தாள போன்ற பல பக்கங்களைக் கொண்ட சிறிய அளவிலான வெளியீடு. ஆனால் புத்தகததைவிடக் குறைவான பக்கங்களைக் கொண்டதாக இருக்கும்.

Book paper : (தாள் வகை) நூல்களையும் இதழ்களையும் தயாரிப் பதற்கெனப் பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட ஒருவகைத் தாள்.

Boom : (தூண்டில் ஒலி வாங்கி) ஒரு சக்கர மேடையில் உள்ள ஒரு நிலையான தண்டில் பொருத்தப் பட்டுள்ள தொங்குகின்ற ஒலி வாங்கிகள். வானொலியில் இசைக்குழு வழங்கும் இசை நிகழ்ச்சி யின்போது இவை பயன் படுத்தப்படும். இவை தூண்டில் ஒலிவாங்கிகள் (boom microphones) எனப்படும். திரைப்பட உட்புறப் படப்பிடிப்பிலும் வெளிப்புறப் படப்பிடிப்பிலும் நாகரா, மெல்ட்ரான், ஸ்டெலோவாக்ஸ் போன்ற கம்பெனி களின் ஒலிப்பதிவுக் கருவிகளால் (recorders) ஒலிகளைப் பதிவு செய்யும் போது நேரடியாகப் பதிவு செய்ய முடியாது. ஆதலால் மைக் இணைக்கப் படுகிறது. உட்புறப் படப்பிடிப்பில் இக்கருவிகளின் மூலம் ஒலிப்பதிவு செய்யும்போது மைக்கை அருகே கொண்டு செல்ல 'பூம்' எனப்படும் துணைக் கருவி பயன்படுகிறது. காட்சிக்குத் தடங்கல் இல்லாமல் காட்சிக்கு வெளியே இத்துணைக் கருவியை நிறுத்தி மைக்கை அந்தரத்தில் வைத்து ஒலிப்புதிவு செய்யப்படுகிறது. காட்சி நடைபெறும் தூரத்திற்கு ஏற்றவாறு இந்தக் கருவியை நீட்டவோ குறுக்கவோ தாழ்த்தவோ உயர்த்தவோ திருப்பவோ முடியும். வெளிப்புறப் படப்பிடிப்பில் இந்த பூம் கருவியைக் கொண்டு செல்வது கடினம். எனவே ஃபிஷ் போல் என்ற சிறிய துணைக்கருவி உபயோகப் படுத்தப்படுகிறது.

Boomy : (தடை ஏற்பாடு) நிகழ்ச்சி அறையில் தாழ்நிலை ஒலி அதிர்வு களைத் தடுக்கும்பொருட்டு ஏற்படுத்தப் பட்டுள்ள ஒருவகை ஏற்பாடாகும்.

Boost box : (விமரிசன விளம்பரம்) பத்திரிகையைப் பற்றி யாராவது பிரமுகர்கள் புகழ்ந்து சொன்ன கருத்தைக் கட்டம் கட்டிப் பிரசுரித்தல்.

Border : (விளிம்பு) நாளிதழ்களிலும் இதழ்களிலும ஒரு செய்திக் கதையை அல்லது தலைப்பை அல்லது விளம்பரத்தைப் பெட்டிச் செய்தி போல கட்டம் போட்டு அமைக்கப் பயன படுத்தபபடும் கோடுகளின் வகைகள்.

Box : (பெட்டி அல்லது பெட்டிச் செய்தி) உலோகத் தகடாலான கோடு களினால சுற்றிலும் கோடுகளிடப்பட்டு உள்ளே தள்ளி வெளியிடப்பட்ட செய்திக் கூறு தறகாலததில் பல பெட்டிச செய்திகள் மேலும கீழும் மட்டும் விளிமபிடபபட்டு வெளியிடப் படுகின்றன அத்தகைய அமைபபுச் செய்திகள் 'உள்ளிடப்பட்டவை' ('drop-ins') என்று அழைககபபடுகினறன இவ்வாறு செயதியைக கட்டததுககுள உள்ளடக்கிப பெட்டிச் செய்தியாக வெளியிடுவது அச்செயதி தனித்துத தெரிவதற்கு வழி வகுககிறது. சுற்றிலும கட்டப்பட்ட தலைபபு மற்றும செயதிக் கதை முறையே பெட்டித தலைபபு (box head)மற்றும பெட்டிச செய்தி (box news) என அழைககப்படுகினறன.

Box all : (உள்ளடக்குக) பல கூறுகளை சான்றாக தலைப்பு, கதை, படம போனற அனைததுக கூறுகளை யும் ஒரே பெட்டிககுள உள்ளடககுக என்று குறிபபதறகான எழுத்துப்படிக் குறியீடு (copy mark)

Box rule : (பெட்டிக் கோடு) பெட்டிச் செய்திகளுககான கோட்டினை உருவாககப் பயனபடுததபபடும் அச்சு.

Box score : (ஆட்டக் கணிப்புப் பெட்டிச் செய்தி) ஒரு விளையாட்டில எதிரெதிர் அணிகளின வெற்றிப புள்ளிகளைக் காட்டும்பெட்டிச செயதி

Break : 1. (இடைவெளி இணைப்பான்), 2. (செய்தி ஆயத்தம்). 1) ஒரு செயதிக கதை ஒரு பககததில் முடிந்து அடுத்த பககத்திறகுச செல்லுகிறது என்பதைக் குறிக்கும புள்ளி ; அல்லது ஒரு பத்தியிலிருந்து அடுதத பத்திக்குச் செலலுகிறது எனபதைக் குறிக்கும புள்ளி 2) ஒரு செய்திக் கதை ஒரு நாளிதழில பயன்படுததபபடுவதற்கு உரியதாகத் தயாராகும நிலை.

Breaking stories : (திடீர்ச் செய்திகள்) விபததுககள, எதிர்பாராத சமபவங்கள், மனித உயிர இழபபுககுக காரணமான சமபவஙகள முதலியன திடீர்ச் செயதிகளை உருவாககு கினறன இததகைய செயதிகள பற்றி ஏறகனவே குறிப்புககள தயாரித்து வைத்திருக்க முடியாது ஏனெனில சமபவம நடநது முடிககும வரை எழுதுவோர அதுபற்றி எண்ணிப பார்த்திருகக முடியாது தான் சேகரிகக வேணடிய செயதிப பட்டியலில ஏறகனவே இடம பெற்றிருந்த செயதிகளிலிருநது மாறுபட்டு எதிர்பாராமல சேரும செய்திகளையே 'திடீர்ச செயதிகள' என்ற சொல குறிககும ஆளுநரின் பத்திரிகை நிருபர் கூட்ட உரை இவவகை கூட்டம முடியுமவரை அதுபற்றி எதுவும எழுத முடியாது இச்செய்திக் கதைகள் செய்தி வெளியீட்டுக காலக கெடுவினைக் (dead line) கடபபதறகுள மிக வேகமாக எழுதபபட வேணடிய செயதிககதை அதாவது ஒரு சமபவம (அணிவகுபபு மரியாதை, சட்டமனறக கூட்டம், விளையாட்டு நிகழச்சிகள், பொது ஆர்ப்பாட்ட நிகழச்சிகள், மதப பிரசசாரக் கூட்டங்கள போனறவை) முடிவதற்குள் வேகமாக எழுதபபட வேணடிய செய்திகள போனறனவும திடீர்ச் செயதிகள்தாம இவை சிலசமயம பட்டியலில உள்ளனவாகக் கூட இருக்கலாம பாதிககபபட்டோர், பாதிககபபடாதோர், மருததுவர், காவல அதிகாரி, தீயணைப்புப படை அதிகாரி, துறை வல்லுநர்கள் போனறோர்

நோககில செய்திககதை மறு அமைப்புச செயயப்பட்டு எழுதப்பட வேணடும '5 எ', '1 யா' வுக்கான விடைகள் உள்ளடக்கி எழுதப்பட வேணடும இதே கதை மீண்டும் எழுதபபடுமபோது புதுச செய்திக கூறு சேர்க்கப்பட்டு முன கதை வேறு வகையில் மீண்டும எழுதப்பட (rewrite) வேண்டும்

Brevity : (சுருக்கம்) நாளிதழகளில இடததை மிசசப் படுத்தும வழிகளுள் சுருக்கமாக எழுதும முறையும் ஒன்று சுருககம் நகைச்சுவையின ஆனமா மட்டுமலல ; வாசிததலுககும அது இதயம் போனறது உணமையில் சுருக்கம் என்பது இதழியலின முதல கொளகை வகை எனலாம எளிமை, நேரடித தனமை முதலியவறறுடன சுருக்கமும இருககவேணடும. மிகபபெரிய செயதிகளை விட சிறிய செயதிகளே வாசகர்களால விருமபி வாசிககப படுகினறன. 18 பாரா உளள செய்தியின 5-ஆவது பாரா வாசிக்கப் படுவதை விட 8 பாரா உளள செய்தியின 5-ஆவது பாராவே விரும்பி வாசிககபபடும சுருக்கம்பொருளாதார நிலையில பணததை மிசசபபடுததவும முககியமான ஒனறாகும

Bridge : (இணைப்பான் அல்லது பாலம்) தொலைககாடசிச செயதி ஒளிபரபபில வேறுபடட வகையில அமைநத படத தொகுபபுககளைச செயதிக கூறோடு இணைததுக காட்டச சில சொறறொடாகள எழுதிச சோககபபடும அத்தகைய சொற-றொடாகள இணைபபானகள அலலது பாலஙகள் எனபபடும

Brightener : (பொலிவூட்டி) 'பககப் பொலிவூட்டி' எனற பொருள தரும 'Page brightener' என்பதன சுருககம சான்று 1) ஆசசரியததில ஆழ்த்தக கூடிய சுருககமான சிறப்புக கட்டுரை (feature story). 2) அத்தகைய செய்திக கட்டுரைககுத் தரப்படும் தலைப்பு.

Bright star : (பிரைட் ஸ்டார் என்ற செயற்கைக் கோள்) அமெரிக்க அயக்கியக் குடியரசைத் தகவல் தொடர்பில் இஙகிலாநதுடன் இணைபபதறகென அர்ப்பணிக்கபபட்ட செயறகைக் கோள்.

Bright type : (ஒளி அச்சு) உலோக அச்செழுத்துக்களை எதிரீட்டு அச்சு முறையில் சிறப்பாக உபயோகப் படுததும் வணணம் நிழற்பட உருவஙகளாக மாறறும ஒரு முறை

Broadcast : (ஒலி/ஒளி பரப்பு) ஒலிபரபபு எனற பொருளுடைய 'broadcast' எனற சொல் வானொலியில் விணணொலி பரப்பைக குறிககும் நாடா மூலம ஒலிபரப்புதல் அல்லது தொலைககாட்சி நிலையததில் சமிக்ஞைகள மூலம ஒலிபரபபுதல முதலியவை உணமையில ஒலிபரப்பு அல்ல. மினகருவிகளின் பலவேறு பெருகக பகிாதலைக குறிபபிட சொறகள இல்லை எனவே ஒலிபரப்பு, ஒளிபரப்பு ஆகிய இரணடையும் குறிகக 'broadcast' எனற ஒரே சொல்லே சிலவிடங்களில் பயனபடுததபபடுகிறது. ஒலி/ஒளிபரபபு சாாநத தகவல தொடாபு சாதனஙகளாகிய வானொலி, தொலைககாட்சி இரணடுமே முதலில தொழில நுடப வெளிப்படையாக மலாநது பினனா சேவை செயயும நிறுவனஙகளாக மாறின இவை இரணடின வரலாறறில அவறறின ஒழுஙகுமுறை சார்ந்த அளவும, மறறும ஆரம்ப காலததில் அவறறின தொழில நுட்ப அவசியமும் பினனர் ஜனநாயகமுறையிலான தெரிவு உரிமை, மாநில சுய ஆர்வம், பொருளா தார வசதி, நிறுவன பழகக வழககஙகள முதன்மை சார்ந்த பொதுமககளின் பிரதிநிதிகளாக ஆகியதும அதிகாரி களின கட்டுபபாடு அல்லது உரிமம்

ஆகியனவும் மிகவும முக்கியத்துவம் வாய்நதவை அவற்றின செயதி பகிர்நதளிததல தொடாபான புற எலலை மாதிரி, அரசியல மற்றும சமுதாயத்தின அதிகார மையங் களுடன் தொடாபு, அரசியல சாாந்தும் அதேநேரம ஜனரஞசகமாகவும் நிலைத்து விளங்குதல ஆகியனவும இவற்றின் வரலாறறில் முககியததுவம வாய்நத கூறுகள எனலாம

Broadcast fee : (ஒலிபரப்புக் கட்டணம்) தம நிகழசசியை அலலது விளம்பரததை ஒலிபரப்புவதறகென/ ஒளிபரபபுவதறகென அவவிளமபர உரிமையாளா ஒலிபரபபு நிலையத திறகுத தரவேணடிய கடடணம.

Broadcasting media : (ஒலிபரப்பு/ ஒளிபரப்பு தகவல் தொடர்பு சாதனங்கள்) ஒலிபரபபிச/ஒளிபரபபிச செயலபடும தகவல தொடாபு சாதனஙகளாகிய வானொலி, தொலைககாடசி போனறவையும மரபு வழிபபடடவையே அவற்றுள புது சாதனஙகள கேபிள போனறவை இவ்வொலிபரபபுச சாதனஙகள அசசுவழிச சாதனஙகளாகிய நாளிதழ்களைவிட பொதுவாகத தம அனுபவத திறமையினால செயதித் தாளகளைத தாணடி மிகுதியாகச செயலாறறுகினறன அசசுச சாதனஙகள ஒலிபரப்புச சாதனஙகள ஆகிய இரணடிற்குமே அனுபவம எனபது முனதேவையாக இருப பதனால வால்டா கராஙகைட எனபவா, இதனை 'பட்டப பின பயிறசி வணிகம' (Post graduate business) எனறு குறிபபிடுவாா இது உணமையாக ஒருபுறம இருகக வெளிநாடுகளில ஒலிபரபபு இதழாளர்கள ஒலிபரபபுப பணியிலிருந்து நாளிதழப பணிககே திருமபிவிடடனா ஆனால பொது வான போககு இதறகு நோமாறாக ஒலிபரபபு இதழியலுககுப போவதையே பெருமபாலானோா பெரிதும விரும்பு வதாக இருககினறது ஒலிபரபபு சாதனஙகளும தததம திறமைகளையும் ஆற்றலையும வளாததுக்கொளள ஆரமபித்து விடடன

Broadcasting network : (ஒலிபரப்பு வலைப் பிணைப்பு) வானொலியில ஒரு குறிப்பிடட சிறபபு நிகழ்சசியைக குறிபபிடட சில வானொலி நிலை யங்கள இணைநது ஒரே வேளையில தங்கள நிலைய ஒலிபரபபிகளினின்று ஒலிபரபபுவது இததகைய அமைப பிணாலேயே தமிழில தியாகராசா ஆராதனை விழா தெனனக நிலையங களின இணைபபில சோவது வெள்ளிக கிழமை இரவு ஒலிபரபபாகும தென மணடலக காநாடக அரஙகிசையும் தெனனக இணைபபில சோநதது விடுதலை நாள டெலலி தலைநகாக கொடியேறறம குடியரசு நாள அணிவகுபபு முதலானவை அகில இநதிய அளவில இணைபபாகி ஒரே நேரததில ஒலிபரபபபபடுகினறன

Brown line (or) brown point : (மரவண்ண வரி (அல்லது) மரவண்ண அச்சு) எதிரீடு எழுததசசுப படிமை முறையில (offset lithography) தரபபடும தாள பகக மெயபபுககள (Paper page proof) : இதன மீது காணபபடும அசசுபபகுதி மரவணணததில அமைந திருககும எனவே, இது மரவணண அசசு எனறு அழைககபபடுகிறது

Budget : (சேகரிக்கப்பட்ட செய்திகள்) தநதி வழி மறறும பிற வழிகளில சேகரிததுதன மூலம கையில இருககும அனறைய செயதிகள

Bulk : 1. (தாளின் திண்மை), 2. (பத்திரிகையின் கனம்) 1) எடை : ஒரு தாளின அடாததியான தனமை 2) அசசான பககஙகளைப புததக வடிவில் அடுககபபடடதின மொதத கனம

இதில் அட்டைகள் அடங்கா. புத்தக அட்டை அமைப்பாளர்களும் வியாபாரிகளும் அடிக்கடி பயன் படுத்துகிற சொல்.

Bulk discount : (பெரும் தள்ளுபடி) ஒரு இதழில் ஒருவர் தரும் விளம்பரம் அவ்விதழில் இடம்பெறும் மொத்த வரிகள், அல்லது பக்க அளவு முதலிய வற்றைப் பொறுத்து அவ்விளம்பரக் கட்டணத்தில் அவ்விளம்பரதாரருக்குத் தரப்படும் மொத்தத் தள்ளுபடிச் சலுகை.

Bulk eraser : (ஒட்டுமொத்த அழிப்பான்) ஒரு நாடாவில் பதிவானதை ஒட்டுமொத்தமாய் அழிக்கப் பயன்படும் கருவி.

Bull dog : (முன் பதிப்பு அல்லது தயார்ப் பதிப்பு) ஒரு நாளிதழின் முன் பதிப்பு : ஞாயிறு நாளிதழ்களின் பல பகுதிகள் (சிறப்புக் கட்டுரைகள் போன்றன) அவை வெளியாகும் நாளுக்குப் பல நாட்களுக்கு முன்னரே அச்சாக ஆரம்பித்துவிடும். செய்தித் தாளின் முன்பதிப்பாக இவை அமைகின்றன.

Bullet : (கறும் புள்ளி) புத்தகத்தில் உள்ள முக்கியமான கருத்தைக் குறிக்கப் பயன்படும் பெரிய அளவிலான புள்ளி. சிலர் வட்டத்தையும் பயன் படுத்துவதுண்டு.

bulletine : 1.(முக்கியச்சம்பவ விரைவு வெளியீடு), 2.(குறிப்பிட்ட செய்தியின் வளர்ச்சி நிலை). 1) ஒரு புதிய முக்கியச் செய்திச் சம்பவத்தோடு தொடர்புடைய ஒரு விரைவுச் செய்தி வெளியீடு.
2) ஏற்கனவே ஓடிக்கொண்டிருக்கும் செய்திக் கதையின் புதிய வளர்ச்சி நிலை. ஏற்கனவே வந்த செய்தியோடு தொடர்புடையதாயின் அப்போதுதான் வந்த அந்தச் செய்தி மட்டும் ஏற்கனவே உள்ள செய்தியுடன் தடித்த எழுத்துக் களில் அச்சுக் கோர்த்துச் சேர்க்கப்பட்டு வெளியிடப்படும். அப்போது அது 'சற்றுமுன் கிடைத்த முக்கியத்துவச் செய்தி (bulletine pre-cede) எனப் பொருள்படும். 'bulletine' என்பது திடீர்ச்செய்தி ஆகிய 'flash' க்குக் கீழ்ப்பட்ட நிலை (காண்க : flash)

Bull line : (ஒதுக்குக் கோடு) பத்திரிகையின் வல, இடப் பக்கங்களில் உள்ள வெற்றிடம்.

Bumper : (விலகு குறியீடு) தொலைக் காட்சி நிகழ்ச்சியின் இறுதிக்குச் சற்று முன்னரோ அல்லது ஒரு நிகழ்ச்சிக்கும் மற்றொரு நிகழ்ச்சிக்கும் இடையிலோ விளம்பரம் தரப்பட்டால் நிகழ்ச்சியின் கட்டுக்கோப்பைப் பார்ப்போர் உணரத் தவறிவிடாதிருக்கும் வகையில் அவ்விடத்துத் தரப்படும் அழகிய மணியோசை அல்லது இசை வீழ்ச்சி போன்ற குறியீடு 'bumper' ஆகும்.

Bureau : (செய்தி நிறுவனம்) செய்தி சேகரிப்பிற்கென உள்ள ஒரு நிறுவனம். நாளிதழ்கள், செய்தி நிறுவனங்கள் முதலியவற்றால் வாஷிங்டன் போன்ற மிக முக்கியச் செய்தி மையங்களில் இயக்கப்படும் செய்தி சேகரிப்பிற்கான ஒரு துணை நிறுவன அமைப்பு. தலைமை வெளியீட்டுக் கட்டடத்தில் இருந்து இச்செய்திக் குழு தனித்து இயங்குகிறது.

Burn in : (உருவம் விழல்/உருப்பதிவு) ஒளி மிகுந்த ஒளியூட்டப் பரப்பில் உள்ள ஒரு உருவத்தை நிலையாகவோ அல்லது நிரந்தரமாகவோ ஒரு காமிராவின் குழாயில் (camera tube) தக்க வைத்துக்கொண்டு அதனைப் பின்தொடரும் பிறவற்றை உருக் கெடச் செய்வதன் மூலம் குறிப்பிட்ட உருவத்தைப் பதிவு செய்தல்.

Business magazine : (வணிகஇதழ்) வணிகம், வாழ்க்கைத் தொழில்

சார்ந்தவற்றில் ஈடுபட்டிருக்கும் வாசகர் களுக்கென வெளியிடப்படும் இதழ். இத்தகைய இதழ்கள் வியாபாரம் மற்றும் தொழிலில் உள்ளவர்கள் பயன்படுத்துவதற்கென்று அச்சிடப் பட்டுவினியோகம் செய்யப்படுகின்றன. சான்றாக தமிழில் வளர்தொழில் போன்ற இதழ்களைக் குறிப்பிடலாம். ஆங்கிலத்தில் வெளிவரும் Business to-day என்ற சஞ்சிகையும் Financial Times என்ற நாளிதழும் இவ்வகையின.

Business-office must: (வணிக அலுவலகக் கட்டாயச் செய்தி) வணிக அலுவலகத்தால் வெளியிடுமாறு ஆணையிடப்பட்டுள்ளதும் கட்டாயம் வெளியிடப்பட வேண்டியதுமான செய்திக் கதை. ஒரு செய்திக் கதையின் வளர்ச்சி குறித்த முதல் பக்கப் பெட்டிச் செய்தி போன்றவை இவ்வகையில் அடங்கும்.

Business wing : (வணிகப் பிரிவு) நாளிதழ் அலுவலகத்தின் வணிகப் பகுதி. தம் இதழ்களை விற்பனை செய்வதற்கான முயற்சிகளை மேற் கொள்ளும் பிரிவு இது.

Busy : (சிறப்பு வெளியீடு) மிகுதியும் புனைவு செய்யப்பட்டதும் சிக்க லானதும் விரிவானதுமான சிறப்புடைய ஒரு வெளியீடு.

Buzz track : (மாற்றியமைக்கப்படாத அலையகல அதிர்வு ஒலிப்பாதை) மாற்றியமைக்கப்படாத அலையகல அதிர்வு ஒலிப்பாதை. இது நிகழ்ச்சி வர்ணனை பதிவு பண்ணப்படும்போது நுண்ணொலிகளைத் திட்டப் படுத்தியும் ஒலிகளை மின்னலைகளாக்கியும் உதவும் ஒலிபெருக்கி ; மின்னாற்றல் இயக்க நெறித்திறவு மூலம் சப்தமின் மையையும் (அமைதியையும்) பதிவு பண்ணுவதால் உண்டாகிறது.

B.W. : (கறுப்பு வெள்ளை) கறுப்பு வெள்ளை என்ற பொருள்தரும் black & white என்ற சொற்களின் சுருக்கக் குறியீடு.

By line : (பெயர் வரி) குறிப்பிட்ட செய்திக் கதை தொடர்பான செய்தியைச் சேகரித்த நிருபரின் பெயரைச் செய்திக் கதையின் ஆரம்பத்தில் தரும் முறை உண்டு. அவர் பெயர் எழுதப்படும் பகுதி 'பெயர் வரி' எனப் படும். சில நேரங்களில் செய்தி வழங்கிய நிருபரின் பெயர் குறிப்பிடப் படாமல் 'எம் சிறப்பு நிருபர்', 'எம் அயல் நாட்டு நிருபர்' என்று தரப்படும்.

Cablese : (கேபிள் மொழி)ஒளிபரப்புச் செலவைக் குறைக்கும்பொருட்டு கேபிள் வழியாகச் செய்தியை அனுப்பும் பணியில் பயன்படுத்தப்படும் அமைப்புச் சட்டக உருப்பெருக்கி மொழி.

Cable television : (கேபிள் தொலைக்காட்சி அல்லது கம்பி வழித் தொலைக் காட்சி) கேபிள் மூலமாக நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் அமைப்பைக் குறிக்கும் Community Antenna Television என்பதன் சுருக்கம் CATV ஆகும். கேபிள் தொலைக்காட்சி என்பது ஒரு கம்பி வழித் தொலைக்காட்சி அமைப்பு. இதன் மூலம் நிகழ்ச்சிகள் ஒரு மைய இடத்திலிருந்து பெறப்படுகின்றன. நிகழ்ச்சிகளைப் பெறுவதற்கு மாதம் இவ்வளவு என்பதற்கான ஆரம்ப சந்தாத் தொகையையும் கம்பி வழி இணைப்பு அமைப்பினை நிறுவு வதற்கான கட்டணத்தையும் கட்டிய சந்தாதாரர்களுக்குக் கம்பி வழி இணைப்பு தரப்பட்டு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. ஒரு மைய இடத்திலிருந்து நிகழ்ச்சிகளைப் பெறுதல் என்பது உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ள 'டிஷ் ஆன்டெனா' வின் அடிப்படையில் அலைகள் திரட்டப்பட்டு அதன்படி இயங்குகிறது. இந்த ஆன்டெனா சமிக்ஞைகளைத் தடை செய்து அவற்றைக் கம்பி வழியாகச் சந்தாதாரர்களுககு அனுப்புகிறது. சுருங்கக் கூறின், வீட்டில் தொலைக் காட்சி மட்டும் இருக்க வி.சி.ஆரோ (Video Cassette Recorder) வி.சி.பி.யோ (Video Cassette Player) இல்லா மலேயே பல்வேறு நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கக் கேபிள் தொலைக் காட்சி வசதி செய்து தருகிறது. மாதாமாதம் பணம் கட்டி அதற்கேற்பத் தம்வீட்டுத் தொலைக் காட்சியில் வேறு பல நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொள்ளலாம் என்ற முறையில் இயங்கும் இவ்வமைப்பில் மாதா மாதம் செலுத்த வேண்டிய கட்டண அளவு மேலும்மேலும் அதிகரிக்கலாம். வீட்டில் தொலைக்காட்சி வைத்திருந்து அதன் நிகழ்ச்சிகளைப் பார்ப்போர் திரை அரங்கிற்குப் போவதைப் போலவே வீட்டிற்குள்ளேயே தொலைக்காட்சிப் பெட்டியை ஒளிரச் செய்து திரைப்படம் போன்றவற்றைப் பார்க்கும் வசதி இதன் வாயிலாக ஏற்பட்டுள்ளது. வீட்டிற்குள்ளேயே தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை மட்டும் பார்த்தவர்களும் மிகவும் விரும்பித் திரை அரங்கிற்கு முன்பு போனவர்களைப் போலவே இப்போது நிலை மாறி கேபிள் தொலைக்காட்சி மூலம் திரைப் படங்களை விரும்பிப் பார்க்கின்றனர்.

1949-இலிருந்து வளர்ச்சியடைந்துள்ள கேபிள் தொலைக்காட்சி அமெரிக்காவில் 10.8 மில்லியன் வீடு களுக்குப் பரந்துள்ளது. அமெரிக் காவில் கேபிள் தொலைக் காட்சி 3450 அமைப்புக்களைக் கொண்டும் 1,90,000 மைல்கள் நீளமுள்ள கேபிள் இணைப்புக் களையும் கொண்டு பணி யாற்றுகிறது. 1980-இல் கேபிள் நிகழ்ச்சிகளுக்கு 25 மில்லியன் சந்தாதாரர்கள் இருந்தனர் என்றும் கேபிள் நிகழ்ச்சிகள் 50% முதல் 60% அமெரிக்கர்களின் இல்லங் களுக்குச் சென்று சேர்கின்றன என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

தொலை அச்செழுதியுடன் (டெலி பிரிண்டர்) இணைந்த கேபிள்

தொலைக்காட்சி முடி அளவுள்ள மிக மெல்லிய கண்ணாடி இழையை (Optical fibre) ஒளியாக மாற்றப்பட்ட மின்தூண்டு விசைகளைச் சுமந்து செல்லப் பயன்படுத்த ஆரம்பித்த போது மக்களால் விரும்பி அணுகப்பட்ட கேபிள் தொழிற்சாலை முன்னேற்ற மடைந்தது. இம்முறை ஒளி அலை கருத்துப் பரிமாற்றத் தொழில் நுட்பத்தை அடிப்படை யாகக் கொண்ட ஒரு மலிவான ஒளிபரப்பு முறை ஆகும். தந்தி, தொலைபேசி மற்றும் தொலைக் காட்சிச் சமிக்ஞைகளையும் ஒருங்கே அனுப்பும்படி பொருந்திய தந்தி வட இணைவு கேபிள்களைப் (Coaxial Cable) போதுமான அளவு மாற்றத்தக்க வகையில் இழைமவகை சக்திக் கோடுகள் (Fibre power lines) வளர்ச்சியடையு மானால் அதன் விளை வாகக் கேபிள் தொலைக்காட்சி செய்திகளை நாற்றிசையிலும் பரப்பு வதற்கான ஒரு முதன்மை ஆதார மாகக் குறைந்தது 60 அலைவரிசை களை நமக்குத் தருவதாக அமையும்.

Calendering : (தாளினைச் செம்மைப்படுத்தல்) தாளின் வழ வழப்புத் தன்மையைக் கூட்டும் பொருட்டு தாளினை உருளைகளுக் கிடையே கொடுத்தல் தொடர்பான தாள் செம்மை ஆக்கப் பணி 'Calendering' எனப்படும்.

Cam corder : (ஒளி ஒலிப்பதிவுக்கருவி இணைப்பு) குறைந்த எடையுள்ள ஒளிப்பதிவுக் கருவி மற்றும் ஒலிப்பதிவுக் கருவி இரண்டின் இணைப்பு.

Camera : (காமிரா அல்லது படக்கருவி) திரைப்படத்திற்கும் தொலைக்காட்சிக்கும் உரிய படக் காட்சிகளைத் தயா[redacted]கு அல்லது பதிவு செய்வதற்குப் (பட[redacted]ப்பதற்கு) பயன்படுத்தப்படும் [redacted]க் கருவி. திரைப்படத்திலும் தொலைக் காட்சியிலும் கட்புலனுக்குத் தேவை யானவற்றைத் துல்லியமாகவும் நுணுக்கமாகவும் எடுத்துத்தரும் கருவி காமிரா. காமிராவின் அசைவு பொது வானதுதான். அசைக்கப்படும் பாணி வேண்டுமானால் வேறுபடலாம். படப்பிடிப்புக்கள் திரைப்பட அணுகு முறையில் 'சிறிய டேக்', 'பெரிய டேக்' என்றும் தொலைக்காட்சி அணுகு முறையில் நீண்ட செயல் தொடர்ச்சி கள், தொடர்ந்த படப்பதிவுகள் என்றும் அழைக்கப்படுகின்றன. தொலைக் காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பின்போது காமிராவில் எடுக்கப்படும் படம் கம்பி வழியாகச் செல்லும். நிகழ்ச்சித் தயாரிப்பாளர் நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டு அறையிலிருந்து பேசுவதைக் கேட்கவும் காமிராமேன் தயாரிப்பாளரோடு பேசவும் வசதியாகத் 'தலை அணி பேசி' யும் (Head set) காமிராவில் இணைக்கப் பட்டுள்ளது.

தொலைக்காட்சிக் காமிராக்களில் ஒரு வகை 'எலெக்ட்ரானிக் நியூஸ் கேதரிங்' எனப்படும். E.N.G.மின்னணு முறையில் தகவல் சேகரிப்புக்கான காமிரா ஆகும். இக்காமிரா மூலம் வி.சி.ஆர். (V.C.R.) நாடாக்களைப் பயன்படுத்தி ஒலி, ஒளி இரண்டையும் பதிந்துவிட முடியும். 1950–ஆம் ஆண்டு முதல் ஒளிப்பதிவு நாடாக்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பில் பல வழிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. நாடாவின் அகலம் முக்கால் அங்குலம் ஆகும். இருபது நிமிடம் வரக்கூடியதும் ஒருமணி நேரம் வரக்கூடியதும் என இருவேறு நீளங்களில் அந்நாடாக்கள் கிடைக்கின்றன. இன்னொரு வகைக் காமிரா 'போர்ட்டபேக்' என்பதாகும். எளிதாக இடம்விட்டு இடம் அதனை எடுத்துச் செல்ல முடியும் (Portable) என்பதாலும் காமிரா, மைக் என்ற இரண்டும் ஒரே கூட்டுக்குள் இணைக்கப்பட்டிருப்பதாலும் அதற்கு போர்ட்டபேக் (Portopak) எனப்

பெயரிட்டுள்ளனர். இதை இயக்க ஒருவரே போதும். இது கிடைக்கும் ஒளி அளவுக்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொண்டு ஒலியுடன் படம் எடுக்கும் வல்லமை வாய்ந்தது.

Camera angle : (காமிரா கோணம்) படம் எடுக்கப்படும் பொருள் அல்லது நபருடன் காமிரா தன்னைத் தொடர்பு படுத்திக்கொள்ளும் நேர்கோட்டைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொதுவான சொல்.

காமிரா ஒரு பொருளைப் பார்க்கும் கோணமே நேயர் பார்க்கும் கோணமும் ஆகும். வீட்டில் ஒருவர் தொலைக் காட்சிப் பெட்டியில் பார்ப்பனவற்றை நிலையத்தில் உள்ள காமிரா ஏற்கனவே பார்ககிறது. காமிரா எதைப் பார்க்க முடியும்; எப்படி எப்படிப் பார்க்க முடியும் என்பதைப் பொறுத்தே வீட்டுப் பெட்டிக்குத் திரைப்படம் வந்துசேரும். வீட்டில் ஒவ்வொருவரும் சிறிது வேறுபட்ட இடங்களிலிருந்து பார்த் தாலும் காமிராவின் கோணமே அவர்கள் அனைவரும் பார்க்கும் கோணம் ஆகும். காமிரா பல கோணங்களில் மாறி மாறி நகரலாம். எனவே குழப்பத்தைத் தவிர்க்கப் பயன்படுத்தும் ஒரு குறிப்பிட்ட வகையான நிலையான படப்பிடிப்பே 'பார்வை நிலை' (Point of view) எனப்படும். ஒரு பாத்திரத்தின் கண்கள் பார்க்கும் கோணத்திலேயே காமிராவும் பார்ப்பதாகப் படைப்பது பார்வை நிலைப் படப்பிடிப்பு ஆகும். இவ்வகைப் படப்படிப்பில் பாத்திரத்தின் இடத்தில் நாமும் இருப்பதாக ஆகிவிடுகிறோம். சான்றாக ஒரு பெண்ணைத் தேடும் ஒருவன் திடீரென 'நான் கண்டுபிடித்துவிட்டேன்' என்று கூற அவன் பார்வை கிணற்றுக்குள் செல்ல நாமும் அவனுடனிருந்து அவனுடன் சேர்ந்தே கிணற்றுக்குள் பார்ப்பதாக உணர்தல் பார்வைநிலைப் படப்பிடிப்பைக் கொண்டது. நீள்வாக்காக (Vertical angle) அமைக்கப்படும் மூன்று வகைக் கோணங்கள் முக்கியமானவை. காமிரா வின் நிலையைப் பொருளோடு தொடர்புடையதாக நீள்வெட்டுக் கோணங்களில் வைப்பதற்கு இவை உதவுகின்றன. இவை உணர்வு, மனநிலை முதலியவற்றை ஓரளவு பாதிக்கும் காட்சிகளைத் தரவல்லவை. அவை : 1) கீழ்க்கோணம் (Low angle). 2) உயர் கோணம். (High angle), 3) கண்மட்ட கோணம் (Eye-level angle).

Camera control room : (காமிரா நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டு அறை) காமிராவில் எடுக்கப்படும் படம் கம்பி வழியாகச் செல்லும். அப்போது நிகழ்ச்சித் தயாரிப்பாளர் நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டு அறையில் இருப்பார். அங்கிருந்து தேவைப்பட்டால் காமிராமேனுடன் பேசுவார். நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டு அறைக்கு முன்புறமும் பின்புறமும் ஒளிக கட்டுப்பாட்டு அறையும் ஒலிக்கட்டுப்பாட்டு அறையும் இருக்கும். இந்த மூன்று அறைகளும் நிலைய அரங்கினை ஒட்டி மேல் தளத்தில் அமைக்கப்பட்டிருக்கும். இந்த மூன்று கட்டுப்பாட்டு அறை யினரும் கண்ணாடிச் சுவர் வழியாகத் தம் அறையில் இருந்தபடியே கீழே படப்பிடிப்பு அரங்கினைப் பார்க்கலாம். ஒலிக்கட்டுப்பாட்டு அறையில் ஒலிப்பதிவு நாடாக்கள், இசைத் தட்டுக்கள், ஒலி வாங்கி மூலம் வரும் ஒலிகள் முதலியனவற்றை ஒருங் கிணைத்து ஒலி வழங்குகிறார்கள். ஒளிக்கட்டுப்பாட்டு அறையில் காமிரா ஆடியை இயக்குவது, அரங்கிற்கு ஒளியேற்றுவது, ஒளியைக்குறைப்பது, சுழல் விளக்கு அமைப்பது போன்ற பணிகளைச் செய்வார்கள். பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளைக் கட்டுப்பாட்டு அறையில் பதிப்பித்தலின் போது தொழில்நுட்ப வல்லுநர்களால் பல உத்திகள் கையாளப்படுகின்றன.

Camera movements : (காமிரா அசைவு முறைகள்) காமிராவின் நிலை, மற்றும் காமிராவுக்கும் பொருளுக்கும் இடையே உள்ள தொடர்பாகிய கோணம், தூரம் ஆகிய மூன்றையும் காமிரா அசைவு வேறுபடுத்தும். காமிராவின் அசைவு முறைகள் பல்வேறு வகைப் படக் காட்சிகளை (Shots) நமக்குத் தருகின்றன. காமிராவின் அசைவு முறைகள் கீழ் மேல் அசைவுமுறை (boom), நெகிழ்வு அசைவு முறை (zoom), முன்பின் அசைவு முறை (dolly), திரும்பு அசைவு முறை (Pan), தொடர் அசைவு முறை (Follow) முதலியன ஆகும்.

Camera ready : (காமிரா தயார் நிலை) எதிரீட்டு எழுத்தச்சுப் படிமை முறை (Offset lithography)மூலம் அச்சிடப்படு வதற்காகவோ, படமெடுக்கவோ தயாராக இருக்கும் அச்சுக்கோர்வை அல்லது காட்சி.

Camera ready copy : (ஒளிப்படத் தயார் எழுத்துப்படி) ஒளிப்படச் செதுக்கல் (Photo engraving), ஒளிப்பட எழுத்தச்சுப் படிமை முறை (Photo lithography) அல்லது பிற தகட்டு ஆக்க அமைப்புக்குத் தயாராக இருக்கும் எழுத்துப்படி.

Camera tower : (காமிரா கோபுரம்) தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பில் உயரத்திலிருந்து எடுக்கப்படும் காட்சிகளுக்கு என தொலைக்காட்சிக் காமிராவைத் தாங்கும் வகையில் பயன்படும் சாரக் கட்டுக் கோபுரம்.

Canalization : (வழிப்படுத்தல்) தகவல் தொடர்பு சாதனங்கள் பொதுமக்களின் எண்ணங்கள், நடைமுறை முதலிய வற்றில் தாக்கம் ஏற்படுத்துமளவிற்குப் பெற்றிருக்கும் திறனை இச்சொல் குறிக்கும். மக்கள் தொடர்பு சாதனங்கள் ஏற்கனவே உள்ள சமுதாய மதிப்புக்களைப் பாதுகாத்தல், புதியன வற்றை உருவாக்குதல், ஏற்கனவே உள்ள சமுதாய மதிப்புக்களையும் எண்ணங்களையும் மாற்றுதல், ஏற்கனவே உள்ள நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்துவதால் குறிப் பிட்ட நடத்தையை அமைத்தல், ஏற்கனவே நமக்குத் தெரிந்தன குறித்து மேலும் தெளிவுபடுத்தல் அல்லது ஏற்கனவே நாம் ஒத்துக் கொண்டதான நமக்கிருக்கும் அறிவை விரிவுபடுத்தல் முதலிய வலிமை வாய்ந்தவை. சான்றாக, பற்பசை விளம்பரம் ஒன்று நம் பற்களைத் துலக்குதல் நமக்கு நன்மை பயக்கும் என்ற கருத்தை மீண்டும் திரும்பத் தருவதுடன் இப்புதிய பற்பசையைப் பயன்படுத்துதல் மகிழ்ச்சி யானதாகவும் நல்லனுபவத்தைத் தருவதாகவும் அமையும் என்று நிரூபிக்கிறது.

Canned copy : (பதிவு எழுத்துப்படி) பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள வணிக விளம்பர எழுத்துப்படி : பொதுவிளம்பரச் செய்தி தொடர்பான எழுத்துப்படியும் இத்தகையதே.

Capitals & small letters : (தலைப்பெழுத்துக்கள் மற்றும் சிற்றெழுத்துக்கள்) ஒவ்வொரு வகை அச்செழுத்தின் தொகுதியிலும் தலைப்பெழுத்துக்கள், சிற்றெழுத் துக்கள், உருவங்கள், இரட்டை எழுத்துக்கள், குறிகள் முதலியன அடங்கி இருக்கும். தலைப்பெழுத் துக்கள் (Capital letters)ஒரு பத்தியின் (para)ஆரம்பத்திலும் சிலவேளைகளில் வாக்கியத்தின் முதலிலும் பயன்படுத்தப் படும். செய்யுட்களின் ஒவ்வொரு வரி முதலிலும், ஆள், ஊர், பெயர்களின் முதலிலும் மேற்கோள் பகுதியின் முதல் எழுத்திலும், பட்டங்களில் சுருக்க எழுத்துக்களிலும், தலைப்புகளிலும் பயன்படுத்தப்படும். ஆங்கில நாளிதழ்

களுக்குச் செய்தி எழுதும்போது குறிப்பிட்ட பகுதியைத் தலைப்பெழுத்துக்களைப் பயன்படுத்தி அச்சுக் கோர்க்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுவதற்கு அப்பகுதியின் அடியில் மூன்று முறை அடிக்கோடிட வேண்டும். தலைப்பெழுத்துக்களைத் தவிர்த்து இதற்குச் சிற்றெழுத்தே பயன்படுத்துக என்பதைக் குறிக்க அவ்வெழுத்துக்களின் ஊடே சாய்கோடு பயன் படுத்தப்பட வேண்டும். அச்சுக் கோர்க்கும் முறையில் பெரிய எழுத்துக் களில் அச்சுக் கோர்க்கப்பட வேண்டியவற்றையும் சிறிய எழுத்துக்களில் அச்சுக் கோர்க்கப்பட வேண்டிய வற்றையும் குறிப்பிடுவதற்கு முறையே 'Caps', 'Lower case' (lc)என்று குறித்துக் காட்டும் முறையும் உள்ளன.

Capsule lead : (அடக்க முகப்பு) செய்தி முகப்பு வகைகளுள் ஒன்று ; Capsule என்ற இச்சொல்லே இத்தகைய முகப்புச் செய்தி அளவில் சிறியதாக இருக்கவேண்டும் என் பதைக் குறிக்கிறது. இத்தகைய முகப்புச் செய்தியை எழுதுவதற்குப் புத்திக் கூர்மை வேண்டும் என்பது இல்லை. செய்தியை ஒரு தொடரில் சொன்னால் அதுவே போதும்.

சான்று : ஆந்திர பல்கலைக்கழகம் அதன் பொன்விழாவைக் கொண் டாடியது. இம்முகப்பு பொதுவாக அரசியல் அல்லது வரலாற்றுச் செய்தி களின் குறிப்பினை உள்ளடக்கிய முகப்பாக இருக்கும் என்பதால் இதனை 'வரலாறு அல்லது அரசியல் குறிப்பு அடக்க முகப்பு' என்றும் கூறுவர்.

Caption : 1. (பட விளக்கம்), 2. (தொலைக் காட்சிச் செய்திக் கலைப்பணி). 1) நாளிதழ்கள் மற்றும் இதழ்களில் படங்கள், வரைபடங்கள் முதலிய வற்றுடன் (அவற்றின் கீழ்) அது தொடர்பாகக் கொடுக்கப்படும் விளக்கச் செய்திக் குறிப்பு. 2) தொலைக் காட்சிச் செய்திகள் தொடர்பான கலைப் பணிகளையும் விளக்க வரைபடங்களையும் (graphics) குறிக்கும் பொதுவான சொல்.

Caption scanner : (பட நிழல் ஒளி பிரித்தறி கருவி) 35 எம்.எம். படங்களை அல்லது சிறிய (12"x9") படங்களைத் தொலைக் காட்சி வழி ஒளிபரப்ப உதவும் கருவி. அது நிழல் ஒளிக் கூறுகளைத் தொலை தூரத்திற்கு அனுப்பும் வகையில் அவற்றைப் பிரித்தறி குழாய் ஒன்றையும் அல்லது ஒரு காமிரா குழாயையும் (Camera tube)கொண்டிருக்கும்.

Cardioid microphone : (இதய வடிவு ஒலிவாங்கி) ஒலிவாங்கி வகைகளுள் ஒன்று : ஒரே நேரத்தில் இருவர் நன்றாய்ப் பேசலாம். இவ்வொலிவாங்கி நேர் எதிரெதிர்ப் பண்புகளையுடைய வகை சார்ந்தது. இதனால் இதன் முன்பகுதியில் அதிக நுட்ப உணர்வுத் திறனும் பின் பகுதியில் குறைந்த நுட்ப உணர்வுத்திறனும் அமையும்.

Carry over : 1. (அடுத்த பக்கத்திற்குத் தொடர்க) 2. (பக்கத் தொடர் செய்தி) 1) ஒரு செய்தியை நாளிதழின் அல்லது இதழின் ஒரு பக்கத்திலிருந்து அடுத்த பக்கத்திற்குக் கொண்டு செல்லுதல். 2) உட்பக்கத்திற்குக் கொண்டு போகப் படும் செய்தியின் ஒரு பகுதியையும் குறிக்கும். அவ்வாறு கொண்டு போகும்போது எந்தப் பக்கத்தில் கொண்டு போகப்படும் அச்செய்திப் பகுதி அமைகிறதோ அப்பக்கம் 'break over page'என்று அழைக்கப்படும். 'break over'என்பதும் 'Carry over' என்பதும் ஒரு பொருள் குறித்த பல சொற்கள்.

Cartridge recorders: (உறைப் பதிவுக்கருவிகள்) வானொலி ஒலிபரப்

பிறகு உதவும் குறிப்பிட்ட நீளமுள்ள தொடர்ச்சியான நாடாச் சுருள் ஒரு 'உறைநாடா' (Cartridge tape) எனப்படும். அந்த நாடா ஒரு பிளாஸ்டிக் உறையில் தொடப்படாத வகையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும். அப்படியானால்தான் இயக்குபவரின் கை அதைத் தொட முடியாது. அதனுடைய சுழல் வடிவத்தால் முன்னோக்கி நகர்ந்து மட்டுமே பதிவு பண்ண முடியும். பின்னோக்கி நகர்ந்து பதிவுபண்ண முடியாது. உறை நாடாக்கள் பகுதியாக அல்லது முழுவதுமாக 'இயந்திர வழித் தம்மியக்கம்' (automation) உடையவை. இயந்திரவழித் தாம் இயங்கும் அமைப்புக்களுக்கு இவை பெரிதும் மையமாகும். ஒரு திருகு வட்டிலிருந்து மறு திருகு வட்டிற்கு (reel tc reel) இயந்திர வழித் தாம் இயங்கும் அமைப்புக் கருவிகள் இவற்றுடன் அடிக்கடி இணைக்கப்படும். ஒரு உறைப்பதிவுக் கருவி நம்மால் சுற்றப்படாமல் அது தானே செயல்பட்டுக் கொள்ளும். குறிப்பாக இது பீதியான காலங்களில் (panic periods) அதாவது அடிக்கடி அடுத் தடுத்த வளர்ச்சி நிலைச் செய்தி கூறப்பட வேண்டிய நிலையில்-சிறிய அறிவிப்புக்கள் செய்யப்பட வேண்டிய நிலையில் கையாளப்படும். நிகழ்ச்சிகளுக்கு இடையேயும் அடுத்தடுத்த அறிவிப்புச் செய்யப்பட வேண்டிய சூழலிலும் கையாளப்படும். நிகழ்ச்சியின் முடிவிலும் அறிவிப்பின் முடிவிலும் உறைநாடா தொடர்ந்து அமைதியாகத் தானே அடுத்த நிகழ்ச்சிக்காக இயங்கிக் கொள்ளும் வகையில் ஓடுகிறது. அடுத்த நிகழ்ச்சி வந்ததும் தானே நிறுத்திக் கொள்ளும்.

Cassettes : (நாடாப் பேழைகள்) ஒலி நாடாக்கள் அடங்கிய பேழைகள் மிகச் சிறியவை. உறை நாடாக்களின் பதிப்புருக்களான இவை வேறு வகையில் வடிவமைக்கப்பட்டவை. 1/8 அங்குலம் அகலமுள்ள ஒலிப்பதிவு நாடா குறிப்பிட்ட நேரத்திற்கு ஓடக்கூடியது. ஒரு பெட்டியில் முன்/பின் ஓடும் வகையில் அமைக்கப் பெற்றது. 1/8 அங்குல அகலம் உடைய காந்த நாடாவை உள்ளடக்கிய நாடா சுற்றப்படுவதற்கான இரண்டு கண்டும் உள்ளவையாக அமைந்திருப்பவை இந்நாடாப் பேழைகள். பிளாஸ்டிக் கூட்டில் அடைத்துவைக்கப்பட்டிருக்கும் இவற்றினுள் உள்ள ஒலி நாடாக்கள் ஒருமுறை பயன்படுத்தப் பட்ட பின் மீண்டும் அதே இடத்திற்குக் கொண்டு வரப்பட்டு மீண்டும் பயன்படுத்தப்படலாம். இத்தகைய ஒலிப்பதிவு நாடாக்கள் வீட்டில் வைத்திருந்து பயன்படுத்தப்படுவதற்கு ஏற்றவை. ஏனெனில் இவை சிறிய வடிவம் கொண்டவை. எளிதாகத் தூக்கிச் செல்லக்கூடியவை. குறைந்த கனமுடையவை. எனவே ஒலி நாடாப் பேழைகளை இசைக்கச் செய்யக் கூடிய கருவிகள் மற்றும் ஒலி நாடாப் பேழைகளில் பதிவு பண்ணும் கருவிகள் (Tape recorders) ஒலிபரப்பு இதழாளர்களால் பயனுடையவை எனக் கருதப்படுகின்றன. ஒலிபரப்பு இதழாளர்களுக்குச் செய்திக் களத்தில் மெய்க்காட்சிகள் தயாரித்தல், பேட்டிகள் தயாரித்தல், குறிப்பெடுத்தல் முதலிய பணிகளுக்கு இந்த நாடாக்கள் மிகுதியும் பயன் படுகின்றன.

Casting box : 1. (உலோக உருக்குப் பெட்டி). 2. (உலோக மாதிரி அச்சு) 1) காகித கூழ் மொத்தை அச்சுருக்களை அச்சுருத் தகடுகளாக உருவாக்குவதற்குப் பயன்படும் வழி ; ஒரு முழுப் பக்கத்தின் தாளில் தாள் ஊறல் கூழ் மொத்தை ஏற்படுத்தும் அடையாளத்திலிருந்து ஒரே மாதிரியான தகடுகள் அல்லது ஒரு சிறு விளம்பரம் போன்றவை உருக்கி வார்க்கப்படுகின்றன. 2) அச்சுவார்ப்புப் பொறியில் உள்ள சிறிய உலோக

மாதிரி அச்சு. இதிலிருந்து ஒரு சிறிய எழுத்து உருவாக்கப் படுகிறது.

Catharsis theory : (தூய்மையாக்கக் கொள்கை) வன்முறை-தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகிய இரண்டுக்கும் இடையே உள்ள உறவு குறித்துப் பல்வேறு கொள்கைகள் வரையறுக்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்று இது. ஒளிபரப்பு சாதனங்கள் தயாரிக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டு அதனைப் பார்க்கும் மக்களின் மீது அவை ஏற்படுத்தும் தாக்கம் ஆகிய விளைவு குறித்த கொள்கைகளுள் ஒன்று. தினசரி வாழ்வில் மனிதனுக்குள் ஏற்படும் பொதுவான விரக்தி உணர்வு ஒருவரைச் சில சமயங்களில் பிறரது வன்முறைகளில் தானும் பதிலாளாகப் பங்கு கொள்வதன் மூலம் பகைமை உணர்வு கொள்ளச் செய்துவிடும். இந்த விரக்தி உணர்வுகள் தனி மனிதன் தனக்குள்ளேயே வன்முறை உணர்வை வளர்த்துக்கொள்ள வாய்ப்பாகிவிடுகின்றன. எனவே வன்முறையாக நடந்துகொள்ள விழையும் அவனது ஆவல் குறிப்பிட்ட வன்முறை நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போதோ அல்லது கவனிக்கும்போதோ திருப்தியடைகிறது. இக்கொள்கை நாம் அன்றாட வாழ்வில் கொள்ளும் அதிருப்திகள், ஏமாற்றங்கள், விரக்தி உணர்வுகள் முதலியவற்றின் பிரதி நிதியான வெளிப்பாடுதான் வன் முறைச் செயல்களைக் கவனித்தல் ஆகும் என்று கூறுகிறது. எனவே தனிமனிதன் வன்முறையாளனாக மாறுவதை, வன்முறையாளனாகச் செயல்படுவதை ஒலிபரப்பு/ஒளிபரப்பு வன்முறை நிகழ்ச்சிகள் தடுத்து நிறுத்திவிடுகின்றன என்பதுவே இக்கொள்கை.

Cathode ray tube (CRT) : 1. (படத் தயாரிப்புக் குழாய்), 2. (காட்சிப் படங்காட்டி). 1) பெரியதும் நன்கு ஒளியுறச் செய்வதுமான பரப்பில் மின்னணுக்கதிர்களின் (Electronic rays)எதிர்மின் கதிர்கள் (cathode), மின்வாய் (electrode) முதலிய வற்றிலிருந்து வெளிப்படும் கதிர்களின் வழியாகப் படத்தை வெளிப்படுத்திக் காட்டும் (தயார் செய்யும்) ஒரு குழாய். 2) CRT எனப்படும் இது ஒரு காட்சிப் படங்காட்டி (Video Display Terminal) ஆகும். மிக விரைவான தட்டச்சுப் பொறியாகிய இது ஒரு காட்சிப்படத் திரையைக் கொண்டது. இதன்மீது தோன்றச் செய்யப்படும் உருவங்கள், செய்திப்படிகள் மீண்டும் மீண்டும் சேமிக்கப்படும். இது அசோசியேட்டட் பிரஸ் என்னும் செய்தி நிறுவனத்தாலும் சில நாளிதழ்களாலும் செய்தி எழுதுதற்கும் செய்திப்படிகளைப் பதிப்பிப்பதற்கும் (editing) பயன் படுகிறது. செய்திப் படிகள் சேமித்து வைக்கப்பட்டுக் கணிப்பொறியால் விரைவாக அனுப்பப்படுகின்றன. அசோசியேடட் நிறுவனத்தால் செய்திப்படி ஒரு மணித்துளிக்கு 1200 சொற்கள் என்ற அளவில் மிக விரைவாக அனுப்பப்படும்போது அவை நாளிதழ் கணிப்பொறிகளால் வாங்கப்பட்டு அடுத்து ஆசிரியர்கள் அவற்றைக் கேட்கும்வரை சேமித்து வைக்கப்படுகின்றன. ஏனெனில் எல்லாச் செய்தித் தாள்களும் மிக விரைவில் அனுப்பப்படும் இவற்றை அதே வேகத்தில் உடனடியாகக் கையாள முடிவதில்லை.

CBA : (காமென்வெல்த் ஒலிபரப்புக் கழகம்) 'Commonwealth Broad-casting Association' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம். காமென் வெல்த் நாடுகளின் ஒலிபரப்பு நிறுவனம் எனப் பொருள்படும்.

CBC : (கனடா நாட்டு ஒலிபரப்புக் கழகம்) கனடா நாட்டு ஒலிபரப்புக்

கழகம் எனப் பொருள்படும் 'Canadian Broadcasting Company' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம்.

CBS : (கொலம்பிய ஒலிபரப்பு அமைப்பு) 'Columbia Broadcasting System' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம். அமெரிக்க வலைப்பிணைப்பினுள் (network) ஒன்று கொலம்பியா ஒலிபரப்பு அமைப்பு ஆகும்.

Ceefax : (ஆயத்த காட்சித் தொகுப்புச் செய்திகள்) பிரிட்டிஷ் ஒலிபரப்பு நிறுவன ஒலிபரப்புத் தொலை நிகழ்ச்சித் தொகுப்பு அமைப்பு (BBC broadcast teletext system)என ஓர் அமைப்பினை பி.பி.சி. கொண்டுள்ளது. இங்கு தொலைக்காட்சிப் படத் தொகுப்புக்கள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும். பொதுவாக எல்லா நிலையங்களுமே திரையில் ஓட விடுவதற்கென்றே எப்போதும் தயாராகச் சில காட்சித் தொகுப்புச் செய்திகளை வைத்திருக்கும். இவை 'Ceefax' எனப்படும். இவை எப்போதாவது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு இடையில் மீதம் விழும் நேரத்தில் ஒளிபரப்பப்படும்.

Censorship : (தணிக்கை) வானொலி, தொலைக்காட்சி முதலிய ஒலிபரப்பு சாதனங்களுக்குச் செய்தி எழுதுபவர் எவற்றைத் தெரிவுசெய்வது என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் ஒலிபரப்பு சாதனங்களின் செய்திகளுக்கும் 'இன்னின்ன ஒலிபரப்பப்படக் கூடாது' என அரசால் முன் தணிக்கை செய்யப்படும் விதி உண்டு. தணிக்கை முறையை இருவிதமானவற்றின் மீது பயன்படுத்தலாம். 1) தணிக்கை செய்யக்கூடிய செய்திக் கருத்துக்கள் (material) 2) முரண்பாட்டுச் செய்திக் கருத்துக்கள் (Controversial material). இவற்றுள் முதலது நேயர்களுக்குச் சுவை பயக்காதவை. ஒருவேளை இவையே திரை அரங்குகளில் திரைச் செய்திப் படமாக அமையலாம்.
சான்று : தற்கொலைச் சித்திரிப்பு, நேர்மையற்ற மற்றும் தூண்டி விடக் கூடிய முறையில் பால் வேறுபாட்டுச் சித்திரிப்பு முதலியன.
தணிக்கைக் குழு விதிமுறைகளுள் எவ்வெவற்றைத் தவறு எனக் கருதுகின்றனரோ அவையும் நன்னடத்தைக்கு மாறுபட்டன எவையோ அவையும் தணிக்கைக்கு உரியன. ஒலிபரப்பு நிலையங்கள் நிகழ்ச்சியின் உள்ளடக்கம் நல்ல தரம் வாய்ந்தவையா என்று கணிப்பதற்கென்றே சில மாதிரி விதிகள் வைத்துள்ளன. அவ்விதிகள் நிகழ்ச்சிகளில் பின்பற்றப் பட்டுள்ளனவா என நிலைய இயக்குநர், தயாரிப்பாளர், வலைப்பிணைப்பு நிலையத்தார் முதலியோர் பரிசோதிப்பர். தவறு எனக்கருதப்படுபவை மட்டுமல்ல முரண் பாட்டுக்குரிய செய்திகளும் தணிக்கைக்குரியன. தூய்மையற்ற பேச்சுக்கள், ஆபாசச் சொற்கள், ஆபாச மொழி, ஆபாசப் பொருள் முதலியவற்றைக் கொண்ட உள்ளடக்கம் நிகழ்ச்சி பார்ப்போரில் யாரையேனும் பாதிக்கும் வகையில் அமையுமாயின் அவை முரண்படுவதற்கு உரியன என்ற வகையில் அடங்கும். அவை தணிக்கைக்குரியன.

Center : (நடுவணாக்கல்) இரு பக்கங்களிலும் சம அளவு இடம் விட்டு நடுவில் சிறிய தொடரை அல்லது வரியை அச்சுக்கோர்த்தல்.

Center body : (இயல்பு எழுத்துக்கள்) அச்சுக் கலையில் பயன்படுத்தப்படும் எழுத்துக்களுள் ஏற்றம் அல்லது இறக்கம் இல்லாத எழுத்துக்கள் இவ்வகைப்படும். சான்றாக a , c , e , m , n , o , r , s , v , w , x , z போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

Central super : (நடுப்படப் பதிவு) ஒளிபரப்பு நிகழ்ச்சிகளில் நிகழ்ச்சி வழங்குபவர் இன்னார் என்பதைக் குறிக்கும் பொருட்டு அவர் உருவத்தின் நடுப்பகுதியின் மீது அவர் பெயர் தோன்றுமாறு செய்யும் உத்தி 'நடுப்பதிவு' எனப்படும். ஒரு உருவத்தின் மீது நடுப்பகுதியில் இன்னொரு உருவப் பகுதியை விழச் செய்தலையும் குறிக்கும்.

Centre spread : (நடுப்பக்கங்கள்) ஒரு செய்தித்தாளின் நடு மடிப்பில் உள்ள இரு பக்கங்கள் : இந்நடுப் பக்கங்கள் 'double truck' என்று அழைக்கப் படுகின்றன.

Centrifugal : (விரிமையப் போக்கு) ஒருபுறம் மாற்றம், சுதந்திரம், வேற்றுமை, முறிவு முதலிய கோட்பாடு களை உள்ளடக்கிய விரிமையப் போக்கினுடனும் (centrifugal tendencies) மறுபுறம் ஒழுங்கு, கட்டுப்பாடு, ஒருமை, இணைவு ஆகிய கோட் பாடுகளை உள்ளடக்கிய குவிமையப் போக்கினுடனும் (centripetal tendencies) பல்வேறு கொள்கையாளர்கள் தகவல் தொடர்பு சாதனங்களை இணைத்துப் பார்த்திருக்கின்றனர். விரிமையப் போக்கின்படி தகவல் தொடர்பு சாதனங்கள் எவை புதியன, நாகரிகமுடையன, முன்னேறியன என்ற நோக்கிலேயே செய்திகளைத் தருகின்றன. அவை நிலைத்த வழி களுக்கும் சமுதாய மதிப்புக்களுக்கும் சவாலாகவே அமைந்ததுபோல் தோற்றம் அளிக்கின்றன. மக்களை நல்ல தரமான பொருட்களைத் தேடிச் செல்ல வைத்தலுடன் நுகர்தல் குறித்த கிராக்கியைத் தூண்டியும் விடு கின்றன. அதற்கும்மேல் மரபுவழிப்பட்ட மதிப்புக்களைத் தளரச் செய்தல், தன் சொந்தசமுதாய வாழ்க்கைச் சூழல் சார்ந்து சிந்திக்கும் போக்கிலிருந்து தனிமனிதனை விடுவித்தல், இதன் விளைவாகச் சமுதாய வாழ்வின் சில களங்களைத் தனிமைப்படுத்தல் போன்ற சில செயலாக்கத் திறமை களையும் வளர்க்கின்றன. எனவே இப்போக்கின்படி தகவல் தொடர்பு சாதனங்கள் புதுமையாக்கம், சுதந்திரம், இயக்கம் முதலிய விளைவு களைத் தருகின்றன என்ற உடன் பாடான கருத்தும் உண்டு. தகவல் தொடர்பு சாதனங்கள் தனிமைப் படுத்தல், மனநோய் உருவாக்கல், சமுதாய மதிப்புக்களை விட்டுவிடல், வடுப்படுத்தல் முதலியவற்றின் மூலம் சமுதாய ஒழுங்கின்மையை உருவாக்குகிறது என்ற எதிர்மாறான கருத்தும் உண்டு.

குவிமையப் போக்கின்படி, தகவல் தொடர்பு சாதனங்கள் ஒரே மாதிரி யான கொள்கைகளால் காலம் கால மாக நிலைத்த சமுதாய அமைப்புக் களை மாற்றியுள்ளது. இத்தகைய ஒரேமாதிரியான கொள்கைகள் மிகுதியும் சிக்கலற்றவை ; வற்புறுத்தல் அற்றவை. இருப்பினும் உறுதிப் பாட்டையும் ஒழுங்கையும் வற்புறுத்து பவை. பெரிய அளவில் இணைப்பு முயற்சி உடையவை. எனவே இப்போக்கின்படி தகவல் தொடர்பு சாதனங்கள் ஒருங்கிணைக்கும் ; இணைக்கும் என்ற உடன்பாடான கருத்தும் ஒருபடித்தாக்குதல் மற்றும் கையாளும் கட்டுப்பாடு உடையதாய் இருத்தல் என்ற எதிர்மறையான கருத்தும் உண்டு. தகவல் தொடர்பு சாதனங்கள் பன்மைவாதம், தானே விரும்பிய தனித்தன்மை ஆகிய விரிமையப் போக்கையும் ஒருமை, அடக்குக் கட்டுப்பாடு ஆகிய குவிமையப் போக்கையும் உடையன என்பதுவே இதன் பொருள்.

CGO : (பயன்படுத்துக) 'Can go over' என்பதன் சுருக்கம். அடுத்த நாள் இதழ் வெளியீட்டிற்குத் தேவைப்பட்டால்

பயன்படுத்திக் கொள்ளலாம் ; அதற்கு இது தகுதி பெற்றதே என்பதைக் குறிக்கும் குறியீடு. மேற்கொண்டு பயன்படுத்தலாம் என்ற பொரு ளுடையது.

Chain breaks : (வலைப்பிணைப்பு விளம்பர நேரம்) வலைப்பிணைப்பின் (networks) மறுபெயர் 'Chain' என்பதாகும். இந்நிலையங்கள் தங்கள் நிகழ்ச்சிகளைக் காட்டித் தம்மை இனங்காட்டும் நேரத்திற்கும் உள்ளூர் நிலைய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படும் நேரத்திற்கும் இடைப்பட்ட நேரம் விளம்பரதாரர்களுக்கு வலைப் பிணைப்புக் கட்டணம் அல்லது உள்ளூர் நிலையக் கட்டணம் ஆகிய இரண்டில் ஏதாவதொன்றின் அடிப்படையில் விற்கப்படும். விளம்பரதாரர்கள் அவ்விடத்துத் தம் விளம்பரங்களை ஒளிபரப்ப ஏற்பாடு செய்வர்.

Chalk plate : (குறியிடு தகடு) செதுக்கல்களை (engravings) ஆக்கும் பணியில் பயன்படுத்தப்படும் ஒரு தகடு.

Challenge : (அய்ய நிலை) நாளிதழுக்குச் செய்தி எழுதும் பணியில் ஒரு செய்திக் கதையின் அங்கீகாரம் குறித்து அய்யம் எழுமானால் அதுபற்றி அச்செய்திப் பிரிவு ஆசிரியரிடம் (desk chief) வினவி அதுபற்றிய அய்யத்தை நீக்கிக் கொள்ளல் வேண்டும்.

Chanda Committee and its recom-mendations : (சந்தா குழு மற்றும் அதன் பரிந்துரைகள்) வானொலிக்கும் தொலைக்காட்சிக்கும் அமைந்த சந்தா குழுவினர் மற்றும் அக்குழுவினரின் பரிந்துரைகள். பிரிட்டனில் இருப்பது போலவே இந்தியாவில் ஒலிபரப்பு ஆரம்பத்தில் தனியார் கையில் இருந்தது. தனியார் முயற்சி தோற்றுப் போனபோது அரசு மிகுதியும் விருப்ப மின்றி அவ்வுரிமையை எடுத்துக் கொண்டது. ஆனால் அன்றிலிருந்து ஒலிபரப்பு அரசின் ஏகபோக உரிமையாக இருந்து வருகிறது. ஒலிபரப்பு நிறுவனங்கள் தனித் தியங்குவது குறித்த பேச்சுக் களும் முயற்சிகளும் அவ்வப்போது தோன்றி மறைகின்றன.

திருமதி இந்திராகாந்தி செய்தி மற்றும் ஒலிபரப்பு அமைச்சராக இருந்தபோது டிசம்பர் 1964-இல் அசோக் கே.சந்தா என்பவரது தலைமையில் ஒரு குழுவை நியமித்தார். இக்குழு ஏப்ரல் 18, 1966-இல் ஒலிபரப்பு தொடர்பாகத் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. இக்குழு, 1) "இந்தியச் சூழலில் ஒலிபரப்பு போன்ற ஒரு படைப்பாக்கத் திறமையுள்ள தகவல் தொடர்பு சாதனத்திற்கு ஒரு வகுத்தமைக்கப்பட்ட துறையின் விதிகளுக்கும் ஒழுங்குக்கும் உட்பட்டு தழைத்தோங்குவது என்பது இயலாது. ஒரு நிறுவன மாற்றம் வந்தால் மட்டுமே AIR தற்போதைய அரசின் இறுக்கமான பொருளாதார மற்றும் நிர்வாக நடைமுறைகளிலிருந்து விடுதலை பெறமுடியும்" என்று கூறியது. மேலும் இக்குழு, 2) "ஆகாஷ்வாணிக்கும் தூர்தர்ஷனுக்கும் தனித்தனியான பொது கூட்டுரிமைக் குழுக்கள் நிறுவப்பட வேண்டும். வலிமை யூட்டுதல், நிதி நிர்வாகம், சிறப்புத் தேவைகளுக்குப் பொருந்தும் வகையிலான பணி விதிமுறைகள் உருவாக்க அனுமதிக்கப்பட வேண்டும்" என்று பரிந்துரைத்தது. 3) மேலும் "ஒவ்வொரு விவசாயப் பகுதிக்கும் தனித்தனி வானொலி அமைப்புக்களை உருவாக்க வேண்டும். நாடெங்கும் இது போன்ற 250 நிலையங்களை உருவாக்க வேண்டும்". என்றும் பரிந்துரைத்தது. " AIR கொள்கை யளவில் ஒரு தேசிய நாளிதழைப்போல அன்றன்று நடைபெறும் செய்திகளைத் துல்லியமாக வெளியிடச் சுதந்திரம் கொண்டதாக இருப்பினும் நடை

முறையளவில் இரு காரணங்களினால் அவ்வாறு அது செயல்படாமல் விட்டு விட்டது. அக்காரணங்கள் : 1) தொடர்ந்து வரும் அமைச்சர்கள் தலைமை இயக்குநரின் கொள்கை உருவாக்கச் செயலாக்க உரிமைகளைத் தட்டிப் பறித்துக்கொள்கின்றனர். நிகழ்ச்சித் திட்டமிடல், நிகழ்ச்சி வழங்கல் தொடர்பான செயல்களிலும் கூட தலையிடுகின்றனர். 2) நெறிப்படுத்தும் பணியாளர்களைத் தெரிந்தெடுத்தலும் அவர்களது அமைதியான உடன்பாடுகளை உறுதிப்படுத்தும் வகையில் நிகழ்கின்றது. இதன் விளைவாக AIR மீதான பொதுமக்கள் எண்ணம் கறை உடையதாயிற்று. அதன் நோக்கம் பாழானது. அதன் முனைப்பு மெல்ல மெல்ல ஒன்றுமில்லாமற் போனது" என்றும் இக்குழு சுட்டிக்காட்டியது. இக்குழுவின் பரிந்துரைகள் 1969 டிசம்பரில் பிரதம மந்திரி இந்திராகாந்தி தலைமையிலான அமைச்சால் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. AIRக்கும் தூர்தர்ஷனுக்கும் தனித் தனியாகத் தன்னியக்க அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்ற இக்குழுவின் பரிந்துரை ஏப்ரல் 1970-இல் பாராளுமன்றத்தில் நிராகரிக்கப்பட்டது.

Channel : 1. (செய்தி செல்லும் வழி), 2. (அலைவரிசை). 1) அடிக்கடி செய்தி செல்லும் பல வழிகள் அடங்கிய கட்டு : தகவல் தொடர்பில் செய்தி பரிமாறப்படுவதற்குப் பயன்படுத்தப்படும் கருவியை "Channel" என்பது குறிக்கும். இதன் வழியாகவே செய்தி அனுப்புபவரிடமிருந்து செய்தி பெறுபவருக்குச் செய்தி சென்று சேர்கிறது. தகவல் தொடர்பு சாதனங்களே கருவியாகச் செயல்படுகின்றன.

2) ஒலிபரப்பில் ஒலி செலுத்தப்படும் அமைப்பை இச்சொல் குறிக்கும். வானொலி அல்லது தொலைக்காட்சி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட அலை வரிசை. வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளில் குறிப்பிட்ட ஒரு நிலையத்தைப் பெறுவதற்கென அமைக்கப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட நிலை. சுருங்கக்கூறின் ஒரு அலை வரிசை என்பது ஒரு நிகழ்ச்சியை அனுப்புவதற்கான மின்காந்தவழி எனலாம். இவ்வமைப்பு பல இணைப்புக்களோடு செயல்படக் கூடியது : கூட்டுப் பணியாற்றும் கருவிகளின் கூட்டுத் தொகுப்பிற்குப் பயன்படுத்தப்படும் பொதுவான சொல் இது. ஒலிகளைக் கலக்கும் ஒரு அமைப்பில் ஒருபகுதி, மற்ற செய்தி ஆதாரங்கள் தரும் ஒலிகளுக்கு எதிராக, ஒரு செவிப்புல ஆதாரம் தரும் ஒலியை மட்டும் கையாள்கிறது. சான்றாக ஒலிவாங்கி (Microphone), ஒலிபெருக்கி (Amplifiers), ஒலி தேய்ப்பான் (fader), ஒலி வடிகட்டு அமைவு (filter) முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

Channel noise : (செய்திப் பரிமாற்ற வழிக் குறுக்கீடு) வானொலி நிலையமைவு, தகவல் தொடர்பில் ஏற்படும் தடை, தொலைக்காட்சித் திரையில் தோன்றும் மங்கல் தன்மை (fuzziness) போன்றவற்றால் ஒலி/ஒளிபரப்பில் செய்தி பெறுவதில் ஏதாவது தடை ஏற்படுவதைக் குறிக்கும், அச்சுச் சாதனத் தகவல் தொடர்பில் நாளிதழின் கறுப்படித்த செய்தி அச்சுக்கள், நூலின் கிழிந்த பக்கங்கள் முதலியன இத்தகையனவே.

Chapter opener : (அத்தியாய வாயில்) படிக்கப் போகின்ற பக்கங்களில் இடம்பெறப்போகும் செய்தி குறித்த சிறு விளக்க உரையைக் கொண்டு ஆரம்பிக்கும் பக்கம்.

Character generator : (எழுத்துரு வாக்கக் கருவி) தொலைக்காட்சித் திரை ஒன்றில் காட்டுவதற்காக எழுத்துக்களையும் எண்களையும்

மின்னணு முறையில் உற்பத்தி செய்யலாம். எழுத்துக்களின் (generator) வெளியீடு ஒரு காட்சிக் கலப்பு மேசையில் தோன்றும். அது படப்பிடிப்பு அரங்கின் வேலையளவாகவும் அமையலாம். அவ்வாறு தோன்றும் போது அது தரமான காட்சி மூலாதாரங் களாக அமைகின்றன. அவை ஒரு தட்டச்சுப்பொறி போன்ற பொத்தான் பலகை வடிவினால் கட்டுப்படுத்தப்படும். பல்வேறு வடிவ, அச்சு முகங்கள் உள்ளன.

Chase : (அச்சுறை) உலோகச் சட்டகம் ஒன்றனுள் அச்சுக்கோர்த்த செய்திப் பகுதிகளையும் செதுக்கல் களையும் (engravings) பொருத்து வதன் மூலம் ஒரு பக்க அமைப்பு உருவாக்கப்படுகிறது. அச்செழுத் துக்கள் வரிகளாக்கப்பட்டு வேண்டிய அளவில் பக்கங்களான பின்பு அச்சடிப் பதற்கு வசதியாக இச்சட்ட உறையில் வைத்து இறுக்கப்பட்டு இயந்திரப் பகுதிக்கு அனுப்பப்படும். இச்சட்டங் கள் இயந்திரங்களின் அளவிற்கேற்பத் தயாரிக்கப்பட்டிருக்கும்.

Check up : (சரி பார்த்தல்) அச்சுப் பிரதிகளில் அச்சுக் கோர்ப்புக் கண்காணிப்பாளர், பிழை திருத்து வோர் முதலியோர் சரிபார்த்துச் 'சரியே' என்பதைக் குறிக்கும் குறியீடு (✓) பிரதியில் எங்கெல்லாம் இருக்கிறதோ அப்பகுதி அச்சிடத் தகுதியானவை என்று பொருள்.

Children's programme : (குழந்தை களுக்கான நிகழ்ச்சிகள்) குழந்தை களுக்கு ஒளிபரப்பு நிகழ்ச்சிகளுக்கு எழுதும்போது சில உத்திகள் கையாளப்பட வேண்டும். கூறவரும் செய்தி நேரடியாகக் குழந்தை களுக்குச் சென்றுசேர வேண்டும். குழந்தை புரிந்து கொள்ளக் கூடிய வகையில் அதிகம் உரையாடல் இல்லாமல் அமைத்தல் நல்லது. நிகழ்ச்சியில் செயல்கள் (actions) இருப்பதோடு அவை தெளிவுடனும் உயிரோட்டத்துடனும் சிறந்த வண்ணங்களுடன் ஒளிமயமாகப் படைக்கப்பட வேண்டும். நாடகமாக இருப்பின் எளிமையான சிக்கல் இருப்பதாய் எழுதுதல் வேண்டும்.

Chimney : (குறுகிய அமைப்பு) ஒரு பக்கத்தில் ஒரு பத்தி அல்லது இரண்டு பத்திகளில் தொடக்கத்தில் இருந்து அடிமட்டம்வரை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கப்பட்ட கட்ட (block) வரிசை அல்லது விளம்பர வரிசை அல்லது சிறு தலைப்புகளைக் கொண்ட செய்தி வரிசை.

Chinnagraph : (நாடா அடையாளக் குறியிடு எழுதுகோல்) மஞ்சள் நிறமுள்ள ஒரு எழுதுகோல். நாடாவை வெட்ட அதன்மீது அடையாளம் செய்ய உதவும்.

Choosing the specific facts : (குறிப்பிட்ட செய்திகளைத் தெரிவு செய்தல்) ஒரு செய்தியில் உள்ள பொதுவான செயலைக் குறிப்பிட்ட செய்தியாகக் கொண்டு அதைத் தலைப்புச் செய்தியில் அமைத்தல் வேண்டும் என்பது தலைப்பிடுதலில் உள்ள பொது விதி. துல்லியமாகச் செய்திஎழுதுவதோடு பதிப்பித்தலின் போது குறிப்பிட்ட தகவல்கள் செய்தியில் விட்டுவிடப்படாமலும் கவனிக்க வேண்டும்.

சான்று : House Votes Huge sum
for Supersonic Plane

என்று எழுதலாம். 'Huge'என்பது விளக்கப்படவில்லை என நினைக்கும் ஆசிரியர்

House Votes a Billion
for supersonic Plane

என்று குறிப்பிட்டு எழுதுவார்.

Chroma : (வண்ணப் பண்பு) 'Chromakey' என்பதன் சுருக்கம். ஒரு மின்னணு வடிவத்தைச் செய்தி ஒளிபரப்பும் சாதனத்தின் பின் (பின்னணியில்) வைக்கும் ஒரு முறை. அம்மின்னணு வடிவம் தொலைதூர நிகழ்ச்சி ஒன்றன் நேர்முக அஞ்சல் பதிவாகவோ ஒரு இயங்கா நிழற்படமாகவோ ஒரு திரைப்பட மாகவோ அல்லது ஒளி (Video tape) நாடாவாகவோ இருக்கும். (பார்க்க : CSO).

Cicero : (அச்சு அளவு முறை) அச்சுக் களின் அளவைக் குறிக்கும் ஆங்கில முறை.

Circulation : (விற்பனை) பத்திரிகை யின் விற்பனை : விற்பனை எண்ணிக் கையும் வாசகர்களின் எண்ணிக் கையும் ஒன்றல்ல. வாசகர்களின் எண்ணிக்கை பத்திரிகையின் விற்பனையைப் போல் 5 மடங்கிற்கு மேல் இருக்கும். விற்பனை அடிப் படையில் பத்திரிகைகளை 3 வகை களாகப் பிரிப்பர். 25,000 பிரதிகள் வரை விற்பனவற்றைச் சிறு செய்தித்தாள்கள் என்றும் 25,001 முதல் 75,000 பிரதிகள் வரை விற்பவற்றை நடுத்தர செய்தித் தாள்கள் என்றும் 75,000 பிரதிகளுக்கு மேல் விற்பவற்றை மிகப்பெரிய செய்தித் தாள்கள் என்றும் அழைப்பர். நம் நாட்டில் 3,466 சிறு செய்தித் தாள்களும் 312 நடுத்தர செய்தித் தாள்களும் 112 மிகப்பெரிய செய்தித் தாள்களும் உள்ளன. இவை யாவுமாகச் சேர்ந்து மொத்தம் 6 கோடி பிரதிகள் வரை நம்நாட்டில் விற்பனையாகின்றன.

Circulation section : (விற்பனைப் பிரிவு) பத்திரிகையின் விற்பனையைக் கவனித்துக்கொள்ளும் பிரிவு. ஓரிதழ் எந்த அளவிற்கு விற்பனை ஆகிறது, மொத்தம் சுழலும் படிகளின் எண்ணிக்கை ஆகியவை இந்தப் பகுதியின் திறமையைச் சார்ந்து அமைகின்றன. இப்பிரிவில் மூன்று உட்பகுதிகள் செயல்படுகின்றன. நகரச் சுழல் பகுதி (city circulation) நாளிதழ் வெளியாகும் நகருக்குள் எவ்வளவு படிகள் விற்பனையாகின்றன என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கும். வட்டாரச் சுழல் பகுதி (Area circulation) நாளிதழ் குறுகிய காலத்தில் எல்லாப் பகுதிகளுக்கும் கிடைக்க ஏற்பாடு செய்கிறது. கணக்குப் பகுதி (Accounting Division) நாளேட்டின் எல்லாக் கணக்குளையும் கவனித்துக் கொள்கிறது.

Circus make-up : (வித்தைப் பக்க- அமைப்பு) சமநிலைப் பக்க அமைப்பு முறைக்கு எதிரானது இம்முறைப் பக்க அமைப்பாகும். இம்முறையில் எது எந்த இடத்தில் இருக்கும் என்று கூற முடியாது. அதிகமாகப் பரப்பி வைத்திருத்தல், பல பத்தித் தலைப்புக்கள், மிகுதியான கலைத் தன்மையுடன் கூடிய ஒரு அலங்காரம், தேவையானால்வண்ணம் போன்ற வற்றைப் பயன்படுத்திச் செய்யும் ஒரு பக்க அமைப்பு இது. எந்த ஒரு ஒழுங்கு முறைக்கும் அடங்காமல் இருப்பது இம்முறை. கணிக்கப்பட்ட கட்டுமீறிய ஒரு விளைவை உருவாக்கும் பொருட்டு மரபுவழிப்பட்ட பக்க அமைப்பு உடைக்கப்பட்டு மரபு வழியல்லாத இப்பக்க அமைப்பு முறை கையாளப் படுகிறது. இம்முறையைக் கலப்பு முறைப் பக்க அமைப்பு (Mixed make-up) என்றும் கூறுவார்கள்.

City desk : (நகர்ச் செய்திச் செய்தி மேசை) நகர்ச் செய்தி அறையின் நரம்பு மையம். நகர்ச் செய்தி ஆசிரியரின் தலைமையில் இப்பிரிவ இயங்கும்.

City editor : (நகர்ச் செய்தி ஆசிரியர்) இவர் நகர்ச் செய்திகளைச் சேகரித்து எழுதிப் பதிப்பிப்பவர். அமெரிக்காவில்

உள்ளூர்ச் செய்தி ஆசிரியர்களின் தலைவராக இவர் விளங்குகிறார். சில நாளிதழ்கள் இவரை 'Metropolitan Editor' என்று அழைக்கின்றன.

City news : (உள்ளூர்ச் செய்திகள்) 'லோக்கல் நியூஸ்' என்று சொல்லப்படும் உள்ளூர்ச் செய்திகள்.

City room : (செய்தி அறை) செய்திப் பிரிவு/பிரிவினர் பணியாற்றும் இடம் இதுதான். செய்தி அறை என்றும் குறிப்பிடப்படலாம். ஒரு நாளிதழின் தலையங்கப் பகுதி எழுதப்படுவது இங்குதான்.

Civil libel : (சமுதாயச் சட்ட அவதூறு) ஒருவரை வெறுப்பு, நகைப்பு, அவமதிப்பு முதலியவற்றிற் குட்படுத்தி அவரது சக மனிதர்களின் அவரைப்பற்றிய மதிப் பீட்டில் குறைவுபடுத்தி அதன் விளைவாக அவரை அவரது வியா பாரத்தில் அல்லது அவரைப்பற்றிய கணிப்பில் புண்படவும் வெட்கப்படவும் செய்யும் எந்த ஒரு செய்தியும் அவதூறு எனப்படும். ஒருவரை வாய்மொழி மூலம் இழிவுபடுத்துவது வாய்மொழி அவதூறு (scandal) என்றும் எழுத்தின் மூலம் அவமதிப்பது எழுத்துமொழி அவதூறு (Libel) என்றும் கூறப்படுகிறது. எழுத்தின் மூலம் அவமதிப்பது சட்ட வழக்கிற் குட்பட்டது. அவதூறுக் குள்ளாக்கப்பட்டிருப்பதாகக் கருதுபவர் தான் தாக்கப்பட்டதற்கெதிராக மானநட்ட ஈடு கோரும் சூழல்கள் உண்டு. அவதூறு வழக்கு சமுதாயவியல் சட்ட அடிப்படையிலும் (Civil law) குற்றவியல் சட்ட (Criminal law) அடிப்படை யிலும் தொடரப்படலாம். சமுதாயவியல் சட்ட அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டிருப்பவர் அவதூறுக் குள்ளானவருக்கு ஏற்பட்ட மான நஷ்டத்தை ஈடுசெய்யும் வகையில் கணிசமான அளவு நஷ்ட ஈட்டைச் செலுத்துமாறு தண்டிக்கப்படுவார். சமுதாயவியல் சட்ட வழக்கில் அவதூறு நிருபிக்கப்பட்டுவிட குற்றம் சாட்டப்பட்டிருப்பவருக்குச் சட்டத்தின் பாதுகாப்புச் சலுகைகள் உதவாத நிலையில் ஈடுகட்ட வேண்டிய நட்ட ஈட்டுத் தொகையைத் தானே ஒப்புக்கொண்டு அவதூறு எழுதியவர் தருவார். இங்கு அவதூறுக்கு உள்ளானவர் தனது இழப்பு எவ்வளவு என நிரூபிக்க வேண்டும்.

Clarke Belt : (செயற்கைக்கோள் நிலைப்படு இடம்) நிலநடுக் கோட்டுக்கும் மேல் 22,300 மைல் களுக்கும் அப்பால் செயற்கைக் கோள்கள் நிலையாக வைக்கப் பட்டிருப்பது போல் தோற்றமளிக்கும் நிலை ; பிரிட்டிஷ் அறிவியல் எழுத்தாளர் ஆர்தர் சி.கிளார்க் ஒலிபரப்பில் செயற்கைக் கோள்களின் பயன் பாட்டை மிகுதியும் ஆதரித்ததால் இந்நிலை அவர் பெயரிலேயே அழைக்கப்படுகிறது.

Classical music programme : (செவ்வியல் இசைநிகழ்ச்சிகள்) ஒலிபரப்பிலும் ஒளிபரப்பிலும் இடம் பெறும் சாஸ்திரிய சங்கீத நிகழ்ச்சிகளைக் குறிக்கும்.

C & lc : (தலைப்பெழுத்து மற்றும் சிற்றெழுத்து குறித்த செய்திப்படிக் குறியீடு) தலைப்பெழுத்துக்கள் (Caps), சிற்றெழுத்துக்கள் (lower case) ஆகியவற்றை இன்னின்ன இடங்களில் பயன்படுத்துக என்பதைக் குறிக்கும் செய்திப்படிக் குறியீடு.

Clean copy : (தெளிவான எழுத்துப்படி) சில திருத்தங்கள் மட்டுமே செய்யப்பட வேண்டிய எழுத்துப்படி.

Clean feed : (தெளிவு ஊட்டு) இரு அரங்குகளின் செய்தி அனுப்பும் செயல்

(கருத்துப் பரிமாற்றம்) ஒரே நேரத்தில் நடைபெற்றால் அதற்கென உரிய முக்கியமான வசதியே 'தெளிவு ஊட்டு' ஆகும். இவ் ஏற்பாட்டு முறை ஒவ்வொரு அரங்கிலுமுள்ள ஒலி பெருக்கி எதிர் அரங்கிலிருந்து வரும் ஒலியைத்தான் திரும்ப வெளியே தருகிறது என்னும் உறுதியளிக்கிறது. இதனால் தேவையற்ற மிகைப் படுத்தல்கள் தவிர்க்கப்படலாம்.

Clean proof: (தெளிவுப் பிழை திருத்தப் பிரதி) சில திருத்தங்கள் மேற் கொள்ளப்பட வேண்டிய பிழைதிருத்தப் பிரதி.

Clean tape : 1. (தெளிவு நாடா), 2. (தானியங்கு அச்சியந்திரங்கள்). சரியாக்கப்பட்ட தானியங்கு அச்சியந்திரங்களை இயக்குவதற்கான நாடா. நாடாவின் உதவியுடன் இயங்கும் அச்சியந்திர அமைப்பிற் குரிய வியாபாரப் பெயரும் ஆகும்.

Climax : (உச்சக்கட்டம்) ஒலி/ ஒளிபரப்பு நிகழ்ச்சியின் இறுதிக்கு அல்லது தீர்வுக்குச் சற்று முன்னர் உணர்ச்சியைத் தூண்டும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் பரபரப்புச் சூழல் உச்சக்கட்டம் எனப்படும். சான்றாக ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் பேட்டி நிகழ்ச்சியை முடிப்பதற்கு முன்னர் முக்கிய வினா ஒன்றைக் கேட்டல் அவ்வினாவையும் பதிலையும் வாசகன் மறக்காதிருக்க உதவும்.

Clip : 1. (துண்டு), 2. (துணுக்கு). 1) 'Clipping' என்ற ஆங்கிலச் சொல்லின் சுருக்கக் குறியீடு. வெளியீட்டிலிருந்து தனியே வெட்டி எடுக்கப்பட்ட தலையங்கம், பிற செய்திகள் போன்றன. ஒரு நாளிதழிலிருந்து இவ்வாறு தனித்து எடுத்துத் தரப்படும் துண்டு ஒரு 'Cutting' என்று குறிக்கப்படும். 2) ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் நிகழ்ச்சிகளுக்கு இடையே தரப்படக் கூடிய ஒரு துணுக்கு அல்லது விளம்பரம் கொண்ட பதிவு. ஒரு திரைப்படம் அல்லது வேறு ஒளிபரப்பு நிகழ்ச்சியிலிருந்து சுருக்கி எடுக்கப்பட்டு பொதுவாக மற்றொன்றில் செருகப்படும் ஒரு பகுதி. வழக்கமாக, ஒன்றிலிருந்து இன்னொன்றில் செருகப்படும் பகுதி.

Clip sheet : (துண்டுத் தாள் அல்லது துணுக்குத் தாள்) வழக்கமாக அச்சிடப்பட்டிருக்கும் பொது விளம்பரச் செய்தியை அல்லது செய்திக் கதையைக் கொண்டிருக்கும் ஒரு தாள் துண்டுத்தாள் எனப்படும். கம்பி வழிப்பணிகள் (Wire services) மற்றும் பொது விளம்பர அலுவலகங்கள் இத்தகைய துண்டுத்தாள்களை வெளியிடுகின்றன.

Closed circuit : (மூடு செய்திச் சுற்று) அனுப்பப்படாத அல்லது ஒலிபரப்பப் படாத ஒன்று. மிகச்சில குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டுமே பகிர்ந்தளிக்கப் பட்ட அல்லது தரப்பட்ட ஒரு நிகழ்ச்சி.

Closed circuit TV : (மூடு செய்திச் சுற்றுத் தொலைக்காட்சி) கம்பிவழித் தொலைக்காட்சி : ஓர் அறையில் நடக்கும் காட்சியை ஒரே கட்டிடத்தில் உள்ள பல அறைகளுக்கும் கம்பி மூலம் எடுத்துச் சென்று காட்டுவது.

Closed end questions : (ஆம்/ இல்லை என பதில் வரக்கூடிய வினாக்கள்) பேட்டி நடத்துவதில் உள்ள பொது விதிகளுள் ஒன்று ஆம்/ இல்லை என்ற பதில் வரக்கூடிய வினாக்களைக் கேட்பது நல்லதல்ல என்பது. பொதுவாக அரசியல் தலைவர்கள் ஆம்/இல்லை என்று பதில் வரக்கூடிய வினாக்களுக்குச் செவிசாய்க்க மாட்டார்கள். குறைந்த அனுபவமுள்ளவர்கள் பேட்டி

தரும்போது ஆம்/இல்லை என்ற பதில் தருவர். எனவே பேட்டி நடத்துபவரே ஏன், என்ன, எப்படி என்ற முறையில் கேள்வியை அமைக்க வேண்டும். பேட்டி இறுதியில் குறிப் பிட்ட நேரத்தில் சரியாக முடிப்பதற்காகவும் ஒரு தலைப்பிலிருந்து அடுத்த தலைப்பிற்கு நகர்ந்து செல்லவும் இத்தகைய கேள்விகளைப் பயன் படுத்தலாம்.

Close-up shot : (அருகாமைக் காட்சி) ஒளிபரப்பு நிகழ்ச்சிகளில் காமிரா வுக்கும் படம் எடுக்கப் படும் நபருக்கும் இடையில் உள்ள தூரத்தைக் குறிக்கும் வண்ணம் 'இன்ன படக்காட்சி' (Shot)என்று எடுக்கப்பட வேண்டிய காட்சியின் தன்மை குறித்து வடிவமைப்புத் திட்டத்தில் (layout) செய்தி அல்லது நிகழ்ச்சி எழுதுபவர் குறிக்க வேண்டும். அவ்வாறு குறிக்கப்படும் படக்காட்சிகளுள் ஒன்று 'அருகாமைக் காட்சி'. இக்காட்சி ஊடுருவிச் செல்லும் அருகாமைக் காட்சியுடைய படப்பிடிப்பு உடையது ஆகும். இக்காட்சிகள் பொதுவாக, காட்டப்படும் நபரது தலை, அல்லது தலை மற்றும் தோள்கள் அல்லது ஒரு பொருளின் நெருக்கமான தோற்றம் என்று அமைவதால் நேயருக்குக் காட்சியோடு ஒரு அண்மை உணர்வை ஏற்படுத்துகின்றன. கதை தொடர்பான நிகழ்ச்சிகளில் மிகவும் வலியுறுத்தும் காட்சி இது. மிக அருகில் பொருளைக் கவனித்துப் பார்க்க இக்காட்சி உதவும். நிகழ்ச்சியின் கருத்தோடு மிகுதியும் ஒன்றவைத்து நிகழ்ச்சிக் கருத்தைத் தருகிறது. பொருளோடு நெருங்கும் விருப்பத்திலிருந்து நாம் தப்பித்துக் கொள்வதைத் தவிர்த்து அக்காட்சி யுடன் நெருக்கப்படுகிறோம். நேயர் மன அளவில் விழிப்புணர்வு பெறுவதால் நேயரிடம் ஆழ்ந்த பாதிப்பு ஏற்படுத்து கிறது. இப்படப்பிடிப்பு 'இறுக்கமான காட்சி' (tight shot) என்றும் அழைக்கப் படுகிறது. இக்காட்சி என்ன காட்டப்படுகிறதோ அதன் பாதிப்பை நேயரிடம் அப்படியே ஏற்படுத்துகிறது. இதில் சூழலைக் கவனத்தில் கொள்ளாமல் ஒரே கருத்தின் மீது அல்லது ஒன்றன் மீது கவனம் செல்கிறது. இக்காட்சியின் முதல் நோக்கம் பாத்திரத்தின் உணர்ச்சியை மிக அருகில் காட்டுதல், ஒரு பொருளை மிக அருகில் காட்டுதல் முதலியனவே ஆகும். காட்சி வாயிலாகக் கதை சொல்வதற்கு இக்காட்சி சிறப்பாகப் பயன்படும். பாத்திரத்தின் அருகாமை உணர்ச்சி, தொலைபேசி மணி அடித்தல், ஒரு பாத்திரம் அதை எடுத்தல், மேசை இழுப்பறை ஒன்றை ஒரு பாத்திரம் இழுத்தல், அதில் சில விளக்கங்கள் இருத்தல், சுவர்க் கடிகாரம் குறிப்பிட்ட நேரம் காட்டுதல் போன்ற காட்சிகளை அருகாமையில் காட்டுதல் இக்காட்சியின் நோக்கம் ஆகும். இத்தகைய அருகாமைக் காட்சிகள் கதைப் பின்னலை மேலும் வளர்த்துச் செல்லும். ஒளிபரப்பு நிகழ்ச்சிகளில் சலவைக் கட்டி விளம்பரங்களில் இத்தகைய காட்சிகள் சலவைக் கட்டியின் குறிப்பிட்ட வண்ணம், வடிவம் முதலியவற்றை மீண்டும் மீண்டும் அருகாமையில் காட்டும்போது மக்களை ஈர்ப்பதன் விளைவாக விளம்பரத்தின் நோக்கம் நிறைவேறுகிறது. இத்தகைய காட்சிகள் கதை நிகழ்ச்சிகளில் கதையுடன் ஒரு நெருக்கத்தை உண்டு பண்ணி விடுகின்றன. மிகவும் அடிக்கடியோ அல்லது மிக நீண்ட நேரமோ அருகாமைக்காட்சி பயன் படுத்தப்பட்டால் உணர்ச்சிபூர்வமான தாக்கம் நிகழ்ச்சியில் குறைந்துவிடும். 'வெகு அருகாமைக் காட்சி' (Extreme close up) என்று குறிப்பிட்டிருந்தால் நபரின் முகத்தை மட்டுமே காட்டுதல் அல்லது பொருளின் குறிப்பிட்ட பகுதியை மட்டுமே காட்டுதல் வேண்டும் என்பது பொருள்.



Closing (or) close : (முடித்தல் அல்லது முடிவு) ஒரு இதழ்ச் செய்தியின்/ ஒரு செய்தி ஒளிபரப்பின் பொதுவான முடிவுக் கூறு.

Closing date : (இறுதித் தேதி) ஒரு இதழில் விளம்பரங்களை வெளியிட வேண்டுமானால் அவ்விளம்பரம் அக்குறிப்பிட்ட இதழில் வெளி வருவதற்கு என்று விளம்பரத்தை நாளிதழ் அலுவலகத்தில் கொடுக்க வேண்டிய கடைசித் தேதி இது என நாளிதழ் அலுவலகம் நியமித்திருக்கும் தேதி.

Coated paper : (பூச்சுத்தாள்) எனாமல் பூச்சு கொடுக்கப்பட்ட ஒருவகைத் தாள். இத்தாளில் நல்லமுறையில் படங்கள் அச்சில் விழவேண்டுமானால் ஒரு வளவளப்பான பூச்சு தேவை.

Coaxial cable : (தந்தி வடஇணைவு கேபிள்) அதிக எண்ணிக்கையுள்ள மின் கம்பிக்கடத்திகளை உள்ளடக்கிய நீள தாமிரக் குழாய்களைக் கொண்ட கேபிள். இது தனிப்படுத்தப்பட்ட வட்டத்தகடு ஒன்றால் நிறுவப்படும். இதனால் தொலைக்காட்சிச் சமிக்ஞைகள், தொலைபேசி, தந்திச் செய்திகள் முதலியவற்றை ஒரே நேரத்தில் பரப்ப முடியும்.

COBOL : (கணிப்பொறி மொழிவகை) "Common Business Oriented Language" என்பதன் முதலெழுத்துச் சுருக்கம். கணிப்பொறி மொழியின் ஒருவகையான COBOL கணிப்பொறி யில் வணிகப்பணிகளுக்கென அடிக்கடி பயன்படுத்தப்படும் மொழி. உலக வணிகங்களில் விரும்பிப் பயன்படுத்தப் படுகிறது. பொதுவான வியாபார ரீதியான மொழியிலிருந்து உண்டாக் கப்பட்ட ஒன்று : இதன் பயன் என்னவெனில் அது நிகழ்ச்சி தருபவரை ஆங்கிலம் போன்ற மொழியைப் பயன்படுத்த அனுமதிக் கிறது. அத்தகைய மொழி பயன்படுத்தப் படுவதனால் உடனே கணிப்பொறி மொழியாக COBOL தொகுப்பான் அல்லது COBOL மொழிபெயர்ப்பான் உதவியுடன் மொழிபெயர்க்க முடியும்.

Code words: (சங்கேதச் சொற்கள்) தகவல் தொடர்பில் சில சங்கேதச் சொற்கள் திட்டவட்டமாகக் கருத்தைத் தெரிவிக்கும்வகையில் பயன்படுத்தப்படுகின்றன. சான்றாக, மருத்துவமனைகள் நோயாளியின் உடல்நிலை குறித்துப் பத்திரிகை யாளர்களுக்குத் தெரிவிக்க என்றே சில சொற்களைப் பயன்படுத்து கின்றன. ஆங்கிலத்தில் 'grave', 'serious', 'stable', 'good' போன்ற சொற்கள் இவ்வகையில் சான்றாகச் சுட்டப் படலாம். இவை அர்த்தமுள்ள குழூஉக் குறிகளாகும். இத்தகைய சங்கேதச் சொற்கள் கருத்தைத் துல்லியமாகவும் சுருக்கமாகவும் தெரிவிக்கின்றன.

Cold open : (நிகழ்ச்சியின் இறுக்கமான திட்டமிட்ட ஆரம்பம்) கேட்போரை/பார்ப்போரை உறைய வைக்கும் ஆரம்பத்தை நிகழ்ச்சியின் ஆரம்பமாகக் கொண்டு ஒலி/ஒளி பரப்பு நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டால் நேயர்களின் கவனம் வெகுமாக ஈர்க்கப்படும். எல்லா நிகழ்ச்சிகளுக்கும் இத்தகைய ஆரம்பங்கள் கையாளப் படுகின்றன. தெரிந்தெடுக்கப்பட்ட விறுவிறுப்பான ஆரம்பத்தைப் போட்டு விட்டு அதன்பின் நிகழ்ச்சி தொடர் பானோர் பெயர்கள், நிகழ்ச்சியின் தலைப்புக்கள் முதலியவற்றைப் போடுதல் இவ்வகையாகும். இப்பகுதி ஆர்வமூட்டுவதாகவும் நிகழ்ச்சி ஆரம்பித்துச் சற்றுநேரம் கழித்துத் தொலைக்காட்சியை ஒளிரச் செய்பவர்கள் பார்க்காமல் விட்டுவிடக் கூடியதாக இல்லாமலும் அதாவது நிகழ்ச்சியில் பின்னர் இடம்பெறும் ஒரு கூறாகவும் எளிதில் புரிந்துகொள்ளக்

கூடிய காட்சியாகவும் இருத்தல் வேண்டும்.

சான்று : பல தமிழ்த் திரைப்படங்களில் கதைத் தலைவனின் தாய் தந்தையர் எதிர்நிலைப் பாத்திரத்தால் கொலை செய்யப்படுவதை ஆரம்பக் காட்சி யாகக் காட்டி அதன்பின்னர் தலைப் பெழுத்துக்கள் போடும் முறை உண்டு. திரைப்படத்தில் பின்னர் ஒருமுறை இக்காட்சி தலைவன் நினைத்துப் பார்ப்பதாக இடம்பெறும்.

Cold type : (குளிர் அச்செழுத்துக்கள்) உருக்கி வார்க்கப்படக் கூடிய உலோகத்தால் செய்யப்படாத எந்த அச்செழுத்துக்களும் இவ்வகைப்படும்.

Collage: (பல்கூறு இணைப்பு) ஒரு செய்தி ஒளிபரப்பில் பல படங்கள், செய்தித் தலைப்புக்கள் அல்லது அச்சிடப்பட்ட செய்திக் கதைகள் முதலியன ஒரே அட்டையில் ஒட்டப்பட்டுக் காட்டப்படும் உத்தி Collage எனப்படுகிறது.

Colon : (அரைப்புள்ளி) செய்தி எழுதும்போதும் அரைப்புள்ளிகளைப் (:) பயன்படுத்தி எழுதுவது உண்டு. இதனைப் பயன்படுத்துதல் சிறப்பான பயன் விளைக்கும். இவை இடத்தை மிச்சப்படுத்த உதவும். சில அடுக்குத் தலைப்புக்கள் அரைப்புள்ளிகளைப் பயன்படுத்துகின்றன.

சான்று :

ஜெயலலிதா பிறந்த நாள் :
கைதிகளுக்கு பொங்கல்
அ.இ.அ.தி.மு.க.வினர் வழங்கினார்கள்.
(தினத்தந்தி 5.2.95 பக். 9)

Colour : (வண்ணம்) 1) ஒரு செய்திக் கதையில் குழப்பம் விளைவிக்கும் கூறுகளை அறிமுகப்படுத்துவது ஒரு செய்திக் கதையை ஒளியூட்டுதல் எனப்படும். 2) மனிதநேயச் செய்திக் கூறுகளைக் கொண்டு ஒரு செய்திக் கதையினை ஒளிமிக்கதாக்குதலும் ஒரு செய்திக் கதையை வண்ணமய மாக்கல் எனப்படும். அத்தகைய செய்திக்கதை ஒரு வண்ணக் கதை எனப்படும்.

Colour seperation : (வண்ணப் பிரிப்பு) ஒரு முழுவண்ண உருவத்தில் வடிகட்டும் திரையைப் பயன்படுத்தி மஞ்சள், நீலம், சிவப்பு ஆகிய முதன்மை வண்ணங்களையும் கறுப்பு வண்ணத் தையும் வண்ண அச்சீட்டிற்கான தனித்தனித் தகடுகள் செய்வதற்காகப் பிரித்தெடுப்பது இம்முறை ஆகும்.

Column : (செய்திப் பத்தி) 1) ஒரு செய்தித்தாளின் பக்கத்தில் மேலிருந்து கீழாக அமையும் நெடுக்கு வெட்டுப் பகுதி 'பத்தி' எனப்படும். பொதுவாக $10\frac{1}{2}$ முதல் 15 பைகா 'எம்'கள் அகலம் கொண்டதாக செய்திப் பத்திகள் அமையும். ஆங்கிலத்தில் 'Col.' என்று சுருக்கிக் கூறுவர். 2) நாளிதழில் அல்லது மாத இதழ்களில் குறிப்பிட்ட பத்தியில் குறிப்பிட்ட ஒரு எழுத்தாளர், குறிப்பிட்ட ஒரு தலைப்பில் தொடர்ந்து எழுதும் பகுதி. ஒரு இதழில் வெளி வருவது முந்தைய இதழின் தொடர்ச்சி யாக இருக்க வேண்டிய தில்லை.

Column inch : (விளம்பர இட அளவு அல்லது பத்தி அகலம்) சிறு நாளிதழ்கள் விளம்பரத்திற்கெனப் பொதுவாக ஒதுக்கியுள்ள இட அளவு ஆகும். ஒரு பத்தி அளவு அகலமும் ஒரு அகல உயரமும் கொண்டது இவ் அளவு.

Column rule : (பத்திக் கோடு) நாளிதழ்களில் மேலிருந்து கீழாகப் பத்திகளைப் பிரிப்பதற்கெனப் (ஒரு பத்தியிலிருந்து மற்றொரு பத்தியைப் பிரித்துக் காட்டுவதற்கு) பயன் படுத்தப்படும் மெல்லிய கோடு. பொதுவாக 1 புள்ளி அல்லது $\frac{1}{2}$ புள்ளி அகலம் கொண்டதாக அமையும். தற்போது அருகிப் பயன்படுத்தப் படுகிறது.

Commag : (காந்த அமைப்பு முறை ஒலிப்பதிவு)ஒரு காந்த நாடா மீது ஒலியைப் பதிவு செய்வதற்காக இணைக்கப்பட்டுள்ள காந்த அமைப்பு. நிகழ்ச்சித் தயாரிப்பின்போது படச் சுருளின் ஒரு முனையுடன் இணைக் கப்பட்டிருக்கும். ஒலிப்பதிவின் தனி முறை என்றும் அழைக்கப்படுகிறது. தொலைக் காட்சிச் செய்தி நிகழ்ச்சி களில் இத்தகைய ஒலிப்பதிவு முறை இப்போது அருகிக் காணப் படுகிறது.

Commands : (ஆணைகள்) கணிப்பொறி மூலம் தயாரிக்கப்படும் அச்சுத் தயாரிப்பில் காட்சிப்படங் காட்டி இயக்குநர் 'கணிப்பொறிக்கு இன்னதைச் செய்' எனக் கொடுக்கும் ஆணை. இதற்கெனவே சில பொத்தான்கள் கணிப்பொறியில் உள்ளன. தொடர்ந்த ஆணைகள் கணிப்பொறியை ஒரு செயலை மேற்கொள்ளக் கட்டாயப் படுத்துகின்றன.

Commas : (காற்புள்ளி) நாளிதழ் களுக்குச் செய்தி எழுதும்போது காற்புள்ளிகளைப் பயன்படுத்தி எழுதுதல் பல்வேறு பயன்களைக் கொண்டுள்ளன.

சானறு :

இலஙகையில் போா நிறுத்தம் :

வெளிநாட்டுப் பிரதிநிதிகள்,
பிரபாகரனுடன் சந்திப்பு
(தினத்தந்தி 6.2.95, ப. 6)

Commentators : (வர்ணனை யாளர்கள்) ஒலி/ஒளிபரப்பு நிகழ்ச்சி களுக்காக விளையாட்டு நிகழ்ச்சிகள், சமய நிகழ்ச்சிகள் போன்று நேரடியாய் நடப்பதை அப்படியே வர்ணிப்பவர் : முக்கிய மான தலைவர்களது இறப்பு ஊர்வல நிகழ்ச்சிகளை வர்ணிப்பவரும் உண்டு.

Commercial : (வணிக விளம்பரங்கள்) சிறிதளவு தகவல்களை மட்டுமே முதன்மையாகக் கொண்டு அமைக்கப் படும் ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் அறிவிப்புக் கள் எனப்படும். அவை : 1) வணிக விளம்பர அறிவிப்புக்கள் (Commercial advertising announcements). இவை பொதுவாக 'Commercial' என்று அழைக்கப் படுகின்றன. 2. பொதுச் சேவை விளம்பரங்கள் (The Public service announcements). இவை 'PSA' என்று சுருக்கிக் கூறப்படும். 3. உயர்வு நோக்கிலான விளம்பரம் (Promotional announcements). இவை Promo எனவும் கூறப்படும். வணிக நோக்கிலான விளம்பரங்கள் என்ற பொருளில் 'Spot' என்ற சொல்லும் கையாளப்படுகிறது. இரண்டு வினாடிகள் இன்ன நிலைய ஒலிபரப்பு என இனங்காணும் வகையில் நிலைய அடையாளக் குறிப்பு அமைய லாம். அதனுடன் சேர்ந்து 8 வினாடி களுக்கு நிலையத்தின் அறிவிப்புக்கள் வரலாம். பொதுவாக $\frac{1}{4}$ மணி நேர நிகழ்ச்சி 10−12 மணித்துளிகளும், $\frac{1}{2}$ மணி நேர நிகழ்ச்சி 21−24 மணித் துளிகளும் 1 மணிநேர நிகழ்ச்சி 42−49 மணித் துளிகளும் வருமாறு அமைக்கப்பட லாம். மீதி நேரத்தில் விளம்பரங்களை அமைத்துக் கொள்ளலாம். அமெரிக்காவில் தேசிய ஒலிபரப்பாளர் கழகம் (National Association of Broadcasters) வணிக விளம்பரங்கள் தொலைக்காட்சி ஒளிபரப்பில் முதன்மை நேரம் (Prime Time) அல்லாத நேரத்தில் ஏறக்குறைய 16 நிமிடம் வரை இருக்கலாம் என விதித்துள்ளது. மிக மோசமான வணிக விளம்பரம் கூட அடிக்கடி பயன்படுத்தப் படும்போது எதிர்பார்க்கும் நோக்கத்தை நிறைவேற்றிவிடுகிறது என்ற கருத்தும் உண்டு. மோசமான விளம்பரங்களுள் சில பொதுவாக நமது கலை உணர்வு களைப் புண்படுத்து கின்றன. சில நமது தத்துவார்த்த அறிவ

சார்ந்த கருத்துக்களை எள்ளுகின்றன. சில விளம் பரங்கள் குறிப்பிட்ட பொருளை வாங்க முடியாதவர்களின் உணர்வோடு விளையாடுகின்றன. நல்ல முறை யிலமைந்த விளம்பரங்கள் பொதுவாக தரப்படும் நிகழ்ச்சியைவிட கலைநயத்துடன் இதமாக இருக் கின்றன. விளம்பரப்படுத்தப்படும் பொருள் பற்றி அதிகச் செய்திகளை நமக்கு அறிவிக்கின்றன. எல்லா வணிக நோக்கு விளம்பரங்களும் ஒரு பொருள் அல்லது ஒரு பணி அல்லது ஒரு கருத்து ஆகியவற்றை விற்பதற்காக வடிவ மைக்கப்பட்டவை. இவ்விளம்பரங்கள் ஒலிபரப்பு நிறுவனங் களுக்கு நிதிநிலை வளத்திற்கு உதவுபவை.

அறிவிப்புக்கள் (announcements) இலாபம் கருதியவை அல்ல. தம் கருத்து, பொருள், சேவை முதலிய வற்றை அறிவிக்கும் பொருட்டு இலாபம் எதுவும் கருதாமல் தனது நேரம், சக்தி, பணம் முதலியவற்றைச் செலவழித்துச் செய்யப்படுபவை. ஆனால் வணிக விளம்பரம் தனது பொருள், பணி முதலியவற்றை இலாபம் கருதி விற்கின்றன. சில விளம்பரங்கள் நேரடியாக அவற்றிற்கென விளம்பர நிறுவனம் பணம் தருவதில்லை யெனினும் நேரடியான வணிக விளம்பரங்களை ஒத்தவை. சான்றாக, நிலையமே தனது நிலையத்தின் சிறப்பான தயாரிப்பு ஒன்று குறித்துத் தரும் விளம்பரத்தைக் குறிப்பிடலாம். அறிவிப்புக்களுக்கும் வணிக விளம்பரங் களுக்கும் இடையே உள்ள மற்றொரு வேறுபாடு அவற்றின் நீளம் ஆகும். வணிக விளம்பரங்கள் 20-30-60 வினாடிகள் ஒளிபரப்பப்படுபவை. அவற்றிலும் சில 10 வினாடிகள் மட்டுமே வருமாறு அமையும். ஆனால் அறிவிப்புக்கள் 10 வினாடிகள் அல்லது அதைவிடக் குறைவாக அமையும்.

வணிக விளம்பரத்தின் நோக்கம் அடிப்படைத் தயாரிப்பு, சோதித்துக் கொள்ளல், துணிந்து எழுதுதல் போன்றவற்றைக் கொண்டிருக்கும். பார்பரா ஆலன் என்பவர் வணிக விளம்பரம் தயாரிக்கும் முறைகளாக 1) பொருளை அல்லது பணியைத் தெரிந்து கொள்ளல், 2) இப்படி விளம் பரப்படுத்தினால் விற்கும் என்ற மையக்கருத்தைக் கண்டுபிடித்தல். 3) நேயர்களைக் கவரும் கவர்ச்சியூட்டி (appeal) இன்னது என இனங்காணல் 4) வடிவத்தைத் தெரிந் தெடுத்தல் 5) எழுத ஆரம்பித்தல் முதலியவற்றைக் குறிப்பிடுவார். விளம்பர முறைகள் பின்வருமாறு அமையலாம் : **1) நேரடி விற்பனை விளம்பர முறை (Straight sell)** பொருளைப் பற்றி தெளிவான எளிமையான கூற்றைக் கொண்ட தாகவும் கூறுவோருக்கும் பொரு ளுக்கும் இடையே வலுவான தொடர்பு உடையதாகவும் (என் பொருள், என் அங்காடி போன்ற சொற்கள் தவிர்க்கப்பட்டதாகவும்) மக்களிடம் செல்வாக்குப் பெற்ற நபர் பொருளைப் பாராட்டி விளக்கிச் சொல்வதாகவும் (testimonial & straight sell) உத்தி அமையுமாயின் அது நேரடி விற்பனை விளம்பர முறை எனப்படும். இம்முறை நல்ல பாதிப்பை உண்டாக்கும். தொடரும் எளிமை ; பொருளும் எளிமையாக விளங்கக் கூடியது : சுருக்கமாகக் கவர்ச்சியுடன் கூறும் முறையும் (gimmick) அமைகிறது. பொருளின் இயல்புத்தன்மை, சிறப்புத்தன்மை, குறிப்புத்தன்மை முதலியன விளக்கப்படலாம். **2) பாராட்டு விளம்பர முறை (The testimonial) :** இம்முறை சரியாகப் பயன்படுத்தப்பட்டால் சிறப்பாக அமையும். நன்றாகத் தெரிந்த நபர் ஒருவர் (சராசரி நேயர்களைவிட சமுதாய அளவில் பொருளாதார நிலையில் சிறிதளவாவது உயர்ந்தவர்) அப்பொருளைப் பற்றிச் சான்று

கூறினால் உணர்ச்சிபூர்வமாக அப்பொருள் குறித்து உந்துதல் பெறுதல் நிகழும். அதுவே விளம்பரதாரருக்கும் தொலைக்காட்சி நிலையத்தாருக்கும் வருமானம் பெறுவதற்கு மிக முக்கியமானதாகிறது. அதன் விளைவாக விளம்பரதாரர்களின் தேவைகளே மிக முக்கியம் வாய்ந்த தூண்டுதலாகித் தொலைக்காட்சியின் உள்ளடக்கத்தையும் வளர்ச்சியையும் நிர்ணயிக்கின்றன. நாளிதழ்களையும் இதழ்களையும் பொறுத்தவரை விளம்பரம் மூலம் வரும் வருவாய் வளர்ச்சி, நாளிதழ்களை அவை பொருளாதாரம் காரணமாக அரசியல் கட்சிகள், அரசு முதலியவற்றைத் தாம் சார்ந்திருக்க வேண்டிய நிலையிருந்து விடுவிக்கிறது.

Communication : (கருத்துப் பரிமாற்றம்) கருத்துப்பரிமாற்றம் என்பது சமூக நிகழ்ச்சி. கருத்துப் பரிமாற்றத்தின் மூலம் செய்தி கூறுபவர் தான் கூற வரும் கருத்தைக் கேட்போருக்குக் கூறுவதோடு தாம் கூறும் கருத்து தொடர்பான கேட்போரது கருத்துக்களையும் அவரிடமிருந்து வெளிக் கொணர்கிறார். இதற்குச் சில குறியீடுகள் பயன்படுகின்றன. தகவல் தொடர்பு சாதனங்கள் கருத்துப் பரிமாற்றத்தைத் திறம்பட மேற்கொள்ளுகின்றன. தாம் தெரிவிக்க விழையும் செய்திகளைத் தெரிவிப்பதுவே இவற்றின் நோக்கம் ஆயினும் செய்தி பெறுபவர் அவை குறித்த கருத்துக்களை வெளியிடுவதிலும் கவனம் கொள்ளுகின்றன. வானொலி கருத்துப் பரிமாற்றம் என்பது ஓர் ஒட்டுமொத்த இசைவு பெற்ற ஒரு செயல். அதில் பல எண்ணற்ற மக்கள் பங்குகொள்ளுகின்றனர். அவர்கள் அறிவிப்பாளர்கள், இசையமைப்பாளர்கள், பொறியியல் வல்லுநர்கள், செய்தி எழுதுவோர், விளம்பரதாரர்கள், நிகழ்ச்சி அமைப்பாளர்கள், நிகழ்ச்சி தருபவர்கள் மற்றும் பலர் ஆவர். தொலைக்காட்சிக் கருத்துப் பரிமாற்றமும் பலரது பணியை உள்ளடக்கியே மேற்கொள்ளப் படுகிறது.

Communication broadcasting : main objectives : (கருத்துப் பரிமாற்ற ஒலிபரப்பு : முக்கிய நோக்கங்கள்) நாளிதழ், இதழ் போன்ற அச்சுவழிச் சாதனங்களுக்கு மட்டுமல்ல வானொலி, தொலைக்காட்சி போன்ற ஒலி/ஒளிபரப்பு சாதனங்களுக்கும் அவற்றின் அடிப்படை நோக்கம் அறிவித்தல் (informing), பயிற்றுவித்தல் (educating), பொழுதுபோக்கு நல்கல் (entertaining) முதலியன கலந்த ஒரு பொதுப்பணியே ஆகும்.

Communication revolution : (கருத்துப் பரிமாற்றப் புரட்சி) அச்சு கண்டுபிடிக்கப்பட்ட நாள் முதல் இன்று உள்ள கருத்துப் பரிமாற்றத் தொழில் நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நாள்வரை உள்ள ஏறக்குறைய 500 வருட காலத்தை மட்டுமே உள்ளடக்கிய காலத்தைக் கருத்துப் பரிமாற்றப் புரட்சி என்ற சொல் குறித்து நிற்கும். அச்சுக் குறியீடுகளை அதிக அளவில் பெருக்கியதனாலேயே இத்தகைய கருத்துப் பரிமாற்றப் புரட்சி நிகழ்ந்தது எனலாம்.

Communication satellite : (தகவல் தொடர்புச் செயற்கைக்கோள்) தகவல் தொடர்புச் செயற்கைக் கோள் என்பது வானத்தில் நிறுவப்பட்டுள்ள ஒரு நிலையம். அது ஒரு நாட்டுக்குள்ளேயோ அல்லது பல நாடுகளுக்கிடையேயோ கருத்துப் பரிமாற்றங்கள் நிகழப் பயன்படுத்தப் படுகின்றன. வானவெளியில் மிதக்க விடப்பட்டுள்ள கோள் வழியாக வானொலியும் தொலைக்காட்சியும் ஒலி/ஒளிபரப்பை நிகழ்த்த பூமிக்கு உதவி செய்வது இக்கோள்களின் நோக்கம். Echo 1 1960-இல் நிறுவப்பட்ட முதல்

செயற்கைக் கோள். 'Telstar', 'Relay', 'Syncom', 'Insat' தொடர் செயற்கைக் கோள்கள் போன்றவை அண்மையில் நிறுவப்பட்டவை.

Comparision ads : (ஒப்பீட்டு விளம்பரம்) இவ்விளம்பர முறை விளம்பரதாரரின் பொருளை விற்பனைச் சந்தையில் அதனோடு போட்டியில் இருக்கிற பொருட்களோடு ஒப்பிடும் முறையைக் கையாளுகிறது. இத்தகைய போக்கு தவறு என்று சில வருடங்களுக்கு முன்னர் கருதப்பட்டு பின்னர் இதுவே போட்டியில் இருக்கும் பொருளை 'ஏதோ ஒரு பொருள்' (Brand X) என்று குறிப்பிடுவதாக வளர்ந்தது. இவ் விளம்பரம் எழுதுவோர் போட்டியை மிகவும் அழுத்தமாகக் குறிப்பிட்டு எழுதுதல் கூடாது. ஏனெனில் நாம் குறிப்பிடும் அவ்வெதிர்ப் பொருளை வாங்க ஆரம்பித்து விடுவர். மாறாக, அதைவிடச் சிறப்பான கூறாகிய விளம்பரதாரரின் பொருளின் பொருட் கூறுகள், வடிவம், விலை ஆகிய குறிப்புக்களை வலியுறுத்தல் வேண்டும்.


Compatibility : (ஒத்தியல்பு அல்லது வண்ணம் ஏற்கா அமைவு) வண்ண ஒளிபரப்புக்களைப் பெறுவதற்கான வழிகளை உள்ளடக்காத கறுப்பு வெள்ளைத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கறுப்பு வெள்ளை வர்ணத்திலேயே வண்ண ஒளிபரப்புக் களைப் பெறு வதற்காக ஏற்படுத்தப் பட்டுள்ள அமைப்பு.

Compiling : (தொகுத்தல்) செய்திஅறை வழக்கின்படி ஒன்றுக்கு மேற்பட்ட செய்தி ஆதாரங்களிட மிருந்து பெற்ற செய்திகளை ஒரே செய்திக்கதையில் உள்ளடக்குவது 'தொகுத்தல்' எனப்படும். மின்னணு முறையில் பதிப்பித்தலில் இப்பணி 'இணைதல்' (merging) என்று அழைக்கப்படுகிறது. கணிப்பொறி சொல்லாட்சியில் 'தொகுத்தல்' என்பது 'COBOL'போன்ற வேறொரு மொழியில் எழுதப்பட்ட நிகழ்ச்சியிலிருந்து 'FORTRON' போன்ற மற்றொரு இயந்திர மொழி நிகழ்ச்சி தயாரிக்கப் படுதலைக் குறிக்கும்.

Components of mass communication : (தகவல் தொடர்புக் கூறுகள்) தகவல் தொடர்பு குறித்த பல்வேறு கொள்கைகள் தகவல் தொடர்புக் கூறுகளின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. தகவல் தொடர்பின் கூறுகள் பின்வருவன :

1) கருத்துப் பரிமாறுபவர் அல்லது செய்தி தருநர் (Source)
2) செய்தி (Message)
3) செய்தி வழி அல்லது கருவி (Channel or medium)
4) செய்தி பெறுபவர் (Audience)
5) விளைவு (Effects)

மின்னணுத் தகவல் தொடர்பு சாதனங்களைப் பொறுத்தவரை இவற்றுள் முதலன மூன்றும் ஒன்றுக கொன்று மிகுதியும் தொடர்புடையன.



படம் : லாஸ்வெல்லின் கருத்துப் பரிமாற்ற .'.பார்முலா மாதிரி.

Composing room : (செய்தி அச்சுக் கோர்ப்பு அறை) கையாலும் இயந்திரங் களாலும் செய்திகளையும் விளம்பரங் களையும் அச்சுக் கோர்ப் பதற்கெனத் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட

செய்தித் தயாரிப்பு அறையின் ஒரு பகுதி.

Composite programme : **(பல்சுவைத் தொகுப்பு நிகழ்ச்சி)** பல இயல்புகளைக் கொண்ட தொகுப்பு நிகழ்ச்சி. வானொலி/தொலைக்காட்சியில் சிறுவர்க்கான நிகழ்ச்சியில் பல அம்சங்கள் இணைக்கப்படும்.

Compositor : **(அச்சுக் கோர்ப்பாளர்)** கையால் அல்லது இயந்திர உதவியால் அச்சுக் கோர்த்து நாளிதழை/இதழை உருவாக்குபவர்.

Com sat : **(தகவல் தொடர்பு செயற்கைக்கோள் கழகம்)** அமெரிக்காவில உள்ள 'Communication Satellite Corporation' என்ற நிறுவனததின் சுருக்கப் பெயர்.

Concept : **(அடிப்படைக் கருத்து)** எலலா ஒளிபரபபுத தயாரிப்பு நிகழ்ச்சிகளுக்குமே ஒரு அடிப்படைக் கருத்து இருக்கும குறிப்பாக, விளக்கப்படம் போன்ற ஒளிபரப்பு நிகழ்ச்சிகளுக்கு எழுதி அமைப்புத் திட்டத்தைத தயாரிப்பது என்பது எழுதுபவரின் சொந்த எண்ணம் அலலது கண் காணிப்பாளரின் கட்டளையின் பேரில் அமையும். ஏதாவது ஒரு கருத்து குறித்த தயாரிப்பாளரது சொந்தக் கருத்து அல்லது விதிக்கப்பட்டுள்ள பணி ஆகியவற்றின் பொருட்டு திரட்டபபடும கருத்து விளக்கப்படமாக அமைக்கப்படும். நாடக நிகழச்சிக்கு எபபடி ஒரு அடிப்படைக் கருத்து தேவையோ அதுபோலவே இங்கும் அடிப்படைக் கருத்து வாக்கியம் உதவுகிறது. தயாரிப்பாளர் ஒரு அடிப்படைக கருத்துத் தொடர் தருவார. அதன அடிப்படையில் மறறவை சேர்க்கப்பட்டு விளக்கப்படம் பெரிதாக்கப்படும்.

Condensed type: **(குறுகிய அச்செழுத்து)** பொதுவாக அச்செழுத்துக்களில் உள்ள முகம் போலல்லாது அதைவிட குறுகலாக வடிவமைக்கப்பட்ட அச்செழுத்து. விரிந்த அச்செழுத்து (Extended type) என்பதற்கு நேரெதிர் இது. மிகவும் குறுகி அமைக்கப்பட்ட அச்செழுத்துக்கள் 'extra-condensed' என்றும் அழைக்கப்படுகின்றன.

Condenser microphone : **(மின் ஆற்றல் வீறுபெருக்கு ஒலிவாங்கி)** வானொலி ஒலிபரப்பில் மின் சாதனத்துடன் இயங்கக்கூடிய ஒலிவாங்கி.

Conflicting facts : **(முரண்படு தகவல்கள்)** ஒரு செய்திக்கதை பல செய்தி ஆதாரங்களின் அடிப்படையில் தொகுத்து எழுதப்படாமல் ஒருவரே திரட்டிக் கொண்டு வந்த செய்திகளின் அடிப்படையில் எழுதப்பட்டிருப்பினும் கூட அதில் முரண்பாட்டிற்குரிய செய்திகள் சிலவாவது இருக்கக் கூடும்.

Console : **(சாய்வு மேடை)** வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பில் உதவும் சாய்வு மேடை 'Console' என அழைக்கப் படுகிறது. 'Console' என்பது, உள்ளே செலுத்தப் படும் ஒலி, வெளியே பெறப்படும் ஒலி முதலியவற்றை இறுக்கிப் பிடிக்கும் பொத்தான்கள், ஒலி அளவைக் கட்டுப்படுத்தும் கருவிகள், ஒலி அளவைக் காட்டும் அளவைக் கருவிகள் முதலியன பொருத்தப்பட்ட ஒரு கலவைக் கருவி ஆகும். இதனை இயககுபவர் சாய்வு மேடையில் உள்ள பகுதிகளை அவற்றின் பணிகளுக்கேற்ப இயக்க அறிந்து வைத்திருக்க வேண்டும். இம்மேடையில் உள்ள கருவிகள் ஒலியை உள்ளே செலுத்துதல், வெளியே பெறச் செய்தல், எச்சரித்தல்,

கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்தல் முதலிய பணிகளைச் செய்கின்றன. உள்ளே செலுத்தப்படும் ஒலி 'உள்ளிடு பொருள்' (input) எனப்படும். இவ்வாறு உள்ளிடு பொருளாகச் செலுத்தப்படும் ஒலி நேரடியாகச் சாய்வு மேடைக்கோ அல்லது ஒரு நிரந்தரமான ஊர்தி மூலமாகவோ அல்லது ஒட்டப்பட்ட கட்டிழை வழியாகவோ அல்லது சேய்மையில் உள்ள வேறு ஆதாரங்கள் மூலமாகவோ உள்ளே அனுப்பப்படும். நிலைய அரங்கு ஒலிவாங்கிகள், ஒலிப்பதிவுப் பெட்டியின் சுழல் தட்டுக்கள், ஒலிப்பதிவுக் கருவிகள், உறை ஒலிநாடா இயந்திரங்கள் முதலியன நிரந்தரமான மின்கம்பியால் சாய்வு மேடையுடன் இணைக்கப்பட்டு அலைவரிசை எண், சேவை முதலியற்றோடு தெளிவாக இனங்காணப் படுகின்றன. ஒவ்வொரு ஒலி அனுப்பப்படும்போதும் அவ்வொலி ஒலிபரப்பப்படும்போது இயக்குபவர் சரியான இடத்தில் அவ்வொலி துவங்கும் வகையில் செய்வதுடன் வெளியே பெறும் மொத்த ஒலியைக் காற்றில் ஒலிபரப்பும் நோக்கிலும் உள்ளிடு பொருள்-வெளியிடு பொருள் கருவியை இயக்குகிறார்.

தொலைக்காட்சி நிலையத்தில் உள்ள காட்சிச் சாதனச் சாய்வு மேடைத் திட்டம் உள்ளே அனுப்பும் செய்திக் கூறுகளைத் தெரிவு செய்யவும் அதனைச் சரிப்படுத்தவும் எல்லாவிதச் சிறப்பு விளைவுகளையும் உருவாக்கவும் பயன்படும். பொதுவாகப் பல்வேறு படத்தொடர்கள் உள்ளே அனுப்பப்படுவனவற்றில் * ஒரு படத்தொடர் அவற்றிற்கிடையேயுள்ள அழித்தல், வெட்டுதல், மங்குதல் போன்ற தகுந்த பதிப்பித்தல் முறைகளுடன் தெரிவுசெய்யப் பயன்படும்.

Contempt of court : (நீதிமன்ற அவமதிப்பு) நீதிமன்றத்தில் நடைபெறும் பொதுநலனோடு தொடர்புடைய வழக்குகள், முடக்கப்பட்டிருக்கும் வழக்குகள், அவை குறித்த விமர்சனங்கள் முதலியவற்றை அறிந்து கொள்ள மக்கள் ஆர்வமுடையவராய் இருப்பர். அத்தகைய செய்திகளையோ அவை குறித்த விமர்சனங்களையோ வெளியிடும்போது நீதிமன்ற நீதிபதிகளின் அதிகாரம் வேண்டுமென்றே இழிவுபடுத்தப்படும் வகையில் செய்திகளை வெளியிடுவது குற்றமாகும். எனவே பத்திரிகைகள் கவனமாகச் செயல்பட வேண்டும். பேச்சுச் சுதந்திரம், கருத்து வெளியீட்டுச் சுதந்திரம் தொடர்பாக 3 வகை நீதிமன்ற அவமதிப்புகள் உள்ளன. 1) நீதிமன்றத்தையே இழிவுபடுத்திப் பேசுதல். 2) நீதிமன்ற நடவடிக்கைகளுக்குக் காரணமான குழுவினரை இழித்துப் பேசுவது. 3) வழக்கில் உண்மையான காரணம் கேட்கப்படும் முன்னரே குறிப்பிட்டவரைக் குறிப்பிட்டவருக்கு எதிராகக் காரணப் படுத்துவதை வெறுத்துப் பேசுதல். இவை மூன்றும் குற்றவியல் சட்ட அடிப்படையில் குற்றமாகக் கருதப் படுபவை. இச்சட்டம் பிரிவு 2(a)-c- இன்படி சமுதாயவியல் சட்டம், குற்றவியல் சட்டம ஆகிய இரண்டு வகையிலும் குற்றமாகும் சமுதாயவியல் சட்ட அவமதிப்பு என்பது நீதி, விதிமுறை, ஒழுங்கு, நீதிபதி ஒரு செயலைச் செய்ய அல்லது செய்யாமல் இருக்க எழுத்து மூலமாக விடுத்த ஆணை போன்ற நீதிமன்ற நடவடிக்கைகளுக்குப் பணிய மறுத்தல் எனப்படும். இதன்படி ஒரு குழு நீதிமன்ற ஆணையைத் தம்மிடம் வைத்துக் கொண்டே பணிய மறுத்து நீதிமன்றத்தை வெறுத்தொதுக்குவது குற்றமாகும். குற்றவியல் சட்ட அவமதிப்பு எனபது சொல், பேச்சு, எழுத்து, செய்கை, படங்கள் போன்றவற்றின் மூலமாக எச்செய்தி குறித்தாவது 1) இழித்துப் பேசுதல்

(Scandalising) அல்லது இழித்துப் பேசத் தூண்டுதல் அல்லது எந்த நீதிமன்ற உயர் அதிகாரியையேனும் குறைத்துப் பேசுவது அல்லது குறைத்துப் பேசத் தூண்டுவது 2) எந்த நீதிமன்ற நடப்பினையும் வெறுத்துப் பேசுவது அல்லது தடைசெய்வது அல்லது தடைசெய்யத் தூண்டுவது. 3) ஒரு நீதிபதியின் நிர்வாகத்தில் குறுக்கிடுதல் அல்லது குறுக்கிடத் தூண்டுதல், தடுத்தல் அல்லது தடுக்கத் தூண்டுதல் போன்றன.

நீதிமன்ற அவமதிப்புக்குப் பத்திரிகை சட்டப்படி பொறுப்பாவது என்பது பின்வருவதைப் பொறுத்தது. "ஒரு கருத்துப் பரிமாற்றம் நீதி நிர்வாகத்தால் சட்டம் 1971-இன் துணைப் பிரிவு 2(c)-இன்படி இடையீடு செய்யப்படலாம்" என்னுமளவிற்கான செய்திகளை அச்சிட்டு வெளியிடும் எப்பத்திரிகையும் (பிரிவு 3,13-இன்படி சில பாதுகாப்பு விதிமுறைக்குப் பொருந்தாதவரை) நீதிமன்ற அவமதிப்புக்குப் பொறுப்பாகும். என்ன செய்தி அச்சிடப் படடிருக்கிறது எனற விபரம் தனக்குத் தெரியாது என்று வாதிட்டாலும் நீதிபதி தலையிட்டார் என்றால் அச்சிட்டோர், வெளியிட்டோா ஆகியோர் தண்டனை பெறுவது உறுதி. பத்திரிகையே சிறியதாக, கையேடாக இருந்து அதில சில செய்திகள் மட்டுமே அவதூறாக வெளியிடபபட்டி ருந்தாலும் சட்டப்படி நீதிமன்ற அவமதிப்புக்குப் பொறுப் பாகும். நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு வழக்கினை (fair trial)எழுதும்போது இழித்துப் பேசி ஒருபாற் சார்ந்து நீதிமன்றம் நடவடிக்கை எடுபபதாக நீதிமன்ற நடவடிக்கையைப் பலவீனப்படுத்தும் வகையில் எழுதுவாரானால் அப்பத்திரி கையாளர் நீதிமன்ற அவமதிப்புக்குப் பொறுப்பாவார் நீதி நிர்வாகத்தில் பொதுமக்களுக்கு ஆர்வம் உண்டு. எனவே எச்செய்தியையும் முறையாக அறிவிக்க வேண்டும். சட்டத்திற்குப் புறம்பான பொதுமக்கள் நலனுக் கெதிரான எந்த காரண காரியத்துடனான தக்க விவாதமும் முறைப்படி சரியாக (fair comment) மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். ஏனெனில் அவை பொதுமக்களுக்கு மட்டு மல்லாது நீதிபதிகளுக்கும் விளக்கங்கள் தருவன. மாறாக, விமர்சனம்,நெறிப்படி விமர்சித்தலின் எல்லை மீறி நீதி நிர்வாகத்தை இழித்துப் பேசியோ மக்கள் நீதி நிர்வாகத்தின் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையைக் குறைக்கும் வண்ணமோ அல்லது நீதி நிர்வாகத்தில் தான் தலையிடும் வகையிலோ எழுதினால் பத்திரிகை நியாயமானவற்றை விமர்சிக்கும் தன் சுதந்திரத்தை இழக்க நேரிடும். ஏனெனில் பொதுமக்கள் நலன் கருதி அத்தகைய விமர்சனங்களுக்கு ஊக்கம் தரலாகாது.

Context: (சூழல்) செய்தித் தலைப்பைச் சரிபார்க்கும் ஆசிரியர் நோக்க வேண்டிய ஒரு கூறு. ஆசிரியர்கள் செய்திக்கதை பொருந்தும் இடத்தை முடிவு செய்யும் வரையிலும் செய்தித் தலைப்பை மாற்றிக்கொண்டே இருக்க வேண்டியிருப்பதனால் சில நேரங்களில் அவர்கள் ஒரு சொல் சில சூழலில் மிகுதியும் பொருந்தியிருப்பதையும் வேறு சூழலில் பொருந்தாமல் போய்விடுவதையும் கவனிக்கத் தவறிவிடுவதுண்டு. சொல் வரிசை முறையை மாற்றுதல் சில வேளைகளில் பொருந்தாத விளைவுகளை ஏற்படுத்தி விடும். சில எளிய சொற்களுக்குச் சூழல் மிக அற்புதமான போற்றத்தக்க பொருளைத் தந்துவிடும்.

Contrast: (ஒளித் திண்மை வேறு பாட்டளவு) படத்தில் ஒளி, ஒளியற்ற கூறுகளுக்கு இடையேயுள்ள உறவு : மிக அதிக ஒளி மற்றும் ஒளியற்ற பகுதிகளுக்கிடையே உள்ள உறவு அதிக வேறுபாடுடையதாகவும் இடை

யளவான ஒளி மற்றும் ஒளியற்ற பகுதிகளுக்கிடையே உள்ள உறவு குறைந்த வேறுபாடு உடையதாகவும் இருக்கும்.

Contrast lead : (நேரெதிர் முகப்புச் செய்தி) செய்திக் கதையின் முகப்பு வகைகளுள் ஒன்று : செய்திக் கதையின் மையக் கருத்தை வலியுறுத்தும் பொருட்டு இந்த முகப்புச் செய்தி இரு வேறுபட்ட தகவல்களைத் தருகிறது.
சான்று :

> On 2nd Oct., Gandhi Jeyanthi Day, when *Millions dedicated themselves all over* India to follow non-violene, Police Opened fire and killed ten Sarvodaya leaders who shouted slogans demanding purity in public life.

Control keys : (கட்டுப்பாட்டுப் பொத்தான்கள்) காட்சிப்படங் காட்டியின் பொத்தான் பலகையில் எல்லா வழக்கமான எழுத்துக்களும் எண்களும் இருக்கும். மேலும் அவற்றோடு கூடுதலாக இரண்டு பொத்தான் வங்கிகளும் இருக்கும். அவை கட்டுப்பாட்டுப் பொத்தான்கள், ஆணைப் பொத்தான்கள், செயல் பொத்தான்கள் என்று அழைக்கப்படு கின்றன. கட்டுப்பாட்டுப் பொத் தான்கள் பொதுவாக சிவப்பு வண்ணத்தில் அமைக்கப் பட்டிருக்கும். சிவப்பாக அமைக்கப் பட்டிருப்பதன் நோக்கம் அவற்றைப் பயன்படுத்தினால் அவை திரையில் உள்ளவற்றை அழித்துவிடும் என்று எச்சரிப்பதற்கே ஆகும்.

Controlled circulation : (கட்டுப் படுத்தப்பட்ட விற்பனை) தகுதி பெற்ற வாசகர்களுக்கு என்று பொதுவாக இலவசமாகவோ அல்லது நிர்ணயித்த விலையிலோ மேற்கொள்ளப்படும் விற்பனை.

Control room : (கட்டுப்பாட்டு அறை) வானொலி நிலையத்தின் பல்வேறு நிகழ்ச்சி அரங்குகளிலும் அறைகளிலும் நிகழும் நிகழ்ச்சிகளை இணைப்பது கட்டுப்பாட்டு அறை. ஒலியின் தரத்தை உயர்த்தி ஒலிபரப்புக்கு உரிய முறையில் இங்கிருந்து அனுப்புவர். இது ஒலி, இசை, மௌனம் ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைக்கும் அறை. சாய்வு மேடையில் கவனமாகப் பொறியியல் வல்லுநரால் இவை இணைக்கப்பட்டுக் கேட்போருக்கு அனுப்பப்படுகின்றன. ஒரு வானொலி நிலையம் ஒரு கட்டுப்பாட்டு அறைக்கு மேல் மேலும் சில கட்டுப்பாட்டு அறைகளைக் கொண்டிருக்கலாம். கட்டுப்பாட்டு அறைகளின் எண்ணிக்கை அந்நிலையத்திலிருந்து நேர்முக அஞ்சல் நிகழ்ச்சிகள் (live programmes) எத்தனை ஒலிபரப்பப் படும் என்ற எண்ணிக்கைக்கேற்ப நிலைய அளவின் அடிப்படையில் கணிக்கப்படும். எப்படியும் ஒரு தலைமைக் கட்டுப்பாட்டு அறை இருக்கும். அதன் வழியாகவே எல்லா நிகழ்ச்சிகளும் அனுப்பப்படும். ஒவ்வொரு கட்டுப்பாட்டு அறையும் ஒரு சாய்வுமேடை (console),குறைந்தது இரண்டு சுழல் தட்டு மேசைகள் (turn tables), ஒலிநாடா, ஒளிநாடாப் பதிவுக் கருவிகள், உறை நாடா அலகுகள், நிலைய அரங்கிற்கு அப்பாற்பட்ட தூர இடங்களிலிருந்து நிகழ்ச்சிகளைச் சரிசெய்ய உதவும் இயந்திரப் பகுதிகளின்/நபர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் முதலிய வற்றைக் கொண்டிருக்கும். அவசர ஒலிபரப்பு அமைப்பை எச்சரிக்கை பண்ணு வதற்கான கருவி வசதிகளையும் உள்ளடக்கி இருக்கும். சரியாகப் பொருத்தப்பட்ட ஒலி பெருக்கி, தலைபேசி (head phone) முதலியவை இயக்குபவருக்கு என்ன ஒலி காற்றில் உள்ளது அல்லது என்ன ஒலி காற்றில் கேட்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று அறியவும் நாடாக்கள் மற்றும் பதிவுத் தட்டுக்களைச் சுழற்றவும் (cue

up) நிலையத்திற்குள்ளேயே எங்கிருந் தாவது தனிநபரிடமிருந்து வரும் செய்தியைக் கேட்டுக்கொள்ளவும் உதவும். நிலையத்தின் ஒரு பகுதியோ அல்லது முழுவதுமோ இயந்திரவழித் தானியங்கு முறையில் அமைக்கப் பட்டிருப்பின் அங்கும் தகுந்த கருவிகள் உள்ள அலமாரிகள் இருக்கும். கட்டுப்பாட்டு அறையில் பொதுவாக சுழல் தட்டு மேசைகள் இருக்கும். இவற்றில் நிலைய அரங்கினுள் நடைபெறும் நேரடி நிகழ்ச்சியுடன் தேவைப்பட்டால் வேறு பதிவுகளும், எழுத்துப்படிகளும் இணைக்கப்பட முடியும். மேலும் இவ்வறையில் ஒலிப்பதிவு மற்றும் அதற்குரிய வசதிகள் இருக்கும். அவை நிகழ்ச்சியை மறு ஒலிபரப்பிற்கோ அல்லது முதல் ஒலிபரப்பிற்கோ பதிவு செய்கின்றன. ஒலிவாங்கிகள், சுழல் தட்டு மேசைகள் மற்றும் ஒலிநாடாக்கள் தரும் எல்லா ஒலிகளையும் ஒரு ஒழுங்குக்குள் இவ்வறை கொண்டு வருகிறது. அவ்வொலியை மங்கவோ, மழுங்கவோ செய்யும் அல்லது கலக்கவும் செய்யும் இவ்வறை.

Copy : (எழுத்துப்படி) அச்சிடப்படு வதற்கு என தயாரிதது வைக்கப் பட்டுள்ள செய்தி தொடர்பான எழுதப் பட்ட அல்லது தட்டச்சு செய்யப்பட்ட செய்திப்படி. ஒரு இதழாளரால் எழுதித் தயாரிக்கப்பட்ட செய்திக் கதையைக் குறிக்கும்.

Copy cutter : (எழுத்துப்படி அச்சுக்கோர்ப்புப் பணிக் கட்டுப் பாட்டாளர்) அசசுக்கோர்க்கும் பிரிவின, செய்தித் தயாரிப்பு அறையில் உள்ள, பணியாளா இவர். இவர் அதிகமான செயதிப்படி அச்சுக் கோர்க்கும் இயல்புடைய பணி யாளருக்கு அதிகமான பணிகள் அச்சுக் கோர்க்குமாறு வந்துவிழு வதைக் கட்டுப்படுத்துபவர். இவர் ஒவ்வொரு இயந்திரத்திலும் அவை சார்ந்தோருக்கு நிலையான அளவில் வேலைப்பளு வந்து விழுமாறு பராமரிப்பதன் பொருட்டு செய்திப் படிகளைக் குறிப்பிட்ட அளவுகளின்படி குறைக்கிறார். அச்சுப் பணி முடிந்த பின்னர் மீண்டும் அச்செழுத்துக்களை ஒன்றுசேர்க்கும் பணியையும் மேற் பார்வை இடுவது இவரது பணி.

Copy desk: (செய்திப்படி மேசை) குதிரை லாட வடிவத்தில் அமைந் திருக்கும் மேசை : நாளிதழ் அலுவல கத்தில் இங்குதான் செய்திப்படி பதிப்பிக்கப்படுகிறது அல்லது தொகுக்கப்படுகிறது. சிறு செய்தித் தாள்களில் எல்லா செய்திப்படிகளும் ஒரே பொதுவான மேசையில்தான் பதிப் பிக்கப்படுகிறது. பெரிய செய்தித் தாள்கள் பொதுவாக பல்வேறு தனித் தனி எழுத்துப்படி மேசைகளைக் கொண்டுள்ளன. அவை நகர்ச்செய்தி மேசை, தந்திச் செய்தி மேசை, மாநிலச் செய்தி மேசை முதலியன ஆகும். இதழாளரால் தயாரிக்கப்பட்ட செய்திகள் இங்குதான் பதிப்பிக்கப் பட்டு தேவை இல்லாதன வெட்டப்பட்டு தலைப்பிடப்படுகின்றன. இம்மேசை குறைந்தது இரு தலையாய பணிகளைக் கொண்டது : 1) ஆக்கம், 2) மேற்பார்வை இடுதல். இவ் விரண்டனுள் ஆக்கம் என்ற பணி பின்வரும் வேலைகளைப் பெரிதும் மையமாகக் கொண்டது. அ) அன்றைய செய்தி எது என்று தீர்மானித்தல் : அது எவ்வாறு தரப்பட வேண்டும் என்று தீாமானித்தல். ஆ) தனிச் செய்தி களைத் தனியே தொகுத்து அவை தொடர்பாகப் பல்வேறு ஆதாரங் களிடமிருந்து வந்த செய்திகளிலிருந்து கிடைக்கும் கூடுதல் செய்திகளையும் அச்செய்தியில் 'பரப்புதல்' (spreading) அல்லது நிரவுதல். இ) செய்திகளுக்குத் தலைப்பு எழுதுதல் மற்றும் தெளிவாகத் தகவல் தரும் முழுமையான

படங்களுக்கு அதன் கீழே குறிப்பு எழுதுதல். மேற்பார்வையிடுதல் என்ற பணியினோடு தொடர்புடையன பின் வருமாறு: அ) அச்சுக் கோர்ப்பாளருக்கு எழுத்துப்படி இன்ன வடிவ அச்செழுத்தில் கோர்க்கப்பட வேண்டும் என்று குறிப்பு தருதல். இவ்வாறு தந்துவிட்டாலே அவ்வெழுத்துப்படி முழுவதும் இத்தகைய இயல்புகளைக் கொண்ட அச்செழுத்துக்களால் கோர்க்கப்பட வேண்டும் என்பது பொருள். ஆ) நாளிதழில் அச்செய்திக்கு உரிய இடத்தைப் பொறுத்து எழுத்துப் படியின் வடிவத்தைக் கூட்டவோ குறைக்கவோ செய்தல். இ) ஏற்கனவே உள்ள ஒரு பிரச்சினைகக்கு முதலிலேயே எழுத்துப்படியைத் தயாரித்தல். எனவே ஏறக்குறைய எழுத்துப்படி மேசைத் தலைமையாளரது பணி நாளிதழின் உள்ளடக்கத்தைத் தீர்மானித்தல் ஆகும். இம்மேசையே அ) செய்திகள் மற்றும் அவைகுறித்த விளக்கங்களில் உள்ள பிழைகளைத் திருத்துதல் ஆ) அவதூறு வழக்குகள் மற்றம் பிற சட்டச் சிக்கல்களிலிருந்து நாளிதழைப் பாதுகாத்தல். இ) தம் நாளிதழில் துல்லியம், உண்மையாக எழுதப்பட்டிருத்தல், செய்திகள் சுவையாக வெளிப்படுத்தப்பட்டிருத்தல் போன்றவற்றை உறுதிப்படுத்துவதன் மூலம் நாளிதழ் மீது பொதுமக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை அர்த்தமுள்ளதாக்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது. இம்மேசையே செய்தியைத் தெளிவு படுத்தும் பொருட்டும் பொருள் தெளிவாக விளங்கும் பொருட்டும் மொழியின் தவறுகளையும் மொழி வட்டத்தையும் திருத்துகிறது. வேறுவிதமாகச் சொன்னால், இம்மேசையில்தான் செய்திப்படி பதிப்பிக்கப்படுகிறது. எவ்வாறெனில் எழுத்து, இலக்கணம், தொடரமைப்பு ஆகியவற்றில் உள்ள பிழைகளைத் திருத்துதல், நடை, சுவை, தகவல், சொற்பெருக்கம், திரும்பத் திரும்ப வருதல், சலிப்பூட்டும் விளக்கங்கள், புறக்கணிக்கப்பட்ட தகவல்கள், பொருத்தமில்லாதனவற்றை மூடி மறைக்கும் விளம்பரங்கள், அவதூறு, ஏமாற்றுச் செய்திகள், சொன்னதையே சொல்லும் ஒரே மாதிரியான பழைய செய்திகள் ஆகியவற்றைக் கண்காணித்துத் திருத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

Copy editor : (எழுத்துப்படி திருத்துநர் அல்லது எழுத்துப்படி ஆசிரியர்) செய்தி அறையில் பணியாற்றும் எழுத்துப்படி ஆசிரியர்கள் பலர் எழுத்துப்படி வாசிப்போர் என்று அழைக்கப்படுகின்றனர் எழுத்துப் படியைச் செய்தித் தயாரிப்பு அறைக்கு அனுப்புவதற்கு முன் இறுதி வடிவத்திற்குக் கொண்டு வருபவர் எழுத்துப்படி திருத்துநரே. மொழிப் பிழைகளைத் திருத்தி செய்தியின் தொடர்ச்சி, துல்லியம் முதலிய வற்றையும் சரிபார்த்துச் செய்திக்குத் தலைப்பிடுதலும் இவரது பணியே. இதழியல் துறையில் அடிப்படையில் இரு முக்கியத் திறமைகள் இணைந்து இதழியல் பணி உருவாகிறது. அவை : 1) நிருபரின் திறமை, 2) ஆசிரியரின் திறமை. நிருபரும் ஆசிரியரும் பல்வித இயல்புகளில் ஒன்றுபடுவர். சான்றாக, உண்மையான செய்தியை வெளியிடுதல் வேண்டும் என்ற கொள்கை இருவருக்குமே உண்டு என்பதைக் குறிப்பிடலாம்.

வாசகனுக்குப் போய்ச் சேர்வதற்கென எச்செய்தி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்? எச்செய்தி தேர்ந்தெடுக் கப்படக் கூடாது எனத் தீர்மானிக்கும் நபர் எழுத்துப்படி திருத்தும் ஆசிரியரே. இதுமட்டுமன்றி அச்செய்தி எத்தகைய வடிவத்தில், எவ்வளவு அளவில், எவ்வகைக் காட்சி அமைவில், எந்தப்

பக்கத்தில், எங்கு போடப்பட வேண்டும் என்ற அனைத்து விபரங்கள் குறித்த இறுதி முடிவுகளை எடுப்பார். இத்தகைய முடிவுகளே செய்தித் தாளின தரம், செய்தியின் துல்லியம், செய்தியின் சிறப்பு, செய்தியின் விளக்கத்துடனான முழுமை முதலிய வற்றைத் தருகின்றன. நிருபர் எழுதித் தந்திருக்கும் அல்லது தொலைபேசி மூலம் கூறியிருக்கும் செய்திகளை இவர் குறிப்பிட்ட நாளில் அன்றைய தினம் தமது செய்தித்தாளில் அச்செய்திக்கென உள்ள இடத்திற் கேற்பக் குறைக்கிறார்.

நாளிதழ் இதழியலில் பணிகள் பலரால் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. நகர்ச் செய்தி ஆசிரியரின் தலையாய பொறுப்புக்கள் நகர்ச் செய்திகளைச் சேகரிபபதிலேயே அடங்கி இருக்கிறது. அதாவது நிருபர்களுக்குக் குறிப்பிட்ட பணிகளை அவரவரது செய்திக் களத்திற்கேற்பப் பணித்தல், சிறப்பு வேலைகளைத் தருதல், பணிக்கப்பட்ட செய்திகளைத தம் நாளிதழ் தரத்திற் கேற்பச சரியாகச சேகரித் துள்ளார்களா என்று பார்த்தல் முதலியன அவரது பொறுப்புக்கள். தந்திச் செய்தி ஆசிரியர் தந்தி வழியாகவும் (Wire service) துணைமைச் செய்திச் சேவைகள் மூலமாகவும் பல்வேறு பகுதிகளிலிருந்து சிறப்புச் சேகரிப்பு மூலமாகவும் வந்து சேர்ந்துள்ள செய்திகளைத் தெரிந் தெடுத்தல், பதிப்பித்தல், செய்திக் கதைகளுக்குத தலைப்பிடுதல் முதலிய பணிகளுக்குப் பொறுப்பாவார். செய்தி ஆசிரியர் பொதுவாக எழுத்துப்படி மேசையில் தலைமைப் பதிவு வகிப்பவர் இவர் வந்து சேர்ந்த உள்ளூர் மற்றம் வெளியூர்ச் செய்திகளை உள்ளடக்கிய (சிறப்புச் சேகரிப்பான விளையாட்டு மற்றும் குறிப்பிட்ட நபரது வாழ்க்கைச் செய்திகள் போன்றவை தவிர) எல்லா எழுத்துப்படிகளையும் கையாளுபவர். அதன் இறுதி வடிவத்திறகு இவரே முதன்மைப் பொறுப்பாவார். பொது மக்களுக்கு இவ்வளவு புத்திக் கூர்மை யுடனும் தனித்தன்மையுடனும் செய்தி களுக்குத் தலைப்பிடுபவர் யார் என்றும் எழுத்துப் பிழைகளையும் இலக்கணப் பிழைகளையும் திருத்தி செய்தி களைத் தொகுத்துத் தகுந்த தொடரமைப்பில் தந்து, செய்தியின் துல்லியத்தைச் சரிபார்த்துச் செய்தி தந்திருப்பது இவரே என்றும் தெரிந்திருக்க நியாயமில்லை.

செய்தியைப் பதிப்பித்தல் என்பது தகவல் தொடர்பிற்கு மிகவும் அடிப்படையான ஒன்று. நாளிதழ் பதிப்பித்தலில் தேவைப்படும் அடிப்படைத் திறமைகள் இதழ்கள், நூல்கள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள் போன்ற அனைத்துத் துறைகளிலும் உள்ள கருத்துப் பரிமாற்றப பணித் திறமைகளுக்கு இணையானவையே. இவ்வனைத்துத் துறைகளிலும் மொழியின் ஓட்டத்தை யும் மொழி தரும் பொருட்சிறப்பையும் அதிகரிக்கச் செய்யும் திறனைப் பெருக்குதல், செய்தித் துல்லியத்தைப் பாதுகாத்தல், இறுதிப் படிவத்தை வாசகர்களை/நேயர்களை ஈர்க்கும் வண்ணம் கவர்ச்சிகரமாகத் தருதல் முதலியவை மிகவும் மதிப்பிற்குரியன மட்டு மல்லாமல் விற்பனை அதிகரிக்க உதவும் செயற்பாடுகளும் ஆகும். ஒரு நல்ல நாளிதழின் எழுத்துப்படி ஆசிரியர் மேற்கூறிய திறமைகளை மேற் குறிப்பிட்ட இத்துறைகளுள் எத்துறைக்கும் கையாளலாம். ஒரு ஆசிரியர் 1) என்ன எழுதப்பட்டிருக் கிறது என்பதை அறிந்திருப்பதில் அதிக திறமையுடையவராக 2) மொழி வல்லுநராக, 3) நெகிழ்ச்சி மற்றும் சகிப்புத்தன்மை உடையவராக, பிறரது பணிகளைப் பாராட்டும் திறமை உடையவராக இருத்தல் வேண்டும். பக்ளி என்பவர் "ஒரு பத்திரிகை

ஆசிரியர் என்பவர் தனது நாளிதழின் உருவாக்கத்திற்குப் பொறுப்பெடுத்துக் கொள்பவராக (எத்தகைய நாளிதழைத் தான் உருவாக்க விரும்புகிறார் என்பதற்கும், தனது வாசகர்கள் எத்தகைய நாளிதழை விரும்புகின்றனர் என்பதற்கும் ஏற்ப) இருக்க வேண்டும் என்று கூறுகிறார். ஒரு செய்தித் கதையைப் பதிப்பித்தலின் முக்கிய பணி என்ன நடந்தது என்பதை அச்செய்திக்கதை சொல்லுகிறதா என்பதைப் பார்ப்பதும் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவாக அச்செய்தி கூறப்பட்டுள்ளதா ; முதலிலிருந்து கூறப்பட்டுள்ளதா என்பதைக் காண்பதும் ஆகும். அச்செய்திக் கதையின் தொடர்ச்சி, வளர்ச்சி முதலியன அறுபடாமல் இருக்கும் வகையில் வேண்டாத செய்திகள் வெட்டப்பட வேண்டும். இருக்கும் இட வரையறைக்கேற்ப அச்செய்தியை முழுவதுமாகக் கூறும் பணி ஆசிரியர்களுடையது. 'என்ன நடந்தது' என்பதைக் கூறுதல், வாசகர்களுக்கு அதைப் புரிய வைத்தல் முதலிய நோக்கில் அவர் பணி அமையும். மேலும் தற்போது என்ன நடக்கிறது என்பதைக் கூறுவதை விடவும் அது எப்படி, நடந்தது ; ஏன் நடந்தது என்பதையும் சேர்த்துக் கூறும் பொறுப்பையும் தற்போது ஆசிரியர்கள் எடுத்துக் கொண்டுள்ளனர். எனவே ஆசிரியரின் பணி,

1) பக்க அமைப்பிற்குத் துணைபுரிதல் 2) பத்திரிகையின் நடைக்கேற்பச் யெ்தி எழுதப்பட்டுள்ளதா என ஒழுங்குபடுத்துதல் 3) தகவல்களை ஆராய்தல் : தகவலில் பிழை இருந்தால் திருத்துதல் 4) செய்தி மொழியை எளிமைப்படுத்தல், திருத்துதல் ; சரிபார்த்தல 5) செய்தி தரும் பொருளைச் சரிபார்த்தல் ; அதிகப் பொருளைத் தருதல், செய்திப் பொருளுக்கு உயிர்த்துடிப்பூட்டுதல் 6) அச்செய்திக்கென இருக்கும் இடத்திற்கேற்ப அச்செய்தியின் நீளத்தைச் சரிப்படுத்தல் 7) செய்திக் கதையைத் துல்லியமாகக் கூறல், சரியாகக் கூறல், சட்டப்படி எத் தவறும் வராமல் பார்த்துக்கொள்ளல் 8) செய்தியின் அமைப்பைத் தேவையானவிடத்து விரிவாக மாற்றி அமைத்தல். 9) ஒரு செய்திக் கதையின் தொனிப்பு முறையைத் தேவையானவிடத்து மாற்றுதல் 10) சரியான ரசிப்பிறகேற்பச் செய்திப் பிழையைத் திருத்துதல் முதலியன ஆகும்.

தாளில் எழுத்துப் பிழைகளையோ அல்லது கருத்துப் பிழைகளையோ கவனிக்கத் தவறுபவர் நீண்டநாள் ஆசிரியர் பதவியில் நீடிக்க முடியாது. ஆசிரியர் சரியற்ற, குழப்பமான, வெற்று ஆரவாரச் சொற்களையும் தொடர்களையும் உரிய நேரத்திற்குள் விரைவாகக் கண்டுபிடித்துச் சரி பண்ணும் திறனைப் பொறுத்தே செய்தித்தாளின் மொழியின் ஓட்டத்-தை ஆசிரியர் அதிகரிக்க முடியும். கால வரையறை காரணமாக ஆசிரியர் திரும்பத் திரும்ப வாசித்துத் திருத்திக் கொண்டிருக்க நேரமிருக்காது. ஆனால் எளிமைப்படுத்துதல், சரி பார்த்தல், மொழியைத் திருத்துதல் முதலியன அவரது பணியின் முதன்மைப் பகுதிகளாக இருப்பதனால் உடனடியான தீர்வைக் கண்டுபிடிக்க அவரால் முடியும்.

கடந்த நூற்றாண்டுகளில் நாளிதழ் தொழில் நுட்பம் மிகவும் மாற்றத்திற்குட்பட்டு வளர்ந்திருப்பதாலும் நாளிதழ் பெரிய அளவில் வளர்ந்திருப்பதாலும் பதிப்புகளின் எண்ணிக்கையும் அதிகரிக்க வேண்டியுள்ளது. 19-ஆம் நூற்றாண்டின் நடுவில் சுழல் அச்சுப்பொறிகள் வந்தன. அவ்வச்சுப் பொறி அச்சு வேகத்தை அதிகரிக்க உதவியதால் பரந்த அளவில் விற்பனைகள் அதிகரித்தன. இதன் தொடர்ச்சியாகத் தாள்களின் தொடர்ச்சுருள்கள் கண்டுபிடிக்கப்பட

வேண்டியது அவசியமாயிற்று. இதே நூற்றாண்டின் இறுதியில் வரி வார்ப்பு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அச்சுக் கோர்க்கும் அறையில் பணியாற்றும் தொழிலாளர்களை உடல் உழைப்பாகிய கையால் அச்சுக் கோர்ப் பதினின்று இம்முறை விடுவித்தது. ஆனால் அந்த நூற்றாண்டு முழுவதிலும் 1970-இன் ஆரம்ப காலத்தில் ஏற்பட்டது போல எந்தப் புரட்சியும் ஏற்படவில்லை. ஐந்து வருடங்களுக்குள் 'முழுவதுமான மின்னணுச் செய்தி அறை' உருவாயிற்று. இதனால் நிருபர்கள் மற்றும் ஆசிரியர் தாம் பணி செய்யும் முறையில் அடிப்படை மாற்றம் உண்டாயிற்று. மின்னணுப் புரட்சி உற்பத்தி நிலை, திறமை, நாளிதழ் உருவாக்கத்தில் வேகம், நிருபர் ஒரு செய்தியை எழுதும் முறையில் மாற்றம், அதை ஆசிரியர் திருத்துவதில், வெட்டுவதில், வேறுவிதத்தில் வரிசைப் படுத்தும் முறையில், தலைப்பைப் பொருத்தும் முறையில், செய்தியின் கருத்தோட்டத்தில் ஒழுங்கை ஏற்படுத்துவதில், செய்தியில் ஒருவிதி ஒழுங்கைக் கொண்டுவருவதில் மாற்றங்களை ஏற்படுத்தியது. சுருங்கக் கூறின், மின்னணுப் புரட்சி அனைத்தையும் மாற்றியுள்ளது. ஆசிரியரின் பணிகள் செய்யப்படும் முறைகளில் மாற்றம் கொண்டு வந்துள்ளது. புதிய தொழில்நுட்ப முன்னேற்றம் ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்வதை விலக்கியது. நிருபர் ஒரு பத்தியை ஒரு காட்சிப்படங்காட்டியில் (video display terminal) எழுதும்போது கண்ணுக் கெதிரேயே தான் எழுதியதைக் கண்டுகொள்ளலாம். அதில் எவ்விதப் பிழையும் இல்லை என்பதையும் பத்தி எழுதப்பட்டு முடிந்தாயிற்று என்பதையும் தெரிந்து கொள்ள முடிகிறது. அந்த பத்தி பின்னால் தேவைப்படும்போது ஆசிரியர் கேட்டுப் பயன்படுத்திக் கொள்ளத்தக்க வகையில் கணிப் பொறியின் ஞாபகத்துக்குள் நுழைகிறது. கணிப்பொறியே பாரம்பரிய கலைநுட்பத் தொழிலையும் பிழைகள் தொடர்பாக இறுதியில் கவனித்துக் கொள்ளுதலையும் செய்கிறது. அதன்பின்னரும் அந்த மூலச் சொற்களாகிய மின்னியக்கத் தூண்டுதல்கள் அச்சில் இயல்பாகவே ஒரு அச்சு இயந்திரத்தில் கோர்க்கப் படுகிறது. அவ்வியந்திரமே அந்த பத்தியின் வரிகளைச் சரியான நீள வடிவில் ஒன்றுசேர்க்கிறது. சொற்களை வரிகளுக்கிடையில் பகுக்கிறது. எல்லாமே மின்னணு முறையில் அச்சுக் கோர்க்கப்பட்டு ஒரு பக்க அமைப்பில் ஒட்டப்படும் வகையில் தயாராகிறது. பின்னர் அதிலிருந்து ஒரு தகடு நிழற்பட முறையில் தயாரிக்கப்பட்டு நேரடியாக அச்சுப்பகுதிக்கு அனுப்பப்படுகிறது. எழுத்துப்படி ஆசிரியர் தரும் பதிப்பிக்கப்பட்ட வடிவம்தான் இறுதி வடிவம். மின்னணுப்பதிப்பு முறையில் திரையில் உள்ள எழுத்து தானாகவே சரி செய்தல் (justification) உட்பட அச்சுக்கோர்க்கப்பட வேண்டிய போதும் சொற்கள் பிரிக்கப்பட வேண்டிய போதும் அல்லது செய்தி மற்றும் தலைப்பு ஒட்டப்பட வேண்டிய போதும் பக்கவரிசைப் படுத்தும் சேமிப்பானுக்குள் தகட்டு ஆக்கத் திற்காகச் செலுத்தப்படும் போதும் தவிர ஆசிரியர் தரும் எழுத்துப்படிவம் பதிப்பு முனையிலிருந்து கணிப்பொறியின் நினைவுக்குள் செல்லும்.

ஏழை-எளிய மக்களின் வறுமையைப் பயனபடுத்திச சிறுநீரகததைத தெரிநதும தெரியாமலும் பணம் கொடுத்தும ஏமாறறியும எடுககும் மாபாதகச செயல் அதிக அளவில் நடந்து ஏராளமானவர்கள பாதிக் கப்பட்டு உள்ளனர்.

சரி செய்யப்பட்ட (Justified)செய்திப்படிவம்

ஏழை-எளிய மக்களின் வறுமையைப் பயனபடுத்திச சிறுநீரகததைத தெரிந்தும தெரியாமலும் பணம் கொடுததும் ஏமாற்றியும எடுககும் மாபாதகச் செயல் அதிக அளவில நடந்து ஏராளமானவாகள் பாதிக்கப்பட்டு உளளனர்.

வலதுபுறம் சரி செய்யப் படாமல் (Unjustified) உள்ள செய்திப்படிவம்.

Copy fitting : (எழுத்துப்படியைப் பொருத்துதல்) நாளிதழில் உள்ள இடத்திற்கேற்றபடி செய்தியைச் சரியாகப் பொருத்துதல் : சான்றாக அச்செழுத்தின் வடிவத்தைத் தீர்மானித்தலைக் கூறலாம். அப்படித் தீர்மானித்தல் எழுத்துப்படித் தயாரிப்பின் ஒரு பகுதி ஆகும். ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட இடத்தில் பொருந்தச் செய்யும் அல்லது பொருத்தப்பட வேண்டிய இடம் தீர்மானிக்கப்படுதலும் இப் பணிகளே.

Copy right : (பதிப்புரிமை) 1) பதிப்புரிமை என்பது ஒரு இலக்கிய, கலைப்படைப்பின் வெளியீட்டு, விற்பனை உரிமைகளைச் சட்டப்படி தனியாகப் பெற்றுக்கொள்ளும் உரிமை. எழுத்தாளர்கள், கவிஞர்கள், இசையமைப்பாளர்கள், கலைஞர்கள் ஆகியோர் தம் படைப்புக்களின் மீது உரிமை கொண்டிருக்கின்றனர். அவ்வுரிமைகள் சட்டப்படி பாதுகாப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் பதிப்புரிமைச் சட்டம் 1941-இல் உருவாகியது. 2) படைப்பாசிரியர்கள், இசையமைப்பாளர்கள், நூல் வெளியீட்டாளர் ஆகியோர் தரும் படைப்பை ஒலிபரப்பு நிலையங்கள் ஒலிபரப்பச் செய்துகொள்ளும் சட்டபூர்வ ஒப்பந்தம்.

Copy right Act : (பதிப்புரிமைச் சட்டம்) இச்சட்டம் 1941-இல் உருவாகி 1957-இலும் 1984-இலும் பல திருத்தங்களைப் பெற்றது. எழுத்தாளர்கள், கலைஞர்கள், இசை அறிஞர்கள், நாடகப் படைப்பாளர்கள் போன்றோர் ஏமாற்றப்படுவதினின்று இச்சட்டம் தடுக்கிறது. ஒரு மனிதனது உழைப்பு, திறமை முதலியவற்றின் அடிப்படையில் விளையும் பலன்கள் மற்றொருவரால் தன்னுடையது என சொந்தம் கொண்டாடப்படுவதை இச்சட்டம் தடுக்கிறது. சட்ட ஒழுங்கிற்கு அப்பாற்பட்டு அவர்தம் படைப்புக்கள் மீண்டும் ஆக்கப் படுவதைத் (reproduction) தடுக்க இச்சட்டம் உதவுகிறது. ஒரு படைப் பாசிரியர் ஒரு படைப்பின் ஆசிரியர் என்ற வகையில் அவரே தனது படைப்பு உருவாக்கத்திற்குப் பதிப்புரிமை பெறுபவர். அவர் மட்டுமே தனது படைப்பைப் பதிப்புச் செய்யவும் அல்லது மறுபதிப்பு செய்வதற்கான அனுமதி தருதலை நிறுத்தி வைக்கவும் உரிமை பெற்றவர். உடல் உழைப்பினால் ஒரு மனிதன் எய்தும் பலன்கள் அவனுக்குச் சொந்தமானவை என சொத்து குறித்த பிற சட்டங்கள் கூறப்படுவதன் அடிப்படையில் ஒருவனது அறிவு சார்ந்த படைப்புக்களினால் அதாவது அவனது திறமை, கடின உழைப்பு முதலியவற்றால் வரும் பலன்கள் அவனையே சாரும் என்ற வகையில் இச்சட்டம் அமைந்துள்ளது. நூல்களைப் பாதுகாத்தலில் ஆரம்பித்து பதிப்புரிமைப் பாதுகாப்பு மெல்ல மெல்ல எல்லாவித அறிவுபூர்வமான படைப்புக்களாகிய கலை, சிற்பம், கட்டிடம், நாட்டியம், திரைப்படங்கள், ஒலிப்பதிவுகள், ஒலி/ஒளி பரப்புக்கள் முதலியவற்றிற்கும் விரிந்துபரந்தது. வெளியான படைப்புக்களுக்கு (Published) மட்டுமல்லாது வெளியாகாத படைப்புக்களுக்கும் (Unpublished) பதிப்புரிமைச் சட்டம் உரியது. முதன் முதலில் இந்தியாவில் வெளியான எல்லாப் பொருட்களும்பதிப்புரிமைப் பாதுகாப்புக்கு உரியன. ஆசிரியர் தன் படைப்பை வெளிநாட்டில் வெளியிடும்போது அவ்வாசிரியர் அப்படைப்பு வெளியான நாளில் இந்தியக் குடிமகனாய் இருந்தால் அப்படைப்பு இந்தியச் சட்டப்படி பதிப்புரிமைப் பாதுகாப்புக்கு உரியது. இச்சட்டப் பரிவு 13 (1) பதிப்புரிமைக்கு உகந்த வையாகச் சொந்தப் படைப்புக்களான இலக்கியம், நாடகம், இசை மற்றும் கலைப் படைப்புக்கள், திரைப்படங்கள்,

ஒலி, ஒளிப்பதிவுகள் முதலியவற்றைக் கூறுகிறது. இச்சட்டத்தின் பிரிவு 14-இன்படி, பதிப்புரிமை என்பது ஒரு படைப்பின் ஆசிரியருக்கு, 1) படைப்பை மீண்டும் அதே முறையில் தயாரிக்க 2) படைப்பை வெளியிட 3) பொதுமக்கள் மத்தியில் கலை நிகழ்ச்சியாகத் தன் படைப்பை நடத்திக்காட்ட 4) ஒரு திரைப்படம் அல்லது ஒலி/ஒளிப்பதிவு தயாரிக்க 5) வானொலி, மக்கள் தொடர்பு சாதனங்கள், ஒலிபெருக்கி முதலியவற்றின் மூலம் கருத்துப் பரிமாற 6) படைப்பை மொழிபெயர்க்க அல்லது படைப்பைத் தழுவி வேறொன்றை மேற்கொள்ள ஆகிய உரிமைகள் உள்ளன என்று கூறுகிறது.

ஆசிரியரே தனது படைப்பின் மீது பதிப்புரிமை பெறும் முதல் உரிமையாளர் ஆவர். அவரே அப்படைப்பின் மீது உரிமை பெறும் முதல் உரிமையாளர். அதன்படி அவருக்குத் தன் படைப்பை வழங்கவோ, குறிப்பிட்ட பணிக்குட்படுத்தவோ உரிமம் வழங்கவோ, தன் வாரிசுகளுக்குத் தன் காலத்திற்குப்பிறகு எடுத்துக்கொள்ள உரிமை வழங்கவோ உரிமை உண்டு. மாறாக அவர் நியமித்தவர் தவிர வேறு யாராவது மேற்குறிப்பிட்ட பணிகளைச் செய்தால் அவர் அவ்வாசிரியரது உரிமைகளைப் பறித்துக்கொண்டு சட்டத்தை மீறியவர் ஆவார். அச்செயலுக்காக அவர் சமுதாயவியல் சட்டம், குற்றவியல் சட்டம் ஆகிய இருவகையிலும் தண்டனை பெறுபவர் ஆவார். இத்தகைய பிறர் உரிமையைக் கையாளல் (Infringement) என்பது நேரடியாகவும் நிகழலாம், மறைமுகமாகவும் நிகழலாம். இத்தகைய கையாளல் தொடர்பான விதிகளை இச்சட்டத்தின் பிரிவு 51 கூறுகிறது. பதிப்புரிமையை மேலும் வலுப்பெறச் செய்தலுக்கு (enforcement) இச்சட்டப் பிரிவு 9(1) வழிகோலுகிறது. இதன்படி பதிப்புரிமையைப் பதிவு செய்வதற்கென ஒரு பதிப்புரிமை அலுவலகம் பதிப்புரிமைப் பதிவாளரின் கீழ் இந்திய அரசின் கல்வித்துறைப் பிரிவில் 1958-இலிருந்து இயங்கி வருகிறது. சட்டப் பிரிவு 44 இவ்வலுவலகத்தில் தனது பெயர், படைப்பின் பெயர் முதலியவற்றைப் பதிப்புரிமைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளலாம் என்று கூறுகிறது. இவ்வாறு பதிவு செய்வது அவரது விருப்பத்தின் பேரில் தானேயன்றி கட்டாயமல்ல.

Copy schedule : (எழுத்துப்படி அட்டவணை) ஒரு வெளியீட்டிற்காகத் தயாரிக்க முறைப்படி அனுப்பப்பட்டுள்ள ஓர் எழுத்துப்படி குறித்த பதிவு.

Copy taster : (எழுத்துப்படி சரிபார்ப்பவர்) செய்தி அறைக்கு அனுப்பப்படுபவற்றை ஏற்கவோ நீக்கவோ முடிவு செய்யும் வகையில் முதல் முதலாகப் பரிசீலிக்கும் அலுவலர்.

Copy Writer : (எழுத்துப்படி எழுதுபவர்) ஒருநாளிதழ் அலுவலகத்தில் விளம்பரப் பிரிவில் அல்லது வர்த்தக நிறுவனத்தில் குறிப்பாக விளம்பர நிறுவனத்தில் பணியாற்றுபவர். இவரது பணி விளம்பரப் படிவத்தைத் (advertising copy) தயாரிப்பது ஆகும்.

Core or Core memory : (மையம் அல்லது மைய ஞாபகம்) குறிப்பிட்ட கணிப்பொறிக்கு என நியமிக்கப்பட்டுள்ள ஞாபகசக்தியின் எண்ணிக்கை அளவு, சான்றாக, K என்பது ஒரு கணிப்பொறியின் வடிவின் (size) அளவை அளக்கப் பயன்படும் ஒரு அலகு. ஒரு 8K கணிப்பொறி 8000 துணுக்குகளைத் (bits) அய்த் தன்னுள் சேர்த்து வைத்துக்கொள்ளும் சக்தியுடையது. அப்படியானால் 1K கணிப்பொறி 1000 துணுக்குகளைத் (bits) தன்னுள் சேர்த்து வைத்துக் கொள்ளும்.

Correcting errors within quotes : (மேற்கோள்களில் திருத்தம் மேற் கொள்ளல்) நிருபர்கள் மேற்கோள் களைப் பல காரணங்கள் கருதித் தம் செய்திக் கதையில் சேர்ப்பர். செய்திக் கதை எவ்வாறு உள்ளதோ அப்படியே தோற்றமளிக்க வேணடும் என்று அவர்கள் விரும்புகின்றனர். எனவே கதையை உண்மையானதாகவே தோன்றச் செய்ய, சொல்லப் பட்டவற்றை அப்படியே செய்திக் கதையைச் சொன்னவர்தம் சொந்த வார்த்தைகளில் தருகின்றனர். இப்பணியின் போது செய்திக் கதை தந்தவர் பயன்படுத்தியுள்ள நாகரிக மற்ற அல்லது வன்முறைப் பொருள் தரும் சொற்கள் மற்றும் தொடர் களைத் தெரிந்தெடுத்து வேறு வகையில் மாற்றி எழுதுகின்றனர்.

Correctness : (பிழையின்மை) பொதுவாக சிறப்புக் கட்டுரைகளில் மற்றும் வாழ்க்கைச் சித்திரங்களில் செய்தி தந்தவர் பயன்படுத்திய சொற்கள் அப்படியே பயன்படுத்தப்படும். இவ்வாறு செய்வது செய்தி தந்தவரின் பரிமாணத்தை வாசகனுக்குப் புரியவைக்கும். ஆசிரியர் 1) வாய் தவறித் தவறாகச் சொன்னவற்றை மேற்கோளை நீக்காமல் திருத்தலாம். 2) ஒருவரைப் பாதிக்கும் செய்திப் பகுதியை நீக்கலாம். 3) அப்படியே பொழிப்புரையாகத் தரலாம். 4) ஒரு பகுதியைமட்டும் மேற்கோளாகக் கொடுத்துவிட்டு பாதிக்கும் பகுதியை நீக்கலாம். செய்தி சரியாக இருப்பது மட்டும் போதாது. சரியான (மொழி) அர்த்தமுடைய கருத்துப் பரிமாற்றத் திற்கும் வழிவகுக்க வேண்டும். ஆனால் எப்போதுமே அப்படி இருப்பதில்லை. ஆசிரியர் திறமையாக மொழியைக் கையாள வேண்டும். இந்த மொழி சாதாரண வாசகனுக்குப் புரியுமா? என்பது அவரது கருத்தாக இருக்க வேண்டும் .

Correspondent: (நிருபர்) நகரின் வெளிப்புறத்தே நிகழும் செயல்கள் குறித்த செய்திக் கதைகளைத் தாம் பணியாற்றும் செய்தித் தாளுக்கெனத் திரட்டித் தயாரித்துத் தரும் நிருபர் : இவரே சில வேளைகளில் நிறுவன நிருபர் (*Staff correspondent*) என்றும் அழைக்கப்படுவார். அத்தகைய நேரங் களில் இவர் முழுநேரப் பணியாளராகப் பணியாற்றுவார். சில வேளைகளில் இவரே 'ஆன் ஸ்ட்ரிங்' எனப்படுவார். அப்போது இவர் தயாரித்துக் கொடுத்த செய்திக் கதைகளில் செய்தித் தாளினால் ஒத்துக்கொள்ளப்பட்ட செய்திக் கதையின் அளவை வைத்து இவருக்கு ஊதியப்படி வழங்கப்படும். இவர் ஒரு செய்தி சேகரிப்பு நிறுவனத்தின் முழுநேர ஊழியராக இருக்கலாம் அல்லது பகுதிநேரப் பணியாளராகவும் இருக்கலாம். ஒரு நிருபர் நகரின் வெளியே சென்று செய்திகளைத் திரட்டி வரும்போது தன்னை ஒரு 'கரஸ்பாண்டென்ட்' என்று கூறிக் கொள்வார். ஒளிபரப்பு தகவல் தொடர்பு சாதனங்களில் இச்சொல் அடிப்படைச் செய்தியாளர் என்பதைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பணி வகைப்பாட்டைக் குறிக்கும். மாவட்ட அளவில் முழுநேர மற்றும் பகுதிநேர ஊழியர்கள் இருப்பர். வெளியூருக்குச் சென்று செய்தி சேகரித்து வரும் நிருபர்களும் உண்டு.

***Cough key* : (இருமல் பதியா கருவி)** வானொலியில் பேசுபவர் பேசிக் கொண்டிருக்கும் போது இருமல் வருமாயின் இருமிக்கொள்ளும் பொருட்டுத் தம் முன் இருக்கும் ஒலிவாங்கியைச் சற்று இயங்காமல் வைத்திருக்க இயக்கிக் கொள்ளும் திருகு முனை.

Country copy : (வெளியூர் எழுத்துப்படி) பொதுவாக பெரிய நகரங்களின் புறத்தே உள்ள

பகுதிகளில் அல்லது கிராமங்களில் உள்ள செய்திகளைத் தரும் பகுதி நேரச் செய்தியாளர்களால் எழுதித் தயாரித்துக் கொடுக்கப்பட்ட எழுத்துப்படி.

Cover : (செய்திக் கதையைத் திரட்டி முடித்தமை) ஒரு சம்பவத்தைப் பற்றிய செய்திக் கதைக்காக எல்லா ஆதாரச் செய்திகளையும் பெறுதல் : நிருபர்கள் பல்வேறு வழிகளில் செய்திகளைச் சேகரித்து அச்செய்திகளை எழுதும் வகையில் அதனை எழுதியோ அல்லது தொலைபேசி மூலமாகவோ அலுவலகத்திற்குத் தெரிவித்தல் ஒரு செய்திக்கதைக்குரிய தகவல்களைத் திரட்டி முடித்தமை எனப்படும். ஒருவர் ஒரு செய்திக் களத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள செய்தி ஆதாரங் களைத் தினமும் திரட்டும்போது செய்திக்கதையை அவர் திரட்டி யிருக்கிறார் (Cover a beat) என்று கூறப்படும். இப்பொருளில் 'coverage' என்பது பொதுவாக 'சம்பவம் நடந்த இடத்தில் நிருபர் இருந்து சேகரித்த லோடு' தொடர்புடையது.


Coverage : 1. (செய்தி அளவு அல்லது செய்தி வீச்சு), 2. (ஒலிபரப்பு எல்லை). 1) செய்தித்தாள்களின் செய்தி சேகரிப்பின் வரையறை மற்றும் முழுமை. செய்தித் தாளின் அல்லது இதழின் விற்பனையின் எல்லை மற்றும் முழுமை : 2) ஒலி மற்றும் ஒலிபரப்பு மாதிரிகளால் ஒலிபரப்பு நிலையங்கள் தனக்கென வாசகர்களை ஏற்படுத்திக் கொள்ளும் எல்லைப் பரப்பு ஒலிபரப்பு எல்லை எனப்படும். சில ஒலிபரப்பு முறைகளால் ஒவ்வொரு நிலையத் திற்கும் 'சாத்திய நேயர்கள்' (Potential audience) கிடைப்பர். சில நிலையங்கள் 500 வாட்ஸ மின்சாரத்தால் இயங்கி தங்கள் ட்ரான்ஸ்மீட்டர்களிலிருந்து குறிபிட்ட மைல் தூரம் உள்ள நேயர் களைச் சென்றடைகிறது. மற்றவை 50,000 வாட்ஸ் மின்சாரத்தால் இயங்கிப் பெரிய எல்லைக்குக் குறிப் பாக இரவு நேரங்களில் பல நூறு மைல்களுக்கு அப்பால்உள்ள நேயர் களைச் சென்றடைகிறது. FM நிலை யங்கள் ட்ரான்ஸ்மீட்டருக்கும் ரிசீ வருக்கும் இடையில் உள்ள பார்வைக் கோட்டின் அடிப்படையில் ஏறக்குறைய ட்ரான்ஸ் மீட்டரிலிருந்து 20 முதல் 60 மைல்கள் வரை உள்ள தூரத்திற்கு ஒளிபரப்புகின்றன. அதுவும் ஆன்டெனாவின் உயரத்தைப் பொறுத்து மலை அல்லது உயரமான கட்டிடம் சமிக்ஞைப் பாதையில் குறுக்கே இருப்பின் ஒலிபரப்பு எல்லையைப் பாதிக்கிறது. மின்சாரம், அதிர்வு, நிலை அமைப்பு போன்றவை ஒவ்வொரு நிலையத்திற்கும் ஒரு ஒலிபரப்பு எல்லை மாதிரியைத் தரு கின்றன. எனவே ஒவ்வொரு நிலையத் திற்கும் அளவில் சிறிது வேறுபட்ட 'சாத்திய நேயர்கள்' இருப்பர்.

CPM (Cost per thousand) : (ஆயிரம் பேர் நேயர் என்பதன் பொருட்டு உள்ள விலை நியமனம்) விளம்பரதாரர் ஒரு விளம்பரச் செய்தியை 1000 தனி நபருக்கு , ஒலிபரப்புவதற்குரிய கட்டணம் இவ்வளவு என உண்டு. அத்தொகையைக் கொண்டே ஒரு நிலையம் இணையாகப் போட்டி போடும் நிலையங்களுக்கிடையே சம நிலையடையத் தேவையான புள்ளி கணக்கிடப்படும். அதாவது ஒரு நிலையம் தனது வெற்றிக்கு 1000 வாசகர்களைக் கொண்டதாக உயர்த்திக் கொண்டால் தன் விலையை இவ்வடிப்படையில் காட்டி அமைத்துக்கொள்ளும். போட்டி போடக் கூடிய நிலையம் உடனே தன் விலையை இவ்வடிப்படையில் குறைத்துச் சந்தையில் போட்டி போடும். ஒவ்வொரு நிலையமும் தான் கொண்டிருக்கும் தனது நேயர்களது

அளவு வேறுபாடாகிய மிகச்சிறிய வேறுபாட்டை இந்த விலைக் குறிப்புக்கள் காட்டும். தொலைக் காட்சி நிலையம் ஒவ்வொரு மணிக்கும் தனது அட்டவணையில் உள்ள ஒவ்வொரு நிகழ்ச்சிக்கேற்பத் தனது நேயர் அளவில் ஏற்பட்டுள்ள சிறிய வேறுபாட்டைக் காட்டும் வகையில் இவ்விலையைக் கூட்டவோ குறைக்கவோ செய்யும். 'Cost per million' என்ற பொருளில் CPM என்று குறிப்பிடப்படும்.

CPU : (மையப் பணி அலகு) **Central Processing Unit** என்பதன் முதெலழுத்துச் சுருக்கம். ஒரு கணிப் பொறியின் மையக்கூறு அதன் மையப் பணி அலகே ஆகும். அது சிந்தனைகள் (thinks) அமைப்பின் பகுதி. சான்றாக அப்பகுதி தீர்மானம் எடுப்பதற்கு உரிய விதிகளைப் பின்பற்றுவதைக் கூறலாம். இணைப்புக் குறியிடல், சரிபார்த்தல் முதலியன அத்தகைய பணிகளுள் சில.

Crane movement : (கிரேன் அசைவு முறை) தொலைக்காட்சிக் காமிரா வின் பொதுவான அசைவ வகைகளுள் ஒன்று : மேலிருந்து எடுக்கப்படும் காட்சிகளின் படப்பிடிப்புக் களின் தொகுப்பாகக் காமிரா ஒரு கிரேனில் (Crane) வைக்கப்படுகிறது. படம் எடுக்க ஆரம்பிக்கும் போது கிரேன் கீழிருந்து மேலாக (கிரேன்-அப்) இயங்குகிறது. மேலிருந்து படம் எடுத்த பின்னர் கீழிருக்கும் காட்சியைக் காட்ட கிரேன் மேலிருந்து கீழே இறங்குகிறது (கிரேன்-டௌன்). காமிராவின் இவ்வசைவு முறை கிரேன் மூவ்மெண்ட் என்று அழைக்கப்படுகிறது. விளை யாட்டு அரங்கத்தில் விளையாட்டு வீரரைக் காட்டி விட்டு கிரேன் அப்பில் அப்படியே மேலேறி விளை யாட்டரங்கத்தை அங்கிருந்து காட்டி விட்டு பின்னர் மீண்டும் கிரேன் டௌனில் விளையாட்டு வீரரைக் காட்டுவது இவ்வகை.



Credit line : (குறிப்பு வரி அல்லது எழுத்து வரி) இதழ்களில் ஒரு செய்திக்கதையை அல்லது படத்தினை அல்லது கருத்துப் படத்தினை அளித்த நிறுவனம் இன்னது என்று அந்நிறுவனத்தின் பெயர் பற்றிய குறிப்பைத் தரும் கோடு.

சான்று : "By the Associated Press"

இருநிறுவனம் இணைந்து அளித்த செய்திக் கதையாயின் இருநிறுவனப் பெயரையும் தருதல் வேண்டும்.

சான்று : "Compiled from Associated Press and United Press International"

(காண்க : Byline)

Credits : (நிகழ்ச்சிக் குறிப்புக்கள் அல்லது எழுத்துக்கள் அல்லது தலைப்புக்கள்) தொலைக்காட்சி நிகழ்ச்சியின் தலைப்பு, நிகழ்ச்சியைத் தயாரித்தோர், உதவிப் பணியாற்றி யோர் முதலியன பற்றிய குறிப்புக்கள் நிகழ்ச்சிக் குறிப்புக்கள் எனப்படும். இவை குறைந்த ஆர்வமூட்டும் பகுதிகள். தொலைக்காட்சி நிகழ்ச்சி களில் இடப்பின்னணி, உரையாடல் இல்லாத காட்சிகள், வாசகர்களுக்கு ஆர்வமூட்டும் வலுவான காட்சிகள் முதலியவை பின்னணியில் ஓட அவற்றோடு இக்குறிப்புக்கள் சேர்த்துக் காட்டப்படுவது சிறந்த உத்தி. தொலைக்காட்சி நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் வலுவூட்டாத வகையில் இக்குறிப்புக்கள் அமையுமேயானால் நேயர்கள் நிகழ்ச்சியைக் கவனிக்காமல் எழுந்துபோக ஆரம்பிப்பர். திரைப் படங்களில் இடம்பெறும் இத்தகைய குறிப்புக்கள் தமிழில் 'எழுத்து' என்றும் ஆங்கிலத்தில் 'title' என்றும் குறிப்பிடப் படுகின்றன.

Crime news : (குற்றச் செய்திகள்) சட்டத்தை மீறும் எந்தச் செயலும் குற்றம்தான். குற்றச் செய்திகள் கொலை, துணிகரத் திருட்டு,

கொள்ளை, தற்கொலை போன்ற தலைப்புகளுடன் செய்தித்தாளின் முக்கிய இடத்தை ஆக்கிரமிக்கின்றன. குற்றச் செய்திகளை நாளிதழ்களில் வெளியிடலாம்/ வெளியிடக்கூடாது என இருவிதமான அபிப்பிராயங்கள் உண்டு. பொதுவாக நாளிதழ்கள் 1) தனிநபர் சம்பந்தப்பட்டவை 2) சொத்து சம்பந்தப்பட்டவை 3) பொதுமக்களின் நலனுக்கு எதிரானவை 4) சட்டப் பொறுப்பில் உள்ளோருக்கு எதிரானவை என்ற நான்கு வகையான குற்றச் செய்திகளைப் பிரசுரிக்கின்றன.

Crime report : (குற்றச் செய்தி சேகரிப்பு) குற்றச் செய்திகளைச் சேகரிக்கும் நிருபர், சான்றாக காவல்துறையினரின் ஒத்துழைப்பு இல்லாமல் பணியாற்ற முடியாது. அண்மையில் தகவல் தொடர்பு சாதனச் சமூகவியல் வலலுநர்கள்ஒரு நிருபர் அத்தகைய உயர் அதிகாரிகளுடன் தொடர்பு வைத்திருப்பது எழுதப்படும செய்திக் கதைகளை ஆழமாகப் பாதிக்கலாம் என்று கண்டுள்ளனர். மாநிலஅரசு, ஒரு முககியச் செய்தி ஆதாரம் என்ற முறையில் தகவல் தொடர்பு சாதனச் செய்திகளைக் கட்டுப்படுத்த வாய்ப்பு உண்டு. அது நுட்பமான வழிகளுள் ஒன்று குற்றச் செய்திகளைச் சேகரிக்கும் நிருபர் 1) போலீஸ் அமைப்பை அடிமுதல் நுனிவரை புரிந்திருத்தல் 2) சட்ட பூர்வமாகக் குற்றத்தைப் பற்றிய அறிவைப் பெற்றிருத்தல் 3) குறிப்பிட்ட குற்றம் பறறிப் பூரண அறிவு கொண்டிருத்தல் 4) செயதிகளைச் சட்டத்தை மீறாத முறையில் சரியான நோக்குடன் தரும் திறம் பெற்றிருத்தல் 5) போலீசுடன் நல்ல தொடர்பு கொண்டிருத்தல் ஆகிய பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

Criminal libel :(குற்றவியல் அவதூறு) அவதூறுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாகக் கருதுபவர் அவதூறு வழக்கினைக் குற்றவியல் சட்ட (criminal law) அடிப்படையிலும் தொடரலாம். குற்றவியல் சட்டத்தின்படி அவமதித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருப்பவா அவர் செய்த குற்றத்திற்காகச் சிறைத் தண்டனை அல்லது தண்டம் கட்டுதல் அல்லது இவ்விரண்டு தண்டனைகளையுமே பெறுவார். குற்றவியல் சட்டத்தின்படி ஒரு குழுவினர் மீது நடவடிக்கை எடுக்க முடியும்.
(பார்க்க : Civil libel)

Criticism: (திறனாய்வு) செய்திகள் குறித்து, பொதுவாக அரசியல் செய்தி குறித்து, மக்கள் விவாதிப்பதும் அல்லது வாசிக்கவோ பார்க்கவோ செய்திகளைத் தெரிந்தெடுப்பதும் அவர்களது சொந்த விருப்பு வெறுப்பின் தாக்கத்தினாலேயே என்பதைவிட அது ஒரு தகவல் தொடர்பு சாதனத்தில் தரப்பட்டிருப்பதனாலேயே ; இத்தகைய தெரிவினாலேயே அவர்தம் திறனாய்வுத் திறமும் அமைகிறது என்பர் கட்ஸ மற்றும் லர்சர்ப்.'.பீல்ட் ஆகியோர். சான்றாக எம்.பி. ஏனோக் பவல் என்பவர் அமெரிக்காவில் குடியேறிய வெளிநாட்டவரால் விளையும் ஆபத்துக்கள் பற்றி நிகழ்த்திய உரை ஒளிபரப்பு சாதனத்தில் பரப்பபட 27% மக்கள் அது ஒரு முக்கியமான பிரச்சினை என்றும் 70% மக்கள் அரசு அது குறித்து முடிவு எடுக்க வேண்டும் என்றும் கருதியதைச் சுட்டுவர். அதற்கு முன்புவரை 6% மக்களே குடியேற்றம் பெற்ற வெளிநாட்டினர் ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை என்று கருதி இருந்தனர். இவர்கள் குறித்த செய்தி தகவல் தொடர்பு சாதனத்தில் தரப்பட்டதாலேயே மிக விரைவாக முக்கியச் செய்தியாக

அரசியல் விவாதங்களில் பேசப்பட்டது என்பர். எனவே தகவல் தொடர்பு சாதனத்தில் தரப்படுதலாலேயே மக்களது செய்தித் தெரிவு பெருகி அதன் விளைவாக அவர்தம் திறனாய்வு நுட்பமும் அமைகிறது.

Cropping : (சீவுதல்) ஒரு படத்தை நாம் விரும்பிய வடிவத்திற்கேற்பவோ குறிப்பிட்ட பொருளை வலியுறுத்துவதற்காகவோ அல்லது சுருக்குதல் கருதியோ அதன் சில பகுதிகளை வெட்டுதல். மூன்று அலகு உயரமும் நான்கு அலகு அகலமும் உள்ள வகையில் தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் பார்க்கும் கோண அளவுக்குப் பொருந்தும் வகையில் ஒரு படத்தை வெட்டுதல் உண்டு.

Cross fade : (குறுக்கீட்டு மறைவு) தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பதிப்பித்தலின்போது கையாளப்படும் காட்சி மாற்று முறைகளுள் ஒன்று. தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளில் ஒரு ஒலி நுழையும்போது மற்றொரு ஒலியும் நுழைதல் ; வெளியேறும் ஒலியின் அளவை நிலையாகக் குறைத்து அதே நேரம் உள்ளே வரும் ஒலியின் ஒலி அளவை உயர்த்தி ஒலி ஆதாரங்களை மாற்றுதல். ஒரு ஒலியிருந்து மற்றொரு ஒலிக்கு மாறுதல் இவ்வகைப்படும். (பார்க்க : Fade)

Cross line : (ஒருவரித் தலைப்பு) நாளிதழ்களில் செய்தித் தலைப்பில் பல அடுக்குத் தலைப்பின் ஒரு பகுதியாக ஒருவரித் தலைப்பு அமையும். இது நடுவணாக்கப்பட்டிருக்கும் அல்லது முழுப்பகுதியிலும் அமைந்திருக்கும். இப்போது இது மிகவும் அருகியே கையாளப்படுகிறது.

Cross talk : (குறுக்கீட்டு ஒலிகள்) ஒரு நிகழ்ச்சி ஒலிபரப்பாகையில் எங்கிருந்தோ குறுக்கிடும் தேவையற்ற ஒலிகள்.

Crowded details : (நெருக்கமான தகவல்கள்) ஒரே செய்திக்கதையில் அச்செய்திக் கதை குறித்த பல தகவல் களை அவை குறித்து விளக்கமின்றி அடுத்தடுத்து நெருக்கமாகத் தருதல்.

Crusade : (செய்தித்தாட் போர்) குறிப்பிட்ட மறுமலர்ச்சி குறித்து ஆதரவாகச் செய்தித்தாள் போராடுதல். பொதுமக்கள் நலன் தொடர்பான ஒரு விஷயம் குறித்து பொதுமக்களைச் செயல்படவோ அல்லது செயல்படாமல் இருக்குமாறோ செய்ய அச்செய்தியை மெய்யெனக் காட்டும் பொருட்டு தலையங்கம் எழுதும் ஆசிரியர் குழுவின் அனைவரும் எடுக்கும் முயற்சி ஆகும். இது போராட்ட முயற்சி (Campaign)என்றும் ஒரு நிகழ்ச்சித் தொடர் வரிசை (series) என்றும் நீண்ட செய்திப் பணி (long reporting job) என்றும் குறிப்பிடப்படும்.

C & SC : (தடித்த மற்றும் சிறு தடித்த எழுத்து) தடித்த எழுத்து மற்றும் சிறிய தடித்த எழுத்து (Caps & small caps) என்ற பொருள்பட அச்சுக்கோர்ப்பு அறைக்கு அனுப்பப்படும் எழுத்துப் படியில் குறிக்கப்படும் குறியீடு. நாளிதழ்களில் இது அருகிப் பயன் படுத்தப்படும்.

CSO : (வண்ணப் பிரிப்பு மேல் விரிப்பு) **Colour separation overlay** என்பதன் முதலெழுத்துச் சுருக்கம் வெவ்வேறு ஆதாரங்களிலிருந்து படங்களை இணைத்து மருட்சியைத் தோற்றுவிக்கும் ஒரு மின்னணு வழிமுறை. சான்றாக நிலைய அரங்கில் நிகழ்ச்சி தரும் ஒருவர் ஒரு படச் சூழல் உடைய பின்னணி மீதாகக் காட்டப்படுதல் ; 'Chromakey' என்றும் அழைக்கப்படும்.

CU (Close up) : அருகாமைக் காட்சி. (பார்க்க : Close up shot)

Cub : (ஆரம்ப நிலை நிருபர்) பயிற்சியில்லாத செய்தியாளர் : பணியில் புதிதாகச் சேர்ந்திருக்கும் நிருபர் அல்லது இளம்நிலை நிருபர் : அவர் அப்போதுதான் தன் பணியைக் கற்க ஆரம்பித்திருப்பார்.

Cue : (நிகழ்ச்சி ஆரம்ப அல்லது நிறுத்தற் குறியீடுகள்) ஒளிபரப்பு நிகழ்ச்சியின் பேச்சு, அசைவு, ஒலி விளைவுகள், இசை அல்லது நிகழ்ச்சியின் பிற பகுதிகள் முதலியவற்றை ஆரம்பிக்கவோ அல்லது நிறுத்தவோ செய்யுமாறு எழுத்துப் படிவத்தில் சில குறியீடுகள் மூலமாகவோ அல்லது ஒலிப்பதிவின் போது கையாலோ சொல்லாலோ காட்டுதல். வானொலியில் நிகழ்ச்சி தொடங்க அடையாளம் காட்டும் நிலைய விளக்கு

Cue dot : (ஆரம்ப அடையாளப் புள்ளி) சிறிய வட்ட வடிவிலான புள்ளி. இத்தகைய புள்ளி பதிப்பிக்கப்பட்ட படச் சுருளின் மீது இடப்படும். பொதுவாக படச்சுருளின் வலதுகை ஓரத்தில் உயரத்தில் இடப்படும். இவ்வாறு புள்ளியிடுதல் அச்சுருள் ஒரு முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது என்பதைக் குறிக்கும். மின்னணு அடையாளப் புள்ளிகள் வழக்கமாக சுருளின் இடதுகை ஓரத்தின் உயரத்தில் இடப்படுகின்றன. இது ஒரு நிகழ்ச்சி இன்னும் சிறிது நேரத்தில் முடியப் போகிறது என்பதையும் அடுத்தது ஆரம்பிக்கப் போகிறது என்பதையும் குறிக்கிறது.

Cue sheet : (வானொலி நிகழ்ச்சித் தகவல் தாள்) வானொலி நிகழ்ச்சியின் தொடக்கம் மற்றும் முடிவு பற்றிய தகவல்களை எழுதிவைக்கும் தாள்.

Cultural norms perspectives : (பண்பாட்டு விதிகளின் பரப்புத் தோற்றம்) தகவல் தொடர்பு சாதனங்களின் வலிமையைக் குறிக்கும் சொற்றொடர் இது. தகவல் தொடர்பு சாதனம் மக்களது கருத்துக்களை மாற்றுதல், கருத்துக்களைத் திரும்பத் திரும்பத் தருதல், புது சமுதாய மதிப்புகளை உருவாக்குதல், தற்போது உள்ள சமுதாய மதிப்பில் திருத்தம் கொண்டு வருதல் முதலிய வற்றைச் செய்வதால் நேயர்களை மாற்றச் செய்கிறது. இதன்படி தகவல் தொடர்பு சாதனங்கள் சமுதாயக் கொள்கைகளை உருவாக்கும் ஒரு அளவை ஆகும்.

Cultural transmission: (பண்பாட்டு அனுப்பீடு) சமுதாயத்தின் புது நபர்களுக்கு அச்சமுதாயத்தின் நம்பிக்கை, கொள்கைகளைத் தெரிவித்தல் பண்பாட்டு அனுப்பீடு அல்லது பண்பாட்டுப் பரிமாற்றம் எனப்படும். சான்றாக சமயப் பெரியார் உரை, கல்வி தொடர்பான விரிவுரைகளைக் குறிப்பிடலாம். நாளிதழ்களில் வெளியாகும் செய்திக் கட்டுரைகள் மற்றும் துணுக்குகளும் ஒலிபரப்பு நிகழ்ச்சிகளும் இத்தகைய பரிவர்த் தனைகளைச் செய்கின்றன.

Cursive type : (கையெழுத்து எழுத்துக்கள்) 'கையெழுத்து' எனக் காட்டும் வகையில் தொடர்ந்து சில அடிகளில் பயன்படுதத‌ப்படும் குறிப்பிட்ட வகை அடிப்படை இன அச்செழுத்துக்கள்.

Cursor: (நகர்புள்ளி) கணிப்பொறியில் அதன் திரையில ஓடும் வரிகளில் இன்ன இடத்தில் உள்ள பிழை திருத்தப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டும் பொருட்டு ஒரு எழுத்திலிருந்து மற்றொரு எழுத்துக்கு அல்லது ஒரு வரியிலிருந்து மற்றொரு வரிக்கு ஓடும் நகர்புள்ளி.

Cut : (வெட்டு) 1) தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் காட்சி மாற்று முறைகளுள் இதுவும் ஒன்று. நேயர்கள் ஒத்துக்கொள்ளக்கூடியதும் அர்த்தத்துடன் கூடியதும் எளிமையான முறையிலானதுமான காட்சி மாற்ற முறை இது. காட்சியை மாற்ற காட்சி மாற்று கருவி/மங்கச் செய்யும் கருவி ஆகிய கருவிகள் இப்போது வந்து விட்டன. காட்டப்பட்ட காட்சியைப் பிரித்தல், அழித்தல், திருப்புதல், பின்னுதல் போன்ற பல்வேறு காட்சி மாற்று முறைகள் பயன்படுத்தப் படுகின்றன. காமிராவை ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு நேரடியாக உடனடியாக மாற்றும் முறை இது. செலவு குறைந்ததும் நேயர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் முறையும் ஆகும். திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சி களில் இம்முறை பயன்படுத்தப்படு கின்றது. அடுத்தடுத்து வரும் இரு காட்சிகளை இணைக்கப் பயன்படும் முறை இணைவெட்டு (match cut) எனப்படும். இரண்டு காட்சிகளை நேர் எதிரிடையாகக் காட்டப் பயன்படும் முறை தாவு வெட்டு (jump cut) ஆகும். முரண்பாடான ஒரு இடையீட்டைத் தருவதற்கும் பயன்படும். அரசியல் வாதியின் பேச்சில் இரு மேற்கோள்கள் அடுத்தடுத்து இடம் பெறும்போது இரண்டு காட்சிகளையும் இருவேறு கோணங்களில் ஒன்று அவர் முகத்தை காட்டும் வகையில் மற்றொன்று அவரது தலை பின்னிருந்து தெரியும் வகையில் எடுத்து ஒன்றற்கடுத்து ஒன்றனை இணைத்து ஒன்று பண்ணினால் தாவுவெட்டு முறை கிடைக்கும். திடீரென மாறுபட முகம் அடுத்து தலை என காட்டக் கூடாது. அப்படிக் காட்டினால் வேறு ஏதாவது ஒன்றைச் சுருக்கமாக அவ்விரண்டு காட்சிக்கு மிடையில் காட்ட வேண்டும். வேறு எதையாவது காட்டி விட்டு அடுத்து தலையைக் காட்டுதல் வேண்டும். சில சமயம் எந்த விளக்கமும் இல்லாமல் ஒரு காட்சியை வெட்டி விட்டு அடுத்த காட்சியைக் காட்ட விரும்பலாம். அதாவது உடனடியாக வெட்டிவிட விரும்பலாம். எதிர்பாராத மாற்றமாகிய இது அந்த நேரத்திற்கு வாசகனைக் குழப்பினாலும் ஆர்வத்தைத் தூண்டுவதாக அமையும். 2) செய்தித் தாளில் பயன்படுத்தப்படும் படங்களுக்கு இச்சொல் பொருந்தும். இச்சொல்லைப் பெயர்ச்சொல்லாகப் பயன்படுத்தினால் செய்தித்தாள் ஒன்றில் பயன்படுத்துவதற்குத் தயாரிக்கப்பட்ட ஏதாவது நிழற்படம், வரைபடம், ஓவியம் முதலியவற்றைக் குறிக்கும். வினைச் சொல்லாகப் பயன்படுத்தினால் ஒரு செய்திக் கதையின் அதிகப் பகுதி களைப் பொதுவாக அதன இறுதிப் பகுதியில் உள்ளவற்றை வெட்டிவிட்டு செய்திக் கதையின் நீளத்தைக் குறைப்பதைக் குறிக்கும்.

Cut lines: (வெட்டு வரிகள்) ஒரு செய்திக் கதைக்குத் தரப்படும் படத்தினை விளக்கும் வகையில் செய்திக் கதையின் தலைப்பின் ஒரு பகுதி அமையுமேயானால் அப்பகுதி 'வெட்டு வரிகள்' எனப்படும். அத்தலைப்பைத் தொடர்ந்து விளக்கப் பகுதி அமையும்.

Cut off rule : (வெட்டுக் கோடு) ஒன்றுக்கு மேற்பட்ட பத்திகளுக் கிடையே கிடை நிலையில் அமைக்கப் பட்டுள்ள பிரிப்புக் கோடு. பெட்டிச் செய்திகள், படங்கள், பல பத்தித் தலைப்புக்கள் போன்றவற்றைப் பிரித்துக்காட்ட இக்கோடு உதவும். வாசகனைக் குழப்பமின்றிப் படிப்பதற்கு நெறிப்படுத்த இக்கோடு உதவும்.

Cutting the structure of the news : (செய்திக் கதையின் அமைப்பை வெட்டுதல்) வெட்டுதல், ஒழுங்கு

படுத்துதல், கருத்தோட்டத்தைச் செம்மைப் படுத்தல், சிதைத்தல், முதலிய செய்திக் கதையின் நீளத்தைக் குறைப்பது குறித்துச் செய்தி அறையில் பயன் படுத்தப்படும் சொற்கள். இதற்காகப் பயன்படுத்தப்படும் சொற்கள் ஒரேபோல் எல்லாவிடத்தும் இல்லை. சில செய்தி அறைகளில் 'வெட்டுதல்' என்பது பொதுவான சொல். ஒழுங்குபடுத்தல், கருத் தோட்டத்தைச் செம்மைப்படுத்துதல், சிதைத்தல் போன்றன வெட்டுதல் என்பதன் பல்வேறு அளவுகளைக் குறிக்கும். தேவையற்ற சிறு விளக்கங் களைக் குறைத்தல் ஒழுங்குபடுத்துதல் ஆகும். இதையே இன்னும் ஆழமாகச் செய்தல் கருத்தோட்டத்தைச் செம்மைப்படுத்தல் ஆகும். ஒரு செய்தி யின் மிக முக்கியப் பகுதியை மட்டும் வைத்துக்கொண்டு பிறவற்றை வேண்டவே வேண்டாம் என நீக்கி விடுதல் சிதைத்தல் ஆகும்.

Cylinder press : (உருள் அச்சுப் பொறி) சிறிய பத்திரிகைகளால் மட்டுமே பயன்படுத்தப்படும் அச்சு இயந்திரம். உருளும் உருளியில் தனியாக தாள்கள் உள்ளே கொடுக்கப் படுகின்றன. உருளி அச்சுப்பொறியில் பெரிய உருளி சுழலும்பொழுது அடியில் வைக்கப்பட்டுள்ள தட்டையான அச்சுப்படிவத்தின் மீது காகிதம் அழுந்தி அச்சடிக்கப்படுகிறது. இதில் தானே மையளிக்கும் தொட்டி ஒன்று வைக்கப்பட்டிருக்கும். ஒரே ஒரு தடவை மட்டும் சுழன்று அச்சடிக்கும் அச்சுருளி "பீப்பாய் அச்சுப்பொறி" (Drum press) என்றும் இரு தடவை சுழன்று அச்சடிக்கும் அச்சுருளி "இருசுழல் அச்சுப்பொறி" (Two revolution type) என்றும் நின்று சுழன்று அச்சடிக்கும் அச்சுருளி "நின்று நின்று சுழலும் பொறி" (Stop cylinder) என்றும், ஒரே தடவையில் இருபுறமும் சுழன்று அச்சடிக்கும் அச்சுருளி "இருபுறமும் அச்சடிக்கும் பொறி" (perfecting Press) என்றும் அச்சுருளிகள் நான்கு வகை யாகப் பிரித்துக் கூறப்படுகின்றன.

Dark colours : (ஆழ்ந்த வண்ணங்கள்) பொதுவாக ஒளிபரப்பு நிகழ்ச்சிகளின் அரங்க அமைப்புக்கு வேண்டிய அடிப்படைப் பொருட்களான மரப் பலகைகள், சட்டங்கள், ஆணிகள் ஆகியவை அழுத்தமான வண்ணத்தில் அமைந்திருத்தல் சிறப்புடைத்து. அப்படியானால் அவை தனித்துத் தெரியாமல் இருக்கும்.

Dashes : (இடைக்கோடு) 1) இக் கோடு பல்வேறு நீளங்களில் கையாளப்படுகிறது. ஒரு செய்தித் தலைப்பின் பகுதிகளைப் பிரிக்கவும் செய்திப் பகுதியினின்று தலைப்பைப் பிரிக்கவும் ஒரு செய்திக் கதையை மற்ற செய்திக் கதைகளினின்று பிரிக்கவும் பயன்படும் ; என்றாலும் இது இப்போது மிக அருகியே பயன்படுத்தப்படுகிறது. இது நட்சத்திரங்களின் குறியீட்டினாலான வரிசையையோ அல்லது ஒரு வளைந்த கோட்டினையோ கொண்டதாக இருக்கலாம். இக்கோட்டின் நீளம் குறிப்பிட்ட பொருளை வெளிப்படுத்தும். 2) நிறுத்தக் குறியீடுகளுள் ஒரு குறியீடு.

Data news : (தரவுச் செய்திகள்) கல்கத்தாவில் 1933-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட யுனைடெட் நியூஸ் ஆப் இந்தியா (யு.என்.அய்.) என்ற செய்தி நிறுவனத்தின் துரிதவேகத் தந்திச் செய்திக்குத் தரப்பட்டுள்ள வியாபாரப் பெயர்.

Data speed : (தரவுச் செய்தி வேகம்) அசோசியேடட் பிரஸ் (AP) என்ற செய்தி நிறுவனத்தின் துரித வேகத் தந்திச் செய்திக்குத் தரப்பட்டுள்ள வியாபாரப் பெயர்.

Date line : (தேதி வரி) நாளிதழின் செய்திக் கதையில் அச்செய்தி நடந்த இடமும் தேதியும் ஒரு வரியில் குறிப்பிடப்பட்டிருக்கும். அவ்வரி தேதி வரி எனப்படும். தேதி வரி பயன்படுத்தப் படும் போது அவை முகப்புச் செய்தியின் ஒரு பகுதியாக எழுதப்பட வேண்டும். 'செய்தி எங்கு நடந்தது' என்பதில் தொடங்கி அதைத் தொடர்ந்து எவ்வித இடையீடும் இன்றி செய்தி முகப்பு அமையும். பல செய்தித்தாள்கள் தற்போது தேதி வரியிலிருந்து தேதியை நீக்கி இடப்பெயரை மட்டுமே கொண்டு வெளியாகின்றன. தெளிவாகத் தெரிந்த செய்தியாயின் மாநிலம், நாடு முதலியவற்றின் பெயர்கள் நீக்கப்படுகின்றன. தொலைக்காட்சியில் இடப்பெயர் மட்டுமே பொதுவாகக் கூறப்படுகிறது. ஆனாலும் தேதிக் குறிப்பு என்பது தொலைக்காட்சியில் காட்டப்படாமல் மறைக்கப்பட்டு வருகிறது என்று கூற முடியாது.

Dayside : (நாளிதழ் அலுவலகப் பகற்பிரிவு) பகற்போதில் செய்திகளை அச்சிட்டு நாளிதழைத் தயாரிக்கும் செய்தித்தாள் அலுவலகத்தின் பிரிவு.

DBS (Direct Broadcast Satellite) : (நேரடி ஒளிபரப்புச் செயற்கைக் கோள்) செயற்கைக்கோள் மூலம் தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் அஞ்சல் செய்யப்படும் திட்டங்கள் பல நாடுகளில் நடைபெற்று வருகின்றன. நேரடியாக வீட்டுக்கே சக்தி வாய்ந்த கோள்களின் வாயிலாக ஒளிபரப்புவது இன்னும் சோதனை முயற்சியாகவே இருந்து வருகிறது. கோள்களிலிருந்து கோள் தட்டுக்கள் செய்தி நாடாக்கள் மூலமாகச் செய்தியை ஒளிபரப்பு வதற்கு முயல்வதே இதன் நோக்கமாகும். கோள் தட்டுக்களுக்குத் தேவையான நிகழ்ச்சிகளை மட்டும் தெரிவு செய்யவும் செய்தி நாடாக்கள் மூலம் தேவையானவற்றை மீண்டும் ஒளி

பரப்பவும் தெரியுமா என்பது அய்யமே. நேரடி ஒளிபரப்புச் செயற்கைக் கோள்களிலிருந்து அதிகப் பரப்பிற்கு அதிக அளவில் செய்திகள் ஒளிபரப்பப் படுமானால் செய்தி மக்களைச்சென்று சேர மரபு வழிப்பட்ட வலைப்பிணைப்புகளின் (Networks) நிகழ்ச்சிகள் எந்த அளவிற்குத் தேவைப்படும் என்பது கேள்வியாகும். செயற்கைக் கோள்களே பல செய்திகளைத் தந்துவிடுவதால் அதன்பின் வானொலி, தொலைக்காட்சி முதலியவை எவ்வெந் நிகழ்ச்சிகளை மக்களுக்குத் தருவது என்று மட்டும் ஆராய்ந்தால் போதுமான தாக அமையும்.

Dead : 1. (வேண்டாத செய்திகள்), 2. (அச்சாகிக் கொண்டிருக்கும் செய்திகள்). 1) செய்தித்தாள்களில் பயன்படுத்தப்பட வேண்டாதவை என்று ஒதுக்கித் தள்ளப்பட்ட செய்திகள் ; எனவே இவை செய்தித் தாள்களில் பயன்படுத்தப்பட முடியாது. 2) ஏற்கனவே அச்சில்ஓடிக்கொண்டிருக்கும் செய்தி, அச்செய்தியைக் கோர்க்கப் பயன்பட்ட அச்செழுத்துக்கள், எழுத்துப்படி முதலியவற்றிற்கும் இச்சொல் பொருந்தும்.

Dead area : (செய்தி பெறாப் பகுதிகள்) வானொலி, தொலைக்காட்சிகளின் ஒலி/ஒளிபரப்பில் ஒலிபரப்பப்படும் செய்தியைப் பெறுவதில் மிகவும் தடையுடைய நிலப்பரப்புக்களைக் குறிக்கும். இவை குருட்டுப் பகுதிகள் (blind spots) என்றும் அழைக்கப் படுகின்றன.

Dead line : (நிர்ணய நேரம்) ஒரு குறிப்பிட்ட பதிப்பிற்கான செய்தி வந்துசேர வேண்டிய கடைசி நேரம். நகர்ச்செய்தி மேசை, செய்தி மேசை, எழுத்துப்படி மேசை, செய்தித் தயாரிப்பு அறை முதலிய ஒவ்வொன்றிற்கும் தனித்தனி கடைசி நேரங்கள் உள்ளன. செய்தித் தயாரிப்பு அறையில் பக்கம் முடிவுபெறும் நேரத்திற்கெனக் கடைசி நேரம் உண்டு. ஒரு குறிப்பிட்ட பதிப்பில் ஒரு செய்தி சேர்த்துக் கொள்ளப்படுவதற்கெனக் குறிப்பிட்ட இறுதி நேரத்தை இச்சொல் குறிக்கிறது. இந்நேரத்திற்குப் பின்னர் வரும் செய்திகள் அப்பதிப்பில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டா.

Deadside of a microphone : (ஒலிவாங்கியின் பயன்படா பக்கம்) வானொலி நிகழ்ச்சிப் பதிவில் பயன்படுத்தப்படும் ஓர் ஒலிவாங்கியின் ஒலிபெற முடியாத பகுதியைக் குறிக்கும்.

Deaf aid : (தனிநபர் செவிக் கருவி) காதுடன் சேர்த்துப் பொருத்திக் கொள்ளக்கூடிய கருவி ; நிகழ்ச்சி தருபவர் ஒருவர் நிலைய அரங்கிலோ அல்லது வெளிப்புறக் களத்திலோ இதனைக் காதில் பொருத்திக் கொள்வதால் நிகழ்ச்சித் தயாரிப்பாளரால் தரப்படும் குறிப்புக்களை இதன்வழி பெறுவார்.

Debate : (விவாதம்) கலந்துரையாடல் நிகழ்ச்சிகளைத் தகவல் தொடர்பு சாதனங்களில் அமைப்பதற்கான வழிவகைகளுள் இதுவும் ஒன்று. இரண்டு எதிரெதிர்க் குழுவினர் ஒருவர் உடன்பட்டும் மற்றொருவர் மறுத்துப் பேசுமாறு செய்தலும் ஒருவரை மற்றொருவர் தோற்கடிக்க விரும்புதலும் இத்தகைய நிகழ்ச்சிகளில் நிகழும்.

Decibel : (ஒலி அளவு) ஒலி அளவு அலகு ; ஒலியானது சுத்தமானது ; டெசிபல் என்னும் அலகால் குறிக்கப்படுகிறது. ஒரு டெசிபல் என்பது பெல்லில் பத்தில் ஒரு பாகமாகும். ஒரு டெசிபலானது ஒரு மில்லிவாட் திறனின் பத்து மடங்காகும்.

இதனைக் கண்டுபிடித்த அலெக்ஸாண்டர் கிரகாம்பெல்லின் பெயரால் அழைக்கப்படுகிறது. சில செயல்களின் ஒலி அளவு பின் வருமாறு :

செயல்	ஒலி அதிர்வு
மூச்சுவிடுதல்	10 டெசிபல்
அமைதியான உரையாடல்	20–30 டெசிபல்
சத்தமான உரையாடல்	60 டெசிபல்
குழந்தைகளின் விளையாட்டு	60–80 டெசிபல்
இடி மின்னல்	110 டெசிபல்
விமான இரைச்சல்	90–120 டெசிபல்
ராக்கெட் புறப்படும் சத்தம்	140–170 டெசிபல்

Deck : 1. (அடுக்கு), 2. (அடுக்குத் தலைப்பு அல்லது மூன்றுவரித் தலைப்பு). 1) செய்தித் தலைப்பின் துணைப் பகுதியைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. 2) தலைப்பு இரண்டிற்கு மேற்பட்ட பிரிவாக இருந்து ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு அடுக்காக ஒன்றினொன்று வேறுபட்ட அளவு எழுத்துக்களால் அமைய ஒவ்வொரு அடுக்கின் கீழும் அடிக் கோடு இடப்பட்டிருப்பது அடுக்குத் தலைப்பு எனப்படும். சான்று :

திருச்சி அருகே பயங்கரம்

மருத்துவமனைக்குள் புகுந்து
4 பேருக்கு அரிவாள் வெட்டு

2 பேர் உயிர் ஊசல்

(முரசொலி, 5.2.95, பக்:2)

ஆங்கிலப் பத்திரிகைகளில் ஒரே ஒரு அடுக்கில் தலைப்புகள் அமைகின்றன. ஆனால் தமிழ்ப் பத்திரிகைகளில் முதல் தலைப்பு பெரிதாகவும் அதற்குக் கீழே அடுத்த அடுக்கில் அதைவிட சிறிய தலைப்பும் மூன்றாவது அடுக்கில் மேலும் சிறிய அளவிலும் தலைப்பு அளிக்கப்படு கின்றது. ஆனால் சில தமிழ்ப் பத்திரிகைகள் தற்போது இந்த அடுக்கு முறையைத் தவிர்த்து ஓரடுக்குத் தலைப்புகளாகப் போட்டு வருகின்றன.

Deep etch : (ஆழ் அரிப்பு)விளக்கப் படங்கள், படவுருவங்கள் முதலிய வற்றைப் பதிப்பதற்குப் பலவகையான முறைகள் நடை முறையில் கையாளப் பட்டு வருகின்றன. அவற்றுள் அரித்தல் (Etching) முறையும் ஒன்று. போட்டோபாலிமர் தகடுகள் போன்ற ஆழ்ந்த அரிப்புடைய உலோக அச்சுத் தகடுகள் எழுத்துப்பதிவு அச்சகங் களுக்காக உருவாக்கப்படுகின்றன. உலர்வு எதிரீட்டுப் பதிவு (dry offset) போன்ற அமைப்பில் குழிந்த அரிப்புடைய தகடுகள் பயன்படுத்தப் படுகின்றன.

Defence notice : (பாதுகாப்பு அறிக்கை) D-Notice என்பது அரசு பத்திரிகைகளை ஒழுங்குமுறை சாராத வழிகளில் கட்டுப்படுத்தக்கூடிய தற்கான ஒரு வழிமுறையாகும். இதழாளர்கள் அரசின் எவ்வெச் செயல் களைப் பொதுமக்களின் கவனத்திற் குத் தம் தகவல் தொடர்பு சாதனம் மூலம் தெரிவிக்கக்கூடாது என்று அறிவுறுத்தும் ஒரு வழி 'D-Notice' ஆகும். கருத்தறியும் உரிமைச் சட்டத்தின்படி இதற்குப் பணியத் தேவை இல்லை எனினும் அவர்களது நெடுநாளைய பணியில் பணிய வேண்டிய சூழல்கள் உருவாகின்றன. இதன் வாயிலாக அரசு ஒரு சிறந்த கட்டுப் பாட்டை நிருபர்கள் மீது தொடர்ந்து பராமரிக்கிறது.

Deferred relay : (தாமத ஒலிபரப்பு) முன்னர் நேரடியாய் நிகழ்ந்த நிகழ்ச்சியை வானொலி ஒலிபரப்பில் நேர்முக அஞ்சலாய் ஒலிபரப்ப இயலாதபோது ஒலிப்பதிவு செய்து பின்னர் அதனை ஒலிபரப்புதல்.

Defocus : (குவியமற்று எடுத்தல்) தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பில்

பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளைப் பதிப்பித்தலின்போது காட்சிமாற்று முறைக்காகக் கையாளப்படும் வழி முறைகளுள் ஒன்று. குவியம் (focus) என்பது ஒரு குறிப்பிட்ட பொருளின் உருவம் தெளிவாகவும் துல்லிய மாகவும் இருக்கவேண்டும் என்பதைக் குறிக்கிறது. தொலைக்காட்சிக் காமிராவில் உள்ள ஆடி, அதன்பின் உள்ள ஒளிகவரும் குழாய் ஆகிய இரண்டையும் அருகருகே கொண்டு செல்வதன் மூலமோ அல்லது அவற்றின் இடைவெளியை அதிகப்படுத்துவதன் மூலமோ குறிப்பிட்ட பொருளின் உருவத்தைப் பல்வேறு கோணங்களில் தெளிவாகவும் துல்லியமாகவும் படம் எடுக்கலாம். ஒரு காட்சியை வலியுறுத்தாமல் சிறிது காட்டிவிட்டு மற்றொரு காட்சியை வலியுறுத்தி நன்றாகக் காட்டுதல் குவியமற்று எடுத்தல் ஆகும். ஒன்றை நோக்கிப் படத்தை எடுப்பதிலிருந்து மாற்றி ஆடியை (லென்ஸை) அப்பொருளை நோக்காமல் விடச் செய்வது இவ்வகைக் காட்சி மாற்று முறை ஆகும். நிகழ்ச்சியில் பாத்திரம் முன்பு தன் வாழ்க்கையில் நடந்ததை நினைத்துப் பார்ப்பதாகிய பின்னோக்கு உத்தி அல்லது அடிக்கடி தன் பழைய வாழ்வைத் தற்போதைய வாழ்வினூடே ஒப்பிட்டு நினைத்துப் பார்க்கும் நன வோடை உத்தி போன்றவற்றைக் கையாளுவதற்கான காட்சிமாற்று முறைகள் கரைதல் (dissolve), குவியமற்று எடுத்தல் (defocussing) ஆகிய இரு முறைகள் கலப்பதால் உருவாகின்றன. ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடம் அல்லது ஒரு காலத் திலிருந்து மற்றொரு காலம் ஆகிய வற்றிற்குரிய மாறுபாட்டைக் காட்ட குவியமற்று எடுத்தல் (defocus), மறுமுறை நோக்கல் (refocus)ஆகிய மாற்றுமுறைகள் பயன்படுத்தப்படும்.

சான்று : 1) ஒரு கிராமத் தெருவைப் பகல் நேரத்தில் சிறிதுமட்டும் காட்டிவிட்டு அதாவது தெளிவாக நன்றாகப் படம் எடுக்காமல் பின் அதே தெருவையே மீண்டும் சூரிய அஸ்தமன நேரத்தில் சூரிய ஒளியில் பல்வேறு கோணங்களில் (அதாவது 6 மணி நேரம் கடந்துவிட்ட பின்னர்) எடுத்தலைக் கூறலாம். 2) கதாநாய கனின் கைக்கடிகாரத்தில் மணி 10.30 ஆவதைத் தெளிவாகக் காட்டாமல் விடுதல். அதன்பின் மாலை 5.00 ஆவதை மிக அண்மைக் காட்சியாகக் காட்டுதல். இவ்வாறு ஒரு காட்சியை வலியுறுத்தாமல் மற்றொன்றை வலியுறுத்திக் காட்டும் உத்தி இட, கால மாற்றத்தைக் காட்ட உதவும்.

Delay : **(தாமதம்)** தொலைக்காட்சிச் செய்தி ஒளிபரப்பில் செய்திக்கதை அல்லது கருத்துக்களின் இடையில் தரப்படும் (காணப்படும்) மூச்சுவிடும் அளவுக்கான இடைவெளி. போன செய்தியைக் கணிப்பதற்கும் வரப் போகும் செய்தியில் கவனத்தைச் செலுத்துவதற்கும் இவ்விடைவெளி உதவுகிறது. குறிப்பிட்ட பொருளைத் தனித்துக் காணவும் கேட்போரைக் கவரவும் கேட்போர் மனநிலையைத் திருப்பவும் இவ்விடைவெளி அவசியமானது. 'தலைப்புச் செய்திகள்' என்று செய்தி நிகழ்ச்சியில் முதலில் சொல்வது எச்சரிப்பாகவும் செய்தி முகப்பாகவும் பயன்படுகிறது. இத்தாமதம் இருவகைப்படும். 1) ஒரு செய்திக்கும் மற்றொரு செய்திக்கும் இடையில் விழும் இடைவெளி 2) முதல் செய்தி பற்றிய உரையாடல்களை வெளியிடுவதனால் உரையாடல்களே இடைவெளியாகி அடுத்த செய்திக்குத் தயாராக்குதல்.

Delayed lead : (தாமத முகப்பு) செய்தி எழுதும் போது சூழலைச் சில சமயம் நனகு வெளிக்காட்டி அதிலேயே ஆர்வமூட்டும் வகையில் எழுதிப் பிறவற்றைச் சாதாரண விஷயமாக

எழுதும் முறை உண்டு. இவ்வுத்தி தாமதச் செய்தி முகப்பைப் பயன்படுத்துவதால் கிடைக்கும். இம்முறை வாசகனைப் பல பத்திகளைத் தள்ளி விட்டு செய்திப் பகுதிக்குள் நுழைந்து என்ன நடந்திருக்கிறது என்று அறியும் பொருட்டு தேடச் செய்யும். செய்திப் பணியில் இம்முறை 'ஒரு செய்திக் கதையினுள் பின் தள்ளுதல்' (backing into a story) எனப்படுகிறது.

delete : (நீக்கு) அச்சுப்பிரதியில் ஒரு குறிப்பிட்ட எழுத்தை அல்லது வரியை அல்லது பகுதியை நீக்கு என்பதைக் குறிக்கும் சொல். மின்னியக்கப் பதிப்பு முறையில் எந்நிலையில் ஒரு ஆணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கணிப்பொறிக்குச் சொல்வதற்காக எல்லா அமைப்புக்களும் ஒரு நகரும் இயல்புடைய ஒளிப்புள்ளியைப் (cursor) பயன்படுத்துகின்றன. சான்றாக, Center என்று எழுதுவதாக நினைத்து Canter என்று எழுதியிருந்தால் குறுக்குச் சட்டத்தை அது 'a' மீது விழும்வரை தள்ளி-அதாவது பிறப்பிக்கப்படும் ஆணை குறித்த குறியீடு எந்த எழுத்துக்குரியதோ அந்த எழுத்தின் மீது விழும்வரை தள்ளிவிட வேண்டும். பல முறைகளில் 'e' யை எளிதில் தோன்றச் செய்யலாம். 'a' மறைந்து 'e' அவ்விடத்தில் தோன்றும். 'இடம் மாற்று' (replace) என்பதுதான் ஆணை. ஆனால் அது மறைவாக இருக்கும். சில அமைப்புக்களில் இரண்டு ஆணைகள் தேவைப்படலாம். சான்றாக, முதலில் 'a'வை நீக்கு : அதன்பின் 'e' யைச் செருகு என அமையும். ஒருவேளை நாம் ஒரு எழுத்தை நீக்க விரும்பலாம். நகர்புள்ளியை நீக்கப்பட வேண்டிய எழுத்தின் மீது வைத்து நீக்கு (remove அல்லது delete) என்று அழைக்கப்படும் திருகு கருவியைத் தட்ட வேண்டும். எழுத்து மறைகிறது. காலியாக உள்ள இடம் இயல்பாகவே மூடப்பட்டு விடுகிறது.

Deluxe edition : (சிறப்புப் பதிப்பு) 1) சிறப்பான படங்களுடனும் கலை அம்சங்களுடனும் ஆன அழகிய முறையில் கட்டமிடப்பட்ட (binding) புத்தகம். 2) ஒரு நாளிதழின் ஒரு நாளில் வெளியாகும் பல பதிப்புகளில் ஒரு பதிப்பில் தரமான பேப்பரைப் பயன்படுத்தி வெளியிடப்படும் பதிப்பு.

Demi : (தாள் அளவில் ஒரு வகை)

Demographics : (தனிமனிதரது சமுதாய நிலைப் புள்ளிவிபரங்கள்) தனிமனிதர்களின் சமுதாய, பொருளாதார இயல்புகளையும் வீட்டுடைமையையும் குறிக்கும். குறிப்பிட்ட நிகழ்ச்சியைக் கவனிக்கும் இலக்கு நேயர்கள் (target audience) பற்றிய புள்ளி விபரங்கள். அந்நேயர்களது வயது, பால், இனம், கல்வி, தொழில், வருமானம், வாழும் ஊர் போன்றவையும் பிற இயல்புகளும் இக்குறிப்புக்களில் அடங்கி இருக்கும். இவர்கள் சிலவகை நிகழ்ச்சிகளை மற்றவர்கள் கவனிப்பதைவிட அதிகமாக விரும்பிக் கட்டாயமாகக் கவனிப்பர். 1960–70 களில் இப்புள்ளி விபரக் குறிப்புக்களின் துணைகொண்டு நிகழ்ச்சிகளை ஆராயும் கொள்கை உண்டானது. குறிப்பாக வானொலி நிலையமும் தம் நிகழ்ச்சி குறித்து அவை நேயர்களால் எவ்வளவு விரும்பப்படுகிறது : எப்படிப்பட்ட நேயர்களால் விரும்பப்படுகிறது என்று ஆராய ஆரம்பித்தனர். நேயர்களின் வயது, பால், வேலை, பொருளாதாரம், கல்வி போன்றவற்றிற்கு ஏற்பக் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் விரும்பப் படுகின்றனவா என்று ஆராய்ந்து கண்டனர்.

Descender : (இறங்குமுக அச்செழுத்து அல்லது கீழ்நோக்கு எழுத்து) பு,வு,யு, ஆகிய எழுத்துக் களைப் போல் அச்சுக்களின் கீழ் செங்குத்துக்கோடு அமைந்துள்ள எழுத்துக்கள்

இறங்குமுக அச்செழுத்துக்கள் ஆகும். ஆங்கிலத்தில் P,Y முதலிய எழுத்துக்கள் சான்றாகும். (காண்க : Ascender)

Descriptive lead : (வர்ணனை முகப்பு அல்லது விளக்க முகப்பு) ஒன்றைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல தாம் கண்டவாறே குறிப்பிட்ட காட்சியையும் பின்னணியையும் விளக்கமாகவும் வரைபடம் போலவும் காட்டும் முகப்பு விளக்க முகப்பு அல்லது வர்ணனை முகப்பு எனப்படும். இத்தகைய முகப்பில் நிருபர் கூர்ந்து கவனித்த செய்தி உணர்வைத் தனது வெளிப்பாட்டுத் திறனைத் துணையாகக் கொண்டு விளக்குவார். நிருபரது சொல்லாட்சித் திறம், சொல்லைத் தெரிவு செய்யும் திறம் முதலியன இத்தகைய முகப்புச் செய்தி எழுதுவதற்கு மிகவும் தேவையான கூறுகளுள் சில.

சான்று :

'திருநெல்வேலி டிச.20 : திருநெல்வேலியிலிருந்து தென்காசி சென்று கொண்டிருந்த பஸ்ஸை வழியில் நிறுத்தி கறுப்பு முகமூடி அணிந்த இருவர், கத்தியைக் காட்டி மிரட்டி, பஸ்ஸில் இருந்து ஒன்பது பெண்களின் நகையைக் கழட்டி வாங்கினார். தலையிட்ட பிரயாணி ஒருவருக்குக் கத்திக் குத்து'.

Desk : (எழுத்துப்படி மேசை) எழுத்துப்படி மேசையைக் குறிக்கும் சொல்.

Desk chief : (எழுத்துப்படி மேசைத் தலைமையாளர்) ஒரு குறிப்பிட்ட எழுத்துப்படி மேசைக்குரிய செய்திகளைப் பார்க்கும் முதன்மை நிலை அதிகாரி இவர்.

Desk editor : (எழுத்துப்படி மேசைத் துணை ஆசிரியர்) எழுத்துப்படி வாசிப்பவர்களை அல்லது ஒரு நிருபர் குழுவை மேற்பார்வை பார்க்கும் இரண்டாம் நிலை அதிகாரி இவர்.

Deskman : (எழுத்துப்படி மேசையாளர்) செய்தி அறையில் உள்ள ஆசிரியர்.

Development media theory : (தகவல் தொடர்பு சாதன வளர்ச்சிக் கொள்கை) வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் உள்ள சில பொதுவான சூழல்கள் பிற தகவல் தொடர்புக் கொள்கைகளின் ஆற்றல் சார்ந்த பயன்களைக் குறைக்கின்றன என்ற உண்மையே இப்படி ஒரு தனியான 'வளர்ச்சிக் கொள்கை' தோன்றக் காரணமாகிறது. அத்தகைய பொதுவான சூழல்களாவன : 1) வளர்ச்சியடைந்த தகவல் தொடர்பு அமைப்பிற்குரிய சில சூழ்நிலைகள் இன்மை (சான்று : கருத்துப் பரிமாற்ற அடித்தள அமைப்பு, பணித் திறமைகள், தயாரிப்பு மற்றும் பண்பாட்டுத் தகுதிகள், சாத்திய நேயர்கள் முதலியன இன்மை). 2) தொழில்துறை, திறமைகள், பண்பாட்டுச் சாதனங்கள் முதலியன வற்றில் சில இல்லாமல் போவதால் வளர்ந்த நாடுகளைச் சார்ந்து வாழ்தல். 3) வளர்முக நாட்டுச் சமுதாயங்கள் அரசியல், பொருளாதார, சமுதாய வளர்ச்சி குறித்தவற்றிற்காகத் தம்மை அர்ப்பணித்து அவையே தேசிய பணி என்று கொண்டுள்ளன. 4) வளர் நாடுகள் அகில உலக அரசியலில் தம் ஒத்த இயல்பையும், ஆர்வத்தையும் தெரிந்து வைத்திருக்கின்றன. இத்தகு சூழல்களில் வளர்முக நாடுகளின் தகவல் தொடர்பு சாதனங்கள் செயலாற்று கின்றன.

வளர்முக நாடுகளின் தகவல் தொடர்பு சாதன முக்கிய வளர்ச்சிக் கொள்கைகளாகப் பின்வருவனவற்றை வரையறுப்பர். 1) தகவல் தொடர்பு சாதனங்கள் தேசிய அளவிலான நிலைத்த கொள்கைகளுடன் இணைந்தும் அவற்றை ஏற்றும் உடன்பாடான வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த வேண்டும். 2) பொருளாதார முதன்மைகள் மற்றும் சமுதாயத்தின் வளர்ச்சித் தேவைகளுக்கு ஏற்பத் தகவல் தொடர்பு


சாதனங்களின் சுதந்திரம் வரையறைப் படுத்தப்பட வேண்டும். 3) தேசிய பண்பாட்டுக்கும் மொழிக்கும் தகவல் தொடர்பு சாதனங்கள் தம்நிகழ்ச்சி உள்ளடக்கத்தில் முதன்மை தர வேண்டும். 4) நில, அரசியல், பண்பாட்டு வகைகளில் தம்முடன் மிகவும் நெருங்கிய வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுடனான தொடர்புகளுக்குத் தம் செய்திகளில் முதன்மை தரவேண்டும். 5) இதழாளர்களும் பிற தகவல் தொடர்பு சாதனப் பணியாளர்களும் தம்செய்தி சேகரிப்பிலும் தகவல் பரப்புவதிலும் பொறுப்பும் சுதந்திரமும் கொண்டிருக்கின்றனர். 6) வளர்ச்சி முடிவுகள் குறித்த ஆர்வத்தினால், மாநிலங்கள் தகவல் தொடர்பு சாதன நடைமுறைகளின் மீது தலையிடுவது அல்லது வரையறைப்படுத்துவது (துணிக்கை, உதவித்தொகை, நேரக் கட்டுப்பாடு) உரிமை உடையது என்று நியாயப்படுத்தப்படலாம்.

Deviance amplification : (விலகல் பெருக்கம்) விலகல் பெருக்கம் என்ற கருத்தின் மூலம் தகவல் தொடர்பாளர்களால் உலக நடப்பில் உள்ள செய்திகள் அடிக்கடி மிகைப்படுத்திக் கூறப்படுவதை மட்டும் சமூகவியலார் குறிப்பிடவில்லை ; தகவல் தொடர்பு சாதனங்கள் விலகல் குறித்த கருத்துக்கள் பற்றிச் சித்திரிக்கும் புனைகதை, கதை அல்நிகழ்ச்சிகள் முதலியவற்றைக் காட்டிச் சமூக மாற்றம் பற்றிய விழிப்புணர்வைத் தனிமனித நடத்தையில் ஏற்படுத்துகின்றன என்பதையும் குறிப்பிடுகின்றனர். தகவல் தொடர்பு சாதனங்கள் இயல்புக்கு மீறிய (bizarre), அயற்பண்புடைய (exotic), வன்செயலான (outrageous), விலகல் பண்புகளில் (deviant behaviour) ஆர்வம் கொண்டுள்ளன. செய்திகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்திலிருந்து இவை பற்றிய முடிவுக்கு வரலாம். பொதுவாக அடிக்கடி இடம்பெறும் செய்திகள் பொதுச் செய்திகள் ஆகும். மற்றவை விலகல் செய்திகள் ஆகும். விலகல் செய்திகளுக்குப் பொதுவாகக் குறைவான இடம் தகவல் தொடர்பு சாதனங்களில் கொடுக்கப்படுகிறது.

Diary story : (நாட்குறிப்புச் செய்திக்கதை) ஏற்கனவே செய்து வைத்திருந்த முன் ஏற்பாட்டின்படி சேகரிக்கப்பட்ட செய்திச் சம்பவங்கள். சான்றாக, பின்வரும் முக்கிய தினங்கள் பற்றி சேகரிக்கப்பட்ட செய்திச் சம்பவங்களைக் குறிப்பிடலாம்.

ஜன. 1 – புத்தாண்டு
≥ 14–28 – விலங்குகள் பாதுகாப்பு வாரம்
பிப். 14 – தாய்மார் தினம்
≥ 30 – சர்வோதய தினம்
மார்ச் – 1–8 சர்வதேசப் பெண்கள் தினம்
செப்.– 15 அறிஞர் அண்ணா பிறந்த தினம்
நவ. – 1 வறுமை ஒழிப்பு தினம்
டிசம். 1 – உலக எய்ட்ஸ் தினம்
டிசம். 23 – உலகப் பெண்கள் தினம்

Diffused light : (பரவும் ஒளி) தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தயாரிப்பின் போது ஒளி அமைப்பைப் பலவிதக் கருவிகளைக் கொண்டு ஏற்படுத்துகின்றனர். அக்கருவிகள் ஏற்படுத்தும் அவ்வொளி வகைகளுள் ஒன்று பரவும் ஒளி. பரவும் ஒளி பரவலாகச் சென்று விரிந்த இடத்தில் பொதுவாகத் தெரியும். நிழல், ஒளி வேறுபாடு அவ்வளவாக இராது.



Digital recording : (எண்ணிலக்கப் பதிவு முறை) மின் வடிவங்களை எண்ணிலக்க வடிவத்தில் மாற்றிச் சேமித்து வைத்தல். இவ்வாறு மின் வடிவங்களை எண்ணிலக்க வடிவில் சேமித்து வைக்க உதவுவது ஒரு

மின்னணுக் கருவியே. இக்கருவி மின் வடிவ இயல்புகளை அளந்துவைக்க ஒவ்வொரு அளவும் ஒரு எண் மதிப்பு தரப்பட்டு காந்த நாடாவில் பதிவு செய்யப்படுகிறது. மீண்டும் திருப்பி ஒளிபரப்பு செய்யும்போது மின் வடிவங்கள் முந்தைய வடிவத்தை ஒத்தனவாய் இவ் அளவுகளிலிருந்து மீட்டுருவாக்கப்படுகின்றன. துல்லியச் சிறப்பு கருதியே இத்தகைய பதிவு மேற்கொள்ளப்படுகிறது.

Dingbat: (அச்செழுத்தில் உள்ள அலங்காரம்) பொதுவாக எந்த அச்செழுத்து அலங்காரத்தையும் குறிக்கும்.

Dinky dash : (சிறு இடைக்கோடு) மிகச் சிறிய இடைக்கோடு. ஒரு 'எம்' மட்டுமே நீளமுடையதாய இருக்கும். தற்போது மிக அருகியே பயனபடுத்தப் படுகிறது ஒரு பெரிய இடைக் கோட்டினால செய்திக் கதையின் பகுதிகள் பகுக்கப்பட, அப்பகுதிகளுக் குள்ளும் உள்ள துணைப்பகுதிகளைப் பிரிக்க இந்தக் கோடு பயன்படுத்தப் படுகிறது.

Direct entry: (நேரடி நுழைவு இயந்திரம்) தன் ஒரு பகுதியாகிய பொத்தான் பலகை வழி இயங்கச் செய்யப்படக் கூடிய ஒரு அச்சுக் கோர்ப்பு இயந்திரம்.

Directional light : (பாயும் ஒளி) தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பின்போது ஏற்படுத்தப்படும் ஒளி வகைகளுள் ஒன்று. ஒரு சின்ன இடத்தின்மீது குறிப்பாகச் சென்று பளிச்சென விளங்கும் ஒளி பாயும் ஒளி ஆகும். 'ஸ்பாட் லைட்' (Spot light) எனப்படும் கருவி இவ்வொளி தரும்.

Direct lithography : (நேரடி எழுத்தச்சுப்படிம முறை) எழுத்தச்சு முறை (letter press) , நிழற்பட எழுத் தச்சுப் படிம முறை (photolithography) ஆகிய இரண்டன் சில கூறுகளை உள்ளடக்கிய அச்சுத் தகட்டு ஆக்கத்தின் (plate making) ஒருவகை முறை இது. இப்பொறியில் இரு உருளிகள் உள்ளன. ஓர் உருளி மையைக் கொண்டு வந்து தகட்டின் மீது தடவும். பிறகு ஒரு கனமான உருளைமூலம் அமுக்கப்படும். எழுத்தச்சு முறையில் உள்ளது போல தகடு நேரடியாக ஒரு நல்ல தெளிப்பானின் உதவியுடன் தாளின் மீது அச்சிடுகிறது. ஆனால் அத்தகடு எதிரீட்டு அச்சிடு முறை (offset) போல ஒரு குழிந்த உலோகச் செதுக்குத் தகடாக இருக்கும்.

Directorial : (ஒரு பக்க ஒலி) ஓர் ஒலி வாங்கியின் ஒரு பகுதியை அதிகமாய் ஒலிபெறச் செய்தல் ; ஒலிபரப்பு முறையிலும் இவ்வாறு ஒருமுகப படுத்தும் ஒலிச் செலவு உண்டு.

Directory : (கணிப்பொறிக் கோப்பு களின் அட்டவணை) ஒரு கணிப்பொறி யின் நினைவகத்தில் உள்ள கோப்பு களின் அட்டவணை. ஆசிரியர் இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட வரிசையில் குறியீட்டு வடிவத்தில் என்னென்ன இருக்கின்றன என்று தெரிந்து கொள்ள முடியும். அவை பொதுவாக சிறு குறிப்பாக, அல்லது செய்திக் கதையின் முதல் சொற்களாக இருக்கும். அவற்றின் நீளம், வகைப்பாடு, ஆதாரம் முதலிய குறிப்புகளும் இடம் பெற்றிருக்கும்.

Direct proof : (உடனடிப் பிழை திருத்தப் பிரதி) பிழைகள் அதிகமுள்ள பிழைதிருத்தப் பிரதி. ஏராளமான குறிப்புகளைக் கொண்ட பிழை திருத்தப் பிரதி சாதாரணமாகப் படிக்க முடியாத அளவு அடித்தல் திருத்தல் உள்ள பிரதி.

Direct quotation lead : (நேரடி மேற்கோள் முகப்பு) செய்தி முகப்பு வகைகளுள் ஒன்று. செய்தி எழுதும்போது செய்தியை வெளியிட்ட நபரின் பேச்சில் அமைந்த முக்கியத் தொடர் என்று முதல் பத்தியில் நேரடியாக மேற்கோளாகத் தரப்பட்டு செய்தி எழுதும் முறை உண்டு. ஆனால் இந்த நடை அடிக்கடி பயன்படுத்தப்படுவதில்லை. சில நாளிதழ்கள் இம்முறையை விரும்புவதில்லை. ஏனெனில் அதிகமாக ஒருவரது கூற்றைப்பயன்படுத்திய ஒரு தோற்றத்தைத் தந்துவிடும். எழுதுவதற்கு மிக எளிமையான ஒரு முறை இது.

சான்று :

"இலங்கை இனப்பிரச்சினைக்கு
அமைதித் தீர்வு காணத்
தொடர்ந்து பாடுபடுவேன்"
என்று தெரிவித்துள்ளார்
அதிபர் சந்திரிகா குமாரதுங்கா.

Disc recordings : (இசைத்தட்டுப் பதிவுகள்) பல ஒலிபரப்பு இசைத் தட்டுக்கள் 1 நிமிடத்திற்கு 45 அல்லது 33 சுழற்சிகளில் (Revolutions Per minute-RPM) ஒளிபரப்புவதற்கெனத் தயாரிக்கப்பட்டவை. பழைய பதிவுகள் மற்றும் ஒலிபரப்புப் பதிவுகள் 78 RPM அளவில் சுற்றுகின்றன. ஒரு மின் ஆற்றலுக்குரிய ஒலிபரப்புப் பதிவு (Electrical transcription-ET) என்பது அதிக நேர ஓட்டமுடைய இசைத் தட்டைக் குறிக்கும். அவை ஒலிபரப்புதல் பணிக்கெனவும் சில குறிப்பிட்ட தடவைகள் மட்டுமே ஒலிபரப்புவதற்கும் வடிவமைக்கப் பட்டவை. அதிக நாட்கள் அவற்றை உபயோகிக்க முடியாது. அவற்றில் கீறல்கள் விழும். அதிகமாக வானொலி அலை அதிர்வின் அளவை உண்டு பண்ண முடியாது. ஒலிபரப்புப் பதிவுகள் ஆகிய இவை முடிந்த நிகழ்ச்சிகள், விளம்பர வரிசைகள், அறிவிப்புக்கள் முதலியவற்றை உள்ளடக்கியவை. இவை அயல்நாட்டு நிறுவனங்களின் பொதுமக்கள் சேவை வாயிலாகப் பகிர்ந்தளிக்கப்படுபவை. பல நிலையங்கள் ஒலிபரப்புப் பதிவு செய்யப்பட்டசெய்திகளை ஒலிநாடாவுக்கோ உறை நாடாக்களுக்கோ குறிப்பாக அடிக்கடி ஒலிபரப்பப்படும் விளம்பரங்கள் வரிசைக்கோ மாற்றி விடுகின்றன.

Discussion programmes : (கலந்துரையாடல் நிகழ்ச்சிகள்) வானொலி, தொலைக்காட்சி முதலிய தகவல் தொடர்பு சாதனங்களுள் தரப்படும் நிகழ்ச்சி வகைகளுள் ஒன்று. இந்த நிகழச்சியில் கருத்துப் பரிமாற்றங்கள், செய்திப் பரிமாற்றங்கள் முதலியன ஓரளவு நிகழ்த்தப்பட்டு சிக்கலுக்கான தீர்வை உண்டாக்கும் பொருட்டுச் சில குறிப்பிட்ட வினாக்கள், பிரச்சினைகள் மீது கலந்துரையாடல் நிகழ்த்தப்படும். இங்கு கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதே நோக்கம்.

Discussion script : (கலந்துரையாடல் எழுத்தறிக்கை) கலந்துரையாடலுக்காக எழுதிய குறிப்புக்கள் கொண்ட எழுத்தறிக்கை.

Display : (காட்சியாக வை) விளம்பரங்களை அழகுபடுத்திச் செய்தித் தாள்களிலும் இதழ்களிலும் அங்கங்கு காட்சியாக இடம்பெறச் செய்தல்.

Display advertisements : (பெரிய விளம்பரம்) விளம்பர நிறுவனங்களால் சிறப்பாக உருவாக்கப்பட்ட பெரிய அளவு விளம்பரங்கள் : இவை பத்திரிகைகளுக்கு அழகூட்டுவதுடன் வருமானத்தையும் தேடித்தரும்.

Display types : (சிறுவேலை எழுத்துக்கள்) அச்சு எழுத்துக்களில் ஒருவகை. ஒரு செய்திக்கதையில்

அல்லது விளம்பரத்தில் உடல்பகுதியில் அச்சிடுவதற்குப் பொதுவாகப் பயன் படுத்தப்படும் அச்செழுத்துக் களை விட பெரியதும் கனமானதுமான அச் செழுத்துக்கள். 14 புள்ளி அளவுக்கு மேற்பட்ட அளவுள்ள எழுத்துக்கள் இவை. 'Job types' என்றும் அழைக்கப் படுகின்றன.

Dissolve : (கரைதல்) தொலைக் காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பில் காட்சி மாற்று முறைகளுள் ஒன்று. 'ஆழ்த்துதல்' என்னும் இம்முறை மென்மையாகக் காட்சி மாற்றும் முறை ஆகும். இரு காட்சிகளையும் ஒரே நேரத்தில் சிறிது நேரம் காட்டுவதன் மூலம் மெதுவாக இரண்டு உருவங் களை இம்முறை இணைக்கிறது. முதல் காட்சி தேயும் போது இரண்டாம் காட்சி மெதுவாக, முதலது முற்றிலும் தேயும் முன்பே, நன்கு தோன்ற ஆரம்பிக்கிறது. காட்சி மாற்றலுக்குத் தங்களைச் சரிசெய்து கொள்ள நேயர்களுக்கு இம்முறை அதிக நேரம் தருகிறது. நேயர்கள் அடுத்ததை வாசிக்க அல்லது பாாக்கத் தயாராகிக் கொள்ளுகிறார்கள். மேலும் இரண்டு காட்சிகளுக் கிடையே ஒரு காட்சிக்கும் மற்றொரு காட்சிக்கும் இடையில் உள்ள தொடர்பு நிலைக் கிறது. இரண்டு காட்சிகளுக் கிடையே அந்த நேரத்தில் தேயும் காட்சி மனதில நின்று நிலைகக உதவுகிறது.

Distance : (தூரம்) வானொலியில் யார் யார் எவ்வளவு தள்ளி நிற்கிறார்கள் என்பதைக் கண்ணால் காண முடியாமல் செவிப்புலனால்தான் நேயர்கள் உணரவேண்டியுள்ளதால் யார் யார் எவ்விடத்து நிற்க வேண்டும் என்பதும் வசனத்துடன் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும் நேயர்கள் ஒலிவாங்கியுடன் இருப்பதாகக் கொண்டு இரு நடிகரில் ஒருவரைத் தூரத்தில் இருக்கிறார் என உணர்த்த விரும்பினார் எனில் அந்த நடிகர் ஒலிவாங்கியிலிருந்து சற்று தள்ளி நிற்க வேண்டும் என எழுத வேண்டும். இரு குரல்களுமே தள்ளி இருக்க வேண்டுமெனில் 'தூர ஒலி' (off-mike) என்பதையும் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

Distortion : (சிதைவு) தொலைக் காட்சியில் ஏற்படும் ஒளிச் சிதைவு : கட்புலனுக்கு வெறுப்பை ஏற்படுத்தக் கூடியது.

Distribution : (அச்செழுத்துப் பிரிப்பு) இயந்திரவழித் தானியங்கு அச்சுக் கோர்க்கும் முறைக்கு முற்பட்ட செய்தித் தயாரிப்பு அறையில் 1) அச்செழுத்துக்களைக் கோர்த்துப் பிழை திருத்தியானவுடன் அச்சடிக் கப்பட்ட அச்சுத் தொகுதியைத் தனித்தனி எழுத்தாகப் பிரித்தெடுத்து மீண்டும் அச்செழுத்துப் பெட்டியில் அவ்வவ்வெழுத்துக்களை அவ்வப் பிரிவு அறையில் பிரித்துப் போடுதல் 2) லைனோ டைப்பு அச்சிடு முறையில் அச்சடித்தல் முடிந்த பின்னர் வரி வார்ப்பு இயந்திரத்தில் அச்சுருக்களை எடுத்து எழுத்துருக்களை வேறாகவும் இட நிரப்பிகளை வேறாகவும் பிரித்து அவற்றைத் தத்தம் இடத்திற்குச் செலுத்தும் எஃகுத்தடி வழி உள்ள அமைப்பு.


Diversity : (பன்முகத்தன்மை) தகவல் தொடர்பு சாதனங்களில் காணப்படும் பன்முகத்தன்மைகள் பத்திரிகைச் சதந்திரத்தின் விரும்பத்தக்க விளைவாகும். இவை, இரு துணைக் கொள்கைகளின் அடிப்படையில் எழுகின்றன. அவை : 1) பிரதிபலிக்கும் பன்முகத்தன்மை (Reflective Diversity) 2) திறந்த கருத்துரிமை (Open access).

தகவல் தொடர்பு சாதனங்கள் மீது ஒரே நிறுவனமே ஒட்டுமொத்த ஏகபோக உரிமை எடுத்துக் கொள்வது அவற்றி

டையே நிலவும் வேறுபாடுகளைக் குறைத்துவிடும் ஆபத்து டையது. ஒரு நாளிதழுக்குள்ளேயே பல்வேறு வகைச் செய்திகள் (பல்வேறு வகைச் செய்தித் தலைப்புக்கள் இருத்தல்) அளிக்கப் படுதலும் ஒரு நாளிதழுக்குள் பன்முகத் தன்மையை நல்கும். அரசியல் கருத்து குறித்துப் பல்வேறு நபர்களின் வேறுபட்ட கூற்றுக்களைத் தருதலும் பன்முகப் பரிமாணத்தை ஒரு நாளிதழுக்கு நல்கும். நாளிதழ் வெளியாகும் சமுதாயத்தில் நிலவும் மத, இன, வகுப்பு வேறுபாடுகளை நாளிதழ் அப்படியே வெளிக் கொணர்ந்து காட்டுதல் அவசியம் என்பது பன்முகத்தன்மை தொடர்பான ஒரு கருத்து. இக்கொள்கைப்படி, தகவல் தொடர்பு சாதனப் பன்முகத்தன்மைகள் சமுதாய வேறு பாடுகளுடன் ஏறக்குறைய ஒத்த அளவில் இணைந்து செல்ல வேண்டும். இவ்வேறுபாட்டுப் பிரதிபலிப்பு 'நிலைத்த தன்மை', 'இயைபு' முதலியவற்றுடன் மிகவும் தொடர்புடையது.

DNS (Director-News Services) : (செய்திப் பணி இயக்குநர்) அகில இந்திய வானொலியின் செய்திப பணிகளின் பிரிவின் தலைவர்கள் இவ்வாறு குறிப்பிடப்படுவர்.

Doctor blade : (சீர்ப்படுத்தும் தகடு) அச்சகங்கள் படங்களின் உருவப் பகுதியையும் உருவமல் பகுதியையும் பிரிக்கும் சில முறைகளினால் உருவப் பகுதியானது மையைத் தாளுக்குக் கொண்டு செல்வதன் மூலம் உருவத்தைத் தாளில் பதிக்கின்றது. நிழற்படச் செதுக்குப் பாள் முறையில் (gravure printing) அமுக்கப்பட்ட உருவப் பகுதிகளில் மட்டுமே மை படுமாறு செய்யும் வகையில் தகட்டுப் பகுதியின் பரப்பைச் சுத்தம் செய்யும் பிளேடு.



Docu drama : (விளக்க நாடகம்) 'docu' என்ற சொல் வரலாற்று உண்மை களைக் குறிக்கும். 'docudrama' என்ற சொல் அண்மைக் காலமாக வழங்கி வருகிறது. வரலாற்று உண்மைகளை உள்ளடக்கி முற்றிலும் விளக்கப் படமாகவும் அல்லாமல் ஒரு வகையில் நாடகமாக நாடக வளர்ச்சியுடன் எடுக்கப்படும் நிகழ்ச்சிகள் இவ்வகைப் படும்.

Documentary : (விளக்கப்படம்) நாடகத்திற்கு அடுத்தபடியாகத் தொலைக்காட்சியின் மிகச்சிறந்த வடிவமாகக் கருதப்படும் நிகழ்ச்சி விளக்கப்படம் ஆகும். ஒலிபரப் பாளர்கள் செய்தி, சிறப்பு நிகழ்ச்சி, சிறப்புச்செய்திப் படம், நாடகம் முதலியவற்றைப் போலவே விளக்கப் படமும் சிறந்த வடிவம் என்று கருது கின்றனர். விளக்கப்படம் படைப்புக் கலைகளைத் தொகுக்க மட்டுமன்றி கடந்த கால நிகழ்ச்சிகள், நடப்பு நிகழ்ச்சிகள், எதிர்கால எதிர்பார்ப் புக்கள் முதலியவற்றையும் பொது மக்களுக்குக் காட்டும் குறியீடாக அமைகிறது. சில வேளைகளில் ஒரு நிகழ்ச்சியிலேயே நாடக வடிவத்தில் அறிவுபூர்வமான விஷயங்கள் மற்றும் உணர்ச்சி இரண்டையும் கலந்து இறப்பு, நிகழ்வு, எதிர்வைக்காட்டி விடுதல் உண்டு.

வடிவம் : விளக்கப்படம் நாடகம் போலவே இருப்பினும் நாடகம் அல்ல. உண்மைக் கதை பற்றிய உண்மைத் தயாரிப்பு இது. உண்மையல்லாததைக் கூட விவரித்தல், பதிப்பித்தல் ஆகியன உண்மை போல ஆக்கிவிடும். உண்மையான செய்திகளை உடைய தாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அதிகார பூர்வமான, உண்மையிலே தொடர்புடைய பாத்திரங்களை எடுத்துக்கொண்டு அதைப் புனைகதை போல அவர்கள்

வாழ்வின் சம்பவங்களை ஆக்கும்முறை விளக்கப் படத்திற்கு உண்டு. வாழ்க்கையிலிருந்து பாத்திரங்கள், சூழல் முதலியவற்றை எடுத்துக் கொண்டு அவற்றைக் காட்டி ஒரு பாதி விளக்கம் கலந்த ஒரு கூட்டுக் கலவைப் படமாக விளக்கப்படம் அமையும். விளக்கப்படம் பிரச்சினைகள், மக்கள், சம்பவங்கள் பற்றியதாக இருப்பினும் அது செய்திக் கதை (news story) அல்ல. இது நமக்குத் தெரிபவற்றைப் பற்றிய ஆய்வு ஆகும். செய்திக்கதையை விட அது ஆழமாகச் சென்று என்ன நடந்தது; ஏன் நடநதது என்ற காரணங் களையும் ஆராய்கிறது. அதில் ஈடுபட்ட மக்களின் குணங்கள், உணர்வுகள், மற்ற பொதுமக்களின் (பாதிக்கப் படுவோர்) கருத்துக்கள் முதலிய வற்றையும் காட்டும்.

செய்திக கதையில் துல்லியமான செய்தி முக்கியம். விளக்கப்படத்தில் விளக்கம் முக்கியம். களத்திலேயே விளக்கப்படம் எடுக்கப்படும். அரங்கில் எடுககப்படு வதைவிட நன்றாக இருக்கும் என்று சொல்லமுடியாது. சில சமயம் அரங்கிற்குள்ளும் தயாரிக்கப்படும். களத்தில் எடுப்பதன் மூலம் விளக்கப் படத்தில் சம்பவங்களையும் மக்களையும் அப்படியே நேரடியாக ஒளிபரப்பில் காட்டமுடியும. இது விளக்கப் படத்திற்கு உயிரூட்டுகினறது.

தயாரிப்பு : விளக்கப்படத்திறகு எழுதுபவர் முதலில் ஒரு கருத்து வைத் திருக்க வேண்டும். தான் தயாரிக்கப் போகும் விளக்கப்படத்தின் நோக்கம், பார்வைக் கோணம் முதலியவற்றைத் தீர்மானித்தல், விளக்கப்படம் குறித்து நூலகத்தில் ஆய்வு செய்தல், இடத்தையும் மக்களையும் நேரில் காணல், ஒளி, ஒலிப்படம் தயாரிப்பது பற்றிப் பரிசோதித்தல், ஒரு வடிவம் தயாரித்து வைத்துக்கொள்ளல், எழுத்துப்படிவம் (script) எழுதத் தொடங்குதல், ஒளி நாடாவில் உண்மைக் காட்சிகளைப் படம் எடுத்துப் பதிவு செய்தல், முகப்புச் செய்திகளை எழுதிச் சேர்த்தல், ஆரம்ப விளக்கங்களைச் சேர்த்தல், அதன்பின் உள்ள செய்திகளைச் சேர்த்தல், இறுதிப் படிவத்தை எழுதித் தயாரித்தல், இறுதியாகக் காட்சிகளை வெட்டிப் பதிப்பித்தல் முதலியன இதன் தயாரிப்பில் உள்ள பல்வேறு பணிகள் ஆகும்.

உத்திகள் : மனித ஆர்வமே விளக்கப்படத்தின் அடிப்படை ஆகும். செய்தியைப் பற்றிய விபரங்களை, உண்மைகளைத் (facts) தரப் போகிறோம் என்றாலும் வறட்சியாக இல்லாமல் நாடக பாணியில் தர வேண்டும். பாத்திரங்கள், முரண், முரண் வளர்ச்சி, சிக்கல், தீர்வு என்பன போன்று நாடக உத்திகள் இங்கும் பயன்படுத்தப்படுவதுடன் சிறப்புப் பின்னணி, பின்னணி இசை, விளக்கம், பாதிக்கப்பட்ட மனிதனைக் காட்டல் முதலியனவும் சேர்க்கப்படும். விளக்கம் கூறுபவரின் பங்கு அளவாக இருக்கவேண்டும். அதிகமாகி விட்டால் கூறவரும் செய்தியிலிருந்து நேயரை வேறு பக்கம் இழுத்துவிடும். வெறும் உரைபோல் இருப்பதையும் தவிர்க்க வேண்டும். கூறவரும் கருத்து தெளிவாகவும் சுருக்கமாகவும் இருக்க வேண்டும்.

Documenting lead : (முகப்பை விளக்குதல்) முகப்பு சிறியதோ, பெரியதோ, எந்த அளவினதாயினும் சரி, அதற்குரிய தகுந்த தேவையான விளக்கம் செய்திக் கதையின் உடற்பகுதியில் இல்லையெனில் ஒட்டுமொத்தமாக அச்செய்திக் கதைக்குச் சிறப்பில்லாமல் போய்விடும். செய்தி முகப்பில் உள்ள எல்லாத் தொடர்களும் செய்திக் கதையில்

உள்ள தகவல் ஆதாரங்களின் துணை யால் மேலும் விளக்கப்பட வேண்டும். இல்லையெனில் அச்செய்திக்கதை பயன்படுத்தப்பட முடியாது.

Dolly : (முன்பின் அசைவு முறை) தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பில்



படக் காட்சிகளைத் (shots) தரும் பல்வேறு வகைக் காமிரா அசைவு முறைகளில் இதுவும் ஒன்று. காமிரா முன் பின்னாக இயங்குவது முன்பின் அசைவுமுறை (dolly) ஆகும். காமிரா ஒரு பொருளை அல்லது ஒரு செயலை நோக்கி முன்னதாக அருகே சென்று (dolly in) பின்னர் பின்னே நகர்ந்து (dolly out) வருகிறது 'டாலிஸ்டாண்ட்' (dolly stand) என்ற சொல் சக்கர முடைய சிறிய மேடையைக் (நகரும மேடை) குறிக்கும். இத்தகைய அசைவு முறையைக் கையாண்டு எடுக்கப்படும் காட்சிகள் உண்மைத்தன்மை, விரைவு, தனி பாணி முதலியவற்றைத் தருவதாக நேயர்கள் கருதுகின்றனர். அணுக்க நிரலீட்டு முறை (zoom) ஒரு காட்சியை நேயருக்கு மிக அருகே கொண்டுவந்து காட்டுகிறது. முன்பின் அசைவு முறை நேயரைக காட்சிக்கு அருகில் இழுத்துச் செல்கிறது. பொருளை நோக்கி நேயரைக் கொண்டுவருவதால் இதுவே சிறந்த முறை என்று கருதப்படுகிறது. நகரும் மேடையில் காமிரா வைக்கப்பட்டு அந்த மேடை காமிரா பொருளை நோக்கி முன்னோ அல்லது பின்னோ நகர முன்பின் அசைவு முறை உதவுகிறது. இதையே அணுக்க நிரலீட்டு ஆடி (zoom lens) காமிராவை நகர்த் தாமலேயே செய்கிறது.

Dominance Vs. Pluralism : (ஆதிக்கம் மற்றும் பன்மைவாதம்) இவ்விரு பரிமாணங்களும் தகவல் தொடர்பு சாதனங்கள் குறித்த நேயர்களது நோக்குகளை இரு வகையினவாகப் பிரித்துப் பார்க் கின்றன. தகவல் தொடர்பு சாதனங் கள் ஒரு ஆதிக்க அதிகாரவர்க்கத்தின் கையில் இருக்கிறது (dominance) என்றும் குறிப்பிட்ட ஒரே மாதிரியான நெறிக்குட்படாமல் பல்வேறு பிரிவு களிலிருந்தும் பன்மைவாதமாகக் (pluralism) கோரிக்கை செய்யத் தூண்டும் காரணிகளே தகவல் தொடர்பு சாதனங்கள் என்றும் இருவகையான நோக்குகள் அவை. இவற்றில் முதல் கணிப்பாகிய 'ஆதிக்கம்' என்ற விளக்கத்திற்கு ஆதரவான இயல்புகளாவன : மையப் படுத்தல், அரசுக் கட்டுப்பாடு அல்லது தனியுடைமையாளர் கட்டுப்பாடு, ஒரே நேரத்தில் பல நேயர்களைச் சென்று சேரும் தன்மை, ஒரு சார்பான போககு, தரப்படுத்துதல், கவாச்சித் தன்மை, பொதுமக்களின் அவற்றின் மீதான சார்பு குறித்த கௌவரம் முதலியன. நேர் எதிரான பன்மைவாதமானது ஆதாரங்களைப் பெருக்குதல, செய்தி களைப் பன்முகங்களிலும் சேகரித்தல் மற்றும் சுதந்திரமாகத் தெரிவு செய்யும் பலதரப்பட்ட பொதுமக்களின ஆாவத் திற்குத் தககவாறு பகிர்தல் ஆகிய கருததுக்களால் ஆதரிக்கபபடுகின்றது.

Dope : (முன்கூட்டியே கிடைத்த செய்திகள்) ஒரு செய்தி குறித்த முன தகவல்கள். இவை தனிமனிதர்களின் அரட்டை, வதந்தி முதலியவறறிலிருந்து பெறப்படும். வரபபோகும் ஒரு செய்தியை அல்லது நிகழ்ச்சியைப் பற்றிய முன்கூட்டிய செய்திகள் அலலது குறிப்புக்கள்.

Dope sheet : (ஆயத்தக் குறிப்பு விபரம்) களத்தில இருக்கும் படக் கருவியாளர் (காமிராமேன்) ஒளிநாடா மற்றும் படச்சுருள் காட்சிகள் தொடர் பாகத் தன்னிடம் வைத்திருக்கும் விளக்கமான குறிப்புக்கள்.

Dope story : (எண்ணச் செய்திக் கதை) ஒருவரது தகுந்த கருத்துரையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படும் செய்தி எண்ணச் செய்தி என அழைக்கப்படும். இச்செய்தி அமையும் விதத்தைப் பொறுத்து அச்செய்தியின் போக்கு பின்னர் அமையும். நேரடிச் செய்திக் கதையாக இல்லாமல் விளக்கச் செய்திக் கதையாக அமையும். பின்னணிச் செய்திக்கதை என்றும் எண்ணத் துணுக்கு என்றும் அழைக்கப்படும்.

Dot matrix : (புள்ளி அச்சுவார்ப்புரு) ஒருகாட்சிப் படங்காட்டியின் திரையில் ஒரு கூறினை உருவாக்கும்போது ஒவ்வொரு கூறும் குறிப்பிட்ட வகைப் புள்ளிகளால் தோன்றச் செய்யப படுகிறது. அடிக்கடி 7x9 அச்சு வார்ப் புருவில் இப்புள்ளிகள் தோன்றும். இப்புள்ளிகளாலாய எழுத்தமைப்பில் ஒவ்வொரு புள்ளியிலும் பாஸ் போரஸண்ட் பூச்சு இருக்கும். இவற்றை நோக்கி ஒளி பாய்ச்சப்படுவதால் திரையில் இவ்வெழுத்துக்கள் ஒளிரும்.

Dotted rule : (புள்ளிக் கோட்டுத் தகடு) அச்சகத்தில் பயன்படுத்தப்படும் புள்ளிகளால் ஆன கோட்டுத் தகடு. இவற்றின் அடிப்புறம் சாதாரணக் கோடாகவும் மேற்புறம் புள்ளிகள் ஒரே வரிசையில் கோடு போலவும் அமைக்கப்பட்டிருக்கும்

Double : (இரட்டிப்பு) 1) ஒரே செய்தி ஒரே நாளில் வெவ்வேறு பக்கங்களில் வெளிவருவதைக் குறிக்கும். 2) ஒரே மாதிரித் தலைப்பு.

Double burn : (இரட்டை ஒளிக் கற்றை) எதிர்ட்டு அச்சிடு முறையில் பிம்பத்தின் ஒளிக்கற்றை, இரு பாகமாகப் பிரிந்து அவற்றின் வழி அச்சு ஆகக்கூடிய ஒருதகட்டில் உருவத்தை மிக நெருக்க நிலையில் பதிக்கிறது. இவ்வாறு பதிப்பதற்காக ஒளிக்கற்றை இரண்டாகப் பிரிந்து செல்லும் செயலை இச்சொல் குறிக்கிறது.

Double column : (இரு பத்தி) நாளிதழில் இரண்டு பத்தி அளவில் வெளியாகும் செய்தியைக் குறிக்கும்.

Double compound question : (இருவினைத் தொடர்) ஒலிபரப்பு/ ஒளிபரப்பிற்கான பேட்டி நிகழ்ச்சித் தயாரிப்பில் இரட்டை வினாக்களைத் தவிர்க்க வேண்டும். அவை பேட்டி தருபவருக்கும் நேயர்களுக்கும் குழப்ப மாக இருக்கும். கட்டாயம் கேட்க வேண்டும் எனில் இரண்டு கேள்வி களையும் தனித்தனியே கேட்க வேண்டும். இரு வினாக்கள் ஒரே தொடரில் அமைக்கப்பட்டு கேட்கப் படுதல் நிருபர் கூட்டத்தில் (Press Conference) அடிக்கடி நிகழும். ஒரு நிருபர் ஒரு கேள்விதான் கேட்க அனுமதிக்கப்படுவர் என்ற சூழலில் இது சரியே. ஆனால் ஒலிபரப்பு வரிசையில் இது சரியான முறையல்ல. ஏனெனில் நேயர்கள், பேட்டி தருபவர் இருவருக்குமே வினாவில் எல்லாப் பகுதிகளையும் ஞாபகத்தில் வைத்தி ருப்பது சிரமமாகிவிடும்.

Double headed : (இரு அமைப்பாளர் செய்தி) வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பில் ஒரு நிகழ்ச்சிக்கு இரு அமைப்பாளர்களை அமைக்கும் முறை.

Double print : (இரட்டை அச்சு) ஒரே தகட்டுப் பரப்பில் படத்தையும், அவை தொடர்பான அச்சு வரிகளையும் முறையே அடுத்தடுத்து விழச் செய் வதன் மூலம் உருவாக்கப் படுகின்ற படம், வரி ஆகிய இரு உருவங்களும் ஒரே இடத்தில் இணைக்கப்பட்ட ஒரு படம். 'Surprint' என்றும் கூறப்படும்.

Double projection : (இரு உருப் படிவுக் கருவி ஏற்பாடு) இரண்டு ஒலி,

ஒளி உருப்படிவுக் கருவிகள் (Projectors) பயன்படுத்தப்படும் ஒருஅமைப்பு. செய்தித் திரைப்படமும் ஒலியும் ஒன்றிணைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட ஒரு பிரிவினை உருவாக்குவதில் ஒன்று ஒலிக்காகவும் மற்றொன்று காட்சிப் படத்திற்காகவும் (ஒளிக்காகவும்) பயன் படுத்தப்படுதல்.

Double system : (இரட்டை அமைப்பு) படச்சுருளின் மீது ஒலியைப் பதிவு செய்ய உதவும் தனி காந்த அமைப்பு : ஒலிப்பதிவுக் கருவியுடன் (டேப் ரெகார்டருடன்) ஒரே நேரத்தில் படச்சுருளும் ஓட அச்செயல் மீதாக ஒலி தனியாகப் பதிவு செய்யப்படுகிறது. ஒலியையும் படத்தையும் சரி அளவில் இணைத்தல் 'Sepmag' என்றும் 'sync' என்றும் அழைக்கப்படுகிறது.

Down style : (சிறிய எழுத்துப் பயன்பாட்டுப் பாணி) தம் செய்தித் தாட் செய்தி அச்சீட்டு முறையில் பெரிய எழுத்துக்களைத் தொடர்களின் ஆரம்பங்களில் அதிகம் பயன்படுத்தாத செய்தித்தாள் பாணியைக் குறிக்கும்.

Draft : (அடிப்படைக் குறிப்புக்கள்) ஒரு செய்தியைத் (மேட்டர்) தயாரிக்க எடுத்துக் கொள்ளப்பட்ட அடிப்படைக் குறிப்புக்கள்.

Drama : (நாடகம்) வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சி வகைகளுள் ஒன்று. சிறு கதைப்பின்னல் இருக்க வேண்டும். நாடகத்தின் பாத்திரங் களுக்கெனச் சில நோக்கங்கள் இருக்க வேண்டும். உரையாடல், நடிப்பு, தயாரிப்பு, பின்னணிஇடம் முதலியன நம்பத் தகுந்தனவாக இருக்கவேண்டும். சூழலும் காட்சியும் இயைந்ததாக அமையின் சிறப்புறும்.

Dramatisation : (நாடகமாக்கல்) வணிக விளம்பர வடிவத்தை 5 வகை யான தலையாய வகைகளில் அமைப்பர். அவற்றுள் நாடகம் போல அமைக்கும் முறையும் ஒன்று.

Drop: 1. (பத்தி வரிகள்). 2. (வலம் தள்ளிய ஒருசீர் முடிவு அடுக்குத் தலைப்பு) 1) ஒரு பத்தியின் நீளத்தில் அடங்கக் கூடிய வரிகள் 2) ஒரு தலைப்பின் எல்லா வரிகளும் வலதுபுற ஓரமாகத் தள்ளப்பட்டிருக்குமாயின் அது இப்பெயர் கொண்டழைக்கப்படும். அதாவது முதல் அடுக்கினைத் தொடர்ந்து வரும் அடுக்குத் தலைப்புகள் சற்று உள்ளடங்கி அமைந்திருக்கும். ஆனால் ஒரே சீராக முடிந்திருக்கும். 'drop head' எனவும் கூறப்படும்.

சான்று :

முலாயம்சிங்
திடீர் மிரட்டல்
நம்பிக்கை இல்லா
தீர்மானம் கொண்டுவந்தால்
சட்டசபையைக் கலைக்க
சிபாரிசு செய்வேன

Drop gap : (கொட்டை எழுத்துத் தலைப்பு) ஒரு வரிக்கு மேற்பட்ட கொட்டை எழுத்துக்களாலான தலைப்பு.

Drop out : (விலக்குதல்) படப்பதிப்பு முறைகளுள் நுண்பதிப்புப் படிமை முறையும் (Halftone) ஒன்று. இம் முறையில் முற்றிலும் வெள்ளைப் பரப்பை உருவாக்கும் பொருட்டு புள்ளிகளை விலக்குதலோடு தொடர்புடைய ஒரு சிறப்பு நுண்பதிப்புப் படிமை அணுகுமுறை 'drop out' எனப்படும்.

Dry offset : (உலர்வு எதிரீட்டு அச்சிடு முறை) குழிந்த உலோகச் செதுக்கைப் பயன்படுத்தும் ஒருவகை அச்சுத்தகடு. எதிரீட்டு அச்சிடு முறையில் போலவே இம்முறையிலும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் நீர் வீழ்தல் அல்லது நீர்ப்படலம் தேவை இல்லை.

Dry run : (பின்னணி இல்லா ஒத்திகை) ஒரு நாடகத்தை நிலையத்தி லன்றி எங்கேனும் காமிராவும் இசையும் இன்றி ஒத்திகை பார்த்தல்.

Dub : (மறு ஒலிப்பதிவு) தொகுக்கப் பட்ட அல்லது பதிப்பிக்கப்பட்ட படத்திற்கு உரிய ஒலியைச் சேர்த்தல் அல்லது மறுபதிவு செய்தல்.

Dummy : (மாதிரிப் பக்க அமைப்பு) பத்திரிகையை அமைக்க வேண்டிய மாதிரிக் குறிப்பு. எந்தெந்தப் பக்கத்தில் எந்தெந்த விளம்பரம் அமைய வேண்டும் ; எந்த இடத்தில் என்ன அச்சில செய்தித் தலைப்பு, செய்தி முதலியன அமைய வேண்டும் போன்ற விபரங்களைக் காட்டும் விளக்கக் குறிப்பு. ஒரு செயதித்தாளின்/இதழின் ஒரு பக்கததின அமைப்புத் திட்டத்தைக் காட்டும் வரைபடம இவ்வரைபடம் நாளிதழ் அளவில இருக்கலாம் அல்லது சிறியதாகவும் இருககலாம்.

Dummy run : (மாதிரிப் பத்திரிகை) புதிதாகத தொடஙக இருககும பத்திரிகையின் மாதிரிப் பிரதி

Duotone : (இரட்டைப் பதிப்பு) ஒரு கறுப்பு வெள்ளைப் படத்தினை இரு தகடுகளின் மூலம இரு வண்ணம் உடையதாக மறுபடியும் தயாரித்தல். இவ்வாறு இரு வணணப் படமாக கறுப்பு வெள்ளைப் படத்தை மாற்றுதல் படத்திற்கு ஒருவித அழகைத் தரும். உண்மையான படததில இரு நெகட்டிவ்களைத் தயாரிதது அவற்றைப படததிறகுக கறுப்பு வண்ணம தரும ஒரு தகட்டில் பொருத்தி மற்றொனறை மற்றொரு வண்ணம் தரும தகடடில பொருத்தும் முறையால் இவ்விளைவு கிடைக்கும.

Dupe : 1. (போலி), 2. (நகல்). டீயூப்ளிகேஷன (duplication) என்பதன் சுருக்கம். 'diyotone' என்றும் கூறபபடும் 1) இரு செய்திக் கதைகள் கவனக் குறைவாக ஒரே செய்திக்கதையாக இருந்து ஒரே பதிப்பில் இரண்டும் வெளியிடப்பட்டுவிடுமானால் அவற்றுள் ஒன்று போலி எனப்படும். 2) ஒரு செய்திக்கதையின் நகல் (Carbon copy) கறுப்புத்தாள் எனவும் அழைக்கப்படும். கணிப்பொறி மயமாக் கப்பட்ட செய்தி அறை வந்த பிறகு இத்தகைய நகல்கள் மறைந்து விட்டன.

Dynamic microphone : (அழுத்த உணர்வு நுட்ப ஒலிவாங்கி)

Dynamic range : (இயங்கு எல்லை) ஒரு ஒலி சாதன அமைப்பு கையாளக் கூடிய ஒலிமட்ட எல்லை. உச்ச எல்லை அதிக அளவு ஒலிச்சிதைவினாலும் கீழ் எலலை சத்த ஏற்புத் திறத்தினாலும் நிர்ணயிக்கபபட்டுள்ளன.

Ears : (காதுகள்)நாளிதழின் முதல் பக்கத்தில் மேற்புறத்தில் இரு பக்கங்களிலும் காணப்படும் இரு சிறிய பெட்டிகள். அப்பெட்டிகளில் பொது வாக, சிறு விளம்பரங்கள் அல்லது செய்தித் தாளின் குறிக்கோள் வாசகம், அல்லது பதிப்புக் குறிப்புக்கள் போன்றவை கூறப்பட்டிருக்கும். காதுகள் இல்லாத நாளிதழ்களும் உண்டு. சான்று : கல்கத்தாவிலிருந்து வெளியாகும் Telegraph.

Easel shot : (நிலைச்சட்டக் காட்சிப்படம்) நிலைய அரங்கில் காமிரா ஒன்றினால் எடுக்கப்படக் கூடிய இயங்கா நிழற்படம், விளக்க வரைபடம், தேசப் படம் போன்றன. 'limbo' என்றும் அழைக்கப்படும்.

Echo : (எதிரொலி) வானொலி ஒலிபரப்பில் ஒரு குறிப்பிட்ட ஒலியை அதன் எதிரொலியாக ஒரு முறையோ பல முறையோ திரும்பப் பெறுதலைக் குறிக்கும்.

Echo plate : (எதிரொலித் தகடு) ஒலியைப் பல முறை எதிரொலியாய்ப் பெற உதவும் கருவி.

Economy : (சிக்கனம்) செய்தித் தலைப்புக்கென உள்ள இடம் பொன் போன்றது. குறிப்பாக ஒரு பத்தித் தலைப்புக்கள் ஒவ்வொரு முதல் பக்கத்தையும் ஆக்கிரமிக்கும்பொழுது இக்கூற்று மிகுதியும் பொருத்த முடையது. எனவே சிறு தலைப்புக் களை ஆக்க வேண்டும். இறுக்கமான, சுருக்கமான, கவர்ச்சியான தலைப் புக்கள் வாசகனுக்குக் கிரகித்துக் கொள்ள எளிதானவை. குறுகிய இடத்தில் அதிகச் செய்திகளைக் கொண்டதாகத் தலைப்புக்களை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு வாசகனுக்கும் கூறவரும் கருத்து விளங்கும் வகையிலும் தலைப்பு அமைந்திருக்க வேண்டும்.

ECU : (நுண் அருகாமைக் காட்சி) 'Extreme close-up' என்பதன் சுருக்கம். தொலைக்காட்சி நிகழ்ச்சிப் படப் பிடிப்பில் ஒரு பொருளின் ஒரு பகுதியை மிக அருகில் காட்டும் வகையிலான படக்காட்சி.

Edit : (பதிப்பி) அச்சுக் கோர்ப்பதற்கும் ஒளிபரப்புவதற்கும் பெற்றுள்ள நிகழ்ச்சி விவரங்களையும் தகவல்களையும் விரும்பிய முறையில் தள்ளுவன தள்ளி, கொள்ளுவன கொண்டு தொகுக்கும் முறை.

Editing : (செம்மையாக்கம்) செய்தி மேசைக்கு வந்துள்ள செய்திகளையும் ஒலி/ஒளிபரப்புவதற்கெனப் பெற்றுள்ள நிகழ்ச்சி விபரங்களையும் தகவல் களையும் தம் தகவல் தொடர்பு சாதனக் கொள்கைகளுக்கு ஏற்பத் தள்ளுவன தள்ளி கொள்ளுவன கொண்டு தொகுக்கும் முறை. 'செய்திக் கதையில்' செய்தியின் துல்லியத்திற் காகப் பதிப்பிப்பது உணடு. நேரடிச் செய்திக்கதை துல்லியமாகச் செய்தி தெரிவிப்பதாலும் அன்றைய சம்பவங் களைத் தெரிவிப்பதாலும் தொகுப்பு முகப்புச் செய்தி, தனித்தனி படிமைப்பத்திகள், தலைகீழ் பிரமிடு முறையிலான நடை, தகவல்களுக்குத் தகுந்த அடைமொழி முதலியவற்றைக் கொண்டிருப்பதாலும் இன்றும் தரமானதாகப் பல செய்தி அறைகளில் கருதப்படுகிறது. உலகில் என்ன நடக்கிறது என்று சம்பவங்களைக் கூறுவதைவிட பிரச்சினைகள், அவற்றின் போக்குகள், இன்றைய

சிக்கல்கள் முதலியவற்றைப் பேசுவதே விரும்பப்படுவதால் நேரடிச் செய்திக் கதையைவிட புதிய கட்டுப்பாடற்ற செய்திக்கதை தோன்ற ஆரம்பித் துள்ளது. நேரடிச் செய்திக் கதையும் வழக்கில் இருந்து வருகிறது. படிதன்மையை (Readability) ஏற்படுத்துவதற்காகவும் செம்மை யாக்குவது உண்டு. ரஸிக் என்பவர் பெரிய நகரங்களிலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றின் முதல் பக்கம் மிகுதியும் வாசிக்கக் கூடிய தனமையுடையதாய் அமைந்திருக்க, சிறிய ஊர்களிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் வாசிப்புத் தன்மை சற்று குறைந்ததாக அமைந்திருக்கின்றன என்று சான்று காட்டுகிறாா. எனவே பெரிய பத்திரிகைகளில் பணியாற்றும் இதழாளாகள பலா சேர்ந்து கவனமாகப் பதிப்பிக்கினறனா் என்று உணரமுடிகிறது. சிறப்பாகப் பதிப்பிததல் என்பது பத்திரிகையின் படிதன்மைக்கு அடிப்படையான ஒன்று என்பதற்கு இதுவே சான்று.

ஆசிரியர்கள் தொலைத் தொடர்புச் சேவை மூலம் ஒரு நாளின் பயன்பாட்டிற்கு எவ்வெச் செய்திகள் அனுப்பபடுகினறன என்பதைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். செய்திப்படி தொலை அச்சின் மூலம் உள்ளே வந்தபோது அவை தந்த பட்டியலில் வரிசைபபடுத்தப பட்டுள்ள படியே எது அன்றைய முக்கியச் செய்தி எனபதை அன்று முதலில் உள்ள செய்தியை வைத்துத் தீர்மானித்த போது சிக்கல் தீர்ந்தது. அதுபோலவே பின்னர் வநத செயதிகளும் கருத்தில் கொளளப பட்டன தற்போது பல செய்தித் தாள்கள் செய்திப் பணிச் செய்திப்படிகளை மிக வேகமான தொலைத தொடர்புச் சேவைகள் மூலம் நேரடியாகக் கணிப்பொறியின் நினைவகத்திற்குள் அனுப்பும்படி பெறுகின்றன. தொலைத் தொடர்புச் சேவைகள் ஒரு பட்டியலை அனுப்பு கின்றன. அப்பட்டியல் கணிப்பொறியில் உள்ள ஒவ்வொரு கூறினையும் ஒரு நான்கு இலக்கக் குறியீட்டின் மூலம் இனங்கண்டதாக இருக்கும். அதில் அனுப்பப்பட்ட தேதி, செய்திக் கதை பயன்படுத்தப்படக் கூடிய கடைசி நேரம், செய்திக்கதையின் நீளம் போன்றவை குறிப்பிடப்பட்டிருக்கும். இறுதியாக, ஒவ்வொரு கூறின் ஆரம்ப வரிகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆரம்ப வரிகள் செய்திக்கு முந்திய வரிகள் எனனென்ன வருமோ அதாவது தலைப்பு, தேதி வரி போன்ற அனைத்தையும் உள்ளடக்கி இருக்கும். அததகைய ஒரு பட்டியல் கணிப்பொறி யுடன் நேரடியாக உள்ளடக்கி இருக்கும். அத்தகைய ஒரு பட்டியல் கணிப்பொறியுடன் நேரடியாக இணைக்கப்பட்ட எந்த காட்சிப்படங் காட்டியின் (Video Display Terminal) திரையிலும் கொண்டு வரப்படலாம். எப்படி இருப்பினும் பல ஆசிரியர்கள் மிகவும் கடைசியாக வந்த பட்டியலில் ஒரு கையெழுத்துப் படிவத்தைப் பெற விரும்புகின்றனர். அதற்காக முழுப் பட்டியலுமே ஒரு அதிவேக அச்சு இயந்திரத்துக்குள் செலுத்தப்படலாம்.

ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் 'பதிப்பித்தல்' ஒளிபரப்புக்குரிய நேரத்திற்குள் செறிவாக நிகழ்ச்சியைக் கொண்டுவர உதவுகிறது. பதிப்பித்தலில் சரியான தொடராக இல்லாதவற்றை வெட்டி மாற்றிக் கொள்ளலாம். ஆனால் நோமுக அஞ்சல் நிகழ்ச்சிகளில் இத்தகைய வாய்ப்பில்லை. சில மணி நேரம் ஆராய்ந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரித்தால் பதிப்பித்தலில் பல மணி நேர வேலைகளைக் குறைத்துவிடலாம். வேகமாகப் பதிபபித்தலும் கவனத்திற் கொள்ள வேண்டிய ஒன்று. தொலைக் காட்சி நிகழ்ச்சிகளின் படக் கோவைத் தொகுப்பை நேரடி நிகழ்ச்சிகளின்

போது தயாரிப்பாளர் உடனுக்குடன் தீர்மானம் செய்து தொலைக்காட்சியில் படக்கோவை யைப் பதிப்பிப்பது உண்டு. ஒரு காட்சிப் படங்காட்டியில் முந்திய செய்திக் கதையை விட மேம்பட்டது என்று வகைப்படுத்துவதற்குப் பதில் முழு விபரங்களையும் மீண்டும் செய்திக் கதைகளாக்கவும் பழைய முறையில் செய்வதைவிட வேகமாகச் செய்தி களைக் கோர்க்கவும் முடியும். தொலைக்காட்சிப் பேச்சு நிகழ்ச்சிப் படைப்புப் பணியில் எழுதுதல், தயாரித்தல், பதிப்பித்தல் என்ற வரிசையில் பதிப்புப் பணி மூன்றாவதாக இடம் பெறுகிறது. ஒரு நிகழ்ச்சி நேர்முக அஞ்சலாகத் தயாரிக்கப் படுகிறதா அல்லது பதிப்பிக்கப்பட்டு மறுபடி வரிசைப்படுத்தப்படுகிறதா என்று எடுக்கிற தீர்மானத்தைப் பொறுத்துத் தொலைக்காட்சியில் பதிப்பித்தல் அமையும். நேர்முக அஞ்சல் நிகழ்ச்சிகள் பதிப்பிக்கப்படாத நிகழ்ச்சிகளாக இருப்பதனால் நேயர்கள் குழப்பமில்லாமல் தொடர்ந்து பார்க்கவேண்டும் என்ற அளவில் கவனமாகப் பதிவு செய்யப்பட வேண்டும். பொதுவாக, இயல்பான மற்றும் ஒத்திகை பார்க்கப்படாத நிகழ்ச்சி என்று விளம்பரப்படுத்துவது பெருமைக்குரியதாகக் கருதப்படு கிறது. இத்தகைய நேர்முக அஞ்சல் நிகழ்ச்சிகள் ஆர்வத்தைத் தூண்டு கின்றன. மேலும் இவற்றின் தயாரிப்புச் செலவும் குறைவாக ஆகிறது.

Edition : (வெளியீடு) ஒரு நாளிதழின் அதன் முதல் பக்கம் உட்பட சில பக்கங்களை மீண்டும் திருத்தி அமைத்தல் அல்லது மீண்டும் தயாரித்தல் ; ஒரு நாளிதழ் மாநில அளவில் அல்லது மாவட்ட அளவில் அல்லது வேகத் தபால் வெளியீடு என்றோ சந்தை இறுதி வெளியீடு என்றோ பல பல பதிப்புக்களைக் கொண்டதாக இருக்கும்.

Editorial : (தலையங்கம்) பத்திரிகை அலுவலகத்தின் பெயரிலேயே ஒரு செய்தி குறித்த பத்திரிகையின் எண்ணங்களை வெளியிடுதல். ஒரு கூற்று பற்றி நிலைய உரிமையாளர் அல்லது நிர்வாகியின் எண்ணமே தலையங்கம் ஆகும். இத்தலையங்கம் விளம்பர நோக்கமுடையவை, வாசகர் களை இணங்கவைக்கும் நோக்க முடையவை என இருவகைப்படும். பத்திரிகை உரிமையாளரின் கருத்து என்பதைவிட மேலோங்கி தலையங்கம் ஒலிக்க வேண்டும். தனது முன்னணி ஆசிரியர்களின் ஆர்வம், உரிமை நிலைகள் மற்றும் தனது ஆர்வம், உரிமை நிலைகள் இரண்டையும் மேம்படுத்துவதற்கு அது ஒரு கருவியாகச் செயல்பட வேண்டும். முறையாக மேற்கொள்ளப்படும் ஒரு தலையங்கப்பகுதி ஒரு குழுவினரின், வட்டாரத்தினரின் ஒரு நாட்டின் கருத்தைத் தாங்கியதாய் வரவேண்டும். பல தலையங்கங்கள் அவை நாட்டு நலத்தைக் கருத்தில் கொண்டு வெளி வருவதாய்க கூறிக் கொள்கின்றன. ஆனால் உண்மையிலேயே அப்படித்தானா என்று கேட்டால் இல்லை என்றே கூறலாம். மேலும் தலையங்கம் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு சந்தையாக இருக்க வேண்டும். ஒரு சுரண்டல் தனத்துடன் கூடிய வாணிக நோக்கிலான பத்திகளாகவும் ஏற்கனவே கூறப்பட்ட தையே திரும்பக் கூறுவதாகவும் எல்லாதர வாசகர் களையும திருப்திப் படுத்து வதாகவும் தலையங்கம் இருக்கக் கூடாது.

Effects : (விளைவுகள்) தகவல் தொடர்பு சாதனங்கள் பற்றிய ஆய்வுகள், இச் சாதனங்கள் மக்களிடம் பெருத்த விளைவை ஏற்படுத்துகின்றன என்றும் குறைந்த பாதிப்பையே ஏற்படுத்துகின்றன என்றும் எதிரிடையான கருத்துக்களை

வெளிப்படுத்துகின்றன. குறைந்த அளவிலேயே மக்களைப் பாதிக்கின்றன என்பதைச் சில ஆய்வாளர்கள் மட்டுமே கூறுகின்றனர். இம்முடிவு மிகவும் பிரபலமானது. தொலைக் காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் சிலர் இன்றும் இம்முடிவையே கூறுகின்றனர். 'மக்கள் எதை விரும்புகிறார்களோ அதையே நாங்கள் தருகிறோம்' என்பதைக் காரணமாகக் கூறி 'மக்களை இவை பெரிதும் பாதிப்பதில்லை அதனால் அவர்கள் ஒன்றும் கெட்டுவிடப் போவதில்லை' என்பர். ஸ்டன் கோஹறன் மற்றும் ஜாக் யங் ஆகியோர் இக்காரணம் கொண்டே இதனைச் சந்தை அல்லது வணிக மாதிரி (market or commercial model) என அழைப்பர்.

EFP : (மின்னணு முறைச் செய்தித் தயாரிப்புக்கள்) 'Electronic Field Production' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம். தொலைக்காட்சிச் செய்தித் தயாரிபபில் மின்னணு முறையிலான மின் கருவிகள் இன்று செய்தி சேகரிப்பிலும் செய்தித் தயாரிப்பிலும் வந்துவிட்டன. நிழற்படக் கருவி (காமிரா), பதிவுக்கருவி இரண்டையும் மிகச் சிறிய வடிவமாக்கிவிட்டமை அரங்குகளில் மட்டுமன்றிச் சேய்மையில் உள்ள இடங்களைப் பற்றியும் அதிகப் படங்களைத் தயாரிக்க வழி வகுக்கிறது. ENG, EFP ஆகிய இரண்டும் இன்று செய்தித் தயாரிப்பில் புதிய அலைகள். நிகழ்ச்சி முழுவதும் ஒரு தனி நிழற்படக் கருவியை மட்டுமே கொண்டு ஒவ்வொரு காட்சியாக அடுத்தடுத்துத் தயாரிக்கப்பட முடியும். அக்காட்சிகள் அதன்பின் பதிப்பிக்கப் பட்டு இறுதி நிகழ்ச்சியாகத் தயாரிக்கப்படலாம். நேரடி நிகழ்ச்சி களைப் பதிவு செய்தலுக்கு முன்பே செய்திப்படி தயாரிக்கப்பட வேண்டும் என்ற மரபை மாற்றி தயாரித்தல், பதிப்பித்தல் ஆகிய செயல்கள் நடக்கும்போதே செய்திப் படியை எழுதும் முறையை இக்கருவிகள் கொண்டு வந்திருக் கின்றன. இவை அரங்கத் தயாரிப்புக் களை அடியோடு இடம்பெயரச் செய்துவிட்டன.

Electronic text processing : (மின்னணு முறைச் செய்தி அலசல்) ஒரு கணிப்பொறியில் மின்னியக்க முறையில் செய்திப்பகுதியை அலசி ஆராயும் அமைப்புக்கள் இன்றைய செய்தித் தயாரிப்பில் பெருமளவு உதவுகின்றன.

Electronic type setting : (மின்னணு முறை அச்சுக்கோர்ப்பு) மின்னியக்க முறையில் கட்டுப்படுத்தப்படும் எந்த அச்சுக்கோர்க்கும் அமைப்பும் இவ்வகைப்படும். இவ்வமைப்புக்கள் ஒளிம அச்சுமுறை (Photo compositions) மற்றும் லேசர் அமைப்புக்கள் (Laser systems) முதலியவற்றைக் கொண்டதாக;இருக்கும்.

Electro plating : (மின்னியல் தகட்டாக்க முறை) அச்சுப் படிவங்களை அல்லது எழுத்தச்சுத் தகடுகளைப் பிரதி எடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு வழிமுறை.

Electro static printing : (மின்னியல் அச்சுமுறை) நிலை மின்னியல் ஏற்றப்பட்டதும் உலோகப் பண்பு வாய்ந்த ஒரு பொடி ஒட்டிக் கொண்டிருப்பதுமான ஒரு சிறப்புத் தகட்டின் உதவியால் மேற்கொள்ளப் படும் அச்சுமுறை.

Em : (எம்) 'Pica' என்பதற்கு மாறாகப் பயன்படுத்தப்படும் வழக்குச்சொல். 12 புள்ளிகளின் (ஒரு அங்குலத்தின் 6-ல் 1 பாகம்) நேர்கோட்டுக்குரிய

அளவைக்கு அல்லது 12 புள்ளி எழுத்தின் ஒரு சதுரத்திற்கு (பருமனுக்கு) 'எம்' என்று பெயர். எந்த ஒரு அளவு எழுத்தின் சதுரமும் (பருமனும்) 'எம்' எனப்படும். சான்றாக M என்ற அச்சு எழுத்தின் உயரம் அதன் அகலத்தைப் போன்ற அதே அளவுடையது. அகலத்தின் ஒரு பொதுவான அளவைக் குறிக்கும் 'Pica em'என்ற சொல்லின் சுருக்கக் குறியீடாக அடிக்கடி பயன்படுத்தப் படுகிறது. 'mutton' என்றும் அழைக்கப்படும்.

En : (என்) ஒரு 'எம்' இன் உள் அகலத்தின் பாதி. ஒலிக் குழப்பத்தைத் தவிர்ப்பதற்காக 'nut' என்றும் குறிப்பிடப் படுகிறது.

End dash : (செய்திமுடிவுக்கோடு) சில செய்தித் தாள்கள் ஒரு சிறு கோட்டைச் செய்திக் கதையின் முடிவைக் குறிக்கப் பயன்படுத்துகின்றன. பல செய்தித் தாள்கள் எப்போதுமே இவற்றைப் பயன்படுத்துவதில்லை. நீளத்தில் அக்கோடு 6'எம்' உடையதாக இருக்கும். இது ஒரு '6em dash' என்றும் அழைக்கப்படுகிறது.

ENG : (மின்னணுவழிச் செய்தி சேகரிப்பு) 'Electronic News Gathering' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம். தற்காலத்தில் ஒளிபரப்புப் பணியோடு தொடர்புடைய தரம் வாய்ந்த காட்சிப் பதிவுக் கருவிகள (Video recorders) பல்வேறு வகைகளில் குறைந்த எடையில் எளிதாகத் தூக்கிச் செல்லும் வகையில் மிகச்சிறிய வடிவத்தில் கிடைக்கின்றன. நிகழ்ச்சிக் காட்சிப் பதிவுக் கருவி (a Camera recorder) இணைந்த கருவி மின்வழிச் செய்தித் தயாரிப்பிற்கென ஒரு நிருபரால் எளிதில் தூக்கிச் செல்ல இயலும். காட்சிகளைப் பார்த்துப் படம் எடுக்கும் 'மினிகாமஸ்' (minicams) எனப்படும் காமிராவும் மிக விரைவாகச் செய்திகளை அனுப்பும் ஒளிநாடாவும் இணைந்து இவை அமைகின்றன. மின்னணு இதழியல் எனப்பொருள் தரும் Electronic Journalism என்ற சொற்களைச் சுருக்கி EJ என்றும் 'மின்னணுப் படக்கருவி கொள்ளும் செய்தி அளவு' எனப் பொருள்தரும் Electronic Camera Coverage என்ற சொற்களின் சுருக்கமாக ECC என்றும் இவை குறிக்கப்படுகின்றன. பதிப்பித்தல் கூட மின்னணுக் கருவிகள் வழி செய்ய முடியும். இவை கணிப்பொறியால் கட்டுப்படுத்தப்படு கின்றன. காட்சிப் பதிவுகளைப் பதிப்பித்தல், வெவ்வேறு தயாரிப்புச் செய்திகளையும் வரைபடங்களையும் செருகுதல் முதலியன கூட விரைவாக இன்று மின்னணு வழி நடைபெறுகின்றன. நிழற்படக் கருவி, பதிவுக்கருவி இரண்டையும் மிகச் சிறிய வடிவமாக்கிவிட்டமை அரங்கு களில் மட்டுமின்றிச் சேய்மையில் உள்ள இடங்களைப் பற்றியும் அதிகப் படங்களைத் தயாரிக்க வழி வகுக்கிறது.

Engraving : (செதுக்கல்) அச்சு இயந்திர அச்சு முறையில் படங்கள் போன்றவற்றைத் தயாரிப்பதற்கெனப் பயன்படுத்தப்படும் ஒரு தகடும் அத்தகைய தகடுகளைத் தயாரிக்கும் முறையும் இவ்வாறு குறிப்பிடப்படும்.

Entertainment : (பொழுதுபோக்கு) களிப்பு நிகழ்ச்சிகளின் ஒரு அம்சம். களிப்பு நிகழ்ச்சிகள் பெரும்பாலும் பொழுது போக்கு நோக்கில் தயாரிக்கப் படுகின்றன. மகிழ்வூட்டும் ஒலி/ ஒளிபரப்பாகவே சில நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுவதுண்டு.

Erase head : (அழிப்பு முனை) ஒலிப் பதிவுக் கருவியில் ஒலிப்பதிவானதை அழிக்கும் முறை.

Escapement : (விடுவிப்பு) 1) வார்ப்பு அச்செழுத்து அச்சுக்கோர்ப்பில் ஓர் அச்சுக்கருவை அதன் ஒரு வரியில் நிற்கப்போகும் வரிசையிலிருந்து விடுவிக்கும் முறை ஆகும். 2) ஒரு கணிப்பொறி அடிப்படையிலான அச்சுக்கோர்ப்பில் விடுவித்தல் என்பது ஒரு குறிப்பிட்ட எழுத்துக்குத் தேவையான இடத்தை ஒதுக்கீடு செய்வதைக் குறிக்கும். இது ஒரு எழுத்தின் மேலேயே மற்றொரு எழுத்தை அச்சுக் கோர்ப்பதைத் தவிர்க்கும்.

Exception word dictionary : (விதிவிலக்குச் சொல்லகராதி) சொற்பகுப்புக்கு உரிய பொது விதி முறைகளுக்கு உட்படாத விதி விலக்குச் சொற்களின் அட்டவணை. அவை கணிப்பொறியில் குறிப்பிட்ட முறைக்குட்பட்டுச் சேமிக்கப் பட்டுள்ளன. கணிப்பொறி விதி விலக்குச் சொல்லகராதியில் அச்சொல்லைப் பயன்படுத்துவதற்கு முன் சோதித்துப் பார்க்கிறது. நிகழ்ச்சியில் சொல்லைப் பயன்படுத்து வதற்கு முன் வரியின் இறுதிப் பகுதியில் சொல்லைப் பிரிக்கும் நோக்கில் சோதித்துக் கொள்கிறது.

Exclamation points: (ஆச்சரியக் குறி) தலைப்பில் பயன்படுத்தப்படும் ஆச்சரியக் குறியீடு. மிக அருகி சில சமயங்களில் இக்குறியீடு பயன்படுத்தப் பட்டுவிடும். தலைப்புகளில் தாரளமாக ஆச்சரியக்குறி பயன்படுத்தப்படலாம். ஆனால் இரட்டை ஆச்சரியக்குறி தேவையில்லை என்பார் சி.பா. ஆதித்தனார். சான்று :

கேவலம்! - சரி

கேவலம்! கேவலம்! - தவறு

பல நாளிதழ்கள் முக்கியச் செய்திக் கதைகளில் இக்குறீட்டைப் பயன் படுத்துகின்றன. சிறப்புச் செய்திக் கட்டுரையின் தலைப்புக்களில் பொதுவாக ஆச்சரியக் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

Exclusive : (தனிப்பட்ட செய்தி) பொதுவான செய்தியிலிருந்து மாறுபட்ட தனிப்பட்ட செய்தியைக் குறிக்கும். பொதுவாக ஒரு பத்திரிகை அனைத்துப் பத்திரிகைகளையும் விட முந்திக்கொண்டு தரும் செய்தி (scoop) யைக் குறிக்கும்.

External : (வெளி உறவு இதழ்) ஒரு நிறுவனத்தின் வெளியேயுள்ள அதாவது நுகர்வோர் ஆகிய பொது மக்களுக்கென ஆக்கப்பட்டு சுற்றுக்கு விடப்படும் பொதுமக்கள் உறவு இதழ்.

External Service Division : (வெளிநாட்டு ஒலிபரப்புச் சேவைப் பிரிவு) அகில இந்திய வானொலியின் வெளிநாட்டுக்கான ஒலிபரப்புச் சேவைப் பிரிவுற்கு ESD என்று பெயர்.

Extra : (அதிக வெளியீடு) ஒரு நாளிதழின் வழக்கமான வெளியீடு களுடன் சில முக்கியமான சம்பவங்கள் குறித்த செய்திகளை வெளியிடும் நோக்கில் சேர்த்து வெளியிடப்படும் கூடுதல் வெளியீடுகள். பொதுவாக பிரபலமான ஒருவரின் மறைவு குறித்த நேரங்களில் வெளியிடப்படும்.

Extreme Close up shot : (மிகு அண்மைக் காட்சி) தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மையப் பொருளை அதிக அண்மையில் காட்டும் விதமாக எடுக்கப்பட்ட படக் காட்சிகள். (பார்க்க : ECU)

Extreme long shot (XLS) : (மிகுதூரக் காட்சி) தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் மையப் பொருளை அதிகத் தூரத்தில்



காட்டும் விதமாக எடுக்கப்பட்ட படக்காட்சிகள்.

Eye level angle : (கண்மட்ட கோணம்) ஒளிபரப்பு நிகழ்ச்சிகளுக் கென இத்தகைய கோணத்தில் எடுக்கப்படும் ஒளிப்படக் காட்சி 1) சமமான விளக்க நிலையை நல்குதல், 2) நேருக்கு நேர் எதிர்ப்படும் செயலைச் சிறப்பாக விளக்கிக் காட்டுதல் ஆகிய இரு பணிகளைச் செய்கிறது. எந்த நாடக விளைவும் இல்லாமல் உணர்ச்சி வேகமில்லாமல் வெறும் செய்திக்காக மட்டுமே பார்க்கும் படங்கள் இத்தகைய கோணங்களில் எடுக்கப்படும். இந்த முறை காட்சிகள் பார்ப்போரை உணர்ச்சி வசப்பட்டு காட்சியோடு ஒன்றச் செய்வதைவிட காட்சியைக் கவனிக்கச் செய்வதாக அமையும். காமிரா பொதுவான உயரத்தில் நேயர்களுக்குத் தங்களைத் தொடர்புபடுத்திக் கொள்ள உதவு கிறது. நேர்மை, உண்மை முதலிய வற்றைத் தெரிவிக்க இது பயன்படு கிறது. இக்காரணம் கருதியே செய்திகளில் அரசியல் விளம்பரங் களுக்கு இந்த கோணத்தில் காட்சிகள் எடுக்கப்படுகின்றன.

Face : (அச்சு முகம்) 1) ஒரே வகையைச் (குடும்பத்தை) சார்ந்த அச்செழுத்தின் வடிவ இயல்பு. காகிததின் மேல் அழுத்த, வடிவம் விழும் அச்சின் மேல் பாகத்திற்கு ∴பேஸ் அலலது முகம் என்று பெயா சான்றாக, Cheltenham, Bodoni, Goudy போனறனை அச்சுமுகத்தின் பெயர்கள். 2) ஒரு அச்செழுத்தின் அசசிடப்படும் பரப்பு

Facsimile system : (மின்னணுக் குறியீடு அனுப்பமைப்பு) எழுதியவை, அச்சிட்டவை, படஙகள் போன்றவற்றை மின்னணு முறையில் அனுபபுவதறகு உரிய அமைப்பு ; இம்முறைப்படி செய்தித்தாளின பக்கங்கள் மின்னணு முறையில் பல்வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அப்பல்வேறு இடங்களில் அவை தனித் தனியாக அச்சிடப்படும் ∴பேக்ஸி மைல் ஸிஸ்டம் பின்வரும செயல்களை உள்ளடக்கியது செய்தித் தாளின் ஒரு பக்கம் தலைமை அலுவலகததில் உருவாக்கப்படுகிறது அப்பககம் ஒரு அனுப்பீட்டுக கருவியில் (டிரான்ஸ மீட்டரில) ஒளியியல சார்ந்த கருவியின் கீழ் வைககப்படுகிறது ஒரு சிறப்பு ஒளி ஆதாரம் மூலம் இககருவி அபபக்கததைக் கூாநது ஆய்ந்து (scans) அதன் விளைவாக வரும் ஒளிப் பிரதிபலிப்புக் களை மின்னணுக் குறியீடுகளாக மாறறுகிறது. இக்குறியீடுகள் தொலைநோக்கிக் குறியீடுகளை அனுபபும தொலைபேசி இணைப்புககள் மூலம் துணை மையங்களில உள்ள ஒரு பதிவுக் கருவிக்குத் தெரிவிககப்படுகின்றன இஙகு பதிவுக்கருவி இக்குறியீடுகளை மீணடும ஒளிப் பிரதிபலிப்புக்களாக மாற்ற அவை ஒரு ∴பிலிம் மீது விழச் செய்யப்படுகிறது. அதன்பிறகு இந்த ∴பிலிமிலிருந்து அனுப்பபட்ட பக்கத்தில் நெகடிவ் ஆக்கப்படுகிறது. இந்த நெகடிவிலிருந்து தகடுகள் உருவாக்கப்பட்டு அவற்றிலிருந்து பிரதிகள் அச்சிடப்படுகின்றன. ஒரு பக்கம் 9 நிமிடங்களில் அனுப்பப்பட முடியும். இந்தியாவில் இந்து (Hindu) ஆங்கில நாளிதழ் ∴பேக்ஸிமைல் வெளியீடுகளைக கோவை, பெங்களுர், ஹைதராபாத், மதுரை, குர்கான், விசாகப்பட்டினம், மற்றும் திருவனந்த புரம் ஆகிய துணை மையங்களிலிருந்து வெளியிடுகிறது. மைய நிலையம் சென்னையில் அமைந்துள்ளது.

Fade : (மறைவு) தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிபபில் காட்சி மாற்று முறைகளில் ஒன்று. ஒலி/ஒளிபரப்பில் இம்முறையில் ஒலி/ஒளி தனித்தோ அல்லது இரண்டுமேயோ கூட்டியோ குறைத்தோ நெகிழ்த்திக் கொள்ளப் படுகின்றன. காட்சி மெதுவாக மறைந்து கறுப்புத்தன்மை அடைதல்-மஙகுதல்-இருண்மையாதல (Fade to black) இம்முறை ஆகும். இதனுட னேயே ஒலியும் மங்கும். காட்சியின் முடிவை உணர்த்த காட்சியின் இறுதியில் இது பயன்படுகிறது ஒரு சில வினாடிகளுககு வெற்றுத்திரை காட்டப்படும். நேயர்கள வெற்றுத் திரையை நோககி எந்த ஒலியும் இல்லை எனபதை வைத்து நிகழச்சி முடிந்துவிடடது என உணாகின்றனர். காடசி மற்றும் ஒலியைக் குறைத்தல் நிகழ்ச்சி முடிந்த உணர்வைத் தருவதால் இம்முறை சிறந்தது என்பர். ஒரு விளககத்தில் இடையே பிரிக்கவும் ஒரு காட்சியிலிருந்து முற்றிலும் மாறுபட்ட காட்சியைக் காட்டவும் காலபபகுதி, இடமாற்றம், பாத்திரத்தின் மனமாறறம் முதலியவற்றைக்

குறிக்கவும் இம்முறை உதவுகிறது. நாடகத்தன்மை வாய்ந்த கரைதல் முறையை (dissolve) விட இம்முறை வலிமை வாய்ந்தது.

Fade in : (மறைந்ததிலிருந்து ஒலி/ஒளி தோன்றுதல்) வானொலி, தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் தேவையான அளவு ஒலி, ஒளி அளவைத் தனித்தோ இணைத்தோ காட்டும் முறை ; நிகழ்ச்சியில் உரையாடலின்போது ஒலியைக் குறைத்தும் அதன்பின் கூட்டியும் அமைத்தலும் இம்முறையி லேயே. தொலைக்காட்சியில் ஒரு கறுப்பு வெள்ளைத் திரையிலிருந்து படத்தை மெல்ல மெல்லக் கொண்டு வருதல் மறைந்ததிலிருந்து தோன்றுதல் (fade in) எனப்படும்.

Fade out : (தோற்றத்திலிருந்து ஒலி/ஒளி மறைதல்) வானொலி/தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் தேவையான அளவைத் தனித்தோ இணைத்தோ குறைக்கும் முறை; நிகழ்ச்சியிலிருந்து ஒரு பாத்திரம் வெளியே செல்வதை உணர்த்தவும் மற்றும் நிகழ்ச்சி முடிந்துவிட்டதை உணர்த்தவும் பயன்படும். தொலைக்காட்சியில் தோற்றத்திலிருந்து மறைதல் (fade-out) காட்சி மெதுவாக மறைந்து திரை கறுப்புத்தன்மை அடைதலைக் குறிக்கும்.

Fader : (ஒலி/ஒளி மங்கு கட்டுப் பாட்டுக் கருவி) வானொலி/ தொலைக்காட்சி ஒலி/ஒளி பரப்பில் ஒலி/ஒளியைக் கட்டுப்படுத்தப் பயன் படுத்தப்படும் கருவி. இது ஒரு குறியீட்டின் வலுவினைச் சமாளித்துப் படிப்படியாக அளவேற்றுகிற கட்டுப்பாடு குறித்த பொதுச் சொல். ஒரு மைய வெளியீட்டிற்கு ஆதாரங்களை அறிமுகப்படுத்தவோ, நீக்கவோ இக்கருவி ஒரு பொத்தான்போலச் செயல்படுத்தப்படக் கூடியது (fade up, fade down). அது ஆதாரத்தின் தொடர்புடைய வெளிப்பாட்டினைச் சமாளிக்கும் வகையில் இடைப்பட்ட நிலைகளிலும் பொருத்தி வைக்கப்பட முடியும் (balance). இக்கருவி ஒளி, ஒலி கலப்புக் கட்டுப்பாட்டுப் பலகைகள் மற்றும் ஒளிக் கட்டுப்பாட்டுப் பலகைகள் முதலியவற்றை உள்ளடக்கி இருக்கும்.

Fading off : (ஒலி குறைத்தல்) வானொலியில் நிகழ்ச்சி தருபவர் ஒலிவாங்கியிலிருந்து நகர்தல். மைய இடத்திலிருந்து நிகழ்ச்சி தருபவர் நகர்ந்து செல்கிறார் என்ற உணர்வை நேயருக்கு உண்டுபண்ண இம்முறை பயன்படும்.

Fading on : (ஒலி கூட்டல்) வானொலியில் நிகழ்ச்சி தருபவர் மெதுவாக ஒலிவாங்கியை நோக்கி நகர்தல் ; இதன் மூலம் நிகழ்ச்சி நடக்கும் மைய இடத்தை நிகழ்ச்சி தருபவர் அடைகிறார் என்ற உணர்வை வாசகன் அடைவான்.

Fading speed : (ஒலி/ஒளி ஏற்று வேகம்)

Fairness doctrine : (நெறிமுறை திறம்பாக் கோட்பாடு) இக் கோட்பாடு அமெரிக்கக் கூட்டரசு அமைப்பு முறை சார்ந்த கருத்துப் பரிமாற்றக் குழுவினரால் (Federal Communication Commission) கட்டாயமாகக் கொண்டு வரப்பட்டது ஆகும். நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் நிகழ்ச்சியின் உள்ளடக்கத்தைத் தீர்மானிப்பதில் இதுபோன்ற அரசின் விதிகளுடனான தலையீட்டை விரும்புவதில்லை. இது தணிக்கை முறைக்கு ஒப்பான கோட்பாடு ஆகும். இந்த நெறிமுறை திறம்பாக் கோட்பாடு என்பது இரு கருத்துருவாக்கங்களின் அடிப்படையில் அமைந்த ஒன்று. அதாவது காற்றலைகள்

பொதுமக்களுக்குச் சொந்தம். எனவே ஒலிபரப்பாளர்கள் பொதுமக்கள் நலன் கருதியும் தேவை கருதியுமே தம் ஒலிபரப்புக்களை அமைத்துக்கொள்ள உரிமை பெற்றவர்கள். எனவே ஒலிபரப்பாளர்கள் பொதுமக்கள் தொடர்பான பிரச்சினைகளின் மீதான முரண்பட்ட மற்றும் எதிரான விவாதங்களுக்குப் பதிலளிக்கும் வகையிலான நல்ல வாய்ப்புக்களை உருவாக்கித்தர வேண்டும் என்பதை இக்கோட்பாடு அடிப்படையாகக் கொண்டது.

Fair play : (நன்முறைச் சித்திரிப்பு) நன்முறைச் சித்திரிப்பு என்பதும் துல்லியம் என்பதும் மிகவும் தொடர்புடையவை ஆனால் ஒன்று அல்ல. நன்முறைப்படச் சித்திரித்தல் என்பது பொதுவாகச் செய்தியைத் தராமல் நிறுத்தி வைத்தல் என்பதையே குறிக்கும. ஆனால் ஒரு செய்திக்கதை உண்மையிலேயே செய்தியாகவும் செய்தித்தாளில் இடம்பெறத் தகுதியுடையதாகவும் இருக்கும் பட்சததில் அச்செய்தியைத் தராமல் நிறுத்தி வைத்தல் என்பது வாசகர்களுக்கு முறையற்ற செயலைச் செய்வதே ஆகும. நன்முறைச் சித்திரிப்பு என்பதைப் பொறுத்த எந்த முடிவும் வாசகரை மனதில் வைத்தே எடுக்கப்பட வேண்டும்.

Fake : (போலிச் செய்திக் கதை) தவறாகத் திரித்து அமைக்கப்பட்ட ஒரு செய்திக்கதை.

Family : (எழுத்துக் குடும்பம்) பாணி, அகலம், வடிவம் முதலியன உட்பட ஒரே மாதிரியாக அமைந்த எல்லா அச்செழுத்துக்களும் ஒரு குடும்பம் எனலாம். அச்செழுத்துக்கள் பல குடும்பங்களாகப் (families) பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடும்பத்திலும் சிறியது, நடுத்தரம், பெரியது எனற அளவில் அச்செழுத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. ஒரு குடும்பத்திலுள்ள எல்லாவகை எழுத்துக்களும் ஒரே மாதிரியில் (same design) புனைவு பண்ணப்பட்டிருக்கும். 'உரோமன்', இத்தாலிக், கோதிக் போன்றன சான்று.

Family variations : (குடும்ப உள் வேறுபாடுகள்) அச்செழுத்துக்கள் எடை, அகலம், தோற்ற அமைவு, வடிவம் முதலியவற்றின் வேறுபாடுகள் காரணமாக ஒரு குடும்ப வகைப்பாடாக வகைப்படுத்தப்படுதல். Melior light, Melior Italic, Melior Extended, Melior Condensedஆகியன சான்று.

Fast slow : (வேக மந்தம்) அதிக அளவு ஒளி உட்புகும்படி (Fast) அதிகமாகத் திறந்துள்ள நிலையிலும் குறைந்த அளவே ஒளி உட்புகும் ஆடி (Slow).

Fat : (தடிமன்) எந்த ஒரு வரியையும் குறிப்பாக தலைப்பினை விளக்கும் சொல். அதாவது ஒரு தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கும் இடத்தில் அடங்காத அளவுக்கு அளவுக்கதிகமான எழுத்துக்களைக் கொண்டிருக்குமானால் அத்தலைப்பு இவ்வாறு குறிப்பிடப்படும். விரிந்த அச்செழுத்தை (Extended Type) விளக்கவும் பயன்படுகிறது இச்சொல்.

FCC : (கூட்டரசு அமைப்புமுறை கருத்துப் பரிமாற்றக் குழு) 'Federal Communications Commission' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம். அமெரிக்காவில் கருத்துப் பரிமாற்றச் சட்டம் 1934, FCC என்ற அமைப்பினை ஒலிபரப்பை மேற்பார்வையிட்டு ஒழுங்குபடுத்தும் நிறுவனமாக நியமித்தது. ஒவ்வொருவரும் 7 ஆண்டு காலம் தொடர்ந்து பதவி வகிக்கக் கூடிய 72 உறுப்பினர்கள் அக்குழுவில் இருப்பர். இச்சட்டம் FCCயில் உறுப்பினராக இருக்கும் எவரும்

ஒலிபரப்பில் நிதி குறித்த ஆர்வம் உள்ளவராய் இருக்கக்கூடாது. 4 உறுப்பினர்களுக்குமேல் ஒரே அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கக் கூடாது என்று கூறுகிறது. இச்சட்டத்தின்படி நிறுவனங்கள் பொதுமக்கள் நலம், வசதி, தேவை முதலியன கருதிப் பணியாற்ற உரிமையுடையன ; ஏனெனில் 'காற்று பொதுமக்களது உடைமை'. FCC நிகழ்ச்சிகளைத் தணிக்கை செய்வதில்லை. நிகழ்ச்சிகளின் உள்ளடக்கத்தையும் வடிவத்தையும் அது கட்டுப்படுத்துவதில்லை. எனவே ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளின் தரம் குறித்தோ விளம்பரங்களின் அளவு, தரம் முதலியன குறித்தோ கட்டுப்படுத்தும் உரிமை இக்குழுவிற்கு இல்லை. இருப்பினும், பொதுமக்கள் நலன் குறித்த ஒரு பிரச்சினை குறித்துச் சரியாக நெறிமுறையுடன் சித்திரித் தலை வற்புறுத்தலாம் ; ஒருவரது உரிமத்தினை மீண்டும் அங்கீகரிக்க மறுக்கலாம். ஒருவரது உரிமம் பொதுமக்கள் நலம் கருதிச் செயல்படத் தவறியிருக்கிறது என்று தனக்குத் தெளிவாக உறுதியாகத் தெரிந்தால் அவ்வுரிமத்தைப் பறிமுதல் செய்யலாம் அல்லது உரிமத் துஷ்பிரயோகம் செய்தவர்களை விலக்கலாம் ; அல்லது தண்டனை விதிக்கலாம். இவ்வாறு FCCயின் அதிகாரங்கள் சட்டத்தில் சிலசமயம் தனது "சுதந்திரம் வாய்ந்த தனி நிறுவனம்' என்ற அந்தஸ்தை விட்டுக்கொடுத்துக் கொள்ளும் வகையில் அரசியல், மற்றும் தொழில் சார்ந்த சிபாரிசு நெருக்கடிகளுக்குத் தற்சார்புடையதாய்த் திகழுமாறு தெளிவின்றி வரையறை செய்யப் பட்டுள்ளன.

1970-இன் பிந்திய காலகட்டங் களிலிருந்து ஒலிபரப்புச் சாதனம் படிப்படியாக ஒழுங்கற்ற தாக்கப்பட்டுள்ளது. வணிக விளம்பர நேரத்தினை மணிக்கு இத்தனை நிமிடங்கள் என்று வரையறை செய்தல், மாறுபட்ட பிரச்சினைகள் குறித்த விவாதங்களைச் சம அளவிலான பாணியில் தருதல், குழந்தைகள் நிகழ்ச்சித் தயாரிப்புகளுக்குக்கூட வழிகாட்டிக் குறிப்புக்கள் தருதல் போன்ற ஒழுங்குமுறைகள் 'சந்தை வலுக்களினால்' (market forces) நீக்கப்பட்டுவிட்டன. இத்தகைய போக்குக்கு மாறாக, சமீபத்தில் பால் உணர்வு குறித்த வெளிப்படையான சித்திரிப்புகளுக்குத் தடை விதிக்கும் ஒரு கொள்கை அறிவிப்பை வெளியிட்டது. FCC-இன் உடமை உரிமையின் வரையறைகள் சிக்கலில்லாமல் எளிமையாக இருப்பது அமெரிக்க ஒலிபரப்பின் உடமையுரிமை வகை மாதிரியை மாற்றியுள்ளது.

Feature : 1. (ஆர்வச் செய்திக் கதை), 2. (சிறப்புக் கட்டுரை). 1) வாசகர் களுக்கு ஆர்வமூட்டும் செய்திக்கதை ; பொதுவாக அன்றைய செய்திக் கதையாக இருக்கும். ஆனால் கட்டாயம் அது செய்தியாக இருக்க வேண்டும் என்பதில்லை. படக்கதை (Comics), நகைச்சுவை (humor pan-els) , தனிப்பகுதி (Columns) போன்ற செய்திப் பகுதிகளும் ஆர்வச் செய்திக் கதைகளே ; அல்லது சிறப்புக் கூறுகள் அடங்கிய செய்திக் கதைகளே. 2) ஒரு செயதிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து எழுதியிருந் தாலோ அல்லது ஒரு செய்திக் கதையைக் குறிப்பிட்ட ஒரு கோணத்தில் எழுதியிருந்தாலோ அது சிறப்புக் கட்டுரையாக (special features) அமையும்.

Feature lead : (சிறப்புக் கட்டுரை முகப்பு) சிறப்புக் கட்டுரை முகப்பின் தலையாய நோக்கம் செய்தியைத் தெரிவிப்பதைவிட வாசகனை ஈர்ப்பதே ஆகும். பெயருக்கேற்றவாறு உடனடிச் செய்திகள் அல்லாத சாதாரண

செய்திகளைத் தாங்கிய சிறப்புச் செய்திக் கட்டுரைகளில் பயன்படுத்தப் படுகிறது. மென்முகப்பு (soft lead) என்றும் அழைக்கப்படும்.

Features : (சிறப்புப் பகுதிகள்/சிறப்புக் கட்டுரைகள்/ஒலிபரப்பின் சிறப்பு நிகழ்ச்சிகள்) ஒலிபரப்பில் சிறப்பு நிகழ்ச்சிகள் விளக்கப்படங்கள் இரண்டும் வானொலி, தொலைக் காட்சி நிலைய செய்தித் துறையால் கையாளப்படுவன. அன்றைய முக்கியச் செய்தியோடு நேரடியாகத் தொடர் பில்லாத செய்திகளாக கருத்து, குறிப்பிட்ட நேர சம்பவங்கள், வரலாற்றுச் செய்திகள், கல்விமற்றும் பண்பாட்டு நுண்மைச் செய்திகளாக இவை அமையும். இதழ்கள், நாளிதழ்களில Special Features எனப்படும் மிகு சிறப்புக் கட்டுரைகள் எனறும் ஒளிபரப்பில் சிறப்பு நிகழ்ச்சிகள் என்றும் கூறப்படும். இத்தகைய சிறப்பு நிகழ்ச்சிகள் சிறப்புச் சம்பவத்திற்கும் விளக்கப் படத்திற்கும் இடைப்பட்டன. சிறப்புச் சம்பவம் என்பது அப்போதைய செய்தி நிகழ்வு தொடர்பான ஒலிபரப்பு ; அதாவது எதிர்பாராதது. ஆனால் நாளிதழ்களின் சிறப்புக் கட்டுரை களுக்கு ஈடான சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டு கவனமாகத் தயாரிக்கப்படுபவை. சான்றாக ஏற்கனவே திட்டமிடபபட்டு தயாரிக் கப்பட்ட விளையாட்டு நிகழ்ச்சிகளைச் சுட்டலாம். சிறப்பு நிகழ்ச்சியில் விளைவு எப்படி இருக்கும் என்பது தெரியும். இவை பலமுறை ஒத்திகை பார்த்து ஏற்கனவே பதிவு செய்யப்படுபவை. ஒலிபரப்பாளர் சிறப்பு நிகழ்ச்சியின் சம்பவத் தொடரை நன்கு கையாண்டு கட்டுப்படுத்துவார். சிறப்பு நிகழ்ச்சிகள் நேர்முக அஞ்சலாகக் காட்டப் பட்டாலும் எழுத்துப் படிவம் (script) ஏற்கனவே தயாரிக்கப்பட்டு அதற் கேற்பப் படம் எடுக்கப்படும். சான்றாக விலங்குகளது வாழ்க்கை முறை பற்றிய படத்தைச் சுருக்கமாகத் தயாரித்த லைக் குறிப்பிடலாம்.

அச்சில் சிறப்புக் கட்டுரை போன்று ஒளிபரப்பில் திகழும் சிறப்பு நிகழ்ச்சி 15 முதல் 30 நிமிடம் அளவில் தயாரிக்கப்படும். இவை சிறியவை. சான்றாக தீயணைக்கும் படையினரின் பணி, அரசு நடத்தும் பள்ளித் தேர்வு போன்ற மையக கருத்துக்கள் நிகழ்ச்சியாகத் தயாரிக்கப்படும். சிறப்பு நிகழ்ச்சியில் ஒரு நிகழ்ச்சியைக் கலைத் தன்மையுடன் உண்டு பண்ணிக் கிட்டத்தட்ட விளக்கப்படம் போல எடுக்கலாம்.

எழுதும் முறை : விளக்கப் படத்தை ஒத்தது என்பதால் சிறப்புக் கட்டுரை/ சிறப்பு நிகழ்ச்சி கவனமாக ஆய்ந்து வகைப்படுத்தப்பட்டு அதைப் பற்றி மதிப்பீடு செய்து அதனடிப் படையில் எழுதப்பட வேண்டும். முழுவதும் எழுதித் தயாரிக்கப்பட்ட படிவம் தேவை இல்லை. சிறப்பு நிகழ்ச்சி விளக்கப்படம், நேர்காணல், குழு கலந்துரையாடல், உரை போன்ற வேறுபட்ட நிகழ்ச்சி வகைகளின் கூறுகளைக் கொண்டு கலந்து தயாரிக்கப்படும். சிறப்பு நிகழ்ச்சி/சிறப்புக் கட்டுரை பொதுவாக பொதுப்பணித் தொடர்பானதால் செய்தி தருவதாகவும் பயிற்றுவிப் பதாகவும் கருத்து அமையும். முழுவதும் செய்தியாகவும் பயிற்றுவிப்பதாகவும் இருக்க வேண்டிய அவசியமில்லை. வெவ்வேறு வகைப்பட்ட காட்சி, நாடகம் போன்ற உத்திகளையும் கையாளலாம். சிறப்பு நிகழ்ச்சி என்பது பல்லோரது நலம் சார்ந்த கோட்பாட்டிற்கான ஒரு வடிவமாகும். எனவே அது ஒரு நபர், ஒரு நிறுவனம், ஒரு பொருள், ஒரு சூழல், ஒரு சிக்கல், ஒரு கருத்து முதலியவற்றுள் ஏதாவதொன்றை மையமாகக் கொண்டு எழுதப்படலாம்.

தயாரிப்பு முறை : சிறப்பு நிகழ்ச்சி ஒரு சிறு விளக்கப்படம் என்றால் அதைத் தயாரிக்கும் முறையும் விளக்கப்படம் போலவேதான். ஒரு தலைப்பைத் தெரிவு செய்துகொண்டு அதைப்பற்றிய சிறு திட்டம் தயாரித்துக் கொண்டு அதையே மேலும் விரிவாக்கி அது குறித்து ஆய்வு செய்யும்போதே படம் எடுக்கப்போகும் எழுத்துப்படிவம் (script) தயாரித்துவிடுதல் நிகழும். அவ்வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு சிறப்பு நிகழ்ச்சி தயாரிக்கப்படும்.

Feed : (செலுத்து) வானொலி ஒலிபரப்பில் ஒரு நிகழ்ச்சியை இணைப்பு மின்கம்பி வழி அளித்தல்.

Feed back: (எதிரூட்டு) ஒரு அமைப்பின் வெளியிடு பொருளின் ஒரு பகுதி அதற்கே உள்ளிடு பொருளாகத் திரும்ப வரும் ஒரு செயல் முறை. எதிரூட்டு என்பது உடனபாடாகவும் எதிர்மறையாகவும் இருக்கலாம். 1) செலுத்திய ஒலியே மீண்டும் தாறுமாறாய் வருதல். 2) பேசுபவா ஒலிவாங்கியைத் தனது வாய்க்கு அருகில் வைத்துக்கொண்டு பேசினால் எழும் கூரிய சத்தம். 3) சில கருத்துக்களைப் பற்றியோ அல்லது ஒரு நிகழ்ச்சியைப் (Programme) பற்றியோ வெளியிடப்பட்ட ஒரு செய்தி ஆதாரம் குறித்து நேயர்கள் வெளியிடும கருத்து எதிரூட்டு எனப்படும். தருநர் தனது குறியீடுகள் (செய்திகள்) பெறுநரிட மிருந்து (நேயர்களிடமிருந்து) தான் நினைத்துள்ள பதிலை வெளிக் கொணர்ந்து விட்டதா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள 'எதிரூட்டு' பயன்படுகிறது மேலும் வெளிப்படுத்தப்பட்ட குறியீட்டின் பொருள் தன்னாலும் கேட்போராலும் பகிர்ந்து கொள்ளப்பட்டதா என்ப தையும் கருத்து பரிமாறுபவருக்கு உணர்த்துகிறது.

Fidelity : (ஒலி ஒளித் துல்லியம்) வானொலியில் அல்லது தொலைக் காட்சியில் முறையே ஒலி அல்லது ஒளி (படம்) தரப்படும் துல்லியத்தின் அளவு.

File : (பதிவு செய்) தந்தி மூலம் ஒரு செய்திக் கதையைப் பத்திரிகை அலுவலகத்திற்கு அனுப்புதல், ஒரு தூதுவரால் செய்தி அனுப்பப்படும்போது தவிர பிற நேரங்களில் ஒரு செய்தி மையத்திற்கோ அல்லது ஒரு செய்தி மையத்திலிருந்தோ செய்திப் படியைக் கொடுத்து அனுப்பும் செயல் முதலியன பதிவு எனப்படும். செய்தி அறையில் புழக்கத்தில் இருக்கும் மொழியில் பதிவு (file) என்ற சொல் பின்வருவனவற்றைக் குறிக்கும. 1) ஏற்கனவே வெளிவந்த வெளியீடு களின் தொகுப்பு 2) ஒரு குறிப்பிட்ட வெளியீட்டிற்காகத் தந்திமூலம் பெறப்பட்ட செய்தி 3) ஒரு செய்திக் கதையைத் தந்தி, தொலைபேசி, கேபிள், டெலிடைப் அல்லது சேய்மைக் கட்டுபபாடு (ரிமோட் கண்ட்ரோல்) மூலம் அனுப்புதல் முதலியன. கணிப்பொறி அச்சுக்கோர்ப்பில் கணிப்பொறி சேமித்துள்ள அனைத்தும் ஒரு சிறு அடையாளக் குறிப்பின் கீழ் சேமிக்கப்பட்டிருக்கும். அவ்வடை யாளக் குறிப்பு (பெயர்) பதிவு (file) எனப்படும்.

File footage: (தொகுப்பு ஆதாரங்கள்) ஆவணக் கூடம் மற்றும் நூலகங்களில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள சுவடிகள், ஆவணங்கள், பததிரங்கள் மற்றும் நூல்கள்.

Filler : (நிரப்பி) பததிகளில் மீதி உள்ள இடத்தை நிரப்புவதற்குத் தேவையான இடங்களில் பயன்படுத்தப்படும் செய்திக்கூறு. அவை மிகச்சிறிய செய்திப் பகுதிகளாக இருக்கும். பெரும்பாலும இவை உள் பக்கங்களில் உள்ள சிறிய வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு பயன்படுத்தப்படும்.

Filler light : (நிரப்பி விளக்கு) இவ்விளக்கு ஒளிபரப்பு நிகழ்ச்சிகளில் ஒளிமாறுபாடுகளைக் கட்டுப்படுத்தவும் ஆதார விளக்குகளால் உருவாக்கப் படும் நிழற்பரப்புக்களுக்கு ஒளியூட் டவும் பயன்படுகிறது. பொதுவாக பரவும் ஒளியுடையதாகவும் மெல்லிய ஒளி உடையதாகவும் இருக்கும்.

Film : (திரைப்படங்கள்) திரைப் படங்கள் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஒரு தொழில்நுட்பப் புதுமையாகத் தோன்றின. ஆனால் அப்போது திரைப்படம் தந்தவை உள்ளடக்கத்திலும் செயல்பாட்டிலும் போதுமானதாக இல்லை. பொழுது போக்கின் ஒரு பழைய மரபினை ஒரு புதிய வழியிலான பகிர்ந்தளித்தலுக்கு அது மாற்றியது. பொதுமக்களின் நுகர்வுக்கு ஏற்ற கதைகள், காட்சி வண்ணத்திறம், இசை, நாடகம், நகைச்சுவை மற்றும் தொழில்நுட்ப உத்திகள் முதலியவற்றைக் கொண்ட-தாய் அப்புதுவழி அமைந்தது. பொழுது போக்கிற்கெனத் தனி நேரத்தினை மக்கள் ஒதுக்கிக் கொள்ள வழி வகுத்தது. மிகக் குறைந்த பொருட் செலவில் ஒட்டுமொத்தக் குடும்பமும் ஓய்வு நேரங்களை மகிழ்ச்சி யாகவும் மதிப்புள்ள வழியிலும் போக்கிக் கொள்ள முடியுமா என்ற போது திரைப்படம் அதற்கான பதிலாக அமைந்தது. புதுமாதிரியான வடிவத்தில் விரிந்த ஒரு சந்தைக்கென திரைப்படம் காட்சி வணிகமாக ஆயிற்று. அதுமட்டு மல்ல; 1) பிரச்சாரத்திற்கெனத் திரைப்படம் பயன்படும இயல்பு குறிப்பிடத்தக்கது. திரைப்படத்தின் அதிக மக்களைச் சென்று சேர்தல், உத்தேசமான நடப்பியல், உணர்ச்சித் தாக்கம், செல்வாக்கு ஆகியவற்றின் மீதான ஒரு நம்பிக்கையில் தேசிய, சமுதாய நோக்கங்களுக்கு அது பயன்படுத்தப்பட்ட போது பிரச்சார நோக்கம் பயன் எய்தியது. செய்தியையும் பொழுதுபோக்கையும் கலக்கும் போக்கு இலக்கியம், நாடகம் போன்றவற்றால் முன்பிருந்தே நிலைக்கச் செய்யப்பட்டிருந்தாலும், திரைப்படத்தில் உள்ள புதுக் கூறுகள் அதிக மக்களை ஒரே நேரத்தில் மிக விரைவாகச் சென்று சேரும் இயல்பும் நம்பகத் தன்மையை இழக்காமல் காட்சி வழியாகச் செய்திகளைத் தந்து நாம் காணும் நடப்பியலை அப்படியே காட்டக்கூடிய இயல்பும் கொண்டிருக் கின்றன. திரைப்பட வரலாற்றினைப் பின்னோக்கிப் பார்த்தால் பொழுது போக்குப் பயன்பாடுகளின் ஆதிக்கத்துக்கு எதிராக அதன் ஒரு சார்பான போக்கில் அறிவுறுத்தல் (போதித்தல்), பிரச்சாரம் செய்கிற தன்மைகள் இரண்டையும் ஒருங் கிணைக்கும் ஒரு இழை இருப்பதாகத் தோன்றுகிறது. அதாவது திரைப்படச் செல்வாக்கைப் பயன்படுத்திக் காரியம் சாதித்துக் கொள்ளுவது சாத்திய மாகிறது. திரைப்படம் அதிக முதலீடு செய்வதாகவும் பிற சாதனங்களைவிட உணர்வு நிலை, செயற்கை அமைப்பு (காரியம் சாதித்தல்) உடையதாகவும் இருப்பதால் தான் கூறியவற்றை ஏற்கச் செய்து தன் நோக்கத்தை நிறை வேற்றிக் கொள்கிறது. "தமிழில் திரைப்படம் தமிழ் மக்களின் வாழ் வோடு கலந்து போயிருக்கிறது. தமிழ்மக்கள் மீது தமிழ் சினிமா ஆளுமை கொண்டி ருக்கிறது. பேசும் படம் வந்த சில ஆண்டுகளுக்குள் ளாகவே தமிழ் மக்களின் மீது சினிமா தனது செல்வாக்கை நிலைநாட்டத் தொடங்கிவிட்டது. சுதந்திரத்திற்குப் பின் தமிழக கிராமங்கள் மின்மய மாக்கப்பட்டதும் சினிமா கிராமங்களில் பிரவேசம் செய்தது. கல்வியறிவு குறைந்த கிராமப்புற மக்கள் மீது சினிமா தன் கவர்ச்சியானதும் வலியது மான கரங்களைப் படர விட்டது" என்பார் அறந்தை நாராயணன்.

Film and slides : (ஒளிநாடா/திரைப்பட நாடா/இழைவுச் செருகு நாடா) திரைப்பட ஒளிநாடா ; குறைந்த அகலமாகிய 16 மில்லிமீட்டர் நீளமுள்ள திரைப்பட குறு ஒளிநாடா ; இழைவுச் செருகு நாடா (slides) முதலியன தொலைக்காட்சி ஒளிபரப்பு நிகழ்ச்சித் தயாரிப்பிற்கும் திரைப்படத் தயாரிப்பிற்கும் அவசியமான வையாகும். நிலைய அரங்கில் கிடைக்காத காட்சிச் செய்திகளைச் செய்தி, விளையாட்டு, சிறப்பு நிகழ்ச்சி, விளக்கப்படம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஒளிநாடா மற்றும் இழைவுச் செருகு நாடா தருகின்றன. செய்தி, விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு ஒளிநாடா பயன்படுத்தப்படலாம். குறு ஒளிநாடா (Film clips), ஒளிநாடா முதலியன ஏற்கனவே எடுக்கப்பட்ட நிகழ்ச்சிக்கு அரங்கிற்கு வெளியே உள்ள பின்னணிக் காட்சிகளை எடுக்க உதவும்.

Filter : (வடிப்பான்) வானொலி ஒலிபரப்பில் ஓர் ஒலியின் தேவையற்ற அதிர்வுகளை நீக்கும் மின்கருவி தொலைக்காட்சி ஒளிபரப்பிலும் இவ்வாறு வடிகட்டுவதற்கென ஆடிகள் உண்டு.

First day story : (நிகழ்ச்சி குறித்த முதல் செய்தி) முதன் முதலாக வெளியிடப்படும் செய்தி ; அப்போது தான் நடந்துள்ள ஒன்றைப் பற்றிய செய்திக்கதை. இரண்டாம் செய்திக்கதை (second story), தொடர் செய்தி (follow up) முதலிய இரண்டும் இதனின்று வேறுபட்டவை.

Five Ws One H : (அய்ந்து 'எ' ஒரு 'யா') செய்தி சேகரிக்கும் நிருபர்கள் அய்ந்து 'எ' ஒரு 'யா' அதாவது என்ன, எப்பொழுது, எங்கே, ஏன், எப்படி, யார் (Five Ws one H- What, When, Where, Why, How, Who) முதலியவற்றைத் தன்னோடு ஒன்றுபடுத்த வேண்டியது அவசியமாகும். ஒவ்வொரு செய்திக் கதைக்கும் யார் அதைச் செய்தார்கள்; என்ன நடந்தது ; எப்பொழுது நடந்தது; எங்கு நடந்தது ; ஏன் நடந்தது ; எப்படி நடந்தது என்ற ஒவ்வொரு வினாவிற்கும் நிருபர்கள் விடை காணவேண்டும். நன்கு பயிற்சி பெற்ற நிருபர் ஒருவர் சூழ்நிலைக்கேற்றபடி அய்ந்து 'எ'க்களில் சிலவற்றை இடம் மாற்றியும் அலலது குறைத்தும் எழுதுகிறார். அவர் செய்திக் கதையின் உள்ளே நபர், இடம், நாள், சம்பவம், காரணம் முதலியவற்றைக் கொண்டு வந்து அச்செய்தி மதிப்பிற்கேற்றபடி வரிசைப்படுத்தி எழுதுவதன் மூலம் செய்திக் கதையின் முதல் தொடரின் மதிப்பை உணர்த்திவிடுகிறார். 'மந்திரி திரு. .... ஒரு கார் விபத்தில் நேற்றிரவு கொல்லப்பட்டார் - மெரினா கடற்கரையில் அரசு வருவாய்த்துறைக் கட்டிடத்தின் எதிரே அங்கு மின்சப்ளை இல்லாத காரணத்தினால் இருட்டாக இருந்த சூழலில் கொல்லப்பட்டார் என்ற பொருள்பட அமையும் தொடரில் Who, What, When, Where, Why (யார், என்ன, எப்பொழுது, எங்கே, ஏன்) என்ற வரிசை கையாளப்பட்டுள்ளது. மரபு வழிப்பட்ட இதழாளர்கள் ஒரு நூற்றாண்டுக்கும் மேலே 5 'எ'க்கள், 1 'யா' என்பதைக் கொள்கையாகக் கடைப்பிடித்து வருகின்றனர். ஒரு செய்திக் கதையின் முதல் பத்தியில் எல்லா விஷயமும் சொல்லப்பட்டுவிட வேண்டும் என்பதில் அவர்கள் நோக்கமாக இருந்தால் இதைப் பின்பற்றாததில் தவறில்லை. செய்தித் தாளை வாசகர்கள் வாசிப்பதை விட்டு அலுத்துப்போய் கீழே செய்தித் தாளைப் போட்டுவிடாமல ஈர்க்கச் செய்யும் பொருட்டே இவ்வுத்தி கணக்கிடப்பட்டு நடைமுறையில் கையாளப்பட்டு வருகிறது.

Fixer : (நிலைப்படுத்துபவர் அல்லது உறுதிப்பாட்டாளர்)களத்தில் உள்ள பல்வேறு பிரிவினரோடு இணைந்து வெளிப்புறத்தில் உள்ள குழுக் களுக்கும் அரங்கில் உள்ளவருக்கும் இடையே தொடர்பு மையமாகச் செயல்படும் ஒருங்கிணைப்பாளர்.

Fixing the old story: (பழைய செய்திக் கதையைப் பொருத்துதல்) கணிப்பொறியின் நினைவகத்தில் மட்டும் பழைய செய்திக்கதை இருந்து தாளில் இலலாதிருக்குமானால் அது புது முகப்பில (new lead) எளிதாகச் சேர்க்கப்படலாம். ஒரு காட்சிப்படங் காட்டியில் தகுந்த பதிப்பு முறையை அலலது திருத்தங்களை மேற்கொண்டு சோத்துவிடலாம். இதன் விளைவாக ஒரு புதிய அப்போதுதான் எழுதியதைப் போன்ற செய்திக்கதை கிடைக்கும்.

Flag : (கொடி) 1) செய்தித்தாளின் முதல் பக்கத்தில் உள்ள பெயர்ப் பலகை. செய்திததாளின் பெயரைக் குறிப்பிடும்படி ஒரே வரியில் அமையும் சொல அல்லது சொறகளைக் கொணட பெயாப்பலகை. 'logotype' என்றும் குறிபபிடப்படும் (பார்க்க : masthead). 2) உருக்கு உலோக அச்சுப் பத்தியில் செருகப்பட்டுள்ள தகடு அல்லது அவ்விடத்துச் செருகப்பட்டுள்ள குறிப்புக்களடங்கிய சிறு காகிதத துண்டு. இது அவ் விடத்துச் சில திருத்தம் மேற்கொள்ளப் பட வேண்டி இருக்கிறது என்பதை அச்சீட்டாளருககு உணாத்தும். 'tura rule' என்பதுவும் இதையே உணாத்தும். இச்செய்திக்கதை குறிதது 'இன்னும் வரும்' என்ற குறிபபை உணர்த்துமானால் அவ்விடத்து pi-line என்று குறிப்பிடபபடும.

Flash : (திடீர்ச் செய்தி) ஒரு முக்கியச் சம்பவத்தைப் பற்றிய முதல் செய்தியை மிகவும் அவசரமாக நிருபர்கள் எழுத்துப்படி மேசைக்கு அனுப்பி யிருக்கும் சூழலில் அது திடீர்ச் செய்தி எனப்படும். பத்திரிகையாளர்கள் அசாதாரண வேளைச் சம்பவங்களைக் குறிக்கவே இச்சொல்லைப் பயன் படுத்துகின்றனர். பொதுச் செய்தி களில் ஒரு பெருஞ்சிறப்பு வாய்ந்த சம்பவத்தை விளக்குவதற்கு எப்போதா வது பயன்படுத்தப்படும் சில சொற் களைக் கொண்டு விளக்கப்படும் ஓர் அரிய செய்தி ஆகும் இது.

Flat : (ஒளிபுகாத் தாள்) எதிரீட்டு அச்சுப் படிமைத் தகட்டை உருவாக்கும் பொருட்டு தேவையான நிலையில் கட்டி வைக்கப்பட்டுள்ள நெகடிவ்களை உள்ளடக்கிய ஒளிபுகாத்தாள். 'mask' என்றும் அழைக்கப்படும்.

Flat-bed press : (தட்டைப் பரப்பு அச்சு இயந்திரம்) ஒரு தட்டையான அச்சுப் படிவத்தின் மீது காகிதம் பொருத்தப்பட்டு நேர்குத்தாகப் பிடிக்கப்பட்டுள்ள அச்செழுத்துக்களின் மூலம் அச்சிடும் அச்சியந்திரம். ஒரு தட்டை வடிவம் மையைத் தாளுக்குக் கொண்டு செல்ல இங்கு பயன்படுத்தப்படும். உருளி அச்சுப் பொறி (cylinder press) என்றும் குறிப்பிடப்படும்.

Flexibility : (நெகிழ்வுத் தன்மை) செய்தித்தாள் தயாரிப்பில் இட அளவு நெகிழ்வத் தன்மை கட்டாயம இருக்க வேண்டும். செய்தி அறையில் இது ஒரு அடிப்படைக் கொள்கையாகப் பின்பற்றப்படுகிறது. இதனடிப்படை யிலேயே பல்வேறு வழக்கங்கள் செய்தித் தயாரிப்பில் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. கடைசியில் அப்போதுதான் நிகழ்ந்த செய்தியாக வந்து சேர்வனவற்றிற்கு இடம் தேவைப்படுமாதலால் பிற செய்திகள் சுருக்கிக் கொள்ளப்படும் வகையில்

ஏற்கனவே எழுதப்பட்டிருக்க வேண்டும். எனவே எழுத்துப்படி மேசையில் வாசகனின் கண்ணோட்டத்தில் ஒரு செய்தியைச் சிதைக்காமல் அதன் நீளத்தைக் குறைப்பது ஒரு முக்கியமான திறமையாகும். இவ்வாறு செய்திக் கதையின் நீளத்தைக் குறைத்தல் எளிதானதல்ல.

Flimsy : 1. (மென்தாள்), 2. (எழுத்துப் படி). 1) கார்பன் பிரதிகளை (கரித்தாள் பிரதிகளை) ஆக்குவதற்குப் பயன்படுத்தப்படும் மெல்லிய தாள்கள். 2) எழுத்துப்படி ; எனக்கு ஒரு கார்பன் பிரதியைக் கொடுஎன்பது எனக்கு ஓர் எழுத்துப்படியைக் கொடு என்பதற்கு ஈடானது.

Flip card : (முன் இயங்கு அட்டை) படப்பிடிப்பு அரங்கத்தில் காமிராவின் முன்னர் வைக்கப்படக் கூடிய அட்டை. அது படங்கள், தலைப்புக்கள், பணி விபரங்கள், அட்டவணைகள் போன்றவற்றை உள்ளடக்கி இருக்கும்.

Flood light : (பரவுஒளி விளக்கு) தொலைக்காட்சி நிகழ்ச்சிப் படப்பிடிப்பில் பரவலாகச் சென்று விரிந்த இடத்தில் பொதுவாகத் தரும் ஒளியை உமிழும் விளக்கு.

Floor manager : (நிலைய அரங்க மேலாளர்) தொலைக்காட்சி நிலைய அரங்கில் தயாரிப்புப் பிரிவின் பொறுப்பாளராகப் பொறுப்பு வகிப்பவர். இவர் இயக்குநர்/தயாரிப்பாளர் ஆகியோரின் சார்பாளராக நிலைய அரங்கில் பணியாற்றுபவர்.

Floor men : (நிலையஅரங்கப் பணிக்குழுவினர்) தொலைக்காட்சி நிலையப் பணிக் குழுவினர். இவர்கள் இயற்கைக் காட்சிப் பின்னணிகளை நிலைநிறுத்துதல், அப்புறப்படுத்துதல், நகர்த்துதல், விளக்குக் குறிப்பு அட்டைகளைக் கையாளுதல் போன்ற பணிகளைச் செய்வர்.

Floor plan : (நிலைய அரங்கத் திட்டம்) தொலைக்காட்சி நிகழ்ச்சிப் படப்பிடிப்பிற்கென அரங்கில் மேசை, நாற்காலிகள் போன்ற பொருட்களை அமைத்து, காமிராவையும் வைத்து அமைக்கும் தேவையான நிலைய அரங்கு அமைப்புத் திட்டம்.

Floppy disk : (சிறு வட்டத் தகடு) கணிப்பொறிப் பயன்பாட்டில் பயன்படுத்தப்படும் நெகிழ்ச்சியுடையதும் மெல்லியதுமான ஒரு ப்ளாஸ்டிக் காந்தத் தகடு. நடுத்தர சிறிய அளவிலான தகவல்களைச் சேமித்து வைக்கப் பயன்படுத்தப்படுகிறது. 'diskette' என்றும் அழைக்கப்படுகிறது.

Fluff : 1. (சிறு சிக்கல்), 2. (தூசி). 1) பேசுவதிலோ அல்லது ஒரு செய்திக் கதையை ஒலிபரப்பாளர்வாசிப்பதிலோ ஏற்படும் ஒரு பிழை. 2) வானொலி ஒலிபரப்பில் இசைத்தட்டை இயக்க உதவும் முள் பொருந்திய கருவியில் அடைந்துள்ள தூசி.

Flush : (இடவலப்புற ஒழுங்குத் தலைப்பு) செய்திக் கதையின் தலைப்புக்களைப் பத்தியின் ஓரத்தில் இடதுபுறமாகவோ அல்லது வலது புறமாகவோ தள்ளி வரிகளை ஒழுங்குபடுத்துல் உண்டு. ஓரத்தில் இடதுபுறமாகத் தள்ளி ஒழுங்கு செய்யப்பட்ட தலைப்பு இடப்புற ஒழுங்குத் தலைப்பு எனப்படும். சான்று :-

10 ஊழியர்கள் பணிபுரியும்
நிறுவனங்களுக்கு
பி.எப். நடைமுறை

ஓரத்தின் வலதுபுறமாகத் தள்ளி ஒழுங்கு செய்யப்பட்ட தலைப்பு வலப்புற ஒழுங்குத் தலைப்பு எனப்படும். சான்று :-

10 ஊழியர்கள் பணிபுரியும்
நிறுவனங்களுக்கு
பி.எப். நடைமுறை

இட, வலப்புற இருபக்க ஒழுங்குத் தலைப்பு என்பது தலைப்பின் வரிகள் அனைத்தும் இடமும் வலமும் ஒரே

அளவில் இருப்பதைக் (flush full) குறிக்கும். தலைப்பின் முதல் வரியை வலது இடதுபுறமாகத் தள்ளி அடுத்த வரியை ஒரு 'எம்' உள்ளே தள்ளி எழுதும் முறையும் உண்டு.

சான்று :

10 ஊழியர்கள் பணிபுரியம்
நிறுவனங்களுக்கு
பி.எப். நடைமுறை

Fly : (நீக்கு) தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பில் நிலைய அரங்கில் இயற்கைக் காட்சிப் பின்னணிகள் மற்றும் பொருட்களை நீக்குதல்.

FM wave : (பண்பலை வரிசை) வானொலி அலைவகைகளில் ஒன்று. 'Frequency modulation'என்பதன் முதலெழுத்துச் சுருக்கம். 'Frequency modulation' என்பது வானொலி ஒலிபரப்பில் உள்ள



இயங்காத் தன்மை அற்ற ஒரு அமைப்பாகும். இவ்வமைப்பு ஒலிபரப்பு அலையின் அதிர்வை, அனுப்பப்படும் ஒலியைப் பொறுத்து அதற்கேற்பச் சரிசெய்து கொள்ளுகிறது. AM-இல் இவ்வியல்பு இல்லை. AM (Amplitude modulation) ஒலி அலைகளை இயல்பிலிருந்து அது விடுபடும் அளவைப் பொறுத்து சரி செய்துகொள்ளுகிறது. பண்பலைகளில் அலைகளுக்கு இடையில் உள்ள ஒலியலைகளின் எண்ணிக்கை (frequency) மாறும். உண்மையான ஒலி அலை வடிவத்திற்கேற்ப அதிர்வு அலையின் வீச்சு (amplitude) மாறாமல் நிலையாக இருக்கும். அதாவது அலையின் உயரம் நிலையாக இருக்கும். ஆனால் அதிர்வின் காரணமாக அமையும் அலை நீளம் மாறுகிறது. அலை அகலம் மாறாமல் இருக்க அலையின் அதிர்வு மாறுபடுகிறது. AM உண்டுபண்ணுவதை விட அதிக அதிர்வையும் சிறு அலைகள் முதலியவற்றைக் காட்டும் குறியீடுகளையும் பண்பலை பரப்புகிறது. FM குறியீடுகள் சில பார்வைக் கோட்டின் நேர்த்தன்மை அல்லது சராசரி நல்ல நிலப்பகுதிக்கு மேல் முடிந்தவரை ஆன்டெனாவை அதிக அளவு உயரத்தில் வைப்பதாலும் பரப்பப்படுகின்றன.

மலைகள், உயர்ந்த கட்டிடங்கள், மரங்கள் முதலியவை FM குறியீடுகளைத் தடுக்கும். எனவே FM நிலையத்தின் பரப்பு அதன் மின்சக்தியால் தீர்மானிக்கப்படுகிறது. ட்ரான்ஸ்மீட்டர், ஆன்டெனாவின் மின்சக்தி, உயரம் முதலியவற்றால் கட்டுப்படுத்தப்படும் ஆன்டெனா கட்டுப்பாடு ஆகிய இரண்டுக்கும் இடையே உள்ள தொடர்பினாலேயே அதிக அளவு ஒவ்வொரு நிலையத்திற்கும் ஒலி/ஒளிபரப்பு இணைப்பு கிடைக்கிறது. FM-இல் ஆன்டெனா கோபுரத்தின் ஒரே ஒரு பணி-சிறு வட்டங்களை ஆதரித்தலும் நீக்குதலும் ஆகும். FM ஆன்டெனாவின் உருவாக்கங்கள் அவை நீள்வெட்டு அல்லது குறுக்கு வெட்டுக் குறியீடுகள் இவற்றுள் ஏதாவதொன்றையோ அல்லது இரண்டையுமே உண்டு பண்ணுமா என்பதைப் பொறுத்தது. ஆன்டெனா பூமி அலையையோ வான அலையையோ முக்கியமாகக் காட்டாமல் அதிர்வற்ற தட்பவெப்ப நிலையில் மட்டுமே ஒலி ஒளிபரப்புவதால் தொடர்ச்சியற்ற தொலை தூரத்தையே காட்டலாம். FMஅலைகள் சிறியவை. அவை காற்று மண்டலத்தின் மேல்பகுதியைத் துள்ளச் செய்கின்றன என்பதை விடவும் ஊடுருவுகின்றன என்பதுவே பொருந்தும். மாறாக FM அலைகளின் ஓரங்கள் மின்னல் போன்றவையும் அல்ல. மனிதனால் ஆக்கப்பட்ட இயங்காப் பொருளுமல்ல. அவை AM-இல் போலவே குறியீடுகளின் மேல் செல்லும். தொலைக் காட்சியில் AM காட்சிப் படத்திற்கும் FM ஒலிக்கும் என்று இருப்பின்

விமானம் ஒன்று கடக்கும் போது விமானத்தின் அருகாமை தற்காலிக மாகப் படத்தைச் சிறிது சிதைக்கும். ஆனால் ஒலியைச் சிதைக்காது. FM-இல் அதிகமான இசைவு என்பது கூடுதல் சிறப்பாகும்.

Focul length : (குவிய நீளம்) பார்வை மற்றும் ஒளி விதி அறிவியலில், ஒரு ஆடி குவியப்படுத்தப்பட்டிருக்கும் போது ஒரு ஆடியின் பார்வை மையத்திற்கும் பிலிமுக்கும் உள்ள தூரத்தைக் குறிக்கும். பொதுவாக ஒரு சிறிய குவிய நீள ஆடி புரொஜெக்டரில் பயன்படுத்தப்படும் போது திரையில் பெரிய உரு வடிவினைக் காட்டும்.

Focus : (குவியம்) குவியம் என்பது ஒரு குறிப்பிட்ட பொருளின் உருவம் தெளிவாகவும் துல்லியமாகவும் இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. இந்த உரிப்பார்வை தொலைக்காட்சிக் காமிராவில் உள்ள ஆடியையும் அதன் பின்னால் உள்ள ஒளி கவரும் குழாயையும் அருகருகே கொண்டு செல்வதன் மூலமும் அல்லது அவற்றின் இடைவெளியை அதிகப் படுத்துவதன் மூலமும் பெறப்படும். ஆடி, ஒளி கவரும் குழாய் இரண்டனுக்கும் இடையே உள்ள இடைவெளியே குவியம் ஆகும்.

Fold back : (அரங்கு ஒலிப்பு வசதி) தொலைக்காட்சி நிலையத்தின் பதிவு செய்யப்பட்ட ஒலியை நிலைய அரங்கிற்குள் போட்டுக் காட்டி அரங்கிற்குள் ஒலிக்கச் செய்யும் வசதி.

Folio : 1. (பக்க எண்), 2. (ஒருவகைத் தாள்). ஒரு பக்கம் அல்லது பக்க எண்ணைக் குறிக்கும். ஒருவகைத் தாளையும் குறிக்கும்.

Folklore of tribals : (மலைவாழ் மக்களது நாட்டுப்புறக் கலைகள்) மலைவாழ் மக்களின் நாட்டுப்புறக் கலைகள் ; இவை வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளாகத் தரப்படுவது உண்டு.

Folk music : (நாட்டுப்புற இசை) நாட்டுப்புற இசைக்கென வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் நேரம் ஒதுக்குவது உண்டு.

Follow: 1. (பிரிப்பு), 2. (தொடர் செய்தி). 1) மையக் கதையிலிருந்து பிரிக்கப் பட்ட பக்கக்கோடு. பொதுவாக அதற்கென்றே ஒரு சிறு தலைப்பு தரப்பட்டிருக்கும். 2) ஏற்கனவே முதல் நாள் வந்த செய்தியின் தொடர் செய்திக்கதை. 'Folo' என்று சுருக்க மாகக் கூறப்படும்.

Follow copy : (எழுத்து படியைத் தொடர்க) அச்சுக்கோர்ப்பவருக்கு எழுத்துப்படியில் எப்படி எழுதப்பட்டுள் ளதோ அப்படியே அச்சுக் கோர்க் கவும் என்று நெறிப்படுத்தும் வகையில் எழுத்துப்படியில் தரப்பட்டிருக்கும் குறிப்பு. பல்வேறு பிழை திருத்தக் குறிப்புகள் தரப்பட்டிருப்பதற்கும் மேலாகத் தரப்படும் கூடுதல் குறிப்பு இது. பிழை திருத்தப் படிவத்தில் (Proof) குறிப்பாக அப்படிவம் பல பிழைகளைக் கொண்டிருக்கும் போது பிழை திருத்தப் படிவத்தை எப்படி எழுத்துப்படி எழுதப்பட்டிருந்ததோ அப்படியே பிழையைத் திருத்தி அச்சுக் கோர்க்கவும் என்று அச்சுக்கோர்ப் பவரை நெறிப்படுத்தும் குறிப்பு.

Follow left : (இடப்பக்கம் தொடர் அசைவு முறை) தொலைக்காட்சி நிகழ்ச்சிப் படப்பிடிப்பில் காமிரா அசைவு முறைகளில் ஒன்று. காமிரா, பொருளின் இடது கோணத்திலிருந்து பொருளுக்கு இணையாக அதே பக்கம் நகர்ந்து செல்லுதல் இவ்வசைவு முறை. நேயர்கள் காமிராவின் வழியாகப் பொருளின் இடப்பக்கத்தைப் பார்ப் பதற்கு இம்முறை உதவும்.

Follow right : (வலப்பக்கம் தொடர் அசைவுமுறை) தொலைக்காட்சி நிகழ்ச்சிப் படப்பிடிப்பின் காமிரா அசைவு முறைகளில் ஒன்று. காமிரா, பொருளின் வலது கோணத்தில் இருந்து பொருளுக்கு இணையாக அதே பக்கம் நகர்ந்து செல்லுதல். நேயர்கள் காமிராவின் வழியாகப் பொருளின் வலப்பக்கத்தைப் பார்ப்பதற்கு இவ்வசைவு முறை உதவும். முன்பின் அசைவு முறை, கீழ்மேல் அசைவு முறை, திரும்பு அசைவு முறை போன்றவற்றைப் போல இவ்வுத்தி முறையை அடிக்கடி பயன்படுத்தக்கூடாது.

Follow up story: (தொடர் செய்திக் கதை) ஏற்கனவே அச்சிட்டு வெளிவந்த ஒரு செய்திக் கதையின் வரிசை அல்லது தொடர்ச்சியே தொடர் செய்திக்கதை என்பதாகும். இத்தகையதொடர் செய்திக் கதையில் ஏற்கனவே நடந்த செய்தியைப் பற்றி சிறிதளவு முதலில் குறிப்பிடப் பட்டிருக்கும். இதனால் முதல் செய்தியை அறியாத அல்லது கவனிக் காமல் விட்டுவிட்ட வாசகர்கள் / நேயர்கள் இச்செய்திக் கதையைத் தொடர்ந்து வாசிப்பதில்/கவனிப்பதில் தடை இருக்காது. சான்றாக, ஒரு திருட்டு இன்று நடைபெற்று அது தொடர்பான தகவல்கள் அனைத்தும் கொடுக்கப்பட்டுள்ளது எனில் அடுத்த நாள் செய்தி திருடர்கள் கைது செய்யப்பட்ட செய்தியைக் குறிப்பிட்டால் அதுவே ஒரு தொடர் செய்திக்கதை ஆகும். தொடர் செய்தி என்பது பெயர்ச் சொல்லாகக் கொள்ளப்படின் இரண்டாம் நாள் செய்தியையும் வினைச் சொல்லாகக் கொள்ளப்படின் நேற்றைய செய்திக் கதையைப் பற்றிப் புதுத் தகவலைச் சேகரிக்கும் செயலையும் குறிக்கும். இத்தகைய தொடர் செய்திக்கதை 'folo', 'follow', follow up', 'follow story' என்று பலவாறாகக் குறிப்பிடப்படுகிறது.

Font (CHIRON) : 1. (தனிநிலை), 2. (அச்செழுத்து வகை). தொலைக் காட்சி நிகழ்ச்சிக்கென இரண்டாகப் பிரிக்கப்பட்ட பக்க வடிவமைப்புத் திட்டத்தோடு (TV layout) தொடர்பு டையது. இரண்டு பகுதியில் ' வீடியோ' என்ற பகுதியில் தலைப்பையும் முகப்பு உரையையும் காட்டப் பயன்படும் குறியீடு FONT என்பதாகும். சில நிலையங்களில் FONT என்றும் சில நிலையங்களில் CHIRON என்றும் பயன்படுத்தப்படுகின்றன. இந்தக் குறியீட்டைத் தொடர்ந்து எழுதப்பட்டி ருக்கும் விஷயம் தொலைக் காட்சியில் தோன்றச் செய்யப்பட வேண்டும். அது நீக்கப்பட வேண்டு மானால் 'FONT OUT' என்று குறிப் பிடலாம். 2) அச்செழுத்துக் களின் வகையில் FONT என்பது ஒரு குடும்பத்தைக் குறிக்கும். சான்று : BODONI, HELVETICA.

Forced exposure : (கட்டாய கவனிப்பு) தொலைக்காட்சி நிகழ்ச்சி கள் பொதுவாக ஆர்வமூட்டு வனவாக இல்லையெனில் நேயர்கள் வேறு எதையாவது கவனிக்கத் தொடங்கி விடுவர். ஆனால் சில நிகழ்ச்சிகள் அவ்வத் துறையினருக்கென்றே ஒளிபரப்பப்படுபவை. அத்தகைய நிகழ்ச்சிகளை அவ்வக் குறிப்பிட்ட துறையினர் கட்டாயம் பார்ப்பர். சான்றாக, 'மனைமாட்சி' போன்ற சென்னைத் தொலைக்காட்சி நிகழ்ச்சி இல்லத்தரசிகளால் விரும்பிப் பார்க்கப்படும். தொலைக்கல்விப் பாட வரிசையில் நிகழ்த்தப்படும் வானொலி உரைகள் தொலைக்கல்வி கற்கும் மாணவர்களால் விரும்பிக் கவனிக் கப்படும். இத்தகையன வலுக்கட்டாயப் படுத்தப் பட்ட நிகழ்ச்சிகள்.

Form : (அச்சுப் பக்கத் தொகுப்பு) ஒரு சட்டத்தில் (chase) வைத்து இறுக்கப்பட்டு அச்சிடுவதற்கு என தயாராக வைக்கப்பட்டுள்ள ஒரு

முழுப்பக்க அச்சுத் தொகுப்பு. அச்சு எழுத்து வரிகளாக்கப்பட்டு வேண்டிய அளவில் பக்கங்களான பின்பு அச்சடிப்பதற்கு வசதியாக சட்டத்தில் வைத்து இறுக்கப்பட்டு இயந்திரப் பகுதிக்கு அனுப்பப்படும்.

Format : (வடிவ அமைப்பு) 1) ஒரு நூலின் அல்லது ஒரு நூற் பகுதியின் அல்லது ஒரு நாளிதழ்/இதழின் ஒரு பக்கத்தின் வடிவம். தானியங்கு அச்சுக்கோர்ப்பானில் 'இன்ன அச்செழுத்து வடிவம்' போன்ற குறிப்புக்கள் உட்செலுத்தப்படும். நீள அகலம், நடை முதலியவற்றை உள்ள டக்கிய வடிவ அமைப்பு (தொலைக் காட்சி நிகழ்ச்சியைப் பொறுத்தவரை பொதுவாக ஒரு தனி நிகழ்ச்சி தொடரும் வரிசை முறை) அதன் வடிவ அமைப்பு எனப்படும். ஒரு நிகழ்ச்சியின் ஒட்டுமொத்த பாணியும் அந்நிகழ்ச்சி யின் ஒட்டுமொத்தத் தோற்றமும் கூட அதன் வடிவ அமைப்பு ஆகும். ஒரு நிகழ்ச்சியில் அடுத்தடுத்து என்னென்ன இடம்பெற வேண்டும்; எதை அடுத்து எது இடம்பெற வேண்டும் என்ற அமைப்பு பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். சான்றாக ஒரு செய்திப் படைப்பு பின்வரும் வடிவமைப்பைக் கொண்ட தாக இருக்கலாம்.

முதல் இரு நிமிடங்கள்	–	தலைப்புத் தொடர்கள்
அடுத்த இரு நிமிடங்கள்	–	வணிக நோக்குப் படைப்புகள்
அடுத்தஅய்ந்து நிமிடங்கள்	–	அகில உலகச் செய்திகள்
அதன்பின்னர் உள்ள நேரங்கள்	–	நிறைய வணிகநோக்குப் படைப்புக்கள்

என்ற வரிசை முறை அதன் வடிவமைப்பு ஆகலாம். கணிப்பொறி மயமாக்கப் பட்ட அச்சுக்கோர்ப்பில் ஒரே ஒரு பொத்தான் மூலமாகவே ஒரு சிறு அச்சுக்கோர்ப்புப் பணிக்குத் தேவை யான இன்னின்ன தன்மையுடைய குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற குறிப்புக்களுக்காக ஆணை பிறப்பிக்கக்கூடிய வசதி உண்டு. இவ்வாறு ஆணை பிறப்பித்தல் 'வடிவ அமைப்பு ஆக்கல்' (Formatting) எனப்படும். 2) ஒளிநாடா வடிவம் அல்லது பதிவுபண்ணும் வகை மாதிரி.

Format keys : (வடிவ அமைப்பாக்கச் சாவிகள்) காட்சிப்படங்காட்டியில் (VDT) உள்ள சாவிகள் அச்செழுத்துக் களுக்கு ஆணை பிறப்பிக்க உதவும். இவ்வாறு ஆணை பிறப்பிக்கும் செயல் வடிவ அமைப்பு ஆக்கல் (Formatting) எனப்படும்.

FORTRAN : (கணிப்பொறி மொழி வகைகளுள் ஒன்று) கணிப்பொறியில் அடிக்கடி பயன்படுத்தப்படும் மொழி. குறிப்பாக, புள்ளிவிபரக் குறிப்பிலும் பிற அறிவியல் பயன்பாடுகளிலும் பயன் படுத்தப்படும். "FORMULA TRANSLATOR" என்ற தொடரிலிருந்து உருவாக்கப்பட்ட சொல்.

Four colour : (நால்வண்ண மறு தயாரிப்பு) நால் வண்ணத்தில் மறுபடியும் ஒன்றனைத் தயாரித்தல். இச்செயல் முறையில் ஒரு உண்மையான முழு வண்ணம் பயன்படுத்தப்படும். அந்த ஒரு மூல வண்ணத்திலிருந்து முதன்மை வண்ணங்களான சிவப்பு, மஞ்சள், நீலம் மற்றும் கருப்பு ஆகியன முதலில் தனித்தனி மறிநிலைத் தகடுகளுக்கும் (negatives) பின்னர் அச்சீட்டுத் தகடுகளுக்கும் (printing plates) மறு தயாரிப்புக்கென வடிகட்டப்படுகின்றன. உடனுக்குடன் நால்வண்ண மறுதயாரிப்புக்கள் செய்வதற்கு ஒவ்வொரு வண்ணத் திற்குமெனக் கலை வினைஞரால் செய்யப்பட்ட தனித்தனி இயந்திர நுட்பம் சார்ந்த தயாரிப்புக்கள் தேவை. இவ்வண்ணங்களிலிருந்து வடிகட்டப்

படாமலேயே மறிநிலைத் தகடுகளும் அச்சீட்டுத் தகடுகளும செய்யப்படும்.

Fourth estate: (நான்காம் கூறு) இதழியல அரசியலின் 'நான்காம் கூறு' என்று அழைககபபடுகிறது. பத்திரிகை களுக்கு மரபு வழியாக உள்ள பெயர் ; குறிப்பாகப் பத்திரிகைகளின் கண் காணிபபுப் பங்கினைக் குறிக்கும் வகையில இப்பெயர் கூறப்படுகிறது. ஆட்சி செமமையுடன் நடைபெற உதவும் நான்கு ஆட்சிக் கூறுகளாக மன்னன் அல்லது குடியரசுத் தலைவர், சமயம் அலலது நீதித்துறை, பாராளுமனறம், இதழியல் ஆகிய வறறைக குறிபபிடலாம். தறபொழுது மக்கள் கருத்து (public opinion) அய்ந்தாவது கூறாகக் குறிப்பிடப் படுகிறது 'Fourth estate', என்ற தகுதி அல்லது பெயர் பததிரிகைகளின ஆறறலகளைக குறித்து நிற்கிறது. குறிப்பாக அரசு தன குடிமககளாகிய தனிமனித நலனில் அளவுககதிமாகப் பங்கெடுததுக்கொண்டு தன் வளாச்சி நிலைப போக்கினைக காணக்கூடிய ஒரு ஜனநாயக சமுதாயததில் தகவல தொடர்பு சாதனங்கள் அரசின் நிர்வாகச செயலமுறைகள் பற்றியும் அவற்றுள செயல்படுததாமல விடடு விடப்படடன குறிததும் மககளின் கவனத்தை ஈாபபது கடபபாடாகிறது இது நல்வழியில மககள் கருத்தினைப (public opinion) பெருக்குவதன் வாயிலாகச சாததியமாகும். பததிரிகை களின இச்செயல மூலம மககள் கருததை உருவாக்கலாம் ; மறறும தளர்த்திவிடலாம. எனவேதான் 'பேனா முனையே வாளமுனையை விடச சிறந்தது' என்று சரியாகக் கூறப்படுகிறது. 'Fourth estate' எனற சொல் முதன் முதலில் மெககாலேயால் பயன் படுத்தப்பட்டது ஹாலம்ஸ என்பவர் அரசியல் அமைப்பின் வரலாறு பற்றி 1828-இல் ஒரு கட்டுரை எழுதும்போது பின்வருமாறு எழுதினார். 'நிருபர்கள் அமர்ந் திருக்கும் படிஅடுக்கு (gallery) fourth estate ஆக இருக்கிறது'. சில வருடங்களுக்குப் பின்னர் ஆங்கிலப் பாராளுமன்ற உறுப்பினரும் பெரும் பேச்சாளருமாகிய எட்மண்ட் பர்க், 'பாராளுமன்றத்தில் மூன்று கூறுகள் இருந்தன. அரசுரிமை (Royalty), பிரபுக்கள் (Lords), பொதுமக்கள் (Commons) என்பனவே அவை. ஆனால் நிருபர்கள் பகுதியில் எல்லாவற்றையும் விட மிக முக்கிய மான நான்காம் கூறு சற்று தொலை வில் அமர்ந்திருக்கிறது' என்று குறிப்பிட்டு இதழியலை அரசியலின் நான்காம் கூறு என்று போற்றினார். நான்காம் கூறு என்ற இச்சொல்லைக் கையாளுவதன் காரணம் என்ன வெனில் பத்திரிகைகள பாராளுமன்ற விவாதங்களை உள்ளடக்கிய செயதிகளைப் பரவச் செய்பவர்கள் என்ற முக்கியத்துவத்தை வலியுறுத்து வதற்கே ஆகும். சமுதாயம் மாறும் போது பத்திரிகைகள் மாறலாம். ஆனால் அவை சமுதாயத்தின் அவ்வப்போதைய மாதிரிகளையும் சமுதாயத்தினுள் அதனை இயக்கும் வலிமையையும் பிரதிபலிததுக் காட்ட ஒருபோதும் தவறுவதில்லை. அதைப் போலவே பத்திரிகைகள் பொது மக்களின் பிரதிநிதியாகவும் குரலாகவும் செயலபட வேண்டும். சமுதாயத்தில் அதிகாரிகளுக்குரிய கடமைகளை அதிகாரிகளுக்கு நினைவூட்டும் சக்தியாகவும் இருக்க வேண்டும். பத்திரிகைகள் தம் பங்கினை ஒருபோதும் ஒதுக்கித் தள்ளிவிடக் கூடாது.

Frame : (தனிப்படம்) ஒரு அசையும் திரைப்படத்தில் அல்லது காட்சி நாடாவில் உள்ள ஒரு தனிப் படம். திரைப்படத்தில் சில படங்களின் வரிசைகளில் இது ஒரு கூறு. ஒரு வினாடியில் காட்டப்படும் திரைப்

படத்தில் 24 முதல் 28 வரையிலான தனிப்படங்களின் தொகுப்பு இருக்கலாம். பிரிட்டிஷ் தொலைக் காட்சி அமைப்பில் ஒரு வினாடிக்கு 25 திரைப்படத் தனிப்படங்களும் (film frames) அமெரிக்கத் தொலைக்காட்சி அமைப்பில் 24 திரைப்படத் தனிப் படங்களும் உள்ளன.

Framing : (படம் அமைத்தல்)

Frankfurt school : (ஃபிராங்ஃபர்ட் பிரிவினர்) பிராங்க்ஃபர்ட் குழுவினர் மார்க்ஸிய வழி வந்தவர்களுள் ஒரு பிரிவினர். பண்பாட்டாளர் அணுகு முறை ஒன்றனைப் பின்பற்றுகின்றனர். இக்குழுவினராகிய அடோர்னோ, ஹோர்கெய்மர், மார்கியூஸ் ஆகியோரின் பணிகள் குறிப்பிடத் தக்கன. இவர்கள் மார்க்ஸால் குறிப்பிடப்பட்ட புரட்சி கரமான சமுதாய மாற்றம் குறித்த வெளிப் படையான தோல்வி குறித்துப் பெரிதும் எண்ணிப் பார்த்தனர். இத்தோல்வி பற்றி விளக்கும்போது அவர்கள் குறிப்பாக தகவல் தொடர்பு சாதனங்களின் வடிவில் உள்ள மேற்கட்டுமானச் செயலாற்றலை பொருளாதார மாற்றத்தின் வரலாற்று நடைமுறைகளைச் சீர்குலைக்கும் ஆற்றலைப் பேசினர். ஆதிக்க சக்திக் கொள்கைகள் சீர்குலைத்தல், உழைக்கும் வர்க்கத்தை ஓரினமாக உருவாககல் ஆகியவற்றின் மூலம் பொருளாதார அடிப்படைகளைக் கட்டாயப்படுத்துவனவாக அமைவதால் ஒருவகையில் வரலாறு தவறாகப் போய்விட்டதாக இவர்கள் கருது கின்றனர். மேலும் ஒட்டுமொத்த வணிக மயமாக்கப்பட்ட பொதுக் கலாச்சாரம் (mass culture) வழியாகவே ஏகபோகத் தனியுரிமை முதலீடு வெற்றிபெற்று வரமுடிந்தது. பொருட்கள், பணிகள், எண்ணங்கள் முதலியவற்றின் பொது உற்பத்திக் கான மொத்த அமைப்பு முதலாளித்துவ அமைப்பினை அதன் தொழில்நுட்பக் காரணகாரியத் தொடர்பு சார்ந்த அர்ப்பணிப்பு, நுகர்வோரியம், குறைந்த கால மன நிறைவு, வகுப்புவாதமின்மை என்ற புனைந் துரை ஆகியவற்றோடு ஏறக்குறைய முழுமையாக விற்றுவிட்டது. இந்த வளர்ச்சி முறையில் நுண்கலை, திறனாய்வு, எதிர்க் கலாச்சாரம் முதலியன இலாபம் கருதி திறனாய்வு அதிகாரத்தை இழந்த நிலையில் சந்தை மயமாக்கப்பட முடியும் என்று தோன்றுவதால் உற்பத்திப் பெருக்கமே கொள்கை சார்ந்த கருவியாக இருக்கிறது. ஃபிராங்க்ஃபர்ட் கொள்கை, தனிநபர்கள் மற்றும் இனங்கள் உருக்களின் மீதும ஒட்டுமொத்தமாக அமைப்புக்களுக்குப் பொதுவான விவாதச் சொற்கள் மீதும் சார்ந்திருக் கின்றனர் என்று உறுதியாகக் கூறுகிறது. 'பண்பாட்டுத் தொழிற் சாலை'யின் உதவியுடன் உருவான சமுதாயத்திற்கு மார்கியூஸ் ஒருமுகப் பரிமாணம் (one Dimensional) என்ற பெயரை அளித்தார். இப்பிரிவினரது கருத்துப்படி தகவல் தொடர்பு சாதனம் ஒரு சக்திவாய்ந்த இயக்கம்.

Freedom of the Press : (பத்திரிகைச் சுதந்திரம்) இந்தியாவில் பத்திரிகைச் சுதந்திரத்தின் தேவை, நோக்கம், இயல்பு முதலியவற்றைச் சட்டப்பிரிவு 19(1)(a)-இலிருந்து பின்வருமாறு வரையறுத்துக் கொள்ளலாம். அ) செய்தியைப் பல்வேறு மூலாதாரங் களிலிருந்தும் எதிர்ப்புச் சக்திகளிட மிருந்தும் பரப்புதல் ஒரு நாட்டு நலனுக்கு முக்கியமானது. இதனடிப்படையில் பத்திரிகைச் சுதந்திரம் தேவையாகிறது. ஆ) அத்தகைய சுதந்திரமே ஒரு சுதந்திரமான அரசுக்கு அடிப்படை. இ) அத்தகைய உத்தரவாதத்தின்

நோக்கம் பொது மக்களில் உள்ள பெரிய மனிதர்கள் தங்களைப் பொதுமக்களின் பாதுகாவலர்கள் என்று எண்ணிக் கொள்வதைத் தடுப்பதே ஆகும். ஈ) வேலை செய்தலில் தேவை யான போது வேலை செய்தலும் தேவையான போது வேலையற்றிருத்தலும் ஆகிய சுதந்திரம், தலையங்கம் எழுதுதல் போன்றவற்றில் எந்தக் கட்டுப்பாடும் அற்று இருக்கும் சுதந்திரம் முதலியன ஆகும். இந்தியாவின் முதல் பத்திரிகைக் குழு (First Press Commission) "பொது அதிகாரத்தின் எந்த வகையான தலையீடும் இல்லாமல் கருத்துக்களைக் கொண்டிருக்கவும், செய்திகளைப் பெறவும் அச்சிட்டு வெளியிடவும் இருக்கின்ற சுதந்திரம்" என்று பத்திரிகைக் சுதந்திரத்தினை வரையறை செய்தது. எனவே எதை வெளியிட விரும்புகிறார்களோ அதை அரசின் முன் அனுமதி இன்றி அச்சிட்டு வெளியிட பொதுமக் களுக்குள்ள உரிமை என்று இதைக் கூறலாம். இன்ன காலத்தில் என்றில்லாமல் எக்காலத்தும் எல்லாப பிரச்சினை குறித்த கருத்துக்களையும் சேகரித்தல், அவை குறித்துக் கருத் துரைத்தல், தனது இதழ் வெளிவருவது குறித்த திட்டப்பாங்கினைத் தானே வரையறுததல், எந்த ஒரு செய்தியையும் தன் பத்திரிகையில் வெளியிட மறுத்தல் ஆகிய செயல்களோடும் செய்திகளைச் செய்தி ஆசிரியரின் வழிகாட்டுதலின் பேரில் அச்சிடுதல், அவ்வாறு அச்சிட்டவற்றைப் பிற குழுவினருக்குப் பரப்புதல், தேவையான போது வேலையை நிறுத்திக் கொள்ளல் முதலியவற்றோடும் பத்திரிகைச் சுதந்திரம் தொடர்புடையது. பொதுவாக, ஒரு பத்திரிகை அலுவலகத்தின் நிர்வாகக் குழுவினரின் சுதந்திரத்தை மறைமுகமாகப் பாதிக்கும் எதுவுமே பத்திரிகைச் சுதந்திரத்தின் தடையே எனலாம். பத்திரிகையின் தலையங்கப் பகுதி அல்லது பத்திரிகையின் செய்திப் பகுதிகளில் எச்செய்திகளைப் பிரசுரிப்பது என தெரிவு செய்வதில் இருக்கும் சுதந்திரமாகிய பத்திரிகைச் சுதந்திரம் ஆசிரியரால் விளக்கப்பட வேண்டுமேயல்லாது அரசுப்பொது அதிகாரி ஒருவரால் விளக்கப்படக் கூடாது. ஏனெனில் பத்திரிகை மூலமாக இன்னின்னதான் கூறப்பட வேண்டும் என்று கட்டாயப் படுத்தப்படும் எங்கும் பத்திரிகைச் சுதந்திரம் தொடர்ந்து நிற்கும் என்று கூற முடியாது.

Freelance Journalists : (சுதந்திர இதழாளர்கள்) பொதுமக்களுள் சிலர் தாம் அறிந்த செய்திகளை மற்றையோருக்குச் சொல்ல விரும்பும் போது அவற்றைத் துணுக்குச் செய்திகளாகவோ அல்லது சிறப்புக் கட்டுரைகளாகவோ எழுதி பத்திரிகை களுக்கு அனுப்புவர். அப்பகுதி வெளியீட்டிற்கென ஏற்றுக்கொள்ளப் பட்டால் அச்செய்தி மதிப்பிற்குத் தகுந்தபடி பத்திரிகையால் அவருக்குச் சன்மானம் தரப்படும். இத்தகைய செய்தி எழுதி அனுப்பும் முறையை வழக்கமாக கொண்டிருப்போர் சுதந்திர இதழாளர் எனப்படுவார்.

Frequency : (ஒலியலையின் அதிர் வெண்) ஒரு நொடியில் வானொலியில் அனுப்பப்படும் அலைகள்.

Frequency distortion : (ஒலி அலைக் குறுக்கீடுகள்)

Front end system : (முன்-பின் அமைப்பு) பத்திரிகை உலகில் முந்தைய வருடங்களில் இரு பெரிய பகுப்பு வரையறை இருந்தது. அவ்வரையறையின் படி, செய்தி அறையானது விளம்பரம் உள்ளிட்ட வணிக அலுவலகத்தினின்று பிரித்து வைக்கப்பட்டிருந்தது. 'முன்பகுதி',

'பின்பகுதி' என்ற பிரிப்பும் இருந்தது. முன் பகுதி என்பது அலுவலக ஆசிரியர்கள், தலையங்கம் எழுதுவோர், நிருபர்கள் மற்றும் தந்திப்பணிக் கருவிகள் முதலிய அனைவரையும் உள்ளடக்கியது. பின்பகுதி என்பது அலுவலக அச்சுக் கோர்ப்போர், அச்சக அலுவலர்கள், விநியோகத் துறை முதலியவர்களை உள்ளடக்கியது. இவ்விரு அமைப்புக் களும் பதிப்பித்த எழுத்துப்படியைச் செய்தி அறையிலிருந்து செய்தித் தயாரிப்பு அறைக்குக் கொண்டு செல்லும் வழியாகச் செயல்படுவதே இவற்றின் வேறுபாடு ஆகும். தானியங்கு செய்தித்தயாரிப்பில் (automated production) எல்லாச் செயல்களும் தகட்டாக்கத்திற்கு (Plate making) முந்தையவாய் அமைகின்றன. இது முன் அச்சு (Preprint) என்றும் முன் தகட்டமைப்பு (Preplate systems) என்றும் அழைக்கப்படும்.

Front office : (முன்பகுதி அலுவலகம்) 1) வணிக அலுவலகம் 2) சில சிறிய அளவிலான நாளிதழ்களில் மேசை முன் அமர்ந்து எழுதும் பணியில் ஈடுபடும் எல்லாச் செய்தித் தயாரிப்பாளர் களையும் உள்ளடக்கிய அலுவலகம். அச்சுக்கோர்ப்பார் அல்லாத பகுதி.

Front projection : (முன்னொளி வீச்சு) தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பில் தொடர்புடைய முன் னொளி வீச்சு.

Full face : (தடித்த எழுத்து அல்லது முழு எழுத்து) தடித்த முக அச் செழுத்து ஆகிய 'Bold face' என்ற பொருளைக் குறிக்கும் பழைய வழக் காற்றுச் சொல். 'ff' என்று சுருக்கிக் கூறப்படும். வழக்கமான அச்செழுத் துக்களை விட இது கனமானதாகவும் தடிமனானதாகவும் இருக்கும்.

Full shot : (முழுக்காட்சி) காட்சிப் படப்பிடிப்பு வகைகளுள் ஒன்று. பொருளின் முழுமையும் தெரியும்படி படம் எடுத்தல் முழுக்காட்சி (Full shot) எனப்படும். ஒருவரை முழுக்காட்சி எடுக்க வேண்டுமெனில் அவரது தலைமுதல் பாதம் வரை தெரியும்படி எடுக்க வேண்டும்.

Full track : (முழுத் தடம்) ஒரு ஒலி/ ஒளி நாடாவின் அகலப்பகுதி முழுவதை யும் ஒரே நிகழ்ச்சிக்குப் பயன்படுத்துதல்.

Function keys : (செயல் பொத்தான்கள்) காட்சிப்படங் காட்டியின் சாவிப் பலகையில் உள்ள சாவிகள். இவை நகர்புள்ளியை (cursor) நகரச் செய்கிறது. அல்லது சுருட்டுவதற்காகச் செலுத்தப்படும் ஆணைகளை எடுத்துச் செல்லு கின்றன.

Future : (எதிர் செய்திக் குறிப்பு) பின்னால் விரித்து எழுதிக் கொள்ளலாம் என கருதப்படக்கூடிய செய்திக்கதையைப் பற்றிய குறிப்பு; அத்தகைய குறிப்புக்கள் ஒரு ஏட்டில் குறித்து வைக்கப்பட்டிருக்கும். அதே ஒரு பணிக்கப்பட்டுள்ள பணிகள் பற்றிய குறிப்பேடாகவும் பயன்படுத்தப்படும்.

Future book : (எதிர் சம்பவக் குறிப்பேடு) எதிர்வரும் சங்பவங்களின் தேதிகளைக் குறித்து வைத்திருக்கும் ஏடு.

FYI : (உங்கள் கவனத்திற்கு) For your information (உங்கள் கவனத்திற்கு) என்பதன் சுருக்கம்.

G

Gag leads : (நகைச்சுவை கலந்த முகப்பு) செய்தி முகப்பு வகைகளுள் ஒன்று ; நகைச்சுவை கலந்து செய்தி முகப்பு அமையுமாயின் அது இவ்வகைப் படும். ஒரு செய்தி அறையில் நகைச் சுவை பயக்கும் விதத்தில் செய்திக் கதையை எழுதுமாறு பணிக்கப்பட்ட ஒருவரே பிறர் அனைவரையும் விட மிகுந்த வருத்தத்துடன் அமர்ந் திருப்பார். ஒரு சூழல் நகைச்சுவை பயப்பதாக இருப்பின் நன்கு பயிற்சியு டைய செய்தி எழுதும் நபர் அச்செய்திக் கதையே நகைச்சுவையை வெளிப் படுத்தும் வகையில் எழுதி விடுவார். அதில் ஏற்பட்டுள்ள நகைச் சுவைக்குத் தான் எழுதிய முறையே காரணம் எனபதை நயமாக மறுத்து விடுவார். இதழியலில் நகைச்சுவை கலந்து எழுதுவதற்கு மிகுதியான ஆற்றலும் அத்துறையில் மிகுந்த பயிற்சியும் அவசியம் தேவை

Gain : (ஒலி/ஒளிச் சமநிலை) உருப் பெருக்கபபட்ட ஒலி அல்லது காட்சி யின தேவையான சமநிலை.

Galley : (அச்செழுத்துக்களை அடுக்கும் நீண்ட தட்டு) உலோக அச்செழுத்துக்கள (hot metal) அச்சுக் கோர்க்கப்பட்ட பின் வைக்கப் பட டிருக்கும் ஒரு தட்டு. இது குழிந்ததாய முப்பக்கம் கொண்ட ஒரு பக்கம திறந்த உலோகத்தகடாய் இருக்கும். அச்சுக் கோர்ப்பவர்கள் 10 வரிகள் கோர்த்து முடித்தவுடன் இதில் எடுத்துவைப்பார்கள். அச்செழுத்துக் களை அடுக்கும் இந்நீண்ட தட்டின் நீள அளவு சுமாராக 20 அங்குலம் இருக்கும.

Galley press : (பிரதி மேஜை) பிரதி எடுக்கும் மேஜை. அச்சுக் கோர்க்கப் பட்ட அச்செழுத்துக்கள் வைக்கப் பட்டுள்ள நீண்ட தட்டிலிருந்து பிரதி எடுக்கப் பயன்படும் மேஜை. மேஜையின் மீது ஒரு பக்கத்தில் இருந்து மறுபக்கத்திற்கு உருட்டிச் செல்லும் வகையில் கனமான உருளை பொருத்தப்பட்டு இருக்கும். உருளைக்கும் மேஜையின் மேல் மட்டத்திற்கும் இடையில் அச்சுக் கோர்க்கப்பட்டு வைத்திருக்கும். அச்செழுத்துத் தகடடை வைத்து அவ்வெழுத்துக்கள் மீது மை தடவுவார்கள். அதன்மீது தாளை வைத்து உருளையை உருட்டுவார்கள். இப்போது அச்சுக் கோர்ககப்பட்ட செய்தி தாளில் பதிந்திருக்கும். இதை 'galley proof' எனபர். இப்பிரதியில் உள்ள அச்சுக் கோர்ப்புப் பிழைகள் சுட்டப்பட்டு அவை அச்சுக் கோர்க்கப்பட்டுள்ள செய்தியில் திருத்தப்படும்.

Gatefold : (நீளமான பக்கம்) பத்திரிகையில் இடம்பெறும் பத்திரி கையின் அளவினதான பக்கத்தைவிடப் பெரிய படம் மறறும் விளக்கக் குறிப்புகளை புத்தகத்தின் தாளின் அளவை விட நீளமானதாக அல்லது அகலமானதாக அச்சிட்டு அதையே புத்தக அளவில் மடித்து புத்தகத்தின் தொகுதியுடன் சேர்த்து பைண்டு செய்யப்படுவது உண்டு. இதை 'கேட்.:.போல்டு' என்பர்.

Gate-keeping : (வாயில் நிலைத் தேர்வு) ஒரு நாளிதழில் செய்தி நிறுவனங் களிலிருந்து அதிக அளவில் வந்துவிழும் தந்தித் செய்திகளிலிருந்து மிகச்சில தேவையான செய்திகளைத் தெரிவு செய்யும் பணியில் ஈடுபட்டி ருக்கும் ஆசிரியரின் செயல்பாடுகளை விளக்கு

முகமாக முதன்முதலாக ஓயிட் என்பவரால் தகவல் தொடர்பு சாதனங்கள் ஒரு 'வாயில் கவனிப்பாளர் களாகச் செயல்படுகின்றன என்ற கோட்பாடு பயன்படுத்தப்பட்டது. ஓயிட், கீபர் ஆகிய இருவரும் செய்தி அறையில் பெரிய அளவில் தந்திச் செய்திகள் வாயிலாகச் செய்தி நிறுவனங்களிடமிருந்து வந்து விழும் செய்திகள், படங்கள் முதலியவற்றைத் தம் பத்திரிகைகளுக்கு ஏற்றவாறு தெரிந்தெடுப்பதைக் குறிக்க இச்சொல்லைக் குறித்தனர். இத்த கைய 'வாயில் நிலைத் தேர்வு' பின்னர், பெரிய அளவில் செய்தித் தயாரிப்பு முறையில் ஒரு படிநிலையாகக் கருதப் பட்டது. எல்லா தகவல் தொடர்பு சாதனங்களும் ஒரு பெரிய அளவு செய்திக் கதைகளிலிருந்து மிகச் சிலவற்றைத் தெரிவுசெய்து வரையறைக்குட்பட்ட சாதனங்களின் வழியே தெரிவிக்க வேண்டி யிருக்கிறது. தம் ஈடுபாடு அல்லது நாளிதழ் மரபு கருதி அவர்கள் தெரிவு செய்யும் செய்திகளின் அளவினை விளக்க அல்லது தகவல் தொடர்பு சாதனங்களின் செய்தி மதிப்பைக் குறிக்க இச்சொல் கையாளப்படுகிறது. தற்சார்பு முறையில் செய்தித் தெரிவு செய்யப்படுவதை இது விளக்கும். இக்கோட்பாட்டின்படி செய்தித்தாள் கள் தம் செய்தி வெளியீட்டு முறையில் ஒரு கட்டுக்கோப்பான வரையறை யைக் கொண்டுள்ளன. அதாவது செய்திகள் தயார் நிலையில் அல்லது சிக்கலற்ற கதை வடிவில் வந்து தகவல் தொடர்பு சாதன வாயிலில் விழ அங்கு அவை அனுமதிக்கப்படுகின்றன ; அல்லது ஒதுக்கப்படுகின்றன. 'மக்கள்', 'இடம்', 'காலம்' ஆகிய சில சூழல்களுக்குட்பட்டுச் செய்திகள் தெரிந்தெடுக்கப் படுகின்றன.

General-Assignment reporter : (பொதுப்பணி நிருபர்) குறிப்பிட்ட செய்திக்கதை குறித்துச் சேகரிப்பதற் காகக் குறிப்பிட்ட செய்திக் களத் திற்குச் செல்வதற்காக மட்டும் இவர் என பணி நிர்ணயிக்கப்படாமல், நகர்ச் செய்தி ஆசிரியரின் பணிகள் குறித்து உதவும் வகையில் எனனென்ன வேலைகள் தேவைப்படுகின்றனவோ அவையனைத்திற்கும் பணியாற்றுமாறு இருக்கும் நிருபர்.

Generator : (சக்தி மாற்று கருவி) இயந்திர சக்தியை மின்சக்தியாக மாற்றும் இயந்திரம்.

Geometric distortion : (வடிவ நுட்பச் சிதைவு) தொலைக்காட்சிப் படங் களின் வடிவ நுட்பச் சிதைவு. சான்றாகச் செம்மையான நேர்கோடு, வட்டம் போன்றவை சிதைந்து தெரி வதைக் குறிப்பிடலாம்.

Geo-Stationary satellite : (புவிச் சமன் செயற்கைக்கோள்) பூமியின் வேகத்திற்கு இசைந்து ஆகாயத்தில் சுற்றுவதால் நிலையாக இருப்பதாகத் தோன்றும் செயற்கைக் கோள்.

Gimmick : (கவர்ச்சிக் கூறு) புது தொடர் நிகழ்ச்சி அல்லது ஓரேநேரச் சிறப்பு நிகழ்ச்சி தொலைக்காட்சியில் முதன் முதலில் ஆரம்பிக்கப்படும் போது அந்நிகழ்ச்சியை விளம்பரப்படுத்தவும் மக்களின் கவனத்தைப் பெறவும் காட்டப்படும் ஒரு தந்திரக்காட்சி. இது சிறியதாக கவர்ச்சி மிக்கதாக அமைய வேண்டும். ஒளிபரப்பு நிகழ்ச்சிகளில் இவ்விளக்கம் தந்திரமாகக் காமிரா வைக் கையாளும் முறையில் அமையும்.

Glancer : (கண்ணோட்டச்செய்திக் கூறு) ஒரு செய்திக்கதை அல்லது தொடர்புடைய செய்திக் கதைகளின் வரிசை அல்லது ஒரு நாளின் முக்கியச் செய்திகள் முதலியவற்றுள் ஏதாவது ஒன்றினைத் தொகுத்துக் கூறும் செய்திப் பகுதி.

Glossy : (பளபளப்புஅச்சு) பளபளப்பு அச்சு என்ற பொருள் தரும் வகையில் பளபளப்பான தாளில் அச்சிடுதலைக் குறிக்கும்.

Golden rod : (வண்ணக் கோல்) எதரீட்டு அச்சிடு முறையில் பயன் படுத்தப்படும் குறிப்பிட்ட வண்ண முடைய தட்டைப் பகுதி.

Good leads : (நல் முகப்புச் செய்திகள்) செய்தியைச் சொல்லுதல் என்ற உள்ளுணர்வின் உந்துதலே ஒரு கலைஞனின் முதல் நோக்கமாதலால் இவ்வகை முகப்புச் செய்திகளில செயதி சிறநத முறையில் சொல்லப் பட்டிருக்கும்

Good night : (பணி முடிவு) நாளிதழின் இறுதி வெளியீடு முடிந்த பின்னர் செய்திப பிரிவினை மூடுதல். பணி முடிவினை அடைதல் என்பது அன் றைய செய்தி அலுவலகக் கடமை யினின்று அதை முடித்து வெளி யேறுதல் ஆகும்.

Gothic type : (ஒருவகை இன அச்செழுத்து) விளிமபிற்குக் கட்டுருக் கொடுககும நுண்வரைமானம், சம கனமுள்ள வீச்சுக்கள் முதலியன இல்லாத அடிப்படை இன அச்செழுத்துக்கள்.

Government News Sources : (அரசுச்செய்தி ஆதாரங்கள்) மூத்த நிருபர்கள் பொதுவாக அரசுச செயதிகளைச சேகரிக்கும பணியை மேற்கொள்வர் வழக்கமான அரசுச் செய்திகளைத் தரும் செயதி ஆதாரஙகள் பின்வருமாறு : 1) செய்தி மற்றும பொதுத் தொடர்புத் துறை 2) அமைச்சகங்களில் பத்திரிகை நிருபர்கள் கூட்டங்கள் 3) அமைச்சுத் துறைத் தலைவர்களுடன் அல்லது செயலாளர்களுடன் நிகழ்த்தப்படும் பேட்டிகள் 4) அரசு வெளியீடுகள் (கெஸட்ஸ், தமிழ்நாட்டில் தமிழக அரசின் வெளியீடான தமிழரசு போன்ற இதழ்கள்) 5) அமைச்சகத்திற்கு வரும் பார்வையாளர்கள், பிரதிநிதிகள் 6) வெளிப்படும் இரகசியங்கள். மாநிலச் செய்திகளை வெளியிடுதலினின்று மத்தியச் செய்திகளை வெளியிடும் முறை வேறுபட்டது. பல்வேறு செய்தித் தாள்களின் பல நிருபர்கள் நாடெங்கும் பரந்து இருக்கின்றனர். இதற்குமேல் வெளிநாடுகளில் செயல்படும் நாளி தழ்கள் மற்றும் இதழ்களின் அலுவலகங் கள் நாட்டின் தலைநகரில் உள்ளன. அவர்களும் தம் திட்டங்கள், நிகழ்ச்சி களை அவர்தம் தொடர்பிற்கேற்ப வரையறைப்படுத்துகின்றனர். சில குறிப்பிடட செய்தித் தாள்களில் சில நிருபர்கள் அரசின் ஒவ்வொரு துறைக்கும் (தொழில்துறை, கல்வி, நலம், உள்துறை போன்று) என நியமிக்கப்பட்டுச் செயல்படுகின்றனர். இத்துறைகளில் அவர்கள் துறை வித் தகராக இருப்பதனால் இத்தகைய செய்திகளைத் திறமையோடு சேகரித்து வெளியிடுகின்றனர். சில செய்தித்தாள்கள் குறிப்பிட்ட நிருபர் களைக் குறிப்பிட்ட மாநிலங்களில் (தமிழ்நாடு, ஆந்திரா, குஜராத், மேற்கு வங்காளம், பீகார்) சென்று அங்குள்ள பிரச்சினைகளை அலசி ஆழமான செய்தி அறிக்கைகளைத் தருமாறு கேட்டுக்கொள்கின்றன. சான்றாக, தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய இரு மாநிலங்களுக்கிடையே காவிரி நீரைப் பகிர்ந்துகொள்வதில் சிக்கல்கள் ஏற்படும்போது இம்மாநிலங்களில் செய்தி சேகரிப்பதில் சிறப்பாக ஈடுபடடுள்ள நிருபர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு எல்லாச் செய்தி களையும் சேகரித்துத் தருவர். இவர்கள் இத்துறைச் செய்தி சேகரிப்பில வல்லுநராக இருப்பர். மாநிலச் செய்தி மற்றும் செய்தித் தொடர்புத் துறை, மத்திய அரசின்

பத்திரிகைச் செய்தித்துறை போன்றவை முதன்மைச் செய்தி ஆதாரங்கள் ஆகும். நிருபர்கள் இங்குள்ள நபர்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு அதன்மூலம் அங்குள்ள அன்றாடச் செய்திகள் என்னென்ன என்று சேகரிப்பர். இத்துறைகள் அரசுச் செய்திகள் குறித்த கைப்பிரதிகளை விநியோகிக்கும். அக் கைப் பிரதிகள் மூன்று வகைப்படும். 1) பத்திரிகை (பணித்துறை) அறிவிப்பு (Press Communique) 2) பத்திரிகைக் குறிப்புரை (Press Note) 3) பத்திரிகைச் செய்தி வெளியீடு (Press Release). இம்மூன்றனுள்ளும் முதலது மிக முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமன்றி எப்போதாவது தான் விநியோகிக்கப்படும். முக்கியக் கொள்கைத் தீர்மானம் குறித்த அதிகாரபூர்வமான அறிவிப்புக்கள் பத்திரிகைப் பணித்துறை அறிவிப்பு மூலம் அறிவிக்கப்படுகின்றன. இரண்டாவது முக்கியத்துவம் வாய்ந்தது பத்திரிகைக் குறிப்புரை. அது சில கொள்கைகள் அமல்படுத்தப்படும் போது அரசுத் துறைகளின் தீர்மானங் களையும் (Press note) குறிப்பிட்ட விஷயங்கள் மீதான அரசின் நிலைப்பாட்டையும் விளக்குகின்றன. பத்திரிகைச் செய்தி வெளியீடு (Press release) அன்றாட நிர்வாகச் செய்தி களையும் அமைச்சகத்தின் செயல் களையும் விளக்குகின்றன. நிருபர்கள் செய்தித் துறையின் இயக்குநரைச் சந்திப்பர். அவர்களது அன்றாடப் பணியில் துறை அதிகாரிகளைச் சந்திப்பதும் ஒரு பணியாகும். அவாகளைச் சந்தித்துச் சிறப்புச் செய்திக் கதைகள் குறித்த விளக்கங்களைக் குறித்துக் கொள்வர். திட்டம் குறித்த ஒரு செய்திக் கதையை எழுத முற்படுவாரேயானால் அவர் அது குறித்த தேவையைக் குறிப்பிட்டுச் சிறப்பாக உதவுமாறு கேட்டுக் கொள்வார். அத்துறையும் தேவையான செய்திகளை அவருக்கு விநியோகித்து உதவும். செய்தித் துறையும் சில குறிப்பிட்ட காலங்களுக்கு உட்பட்டு நிருபர் கூட்டத்தைக் கூட்டுகிறது. அதன் நோக்கம் சில துறைகளில் அரசு புரிந்துள்ள சாதனைகளை உயர்த்திக் காட்டுதலும், வெள்ளம், கனத்த மழை போன்றவற்றினால் ஏற்பட்டுள்ள சேதங்களை வெளிக்காட்டுதலும் ஆகும்.

அமைச்சுத் துறை நிருபர் கூட்டத்தில் பத்திரிகைகள் ஒரு சிறந்த செய்தி சேகரிப்பை நிகழ்த்திக் கொள்கின்றன. அங்கு செய்திகளை வெளிக்கொணரும் பொருட்டு அவை கேள்விகளைக் கேட்பதற்கு உரிமையுடையன. செய்தித் துறை ஏற்பாடு செய்யும் இத்தகைய நிருபர் கூட்டத்திற்கு எல்லாப் பத்திரிகை நிருபர்களும் அழைக்கப்படுவர். டெல்லியில் பிரதம மந்திரி எப்போதெல்லாம் சூழ்நிலை மாறுபாட்டிற்கு உள்ளானதாக ஆகி விளக்கங்கள் தேவைப்படுகிறதோ அப்போதெல்லாம் நிருபர்களைச் சந்திப்பார். மாநிலங்களிலும் முதன் மந்திரி, அமைச்சர்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் செய்தி மாநாட்டை (நிருபர் கூட்டத்தை) ஏற்பாடு செய்வர். இவற்றோடு கூட, இதழாளர்களும் அமைச்சர்களும் வழக்கமான அவர்தம் அன்றாடச் சுற்றுக்களில் சந்திப்பர். செயலாளர்கள், அமைச்சுத் துறைத் தலைவர்கள், அமைச்சர்களால் அறிவிக்கப்பட்ட தீர்மானம் குறித்த விளக்கங்களைக் கேட்பதற்காகச் சந்திக்கப்படுவர். இவ்வதிகாரி களுடனான பேட்டிகள் சில வேளை களில் செய்திக் கதைகளை ஆக்கப் பயன்படுகின்றன. அரசு வெளியீடுகள் (கெஸட்ஸ் போன்றவை) நிருபர்களால் விளக்கமாகக் கூர்ந்தாராயப்படு கின்றன. அவற்றிலிருந்து செய்திக் கூறுகள் தெரிந்தெடுக்கப்படுகின்றன.

அமைச்சர்களைச் சந்திக்க அமைச்சகத்திற்கு வரும் பார்வையாளர்கள், பிரதிநிதிகள அமைச்சர்களைச் சந்திப்பர். பத்திரிகை நிருபர்கள் அறைக்கு அவர்கள் வந்து அரசுக்கு விண்ணப்பித்துள்ள பொது நிலை அறிக்கைகளின் (Memorandum) படியைத் தருவர். நிருபர்கள் உடனே அது தொடர்பான அமைச்சரைச் சந்தித்து அது குறித்த உண்மைகளைப் பரிசோதித்து அதன்பின்னரே செய்தி எழுதுவர். செய்திக் கசிவும் (Leakage) ஒரு செய்தி ஆதாரமாகிறது. யார் உனக்கு இதைச் சொன்னார்கள் என்ற கேள்விக்கு யார் மூலமாகவோ அருமையாகக் கிடைத்த செய்தி என்ற பொருள்பட 'the crow' என்று பதிலளிப்பதும் உண்டு. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்கள் பத்திரிகை நிருபர் கூட்டங்களைக் கூட்டி, ஏற்கனவே தமக்குக் கிடைத்துள்ள அரசுச் செயதிகளைத் தருவர். காவல்துறை அதிகாரியும் குற்றச் செய்திகளைத தருவார்.

Gramphone : (இசைத்தட்டுப் பெட்டி) வானொலி இசைத்தட்டுகளை இயக்கும கருவி

Graphics : (வரைபடங்கள்) தகவல தொடர்பு சாதனங்களால் பயன்படுத்தப் படும் படங்கள்; வரைபடக்கலை சிறப்பு விளைவுகளை ஏற்படுத்துவதற்காகத் தொலைக்காட்சித் தயாரிப்புக்களில் பயன்படுத்தப்படுகின்றது. நாளேடுகளில், சஞ்சிகைகளில், தொலைக் காட்சியில் கணினி வரைபடங்களுக்கு மிகப்பெரிய பங்கு உண்டு.

Gratifications : (விருப்பக் கூறுகள்) ஒலிபரப்பு/ஒளிபரபபு நிகழ்ச்சிகளுள் நேயர் எதிர்பார்க்கும் விருப்பக் கூறு. நேயர்கள் விரும்பும் கூறுகள் என்று சில கூறுகளைக் குறிபபிட்டுச சொல்லலாம். நிகழ்ச்சியில் ஏதோ சில கூறுகள் நேயர்களை ஈர்ப்பதால் குறிப்பிட்ட நிகழ்ச்சியை நேயர்கள் விரும்பிப் பார்க்கின்றனர். அக்கூறுகள் நிகழ்ச்சியில் அமையுமாறு நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் பார்த்துக் கொள்வர். பரபரப்பு, விறுவிறுப்பு, நகைச்சுவை, புதுச்செய்தி, பால் உணர்வு, குறிப்பிட்ட செய்திக்கு முக்கியத்துவம் தரப்படுதல், சமுதாய மதிப்பு, சொந்த விருப்பு, ஆர்வம், நடப்பியல் சித்திரிப்பு, புதுமை முதலியன நேயர்களால் நிகழ்ச்சிகளில் எதிர்பார்க்கப்படுகின்றன. இவையே நேயர்களின் கணிப்பில் சில நிகழ்ச்சிகளை அவர்கள் விரும்பு வதற்கான கூறுகளாகக் காட்டப் படுகின்றன. சான்றாக, ஒரு நிறுவனம் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சிகளுக்குச் செய்தி மிகுதி முதன்மை விருப்பக் கூறாக இருக்கும். அப்படியானால் தான் அந்நிகழ்ச்சி மதிப்புள்ளதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான உள்ளடக்கமாக இருக்கும். செய்திக் கதை எழுதுபவர் சிறப்பாக எழுது பவராக இருப்பின் நகைசசுவை பயக்கும் வண்ணம் செய்தி வெளியிடும் முறையைக் கையாண்டு செய்தி கேட்போரைத் - தனவயப்படுத்துவார். ஆர்வமூட்டல், செயதி மிகுதி இரண்டும் கலந்து அமைவது வலுவான விருப்பக் கூறு. நகைச்சுவை, செயல், புதுமை முதலிய வற்றின் கலவை நல்ல வெளிப்பாட்டு முறையைத் தரும்.

Graveyard shift: (அடுத்த பணி மாற்று) காலையில் வெளிவரும் ஒரு நாளிதழின் இறுதி வெளியீடு அச்சுக்குப் போனபின் அடுத்த பொறுப்பை ஏற்றுப் பணிபுரிய முக்கிய இதழாளர்கள் வருதல்.

Gravure : (கிராவ்யூர் படப்பதிவு முறை) பட எதிரீட்டு எழுத்தச்சுப்படிம முறை யில் (Photo offset lithograph) நிழறபட மறிபவடித்தை உலோகத் தகட்டில் மாற்றிப் படம் உருவாக்கும்

முறை. இம்முறைப்படி செதுக்கல் பகுதிகள் மையைக் கொண்டு சென்று தாளில் படமுள்ள பகுதிகளை உருவாக்க, தட்டைப் பகுதிகள் எவ்வித உருவமும் இல்லாத படமற்ற பகுதி களை உருவாக்குகின்றன. இம்முறை 'ரோட்டோ கிராவ்யூர் (rotogravure) என்றும் குறிப்பிடப்படுகிறது.

Gray out : (கறுப்படித்தல்) ஒருபக்கம் முழுவதும் ஏராளமான செய்திக் கதை அச்செழுத்துக்களால் நிறைந்து கறுப்படித்திருக்குமாயின அதன விளைவாகக் கறுப்பு வண்ணமாகி வாசிக்கும் ஆர்வத்தைக் குறைக்கும்.

Green proof: (திருத்தப்படாத அச்சுப்பகுதி) பிழை திருத்தப்பட வேண்டிய ஆனால் இன்னும் திருத்தப் படாத அச்சுப் பகுதியைக் குறிக்கும்.

Ground : (இணைப்பு) ஒலிபரப்பு ஒலிவாங்கியிலிருந்து பூமிவரை இடையே உள்ள இணைப்பு.

Group : (குழு) 1) அச்சுக்கலையில் அச்செழுத்துக்களின் அய்ந்து அடிப்படை வகைகளாகிய டெக்ஸ்ட், ரோமன், கோதிக், ஸ்கிரிப்ட், கர்ஸிவ் அல்லது நாவல்டி ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றனைக் குறிக்கும் சொல. 2) ஒரு ஒலி மேசையில் இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட அலைவரிசைகள் ஒன்றாக இணையச் செய்யப்படலாம். அதன் மூலம் ஒரே குழுவாக ஆக்கப்படும். அப்போது ஒரு தனிக்குழு மங்கச் செய் கருவி (fader) இவ்வெல்லா ஆதாரங்களையும் ஒரே நோக்கில் கட்டுப்படுத்துகிறது.

Guide : (வழிகாட்டிக் குறிப்பு) ஒவ்வொரு எழுத்துப் படியின் தொடக் கத்திலும் வைக்கப்பட்டுள்ள விளக்கம். அவ்வெழுத்துப்படியினை இனங்காண் பதற்கு அது உதவும்.

Gun mic : (நீள் ஒலிவாங்கி) நீண்ட அமைப்புள்ள ஒலிவாங்கி ; இது காட்டுப்பறவைகளின் ஒலி போன்ற புற இயற்கை ஒலிகளைத் தெளிவாகப் பெறுவதற்கு உதவும்.

Gutter : (ஒதுக்கு ஓரம்) இரண்டு எதிரெதிரான பக்கங்களுக்கிடையே யுள்ள இடைவெளிப் பகுதி : இப்பகுதியே நூலில் இணைப்புச் (binding) செய்யப்படும் பகுதி. இணைப்புச் செய்யப்படும் பகுதியின் ஒதுக்குக் கோடிட்ட ஓரம்.

GV : (பொது நோக்கு) 'General View' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம்.

Hair line : (மென்கோடு)ஒரு மெல்லிய கோடு இடப் பயன்படுத்தப்படும் உலோகச் சட்டம்.

Hair space : (குறு இடைவெளி) வரி வார்ப்பில் மிகக் குறைந்த இடைவெளி. ஓர் எம்மில் ஆறில் ஒரு பங்கு. மயிரிழை போன்ற மிகச் சிறிய மெல்லிய இடைவெளி.

Halftone : (நுண்பதிவுப் படம்) உண்மையான ஒன்றினை ஒரு திரை வழியாகச் செலுத்தி மீண்டும் அதன் பிரதியினைத் தயாரித்தல் ; நிழற்படச் செதுக்கல் முறையில் (photo engraving) ஒரு நிழற்படப் பிரதி எடுககப் படுகிறது. எவ்வாறெனில் ஒரு திரை வழியாக ஓர் உலோகத் தகட்டில் (zinc) செலுத்தப்பட்டு அதன் வாயிலாக வெவ்வேறு வடிவிலான சிறிய புள்ளிகள் உருவாகி அவை ஒளி, நிழல் முதலியவறறை அச்சைப் போலவே உருவாக்குகின்றன

Half track : (பாதித் தடம்) வானொலி ஒலிப்பதிவில் ஒலிப்பதிவு நாடாவின் அரைப்பகுதி அழிக்கப்படடு மீதி அரைப்பகுதியில் ஒலிபபதிவு செய்யப் படுதல்.

Hand back : (முடிவுச் சொற்குறிப்பு) நிகழச்சி தருவோர் தனது நிகழ்ச்சி முடியபபோகிறது எனபதைக் குறிப்பால் உணர்ததுவதற்குப பயன்படுத்தும் சொறகளாலான குறிப்பு

Hand out : (கைப்பிரதி) 1) ஒரு சம்பவததை விவரிககும செயதி அறிககை 2) பததிரிகையாளர்கள் கலந்து கொளளும் கூடடங்களில அவர்களது பயனுக்காகத் தரப்படும் ஒரு வெளியீடு. 3) பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக விநியோகிக்கப்பட்ட செய்தி. எழுதப்பட்ட பிரச்சாரச் செய்தி யைக் குறிக்கும் பொதுச்சொல் இது.

Hand properties : (கைப்பொருட்கள்) தொலைக்காட்சி நாடகம் போன்ற வற்றில் கையில் எடுத்து நடிப்பதற்குப் பயன்படுத்தக் கூடிய பொருட்கள். சான்று : கண்ணாடி, டம்ளர், கரண்டி.

Hand signals : (கை சமிக்ஞைகள்) வானொலி நிலைய அறைக்குள் நிகழ்ச்சியின் பங்கேற்பாளர்களை நோக்கி நிகழ்ச்சியைப் பதிவு செய்பவர் தம் கைகளால் காட்டும் சைகைகள். சான்று : விரைந்து படிக்குமாறு குறிப்பிடுதல், பேசுவதைக் குறைக் குமாறு குறிப்பிடுதல்.

Hand stuck : (கையால் அச்சுக் கோர்த்தல்) இயந்திரங்களின் துணை கொண்டு அச்சுக் கோர்க்காது கையாலேயே அச்சுக்களை அச்சுக் கோர்ககும் முறை.

Hanging bar or indent : (தொங்கும் கோடு அல்லது உள்வெட்டுத் தடம்) ஒருதலைப்பு அல்லது தலைப்பில் ஒரு பகுதி ஓரந்தள்ளியும் உள்ளே தள்ளியும் அமைக்கப்படுவது உண்டு. அதற்குத் தொங்கும் கோடு எனப் பெயர் உண்டு. அதாவது முதல் வரி முழுவரியாகவும் (Full line) பிற வரிகள் பொதுவாக ஒரு எம் உள்ளே தள்ளியும் (indented) அமையும். இறுதி வரி வலப்பக்கம் ஓரந் தளளப் பட்டிருக்கலாம் அல்லது தள்ளப் படாமலும் இருக்கலாம் (flush). இம்முறை இபபோது அருகிப் பயன்படுத்தப் படுகிறது. (பார்க்க : flush)

Hard copy : (நிஜமான பிரதி) ஒரு கணிப்பொறியில் அச்சிடப்பட்ட

வெளியீடு : அல்லது ஒரு கணிப் பொறியில் சேமித்து வைக்கப்பட்டிருந்த பகுதியை (text) ஏதேனும் ஒரு வகை அச்செழுதியைப் பயன்படுத்தி வெளிக் கொணரப்பட்ட பிரதி. எவ்வித கருவிகள்/இயந்திரங்கள் உதவி-இன்றி வாசிக்கத் தக்கது.

Hard focus : (துல்லிய குவியம்) மிகவும் துல்லியமாகப் பொருளை நோக்கிக் காமிராவைக் குவியப்படுத்திப் படம் எடுத்தல்.

Hard news : (உடடினச் செய்திகள் அல்லது வன்செய்திகள்) கடினமான உண்மைகளின் அடிப்படையில் எழும் புதிய செய்திகள். குறைந்த பரபரப் பூட்டும் பொதுமக்கள் பிரச் சினைகள்,பொருளாதாரம், சமூகப்பிரச் சினைகள், அறிவியல் முதலியன குறித்து மிகுதியும் பகுத்தாராயும் செய்திக் கதைகள். மென்செய்தி களுக்கு எதிரானவை.

Hardware : (வன்பொருள்) 'ஸா.'.ப்ட்வேர்' என்பது எந்த கணிப் பொறி அடிப்படை அமைப்பினையும் இயக்கக் கூடிய ஆணைத் தொடர் (Programme). ஹார்டுவேர் என்பது கணிப்பொறி, கணிப்பொறி அடிப்படை அமைப்பின் இணைப்பு (terminals) மற்றும் பிற வன்பொருள்களைக் குறிக்கும்.

HDTV : (ஹெ.டி.டி.வி) High-Definition TV என்பதன் சுருக்கம். மிகவும் உயர்தரமான காட்சி அமைப்பையும் ஒலி அமைப்பையும் தரும் தொலைக் காட்சி அமைப்பு இது. காட்சிப்படத் தொழில்நுட்பத்தில் அடைவதற்கரிய சாதனைகளை அடையமுடியும் என்பதனை ஒலிபரப்பு ஆரம்ப காலத்திலேயே சாதித்துக் காட்டிய தொலைக்காட்சி அமைப்பு HDTV ஆகும். இந்தத் தொலைக்காட்சி அமைப்புக்களின் படத்தரம் 35 எம்.எம் இயங்கு படத்திற்கு இணையானது. இத்துறையில் மேலும் பல சோதனை கள் மிக வேகமாக நடந்துகொண்டே இருக்கின்றன. சில சாதனங்கள் ஏற்கனவே கிடைக்கின்றன.

Head : (தலைப்பாகம்) ஒரு செய்தித் தாளின் மேல்பக்கம் உள்ள மார்ஜின். இதில் செய்தித் தாளின் பெயர், வெளியான இடம், செய்தித் தாளின் விலை போன்ற விபரங்கள் குறிக்கப்பட்டிருக்கும். எல்லா தலைப்புக்களையும் இவ்வாறு குறிப்பதுண்டு.

Head gap : (தலைமை இடைவெளி) ஒலிப்பதிவுக் கருவியின் தலைமைப் பகுதியில் உள்ள துருவங்களுக்கிடை யேயான காந்த இடைவெளி.

Head line : (செய்தித் தலைப்பு) ஒரு செய்தியின் சாரத்தைக் குறிப்பாக உணர்த்தும் தலைப்பு செய்தித் தலைப்பு ஆகும். செய்தித்தாள்கள் பயன் படுத்தும் செய்தித் தலைப்பு. செய்திக்கு மேல் கொட்டை எழுத்தில் அமைக்கப் படும். செய்தி மற்றும் துணைத் தலைப்புக்களை விட பெரிய எழுத்துக் களில் செய்தித் தலைப்பு அமைக்கப் பட்டு இருக்கும். இத்தலைப்பே செய்தியின் கருத்தை வெளிப்படுத்தக் கூடியது. இவை நேர்வரிசை சுருக்குத் தலைப்பு, ஒரு வரித் தலைப்பு, சிறுதொடர் மேல் தலைப்பு, நீண்ட தொடர் மேல் தலைப்பு, நெற்றித் தலைப்பு எனப் பலவகைப்படும் செய்தி யின் சாரம் என்ன என்று வழிகாட்டும் ஒன்றாய் நாம் செய்தித் தலைப்புக் களைப் பயனபடுத்திக் கொள்ளு கிறோம். எச்செய்தி நமககு ஆர்வ மூட்டுவது ; தேவையானது ; எச்செய்தி ஆர்வமூட்டாதது ; தேவையற்றது என்பதைக் காட்டும் வழிகாட்டியாகச் செய்தித் தலைப்புக்கள் பயன்படு

கின்றன. ஆனால் செய்தித் தலைப்பின் இரண்டாவது முக்கியமான செயல் செய்தித் தலைப்புக்களைக் கூர்ந்து வாசிக்கும் வாசகர்களுக்குத் துல்லியமான செய்தியைத் தெரிவித்தல் ஆகும். செய்தித் தலைப்புக்களைக் கூர்ந்து வாசிக்கும் வாசகர்கள் அதிலிருந்து மட்டுமே நடப்புச் செய்தியைப் பெற்றுக் கொண்டு அச்செய்தி குறித்த பிற விபரங்களைப் படிக்காமல் விட்டுவிடுவர்.

செய்தித் தலைப்பு பின்வரும் இரண்டு முதன்மைச் செயற்பாடுகளை உள்ளடக்கியது. 1) ஒவ்வொரு வாசகனுக்கும பெரிதும் ஆர்வமூட்டும் செய்திப் பகுதியைத் தெளிவாகக் கண்ணில் படச்செய்தல். 2) செய்தித் தலைப்புககளை மட்டுமே வாசிக்கும் வாசகர் களுக்குச் செய்தியைக் கூறல். செய்தித் தலைப்பு மேற்கொள்ள வேண்டிய பிற துணைமைச் செயற்பாடுகள் பின்வருமாறு : 3) வாசகர்களுக்கு அச்செய்தியோடு தொடர்புடைய முக்கியத்துவத்தைத் தெரிவித்தல். செய்தியின் முக்கியத்துவம், அச்செய்திக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் இடம், இட அளவு, செய்தித் தலைப்பின் அளவு, கனம முதலியவற்றின் வாயிலாக வலியுறுத்தப் படுகிறது. இது துறைவல்லுநர்களது தீர்மானத்தின் பேரில் ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படுகிறது. 4) வாசகனுக்குச் செய்தியின் கருத்தாழததை உணாத்தி அச்செய்தி குறிததுச் சிந்திக்க வேண்டியதன தீவிரத்தை (seriousness) உணர்த்துதல். பெட்டிச் செய்தி போன்றவறறிற்குரிய வெவவேறு அலங்கார அச்செழுத்துககள, சாய்வெழுத்துக்கள், நட்சத்திரக் குறியீட்டினாலான சிறுகோடுகள் போன்றவற்றைப் பயன்படுத்திச் செயதியின் இன்றியமையா அவசரத்தை வெளிப்படுத்துவதைச் சான்றாகக் குறிப்பிடலாம். இவற்றைப் பயன்படுத்தி ஒரு செய்திக் கதை முக்கியமாக அதன் செய்தி மதிப்பிற்காகவே சேர்க்கப்பட்டுள்ளது என்பதை உணர்த்துவர். 5) செய்தித் தலைப்புக்களை வெவ்வேறு வடிவங்களில் அமைத்து வாசகனின் கண்ணைக் கவரும் வகையில் செய்தித் தாளைக் கவர்ச்சியானதாக்கும் அவசியம் தேவையாகும். 6) செய்தித்தாளுக்கென்றே ஒரு தனித்தன்மையையும் திடத்தன்மையையும் தர தலைப்பு அவசியம். மிகத் தெரிந்த செய்தித் தலைப்பினைத் தொடர்ந்து முரண்பாடின்றிப் பயன்படுத்துதல் செய்தித் தாளின் கட்டமைப்பை உருவாக்குகிறது. வாசகனுக்கு அவன் அடிக்கடி அத்தகைய தலைப்பைப் பார்ப்பதால் செய்தித்தாளை நன்கு தெரிந்ததாகவும் வரவேற்கத் தக்க சிறப்புடையதாகவும் ஆக்குகிறது.

நாளிதழ் செய்தித் தலைப்புக்கள் அய்ந்து தெளிவான குறிப்பிட்ட இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டும். அவை : 1) செய்தித் தலைப்புக்களின் தொடர்கள் வினைச் சொல்லைச் சுற்றிப் பின்னப்பட்டிருக்க வேண்டும். 2) குறிப்பிட்ட செய்திக் கதைக்கு என ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட இட அளவு மற்றும் அச்சு எழுத்துக்களின் பாணி முதலியவற்றிற்கு ஏற்பச் சரி செய்து கொள்ளத் தக்கதாய் இருக்க வேண்டும். 3) எனவே அவை இடத்தை மீதிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட வேண்டும். தேவையற்ற சொற்களை நீக்கிவிடில் அதிகச் செய்திகளைப் பின்னர் செய்தியின் உடறபகுதியில் சேர்ப்பதற்கு இடம் தரும். 4) செய்தியின் நேரடித் தன்மையைக் காட்டவும் இடத்தை மிச்சப்படுத்தவும் நிகழ்கால வினைச் சொற்களில் செய்தித தலைப்புக்கள் எழுதப்பட வேண்டும். பொதுவாக நிகழ்கால வினைச் சொற்கள்

கடந்தகால வினைச் சொற்களைவிடச் சுருக்கமானவை. 5) தலைமைச் சொற்களுக்குப் பெரிய எழுத்து பயன்படுத்தப்பட வேண்டும். **செய்தித் தலைப்புக்களை எழுதும் முறை :** செய்தித் தலைப்பின் வெற்றிக்குச் சில அடிப்படைத் திறமைகள் அவசிய மானவை. அவை : 1) செய்திக் கதையின் துல்லியத்தை உணரச் செய்தல். 2) அகல, ஆழமுடைய சொற்களைப் பயன்படுத்துதல். 3) தொடர்க் கட்டமைப்பில் ஓர் ஒழுங்கைக் கொணர்தல் 4) பொருள் மயக்கமில்லாமல் கவனித்துக் கொள்ளுதல். மேலும் செய்தித் தலைப்புக்களை எழுதுபவர் ஒரு பொருள் குறித்த பல சொற்களைத் (synonyms) தெரிந்து வைத்திருத்தல் அவசியம். கொடுக்கப்பட்டிருக்கும் இடத்திற்குள் செய்தியைச் சுருக்கமாகத் தெரிவிக்கும் வகையில் வெவ்வேறு தொடர்களில் பல்வேறு வகைகளைக் கையாண்டு மாற்றி யமைக்கும் திறன் வேண்டும். கட்ட மைப்பை நெகிழ்த்துக் கொள்ளும் இத்திறன் மிக இன்றியமையாதது. செய்தித் தலைப்பை உருவாக்கப் பின் வரும் விதிமுறைகளைக் கையாள வேண்டும். அ) **செய்ய வேண்டியவை** : 1) செய்திக் கதையின் முக்கியம் எதுவோ அதைத் தலைப்பாக அமைத்தல். செய்தித் தலைப்புக்கள் பொதுவாகச் செய்தி முகப்பின் அடிப்படையில் அமைவன. செய்தி முகப்பின் பகுதிகளே செய்தித் தலைப்புக்கள் அலங்காரமாக அமைய உதவிச் செய்திக் கதையின் முக்கியப் பகுதியைத் தெரிவிக்கின்றன. சாதாரணமான சம்பவம் கூட செய்தி யாக அமைதல் செய்தி சொல்லப்படும் கோணத்தினாலேயே எனலாம். சான்று : ஒரு சம்பவம் நடந்தது என்பதை விட சம்பவம் நடந்ததற்கான காரணத்தைத் தலைப்பில் கொண்டு வரவேண்டும். சான்றாக, தினமணி மண்டல் பிரச்சினையின் போது "ஆயிரம் உண்டிங்கு ஜாதி" என்ற தலைப்பிட்டுத் தலையங்கம் எழுதியதைக் குறிப்பிடலாம் 2) செய்தித் தலைப்புக்கள் அர்த்தமுடையனவாய் அமைக்கப்பட வேண்டும். செய்தித் தலைப்புக்கள் தலைப்புக்களை மட்டுமே வாசித்துச் செல்லும் வாசகர்களுக்குச் சில அர்த்தங்களைப் புரிய வைக்க வேண்டும். அதேநேரம் செய்தித் தலைப்புக்கள் தனித்தும் நிற்க வேண்டும். 'துரை சுந்தரியைப் பலாத்காரப்படுத்தினான்' என்ற தலைப்புச் செய்தி உண்மையானதாக இருப்பினும் அர்த்தமில்லாததாக அமைகிறது. ஏனெனில் பல துரைகளும் பல சுந்தரிகளும் உள்ளனர். 3) மைய உண்மைகளை மேலே எழுதுக : அடுக்குத் தலைப்பாக இருப்பின் முதல் தலைப்பு முழுச் செய்தியையும் தெரிவிக்க வேண்டும். முதல் அடுக்கின் முதல் பகுதி செய்திக் கதையின் மிக முக்கியப் பகுதிக்காக ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். பொதுவான தொடர்க் கட்டமைப்பு மைய உண்மைகளை ஆரம்பத்தில் தெரிவிக்க வேண்டும் என்பது அவசியமில்லை. பொதுவான செயதித் தலைப்பு,

காவல் துறையினர் கூறுகிறார்கள்
சாதாரண குற்றங்கள்
மதுரை மாநகரில்

என்று கூறும். சிறந்த செய்தித் தலைப்பு அமைப்பு,

'சாதாரண குற்றங்கள்
மதுரை நகரில்
காவல்துறையினர் அறிக்கை'

என்று அமையும். எனவே அடை மொழிகள் முதல் வரியில் அமைதல் நல்லது. 4) தகவல்களைத் தொடர் வடிவில் ஒழுங்காக வரிசைப்படுத்தி வைக்கவும் : அடிப்படைத் தொடர்கள் செய்தித் தலைப்புக்களாக ஆக்கப்

படுதல் வேண்டும். அதாவது ஆங்கில நாளிதழாயின் The, for, and போன்றன நீக்கப்பட்டு ஒரு கமா பயன்படுத்தப் படலாம். தேவையற்ற அடைமொழிகள் (தன்மைப் பெயர் உட்பட) தவிர்க்கப் படலாம். செய்தித் தலைப்பின் ஒவ்வொரு அடுக்கும் தனித்தனித் தொடர்களாக இருத்தல் வேண்டும். அவ்வடிப்படையில் எல்லா இறந்தகால வினைகளும் நிகழ்கால வினை களாகின்றன. செய்திப் பகுதியைப் போலன்றி மீண்டும் மீண்டும் வருதல் என்பது தலைப்பில் தவறல்ல. செய்திப் பகுதியில் மட்டுமே அவ்வாறு வருதல் தவறு ஆகும்.

திருமதி சந்திரசேகர், அமரர் காவல்துறை சப் இன்ஸ்பெகடரின் விதவை மனைவி இறந்தார்.

இங்கு இன்னாரது மனைவி, இன்னாரது விதவை மனைவி என்று திரும்பத் திரும்ப வருதலைக் காணலாம். 5) இரண்டாம் அடுக்கில் புதிய செய்தி சேர்க்கவும் : புதிதாகத் தலைப்பு எழுதத் தொடங்கியுள்ளவர் எழுதியதையே வேறு சொற்களில் அடுத்தடுத்து கூறுவார். இது தவிர்க்கப் பட வேண்டும். ஆ) செய்யக் கூடாதவை : ஒரு வினைத் தொடரின் தொடரமைப்பை உடைத்து எழுதுதல் கூடாது. அதே போல வினையடை, பெயரடை முன்னொட்டுக்கள் போன்றவற்றை உடைத்து எழுதக் கூடாது. கமா, முற்றுப்புள்ளி தொடரின் முடிவைத் தெரிவிக்கத் தலைப்பில் பயன்படுத்தப் படுவதில்லை. எனவே அவற்றைப் பயன் படுத்தத் தேவை இல்லை. கலவை வாக்கியத்தைப் பிரித்து எழுதுவது வழக்கம். ஆனால் அம்முறையை இங்கு பயன்படுத்தக் கூடாது. தொடர்ப் பிரிப்பைக் காட்ட ; போன்ற குறியீடு களைப் பயன்படுத்த வேண்டும். பல செய்தித் தாள்கள் செய்தித் தலைப்பில் இரட்டை மேற்கோள் குறியை விட ஒற்றை மேற்கோள் குறியைப் பயன்படுத்து கின்றன. இரட்டை மேற்கோள் குறி மிகுதியும் இலக்கணத் தன்மை தேவையான இடங்களில் மட்டுமே கையாளப்படுகின்றது. சில சமயம் முரணை (irony) உருவாக்கப் பயன் படுகின்றது. சிலவேளை விபரீத அவதூறுப் பகுதிக்கான சாட்சி ஆக ஆகிவிடுகின்றன. ஒரே சொல்லை இருமுறை பயன்படுத்தக் கூடாது. எல்லா நாடுகளிலும் இவ்விதி பயன் படுத்தப்படுகிறது. தலைப்பை வாசிக்கும்போது ஒரே ஒரு மூலாதாரச் சொல் கவனிக்கத்தக்கது ; அதுவே போதுமானது ; அச்சொல் ஒரு தலைப்பில் ஒருமுறைதான் பயன்படுத்தப் பட வேண்டும். இது முந்தியதைப் போல மிகவும் கண்டிப்பான விதி அன்று. தவிர்த்துக் கொள்ளக்கூடியது. இருப்பினும் ஆசிரியர்கள் இரண்டு அடுக்கை ஒரே மாதிரியான தொடர மைப்பில் அமைப்பதைத் தவிர்ப்பர்.

Headline schedule : (தலைப்பு விபரக் குறிப்பு) குறிப்பிட்ட செய்தித் தாளில் எல்லாச் செய்தித் தலைப்புக்களும் எத்தனை புள்ளியில் எத்தனை பத்திகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பண குறித்த பதிவு.

Head rule: (நாளிதழ்ப் பக்க உச்சிக்கோடு) பக்கத்தின் உச்சியில் கிடைநிலையாக ஓடும் கோடு. அது பத்திகளை நாளிதழின் தேதி, பக்க எண் முதலிய குறிப்புக்களிலிருந்து பிரிக்கிறது.

Head shot : (தலைக் காட்சிப்படம்) ஒரு நபரின் தலை அல்லது தலையும் தோளும் பதிவாகியிருக்கும் வகையில் எடுக்கப்பட்ட நிழற்படம்/படக்காட்சி.

Head to come : (தலைப்பு பின்னர் வரும்) செய்தியை மட்டும் முதலில் அச்சுக் கோர்க்கக் கொடுத்துவிட்டு அதனுடைய தலைப்பு பின்னர் வரும் என்று அதிலேயே குறிப்பிட்டு வைப்பது;

தலைப்பு மாற்றத்திற்கு உட்பட்டதாக இருக்கலாம் என்ற சூழலில் இம்முறை பின்பற்றப்படுகிறது. அச்சிடுவோர் 'Head to Kum' என்று குறிப்பிடு கின்றனர். எனவே 'HTK' என்றும் சுருக்கமாகக் குறிப்பிடப்படுகின்றது.

Heaviside layer : (எறிவுப் பகுதி அடுக்கு) மீ வளிமண்டலம் எனப்படும் வளிமண்டத்தில் மேல்பகுதி எறிவுப் பகுதி அடுக்கு என அழைக்கப் படுகிறது. இப்பகுதி மின்னேற்ற முடைய காற்றைக் (electrically charged air) கொண்டது. இப்பகுதி பூமியின் பரப்பிற்கு 25 மைல்கள் தள்ளி ஆரம்பமாகிறது. இத்தகைய காற்று வானொலி அலைகளை மிகுந்த தூரத்திற்குப் பரப்ப உதவுகிறது. இப்பகுதி கென்னெல்லி எறிவுப் பகுதி அடுக்கு (Kennelly-heavyside layer) என்றும் அழைக்கப்படுகிறது.

Heed : (தலைப்புச் சுற்றுக்கோடு) தலைப்பைச் சுற்றி அமைக்கப்படும் கோடு. வலப்புறம், இடப்புறம், மேல்புறம் ஆகிய மூன்று பக்கங்களிலும் கோடு அமைத்து மேக் அப் செய்யப்படும். இம்முறை மிகவும் அருகிக் காணப்படுகிறது.

Hegemonic theory of media: (அதிகாரத் தலைமைக் கொள்கை) தகவல் தொடர்பு சாதனங்கள் தம்மிடம் செய்தி பெறுவோரைக் குறிப்பிட்ட ஆதிக்க சக்தியினரின் கைப்பாவை யாக ஆக்கி வைத்திருக்கிறது என்ற கருத்துடைய ஆதிக்கம் (dominance) என்ற கோட்பாட்டோடு தொடர்பு டையது இக்கொள்கை. வெவ்வேறு பட்ட செய்திகளைச் சுதந்திரமாகத் தெரிவு செய்து பெறும் வெவ் வேறுபட்ட பொதுமக்களுக்குச் செய்திகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன என்னும் கருத்துடைய பன்முகக் கோட் பாட்டுக்கு (Pluralism) ஆதிக்கக் கோட்பாடு நேர் எதிரானது. கார்ல் மார்க்ஸ் கருத்துப்படி, தகவல் தொடர்பு சாதனங்கள் ஒரு தலைமை அரசின் சார்பான நிகழ்ச்சித் தயாரிப்புச் சாதனங்கள் : இவை ஒரு முதலாளித்துவ வகுப்பின் அதிகாரத் தின் கீழ் செயல்படுகின்றன. தேசிய அளவில் அல்லது உலக அளவில் இக்குறிப்பிட்ட வகுப்பின் ஆர்வத்தை இவை நிறைவு செய்ய அமைக்கப் பட்டுள்ளன. இச்சானதங்கள் அதிக நேரம் வேலை வாங்குவதன் வாயிலாகப் பணியாளர்களையும் தாம் அதிகம் லாபம் ஈட்டுவதன் வாயிலாக நுகர்வோரையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றன. ஆள்வோரின் கைப் பாவையாக அவர்களின் கருத்துக்களையும் அவர்தம் உலகக் கணிப்புக் களையும் பரவச் செய்வதைக் கொள்கையாகக் கொண்டும் மாறுபட்ட கருத்துக்களை இருட்டடிப்புச் செய்தும் பணியாற்று கின்றன. இச்செயலின் அடிப்படையில் தொழிலாளர்கள் பெற்ற உணர்வு மார்க்ஸிய நோக்கில் தகவல் தொடர்பு சாதனச் செயற்பாடுகளைப் பகுத்தாராய இடம் தந்துள்ளது. அவை: 1) அரசியல் பொருளாதாரக் கொள்கை, 2) திறனாய்வுக் கொள்கை, 3) அதிகாரத் தலைமைக்கொள்கை. இவற்றுள் முதலது மார்க்ஸிய மரபு மற்றும் பொருளாதாரக் காரணிகளை வலியுறுத்தலோடு தொடர்புடையது. பின்னவை இரண்டும் பெரிதும் கருத்துருவாக்கக் கூறுகளோடு (மிகைக் கட்டமைப்பிலான) தொடர் புடையன. அதிகாரத் தலைமைக் கொள்கை என்ற பொருளுடைய 'he-gemony theory' என்ற சொற்றொடர் உருவாக்கம் ஆள்வோரின் கருத்து ருவாக்க முறையைக் குறிப்பதற்காக கிராம்ஸி என்பவர் பயன்படுத்திய சொல்லிலிருந்து பெறப்பட்டது. இக்கொள்கை ஒரு வகுப்புவாதக் கருத்துருவாக்கம் தொடர்பான

பொருளாதார மற்றும் கட்டமைப்புத் தீர்மானக் காரணிகளின் மீது குறைந்த கவனம் செலுத்துகிறது. மாறாக கருத்துருவாக்க முறை கருத்துக் களின் வெளிப்பாடு, அவற்றின் முக்கியத்துவப் புலப்பாட்டு விதி முறைகள், அவற்றுக்குப் பணிவதனால் பாதிக்கப்படும் பாதிப்பாளர்களின் துணையோடு அவை நிலைத்து நிற்ப தற்கும் மேலும் மேலும் ஓங்கிச் செழிப்பதற்குமான செயல்பாட்டு இயங்கு முறைகள், பாதிப்பாளர்களை மறைத்தோ அல்லது அவர்களது உணர்வுகளைத் தம்மயமாக்கியோ வெற்றியடைதல் முதலியவற்றின் மீது மிகுந்த கவனம் செலுத்துகிறது. பௌலந்ஸாஸ், அல்துஸ்ஸர் போன்ற மார்க்ஸியச் சிந்தனை யாளர்கள் இவ்வணுகுமுறைக்கு அடித்தளம் வகுத்தவராவர். முதலாளித்துவ உறவுகள் மறு ஆக்கத்திற்கு உட்படுத்தப்பட வேண்டியவை; தாமே வலிய இது தொடர்பாகச் செயல்பட விழையும் தொழிலாளர்களின் மிகுதியான அல்லது குறைவான ஒப்பந்தங்களுடன் இவை ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் இத்தகைய பணிகளை மேற்கொள் வதற்குரிய ஆயுதங்களாக, மறை பொருள்களையும் ஆழ்ந்து கிடக்கும் பொருட் கட்டமைப்புக்களையும் வெளிப்படுத்த உதவும் வழிமுறைகளை நல்கும் குறியனியல் மற்றும் கட்டமைப்பியல் சார்ந்த பகுப்பு முறைகளைக் கொள்ள வேண்டும் என்பர். கொள்கை அடிப்படையிலான கவனம் பொருளாதாரத்திலிருந்து முதலாளித்துவம் நிலைத்து நிற்பதற்கான கருத்துருவாக்கக் காரணிகளுக்கு மாற்றப்பட்டுள்ளது. இது தகவல் தொடர்பு சாதனங்களின் முதன்மைத் தெரிவைப் பிற கருத்துருவாக்க முறை நிலை உப கருவிகளினின்று அதிகரித்துள்ளது. மேலும் கட்டமைப்பு அடிப்படையிலான பொருளாதாரத் தீர்மானிகளை வலியுறுத்தலை விரும்புபவர்களிட மிருந்து மார்க்ஸிய மரபுக்குட்பட்டவர் களுக்குள்ளேயே சில சண்டை சச்சரவுகளுக்கு இழுத்துச் சென்றது.

Hell box : (தேவையற்றது என்ற குறிப்பு) கணிப்பொறிக்கு முந்தைய செய்தித் தயாரிப்பு அறையில் முடிந்துபோன செய்தி (dead) என்பதைக் குறிக்கவும் அல்லது வேண்டாம் என தள்ளப்பட்ட செய்தி என்பதைக் குறிக்கவும் பயன்படுத்தப் பட்ட சொல்.

Hertz : (அதிர்வலகு) அதிர்வுகளின் அலகு ; ஒரு செகண்டுக்கு ஒரு சுற்று என அமையும். HZ என சுருக்கிக் கூறப் படுகிறது.

High angle : (உயர்கோணம்) தொலைக்காட்சி, திரைப்படப் படப்பிடிப்பில் பொருளுக்கு மேலே காமிராவை வைத்துப் பொருளைக் காமிரா கீழ்நோக்கிப் பார்ப்பதாக எடுக்கும் முறை உயர்கோணக் காட்சி (high angle shot) ஆகும். கீழ்க் கோணக் காடசிக்கு (low angle shot) நேர் எதிரானது. இத்தகைய காட்சி முறையில் காமிரா பொருளை மிகவும் சிறியதாக்கிக் காட்டுகிறது. நாடகத்தில் வலிய பாத்திரத்தைக் காட்ட கீழ்க்கோணக் காட்சியும் மெலிய பாத்திரத்தைக் காட்ட உயர்கோணக் காட்சியும் பயன்படும். இம்முறை பொருள் பாதிக்கப்பட்ட தாகவும் துன்பப்படுவதாகவும் காட்டப் பயன்படும். அதே காட்சியை மீண்டும் ஒருமுறை காட்டும்போது அவர்களது இயல்பு, காட்சியின் அர்த்த ஆழம் முதலியன சக்தி வாய்ந்த முறையில் புலப்படுத்தப்படுகின்றன. அடிக்கடி இக்கோணத்தைப் பயன்படுத்தினால் அதற்கான பயன் இல்லாமல் போய் விடும். குறிப்பிட்ட மனநிலையைக்

காட்டவோ கடவுள் அருள் தருவதாக வும் பொருள் சிறியதாக நிற்பதாகவும் காட்டவோ பயன்படுத்தலாம்.

High frequency : (உயர் அலை அதிர்வெண்) ஒரு செகண்டில் நிகழும் மாற்று மின்னோட்டத்தின் (alternating current) முழு சுழற்சிகளின் எண்ணிக்கை ஒரு அலை அதிர்வெண் (frequency) எனப்படும். உயர் அலை அதிர்வெண்கள் 6000 முதல் 30,000 வரையிலான கிலோசைகிள்களுக்கு இடைப்பட்டவை.

Highlight : (மிகு வண்ணம்) அதிக வெள்ளை வண்ணமுடைய படத்தைப் பெறும் பொருட்டு எல்லாப் புள்ளிகளும் நீக்கப்பட்ட பரப்புக்களைக் கொண்ட ஒரு நுண்பதிப்புப் படத் தயாரிப்பு (halftone reproduction).

High power transmitters : (உயர் ஆற்றல் ஒலிபரப்பிகள்) பொதுவாக வானொலி ஒலிபரப்பில 20 கிலோ வாட்ஸ் ஆற்றல் வாய்ந்த ஒலிபரப்பிகள் உயர் ஆற்றல் வாய்ந்தவை எனக் கருதப்படுபவை ஆகும். சென்னையில் 200 கி.வா. ஆற்றல் வாய்நத ஒலிபரப்பி உண்டு.

High speed newswire : (உயர்வேகச் செய்திக்கம்பி) கணிப்பொறியிலிருந்து கணிப்பொறிக்கு அனுப்பப்படும் ஒலிபரப்பு (transmission) ஒரு செய்திக் கோப்பை ஒரு கோப்பு முனையிலிருந்து ஒரு செய்தி அறைக்கு ஒரு நிமிடத் திற்கு 1000 சொற்களுக்கும் மேலாக அனுப்புகிறது. யுனைடெட் பிரஸ் ஆ.'.ப் இந்தியா (UPI) கணிப்பொறியின் இவ்வமைப்பைத் தரவுச் செய்திகள் (Data News) என்று அழைக்கிறது. அசோசியேடட் பிரஸ் (AP) கணிப் பொறியின் இவ்வமைப்பைத் தரவு வேகம் (Data speed) என்று அழைக்கிறது.

Hiss : (உஸ் என்ற ஒலி) வானொலி ஒலிபரப்பில் 5 முதல் 10 கிலோவாட் வரை ஏற்படும் தேவையற்ற பின்னணிச் சத்தம்.

Hold for release : (வெளியிடாது நிறுத்திவை) "மேற்கொண்டு ஆணை கள் வரும்வரை இச்செய்தியை வெளியிடாது நிறுத்தி வை" என்ற பொருளில் ஒரு செய்தியுடன் தரப்பட்டி ருக்கிற குறிப்பு. குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியைப் பற்றிய செய்தியை அந்த நிகழ்ச்சி நடைபெறும் நாள்வரை பிரசுரிக்கக் கூடாது என்ற சூழல் உண்டு. சான்றாக, இரங்கல் தீர்மானம், பிரதமரின் குடியரசு தின விழாச் செய்தி போன்றன சில வசதிகளைக் கருதி முன்னதாகவே பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்பட்டு விடும். அத்தகைய செய்திகளை அச்சுக் கோர்த்துத் தயாாராக வைத்திருப்பார்கள். ஆனால் உடனடி யாக அச்சிடாமல் நிகழ்ச்சி நடை பெற்றதும் வெளியிடுவார்கள். அத்தகையன அச்சுக் கோர்க்கப்பட்ட வுடன் இத்தகைய குறிப்புக்களைத் தாங்கியனவாய் நிறுத்தி வைக்கப்படும். இக்குறிப்பு செய்தித்தாள் அலுவலகங் களை விட ஒலிபரப்பு சாதன நிகழ்ச்சித் தயாரிப்புக்களின் போது அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றது. இதுவே 'hold over', 'hold the paper', 'hold the press' என்றும் குறிப்பிடப்படும்.

Holding fees : (அன்பளிப்புத் தொகை) செய்தி வெளியீட்டாளர்களால் எழுத் தாளருக்குக் கொடுக்கப்படுகின்ற சன்மானத் தொகை.

Hole : 1. (செய்திப் பகுதி), 2. (காலி இடம்). 1) விளம்பரங்களும் தேவையான பிறவும் சேர்க்கப்பட்ட பின் செய்திக் கென உள்ள இடம். 'news hole' என்றும் அழைக்கப்படுகிறது. 2) ஒரு பக்க வடிவமைப்பில் அல்லது ஒரு

மாதிரிப்பக்கத்தில் (page dummy) உள்ள எந்த வெற்றிடமும் காலி இடம் அல்லது 'hole' எனப்படும். அதாவது செய்திகளைப் பக்கங்களில் பொருத்தி 'மேக்-அப்' செய்து கொண்டு வருகையில் துண்டு விழும் இடம். வேறு செய்தியினாலோ அல்லது ஏதாவது ஒரு பிளாக் வைத்தோ அந்த இடத்தை இட்டு நிரப்புவார்கள்.

Homophone : (ஓர் ஒலிப் பல்பொருள்) ஒரே மாதிரி ஒலித்து வெவ்வேறு பொருள் தரும் சொற்கள். ஒலிபரப்பு நடையில் இத்தகைய சொற்கள் பயன்படுத்தப்படும்போது சூழலை வைத்து வாசகர் பொருளை உணர வேண்டி இருப்பதால் வாசகரைக் குழப்பும். அச்சில் இவை வேறு எழுத்தால் உணரப்படும். ஆனால் கேட்கும்போது ஒரே மாதிரி ஒலிப்பதையே உணர்வதால் பிரித்தறிய முடியாது. எனவே செய்தி எழுதுவோர் சத்தமாக ஒலித்துப் பார்த்து எழுதி குழப்பம் உண்டாக்குபவற்றை நீக்கிவிட்டு வேறு சொற்கள் போட்டு எழுத வேண்டும்.

Honesty : (நேர்மை) ஒரு நிருபரைச் சிறப்பிக்கும் குணங்களுள் இதுவும் ஒன்று. பல்வேறு ஆதாரங்களிடமிருந்து ஒரு நிருபரால் செய்தி திரட்டப்பட வேண்டும். ஆனால் எதுவும் நடக்காத போது அவரே செய்தி உருவாக்கக் கூடாது. மேலும் 'தேசியப் பாதுகாப்புக்' காரணங்களன்றி வேறு எச்சூழலிலும் அவரே செய்தியைத் தணிக்கை செய்யவும் கூடாது.

Horizontal camera angle : (காமிராவின் குறுக்குவெட்டுக் கோணம்) காமிராவின் குறுக்கு வெட்டுக் கோணம் (horizontal camera angle) ஒரு காட்சியில் நபர், பொருள் இவற்றிற்கிடையே உள்ள உறவைக் காட்ட மட்டுமே பயன்படுகிறது. ஒரு பாத்திரத்தைக் காட்டி அப்படியே மெல்ல தொடர்ந்து அடுத்த அல்லது எதிரில் அமர்ந்திருக்கும் பாத்திரத்தைக் காட்டுவதற்கு மீள்கோணம் (reverse angle) பயன்படும். மீள்கோணம் என்ற இவ்வுத்தி பெரிதும் பேட்டிகளில் பயன்படுத்தப் படுகிறது. பேட்டி தருபவர் ஒரு கேள்விக்குத் தன் கருத்தைச் சொல்லி முடிக்க நிருபர் அடுத்த கேள்வி கேட்கும்போது காமிராவின் கோணம் மறுதிசைக்கு நகர்கிறது. இக்கோணம் ஒரு நிகழ்ச்சியில் அமையும் உணர்வின் அளவு, வடிவம் முதலியவற்றை உணர்த்தப் பயன்படும். அரசியல் கூட்டத்தில் தலைவர் பேசுவதைக் காட்டி அப்படியே காமிராவை மெல்ல நகர்த்திப் பொதுமக்களின் உணர்வைக் காட்ட இம்முறை பயன்படும்.

Horizontal make up : (தலைப்பை நீட்டுதல்) இரண்டு பக்கங்களுககு ஒரே தலைப்பை நீட்டி அமைப்பது. பெரும்பாலும் நாளிதழ்களின் நடுப் பக்கத்தில் உள்ள இரண்டு பக்கங்களில் அமையும். இத்தகைய அமைப்பை 'டபுள் ஸ்பிரெட்' என்பார்கள்.

Hot metal or hot type : (உருக்கு உலோக அச்சு) உருக்கு உலோகத்தால் வார்க்கப்பட்ட அச்செழுத்துக் கள். வரி வார்ப்பு அச்சுமுறை உடைய அச்சு இயந்திரத்தில் உருக்கு உலோகத்தைப் (molten metal) பயன்படுத்தி அச்சு வரிகளை அச்சுக் கோர்க்கும் முறை உண்டு. இவ்வியந்தி ரத்தை இயக்குவோன் நெம்பைத் (Lever) தள்ளியவுடன் உலோகம் உருக்குப் பொறியிலிருந்து தானாகவே வார்ப்பட அச்சு உள்ள இடத்திற்கு உருகி ஓடிவருகிறது. இவ்வுலோக மானது அச்சு வார்ப்படச் சாலையில் பயன் படுத்தப்படும் உலோகத்தைக் காட்டிலும் மென்மையானது. மிக

விரைவாக இறுகக் கூடியதுமாகும். இவ்வுலோகம் அடிக்கடி பயன்படுத் தப்பட்ட எழுத்துக்களால் ஆனது. இயந்திரத்திலுள்ள பல்சக்கரம் உருண்டவுடன் உருகிய உலோகம் அச்சு உருவாக்கப் பட வேண்டிய பகுதியில் வார்க்கப்பட்டு விடும். ஒரு வரியானதும் மீண்டும் சக்கரம் சுழலும். உருக்கி வார்க்கப் பட்ட முழுவரியைக் கம்பி ஒன்று வெளியே தள்ளிவிடும். அவ்வரி, அச்சுத் தட்டு அல்லது தொட்டியில் வந்து சேரும். பிறகு, அச்சடிப்பதற்கு உடனே தேவைப்படும் வரித்துண்டுகள் ஒவ்வொன்றாகச் சேர்த்து ஒழுங்கு படுத்தப்பட்டு அச்சடிக்கப்படுகிறது.

Hot news : (சூடான செய்திகள் அல்லது கடைசிச் செய்திகள்) அப்போதுதான் கடைசியாக வந்த மிக முக்கியமான செய்திகள்

House organ : (இல்ல இதழ் அல்லது வளாக இதழ்) மக்கள் தொடர்பை நோக்கமாகக் கொண்டு தொழிற் சாலைகளும் பிற நிறுவனங்களும் குறிப்பிட்ட பருவம் தோறும் வெளியிடும் இதழ்கள். இவற்றை 'house journal' என்றும் குறிப்பிடுவர்.

House rules : (தனிப்பட்ட கொள்கை) ஒவ்வொரு பத்திரிகையும் தங்களுக் கென்று ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டு அதன்படி பக்க வடிவமைப்பு செய்வதிலிருந்து செய்தி அமைப்பு, கொள்கை ஆகியவற்றைத் தொடர்ந்து கடைப்பிடித்து வரும். அக்கொள்கை கள் பத்திரிகைக்குப் பத்திரிகை வேறுபடுவன.

Hugger mugger sentences : (குழப்பத் தொடர்கள்) இதழாளர்களின் துரதிர்ஷ்டம் வாய்ந்த ஓர் எழுதுமுறை என்பது ஒரே தொடரிலேயே பல தகவல்களை ஒருசேர உள்ளடக்கி அவற்றிற்கிடையே எந்தத் தத்து வார்த்தத் தொடர்புமில்லாமல் குழப்பமான தொடர்களை அமைப்பது ஆகும்.

Hum : (தாழ்ந்த ஒலி) வானொலி ஒலிபரப்பில் மின்சார வழங்கலிடத்தி லிருந்து உண்டாகும் மின் இடையீடு ஏற்படுத்தும் தாழ்ந்த ஒலி.

Human Interest story : (மனிதநேயச் செய்திக் கதை) மனித உணர்வைத் தூண்டும் கூறுகளை உள்ளடக்கிய செய்தி. பத்திரிகை ஆசிரியர் விரும்பி வெளியிடும் செய்திகள் மனிதநேயச் செய்திகள். இவை பொதுவான மனிதநேய கோணத்தில் எழுதப்பட்டி ருக்கும். நாளிதழ், வார இதழ், வட்டார இதழ், தேசிய இதழ் ஆகியவற்றில வெளியிடும் முறை, ஒதுக்குகின்ற இடம் இவற்றினடிப்படையில் செய்திக்கு மதிப்பு அமைகிறது. மேலும் வேறுசில சமுதாயக் கண்ணோட்டங் களின் அடிப்படையிலும் செய்தியின் மதிப்பு கணிக்கப்படுகிறது. அவ்வாறு செய்திக்குச் செய்தி மதிப்பு அளிக்கும் நான்கு கூறுகளுள் ஒன்று மனிதநேயம் (Human interest) ஆகும். [பிற மூன்று : கால அண்மை (timeliness), ஜிடஅண்மை (proximity), தலைமை (prominence)] மனிதனுக்கு ஏற்படும் இன்ப துன்பங்கள், இழப்புகள், வெற்றி, தோல்விகள், பஞ்சம், பட்டினி, அழிவு, அநீதி முதலியவை யாருக்கு ஏற்பட்டாலும் அத்தகைய செய்திகள் மனித மனத்தை ஈர்ப்பதால் அவற்றில் ஈடுபாடு கொண்டு மக்கள் வாசிப்பது உண்டு. எனவே இத்தகைய மனித நேயச் செய்திகள் மக்கள் மத்தியில் பெருமளவு வரவேற்புப் பெறு கின்றன.

Hunches : (அறிவுத் திரட்சி) திருத்தப்படி மேசையில் உள்ளவர்கள் கொண்டிருக்க வேண்டிய இயல்பு களுள் ஒன்று. 'Hunches' என்பது

கண்களால் கவனிக்கப்படுவதால் மட்டுமல்ல, அறிவுபூர்வ ஆர்வத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இவ்விழிப்புணர்வு நல்ல கல்வியாலும் ஆசிரியர்கள் போல நிறைய வாசிப்பதாலும் பணிநேரத்திலன்றிப் பிற நேரங்களில் பேசும் செய்திகளாலும் தமது சொந்தத் தகுதி குறித்த தம் மனப்பான்மையாலும் தன்னறிவை நிரப்பிக் கொள்ளும் ஆர்வத்தாலும் ஏற்படும். அவர்களது பெரிய பணி- எது புதுமையானது எனவும் எது பின்னணி எனவும் வேறுபடுத்தத் தெரிந் திருப்பதே.

Hyphenation : (சொற் பிரித்தல்) கணிப்பொறி அடிப்படையிலான அமைப்புக்களில் ஒரு வரிக்கும் மற்றொரு வரிக்குமிடையே சொல்லைப் பிரிப்பதற்கு ஒரு அகராதியை அல்லது குறிப்பிட்ட விதிமுறைகளை அல்லது இரண்டையும் பயன்படுத்திப் பிரிக்கும் முறை.

Hypodermic model : (நேரடித் தாக்குதல் மாதிரி) தகவல் தொடர்பு சாதனத்தின விளைவு பற்றிய கொள்கைகளுள இதுவும் ஒன்று. பொது மக்களது (நேயாகளது) எண்ணங்களையும நடத்தைகளையும மாற்றும் தகவல தொடர்பு சாதனங்கள் மந்திர சக்திகளைக் கொண்டு விளங்குகின்றன ; தகவல தொடாபு சாதனச் செய்திகள் மக்களை ஊடுருவுகின்றன. சதையில் ஊடுருவி மருந்தினை ஏற்றும் ஊசியைப் போலச் (hypodermic model) செயல்படுகின்றன என்பது ஒரு ஊகம். Frederic Werthem என்பவரது கருத்துப்படி 'படக்கதைகளில் உள்ள பாத்திரங்களை விருப்பத்தோடு ஆர்வமாக அமெரிக்க மக்கள் பார்க்கின்றனர். தாங்களே அவர்கள் என பொருத்திப் பார்ப்பதால் தங்களையே அவர்களில் காணுகின்றனர் அவர்களது நடத்தை, விளைவுகள் குறித்த கருத்துக்கள் மூலம் உலகைக் காணுகின்றனர். பிரிட்டனில் படக் கதைகளுக்கு எதிரான பிரச்சாரக் குழு சாது இயல்புடைய பொதுமக்கள் இத்தகைய படக் கதைகளால் தவறு மேற்கொள்ளும் வகையில் தூண்டப் படுகின்றனர் என்று கூறுகிறது. தகவல் தொடர்பு சாதன நிகழ்ச்சிகளின் தாக்கத்தினால் நேயர்கள் மிகவும் மனவலிமை வாய்ந்தவர்களாகவும் அதேநேரம் தனிமைப்படுத்தப்பட்டும் விடுகின்றனர் என்பது இன்னொரு ஊகம். 1930கள் வரை தகவல் தொடர்பு சாதனங்கள் மக்களைத் தன் பக்கம் இழுத்து மக்களது நடத்தையை மாற்றிவிடும் என்று நம்பப்பட்டது. தனிமனிதர்கள் - மக்கள் - கவனக் குறைவான செயற்பாடு ஆகிய இந்த பொதுமக்கள் இயக்கு மாதிரியை (mass manipulation model) ஃப்ராங்க் ஃபர்ட் பள்ளி வெறுத்து விமர்சித்தது. தகவல் தொடர்பு சாதனத் தாக்கம் பற்றிய கருத்துக்களைப் பின்வருமாறு வகைப்படுத்துவர். முதல் நிலைப்படி மெல்ல மெல்ல அல்லது நீண்ட நாள் பாதிப்பும் எண்ணமும் ஏற்படுகிறது. அமெரிக்க எழுத்தாளர்கள் இவ் விளைவு பற்றிப் பேசும் போது நண்பர்கள், பக்கத்து வீட்டார் மிக மரியாதைக்குரிய முக்கிய தலைவர்கள் போனறோரே தகவல் தொடர்பு சாதனச் செய்திகளை வடிகட்டுபவர்கள் என்று கருதுகின்றனர். மிகவும் அறியாமையுடைவர்களும் ஆர்வமில்லாதவர்களுமாகிய பொது மக்களே தகவல் தொடர்பு சாதனச் செய்தியின்பால் ஈர்க்கப்பட்டு அக்கருத்தின்படி செயல் படுபவர்கள் ஆவர் என்பர். Klapper தகவல் தொடர்பு சாதனங்கள் பொதுவாக, போதுமான நேயர்களைப் பாதிக்கும் ; தேவையான காரணங்களை ஏற்படுத்துவதில்லை ; ஆனால் பலவித நெறிப்படுத்தும் காரணிகளின் வழியாகச் செயல்படுகிறது என்பார்.

Iconic signifier : (படக் குறிப்பான்) ஒரு பொருளுக்கு உவமையாக அல்லது குறியீடாகக் குறிப்பிடப்படும் பொருள் படக்குறிப்பான் எனப்படும். இவ்வுருவங்கள் அல்லது படங்கள் எப்பொருளைக் குறித்து நிற்கின்றனவோ அதைப் போலவே ஒத்த தன்மை யுள்ளனவாக இருக்கும். சான்றாக, சிவப்பு நிறமுடைய வெள்ளை முக்கோணப் பின்னணியில் கருத்த நிழலுருவமாகக் காட்டப் பட்டுள்ள நடக்கும் இரு குழந்தைகள் உள்ள குறியீட்டைக் குறிப்பிடலாம். அது ஓரளவு படக் குறிப்பான்தான். உருவங்கள் குழந்தைகளைப் போன்று அமைக்கப்பட்டுள்ளன. நாம் அதன் மீது நமக்குத் தெரிந்த கருத்துக்களை ஏற்றிக் கொள்ளுகிறோம். எனவே அதன் கருத்து ஒரு சாலை விதிமுறை யோடு தொடர்புடையது என அறிகிறோம். குழந்தைகள் சாலையை அடிக்கடி கடந்து செல்லும் பகுதி இது என அறிகிறோம். இவ்வாறு புரிந்து கொள்ளுதல் ஏற்கனவே சாலை விதிமுறைகள் மற்றும் அதனோடு தொடர்புடைய குறியீடுகளை நாம் தெரிந்து வைத்திருத்தலாலேயே எளிதாகும்.

Iconography : (படக்குறிப்பு) படங்கள் அல்லது வேறு பல உருவங்களின் மூலமாக ஒரு செய்தியைத் தெரி வித்தல்.

Iconoscope : (புகைப்படக் கருவிக் குழாய்) ஒலிபெருக்கியின் மூலம் ஒலிபெருக்க உதவும் ஒரு மின்னணு அமைப்பு அல்லது மின்னணு முறையில் நிழல் ஒளிக் கூறுகளைத் தனித்தனியே பிரித்தெடுக்கும் புகைப்படக் கருவிக் குழாய்க்குரிய வியாபாரப் பெயர் இது. பட ஒளி வெளிப்பாட்டினை இது தொலைக்காட்சிச் சமிக்ஞைகளாக மாற்றுகிறது.

Idealism : (குறிக்கோளியம்) 'தகவல் தொடர்பு சாதனங்கள் சமுதாயத்தைச் செம்மைப்படுத்தும் உருவாக்கிகள் மட்டுமல்ல சமுதாயத்தைப் பிரதிபலிப் பவையுமாகும்' என்ற பொருளோடு தொடர்புடையது. தொழில் நுட்பம், உள்ளடக்கம் இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகள் ; மற்றும் தொழில்நுட்பம் (கருவி, அலைவரிசை) சார்ந்த நோக்குகள் சிந்தனாவாதத்தை விடவும் மிகுதியும் பொருள் முதல் வாதம் உடையனவாகத் தோன்று கின்றன என்பதை வலியுறுத்தும் கொள்கை வேறுபாடுகள் முதலிய வற்றுக்கிடையே உள்ள வேறுபாடு களிலிருந்து இச்சொற்பயன்பாட்டுச் சிக்கல் உருவாகிறது. எவ்வாறாயினும் குறிக்கோளியம் என்பதன் கீழ் 1) தனிமனித மதிப்பு மாற்றம் 2) தகவல் தொடர்பு சாதனம் ஒரு 'மாற்றம் நிகழ்த்தும் இயந்திரம் 3) தொழில்நுட்பத் தீர்மானவியல், 4) உற்பத்திக் கொள்கை 5) பண்பாட்டு ஆதிக்கவியல் என்பவை வகைப்படுத்தப்படுகின்றன. தகவல் தொடர்பு சாதனங்கள் புதிய கண்டு பிடிப்பு, இயக்கம், சாதனை, நுகர்வு போன்றவற்றை விரும்பும் தனிமனித மதிப்பு அமைப்பை ஆதரிப்பதுடன் பரப்புவதற்கும் உதவுகின்றன என்பது தனிமனித மதிப்பு மாற்றத்தின் பாற்பட்ட அடிப்படை எண்ணமாகும். சான்றாக எந்த ஒரு தகவல் தொடர்பு சாதனமும் மரபுவாதத்தை உடைப் பதற்கு உதவுகிறது. தமக்கும் தம் குடும்பத்திற்கும் ஒத்த ஒரு 'நல்ல மாற்றுநிலை' குறித்து எண்ண வைக்கிறது. தகவல் தொடர்பு சாதனங் களின் மூலம் பெரிய அளவிலான வளர்ச்சித் திட்டங்கள் வழி

மாற்றததைக் கொணடு வரும் வகையில தகவல் தொடாபு சாதணஙகள ஒருதிடடமிடட வகையில சிறப்பாகப பயனபடுததப்பட முடியும பொதுமககள கலவி, விவசாயத்தில புதுமைகள, நல நடைமுறைகள, ஜனததொகைக கடடுபபாடு மறறும் பிற சமுதாய பொருளாதார விஷயஙகளை விரிவு படுததத தகவல தொடாபு சாதனஙகள பணியாறற முடியும எனவே தகவல தொடர்பு சாதனம ஒரு 'மாறறம நிகழத்தும இயநதிரமும' ஆகும

கருததுப பரிமாறறம ஒரு குழு அலலது இனததின கருததுபபரிமாறற வழிமுறைகளாலும அறிவாறறலாலும பொருளாதார நிலையில ஆதிகக வியலுககு வழிகோலுகிறது இதனால இது ஒரு மாறறததிறகு-விரிவிறகுத தடைவிதிககும சமமினமையை நலகுகிறது : அலலது பிற கருததுப் பரிமாறற வடிவஙகளுககிடையே அவசர போடடிககு வழிவகுககிறது இநதப போடடி மூலம சமமினமையைச சரிசெயய விழைகினறது தகவல தொடாபு சாதன ஆடசியின முககியப பரிமாணம இடமும நேரமும ஆகும கருத்துப பரிமாறற வழிமுறைகளுள சில பரிமாறற வழிமுறைகள பிறவறறைவிட ஒனறோடொனறு மிகுதியும தொடாபுடையன இவவாறு தகவல் தொடாபு சாதன ஆடசிகள கிடைககக கூடிய கருததுப பரிமாறற வடிவததைப பொறுதது நீணடகாலம இட விரிவாககம, நேரம முதலிய வறறை மறுககலாம இவவாறு தொழிலநுடபத தீாமானம நிகழகிறது உறபததிக கொளகை எனபது பொதுமககள ஆககுதல அலலது உருவாககுதல அலல தெரிவு செயது சமபவஙகளைப பாாததலில பரவலான வழிமுறைகளை உருவாககுதலில இது தொடாபுடையது உலகைப பாாததல, புரிநது கொளளல போனறவறறிறகுப பொது விதிமுறைகளை நலகும 'பண்பாடடு ஆதிக்கவியல' எனபதனபடி தகவல தொடர்பு சாதனங்கள் புதுமை யாககததிறகு உதவ முடியும் மேலைநாடடு மதிபபுககளை அறிமுகப படுததி மரபு மதிபபுககளைத் தகர்பபதன் மூலம், அதிகாரபூாவமான உடகலாச சாரஙகளை இழககச செயவதன் மூலம புதுமையாககததிறகு உதவுகினறன இததகைய மதிபபுககள் ஆதிககம் செலுததுவனாய அமைநது விடு கினறன

Identical nouns : (ஒத்த பெயர்) ஒரே வடிவமுடைய ஆனால வெவவேறு முறையில வாசிககபபட வேண்டிய சொறகளைப பயனபடுததித தநதிரமான வகையில தலைபபை அழகுபடுதத உதவும சொறகள

Idiot box : (மயக்கு பெட்டி) பாாவையாளாகள் தொலைககாடசி நிகழசசிகளுககு அடிமையாகி விடுவதால தொலைககாட்சிககு மயககு பெடடி அலலது முடடாளாககும பெடடி எனறு பொருள கொளளும வகையில 'இடியட பாகஸ' என்ற பெயரும உணடு

Illumination : (ஒளி அளவு) ஒரு பரபபின மீது விழும ஒளிபபரபபினைக குறிபபதறகு ஆன அளவு

Image of deviance : (விலகல் உருக்கள்) தகவல தொடாபு சாதனங களின விளைவுகளோடு தொடாபு டையவை சமூக நீதி குறிதத மரபு மாறறத்தை விளைவிககும பிரதிகள அலலது நகலகள விலகல உருககள எனபபடும

Image of orthicon tube : (ஆர்திகான் குழாய் உரு) புகைபபடக கருவிக குழாயின குறை நீககிச செயயப படடதும செமமையாக கபபடடதுமான மறறொரு வகைக குழாயின வியாபாரப பெயா

Impact : (தாக்கம்) தகவல தொடாபு எனபது தேவையான ஒனறு எனபது அனைவரும ஒததுககொணட உண்மை இத்தொடர்பினால மனித நலத்தினை மேமபடுததுவதறகு வசதியான சமுதாய உபகரணஙகள உளளன 1) அசசு (செய்திததாளகள, இதழகள) 2) மினணணுக கருவிகள (வானொலி, தொலைககாடசி) திரைபபடஙகள முற்றிலும பொழுது போககு நோககினைக கொணடிருபபினும கருததுப பரிமாறறத தொடாபுடைய ஒனறு என்றும மதிபபிடபபடுகினறது இததகவல தொடர்பு சாதனஙகள சமுதாயததின மீது ஏறபடுததும தாககம அளபபில தகவல தொடாபு சாதனஙகள மறறும அவறறின தாககம குறிதத ஒபபீடடைப பினவரும அடடவணை காடடும நேயாகள எவவளவு விரைவாக எத்தனை போ பாதிககப்பட்டனர் எனபதே செய்தியின சிறபபு ஆகும சானறு : 'வருமான வரி குறைவு' எனற அறிவிபபு மிகுநத பரபரப்பையும மகிழசசியையும பலருககு ஏறபடுததும ஆனால ஆயுள காபபீடடுக கழகச சிறபபூதியம (LIC Bonus) பறறிய அறிவிபபு LICயுடன தொடாபு வைததிருபபவாகளுககு மடடுமே மகிழசசி தரும

Imposing stone: *(நாளிதழ்ப் பக்க வடிவமைக் கல்)* உருக்கு அச்செழுதது அசசுககோாபபு முறை அறையில ஒரு உலோகததினால ஆன மேலபகுதியைக கொணட மேசை இருககும அதன மீது நாளிதழின பககஙகள வடிவு செயயபபடுகினறன 'கல' என அழைககபபடுவது முனபு மாா்பிளாலேயே அமமேசையின மேலபாகம அமைககபபடடிருநததனாலேயே

எண்	அசசு	மினனணுச சாதனங்கள்	திரைபபடம
1	மலிவு, குறைநத செலவு	அதிக செலவு	செலவு
2	அரசின் நெருககடிக காலஙகள தவிர பிற நேரஙகளில பததிரிகைகள கடடுபபாடறறவை	தனிததியஙகும நிறுவனமாகச செயலபடும போதுதான அவை கடடுபபாடறறவையாகும	சில பகுதிகள அரசின கடடுப பாடடிறகு உடபடடவை
3	தனிநபரால கவனமாகப படிககபபடும	கேடக முடியும குழுககளாகப பாாககலாம	குழுககளாகப பாாககபபடுகிறது
4	பாாவையறறவாகள பிறா வாசிககக கேடடாலனறிப பயனடைய முடியாது	பாாவையறறோா கேடக முடியும செவிடும ஊமையுமான ஒருவா பாாககக முடியும.	பாாவையறறோா பயனடைவதிலலை செவிடும ஊமையுமான வாகள ஓரளவு பயன பெறுவா
5	தொடாபு கொளள எழுததறிவு தேவை	எழுததறிவு தேவை இலலை	எழுததறிவு தேவை இலலை
6	குறைநத அளவு விறபனை நகரததில வாழும மககளின 10 சதவிகிதததினரைச சென்றடையும பததிரிகைகள அதன மொதத விறபனையில் 90% ஆகும மெலலப பரவும	பரநத அளவு பொது மககளின செலவாககுப பெறறது விரைவுப பரவல உடையது	திரையிடபபடும இடததைப பொறுதது அதன செலவாககு அமையும

7. வாசகர்கள் கல்வி அறிவுடையவர்களாகவும் பிறரைத்தன் பக்கம் ஈர்க்கும் கற்ற மனிதர்களாகவும் இருப்பதால் தாக்கம் மிகவும் ஈர்ப்புத் தன்மை உடையதாகவும் வலுவூட்டு வதாகவும் அமைகிறது.	தாக்கம் நன்று. ஆனால் மக்கள் இதைப் பொழுது போக்குக்கு உரியது என மட்டும் கருதுவதால் வலுவூட்டக் கூடியதாக இல்லை.	இந்த தொடர்பு சாதனம் சக்தி வாய்ந்தது. நல்லது கெட்டது ஆகியவற்றை வெளிக்காட்டுவதால் மிகவும் சக்தி வாய்ந்து
11. வாசகர்கள் அறிவுவெளிச்சம் பெறுகின்றனர். மக்கள் கருத்தை உருவாக்கும் பணியில் ஈடுபடுகின்றன.	மிகக் குறைந்த எழுத்தறிவு உடைய மக்கள் மத்தியில் அச்சிடப்பட்ட சொற்களை விட மிகுதியும் ஆற்றல் வாய்ந்தது.	கருத்து, நடிப்பு, பார்ப்போரை ஈர்க்கும் திறமை முதலியவற்றைச் சார்ந்து இதன் தாக்கம் அமைகிறது. ஆனால் மக்கள் இதைப் பொழுது போக்குக்குரியது என மதிப்பிடுகின்றனர். தாக்கம் வெளிப்படையாகத் தெரியாது.
12. வாசிக்கலாம். மறுபடி வாசிக்கலாம். மீண்டும் தேவையான போது எடுத்து விபரங்கள் சேகரிக்கலாம்	மீண்டும் பார்க்கவோ கேட்கவோ பொதுவாக வாய்ப்பில்லை. ஒரு தடவை தவறிவிட்டால் அது மொத்தமும் இழப்பே.	மீண்டும் செலவழித்துத் திரும்பப் பார்க்கலாம்.
12. செய்தியை மேலும் அர்த்தமுள்ளதாக அதற்கு விளக்கமளிக்க வாய்ப்புண்டு.	பொதுவாக விளக்கம் அளிக்கப்படுவதில்லை. எப்போதாவது ஒருவேளை அளிக்கப்படலாம்.	பொதுவாக விளக்கம் அளிக்கப்படுவதில்லை.
13. பொதுமக்கள் விருப்பப்பட்ட நாளிதழைத் தெரிவுசெய்து வாசிப்பர்.	'தெரிவு செய்தல்' மிகக் குறைவு. இந்தியாவில் அரசு சார்பில் ஒரே ஒரு தொலைக்காட்சியும் ஒரு வானொலி அமைப்பும் உண்டு. இணைப்பு நிலையங்களுடன் சேர்ந்து அவையே நாடு முழுமைக்கும் ஒலிபரப்புச் சேவை செய்கிறது. செயற்கைக் கோள் டி.வி. ஒளிபரப்பு இப்போது வந்துள்ளது.	தெரிவு செய்து பார்ப்பது குறைவே.

Imposition : (பக்க ஒழுங்கமைவு) அச்சிடுவதற்கென உள்ள தாள்கள் அச்சிடபபடும்போது மடிக்கப் பட்டவைகளாக இருக்கும் பட்சத்தில் அதன் பக்கங்கள் ஒழுங்கான வரிசை முறையில் அமையும் வகையில் பக்கங் களை ஒழுங்குபடுத்துதல.

Impression : (அச்சுப் பதிவு) 'அச்சுவடிவம் தாளில் பதிந்திருக்கும் ஒவ்வொரு பதிவும் அச்சுப் பதிவு எனப்படும்.

Incongruities : (முரணியல்பு) செய்தித் தலைப்பை மெருகூட்டு தலோடு தொடர்புடையது. எப்போதா வது சொல்ல வரும் கருத்தினின்று மாறி முரணான கருத்தில் தலைப்புக்கள் பொருள் தந்து சங்கடங் களை உண்டுபண்ணிவிடுவதுண்டு. அவ்வாறு முரணாகப் பொருள் தராதவாறு ஆசிரியர் தலைப்பைச் சரிபார்த்துக் கொண்ட பின்னரே அச்சிற்கு அனுமதிக்க வேண்டும்.

Incorruptibility : (ஊழலின்மை) ஒரு நிருபருக்கு இருக்கவேண்டிய இயல்புகளுள் இதுவும் ஒன்று. ஒரு நிருபர் மனச் சலனத்திற்கு இடம் கொடுக்காமல் இருக்க வேண்டும்.

In-cue : (நிகழ்ச்சி ஆரம்பக் குறியீடு) வானொலி மற்றும் தொலைக் காட்சியில் ஒரு நிகழ்ச்சி தொடங்கும் முன் அறியப்பெறும் அடையாளச் சொற்கள். இது இசையாகவும் இருக்கலாம். சான்றாக தூர்தர்ஷனில் மஹாபாரதம் தொடர் நிகழ்ச்சி திரையிடப்பட்டபோது ஒவ்வொரு வாரமும் அந்நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் தரப்பட்ட இசையைச் சுட்டலாம்.

Indent : (இணைத்தல் அல்லது உள்ளே தள்ளி எழுதும் அமைப்பு) 1) இச்சொல்லை வினைச்சொல் எனக் கொண்டு பொருள் கொண்டால் இணைத்தலை அதாவது ஒரு வரியின் இரு ஓரப் பகுதியிலும் இடம் விட்டு எழுதுவதைக் குறிக்கும். 2) இச்சொல்லைப் பெயர்ச் சொல்லாகக் கொண்டால் பக்கத்தில் இரு ஓரத்தும் இடம்விட்டு எழுதப்பட்ட செய்திக்கதை அல்லது ஒரு செய்திக்கதையின் இரு ஓரத்தும் இடம்விட்டு எழுதப்பட்ட பகுதியைக் குறிக்கும். இவ்வாறு ஒரு 'தடித்த அச்செழுத்து உள்ளே தள்ளி எழுதும் அமைப்பு' (bold face indent) என்பது தடித்த அச்செழுத்தால் அச்சுக் கோர்க்கப்பட்டதும் இருபுறத்தும் உள்ளே தள்ளி எழுதப்பட்டதுமான ஒரு செய்திக்கதையைக் குறிக்கும்.

Indentation : (இணைத்தல்) ஒரு பத்திக்குள்ளேயே எங்கே இரண்டு கூறுகளைச் சேர்க்க வேண்டி இருக்கிறதோ அங்கு முதல் கூறின் இறுதிக்கும் இரண்டாம் கூறின் தொடக்கத்திற்கும் இடையில் ஒரு சிறுகோடு தரப்பட்டு இணைக்கப் படுகிறது.

Index : (உள்ளடக்க அட்டவணை) உள் பக்கங்களில் அச்சிடப்படும் அட்டவணை ; செய்திக்கு அல்லது செய்திக் கட்டுரைக்கு வழக்கமாக இதழின் முன்பக்கத்தில் தரப்படும் வழிகாட்டிக் குறிப்பு ஆகும். 'இன்ன செய்தி இன்ன பக்கத்தில் உள்ளது' என்று காட்டும்.

Indirect quotation lead : (மறைமுக மேற்கோள் முகப்பு) இவ்வகை முகப்புக் கள் கூற்று நிகழ்த்திய ஒருவரின் மிக முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கை களைத்தொகுத்துத் தருகிறது.
சான்று : 'அறம் மற்றும் அஹிம்சை ஆகியவை தொடர்பான கருத்துக் களை உலகம் முழுவதும் போதித்தல் மற்றும் அப்போதனையைக் கைக் கொள்ளல் ஆகிய இரண்டும் மற்றொரு உலகப் போரைத் தவிர்க்க உதவும் ஒரு பெரிய நெறிமுறையாகும்' என்ற கருத்து நேற்று இரவு சென்னையில் ஜகத்குரு சங்கராச்சாரியாரால் தெரிவிக்கப்பட்டது. அவர் நேற்று அமைதி மாநாட்டில் இவ்வாறு குறிப்பிட்டுப் பேசினார்.

Industry : (தொழிற்சாலை) தகவல் தொடர்பு சாதனச் செய்தி மற்றும் நிகழ்ச்சித் தயாரிப்பு நிலையங்கள் ஒருவகையில் தொழிற்சாலைகளே.

Inferences : (ஊகங்கள்) பத்திரிகையில் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் பொருந்தும் வகையில் தலைப்புக்களை மெருகூட்டி அமைக்கும்போது மிகவும் இயல்பான ஊகங்கள் தலைப்பெழுது பவரால் மேற்கொள்ளப்பட்டு தலைப்பில் இடம்பெறலாம்.


Inflection : (தொனித் திரிபு) வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சி அறிவிப்பாளர் தனது ஒலிப்பு முறையில் ஏற்படுத்திக் கொள்ளும் திரிபுகள் கேட்பதற்குகந்த அமைப்பை

ஏற்படுத்துகின்றன. அறிவிப்பாளர் சில சொற்களை வலியுறுத்திச் சொல்லப் பயன்படுத்தும் ஒலிப்பு முறையினாலேயே உண்மையான தொனித் திரிபுகள் தரப்படமுடியும். செய்தி நிகழ்ச்சி (News programme) எழுதுபவர் எங்கெங்கு திரிபுகள் தேவை என்பதைக் குறிப்பிடும் வகையில் செய்தி எழுதுவார். அதற்கெனச் சில தேவையான நிறுத்தற் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதுவார். கோடிட்டு எழுதப்பட்டுள்ள சொற்களுக்கு வெவ்வேறு வகையில் அழுத்தம் கொடுத்துச் சொல்வது ஒவ்வொரு வகையிலும் அச்சொல்லுக்குரிய பொருளைச் சிறப்பிக்கும்.

Influences on Media Organizations :
(தகவல் தொடர்பு சாதன நிறுவனங்களின் மீதான புறத்தாக்கங்கள்)

அண்மைக்கால ஆய்வுகள் தகவல் தொடர்பு சாதனங்கள் தவறான கருத்துக்களையும் சிதைந்த, உண்மையற்ற, ஒருபக்கமான பரபரப்பூட்டுகின்ற கருத்துக்களையும் பரப்புவதால் இத் தகவல் தொடர்பு சாதனங்கள் ஒரு கேள்விக்குரிய இயல்பான பொருளாக ஆகின்றன என்று கருத்துத் தெரிவிக்கின்றன. கோஹன் மற்றும் யங் என்பவர்களது கருத்து மேற்குறிப்பிட்டது ஆகும். சில நாடுகளில் தகவல் தொடர்பு சாதனங்களை அரசின் கருவிகளாய்ப் பயன்படுத்துவதால் தகவல் தொடர்பு சாதனங்கள் அரசு ஏக போகத் தனியுரிமை (monopolize) கொள்ள ஆரம்பித்துள்ளதாகத் தோன்றுகிறது. பல தகவல் தொடர்பு சாதனங்கள் பெரிய நிறுவனங்களின் கையில் உள்ளன. எனவே அவை முதலாளித்துவ நிறுவனங்களின் தாக்கத்திற்கு அதேபோல உட்பட்டனவாகின்றன. வேறுசில நாடுகளில் பத்திரிகையின் சுதந்திரம் என்பது பெரிதும் போற்றுதற்குரியதாகப் பேசப்படுகிறது.

தகவல் தொடர்பு சாதன நிறுவனங்களின் மீதான பாதிப்பு



மேற்காட்டியுள்ள படம்தகவல் தொடர்பு சாதன நிறுவனங்கள் மீதான முக்கியப் பாதிப்புக்களைக் கூறுகிறது. கார்ல் மார்க்ஸ் முதலாளித்துவச் சமுதாயங்களில் தகவல் தொடர்பு சாதனங்களின் பங்கினைப் பலவிதங்களில் காட்டுகிறார். அவர் ஒரு இதழாளராகப் பணியாற்றிய அனுபவங்கள் இதற்கு ஆதாரமாக அமைந்தன. அவரது கருத்துப்படி, எல்லா முதலாளித்துவச் சமுதாயங்களும் இரண்டு பெரும் பகுதிக்குட்படுவன. அவற்றுள் ஒன்று ஒரு சிறு குழுவாகிய ஆதிக்க அதிகாரிகள் (ஆதிக்கவியலார்) . இவர்கள் பொதுவாக நாட்டை ஆளும் அரசினர் ஆவர். தொழிற்சாலை மற்றும் சாதன உடைமைத்தனத்தால் இவர்கள் பிற குழுவினரைவிட தாமே மேலோங்கி நிற்கும் வல்லமை பெற்றவர்கள். அதாவது பிற குழுவினர் மீது ஆதிக்கம் செலுத்துபவர்கள். இந்தப் பிற குழுவினரை கார்ல்மார்க்ஸ் ஒட்டுமொத்தமாக உழைக்கும் வர்க்கத்தினர் என்று அழைக்கிறார். இவர்கள் இந்த ஆதிக்கக் குழுவினரால் தொழிலாளர்களாக வேலை செய்யுமாறு பணிக்கப்படுகின்றனர். ஆனாலும் அவர்கள் தமது உழைப்பின் முழு மதிப்பையும் பெற அனுமதிக்கப்படமாட்டார்கள். இந்த ஆதிக்கவியலாராகிய ஆளும் வார்க்கத்தினரின் அதிகாரங்கள் பொருளாதாரத்தினைக் கட்டுப்படுத்துவதினின்றே தோன்றுகின்றன. ஆனால் மார்க்ஸின் கருத்துப்படி அது சமுதாயத்தின் பிற எல்லாப் பிரிவுகளையும் ஆக்கிரமிக்கும்

படி பரவுகிறது ... ஆனால் இக்கட்டுப்பாடு சமுதாயத்தின் எல்லா முக்கிய நிறுவனங்களின் மீதும் அதாவது மாநிலம், ஆலயம், பள்ளிகள், குடும்பம் என்ற எல்லா நிறுவனங்களின் மீதும் பரவுகிறது. தேர்தல் முறைகள் ஒரு முதலாளித்துவச் சமுதாயத்தில் ஒரு அரசின் அல்லது மாநிலத்தின் அடிப்படைச் சட்டகத்தை (skeleton) நிர்ணயிக்க உதவுகின்றன. அச்சட்டகமே பின்னர் முக்கியமாக ஆளும் வர்க்கத்தினர் நலனின் பிரதிநிதியாக அமைகிறது. ஆளும் வர்க்கத்தின் கட்டுப்பாடு கருத்துக்களைக் கட்டுப்படுத்துவதிலும் பரவுகிறது. ஒவ்வொரு வரலாற்றுக் காலத் தொடக்கத்திலும் இந்த ஆதிக்க வர்க்கத்தினரின் கருத்துக்களே ஆதிக்கம் செலுத்துகின்றன என்பார் அவர். தகவல் தொடர்பு சாதனங்களும் இக்கருத்தில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியன. ஒரு மார்க்ஸியவாதியின் கோணத்தில் இவை வெளிப்படுத்தும் ஆதிக்கக் கருத்துக்கள் ஆதிக்க வர்க்கத்தினரின் எண்ணங்களையே அவர்தம் நலனையே பிரதிபலிக்கும் என்பதையே எதிர்பார்க்க வேண்டும்.

Informational broadcast : (தகவல் ஒலிபரப்பு) முக்கியமான தகவல் அல்லது செய்திகள் அடங்கிய ஒலி பரப்பு.

Information technology : (தகவல் சாதனத் தொழில் நுட்பங்கள்) தகவல் சாதனத் தொழில்துறையின் வெற்றியின் மையமே பெரியதும் சிக்கலானதுமான மின்னணு மின் ஓட்டப் பாதைகளையும் அவற்றின் பகுதிகளையும் மெல்லிய சிலிகன் மென் தகட்டினூடே நுழைப் பதன் மூலம் மிகச் சிறிய செதுக்குருவமாக்கியமையே (miniaturization) எனலாம். மிகச் சிறிய வடிவமாக்கியதனாலேயே கணிப் பொறி மிக விரைவாக இயங்கக் கூடிய இயந்திரமாகவும் ஒரு குறிப்பிட்ட விதிக்குட்பட்ட ஆணைத்தொடர்களைப் (programme) பின்பற்றிச் சொற்கள், படங்கள், எண்கள், முதலானவற்றைச் சேமித்து வைக்கக் கூடியதாகவும் ஆயிற்று. இதனுடன் சேர்ந்து தகவல் தொடர்புசெயற்கைக் கோள்களையும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கேபிள் களையும் பயன்படுத்தி அவற்றின் மூலம் செய்திகளைச் சிறந்த வழிமுறைகளைப் பயன்படுத்திக் கருத்துப் பரிமாறும் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. இது பெரிய அளவிலும் மிக விரைவாகவும் இரு முனைகளுக்கிடையே செய்திகளை அனுமதிக்கிறது. இவற்றின் வளர்ச்சிக்கு மிக முக்கியமான தூண்டுதலாக இருப்பவை பன்னாட்டு நிறுவனங்களும் மாநில நிர்வாகமும் மற்றும் மாநிலத்தின் கருத்துப் பரிமாற்றத் தேவையும் ஆவன. குறிப்பாக, இராணுவப் பிரிவு தொடர்பான கருத்துப் பரிமாற்றம் எப்போதும் ஒரு நாட்டின் தேவை ஆகும். செய்திகளைக் கையாளவும் பரிமாறவும் உள்ள இவ்வகை வளர்ச்சியடைந்த உத்திகள் மொத்தமாகத் தகவல் சாதனத் தொழில்நுட்பங்கள் என்று அழைக்கப் படுகின்றன.

இப்புதுத் தொழில் நுட்பங்கள் பொதுமக்கள் மற்றும் தனிமனித கருத்துப் பரிமாற்ற உத்திகளை மாற்றத்திற்கு உட்படுத்தியுள்ளது. சான்றாக இதழியல் துறையில் இவை இதழாளர்களுக்கு அவர்தம் செய்திக் கதைகளை நேரடியாக ஒரு இயந்திரத்திலேயே தட்டச்சு செய்வதன் மூலம் அவ்வியந்திரமே அச்சுக்கோர்க்கவும் பின்னர் அவ்வியந்திரமே நேரடியாகத் தாள்களில் அச்சடிக்கவும் வழிவகை செய்துள்ளன. மேலும் அச்சிடப்பட்ட அப்பகுதி மின்னணு வடிவத்தில் வீடுகளுக்கு நேரடியாகத் தொலைக் காட்சித் திரையில் தெரியும் வகையில் வழங்கப்படவும் முடிகிறது. அதுவே

மின்னணுச் செய்தித்தாள் (Electronic Newspaper) எனப்படுகிறது. கேபிள் தொலைக்காட்சி மற்றும் நேரடி ஒளிபரப்புச் செயற்கைக் கோள் (DBS) தம் அலைவரிசைகளை மிக அதிகமாகப் பெருக்கிக் கொள்ள முடியும். ஒரு கேபிள் அமைப்பு என்பது வயர்களினால் இணைக்கப்பட்ட ஒரு வலைப்பிணைப்பு (wired network) ஆகும். இது ஒளிபரப்பாளர்களை நேயர்களுடன் இணைக்கிறது. குறிப்பிட்ட வலைப்பிணைப்புடன் இணைப்பு வேண்டுமா வேண்டாமா என்ற நேயர்களின் விருப்பத்திற் கேற்றபடி இணைக்கிறது. மேற் குறிப்பிட்ட சேவைகள் போலவே கேபிள் தொலைக்காட்சியும் இதற்கெனப் பணம் கட்ட முடியாதவர்கள் மற்றும் ஒளிபரப்பு எல்லைக்கு அப்பாற்பட்டு மிகவும் தூரத்தில் இருப்பவர்கள் ஆகியோருக்குக் கிடைக்காது. கேபிள் அமைப்பைப் பொறுத்தவரை பிரிட்டனில் 50% மக்கள் இவ்வொளிபரப்பு கிடைக்காத மக்களாகவே உள்ளனர். புது கேபிள் அமைப்பு ஏற்கனவே உள்ள தொலைபேசி வலைப்பிணைப்பைப் போலன்றி ஏறக்குறைய 30 தொலைக்காட்சி அலைவரிசைகளையாவது எடுத்துச் செல்ல முடியும். எனவே இப்புதிய கேபிள் அமைப்பு நேயர்களுக்கு அலைவரிசைகளை அவர்தம் விருப்பத்திற் கேற்பத் தெரிந்தெடுத்துப் பார்க்கும் வசதியை அளிப்பதால அகலப்பட்டை கேபிள் (broad band cable) என்று பெயர் பெறுகிறது. விண்ணிலுள்ள செயற்கைக் கோள்கள் பூமியில் உள்ள ஒலிபரப்பு நிலையங்களைப் போலவே செயல்படுவன. ஆனால் அவற்றின் உயரத்தால் அதாவது பூமியின் மேற்பரப்பிலிருந்து 23,000 மைல் களுக்கும்அப்பாற்பட்ட தூர அளவால் தொலைக்காட்சிச் சமிக்ஞைகளை மிகப் பரந்துபட்ட தூரத்திற்கு ஏராளமான எண்ணிக்கையிலான நேயர்களுக்கு ஒளிபரப்ப (to transmit) ஏதுவாகின்றன. அத்தகைய ஒரு கோள் பிரிட்டனுக்கும் நிறைய அய்ரோப்பிய நாடுகளுக்கும் ஒரு இடத்திலிருந்து ஒளிபரப்ப இயலும். ஒளிபரப்புக் கோள்கள் விண்வெளியில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வைக்கப் படுகின்றன. அவ்விடத்து அவை அசையாத நிலைத்த நிலையில் வைக்கப் படுகின்றன. இவ்வாறு அவை ஒரே அளவிலான வேகத்தில் சுழல்வதால் பூமியிலிருந்து தொலைக்காட்சிச் சமிக்ஞைகள் கோள்களினுள் ஒளிக் கதிர்களாக அனுப்பப்பட அதன் பின் அவை பூமியில் உள்ள வேறு இடங் களுக்கு அங்கிருந்து மீண்டும் பாய்ச்சப்படுகின்றன. ஒளிபரப்புக் கோள்கள் 1960களின் ஆரம்பத்தி லிருந்து தொலைக்காட்சிப் படங்களை வெவ்வேறு கண்டங்களுக்கிடையே ஒளிபரப்பப் பயன்படுத்தப்பட்டு வரு கின்றன. அமெரிக்காவிலிருந்து வரும் ஒளிபரப்புக் கோள் சமிக்ஞைகள் பிரிட்டனில் ஒரு பெரிய அளவிலான பெறு தட்டம் (dish) மூலம் பெறப் படுகின்றன. அதன் பின்னர் பூமியில் உள்ள ஒளிபரப்பு வலைப்பிணைப்பு அமைப்புக்கள் மூலம் தனது நாட்டுத் தொலைக்காட்சி நேயர்களுக்கு ஒளிபரப்பப்படுகின்றன. சான்றாக, 'LIVE AID' என்ற நிறுவனத்தின் பாப் இசை சூலை 1985-இல் ஒளிபரப்புக் கோளின் வாயிலான கருத்துப் பரிமாற றத்தினைப் பயன்படுத்தியதனால் நேரடி ஒளிபரப்பாக 95% உலகத் தொலைக் காட்சி நிலையங்களுக்குத் தரப்பட்டது. நேரடி ஒளிபரப்புச் செயற்கைக் கோள் (Direct Broadcast Satellite) என்பது அண்மையில் செயற்கைக் கோள் ஒளிபரப்பு உத்திகளில் உள்ள குறைகளை நீக்கிச் செம்மைப்படுத்தப்பட்ட அமைப்பாகும். ஆக்கப்பட்டுள்ள புதுவகை ஒளிபரப்புச் செயற்கைக் கோள்கள் இப்போதுள்ள

சமிக்ஞைகளைப் போல் 10 மடங்கு வல்லமை வாய்ந்த சமிக்ஞைகளை உருவாக்குதல் மூலம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நேரடியாக நேயர்களுக்கு ஒளிபரப்பும். சமிக்ஞைகள் ஒரு சிறிய பெறு தட்டம் மூலம் பெறப்படும். இந்தத் தட்டம் ஏற்கனவே உள்ள மரபு வழிப்பட்ட வான் கம்பிக்குப் (aerial) பதிலாகப் பயன்படுத்தப்படும். கேபிள் அமைப்புக்களை இயக்கும் நிறுவனங்களுக்குக் கோள்களின் கருத்துப் பரிமாற்றங்களைப் பெறுவதும் பின்னர் அவற்றைக் கேபிள் வலைப்பிணைப்பு மூலம் ஒளிபரப்புவதும் இயலும். அமெரிக்காவில் கேபிள் இயக்குநர்களுக்குக் கோள் தரும் அலை வரிசைகள் மொத்தம் 40 உள்ளன. பர்கிட் என்பவர் 1985-இல் அய்ரோப்பாவில் 1986 வாக்கில் 20 அலை வரிசைகள் கிடைக்கக்கூடும் என்று கணக்கிட்டார்.

அகல்தளை கேபிள்கள் (Broad band cables) மற்றும் நேரடி ஒளிபரப்புச் செயற்கைக் கோள்கள் தம் நேயர்களுக்குக் கிடைக்கக் கூடிய அலைவரிசைகளின் எண்ணிக்கையை அதிகமாக்கிக் கொள்ளக்கூடிய மிகுதியான ஆற்றல்கள் வாய்ந்தவை. அவை மிகுதியும் நெகிழ்ச்சியுடைய கருத்துப் பரிமாற்ற நெடுவழிகள் (communication highways) ஆகும். ஏனெனில் அவை ஒருவழிப் போக்குவரத்தைத்தான் அதாவது தகவல் தொடர்பு சாதனத் தயாரிப்புக்களை ஒருவழியாகத்தான் கொண்டு செல்லும் என கட்டுப்படுத்தப்பட்டிருப்பவை அல்ல. இவற்றால் வாடிக்கையாளர்கள் தெரிந்தெடுத்து பொருட்களை அல்லது நிகழ்ச்சிகளை வாங்கவும் கருத்துக்களை அனுப்பவும் அல்லது பல்வேறு விவாதங்கள் மீதான அவர்கள்தம் கருத்துக்களுக்காகக் கலந்தாலோசிக்கப்படவும் முடியும். எனவே மிகவும் பிரபலமான 'தகவல் சந்தை'க் காட்சி அதாவது உழைத்தல், நுகர்தல், சேமித்தல் மற்றும் உலக அறிவு குறித்த விபரங்களைப் பெறுதல் ஆகிய அனைத்துக் கூறுகளையும் கொண்ட 'தகவல் சந்தை' குறித்தன அனைத்தையும் வீட்டிற்குள் இருந்து கொண்டே ஒருவர் பெற முடியும். தொழில்நுட்ப ஒழுங்குக்குட்பட்ட நியதியைப் பயன்படுத்துவதன் மூலம் அகல்தளை கேபிள் மற்றும் நேரடி ஒளிபரப்புச் செயற்கைக் கோள் ஆகியவை இரண்டும் இணைப்பு விளைவுகளைப் பெறும். முதலாவது அவை தகவல் தொடர்பு சாதனங்களின் நிகழ்ச்சிகளின் தரத்தை நேயர்களின் அலைவரிசைத் தெரிவை அதிகப்படுத்துவதன் மூலம் உயர்த்தும். இரண்டாவது அவற்றை நிறுவிய அவ்வந் நாடுகளுக்கு hardware என்றழைக்கப்படும் மின்னணுச் சாதனம் மற்றும் software எனப்படும் நிகழ்ச்சி அமைப்பு ஆக்கம் மற்றும் தகவலும் தரவுப் பணிகளும் (Programme making and information & data service) முதலியவற்றை உற்பத்தி செய்யும் தொழில்களுக்குக் கிராக்கியை ஏற்படுத்துவதன் மூலம் பொருளாதார மறுமலர்ச்சியினைக் கொண்டுவரும். எதிர்காலத்தில் Bell என்பவரின் கணிப்பின் படியும் பல அரசியல்வாதிகளின் கண்ணோட்டத்திலும் வேலைவாய்ப்புக்களின் அதிக விரிவும் எதிர்கால வளத்திற்கான நன்னம்பிக்கையும் இந்தத் தகவல் சாதனத் தொழில்களையே சார்ந்துள்ளன.

In-house : (உள்-அகம்) பதிப்பக நிறுவனத்தின் உள்ளேயே இதழ்த் தயாரிப்புப் பணி நிகழ்தல் எந்த அளவிற்குக் கொண்டுவரப்படுகிறதோ அந்த அளவிற்கு அது இதழ்த் தயாரிப்பில் முக்கியத்துவம் வாய்ந்ததும் நன்மை பயப்பதும் ஆகும். வெளியில் சென்று அச்சிட்டுக் கொண்டு வருதல் என்பதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது.

Initial : (ஆரம்ப எழுத்து) ஒரு குறிப்பிட்ட பகுதி அச்சிடப்படும்போது அப்பகுதியின் அச்சுப் பரப்பு ஆரம்பமாகிறது என்பதைக் குறிப்பதற்கு அப்பகுதியின் ஒரு ஆரம்ப எழுத்தை மட்டும் குறிப்பிட்ட சிறப்பு வடிவத்தில் அச்சிடுக என்பதற்குப் பக்க வடிவமைப்பில் தரப்படும் குறிப்பு.

Inject : (உடனடிக் காட்சி) தொலைக் காட்சி ஒளிபரப்பில் ஒளிபரப்பாகும் ஒரு செய்தி நிகழ்ச்சிக்காக மிகத் தொலைவில் உள்ள செய்தி ஆதாரத் திடமிருந்து நேரடி ஒளிபரப்பாக உடனடியே அப்போதே தரப்படும் காட்சி ஆதாரம்.

Input-output : (உள்ளிடு செய்தி-வெளியிடு செய்தி) ஒரு கணிப்பொறிக் குள்ளே இடப்பட்டு ஆனால் இன்னும் அனுப்பப்படாத செய்தி உள்ளீடு (input) எனப்படும். அதே செய்தி அனுப்பப்பட்ட பின்னர் கேட்போரிடம் வந்து கிடைகக்கும்போது வெளியீடு (output) எனப்படும்.

Inserts : (செருகல்கள்) ஒரு செய்திக் கதையின் முதல் பாராவின் இறுதிக்கும் இறுதிப் பாராவின் தொடர்ச்சிக்கும் இடையே எந்த இடத்திலாயினும் வைக்கப்படக் கூடிய விதத்தில் எழுதப் பட்டுள்ள ஒரு கூடுதல் கூறு 'செருகல்' எனப்படும். இக்கூறு இடையில் சேர்க்கப்படக்கூடிய கூறு. ஏற்கனவே செய்தித் தயாரிப்பு அறைக்கு அனுப்பப் பட்டுவிட்ட ஒரு செய்திக் கதையில் சேர்க்கப்பட வேண்டிய அப்போதுதான் (இறுதியில்) வந்துள்ள செய்தி. முதலில் சேர்க்க வேண்டிய செருகலை 'insert A' என்றும், இரண்டாவது சேர்க்க வேண்டிய செருகலை 'Insert B' என்றும் எழுத்துப்படியின் மேல் குறிப்பிட்டு வைப்பர். வானொலி ஒலிபரப்பில் ஒரு நிகழ்ச்சிக்கு இடையே ஒலிப்பதிவு மூலமாகவோ நேரடியாகவோ இணைத்துத் தரப்படும் பகுதியும் 'செருகல்' எனப்படும்.

Inside the studio : (நிகழ்ச்சி அரங்கு அகம்) ஒலிபரப்பு, ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்படும் அரங்கின் உட்பகுதி.

Intaglio printing : (செதுக்கு அச்சுமுறை) ஒரு கல்லின் மேற்பரப் பினுள் உருவம் செதுக்கப்பட்டுள்ள செதுக்கு ; ஜெம் கல்லின் வடிவத் திற்குத் தரப்பட்டுள்ள பெயர். இன்டாக்ளியோஸ் எனப்படும் இத்தகைய வடிவங்கள் பதிந்து வைக்கப்பட்ட வரலாற்றைப் போல் பழமையானவை. ஏனெனில் பழங்காலத்தில் எகிப்தில் இத்தகைய அச்சுமுறை செல்வாக்குப் பெற்றிருந்தது.

Intelligent terminal : (அறிவுபூர்வ முனை) மையக் கணிப்பொறியின் இயல் தன்மைகளைப் பயன்படுத்தாமல் ஒரு கணிப்பொறி தானே தனக் குள்ளேயே தேவையான அளவு சேமித்து வைக்கும் சாத்தியமும் சில செயல்பாடுகளை நிர்வகிப்பதற்கு அனுமதிக்கும் திறமும் கொண்டிருத்தல்.

Intelsat : (இன்டெல்ஸட்) 'அகில உலக தொலைத் தொடர்புக் கோள் அமைப்பு' என்ற பொருள்படும் International Telecommunications Satellite Consortium என்ற சொற்றொடரின் சுருக்கக் குறியீடு. இந்நிறுவனம் "உலக உருண்டை செயற்கைக்கோள் கருத்துப் பரிமாற்ற அமைப்பின் விண்வெளிப்பகுதியை வடிவமைத்தல், வளர்த்தல், உருவாக்குதல், இயக்குதல், பராமரித்தல் போன்றவற்றிற்கான பொறுப்புடையது. இந்நிறுவனம் அரசுகளின் மற்றும் அவற்றின் தொலைத் தொடர்பு அதிகாரிகளின்

உடமையாகும். ஒவ்வொரு அரசின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளும் நபரும் அதில் பங்குதன முதலீடுகள் வைத்திருப்பார்.

Intensive agricultural areas : (வேளாண் தீவிரப் பகுதிகள்) தீவிரமான வேளாண் பகுதிகளை இனங்காணும் பொருட்டு அப்பகுதி களுக்குரிய வேளாண்மைச் செய்திகள் வானொலியில் ஒலிபரப்பப்படுவது உண்டு.

Intercom : (உட்தொடர்புத் தொலை பேசி) ஒரு நிறுவனத்திற்குள் தூரத்திலிருக்கும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளப் பயன்படும் அமைப்பு.

Interface : (எதிரெதிர் சந்திப்பு) இரு அமைப்புக்கள் சந்தித்துக் கொள்ளும் புள்ளி அல்லது ஒரு கணிப்பொறி வழிக் கருத்துப் பரிமாற்ற அலகினை (CPU) அதன் செய்தித் தொடர்பு முறையிலேயே (on-line) வெளி எல்லை தொடர்பு கொள்ளும் முறை. இவ்வாறு ஒரு காட்சிப்படங் காட்டி (VDT) நேரடியாக ஒரு மையக் கருத்துப் பரிமாற்ற அலகை எதிரெதிர் சந்தித்துக் கொள்கிறது.

Interference : (குறுக்கீடு) இரண்டு மின்னணு அலைகளின் ஒன்றோ டொன்றின் மீதான விளைவு.

Internal : (இல்ல இதழ்கள் அல்லது வளாக இதழ்கள்) ஒரு நிறுவன அமைப்புக்குள்ளேயே உள்ள தொழி லாளர்கள் போன்றோர்களுக்காகக் குறிப்பிட்ட குழு வாசகர்களுக்காகத் தயாரிக்கப்பட்டு சுற்றுக்கு விடப்படும் ஒரு வெளியுறவு இதழ். இத்தகைய இதழ்களைத் தயாரிப்பதற்கான செலவு நிறுவனத்தாலேயே மேற்கொள்ளப் படும்.

International programmes : (பன்னாட்டு நிகழ்ச்சிகள்) வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுள் இடம்பெறும் பல்தேசிய அளவிலான பன்னாட்டு நிகழ்ச்சிகள். BBC-இன் உலகச் செய்திகளான 'BBC World' சான்றாகும்.

Internegative (dupe-negative) : (நகல் நெகடிவ்) ஒரு அச்சிலிருந்து தருவிக்கப்பட்ட நெகடிவ். இந்த நெகடிவிலிருந்து மேலும் பல அச்சுகள் (நகல் அச்சுகள்) தயாரிக்கப்படலாம்.

Internet : (இன்டர்நெட்) இன்டர்நெட் என்பது பன்னாட்டு கணிப்பொறி வலைப்பிணைப்புக்களின் வலைப் பிணைப்பு மூலம் உலகளாவிய தகவல் களைப் பகிர்ந்து கொள்ளும் முறை யாகும். இந்த வலைப்பிணைப்பு உலகின் நூற்றுக்கணக்கான பல்கலைக்கழகங்கள், வியாபார நோக்கக் கணிப்பொறித் தகவல் தொடர்பு நிலையங்கள், அரசாங்கக் கார்ப்பரேட் செய்தி இணைப்புக்கள் ஆகியவற்றை ஒரு சேரப் பிணைத்துள்ளது. கணிப்பொறி உபயோகிக்கும் பல இலட்சக்கணக் கானவர்களையும் இவ்வலைப்பிணைப்பு இணைத்துள்ளது. மேலும் இவ்வலைப் பிணைப்பில் சேருவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகிறது. சிறிதுசிறிதாக விரிவடைந்து இவ்வலைப்பிணைப்பு தற்போது உலகம் முழுவதும் பரவியுள்ளது. இன்றைய நிலையில் இவ்வலைப்பிணைப்பில் 38,000 கணிப்பொறி வலைப்பிணைப்புக்கள் இணைக்கப்பட்டுள்ளன. இன்டர்நெட் வசதியில் சேர்ந்து, பயன்பெறுவதற்கு ஒரு நல்ல கணிப்பொறி, ஒரு 'மோடம்' மற்றும் சில மெல்லுறுப்புக்கள் போது மானவையாகும். மெல்லுறுப்புக்களில் 'யுனிக்ஸ்' போன்ற வலைப்பிணைப்புக்

களுக்கு உதவும் மெல்லுறுப்புக்கள் அவசியம் தேவை. மோடம் இணைக்கப்பட்ட கணிப்பொறியை இரண்டு வகையில் பயன்படுத்தலாம். ஒன்று அதைத் தொலைபேசி இணைப்புக்களுடன் இணைப்பது. இரண்டாவது மோடம் இணைக்கப் பட்டு கணிப்பொறியில் டிஸிபிஅய்பி (TCPIP) என்னும் வலைப்பிணைப்பு வசதியை இணைப்பது. முதல்வகை இணைப்பு தொலைபேசியைக் கணிப்பொறி மூலம் பயன்படுத்துவதைப் போலாகும். இரண்டாவது வகை இணைப்பே இன்டர்நெட் ஆகும். இன்டர்நெட் மூலம் நமக்குக் கிடைக்கும் வசதிகள் பல. முதலாவது ஈமெய்ல். இது உலகின் பல்வேறு பகுதி களுக்குச் செலலக்கூடிய மிகுவேகத் தபால் இணைப்பாகும். அடுத்தது 'புல்லட்டின் போர்டு' என்னும் அமைப்பு. அதாதுவ மின்னணுச் செய்தித்தாள். இவற்றைத்தவிர இன்டர்நெட் மூலம் பேனா நண்பர்கள்களைப் போல கணிப்பொறி மூலம் தொடர்பு கொள் ளலாம். டெலிநெட் என்னும் வசதி மூலம் உலகின் எந்த மூலையிலும் இருக்ககககூடிய கணிப்பொறிகளை நம்முடைய இடத்தில் இருந்தே இயக்கலாம். இன்டர்நெட் வலைப் பிணைப்பில் நிறைய தகவல் வெள்ள நூலகங்கள் உள்ளன. அவற்றிலிருந்து ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் நூல் களையும் படிக்கலாம்.

Interpretation: (செய்தி விளக்கம்) தகவல் தொடர்பு சாதனங்களுக்குச் செய்தியைச் சேகரிதது்த் தரும் நிருபர்கள் மற்றும் அதை எழுதிச் செம்மைப்படுத்தும் ஆசிரியர்கள் அச்செய்தியைக் கூறிவிட்டு அதனை விளக்கி எழுத வேண்டும்.

Interpretative reporting : (விளக்கச் செய்தி தரும் முறை) செய்திகளை விளக்குதல் என்பது அதனோடு புதிய ஆழத்தையும் உள்நோக்கையும் சேர்ப்பதன் வாயிலாக அதனை மேலும் அர்த்தமுள்ளதாக்குதல் ஆகும். நிருபர்கள் மேலோட்டமாக உள்ள செய்திகளுக்குப் பின்னேயும் சென்று ஊகங்களிலிருந்து தவிர்க்க வேண்டிய கூறுகளைப் பிரித்தறிவதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய செய்தி சேகரிக்கும் முறையில் 'என்ன', 'யார்' என்பதைவிட 'ஏன்' என்பதுவே முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. கடந்த காலங்களில், விளக்கமாக எழுதுதல் (Interpretations) துல்லியமாகச் செய்தி தருதலைப் பாதித்து விடும் என்றும் அஞ்சப்பட்டது. ஆனால் மக்கள் உண்மைகளை விடவும் அதற்கும் மேல் வேறு சிலவற்றையும் விரும்புவதால் விளக்கச் செய்தி தரும் முறை என்பது பின்பற்றப்பட ஆரம்பித்துவிட்டது. அவர்கள் பல்வேறு நபர்களது எண்ண வெளிப்பாடுகளையும் கருத்துக் கணிப்புக்களையும் விரும்பிப் படிக்கின்றனர். இவ்வாறு பொதுவாகச் செய்தியை வகைப்படுத்தி ஆராயும் போக்கு வளர்ந்துள்ளது. அத்தகைய செய்திப் பத்திகளே மேலும் மக்களால் கவனித்து வாசிக்கப்படுகின்றன.

ஒரு பிரபல அமெரிக்கரும் இதழியல் பேராசிரியருமாகிய மெக் டுகல் (Mc Dougall) என்பவர்' "விளக்கச்செய்தி தரும் முறை என்பது செய்தியின் துல்லியத்தை அழித்துவிடும் ஒன்றல்ல ; ஒருஜனநாயக நாட்டில் எங்கு மக்களது தீர்மானம் எடுக்கப்படு கிறதோ அங்கு வாசகர் தான் புரிந்து கொள்ளும் வகையிலான வடிவத்தில் தனது கோணத்தில் செய்தியின் உண்மை நிலை இவ்வளவு என கூறிக்கொள்ளும் உரிமை உடையவர் ஆவார்" என்பார். ஒரு செய்திக் கதையின் எல்லாக் கோணங்களும் தேடிக் கண்டுபிடிக் கப்பட வேண்டும். மேலும் எந்த முக்கிய வினாவும் பதிலளிக்கப்படாமல்

விட்டுவிடப்படக் கூடாது. விளக்கங்களின் மூலம் செய்திக்கு முறையாக அழகூட்டுதல் அச்செய்திக்கு ஆழத்தைத் தரும். செய்தியில் பொருண்மயக்கம் (obscure) தரும் நிலையைச் சுருக்கமாக எழுதுதலின் மூலம் மாற்றவேண்டும். செய்தி அறிக்கைகள் செய்தியின் மேல்தளத்திற்கும் கீழே தோண்டப்பட்டு எழுதப்பட்டிருக்க வேண்டும். விக்ஹேரட் ஸ்டெட் என்ற மிகப் பிரபல பிரிட்டிஷ் இதழாளர், "இதழியலின் பணி என்பது சேகரித்தல், தெரியப்படுத்துதல், மக்கள் நலன் குறித்த செய்திகளுக்கு விளக்கமளித்தல் (interpret) முதலியன ஆகும்" என்று கூறுகிறார். இவ்வாறு விளக்கமளித்துச் செய்தி எழுதும் முறையை விரும்பாதவர்கள், "இத்தகைய செய்தி எழுதும் முறை தலையங்கப் பகுதிக்குள்ள உரிமைகளைத் தமக்குரியதாக அடாவடியாக எடுத்துக்கொள்ளும் முறை ஆகும் ; மேலும் கவனக்குறைவான வெளியீட்டிற்கு இம்முறை வழிவகுத்துவிடுகிறது ; செய்தி எழுதுபவர் அச்செய்தி குறித்த தனக்குரிய குழப்பங்களையும் சேர்த்துச் செய்தி எழுதி விடுவார் : இது செய்தியின் துல்லியத்தைப் பாதித்துவிடுகிறது" என்று குற்றம் சாட்டுகின்றனர். இவ்வாறு விளக்கமளித்துச் செய்தி எழுதும் முறையை ஆதரிப்போர், "செய்தியின் மாறாத துல்லியமும் அதற்கான நேர்மையான விளக்கங்களும் ஒத்திசைய முடியும். செய்திகள் கருத்துத் தெரிவிப்பு, விளக்கங்களுடன் கலக்கப்பட்டுவிடக் கூடாது. செய்திச் சிதைவும் ஏற்பட்டு விடக் கூடாது. உண்மையைக் கூறுவதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும். இவை கவனிக்கப்படுமென்றால் இத்தகைய எழுதும் முறை வாசகனைப் பயிற்றுவிப்பதுடன் வாசகனுக்கு அறிவு விளக்கமாகவும் அமையும் என்று கூறுகின்றனர். விளக்கமளித்து எழுதப்படும் செய்திக் கதை பின்வரும் முறைகளை உள்ளடக்கி இருக்க வேண்டும். 1) விரிவான செய்தி வெளியீட்டு முறை. அதாவது வாசகனைக் காட்சிக்கே அழைத்துச் செல்லும் திறமை உடையதாய் எழுதப்பட்டிருத்தல். 2) செய்திகளின் முக்கியத் துவத்தில் உண்மையான ஆர்வம் காட்டப்பட்டிருத்தல். 3) சமுதாயத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியினரின் மீது செய்தி ஏற்படுத்தும் தாக்கம். 4) செய்தியோடு தொடர்புடைய நபர்களின் ஆளுமை, இயல்பு முதலியவற்றைச் சித்திரித்தல் முதலியன. படங்கள் மற்றும் விளக்கி எழுதுதல் முதலியனவற்றிற்குச் செய்தியின் முழுத்தொலைவுத் தோற்றம் மற்றும் செய்திக்குரிய ஆதாரங்களுக்காகச் செய்தியின் மேலோட்டத் தகவல்களினின்று அதற்கும் அப்பாற்பட்டு துருவி உண்மைகளைக் கண்டறிந்து செய்தி தந்துள்ள போக்கு தேவை.

Interview: (பேட்டி/நேர்முகம்/நேர்காணல்) ஒரு கருத்து குறித்த மற்றொருவரது எண்ணங்கள், அவருக்குத் தெரிந்த செய்திகள் முதலியவற்றை அவரிடமிருந்து பெறுதல் பேட்டி ஆகும். பேட்டி குறித்து ஏற்கனவே ஒரு மேலோட்டத் திட்டம் (outline) மட்டும்தான் வைக்கப்பட்டிருக்கும். ஏனெனில் பேட்டி, கலந்துரையாடல் முழுவதும் முழு வடிவத்தில் முன்னரே எழுதித் தயாரிக்கப் பட முடியாது. பேட்டி தருபவரது கருத்துக்கள், உணர்வுகள் முதலியன பேட்டி தருபவர் அந்தநேரம் வெளிப்படுத்துவன. பேட்டியில் கலந்து கொள்வோர் துறைவல்லுநராக இல்லாதபோது எழுதித் தயாரித்ததை மனப்பாடம் செய்வதோ வாசிப்பதோ அவர் மிகச் சிரமத்துடன் நிகழ்ச்சி தருவதாகவும் அந்நிகழ்ச்சி வலுக்கட்டாயமானதாகவும் செயற்கையானதாகவும் தோன்றும்.

பேட்டி காண்பவர், தருநர் இருவருமே ஒரு வடிவம் (script) தயாரித்து வைத்துக் கொள்ளலாம் (இன்ன கேள்வி, இன்ன பதில் என்ற விளக்கங்கள் குறிப்பிடப் பட்டவையாக). ஆனால் அதே வார்த்தைகள் பேசும்போது இடம் பெறாது. சிலநேரங்களில் முழுவதும் தயாரித்த பேட்டியாக இல்லாமல் இருக்கலாம். சிலவேளை நேரடியாக அப்போதுதான் பேசுவதாக இருக்கலாம். சில வேளை களில் மட்டுமே முற்றிலும் எழுதித் தயாரித்ததாக இருக்கும். சிறிதாவது திட்டமிட்டுக் கொள்ளாத பேட்டி துணிந்து செயலில் இறங்குவதாகும். ஏனெனில் பேட்டி தருபவர் பரபரப்பாக, மந்தமாக அல்லது மிகுதியாகப் பேசுபவராக இருப்பார். பேட்டி காண்பவர் பேட்டியை நடத்தத் திணறி வினாக்களை அப்போதுதான் சிந்தித்துச் சிந்தித்துக் கேட்பதாக அமையும்.

பேட்டி அணுகுமுறை : பேட்டி வடிவம் குறித்து ஒரு திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட வேண்டும். பேட்டியின் நோக்கம், கேள்வி, பேட்டி வடிவம் முதலியன பேட்டி காண்பவரால் முதலில் நிறைய வினாக்களாகத் தயாரித்து வைத்துக்கொள்ளப் படுகின்றன. கேள்வி வரிசையில் முறைப்படுத்தப்பட்ட வரிசை இருக்கும் படி எப்படிப்பட்ட பதில்கள் பேட்டியில் வரக்கூடும் என்ற கருத்து உள்ள வராகப் பேட்டி காண்பவர் இருக்க வேண்டும். எனவே முடிந்தால் ஒரு முன்பேட்டி நடத்திப் பார்க்க வேண்டும். (விளக்கமான பதில்கள் சில ; சுருக்க மான பதில்கள் சில ; எளிய பதில்கள் சில ; என்ற) இந்த முன்பேட்டி பேட்டி தருபவரின் உதவியுடன் நடத்திக் கொள்ளப்பட வேண்டும். அப்படி யானால்தான் பேட்டி நடத்துபவர், தொடர்ந்து வரும் வினாக்கள், திடீரென எழும் வினாக்கள், வினா வரிசை முதலியவற்றைச் சிறந்த முறையில் உருவாக்கிக் கொள்ள முடியும். முன்பேட்டிக்கு நேரமில்லை எனில் பேட்டி நடத்துபவருக்கு இன்ன கேள்விகளுக்கு இன்ன பதில் வரும் என ஊகிக்கும் அறிவு வேண்டும். எல்லாப் பேட்டிகளிலும் (தயாரிக்கப் பட்டது, திடீர்ப் பேட்டி, நேரடிப் பேட்டி) பேட்டி எழுதுபவர் தொடக்கம், பேட்டி தருபவரை அறிமுகப்படுத்தும் குறிப்பு, முகப்புச் செய்திகள், நிகழ்ச்சியின் பகுதிகள், முடிவுக் குறிப்புகள், வினாக் கள் பற்றி ஏற்கனவே ஒரு திட்டம், வரக்கூடிய பதில்கள் பற்றி முடிந்தால் ஒரு திட்டம் முதலியவற்றைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். நிகழ்ச்சியின் மொத்த நேரத்திற்கேற்ப முடிவின் இறுதிக் கூறின் நீளம் கணக்கிடப் படவேண்டும். பேட்டி தருபவர் பற்றிய பின்னணி தெளிவாகச் சொல்லப்பட வேண்டும். ஆரம்பிக்கும் வினா மனித நேயம் தொடர்பானதாக இருப்பின் நேயர்கள் மனதில் பேட்டி தருபவர் பதிய ஏதுவாக இருக்கும்.

பேட்டி வகைகள் : கருத்துப் பேட்டி : (opinion interview) குறிப்பிட்ட நபரது வாழ்க்கை குறித்து இப்பேட்டி அமையும். சான்று : அறிஞர் அண்ணாதுரை பற்றிச் சில பெரியவர்களிடம் கருத்துக் கேட்டல்.

தகவல் விவரப் பேட்டி : (The information interview) ஏதாவதொரு செய்தி குறித்த தகவல்கள் பற்றியன.

தனி மனிதப் பேட்டி : (The personality interview) மனித ஆர்வம், சிறப்புச் செய்திக்கதை, இலக்கிய வகை, சொந்த நம்பிக்கை முதலியவற்றை வெளிப்படுத்தும் பேட்டியாக இருக்கும்.

தொலைக்காட்சிப் பேட்டியில் கவனத்தில் கொள்ளவேண்டியன : வினா, பதில் முறைகள், சில ஆர்வமூட்டும் காட்சிகளுடன் காட்டப்படலாம். காட்சி குறித்த காமிரா அசைவுகள் பேட்டி தருபவரின் முகத்தில் உணர்வுகளை உடல் அசைவுகளைக் காட்டலாம். காட்சி

அணுகுமுறை : இடங்கள், சம்பவங்கள் குறித்த அகலமான, மிகச் சரியான படங்கள் அல்லது பேட்டி தருபவர் குறிப்பிடும் நபர்களின் படங்கள் முதலியன காட்டப்படலாம். சான்று : கல்லூரிப் பேராசிரியரின் பேட்டி என்றால் அவர் வேலை பார்க்கும் நிறுவனம், அவர் அறிவியல் மேதை யாயின் அவரது பரிசோதனைகள் தொடர்பான படங்கள், அவரது வீடு, ஊர் போன்றவை காட்டப்படலாம். ஏனெனில் தொலைக்காட்சி காட்சித் தொடர்புடையது.

Interviewee: (பேட்டி காண்பவர்).

Interviewer : (பேட்டி தருபவர்).

Intro : (ஒலிபரப்பு நிகழ்ச்சி முன்னுரை) எழுத்து வடிவிலோ அல்லது வாய் மொழியாகவோ உள்ள ஒரு செய்திக் கூறு ஒளிநாடாவிலோ ஒலிநாடா விலோ பதிவு செய்யப்பட்டு நிகழ்ச்சி யாகத் தயாரிக்கப்படும்போது அந்நிகழ்ச்சிக்குத் தரப்படும் முன்னு ரைப் பகுதி. செய்திக்கதையில் அமையும் முகப்புச் செய்தி 'intro' எனவும் அழைக்கப்படும்.

Inverted pyramid : (தலைகீழ் பிரமிடு முறை) செய்திக் கதை எழுதப்படும் முறைகளுள் ஒன்று. 1) நேரடிச் செய்திக்கதை கூறப்படும் முறையின் தரமான வடிவம். இதன்படி செய்திக் கதையில் உள்ள செய்திகளின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் தகவல்கள் வரிசைப்படுத்தப்பட்டு செய்திக்கதை எழுதப்படும். (காண்க : biting off) 2) ஒரு செய்தித் தலைப்பின் துணைமை அடுக்குகளோடு தொடர்பு டையது. முதல் வரி முழுவரியாகவும் பிற நடுவணாக்கப்பட்டும் அவையும் முந்திய ஒன்றிலிருந்து அடுத்தது குறையும் வகையில் அமைக்கப்படும்.

நள்ளிரவில் குடிபோதையில் ரகளை
துப்பாக்கியால் மிரட்டிய
தொழிலதிபர்
கைது

இம்முறை இப்போது அருகிவிட்டது.

In-vision (story) : [அகக் காட்சி (செய்திக்கதை)] ஒளிபரப்பில் நிகழ்ச்சி தருபவரால் நிலையத்திலேயே வாசிக்கப்படும் செய்திக்கூறு. இதில் சான்றுகள் எதுவும் தரப்படாது. இது வறட்டுச் செய்திக் கதை (Dry story) என்றும் கூறப்படும்.

IPS (Inches per second) : (ஒரு நொடிக்கு இத்தனை அகலம்) ஒலி அல்லது ஒளி நாடா ஓடும் விரைவைக் குறிக்கும். ஒரு நொடிக்கு ஒலி அல்லது ஒளி நாடா செல்லும் அளவு.

Iris : (ஆடியின் வெளிப்புற இமை) தொலைக்காட்சிக் காமிராவில் ஒளியின் அளவைக் கட்டுப்படுத்தி ஆடிக்குள் அனுப்பும் ஆடியின் வெளிப் புற இமை. ஒளி செல்லும் இந்த இமை அளவைக் குறிப்பதே ' f ' ஆகும்.

Irony: (முரண்பாடு) செய்தி/ நிகழ்ச்சியின் உள்ளடக்கம் சார்ந்த கருத்து ; புதிய வடிவத்தில் மக்களிடையே செல்வாக்குப் பெற்ற ரசனை நிலைபெற்று வளர்ந்து கொண்டிருக்குமானால் பண்பாட்டு விமர்சகர்கள் பழைய வடிவத்தில் உள்ள செல்வாக்குப் பெற்ற பண்பாடு குறித்த நன்மைகளை மீண்டும் வெளிக் கொணர்தலைச் செய்கிறார்கள். புதுமையாகவும் செல்வாக்கும் பெற்று இருப்பின் அது மதிப்பில்லாததும் தீயதும் ஆகும் என்ற கருத்தும் நிலவி வருகிறது. பழைய பண்பாடு சார்ந்த உள்ளடக்கம் இவ்வாறே நிலைத்து நிற்கிறது.

Issue : (வெளியீடு) ஒரு நாளில் வெளியிடப்பட்ட செய்தித் தாளைக் குறிக்கும். அது பல வெளியீடுகளைக் கொண்டிருக்கலாம். அதாவது பல இடங்களிலிருந்து அந்நாளிதழ் வெளியாகி இருக்கலாம்.

Italics : (வலப்பக்கச் சாய்வு முக அச்செழுத்துக்கள்) வலப்புறம் சாய்ந்த இயல்பைக் கொண்ட அச்செழுத்துக் கள். இவை கட்டுரை உடற்பகுதியின் எழுத்துககளினின்று மாறுபட்டு நின்று ஒரு சொல்லை அல்லது சொற் றொடரைத் தனிப்படுத்திக் காட்டும். 'itals' அல்லது 'ital' என்று சுருக்கிக் கூறப்படும்.

ITN : (அய்.டி.என்) பிரிட்டனில் தேசியச் செய்திகளை தனியார் தொலைக் காட்சி நிலையங்களுக்குத் தரும் நிறுவனம். சுதந்திரத் தொலைக் காட்சிச் செய்திகள் என்று பொருள் படும் 'Independent Television News' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம்.

ITU : (அய்.டி.யு.) 'International Tele communication Union' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம்.

IVN : (அய்.வி.என்.) 'Intervision News Exchange' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம். 'அகில உலகக் காட்சீச் செய்தி நிறுவனம்' என்ற பொருள்படும். அகில உலக வானொலி தொலைக் காட்சி அமைப்புககளுக்குள் செயல் படும் வகையில் 1964 மே திங்களில் ஆரம்பிக்கப் பட்ட நிறுவனம் இது. இதன் உறுப்பு நாடுகள் பலவாகும். இவ்வமைப்பு இன்டெர் ஸ்புட்னிக் கோளினைத் தகவல்களைப் பரப்புவதற்குப் பயன்படுத்துகிறது.

J

Jack : (ஜாக்) வானொலி ஒலிவாங்கி இணைப்போடு சேர்க்கப்பட்டகருவி.

Jacket : (மேல் உறை) தனியாகக் சுழற்றி எடுக்கும் வகையில் புத்தகத்திற்கு இடப்படும் காகித அட்டை அல்லது மேல் உறை.

Jamming : (குறுக்கிடுதல்) ஒலி, ஒளிச் சமிக்ஞைகளைப் பெறுவதில் தடை ஏற்படுத்தும் அளவிற்கு விரும்பாத வழியிலிருந்து குறுக்கிட்டுத் தடைப் படுத்தும் குறுக்கீடுகள் உண்டு.

Jerk : (ஆட்டம்) தொலைக்காட்சி ஒளிபரப்பில் தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் காட்சி தெளிவாகத் தெரியாமல் ஆடுமேயானால் அது 'ஜெர்க்' எனப்படும்.

Jiggle : (ஜிகிள்) ஒளிபரப்புச் செய்தி நிகழ்ச்சியில் விரும்பத்தகாத ஒரு செயலாகிய செய்தி வாசிப்பவரால் வாசித்து விளக்கப்படுவதற்குப் பதிலாகத் தொலைக்காட்சித் திரையில் காட்சியாக மட்டுமே காட்டப் படுதலைக் குறிக்கும் மதிப்புக் குறை வான சொல்.

Jim dash : (ஒரு சிறிய இடைக்கோடு அல்லது ஒரு சிறு கோடு) முன்பு செய்தித் தலைப்பின் அடுக்குகளுக் கிடையேயும் ஒரு செய்திக் கதைக்கும் அதன் தொடர்ச்சிகளுக்கிடையேயும் ஒரு கோடு பயன்படுத்தப்பட்டது. இக்கோடு பொதுவாக 3 'எம்' கள் (ems) நீளமுடையதாக இருக்கும். சில சமயங்களில் இது ஒரு 'short dash' என்றும் அல்லது ஒரு '3 em dash' என்றும் அழைக்கப்படுகிறது.

Jingle : (சலங்கைக் கதிர்) வானொலி ஒலிபரப்பில் மிகக் குறுகிய ஒரு சில நிடங்களில் ஏதாவதொரு மையக் கருத்தைப் பாடல் மூலம் விளக்கிக் காட்டும் நிகழ்ச்சி 'ஜிங்கிள்' எனப்படுகிறது. அகில இந்திய வானொலியினர் தமிழில் "சலங்கைக் கதிர்" என்று இந் நிகழ்ச்சியை அழைக்கின்றனர்.

Job press : (சிறு பணி அச்சகம்) வணிக நோக்கிலான வெளியீடு களை அச்சிடும் அச்சகம். அழைப் பிதழ்கள், சிறு சிறு அறிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள், வாணிகம் தொடர்பான நோட்டுப் புத்தகங்களில் அச்சிடப்பட வேண்டிய பகுதிகள், சுவரில் ஒட்டப்படும் விளம்பரங்கள் போன்றன இங்கு அச்சிடப்படும். பெரிய படைப்பிலக்கியம், அகராதிகள் போன்ற சிறப்புப் பணி சார்ந்தன இங்கு அச்சிடப்படமாட்டா. 'Jobbing Printer' என்றும் குறிப்பிடப்படும்.

Joint : (இணைப்பு) அச்சுப் பெட்டியில் முன்னும் பின்னும் நகர்த்தக்கூடிய இணைப்பு.

Journalism : (இதழியல் துறை அல்லது பத்திரிகைத்துறை) 'இதழியல்' என்ற சொல் ஆரம்ப காலத்தில் பத்திரிகைகளுக்கு-குறிப்பாக அன்றாடம் வெளிவரும் செய்திப் பத்திரிகைகளுக்கு எழுதுவதை மட்டும் குறிப்பதாக இருந்தது. நாளடைவில் இந்தச் சொற்றொடரின் பொருளும் ஆழமும் விரிவுபட்டு பரந்துபட்டு வெகுஜன தொடர்புக்கான செய்தி களையும் பார்வைகளையும் தொகுத்து சமூக உணர்வுகளைத் தட்டியெழுப்பும்

சமுதாயத்தின் முக்கிய அங்கம் எனக் கூறத்தகும் அளவு மாறியது. வானொலியும் தொலைக்காட்சியும் உருவானபோதே மின்னணு இதழியல் (Electronic Journalism) உருவாகி விட்டது. பத்திரிகைகளோ வானொலியோ தொலைக்காட்சியோ எதானாலும் அவை ஆற்றும் பணி இதழி யலின் பரந்துபட்ட வரையறுப்புக்குள் அடங்குவதே.

Journalist : (இதழாளர் அல்லது பத்திரிகையாளர்) பொதுவாக பத்திரிகையில் பணியாற்றும் ஆசிரியர் குழுவினர். செய்தியாளர்களைக் குறிக்கும் சொல்.

Jump : (தாவு செய்தி) ஒரு செய்திக் கதை அப்பக்கத்தில் முடியா மல் அதன் தொடர்ச்சி வேறு பக்கத்திற்கும் சென்று அமையுமானால் அவ்வாறு தொடரப்பட்ட செய்தி 'தாவு செய்தி' ஆகும். ஆனால் ஒரு செய்தி அதே பக்கத்திலேயே வேறு ஒரு பத்தியில் தொடர்ந்து அமைக்கப்பட்டு அப்பத்தி யில் முடியுமாயின் அச்செய்தி தாவு செய்தி அன்று. தாவு செய்திக் கதை 'Jump story' என்றும் குறிப்பிடப் படும். முதல் பக்கத்தில் அமைந்து செய்திக்கதை அங்கேயே முடியாத போது முடியாத இறுதிப்பகுதியில் ஒரு 'தாவு-வரி' (jump-line) கொடுக்கப் பட்டிருக்கும்.

சான்று : 1) Continued on page-6.

2) See FIRE, Page-3.

மேலும் உள்ளே கொண்டு செல்லப் பட்ட பகுதி ஒரு தாவு செய்தித் தலைப்பை அல்லது வரியைக் கொண்டு ஆரம்பிக்கும்.

சான்று : Continued from page 1.

Jump cut : (தாவு வெட்டு) தொலைக்காட்சி ஒளிபரப்பில் படம் ஓடிக்கொண்டிருக்கும்போதே ஒழுங் கற்ற அல்லது செயற்கையான அசைவு தொடர்ச்சியாக ஏற்பட்டால் அது 'தாவு வெட்டு' ஆகும். தொலைக்காட்சி ஒளிபரப்பில் இது விரும்பத்தகாத கூறு. ஒரே நபர் அல்லது ஒரே காட்சி திடீ ரென வெட்டப்பட்டு அந்த நபர் அல்லது அந்த காட்சியை ஒரு நிலையிருந்து மறுநிலைக்கு அடுத்தடுத்த காட்சி களில் காட்டுவது இத்தகைய முறை. இதனால் படத் தொடர்ச்சி பாழாகும்.

Jump head: (தாவு செய்தித் தலைப்பு) ஒரு செய்தியின் தொடர்ச்சி அடுத்த பக்கத்தில் இடம்பெறும்பொழுது அந்த அடுத்த பக்கச் செய்திக்கு மேல் தலைப்பின் ஒரு பகுதியை அமைப்பது வழக்கம். அதற்குத் தாவு செய்தித் தலைப்பு என்று பெயர்.

Jump line: (தாவு வரி) ஒரு செய்தியின் தொடர்ச்சி அடுத்த பக்கத்தில் அல்லது வேறு பத்தியில் அமையும்போது முதல் செய்தியின் இறுதி வரியில் தரப்பட்ட '3ம் பக்கம் பார்க்கவும்', '8ம் பத்தியில் பார்க்கவும்' என்பன போன்ற அடையாளக் குறிப்புக்கள் 'தாவு-வரி' எனப்படும்.

Justification : (இடைவெளி நிரப்புதல் அல்லது சரிசெய்தல்) 1) வரிகளில் உள்ள எழுத்துக்கள் மற்றும் இரு வரிகளுக்கிடையேயுள்ள இடைவெளி களை நிரப்பும் பணி ; வரி வார்ப்பு இயந்திரம் தானே இயங்கி வரிகளைத் தேவையான விதத்தில்-இடைவெளி களை அகலப்படுத்துதல் மற்றும் எழுத்துக்களுக்கிடையேயுள்ள இடை வெளிகளை அதிகப்படுத்து தலின் மூலம் இடைவெளிகளை நிரப்புகிறது. கணிப் பொறிகள் வரிகளை மின்னணு முறையில் நிரப்புகிறது. 2) கணிப்பொறி அடிப்படையிலான அச்சுமுறையில் இடைவெளி நிரப்பும் பணியைச் செய்வதற்காக உள்ள அமைப்பு முறை இவ்வாறு குறிப்பிடப் படுகிறது.

Justify : 1. (செய்தி முடிவுக் கோடு), 2. (சரி செய்தல்). 1) செய்தி முடிவடைவதை உணர்த்தும் கோடு. 'கட் ரூல்' (Cut rule) என்றும் குறிப்பிடப்படும். 2) அச்சுக்கோர்க்கும் போது வரிகளுக்கு அல்லது பத்திகளுக்கு அல்லது பக்கங்களுக்கு இடையேயுள்ள பகுதிகளைச் சமப்படுத்துவது. ஒரு பத்தியை அல்லது வரிகளைச் சரியான நீளத்திற்கு அதனிடையேயுள்ள இடைவெளிகளை ஒழுங்குபடுத்திச் சரி செய்வதற்கு எல்லாப் பத்திகளையும் அல்லது வரிகளையும் சம நீளத்திற்குக் கொண்டுவரும் பொருட்டு மெல்லிய உலோகச் சட்டங்கள் (thin leads) வரிகளுக்கிடையே செருகப்படுகின்றன. இவ்வாறு இடைவெளியைச் சரிப்படுத்துதல் பக்கம் தெளிவாகவும் ஒழுங்காகவும் அமையும் பொருட்டே ஆகும். பக்கம் அடைத்துத் தெரியாமல் இருக்க இது உதவும். ஒரு வரியில் அதன் சொற்களுக்கிடையேயான இடைவெளியும் எழுத்துக்களுக் கிடையேயான இடைவெளியும் சமமாக இருக்கச் செய்வதன் மூலம் அதன் இடைவெளி சரி செய்யப் படுகிறது.

Justo-writer : (தட்டச்சுத் துளையீடு) தட்டச்சுப் பொறி நாடாவில் எழுத்துக்களுக்குப்பதில் எழுத்துக் குறிகளைத் துளையிடும் இயந்திரம்.

Juxtaposition of shots : (எதிர் பொருள் படக் காட்சிகள்) ஒளிபரப்புக் காட்சி அமைப்பில் அடுத்தடுத்து வெவ்வேறு பொருள்களை விளக்கும் வகையில் காட்சிகள் எடுக்கப்படுதல் உண்டு. காட்சிகளுக்குள் ஒரு தொடர்பினை அக்காட்சியினைப் பார்க்கும் நேயர் உணரவும் இரண்டையும் அவர் ஒப்பிட்டுப் பார்க்கவும் இரண்டனுக்கும் உள்ள ஒற்றுமையை அல்லது வேற்றுமையை அவர் உணரவும் இம்முறை உதவும். சான்றாக, ஒரு பெண்ணின் முகத்தையும் அடுத்தே சூரியகாந்திப் பூவையும் காட்டி இரண்டன் மலர்ச்சியையும் ஒப்பிட்டு உணரச் செய்தல்.

Juxtaposition of sounds : (ஒலி மாறுபாட்டமைவு) ஒலி மாறுபாட்டமைவு என்பது பல்வேறு ஒலிகளை ஒரே நேரத்தில் அறிமுகப்படுத்தி அவ்வொலி வரும் தூரத்தைக் கேட்போர் பிற ஒலிகளிலிருந்து திட்டமாக்குதலும் ஒலியின் தரம், திசை, அளவு, சுரம் முதலியவற்றின் வேறுபாட்டை இனங்காணவும் வைத்தல் ஆகும். சான்று : வானொலி நிகழ்ச்சியில் காற்பந்து அரங்கில் அறிவிப்பாளர் ஒலி, அரங்க ஒலி, வாத்திய இசை மூன்றையும் எழுத்துப் படிவத்தில் (script), கொண்டுவர வேண்டும். மூன்றையும் உருவாக்கினால்தான் முழுக்காட்சி உருவாகும். மூன்றும் தங்களிடமிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன என்பதை உணர்ந்து கேட்போர் சூழலை உணர்வர்.

K

K : (கணிப்பொறியின் நினைவாற்றல் திறன் அளவு) ஒரு கணிப்பொறியின் நினைவாற்றலின் திறன் குறித்த அளவு. ஒரு 8K கணிப்பொறி 8000 பிட்ஸ்களைச் (8000 bits) சேமித்து வைக்கக் கூடியது.

Karnatic music programmes : (கர்நாடக இசை நிகழ்ச்சிகள்) வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலி, ஒளிபரப்பில் அமையும் கர்நாடக இசை நிகழ்ச்சிகள்.

Keep down : (சிற்றெழுத்தில் அடுக்குக) சிற்றெழுத்துக்களில் இச்செய்தியை அமைத்துப் பக்க உருவாக்கம் செய்க என்று கூறும் ஆணை.

Keep-in : (குறுக்குக) 1) குறிப்பிட்ட இடத்திற்குள் செய்தியை அமை. 2) வார்த்தைகளுக்கு இடையே உள்ள இடைவெளிகளைக் குறுக்கு.
சான்று : பத்துப்புள்ளி எழுத்துக்களைக் கொண்ட ஒரு வாக்கிய அமைப்பு குறிப்பிட்ட இடத்திற்குள் அடங்காத பொழுது, எழுத்துக்களையும் இடைவெளிப் புள்ளிகளையும் ஒன்பது புள்ளியில் அச்சுக்கோர்த்துக் குறிப்பிட்ட இடத்திற்குள் அமைக்கச் சொல்லி அச்சுக் கோர்ப்பவருக்குக் கொடுக் கின்ற குறிப்புச் சொல்.

Keep standing : (கையிருப்பு எழுத்து) குறிப்பிட்ட எழுத்துவகை இல்லாத போது கையிருப்பில் இருக்கின்ற எழுத்து வகையில் இச்செய்தியை ஆக்குக என்று குறிக்கும் ஆணை.

Kerning : (நிரப்புதல்) இடம் கருதியோ கலைத் தன்மையுடனான அழகு கருதியோ எழுத்துக்களை மிக நெருக்கமாக நிரப்புதல் ; சான்றாக தடித்த எழுத்தான W அதற்கும் அதற்கடுத்த சிறிய அளவிலான எழுத்துக்கும் இடையில் தேவைக்கும் அதிகமான இடம் இருக்குமாறு செய்துவிடுகிறது.

தலைப்புச் செய்திகளை ஒவ்வொரு எழுத்து எழுத்து எழுத்தாக ஒட்டும் முறையில் இத்தகைய நெருக்கமாக நிரப்பும் முறை திருத்தம் செய்வதற்கு எளிதாகிறது. ஆனால் ∴பௌண்டரி டைப் (foundary type) எழுத்தில் இது முடியாததாகி விடுகிறது. கணிப்பொறி நிகழ்ச்சிகள் எந்த வடிவமாயினும், எந்தவகை எழுத்தாயினும், எக்குடும்ப எழுத்தாயினும் சரி, கலைத் தன்மை என்ற காரணங்களைத் தவிர பிற காரணங்களுக்காக நேர் எதிர் முறையில் இடைவெளிகளை நிரப்புகிறது. எழுத்துப்படி பொருத்தலுக்கு (Copy fitting) இடைவெளி நிரப்புதல் பயன்படுத்தப் படலாம். மேலும் ஒரு அழுத்தமான அல்லது எளிய வண்ணப் பின்னணி கிடைக்கவும் இது உதவும்.

Key light : (ஆதார விளக்கு) பொருளை ஒளிரச் செய்யும் பண்புடைய விளக்கு ஆதாரம். மிகுந்த ஒளியுடைய விளக்குகள் பொதுவாக ஆதார விளக்குகளாகப் பயன் படுத்தப் படுகின்றன.

Key line : (குறிப்புக் கோடு) 1) ஓவியத்தின் கோட்டு உருவம். 2) ஒரு படத்தின் கனபரிமாணத்தைக் காட்டும் வெளிக்கோடு 3) பிளாக்கின் அகலம், உயரம் ஆகியவற்றைக் குறிக்கும் கோடு.

Key note lead : (கரு வெளிப்பாட்டு முகப்பு) பயன்பாட்டில் அதிகமுள்ள

முகப்பு. தலைகீழ் பிரமிடு முறையில் கூறப்படும் செய்திகளில் இது கட்டாயம் தேவைப்படும் முகப்பு. இங்கு முதன்மை வகிக்கும் கரு முகப்பின் முதல் பகுதி யிலேயே வெளிப்படுத்தப்படும்.

சான்று : மனித உறுப்புக்களைப் பணத்திற்காக விற்கத் தடைசெய்யும் சட்டம் நேற்று முதல் அமலுக்கு வந்தது. (தினமலர், 5-2-95, பக் : 1)

Kickers : (மேல் வரி) ஒரு செய்தித் தலைப்பின் மேல் உள்ள பகுதியில் செய்திக் கதையின் சுருக்கத்தையும் அதன் ஆர்வமூட்டும் ஒரு பகுதியையும் இனங்காட்டும் வகையில் அமையும் மேல்வரி 'Kicker' எனப்படும். 'Overline' என்றும் கூறப்படும். (நாளேடு அலுவலகங்களில் இதனை 'Shoulder' எனக் குறிப்பிடுகின்றனர்.) பல வருடங்களாக மேல்வரிச் செய்தித் தலைப்பு பயன்படுத்தப்படுகிறது. முதலில் அது எப்போதாவது அல்லது சில குறிப்பிட்ட வரையறைக் குட்பட்ட சூழல்களில் மட்டுமே பயன்படுத்தப் பட்டது. சில ஆசிரியர்கள் அது மிகக் குறைந்த அளவில் செய்திக் கட்டுரைகளுக்கு (feature stories) மேல் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று இன்னும் நம்புகின்றனர். பல நாளிதழ்களில் மேல்வரி பயன்படுத்தப் படுகின்றது. 'top line' இலிருந்து ஒரு பத்திச் செய்திவரை எல்லாவகைச் செய்தித் தலைப்புக்களிலும் பயன் படுத்தப்படுகின்றது. மேல்வரியின் பணி என்ன? முக்கியத் தலைப்புடன் அது எவ்வாறு பொருந்தவேண்டும்? என்றால், பொதுவாக பல வாசகர்கள் மேல்வரியை வாசிப்பதில்லை, ஆதலால் தலைப்பின் பொருளுடன் தொடர்பு படுத்த வேண்டியதே யல்லாமல் அதற்கு வேறு எப்பணியும் தரப்பட வேண்டிய தில்லை. எல்லா முக்கிய அடைமொழி களுக்கும் மேலாக அங்கு எதுவும் போடப்பட வேண்டியதில்லை.

சான்று :

இந்தியா முழுவதும்

டெலிபோன் ஊழியர்கள்
வேலை நிறுத்தம் தொடங்கியது.
போராட்டம் சட்ட விரோதம் என்று
மத்திய அரசு அறிவிப்பு
(தினத்தந்தி 20-6-95 பக் : 5)

Kill : (நீக்குக) ஒரு செய்திக் கதை முழுவதையுமோ ஒரு பகுதியையோ அது எழுத்துப்படியாக (Copy) இருக்கும்போதோ அச்சிடப்பட்ட பின்னரோ அப்பகுதியை அடித்து வேண்டாம் என நீக்கிவிடுதல். வெளியிடாதே ; செய்தியை வெளி யிடக் கூடாது என்ற பொருளில் சொல்லப்படும் சொல். எழுத்துக் களைக் கோர்க்கும்பொழுது அந்த வார்த்தையில் தேவை யற்ற ஒரு எண் அல்லது வேறோர் எழுதது இடம் பெற்றிருப்பதைச் சுட்டி அதை நீக்கச் சொல்வதற்கும் பயன்படுகிற குறிப்புச் சொல்.

Killed edges : (தூசு தடுப்புப் பூச்சு) புத்தக விளிம்புகளில் பூசப்படும் தங்க வண்ணப் பூச்சு. இது புத்தகத்திற்குள் தூசு படியாமல் தடுக்கக் கூடியது.

Kill fee : (நீக்கு செய்திக் கட்டணம்) சுதந்திர எழுத்தாளர் எழுதி ஏற்கனவே வெளியீட்டுக்கு ஒத்துக்கொள்ளப்பட்ட ஒரு செய்தி வெளியிடப்படாது பயன்படுத்தப்படாமல் போகும்போது அவருக்குத் தரப்படும் கட்டணம்.

Kill it somewhere : (வெற்றிடத்தை அதிகமாக்குக) அதிக வெற்றிடம் விடவும் என்று அச்சுக்கோர்ப்பவருக் குக் கொடுக்கப்படுகின்ற குறிப்பு.

Kilo : (ஆயிரம் என்ற எண்ணிக்கை) ஒரு நொடிக்குரிய வானொலி ஒலி

அலைகளின் அளவை 'கிலோ ஹெர்ட்ஸ்' எனப்படும்.

Kilowatt : (கிலோ வாட்) மின் விசையின் ஓர் அலகு. ஒரு வோல்ட் மின் அலகு அழுத்தத்தின் கீழ் ஒரு அம்பியர் அளவு மின்னோட்டத்தால் செய்யப்பட்ட வேலை ஒரு வாட் எனப்படும். ஒரு கிலோவாட் என்பது ஓர் ஆயிரம் வாட்ஸ் கொண்டது.

Kinescope : (படக் குழாய்) நேரடிப் பார்வையாலோ அல்லது தளத்திலிருந்து தளமீது படிவிக்கப்படும் எறிவுப் படிவினாலோ (projection) படத்தைப் பெறும் படக் குழாய்க்கு உரிய வியாபாரப் பெயர். திரைப்படத் தயாரிப்பிலும் இது பயன்படுகிறது. இக்குழாய் 'Kinnie' என்றும் அழைக்கப்படும்.

L

L : (உள்ளூர் நிகழ்ச்சிகள்) வானொலி நிலையத்தார் வானொலி ஒலிபரப்பில் உள்ளூர் நிகழ்ச்சிகளைச் சுருக்கமாக இவ்வாறு அழைப்பர். பொதுவாக இந்நிகழ்ச்சிகள் மொத்த ஒலிபரப்பு நேரத்தில் 50 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட நேரமுடையனவாயும் நேரடி ஒலிபரப் பினவாகவும் உள்ளூர் நிலையத் தயாரிப்புக்களாகவும் இருக்கும்.

Label head: (பெயர்த் தலைப்பு) வினைச்சொல் இல்லாத ஒரு தலைப்பினைக் குறிக்கும். பொதுவான பகுதியைக் குறித்து நிற்பதால் இத் தகைய தலைப்புக்கள் உயிரோட்ட மில்லாதவையாய் சாதாரணமானவாய் அமையும். சான்றாக ஜோதிடம், விளையாட்டுப் பகுதி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

Laminate : (மெல்லிய பிளாஸ்டிக் பூச்சு) தாளுக்கோ அட்டைக்கோ பாது காப்பளிக்கும் வகையில் கொடுக்கப் படும் ஒளி ஊடுருவக்கூடிய பிளாஸ்டிக் மேல் பூச்சு, அழுத்தம் இரண்டின் இணைப்பு.

LASER : (அடர்த்தி ஒளிக்கற்றை) மின்காந்த அலைகளால் பரப்பப்படும் ஆற்றல் வெளிப்பாட்டின் தூண்டுதல் மூலம் ஒளியைப் பெருக்குதல் என்ற பொருள்படும் "Light Amplification By Stimulated Emission Of Radiation" என்ற சொற்றொடரின் முதலெழுத்துச் சுருக்கம்.

Laser news : (லேஸர் முறைச் செய்தி) ஒளிக்கற்றைத் தொழில்நுட்பத்தால் பக்க வடிவமைக்கப்பட்ட நாளிதழ்ச் செய்தி.

Laser technology : (அடர்த்தி ஒளிக்கற்றைத் தொழில்நுட்பம்) 1) நிழற்படங்களை அனுப்புவதற்கு (AP லேசர் போட்டோவில் உள்ளது போல) உரிய ஒரு ஊடுருவித் திட்டம். 2) எழுத்துக்களை வருவித்துச் செய்தியைத் தானியங்கு அச்சுக் கோர்ப்பு இயந்திரத்திற்கு மாற்றும் வகையில் வலமிருந்து இடம் நகரும் ஒரு திட்டம். 3) ஒரு பக்கம் முழு வதையுமே ஊடுருவிப் பிரதி எடுப்பதற் குரிய வழிமுறை : இவ்வாறு ஊடுருவச் செய்தல் செய்தித்தாளின் முழுப்பக்க மாதிரித் தகடுகளைத் (page plates) தயாரிப்பதற்கும் அடர்த்தி ஒளிக்கற்றை களைப் பயன்படுத்தி ஒரு தகட்டினை நேரடியாக வெட்டி எடுப்பதற்கும் உதவும்.

Latto : (வார்ப்பு இயந்திரம்) கையால் கோர்க்கப்பட்ட தலைப்பு எழுத்துக் களை ஒரே அச்சாக வார்க்கும் இயந்திரம்.

Lay on : (ஏற்பாடு செய்தல்) 1) செய்திப் பரப்பை அல்லது செய்தி வீச்சினைத் தீர்மானித்தல் 2) ஒலிபரப்பு எல்லை ஏற்பாடு.

Lay out : (பக்க வடிவமைப்புத் திட்டம்) செய்திகளைக் குறிப்பிட்ட ஒழுங்கு முறைக்குட்படுத்தி வைத்தல். 1) ஒன்றனைப் பற்றிய செய்திக் கதைகள், படங்கள், வரைபடங்கள் முதலிய வற்றின் பொருத்தம். 2) படங்கள் அல்லது அதுபோன்ற பிற கலைப்படைப் புக்களை வரிசைப்படுத்தி ஒழுங்கு படுத்தி வைத்தல். இதிலிருந்து தேவைப்படும் ஒரு பகுதியின் பிரதி ஆக்கிக் கொள்ளப்படும். 3) பக்க வடிவமைப்பு அல்லது மாதிரிப் பக்க

அமைப்பு (dummy). தன் பத்திரிகையின் ஒவ்வொரு பக்கமும் என்ன மாதிரியில் உருவாக வேண்டுமென்பதை வடிவமைப்பது (lay out) பத்திரிகையின் வளர்ச்சிக்கு உயிர்நாடி ஆகும். வரைந்தோ அல்லது ஒட்டப்பட்டோ ஆக்கப்பட்ட இப்பக்க வடிவமைப்பு மாதிரி ஒரு அச்சீட்டாளர் ஒரு பக்கத்தை உருவாக்குவதற்குப் பின் பற்றற்கு உரியது.

Lazy arm : (தாங்கிகள்) ஒலிவாங்கி களைத் தாங்கும் நீள் கம்பிகள்.

Lead : (செய்தி முகப்பு) செய்தியின் சாரம். ஒரு செய்தியின் சாரமாகச் செய்தியின் முகப்பில் வைக்கப்படும் செய்தி. செய்தி முகப்பு ஒரு தொட ராகவோ ஒரு பத்தியாகவோ அல்லது பல பத்திகளாகவோ செய்தியின் தொடர்புடைய சிக்கல்களைப் பொறுத்து அமையும். செய்தி முகப்பு தொலைக்காட்சிச் செய்தி நிகழ்ச்சி களில் 'முன் விளக்கமாக' இடம் பெறுகிறது. இது ஆர்வத்தைத் தூண்டும் கூறு. இதனைத் தொடர்ந்து செய்தியின் உடற்பகுதி இடம் பெற்றிருக்கும். என்ன, எங்கே, எப்பொழுது, ஏன், எப்படி என்ற அய்ந்து 'எ' யார் என்ற ஒரு 'யா' முதலியன இதழியலில் செய்தி முகப்பில் விளக்கம் பெறும். ஒலிபரப்புச் செய்தியில் இவையனைத்தும் செய்தி முகப்பில் இடம்பெறக் கூடாது. அப்படி இடம்பெற்றால், அப்பகுதியின் செய்தி அளவு அளவுக்கதிகமானதாகிவிடும். கேட்பதன் மூலம் தனி நபர் நிறையச் செய்திகளை வேகமாகத் தொடர்ந்து கவனிக்க முடியாது. எதைப்பற்றிய செய்தி என்று நேயர் இன்னும் தீர்மானிக்க முடியாத நேரத்தில் நேயரது கவனத்தை ஈர்ப்பது முன் விளக்கத்தின் நோக்கமாதல் வேண்டும். எனவே இந்த ஆறு கூறுகளில் நிகழ்ச்சியோடு தொடர்பு டைய மூன்று கூறுகளைப் போட்டு எழுத வேண்டும். அவை செய்தியின் உள்ளடக்கம், நடை முதலியவற்றோடு தொடர்புடையதாய் இருக்க வேண்டும். ஒருவரது பேச்சு தொடர்பான செய்திக்கதை (speech story) யில் அவரது பேச்சில் ஆர்வமூட்டும் பகுதி செய்தி முகப்பில் கூறப்படும். பேச்சின் சாரத்தைச் செய்தி முகப்பு விளக்கி வாசகரை அச்செய்தியை வாசிக்கத் தூண்டுவதாய் அமையவேண்டும். செய்திக் கதைக்கு ஒரு காட்சி ஜன்னலாகச் செய்தி முகப்பு செயல்பட வேண்டும். இது தெளிவாகவும் சுருக்கமாகவும் ஆர்வத்தைத் தூண்டு வதாகவும் தொகுத்துக் கூறப்பட்டி ருக்க வேண்டும். நிருபர் தனது விருப்பப்படி அல்லாமல் வாசகர் அவற்றை எவ்வாறு விரும்புகிறாரோ அப்படி எழுதவேண்டும். வாசகர் மீது முகப்பு ஏற்படுத்தும் தாக்கத்தை மனதில் கொண்டு அதாவது மொத்தச் செய்திக்கதையில் முக்கியமானவற்றை முகப்பு தெரிவிக்கிறதா? தலைப்பு கூறப் பட்டுள்ள முறையுடன் அது இணைந்து போவது எவ்வாறு? என்பதைக் கொண்டும் ஆசிரியர் செய்தி முகப்பு சரியாக இருக்கிறதா? என்று மதிப்பிடுவார்.

Lead : (லெட்) 'லெட்' என்று உச்சரிக்கப்படும்போது இச்சொல்-ஒரு மெல்லிய உலோக நீள்வரித் துண்டைக் (strip) குறிக்கும். இது 1 முதல் 4 புள்ளிகள் வரை வெவ்வேறு அளவுகளில் இருக்கும். அதன் தடிமன் பொதுவாக 2 புள்ளிகள் (2 points) உடையதாக இருக்கும். அச்சுக் கோர்க்கப்பட்ட வரிகளுக்கிடையே உள்ள வெற்று இடத்தை நிரப்பப் பயன்படும். கூடுதல் இடம் தேவைப் படும்போது இவை வைக்கப்பட்டு பக்கம் கட்டப்பட்டு அச்சிடப்படும்.

Leaders : 1. (புள்ளி வரிசை), 2. (தலையங்கம்), 3. (ஒளிநாடா முன்பகுதி). 'லீடர்ஸ்' என உச்சரிக்கப்படும். 1) புள்ளிகள் வரிசையாக அமையும் அச்சுக்கோர்ப்பு முறை. வாசகன் கண்களுக்கு வழி காட்டும் வண்ணம் அட்டவணை போன்றவற்றில் அடிக்கடி பயன்படுத்தப் படும். 2) ஒரு பத்திரிகை தன் கருத்தை வெளியிடும் தலையங்கப் பகுதியைக் குறிக்கும். 3) ஒளி நாடாவில் முதல் காட்சித் தொகுப்புக்கு முன்பாக உள்ள நாடாப் பகுதி. பொதுவாக வினாடிகள் கணக்கில் அளவிடப்படும்.

Leading : (இடைவெளி விடல் அல்லது சமன்படுத்துதல்) 'லீடிங்' என்று உச்சரிக்கப்படுகிறது. கணிப் பொறிக்குட்படுத்தப்பட்ட அச்சுக் கோர்ப்புக்கு முந்திய கால அச்சுக் கோர்ப்பில் வரிகளுக்கிடையே உள்ள இடைவெளிகளை அதிகப்படுத்து வதற்கும் பத்திகளைச் சமன்படுத்து வதற்கும் உலோகத்தாலான மெல்லிய நீள்வரித்துண்டை (லெட்) வரிகளுக் கிடையே செருகும் முறை இடைவெளி விடுதல் அல்லது சமன்படுத்துதல் (லீடிங்) எனப்படும். அதேபோல் கணிப் பொறி அடிப்படையிலான போட்டோ டைப் செட்டிங்கில் வரிகளுக்கிடையே உள்ள இடைவெளியை எக்காரணம் கருதியாவது அதிகப்படுத்துமாறு செய்வதற்கு அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

Lead sheet : (முதன்மைச் செய்தி) வானொலிச் செய்தி அறிக்கையில் இடம்பெறும் முக்கிய முதன்மையான செய்திக்கதை lead story அல்லது lead sheet என்று கூறப்படும். sheet story எனவும் குறிப்பிடப்படும்.

Lead to come : (முகப்பு வர இருக் கிறது) செய்தித் தயாரிப்பிற்குப் பின்னர் செய்தி முகப்பு அனுப்பப்படும் என்பதை அச்சுக்கோர்ப்பாளருக்குத் தெரி விக்கும் வகையில் எழுத்துப்படியில் குறிக்கப்படும் குறிப்புச் சொல். நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு நிகழ்ச்சி குறித்து இவ்வாறு முகப்பு எழுதுவது நிறுத்தி வைக்கப்படும். செய்திக்கதை குறித்த செய்திகள் வந்து சேரச்சேர செய்தி முகப்பு மாற்றி எழுதப்பட வேண்டிய தேவையைத் தவிர்ப்பதற்காக இவ்வாறு நிறுத்திவைக்கப்பட்டு இறுதியில் எழுதப்படும்.

Lede : 1. (அவ்வப் பக்க முக்கியச் செய்தி), 2. (கட்டுரை ஆரம்பம்). ஒரு பக்க அமைப்புத் திட்டத்தில் அடங்கிய மிக முக்கியமான பகுதி அல்லது ஒரு செய்திக் கட்டுரையின் ஆரம்பத்தைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் இதழியல் சொல்.

Legibility : (ஒழுங்கு அல்லது அச்சுத் தெளிவு) வாசிப்பை எளிமையாக்கக் கருதிப் படம் தந்தோ அல்லது தெளி வாக அச்சிட்டோ செய்தி தரப்படும்.

Length : (நிகழ்ச்சி நீளம்) வானொலி நிலையத்தின் நிகழ்ச்சிகளின் மொத்த வெளியீடு வழக்கமாகத் தனித்தனிப் பகுதிகளாக நீள அளவில் வேறுபடு வனவாக அமைகின்றன. ஒருசில வினாடி முதல் 3 மணித்துளிகள் வரை நிலைப்பன அறிவிப்புக்கள் (spots) என்று அழைக்கப்படுகின்றன. மிகப் பெரிய நீளம் உடைய பகுதிகள் நிகழ்ச்சிகள் என்றழைக்கப்படுகின்றன.

Length commercial : (நீள விளம் பரங்கள்) National Association of Broadcasts (NAB) என்று அழைக்கப்படும் அமெரிக்காவின் ஒளிபரப்புக் கழகம் தொலைக்காட்சி ஒளிபரப்பில் முதன்மை நேரம் (Prime Time) அல்லாத நேரத்தில் வணிக நோக்கு விளம்பரத்திற்கு ஏறக்குறைய 16 நிமிட நேரம் தரப்படலாம்என விதி வகுத்துள்ளது. பொதுவாக $\frac{1}{4}$ மணி நேர நிகழ்ச்சி 10 முதல் 12 நிமிடங்களும்,

$\frac{1}{2}$ மணி நேர நிகழ்ச்சி 21 முதல் 24 நிமிடங்களும் 1 மணி நேர நிகழ்ச்சி 42 முதல் 49 நிமிடங்களும் வருமாறு தயாரிக்கப்படலாம். மீதி நேரத்தில் விளம்பரங்கள் போடப் படலாம். இப்படி நிகழ்ச்சியைக் குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க வேண்டும் என்று விதிப்பது நாடகங்களுக்கும் நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சிகளுக்கும் தடையாக இருக்கும். அறிவிப்புக்களின் நீளம், விளம்பரங்களின் நீளம் இரண்டும் வேறுபடுகின்றன. பொதுவாக வணிக விளம்பரங்கள் 20-30-60 வினாடிகள் அமையும். எப்போதாவது 10 வினாடி வருமாறு அமையும். ஆனால் அறிவிப்புக்கள் 10 வினாடி அல்லது அதைவிட குறைவான நேரங்களில் அமையும். அறிவிப்புக்கள்தம் கருத்து, பொருள், சேவை முதலியவற்றிற்காக எவ்வித இலாபத்தையும் நோக்கமாகக் கொண்டவை அல்ல. தனது நேரம், சக்தி, பணம் முதலியவற்றைப் போட்டுச் செயல்படுபவை. வணிக விளம்பரங்கள் தனது பொருள், பணி முதலியவற்றை இலாபம் கருதி விற்கின்றன. சில விளம் பரங்கள் நேரடியாக அவற்றிற்கென விளம்பர நிறுவனம் பணம் தருவதில்லை யெனினும் வணிக விளம்பரங்களை ஒத்தவை.

Lens : (ஆடி) ஒரு காட்சியைச் சிறிதாகவும் தெளிவாகவும் ஓர் உருவில் காட்டப் பயன்படுவது ஆடி. சில ஆடிகள் ஒரு பொருளைத் தூரத்தில் இருப்பதுபோல் எடுத்துக் காட்டும். வேறு சில அண்மையில் இருப்பது போன்ற தோற்றத்தைக் கொடுக்கும். நாம் பயன்படுத்தும் ஆடிகளைப் பொறுத்து இவ்விதத் தோற்றங்கள் உண்டாகும். இப்போது பல்வேறு ஆடிகள் வந்து விட்டன. தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தயாரிப்பில் நிலையான பார்வை நீள ஆடி (fixed focal length lens), நெகிழ்வுப் பார்வை நீள ஆடி (variable focal length lens) என இருவகைப் பகுப்பிலடங்கும் ஆடிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் முதலது நிலையான காட்சி அம்சத்தையும் பின்னது காட்சிப் போக்கினைத் தொடர்ச்சியாக மாற்றியும் காட்டும். 1) முன்பு நான்கு வகை ஆடிகள் மட்டுமே வகைப் படுத்திக் கூறப்பட்டன. முன்பு ஒரு படக்காட்சி (shot) எடுப்பது கடின மாகவும் அதிக நேரம் பிடிப்பதாகவும் அமைந்தது. பழைய பெரிய அளவிலான பெருந்தட்ட காமிராவுடன் 4 குவிமையத் தூரங்கள் (focal lengths) தயாராக இருந்தன. அவற்றில் பொருளை நோக்கிக் காமிரா செல்லுதல் என்பதற்கு அவசிய மிருந்தது. எனவே அதிக நேரம் அவசியப்படல், விரும்பப்படாத வகை யான படக்காட்சி முதலியன குறைந்த எண்ணிக்கை யுடைய குவிமையத் தூரத்தினால் அமைந்தன. 2) அதன்பின் நெகிழ்வு அசைவு முறை (zoom) ஆடிகள் வந்தன. குவிமையத் தூரங்கள் அதிக எண்ணிக்கையில் கிடைத்தால் இயக்குநர் நினைத்த காட்சித் தொகுப்பை (frame) உடனே எடுக்கலாம். ஒரு நெகிழ்வு அசைவு முறையே எல்லாவற்றையும் செய்ய முடியாது. 3) தூரத்தில் இருக்கும் இடங்களைப் படமெடுக்கச் சேய்மைப் படக்காட்சி (remote) ஆடி உதவியது. மிக நீள குவிமையத் தூரத்தால் தாழ்ந்த ஒளி அளவில் பணிபுரியச் சேய்மை ஆடிகள் உதவுகின்றன. 4) படப்பிடிப்பு அரங்கு சிறியதாக இருந்தால் அகன்ற கோணத்தில் எடுக்க ஒரு ஆடி தேவை. 'டாலி ஸ்டாண்ட்' (dolly stand) என்ற நகரும் மேடையை வைத்துப் பொருளின் பக்கவாட்டுத் தோற றத்தைப் படம் எடுக்கலாம். மிக அருகாமையில் எடுப்பதற்கு ஓர் ஆடி தேவை. ஒரே அளவிலான குவியத் தூரத்தை உடையனவும் வேறு வேறு அளவில் அருகாமைக் குவிமைய ஆற்றல் வாய்ந்தனவும் ஆகிய இரு

ஆடிகள் ஒரே பொருளை ஒரு வேறு பட்ட கோணத்தில் உருப்பெருக்கிக் காட்டும். இரண்டு ஆடிகளின் அருகாமை குவிமையத்துடன் இணைந்து சிறந்த உருப்பெருக்கமாக அமையும்.

Letter press: (தட்டை அச்சுப்பொறி) கையால் அச்சுக் கோர்த்துத் தட்டை அச்சுப் பொறி வாயிலாக அச்சிடும் முறை. (காண்க : Platen Press)

Letter printing : (எழுத்து அச்சீட்டு முறை) ஒரு உயர்வான பரப்பிலிருந்து தாளின் மீது மையைப் பரப்புவதன் மூலம் அச்சிடும் முறைக்கு இப்பெயர். இதுதான் ஆரம்பகால உண்மையான (original) அச்சுமுறை ஆகும். இம்முறையை 'letter press' என்றும் குறிப்பிடுவர்.

Letter space : (எழுத்து இடைவெளி) ஓர் அச்சுக் கோர்க்கப்பட்ட வரியில் எழுத்துக்களுக்கிடையே மிக மெல்லிய அளவில் இடைவெளி ஏற்படுத்து வதைக் குறிக்கிறது. எழுத்துக்களைப் போதுமான இடம் விட்டுக் கோர்ப்பது ; ஓர் எழுத்துக்கும் மற்றொரு எழுத்துக் கும் இடையே அதிக இடைவெளி விட்டுப் பக்க வடிவமைப்பு செய்வது உண்டு.

Letter to editor : (வாசகர் கடிதம்) நாளிதழ், சஞ்சிகை ஆசிரியர்களுக்கும் வானொலி, தொலைக்காட்சி நிலையங் களுக்கும் செய்தி பெறும் பொது மக்கள் ஆகிய வாசகர்கள் அல்லது நேயர்கள் எழுதும் கடிதம். நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகள், தம் ஊர் பிரச்சினைகள் போன்றன குறித்தோ அல்லது இதழில் வெளியான பகுதிகள்/ ஒலி ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் குறித்தோ நாளிதழ்/ஒலி ஒளிபரப்பு நிலைய ஆசிரியருக்குச் செய்தி பெறுவோர் கடிதம் எழுதுவது உண்டு.

Level of sentence difficulty : (சொற்றொடர் கடின அளவு) எளிய சொற்றொடர்கள் எழுத்தில் முதன்மை இடம் வகித்தால் அந்த படைப்பு வாசகனை ஈர்த்து அவன் அதனை வாசிக்கச் செய்யும் தன்மையுடைய தாகிறது. அதிக அளவு கலவைத் தொடர், கூட்டுத்தொடர், கூட்டு-கலவைத் தொடர்களை உள்ளடக்கியிருக்கும் எழுத்துக்களை விட இவை எளிதாக இருக்கும்.

Level of word difficulty : (சொற் கடின அளவு) பொருள் தரும் வகையில் பதிப்பித்தல் அவசியம். ஒரு சொல் கடினமானது என்பது 1) அது எழுத்து மொழியில் வரும் வருகை முறையின் எண்ணிக்கையைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படலாம். ஆசிரியரின் நோக்கத்தில் பார்த்தால் மக்களின் கவனத்தைப் பெரிதும் பெறும் பாப்புலர் படைப்புக்களிலும் அன்றாடப் பேச்சு மொழியிலும் அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படும் சொற்களை விட எப்போதாவது அருகி வரும் (அடிக்கடி வராத) சொற்கள் பொதுவாக வாசகனுக்கு அதனை உணர்வதில் அதிகக் குழப்பத்தை உண்டு பண்ணும். 2) சொற்களின் கடினத்தை அளவிட மற்றொரு தேர்வு அதன் அளவைப் பொறுத்துத் தீர்மானிப்பதாகும். ப்ளெஸ்க் என்பவரது பரிசோதனை யின்படி அதிக ஒட்டுக்களைப் (affixes) பெற்ற சொற்கள் மொத்தத்தில் மிகக் கடினமானவை ; மேலும் அவர் ஒவ்வொரு சொல்லிலும் உள்ள அசை களின் எண்ணிக்கையைக் கணக்கிடு கிறார். அதாவது நீளமும் சிக்கலும் அதிகமுடையதாக ஒரு சொல் இருப்பின் அது ஒரு சொல் என்றே கிரகித்துக் கொள்ளப்பட முடியாது என்பார். சான்றாக, implementation, cumbersome போன்ற சொற்கள் பல ஒட்டுக்களை உடையன ; அடிக்கடி வராதனவுமாகிய சொற்கள் என்பார்

அவர் : ஆனால் ஒட்டுக்களை எண்ணுதல் எல்லாவிடத்தும் பொருந்தாது. இச்சோதனையின் அடிப்படை ஒரு சொல்லில் அதிக ஒட்டுக்கள் இருந்தால் பொருள் விளங்காத் தன்மையின் அளவு அதிகமிருக்கிறது என்பதே. ஆனால் சொல்லின் குறியீடு சிறப்பாக அமைந்தால் பொருள் எளிதில் விளங்கும். மேலும் சொல்லின் பொருள் அனைவருக்கும் புரியும். 3) சில சிறிய சொற்கள் கூட நீளமான சொற்களை விட பொருள் மயக்கம் தந்துவிடு வதுண்டு. இத்தகைய சொற்கள் ஓரசைச் சொல்லாக இருப்பினும் விரிவான விளக்கத்துடன் சேர்ந்து செய்தித்தாளில் அமையாத வரை பயனளிப்பதில்லை. சொல்லின் கடினம் என்பதைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் ஒரு சொல்லின் அதிக வருகைமுறை இன்மை, அமைப்புச் சிக்கலின் அளவு, பொருட் புலப்பாட்டுத் தடை, அதன் சிறப்புத்தன்மை முதலிய வற்றைக் கொண்டு அளவிடலாம் என்பர்.

Libel: (எழுத்து மொழி அவதூறு) ஒருவரை வெறுப்பு, நகைப்பு, அவமதிப்பு முதலியவற்றிற்குட்படுத்தி அவரது சகமனிதர்களின் அவரைப் பற்றிய மதிப்பீட்டில் குறைவுபடுத்தி அதன் விளைவாக அவரை அவரது வியா பாரத்தில் அல்லது அவரைப் பற்றிய கணிப்பில் குறைவுபடச் செய்யும் எந்த ஒரு செய்தியும் அவதூறு (defamation) எனப்படும். ஒருவரை வாய்மொழி மூலம் இழிவுபடுத்துவது வாய்மொழி அவதூறு (scandel) என்றும் எழுத்தின் மூலம் அவமதிப்பது எழுத்து மொழி அவதூறு (libel) என்றும் கூறப்படுகிறது. எழுத்துமொழி அவதூறு என்பது எழுத்தின் மூலமாகவோ படங்கள் மூலமாகவோ கண்ணுக்குப் புலப்படும் எந்த வகையிலான கருத்துப் பரிமாற்றத்தினாலோ ஒருவரைக் குறைவுபடுத்தக் கூடிய தன்மைகளைக் கொண்டிலங்கும் அவதூறு ஆகும்.

எழுத்துமொழியிலான அவதூறு அச்சு, ஒளிபரப்பு மூலமாகத் தகவல் தொடர்பு சாதனங்களில் வெளியிடப்படலாம். தான் அவ தூறுக்குள்ளாக்கப்பட்டிருப் பதாகக் கருதுபவர் தான் தாக்கப்பட்ட தற்கெதி ராக மானநட்ட ஈடு கோரும் சூழல் களும் உண்டு. எழுத்து மொழி அவதூறு வழக்குக்கு எதிராகப் பத்திரிகைகளுக்கான பல சலுகைகள் உள்ளன. அவை : 1) நிரூபிக்கக்கூடிய உண்மை (the truth), 2) ஒரு அலுவலக நடவடிக்கையை முறையாகவும் உண்மையாகவும் எழுதலாம் என்ற சலுகை (privilege), 3) நெறிப்படி விமர்சிக்கலாம் என்னும் உரிமை (Fair comment and criticism). இச்சலுகை கள் ஒலி/ஒளிபரப்பு சாதனங்களுக்கும் பொருந்தும்.

Libertarian theory: (மக்கள் உரி மைக் கோட்பாடு) மக்கள் உரிமைக் கோட்பாடு (Libertarian Press Concept) பொதுவாக இங்கிலாந்திலிருந்தும் 17ஆம் நூற்றாண்டில் அமெரிக்கக் காலனிகளிலிருந்தும் உருவாகியது. சுதந்திரமாகக் கருத்தைத் தெரிவிக்கும் (Freedom of expression) பத்திரிகை வேண்டும் என்ற கருத்து உருவாயிற்று. சுதந்திர பத்திரிகை அதிகாரம் என்பது இதன் தத்துவமாக இருந்தது. மனிதன் ஒரு பகுத்தறிவுள்ள விலங்கு. அவனுக்கு இயற்கையான உரிமைகள் அவனுக்குள்ளேயே இயல்பிலேயே இருக்கின்றன என்ற நோக்கில் இக்கொள்கை அமைந்தது. மனிதனுக்குள்ள அத்தகைய உரிமைகளுள் ஒன்று உண்மையை வலியுறுத்துதலும் ஆற்றல்களிடையே குறுக்கிடுதலும் ஆகும். அரசு தொடர் பான ஆற்றல்கள் கட்டுப்படுத்தப்படும் அல்லது கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பது இக்கொள்கை. 17ஆம் நூற்றாண்டிலும் அதைத் தொடர்ந்த 200

ஆண்டுகளிலும் இக்கொள்கை சார்ந்த இயக்கத்தின் பகுதிகளாக விளங்கியவர்கள் ஜான் மில்ட்டன், லாகே, எர்ஸ்கின், தாமஸ் ஜெ.'.பர்ஸன், ஜான் ஸ்டூவர்ட்மில் ஆகியோர் ஆவர். தனிமனித சுதந்திரம் என்பது இவர்களால் வலியுறுத்தப்பட்டது. அதோடு கருத்துச் சுதந்திரம் நிலவும் சூழலில் அல்லது மக்களின் அறிவுபூர்வமான தீர்ப்புக்களின் மீது நம்பிக்கை வேண்டும் எனறு கூறினர். ஏனெனில் ஒரு செய்தியைப் பெறுவோன், இது சரிதானா அல்லது தவறா என்று பகுத்தறியும் அறிவைப் பெற்றிருக்கிறான் என்பது இவர்தம் கொள்கை. இதன் அடிப்படையில், மக்கள் உரிமைப் பத்திரிகை, உண்மையை வெளியிடும் நோக்கில் பணிபுரியும். எவ்வளவுதான் கடின முயற்சி செய்து உண்மையை வெளிக்கொணர்ந்தாலும் அக்கருத்திலும் பன்மைவாதம் இருக்கும். பத்திரிகை புறச் சூழலிருந்து சில அதிகார வர்க்கங்களால் கட்டுப்படுத்தப் பட்டால் உண்மையை வெளிக் கொணரும் பணி முடியாததாகிவிடும் என்பது இக்கொள்கையின் நம்பிக்கை.

Library : (நூலகம்) தகவல் சேகரிப்பிற்குரிய எல்லா வகையான விபரங்களையும் (நூல்களையும்) மற்றும் செய்தித் தாளிலிருந்து வெட்டிச் சேகரித்து வைக்கப்பட்டுள்ள படங்கள், செய்திகள் முதலான வற்றையும் சேமித்து வைத்திருக்கும் ஓர் அமைப்பு. (காண்க : Morgue)

Lift : (தூக்கு) 1) அச்சிடப்பட்ட பகுதியை ஒரு பதிப்பிலிருந்து அடுத்த பதிப்பிற்கு வேறு இடத்திற்கு மாற்றி விடுதல். 2) ஒரு செய்திக் கதையைத் திருடுதல்.

Ligature: 1. (ஒரு குடும்ப எழுத்துக்கள்), 2. (சுருக்கக் குறியீடுகள்). 1) ஒரே தன்மைகளை உடையனவாய் உருவாக்கப்பட்ட ஒரு குழு எழுத்துக்கள். ff, fi, ffi, போன்றன இவ்வகைக்கு எடுத்துக் காட்டு. அச்செழுத்துக்களின் இரண்டு அல்லது மூன்று இணைந்த இயல்புகளைக் கொண்டனவும் அடங்கும். *சான்று :* æ, Æ.
2) செய்தி நிறுவனங்களைக் குறிக்கும் AP, UPI போன்ற சுருக்கெழுத்துக்கள். பொதுவாக இதுபோன்று ஒரு வார்த்தையைச் சுருக்கி எழுதும் முறை ஆங்கில மொழியில்தான் பெரும்பாலும் நடைமுறையில் உள்ளது.

Light box : (ஒளி மேசை) படத்தின் நெகட்டிவ்களைத் திருத்தி அமைக்க ஏதுவான முறையில் கண்ணாடி பொருத்தப்பட்ட மேசை. நெகட்டிவ்வில் போதுமான வெளிச்சம் படும் வகையில் மேசைக்குள்ளும் விளக்கு பொருத்தப் பட்டிருக்கும்.

Lighting grids : (ஒளிவிளக்குத் தாங்கிகள்) தொலைக்காட்சி நிலையத்தின் படப்பிடிப்பு அரங்கில் உள்ள ஒளிவிளக்குத் தாங்கிகள். ஒளியமைப்பு விட்டங்கள் எனினும் பொருந்தும்.

Light level : (ஒளி அளவு) தொலைக் காட்சி நிகழ்ச்சிப் படப்பிடிப்பின்போது கையாளப்படும் ஒளி அளவு.

Light meter : (ஒளிக் கட்டுப்பாட்டுக் கருவி) தொலைக்காட்சி நிலைய நிகழ்ச்சிப் படப்பிடிப்பில் ஒளி அளவைக் கட்டுப்படுத்தும் கருவி. விளக்கிலிருந்து ஒரு நபரின் மீது பட்டுத் திரும்பும் ஒளியை அளக்கவல்லது.

Light music programmes : (மெல்லிசை நிகழ்ச்சிகள்) வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அமையும் மெல்லிசை நிகழ்ச்சிகள்.

Lightwave technology : (மெல்லலைத் தொழில்நுட்பம்) கேபிள்

டி.வி.யிலும் கணிப்பொறி, விண்ணூர்தி அமைப்புகள் மற்றும் தொலைபேசிகள் முதலியவற்றிற்காக மேற்கொள்ளப் படும் ஒரு தொழில்நுட்பம். அதாவது 90 மைக்ரான்கள் விட்டமுள்ள (ஒரு மைக்ரான் என்பது ஒரு மீட்டர் (பதின்மான) நீட்டலளவை அலகில் பத்துலட்சத்தில் ஒரு கூறு). கண்ணாடி நுண்ணிழையாலான இழைமப் பொருளைப் பயன்படுத்தி அதன்மூலம் அடர்த்தி ஒளிக்கற்றை வடிவில் ஒளிக்கதிர்களை மின்விசைக்குள் செலுத்தித் தாமிர ஊடச்சுக்குப் பதிலாக மேற்கூறிய தகவல் தொடர்பு சாதனங்களுக்குப் பயன்படுத்துதல் இவ்வகைத் தொழில்நுட்பம் ஆகும்.

Limb binding : (மெல்லிய அட்டை) இதழின் உட்பக்கத்தில் உள்ளது போன்று காகிதத்தையே அதன் அட்டையாகப் பயன்படுத்திச் செய்யப் பட்ட இதழ். பொதுவாக அட்டைக்குப் பத்திரிகைக் காகிதத்தைவிடச் சற்று கனமான காகிதத்தைப் பயன்படுத்து வது வழக்கம்.

Limbo : (படப்பிடிப்பு தொடர்பான புறக்காட்சிப் பொருட்கள்) நிலைய அரங்கு காமிராவால் எடுக்கப்படக் கூடிய வரைபடம், படம் போன்ற பொருட்கள். இவை நிலைச்சட்ட காட்சிப் படங்கள் (easel shots) என்றும் அழைக்கப்படுகின்றன. (காண்க : easel shots)

Limited edition : (குறைவு வெளியீடு) குறிப்பிட்ட எண்ணிக்கையில் அச்சிடப் படும் பத்திரிகை.

Limiter : (கட்டுப்பாட்டுக் கருவி) ஒலி நிகழ்ச்சிகளின் ஒலி அளவைக் கட்டுப் படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் தானியங்கு மின்னணுக் கருவி.

Linage : (விளம்பர அடி எண்ணிக்கை) குறிப்பிட்ட காலத்தில் அச்சிடப்பட்ட விளம்பரங்களில் குறிப்பிட்ட வகை அச்செழுத்து வரிகளின் (agate lines) எண்ணிக்கை. அச்சான வரிகளைக் கணக்கீடு செய்வது, வரி விளம் பரத்தைக் கணக்கிட்டுக் கட்டணம் வசூலிப்பது, சுதந்திர நிருபருக்கு வெளியாகி இருக்கும் வரிகளைக் கணக்கிட்டுப் பணம் கொடுப்பது போன்றவற்றால் விளம்பர வரிகளின் எண்ணிக்கைக்கு 'லைனேஜ்' என்று பெயர் வந்தது. குறிப் பிட்ட காலம்வரை ஒரு விளம்பரத்தை வெளியிடுவதற்கும் 'லைனேஜ்' என்ற குறிப்பு பயன்படுத்தப் படுவது உண்டு.

Line : 1. (மேல்வரி), 2. (அச்செழுத்து வரிகளுள் ஒன்று), 3. (இணைப்பு). 1) 'banner' எனப்படும் தலைப்பைக் குறிக்கும். மேல்வரி என்றும் கூறப்படும். 2) குறிப்பிட்ட வகை அச்செழுத்து வரிகளின் (agate lines) சுருக்கக் குறிப்பு. 3) நிலையத்திலிருந்து வெளிப்புற நிகழ்ச்சிக் கலனுக்கு நிகழ்ச்சிகளைக் கொண்டு செல்லும் இணைப்பு.

Line and halftone : (பிளாக் தயாரிப்பு வகை) பிளாக் எடுப்பதில் ஒருவகை முறை. கோட்டுருவப் படமும் நிழற் படமும் இணைந்து பிளாக் தயாரிக்கும் முறை.

Line block : (வரைபட பிளாக்) வரி வடிவப் பட பிளாக். இந்தப் பிளாக்கில் புள்ளிகள் தெரியாது.

Linecasting machine : (வரி வார்ப்பு அச்சியந்திரம்) அச்செழுத்துக்களை உருக்கி வரியாக வார்க்கும் லைனோ டைப் போன்ற இயந்திரங்களுக்குரிய பொதுச்சொல். இப்போது விரைவாகக் குறைந்துகொண்டு வருகிறது.

Line conversion: (வரிப்பட மாற்று) அடைத்த முறையில் பட்டை தீட்டப்பட்ட

மூலப்படத் தொடரை (tone illustration) வரிப்படமாக (line illustration) மாற்றும் சிறப்புப் பட உத்தி.

Line drawing : (வரைபடம்) கையால் வரைந்த கறுப்பு வெள்ளைப்படம். படம் உருவாக்குவதில் மிக எளிய வடிவம் கையால் வரையப்படும் கோட்டுருவப் படமாகிய வரைபடம் ஆகும். படம் வரையும் கலைஞர் பேனா, பென்சில், பிரஷ் முதலியன கொண்டு எந்த விதமான இடை அடைப்பும் இல்லாமல் கோட்டுருவப் படத்தை உருவாக்கு கிறார். பின்னணியில் (அச்சிடப்படாத பகுதி) எவ்வித அடைப்பும் இருக்காது. நுண்பதிவு, ரோட்டோ கிராவ்யூர் தயாரிப்புக்களில் அதன் பக்கப்படிவ விரிப்பு ஆக்கத்தில் வரைபடம் (பெரிதாக்கவோ சிறிதாக்கவோ வேண்டாதபோது) சரியானவாறு ஒட்டப்படும். பெரிதாக்குதலோ சிறிதாக்குதலோ தேவை எனின் எழுத்தச்சுப்படிமை முறை அச்சீட் டாளர் ஒரு சிறப்பு 'லைன் நெகடிவ்வை' ஆக்குகிறார். அது ஒரு சிறிய உறை யில் (mask) இடப்பட்டு பக்கத்தின் தேவையான இடத்தில் பிற செய்திகளோடு சேர்த்து வைக்கப்படும்.

Line guage : (அளவுத்தடி) அச்சிடுபவர் பயன்படுத்தும் அளவுத் தடி (ruler). இதில் பைகாக்காள் அல்லது அகலங்கள் (இஞ்ச்சுகள்) முதலிய அளவுகளில் அல்லது பொதுவாக அச்செழுத்து அளவு புள்ளிகள் ஆகிய முறைகளில் அளவு குறிக்கப் பட்டிருக்கும்.

Linen tester : (உருப்பெருக்கி) பிளாக்கில் உள்ள புள்ளிகளை ஆராயும் உருப்பெருக்கிக் கண்ணாடி.

Line up : (மார்ஜின்) புத்தகம் அல்லது பத்திரிகையின் வல, இடப் பக்கங்களில் உள்ள வெள்ளைப் பகுதி.

Linotype: (லைனோடைப்பு) எழுத்தச்சு அச்சு முறைக்கு உரிய ஒரு அடிப்படை வரி வார்ப்பு இயந்திரம். தானே அச்சடுக்கும் பொறிகளில் 'லைனோ டைப்பு' ஒன்றாகும். ஆட்மர் மெர்கன் தாலர் என்ற ஜெர்மானியர் 1886-இல் இவ்வியந்திரத்தைக் கண்டுபிடித்தார். இது குழாய்களும் நெம்புகளும் பல் சக்கரங்களும் வார்ப்பட அச்சுக்களும் உள்ளடங்கிய ஒரு பெரிய பொறியாகும். 1) பொத்தான் அமைப்பு, 2) சக்தியூட்டி, 3) அச்சு வார்ப்பான், 4) அச்சு வழங்கி ஆகிய நான்கு முக்கிய உறுப்புக் களைக் கொண்டு இவ்வியந்திரம் இயங்குகிறது. பொத்தான் அமைப்பு சுமார் 1500 அச்சுருக்களை (matrices) இயக்கி விடக் கூடியதாகும். இதிலுள்ள ஒரு பொத்தானைத் தொட்டவுடன் அதற்குரிய வார்ப்பட அச்சுப்பகுதி அதை இயக்குவோனுடைய இடது பக்கத் திலுள்ள சிறிய குழாய் ஒன்றன் வழியாகக் கீழே இறக்கப்படுகிறது. எழுத்துக்களும் இடம் நிரப்பிகளும் ஒரு வரியாகும் வரை அந்த இடத்தை அடைக்கின்றன. அதை இயக்கு வோன் நெம்பைத் (Lever) தள்ளிய வுடன் உலோகம் உருக்கும் பொறி யிலிருந்து தானாகவே வார்ப்பட அச்சு உள்ள இடத்திற்கு உருகி ஓடி வரு கிறது. இவ்வுலோகமானது அச்சு வார்ப்படச் சாலையில் பயன்படுத்தப் படும் உலோகத்தைக் காட்டிலும் மென்மையானது. மிக விரைவாக இறுகக் கூடியதுமாகும். இயந்திரத்தி லுள்ள பல் சக்கரம் உருண்டவுடன் உருகிய உலோகம் அச்சு உருவாக்கப் பட வேண்டிய பகுதியில் வார்க்கப்பட்டு விடும். ஒரு வரியானதும் மீண்டும் சக்கரம் சுழலும். உருக்கி வார்க்கப்பட்ட முழு வரியைக் கம்பி ஒன்று வெளியே தள்ளிவிடும். அவ்வரி அச்சுத்தட்டு அல்லது தொட்டியில் வந்துசேரும். இவ்வரித் துண்டுகள் பயன்படுத்தப் பட்டவுடன் மீண்டும் உருக்கி வார்க்கப்

படுகின்றன. முன்னே சொன்ன வரித்துண்டு வெளியே அனுப்பப்பட்ட வுடன் ஒரு நீண்ட எஃகுத்தடி அல்லது கரம் போன்ற ஒன்று இயந்திரத்தின் இடது பக்கத்தின் கீழ்ப்புறமாக இறங்கி வந்து அச்சுருக்களை எடுத்து எழுத்துருக்களை வேறாகவும் இட நிரப்பிகளை வேறாகவும் பிரிக்கிறது. பிறகு இயந்திரத்தின் மேற்புறமுள்ள கொத்துக்களில் அது அச்சுருக்களை மாட்டிவிடுகிறது. அச்சுருக்கள் தங்களுக்கு உரித்தான இடங்களுக்குச் சென்று தத்தம் இருப்பிடங்களிலேயே தேவைப்படுகின்ற காலம் வரை காத்திருக்கின்றன. வரி வரியாக அச்சை உருக்கி பார்த்து அடுக்கி வெளிப்படுத்துவதால் இதற்கு ஒரு வரி அச்சு (line-o-type) என்ற பெயர் தரப்பட்டுள்ளது.

Linting: (எழுத்திணைதல்) அச்சு இயந்திரங்கள் அதிவேகத்தில் ஓடி நாளிதழ்களை அச்சிட்டுக் கொண்டிருக்கும்போது அச்சிடப்பட்ட அச்சு எழுத்துக்கள் இணைந்த நிலையைச் சிலவிடத்து உருவாக்கிவிடுகின்றன. இதனால் அவ்விடத்து மை சேர்ந்து விடுகிறது. தகட்டுப் பரப்பில் சிறு இடங்கள் நிரப்பப்பட்டுவிடுகின்றன. தகட்டாக்கத்திலும் (plate making) அச்சு இயந்திர அமைப்புக்களிலும் இத்தகைய எழுத்திணைப்புக்கள் வராமல் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம்.

Lip flap : (உதட்டசைவு) ஒளிபரப்பில், பேசிக்கொண்டிருக்கும் ஒரு நபரைக் காட்டும் படத்தை அவரது பேச்சின் இடைப்பகுதி வருமிடத்து வெட்டுவதன் விளைவாக அவரது வாய் அசைவு மட்டும் (அவரது பேச்சு கேட்கப் படுவதற்கு முன்பே) காட்டப்படுவது.

Lip mic : (களநிகழ்ச்சி ஒலிவாங்கி) வானொலி கள நிகழ்ச்சிகளில் பயன்படும் ஒலிவாங்கி. இது புற ஒலிகளைத் தவிர்க்கும் வண்ணம் அமைக்கப் பட்டுள்ளது.

Lip sync : (உதட்டு இயைபு) ஒவ்வொரு காட்சித் தொகுப்பிலும் படம் மற்றும் ஒலியுடன் இணையும் வகையில் இயைபுபடுத்தப்பட்ட பேச்சு.

Listeners' reaction : (நேயர் எதிரொலி) வானொலி தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை முறையே கேட்கும், பார்க்கும் நேயர்களின் அந் நிகழ்ச்சி தொடர்பான கருத்துக்கள்.

Listeners research : (நேயர்கள் ஆய்வு) இன்ன தொடர்பு சாதனத் திற்கு இன்னவகை நேயர்கள் உள்ளனர் என்று தொடர்பு சாதன அடிப்படையிலோ அல்லது நிகழ்ச்சி களின் அடிப்படையிலோ நேயர்கள் பற்றி ஆராயப்படும் ஆய்வு.

Literary agent : (ஆசிரியரின் உதவியாளர்) இதழ் ஆசிரியருக்குப் பதிலாகச் செயல் புரிபவர்.

Lithography : (எழுத்தச்சுப் படிமை முறை) படப் பதிப்பு முறைகளுள் ஒன்று. எழுத்தச்சுப் படிமை முறையானது கொடுக்கப்பட்ட பட உருவத்தைச் சிறிதாக்கவோ பெரிதாக்கவோ கூடிய கருவி முறையாகிய "Planographic Printing' என்பதனோடு தொடர்பு டையது. இதில் மிகுதியும் ஒட்டக்கூடிய ஒருவகைக் கொழுப்பு, நீர் கொண்ட கரிமச் சுண்ணாம்புக் கல்லின் மீது தடவப்படும். இக்கரிமச் சுண்ணாம்புக் கல் தண்ணீரை இழுத்துக் கொள்ளும் படி செய்யப்படும். அடுத்து ஒரு கொழுப்புப் பசைக்கும் மற்றொரு கொழுப்புப் பசைக்கும் தொடர்புண் டாக்கப்பட்டு அவை நீருக்கு எதிரான குணத்தைக் கொள்ளும்படி செய்யப்படு கிறது. அச்சாக்கத்தில் நீரும் மையும்

ஒன்றுக்கொன்று எதிர் குணம் கொண்டு ஒன்றையொன்று தடுப்பதன் அடிப்படையிலேயே இம்முறை செயல் படுகிறது. எழுத்தச்சுப் படிமைப் பொறியில் இப்புறமும் அப்புறமும் இயங்கக்கூடிய படுக்கை ஒன்று உண்டு. இது கல்லின் கனத்திற்கு ஏற்றபடி உயர்த்தக் கூடியதாகவோ தாழ்த்தக் கூடியதாகவோ அமைக்கப் பட்டு அச்சடிப்புக்கு உதவக்கூடிய வகையில் வைக்கப்பட்டிருக்கும். இப் பொறியில் உள்ள இரு உருளிகளில் ஒன்று மையைக் கொண்டுவந்து கல்லின்மீது தடவும். இரண்டாவது உருளி அச்சடித்த தாளை வெளியில் கொண்டுவந்து தள்ள உதவுகிறது. புகைப்பட எழுத்தச்சுப் படிமை (Photo offset) என்ற சொல்லும் எழுத்தச்சுப் படிமை (Lithography) என்ற சொல்லும் தற்கால வழக்கில் ஒரு பொருள் குறித்த இருவேறு சொற்களே. கொடுக்கப் பட்ட படவுருவத்தைச் சிறிதாக்கவோ பெரிதாக்கவோ இயலும். Planographic Printing முறை உருவங்களை உலோகத் தகட்டுப் பரப்பில் செதுக்கு வதற்குப் புகைப்படக் கலையைப் பயன்படுத்துகிறது.

Little magazine : (சிற்றிதழ்கள்) ஒரு இதழ் கலைப் படைப்புக்களை வெளி யிட்டு நிறைய விற்பனை ஆகும் வகையில் அதிகமாக மக்கள் மத்தியி பிரபலமாகாமல் இருக்குமானால் அது சிற்றிதழ் ஆகும்.

Little words : (சிறு சொற்கள்) பதிப்பிக்கும்போது செய்தித் தலைப்பை மெருகூட்டுதலோடு கூட சிறு சொற் களைத் தலைப்பில் தவிர்ப்பது நல்லது. ஏனெனில் சிறு சொற்கள் பொரு ளோடு இயைந்து பொருள் மாற்றம் செய்யவல்லன. சான்றாக, 'மூன்று குழந்தைகளின் தாய் விமான விபத்தில் இறப்பு' என்ற செய்தித் தலைப்பில் அத்தாய் இறந்தது பின்னர் ஓர் ஆஸ்பத்திரியில் என்பது பெறப்படாமல் விபத்துக் களத்திலேயே இறந்ததாகப் பொருள் தந்துவிடுகிறது. சில சமயம் இத்தகைய சிறு சொற்கள் (இல்) மிகுதியும் குழப்பம் விளைவித்து விடுவதுண்டு.

Live : (நேர்முக அஞ்சல்) ஒரு நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே எவ்விதப் பதிப்பித்தலும் இன்றி உடனடியாக அப்படியே களத் திலிருந்து அப்போதே நேரடியாக ஒலிபரப்புதல் அல்லது ஒளிபரப்புதல் நேர்முக அஞ்சல் அல்லது நேரடி ஒளிபரப்பு எனப்படும். இவை 'live programmes', 'live broadcasts', 'live-on-tape' என்றும் குறிப்பிடப்படுகிறது.

Live mike : (ஒரு திறந்த நிலை ஒலிவாங்கி)

Live SOT : (குரல் நேரடிக் காட்சி நாடாவில்) தொலைக்காட்சிச் செய்தி வடிவமைப்புத் திட்டத்துடன் தொடர்பு டையது. SOT என்பது 'ஒலி நாடாவில்' என்ற பொருள்படும் 'Sound on tape' என்ற சொற்றொடரைக் குறிக்கும். செய்திநிகழ்ச்சி செய்தி வாசிப்பவர் வாசிக்க ஆரம்பித்தவுடன் தொடங்கு கிறது. அவர் வாசித்துக் கொண்டி ருக்கும் போதே இடையில் செய்திக் கதையின் உடற்பகுதியின் போது செய்தி வாசிப்பவரைக் காட்டாமல் செய்தியுடன் தொடர்புடைய காட்சிகள் காட்டப்பட அக்காட்சி யுடன் தொடர்புடைய நபர்/நபர்களின் குரல்/குரல்கள் சேர்ந்து ஒலிக்கக் காட்டப்படுகிறது. செருகப்பட்டுள்ள செய்திக்கதையின் வீடியோ டேப் பிலேயே சம்பந்தப்பட்ட நபரின் குரல் உள்ளது என்பதைக் குறிப்பதற்கு டி.வி. பகுப்புப் பக்க வடிமைப்பில் SOT என்ற குறியீடு பயன்படுத்தப்படுகிறது.

Live type : (பயன்படு அச்சு) இன்னும் பயன்படுத்தப்படக் கூடிய வகையில் உள்ள அச்செழுத்துக்கள்.

Lobster : (நடு இரவுப் பணி) நடு இரவில் தொடங்கி காலை 10 அல்லது 11 மணி வரை பணியாற்றும் முறையை உள்ளடக்கிய மாற்று (shift) வேலை முறை.

Local news : (உள்ளூர்ச் செய்திகள்) உள்ளூரில் நிகழும் செய்திகள்; பொதுவாக ஒரு தனிநபர் பற்றியதாக அமையும். வழக்கமாக ஒரு தனி நபரது வாழ்க்கை தொடர்பான உள்ளூர்ச் செய்திக்கதை மிகச்சிறியதாக இருக்கும். ஒலி/ஒளிபரப்பில் செய்தி நேரம் 1 மணி நேரமாக இருப்பின் $\frac{1}{2}$ மணி நேரத்திற்குச் செய்தியை விரித்துச் சொல்ல உள்ளூர்ச் செய்திகள் பயன்படுகின்றன. விளக்கப் படங்கள் போல இவை அமைகின்றன.

Lock up : (முடித்தல்) செய்தி அறைக்குப் போவதற்கு முன்பு செய்தித் தாளின் பக்கத்தின் பத்திகளைச் செம்மைப்படுத்தலும் (justify) ஒரு பக்க வடிவ அமைப்பை இறுக்குதலும் (tighten) ஆகிய செயல்களுக்கு முடித்தல் என்று பெயர். சேஸில் (chase) உள்ள எழுத்துக்களும் படங் களும் குலைந்து போகா வண்ணம் சேஸில் பொருததப்பட்டு இருக்கும் அமைப்பைத் திருகி இறுக்கமாக முடுக்கும் இச்செயலினை முடுக்குதல் என்றும் குறிப்பிடுவர்.

Log : 1. (பெயர்ப்பலகை), 2. (குறிப்புப் புத்தகம்). 1) லோகோ டைப் என்பதன் சுருக்கம் 2) ஒரு நகரச் செய்தி ஆசிரியரின் செய்யவேண்டிய வேலை குறித்த குறிப்புப் புத்தகம். வானொலி நிலைய ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை எழுதி வைக்கும் ஆவணம்.

Logo primer : (பத்துப் புள்ளி எழுத்து) பத்துப் புள்ளி எழுத்தைக் குறிக்கும் பழைய பெயர்.

Logo run : (நீள ஓட்டம்) நீண்ட நேரம் ஓடும் இயந்திரம். அ) நீண்ட நேரமாக ஓடிக்கொண்டிருக்கும் அச்சு இயந்திரம். ஆ) அடுத்த பதிப்பிற்காகத் தயாராக இருக்கும் மாற்றப்படாத பக்கம். இ) குறிப்பிட்ட ஒரு செய்தி நீளமாக அமைந்துவிடுவது.

Logo type : (லோகோ டைப்) ஒரு அச்சுவரியில் அச்சுக் கோர்க்கப் பட்டுள்ள சொல் அல்லது சொற்கள். அடிக்கடி ஒரு செய்தித்தாளின் பெயர்ப் பலகையைக் குறிக்கப் பயன்படுத்தப் படுகிறது. ஏனெனில் செய்தித் தாளின் பெயர்ப் பலகை பொதுவாக 'லோகோ டைப்பில்' அச்சுக் கோர்க்கப்படும். பகுதித் தலைப்புக்களைக் குறிக்கவும் பயன் படுத்தப்படும். சான்றாக, 'விளையாட்டுச் செய்திகள்' என்று போடுவது. 'flag' அல்லது 'name plate' என்று அழைக்கப்படுவனவற்றிற்கு இந்தப் பெயரும் குறிப்பிடப்படும். ஒரு சில எழுத்துக்கள் கூட்டாகப் பயன் படுத்தப் படுமானால் (சான்று : AP, UPI) அந்தத் தனி அலகு 'லோகோ டைப்' எனப்படும்.

Longer paragraph : (நீண்ட பத்திகள்) சில ஆசிரியர்கள் பழைய மரபு வழிப்பட்ட தான நான்கு தொடர்களை உள்ளடக்கிய பெரிய பத்திகளை விரும்புவதில்லை. இவர்கள் 'சாதாரண அளவிலான' பத்திகளை அமைத்து எழுதுமாறும் அதன்மூலம் பத்திகளுக் கிடையே பொருளளவில் சிறிதளவு ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளு மாறும் ஊக்குவிக்கின்றனர்.

Long shot (LS) : (தொலைவுக் காட்சி அல்லது தூரக் காட்சி)



படக் காட்சி வகைகளுள் ஒன்று. எழுத்துப் படியில் அல்லது அமைப்புத் திட்டத்தில் எழுதி

யுள்ளபடி ஒரு அர்த்தத்துடனான தொடர்ச்சியைக் காட்டுவதற்கோ அல்லது நேயர்களின் மனதில் ஒரு உளவியல் தாக்கத்தை உண்டு பண்ணவோ ஒரு குறிப்பிட்ட பொருளைக் குறிப்பிட்ட முறையில் படம் பிடிக்க வேண்டும் என்று எழுதுபவர் குறிப்பிட்டு எழுதுவார். அவ்வாறு படம் பிடிக்க வேண்டிய முறைகளுள் இதுவும் ஒன்று. காட்சி யின் மொத்தமும் எடுக்கப்பட்ட படம் தூரக் காட்சி ஆகும். முழுப் பின்னணியும் அல்லது தேவைப்படும் பின்னணியும் ஒரு வண்ணமுடையதாய் எடுத்தல் இவ்வகை. இம்முறைப் படப்பிடிப்பு அகன்ற காட்சி (wide shot) என்றும் அழைக்கப்படுகிறது. காட்சியின் தொடக்கத்தில் காட்சி யையும் அது நடக்கும் இடத்தையும் நிலைநிறுத்திக் காட்டுவதால் நிலைநிறுத்தப்பட்ட படப்பிடிப்பு என்றும் கூறப்படும். இத்தகைய காட்சி நிலைநிறுத்தல், தனிமை, மனமாற்றம் போன்ற உணர்வுகளைக் காட்டும். முழுப் பின்னணி அல்லது தேவைப்படும் பின்னணி முதலியவற்றோடு நேயர்களை இணையச் செய்யும் அளவில் எடுக்க இந்த தூரக்காட்சி உதவுகிறது. தொலைவுக் காட்சி யிலிருந்து (long shot) இடைக் காட்சிக்குக் (medium shot) காமிரா நகர முடியும். அதன்பின் அருகாமைக் காட்சிக்கு (close-up shot) நகர்ந்து இதனால் ஒரு ஒட்டுமொத்தத் தோற்றம் (overall view) உள்ள சூழலை உண்டு பண்ணும். இத்தகைய காட்சியில் நாம் பொருளைவிட தூரத்தில் இருப்பதாக உணர்வதால் நாம் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் உணர்வைப் பெறுவது குறைவு. குறிப்பிட்ட நிகழ்ச்சியை முடிப்பதற்கு இந்தக் காட்சி உதவுகிறது. நாம் ஒன்றிலிருந்து இழுக்கப்படும்போது நம் ஆர்வமும் குறைகிறது. முடிந்து கொண்டிருக்கின்ற ஒரு செயலி லிருந்து நேயரை இழுக்கிறது இக்காட்சி.

Long wave : (நீள் அலை) வானொலி அலைகள் பொதுவாக 600 மீட்டர் அல்லது அதைவிட நீளமுடையவை. 500 கிலோ சுற்றுக்களுக்குக் கீழ்ப்பட்ட அலை அதிர்வெண் உடையவை.

Loop : (இணைப்பு நாடா) ஒரு நீள ஒலி/ஒளி நாடாவின் இரு முனைகளும் ஒன்றிணைக்கப்பட்டு அதன் விளை வாகச் சில நிகழ்ச்சிகளைத் திரும்பத் திரும்பக் காட்ட (அறிவிப்புக்கள் என இனங் காணுதல்) அல்லது ஒரு தொடர் விளைவை உண்டுபண்ண (மழை, மேகமூட்டம் போன்றவற்றைக் காட்ட) இயலும்.

Loose leaf : (பைண்டிங் முறை) ஒருமுறை பைண்டு செய்யப்பட்ட ஒரு புத்தகத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியைச் சுலபமாகப் பிரித்தெடுக்கும் வகையில் செய்யப்படுகின்ற பைண்டு முறை.

Low angle : (கீழ்க்கோணப் பார்வை) காமிராவைப் பொருளின் கீழே வைத்துப் படம் எடுத்தால் அது கீழ்க்கோணப் பார்வைப் படப்பிடிப்பு முறை (low anlgle) எனப்படும். இம்முறையால் படம் எடுக்கப்படும் பொருளைக் காமிரா பெரிதாக்கிக் காட்டும். இக்கோணத்தின் மூலம் ஒரு நபர் அவரது உண்மையான தோற்றத்தைவிடப் பெரிதாகத் தெரிவார். இக்கோணம் பய உணர் வைத் தூண்டுவதற்கும் எதிர்நிலைப் பாத்திரத்தைப் பெரிய உருவில் காட்டு வதற்கும் ஒரு அபாய உணர்வைப் புலப்படுத்தவும் உதவும். பொருளின் வல்லமையை வெளிப்படுத்துகிறது.

Lower case letters : **(சிற்றெழுத்துக் கள்)** இவ்வாறு அழைக்கப்படுவது ஏனெனில் ஆரம்ப கால அச்செழுத்துப் பெட்டிகளில் அவை கீழதாகவும் அருகில் உள்ள பகுதி யிலும் இருந்தது. பெரிய எழுத்துக் களினின்று (Capital letters) மாறு பட்டது. lc என்று சுருக்கிக் குறிப்பிடப் படுகிறது.

Low frequency : (தாழ் அலை அதிர்வெண்) 10–100 கிலோ சுற்றுக் களுக்கும் இடைப்பட்ட வானொலி அலை அதிர்வெண்களுக்குக் கீழான தாழ்அலை அதிர்வெண் சாதாரண மனிதக் காதுகளால் கேட்கக் கூடியது. கேட்கக்கூடிய தன்மையுடைய அலை அதிர்வெண். தாழ் அலைகள் மூலை முடுக்கெல்லாம் வளைந்து நெளிந்து செல்லக்கூடியவை.

Low power transmitter: (குறைந்த ஆற்றல் ஒலிபரப்பி) வானொலி ஒலிபரப்போடு தொடர்புடையது. குறைந்த சக்தித் தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்களும் இவ்வகையின. LPT என்றும் குறிப்பிடப்படும்.

Luminaire : (ஒளிப் பொருள்) ஒரு முற்றிலுமான ஒளிப் பகுதியைக் குறிப் பிட உதவும் சொல். (சான்றாக ஒரு வீட்டையும் அதில் உள்ள பல்புகளையும் குறிப்பிடுதல்)

Luminance : (பிரதிபலிப்பு ஒளி அளவு) ஒரு பரப்பிலிருந்து பிரதிபலிப்பாகும் ஒளி அளவைக் குறிக்கும் சொல்.

LUX : (ஒளி அலங்கார அளவு) ஒளி அலங்கார அமைப்பை அளவிட நடை முறையில் இருக்கும் மீட்டர் அளவிலான அலகு.

M

Machine border : (கோடு வார்ப்பு இயந்திரம்) பல வகையான கோடு களை வார்க்கின்ற இயந்திரம். எல்ராடு, லைனோடைப், இன்டர்டைப் போன்ற இயந்திரங்கள்.

Machine set : (இயந்திர அச்சுக் கோர்ப்பு) மனித முயற்சியால் எடுத்துக் கோர்ப்பதற்குப் பதில் இயந்திரத்தின் உதவியால் எழுத்துக்களை விரைவாகக் கோர்ப்பது ; இதனால் வேலை ஆட்கள் குறைவதோடு நேரமும் மிச்சமாகிறது. பத்திரிகை நடத்துவோர் இந்நாளில் எழுத்துக் கோர்ப்பதற்கு இத்தகைய இயந்திரங்களையே பயன் படுத்துகின்றனர்.

Magazine : (இதழ்) குறிப்பிட்ட கால இடைவெளிக்கு ஒருமுறை வெளி வரும் பத்திரிகை ; இத்தகையன பருவ இதழ்கள் என்றும் குறிப்பிடப்படும். சஞ்சிகை என்றும் கூறப்படும்.

Magazine programme : (இதழ் நிகழ்ச்சி) ஒரு செய்தி நிகழ்ச்சி வன்செய்திகளையும் (hard news) செய்திக் கட்டுரைக் கூறுகளையும் (feature items) கலந்து அமைக்கப்பட்டிருக்குமானால் இவ்வாறு அழைக் கப்படும்.

Magnetic sound : (காந்த ஒலி) தொலைக்காட்சியோடு தொடர்புடைய காந்த இயல் ஒலி.

Magnetic track : (காந்தவழி) வரிசைத் துளை ஓரமுள்ள ஒரு தரமான ஃபிலிம் தளத்தின் மீது ஒரு காந்த ஒலிப்பதிவு அமைகிறது. தனி காந்த வழியில் அத்தகைய ஒரு தனிப்பட்ட ஒலிப்பதிவு ஒரே நேரத்தில் மங்கிய படப்பதிவுடன் நிகழும். காந்த நாடாவில் ஒலித்தடம் ஃபிலிமின் முழுநீள ஓரங்களில் இருக்கிறது. அதுவே ஒரே பதிவில் படத்தையும் ஒலியையும் இணைக் கிறது.

Mail edition : (தபால் வெளியீடு) நகருக்கு வெளியேயுள்ள சந்தா தாரருக்கு அப்போது வெளிவந்துள்ள வெளியீட்டினைத் தபால் மூலமாக (அவர்தம் சந்தா முடியும்வரை) முறையாக அனுப்பிவைத்தல்.

Make over : (மறு தயாரிப்பு) 1) ஒரு செய்தித்தாளின் பக்கத்தின் மறுபதிப்பினைக் குறிப்பிட்ட வெளியீட்டின் தேவைகளுக்குப் பொருந்தும் வகையில் கூடுதல் விபரங்களுடன் ஆக்குதல். 2) ஏற்கனவே ஆக்கப்பட்ட ஒரு பக்கத்தின் புதிய தகட்டினை (பிளேட்) ஆக்குதல். பிந்திய வெளியீடுகள் இறுதியாக வந்த செய்திகளை உள்ளடக்கும் பொருட்டு ஒரு பக்கம் மீண்டும் செய்யப்படுகிறது.

Make-ready : (தயாரித்தல்) எழுத்தச் சடிப்பு முறையில் (letter press) அச்சுப் பொறியின் மீது உள்ள அச்சுக்கோத்த படிவத்தை ஒரே அளவிலான அச்சுப் பதிப்பிற்குத் தடையாக உள்ள அதன் உயர வேறுபாடுகளை நீக்கிச் சமப்படுத்தி முன்கூட்டியே செய்யும் ஏற்பாட்டிற்குத் தயாரித்தல் என்று பெயர். மை தடவப்பட்டுப் பதிப்பிக்கப்பட வேண்டிய பகுதி சரியான அமுக்கத்திலும் அழுத்தத்திலும் காகிதத்தினோடு தொடர்புபட வேண்டும். தயார்ப்படுத்தாமல் எந்த ஓர் அச்சுப் படிவத்தையும் அச்சிடவே முடியாது. எனவே அச்சுக்கோர்த்த படிவம்

அல்லது அச்சுப் பதிப்புத் தகடு அச்செழுத்தின் உயரத்தில் (type-high) அதாவது 0.918 அங்குலம் வரும்படி அமைக்கப்பட வேண்டும். பிறகு அச்சின் உயரமானி (Type-high gauge) யைக் கொண்டு இதைச் சரி பார்க்க வேண்டும். ஓர் அச்சுக்கோர்த்த படிவத்தில் புதிய அச்செழுத்துக்களும் தேய்ந்துபோன அச்செழுத்துக்களும், மரப்படங்களும் (wood-cuts) பதிப்புத் தகடுகளும் (stereos) நுண்பதிப்புப் படிமைகளும் பிறவும் இருக்குமாதலால் அழுத்தத்தைச் சமப்படுத்த வேண்டிய அவசியம் நேரிடுகிறது.

Make-up : (வடிவாக்கம்) செய்தித் தாளை அல்லது இதழை ஒருங்கிணைத்தல். படங்களையும் செய்திகளின் உள்ளடக்கத்தையும் ஒரு நாளிதழின் அல்லது இதழின் பக்கத்தில் கூடிய அளவு சிறப்புற அழகுபட அமைத்தல். இது பொதுவாக ஒரு வடிவாக்க ஆசிரியரால் (make-up editor) மேற்பார்வை இடப்படுகிறது. அவர் தயாரிப்புப் பகுதியிலுள்ள பணியாளர்களின் பணிகளை நெறிப்படுத்துவார். நாளிதழின்/இதழின் பக்கத்தைப் படங்களாலும் தலைப்புக் களாலும், செய்திப் பகுதிகளாலும் அழகுபட அமைப்பதைப் பக்கங் கட்டல் என்ற சொல்லால் குறிப்பர். இவற்றைக் கலைத்தன்மையுடன் அமைப்பர். தலைப்புக்கள் முன்பு ஆக்கப்பட்டிருக்கும் எழுத்துக்களின் வடிவத்தாலன்றி, அவற்றிற்குக் கொடுக்கப்படும் அடுக்குகளின் எண்ணிக்கையால் முக்கியத்துவம் பெற்றன. பின்னர் நாளிதழில் செய்திக்கதைகளை அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் அமைக்கும் முயற்சி எடுக்கப்பட்டதால் தலைப்புக்களின் அமைப்பும் மாற்றம் பெற்றது. இந்நூற்றாண்டின் இறுதியில் நாளிதழ்களின் அச்சிடு மரபையும், வடிவாக்கத்தையும் பல்வேறு சம்பவங்கள் நிலைகுலையச் செய்தன. அச்சக முன்னேற்றம் மற்றும் தரப்படுத்துதல் முதலியன நாளிதழ்களின் வடிவத்தைக் குறிப்பிட்ட பரிமாணங்களில் நிலைக்கச் செய்தன.

Make-up editor : (பக்கங்கட்டும் ஆசிரியர்) பக்க வடிவாக்கம் செய்யப்படுவதை மேற்பார்வையிடும் துணை ஆசிரியர்.

Make-up rule : (வடிவாக்கத் துண்டு) ஒரு தட்டையான உலோகத் துண்டு. இது அச்சிடுபவர்களால் அச்சிட வேண்டிய செய்தியை அடக்கிப் பக்கம் கட்டப்பட்ட ஒரு சட்டகத்திலிருந்து வரியைச் செருகவோ அல்லது ஒரு வரியைத் தூக்கவோ அல்லது மாற்றவோ அல்லது அச்செழுத்தின் ஓரத்தைச் சமப்படுத்தவோ அச்செழுத்தைச் (type) சரியாக நிற்க வைக்கவோ பயன்படுத்தப்படும்.

Making sense : (அர்த்தமுடைய தாக்கல்) சொற் பயன்பாடும் இலக்கணமும் பொருட் புலப்பாட்டில் மிகவும் முக்கியம் வகிப்பவை. ஆசிரியர் தொடர் சரியாகப் பொருள் தராத விடத்து ஏதோ தவறு உள்ளது என்று குறிப்பாக உணர்ந்து தவறான இலக்கணத்தையோ அல்லது தவறான சொல்லாட்சியையோ கண்டு திருத்துவார்.

Mandatory kill : (அதிகாரபூர்வ நீக்கம்) ஒரு பிழைமலிந்த அல்லது அவதூறு வழக்கான ஏற்கனவே அனுப்பப்பட்ட செய்தி, பத்திரிகை அலுவலக ஊழியராலோ அல்லது சார்புச்

செய்தித்தாள்களாலோ பயன்படுத்தப் படாமல் அச்சிலிருந்து நீக்கப்பட்டு விட்டதா என்பதைத் தெரிந்து கொள்ளும் வகையில் பத்திரிகை யாளர்களால் பயன்படுத்தப்படும் அதிகாரபூர்வச் செய்திக் குறிப்பு.

Mannerism : (தனி பாணி) தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பவர் செய்தி வாசிப்பு தொடர்பான சில தனி பாணிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

Margins : (வெற்றிடங்கள்) பத்திரிகையின் செய்திப் பரப்பு விளிம்பைச் சுற்றியுள்ள வெற்றிடம்.

Markerupper : (அச்சு நிர்ணயிப் பாளர்) தானியங்கு அச்சு இயந் திரங்கள் அச்சக்களை விரும்பிய இயல்புகளில் உருவாக்கித் தரும் வகையில் அச்சிடப்பட வேண்டிய எழுத்துப் படிக்குத் தேவையான வடிவங் களை நிர்ணயிக்கும் பொறுப்பாளர்.

Markets: (வணிகப் பிரிவு) நாளிதழ்களில் தானியங்கள், கை இருப்புச் சரக்குகள், பொருளாதாரம் போன்ற சிலவற்றைப் பற்றிய செய்தி களைக் கவனித்துக்கொள்ளும் ஒரு பிரிவைக் குறிக்கும் சொல்.

Mark up : (குறிப்பு) தாளின் மீது ஒட்டப்பட்டுள்ள ஒரு பிழைதிருத்தம் அல்லது செய்திக் குறிப்பு. ஒட்டப் பட்டுள்ள குறிப்பு எங்கு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் ; என்ன புதுச் செய்தி சேர்க்கப்பட வேண்டும் என்பதைக் குறிக்கும்.

Mask : (மூடி) ஒரு புகைப்படத்தில் தேவையற்ற பகுதியை மூடி மறைத்து வெளியில் தெரியாமல் செய்வதற்குப் பயன்படும் மூடி. ஒளிபுகாத் தாள் போன்றவை நெகடிவ்களை உள்ளடக்கி மூடி இருக்க ஆ.'.ப்செட் தகடுகள் வெளிக்காட்டப் பட முடியும். 'flat' என்றும் கூறப்படுகிறது.

Mass : (மக்கள்) இச்சொல் தகவல் தொடர்பு சாதனங்களுடன் தொடர்பு படுத்தப்படும்போது தகவல் தொடர்பு சாதனங்களின் செய்திகளை/ நிகழ்ச்சிகளைப் பெறும் வாசகர்கள் அல்லது நேயர்களைக் குறிப்பதாகும். 'தனித்தன்மைகள் இழக்கப்பட்ட ஓர் ஒட்டுமொத்தம்' என்றும் பொருள் கூறுவர். பரந்துபட்ட எல்லைப்பரப்பில் வாழும் மக்கள் 'mass' என்பதில் அடங்குவர். இவர்கள் ஒருவருக் கொருவர் தெரியாதவர்கள். சுய-அறிதல், சுய அடையாளம் ஆகிய வற்றுக்கு இதில் இடமில்லை. நோக்கங் களை வரையறுப்பதற்கு என ஒன்றாக இணைந்து செயல்பட இங்கு வாய்ப்பில்லை.

Mass communication : (பொது மக்கள் தொடர்பு அல்லது மக்கள் தகவல் தொடர்பு) மக்கள் தகவல் தொடர்பு சாதனங்கள் வாயிலாகச் செய்திகள் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுதல் தகவல் தொடர்பு அல்லது மக்கள் தகவல் தொடர்பு எனப்படுகிறது. இத்தொடர்பு அண்மையில் நவீன இயந்திரத் தொழில்நுட்பங்களினால் சாத்திய மாக்கப்பட்ட வளர்ச்சி. தொழில்நுட்ப உத்திகளாலும், நீராவி உற்பத்தி போன்றவற்றினாலும் இயங்கும் அச்சகம், திரைப்படக் கலை (cinematography) வானொலி, தொலைக் காட்சி போன்றவற்றினாலும் செய்தி (message) ஒலிபரப்பப்பட்டு அதுவே மக்களுக்குத் தரப்படும் உற்பத்திப் பொருளாக ஆவதுவே ஆகும். பொதுமக்கள் தகவல் தொடர்பு இன்று

தகவல் தொடர்பு சாதனங்களின் பயன்பாடுகளை அனுபவித்துக் கொண்டிருப்போருக்கு அவை வருவதற்கு முன்னர் மக்களுக்கு எவ்வளவு மெதுவாக, மிகச் சரியாக இல்லாத செய்திகள் பரப்பப்பட்டன ; எவ்வளவு பேர் வெளியுலகைப் பற்றி மிகச் சிறிய அளவு அறிவே கொண்டிருந்தனர் என உணர முடியாது.

ஜார்ஜ் கெர்ப்னர் "பலர் பல இடங்களில் பொதுச் செய்திகளைப் பகிர்ந்து கொண்டு வாழ்வு, சமுதாயம் அவற்றுடன் இணைந்த உலகம் பற்றிக் கருத்து கொண்டிருக்கின்றனர்" என்றார். ஆனால் இதற்குப் பதில் அவர்களின் செயல்பாடு என்னவோ மிகச் சிறிதளவே. பொதுப் பண்பாடு (வளர்ந்த கருத்து) என்பது ஒருவருக் கொருவர் எஞ்சியுள்ள நிறுவனங்கள், அமைப்புக்கள், அவை பற்றிய எது முக்கியம் எது சரி என்பது பற்றிய கருத்துக்களை உள்ளடக்கியது. அப்பொதுப் பண்பாடும் தகவல் தொடர்பு சாதனங்கள் வாயிலாகப் பெரிதளவில் உண்டாக்கப்பட்ட பொருளே எனலாம். தொடர்பு சாதனத்திற்குச் செய்திகள் மற்றும் நிகழ்ச்சிகளை எழுதும்போது எச்சொற்களைக் கொண்டு எழுதுவது என்பது சிக்கலே. தார்ன்டைக் மற்றும் அவரது குழுவினர் ஆங்கில இலக்கியத்தில் 20 மில்லியன் சொற்களை எண்ணிக் கணக்கிட்டு அவற்றுள் திரும்பத் திரும்ப வரும் சொற்கள் ஆயிரத்திற்கு மேற்பட்டவை என்று எண்ணிக் கணக்கிட்டனர். இச்சோதனை சிறப்புற எழுதப்பட்ட ஒரு மொழி என்பது மக்களுக்குத் தெரிந்த சொற்களை அதிக அளவு உள்ளடக்கியதாய் அதாவது சாதாரண வாசகனுக்குப் புரியக்கூடிய வகையை உள்ளடக்கியதாய் இருக்கவேண்டும் என்ற அடிப்படையான எண்ணத்திற்கு வர வழிவகுக்கிறது. இம்முறையிலேயே தகவல் தொடர்பு சாதனங்களுக்கு எழுத வேண்டும்.

Mass communicators : (தகவல் தொடர்பாளர்கள்) தகவல் தொடர்பு சாதனப் பணியாளர்களைப் பொது வாகக் குறிக்கும் சொல். இவற்றின் வழி செய்தி தரும் இவர்கள் இச்சாதனங்களின் வழிகளைக் கட்டுப்படுத்தும் அல்லது ஆக்கிரமிக்கும் வல்லமை பெற்றவர்கள். இவர்கள் சமுதாய நலனுக்காகத் தம் செய்திகள் மூலம் வாதிடும் வழக்கறிஞர் போன்றோர் எனப்படுவர். இவர்கள் தம் எண்ணங்கள் மக்களின் பிரதி நிதித்துவம் வாய்ந்ததாகவும் அரசு பற்றிய திறனாய்வு நிலையிலும் கொள்கை உருவாக்குதல் மற்றும் அதனைக் காத்தல் என்ற நிலையிலும் அமையும். செய்தி அறிவித்தலே இவர்தம் முதன்மைப் பணி என இதழாளர்களால் கருதப்படுகிறது. இதனால் இவர்கள் சமுதாயத்தின் பாதுகாவலர்கள் ஆகின்றனர். அதற்கடுத்த நிலையில் பயிற்றுவிப் பாளர்களாகவும் அதன் பின்னரே பொழுதுபோக்குச் செய்திகள் அளிப்பவர்களாகவும் ஆவர். செய்திக் கதைகளை அல்லது பிற செய்திகளை வெளியிடுவதற்கு அல்லது ஒளிபரப்பப் படுவதற்குத் தலையங்கம் எழுதும் பொறுப்புடையவர்கள் இதழாளர்கள் . முழு நேர நிருபர்கள், செய்தி ஆசிரியர், செய்தி எழுதுபவர், ஆசிரியர் என்று இதழாளர்கள் வரையறைப்படுத் தப்படுவர்.

Mass culture : (பொதுமக்கள் கலாச்சாரம் அல்லது பொதுமக்கள் பண்பாடு) 'மக்கள் கலாச்சாரம்' என்பது முழுக்க முழுக்கப் பொதுமக்கள் சந்தைக்கெனவே தயாரிக்கப்படும் பண்பாட்டுப் பொருட்களைக் குறிக்கும். இதனோடு இணைந்தவியல்புகள் தரமுடையனவாகவும் பொதுமக்கள்

வழக்கத்தில் உள்ள நடத்தையாகவும் அமையும். மக்கள் கலாச்சாரத்தைத் தகவல் தொடர்பு சாதனங்கள் உருவாக்க இயலும். இக்கலாச்சாரம் இயல்பாகவே மக்களிடம் உருவாகும். மொழி, உடை, இசை, பழக்கவழக்கம் போன்றவற்றில் மாற்றத்தை உண்டு பண்ணுவதாக அமையும்.

Mass media: (மக்கள் தொடர்பு சாதனங்கள் அல்லது தகவல் தொடர்பு சாதனங்கள்) ஒரேநேரத்தில் அதிக அளவிலான பொதுமக்களுக்குச் செய்திகள் தெரிவிக்கப் பயன்படும் சாதனங்கள் தகவல் தொடர்பு சாதனங்கள் எனப்படும். சான்று : செய்தித்தாள், இதழ்கள், வானொலி, தொலைக் காட்சி மற்றும் திரைப்படம் முதலியன. வானொலி, தொலைக் காட்சி போன்றவை மரபுவழிப்பட்டவை. கேபிள் தொலைக்காட்சி போன்றவை புதிய சாதனங்கள். தகவல் தொடர்பு சாதனத்தின் முக்கியக் கூறு அதன் வேகம் ஆகும். இவை ஒரே செய்தியை ஒரே நேரத்தில் பல பொதுமக்களுக்குப் பரப்பக்கூடிய வல்லமை உடையன. மக்கள் தொடர்பு சாதனங்களின் பணிகள் பின்வருமாறு : 1) செய்தி : சமுதாயத்தில் நிகழும் சம்பவங்கள் மற்றும் சமுதாய நிலைகள் ஆகியவை பற்றிய செய்திகளைத் தருதல், அதிகார உறவு நிலைகளை உணர்த்துதல், புதுமை, தழுவல், வளர்ச்சி முதலிய வற்றை எளிமையாக்கல் முதலியன. 2) தொடர்பு : சம்பவங்கள் மற்றும் செய்திகளின் அர்த்தத்தைவிளக்குதல், விளக்கமளித்தல், தன் கருத்துரைத்தல், நிலைபெற்ற அதிகாரம், கொள்கைகள் முதலியவற்றுக்கு ஆதரவளித்தல், சமுதாயப்படுத்துதல், தனிச் செயற்பாடு களை ஒருங்கிணைத்தல், பொது ஒப்பந்தங்கள் தொடர்புடைய தகுதி நிலைகளைச் சுட்டி முதன்மை ஒழுங்கு களை ஏற்படுத்துதல் முதலியன. 3) தொடர்ச்சி : ஆதிக்கக் கலாச் சாரத்தைத் தெரிவித்துத் துணைமைப் பண்பாட்டுக் கூறுகளையும் புதிய பண்பாட்டு வளர்ச்சிகளையும் ஏற்றுக் கொள்ளல். மதிப்புக்களின் பொதுத் தன்மைகளைப் புது எழுச்சிகளுனூடே முன்னேற்றிச் செல்லுதல் மற்றும் பாதுகாத்துப் பராமரித்தல். 4) பொழுதுபோக்கு : மகிழ்வு, மாற்றம், வேலைப்பளுவிலிருந்து சற்று தளர்ச்சி அல்லது ஓய்வு முதலியன அளித்துச் சமுதாயத் துரித ஓட்டத்தைச் சற்றுக் குறைத்தல். 5) இயக்கம் : சமுதாயக் குறிக்கோள்கள் கருதி அரசியல், போர், பொருளாதார வளர்ச்சி, பணிகள், சில சமயம் மதம் போன்றவற்றிற்காகப் பிரச்சாரம் செய்தல்.

Mass media study : (தகவல் தொடர்பு சாதன ஆய்வு) தகவல் தொடர்பு சாதனங்கள் தரும் செய்திகள்/ நிகழ்ச்சிகள் முதலியவற்றின் உள்ளடக் கம், உத்தி முறைகள், பயன்பாடு, விளைவுகள் பற்றிய ஆய்வு. தகவல் தொடர்பு சாதனங்கள் பற்றிய ஆய்வு வரலாற்றில் பொதுவாகச் சில ஆய்வுகள் ஒதுக்கப்பட்டன ; சில ஆய்வுகள் பெரிதும் கருத்தில் கொள்ளப்பட்டன. பிற தகவல் தொடர்பு சாதனங்களைவிட தொலைக்காட்சி, அச்சுச் சாதனங்கள் போன்றவற்றின் வளர்ச்சி பொதுவாகவே நன்கு ஆராயப்பட்டு விட்டன. தொலைக் காட்சியாயினும் அச்சு மூலம் வெளிவரும் இதழாயினும் இரண்டுக்கும் 1) பலரது பகிர்ந்த உழைப்பு, நிறுவனத்துடன் ஒட்டு மொத்த கூட்டுறவு, பெரிய மூலதனம், பெரிய தொழில் நுட்ப இயந்திரங்கள் முதலியன தேவை. 2) நுகர்வோர் சந்தையில் இரண்டுமே மக்களால் தெரிந்தெடுத்துப் பார்க்கப்படும் ; தேவையல்லாதது விடப்படும். 3) தகவல் தொடர்பு சாதனங்களின் தயாரிப்பு களிலும் விருப்பு வெறுப்பின் அடிப்படையில் சிறிது கட்டுப்பாடு

உண்டு. 4) தகவல் தொடர்பு சாதனங்களின் படைப்புக்கள் ஒருவழி நோக்கிய செய்தி வீழ்ச்சியைக் கொண்டவை. தகவல் தொடர்பு சாதன நிறுவனத்தில் வேலை பாாப்போர் ஒரு சிறிய குழுவினர். அக்குழு செய்திகளைப் பரப்புகிறது. ஒரு பெரிய கூட்டமாகிய செய்தி பெறுவோருக்கு மிகச்சிறிதளவு வாய்ப்பே திருப்பிப் பதில் சொல்வதற்கு உள்ளது.


தகவல் தொடர்பு சாதனங்கள் மக்களை எந்த அளவு பாதிக்கின்றன அல்லது பாதிக்காமல் விட்டுவிடுகின்றன என்ற ஆய்வு தேவையானது. தகவல் தொடர்புசாதன ஆய்வாளர்கள் தகவல் தொடர்பு சாதன நிகழ்ச்சிகளின் 1) உள்ளடககங்களும் 2) நிகழ்சசித் தயாரிப்பு முறைகளும் ஆராயபபட வேண்டியவை என்று கருதுகின்றனா மேலும், தகவல் தொடர்பு சாதனத்தார் பணியாற்றும் சமூக, பொருளாதார பாதிப்பு போன்றவையும் ஆராயப்பட வேண்டும் என்று கருதுகின்றனர். (தகவல் தொடர்பு சாதனங்கள் மக்களைப பாதிக்கும் என்றும பாதிககாது எனறும் இருவகையான கருததுக்கள் உள்ளன.)

பாதிக்கும் என்போர் : மெக்லூஹன் தகவல் தொடர்பு சாதனங்கள் வல்லமை உடையன ; மனித இனத்தை மீண்டும் ஒன்றிணைக்கும் ஒரு புது மின்னணுச சமுதாயத்தில் தகவல் தொடர்பு காரணமாக இவ்வுலகம் மிகவும சுருங்கியதாய் ஒரு சிறு கிராமம் (global village) தான் இவவுலகம் என்று சொல்லும் அளவிற்கு அமைந்துவிடும் எனறார். 1930கள் வரை தகவல் தொடர்பு சாதனஙகள நமது நடத்தையையும் நம்பிக்கைககளையும் தன் பக்கம் இழுத்து நம்மைப் பாதித்துவிடும் என்று நம்பபபட்டது. பத்திரிகைகளே அடிக்கடி செய்திகளைப் பிரபலப்படுத்துகின்றன. எனவே பத்திரிகை மக்களைப் பாதிக்கும் என்ற நேரடித் தாக்குக் கொள்கையாகிய hypodermic theory மக்களிடம் செல்வாக்குப் பெற்ற ஒன்றே. ஆனால், பாலுணர்வு, வன்முறை, தீவிரவாத உணர்வு போன்ற செய்திகள், படங்கள் முதலியவற்றைப் பார்த்து இளைஞர்கள் பாதிக்கப்படுதல் என்ற முரண்பட்ட விளைவுகளை உண்டாக்கும் பாதிப்புக்களுக்கு மட்டும்தான் இக்கொள்கை பொருந்தும். பிறவிடங்களில் பொருந்தாது. தகவல் தொடர்பு சாதனங்கள் தீய விளைவுகளை ஏற்படுத்திக் குற்றம் புரியவும் இளைஞர்களைச் சமுதாய விரோதச் செயல் அல்லது பாலுறவு தொடர்பான வக்கிரச் செயல் செய்யவும் வைக்கமுடியும் என்ற முடிவக்கு அய்செனக், நியாஸ், பெல்சன் ஆகிய மூவரும் வருகின்றனர்.

விரக்தி, வலியத் தாக்குதல், தவறான செய்தி தரப்படுதல், இன வெறுப்புணர்வைத் தூண்டுதல், பெண்களை அவதூறு செய்தல் போன்ற சமூக நடத்தைக்கு அப்பாறபட்ட, மிகுதியும் இன்னல் தரும் எண்ண வெளிப்பாடுகளைச் சித்திரித்துச் சமூக எதிரிகளின் நடத்தைக்குப் பாதுகாப்பாக அமைகிறது என்ற ஒரு முடிவை உளவியல் ஆய்வுகள் கூறு கின்றன. மர்டாக் மெக்ரான் ஏற்றத் தாழ்வுகளைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வலியுறுத்தலாம் ; புனைகதைகள் திரைப்படங்கள் சித்திரித்துக் காட்டும் வாழ்வுக்கும் நடப்பியல் வாழ்வுக்கும் உள்ள வேறுபாட்டைப் பார்ப்பவர்களுக்கு விரக்தியும் ஆழ்ந்த கோபமும் ஏற்படலாம் என்று வலியுறுத்துகிறார். தொலைக் காட்சியில் குற்றச் செய்திகளை அதிகமாகக் காட்டுவது இளைஞர்கள் தீவிர குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஆதரிக்கின்றது என்ற முடிவக்கு பெல்சன் தான் நிகழ்த்திய ஆய்வின் மூலம வருகிறார். இவ்வாய்வு

அவர் இளைஞர்களிடமிருந்து அவர்கள் தொலைக்காட்சி பார்த்தல் தொடர்பாகச் சேகரித்த தரவுகளின் அடிப்படையில் நிகழ்த்தியது ஆகும். நுகர்வோர் மற்றும் அரசியல் அமைப்புக்கள் ஆழமாக ஆராய்ந்த போது தகவல் தொடர்பு சாதனங்கள் மறைமுகமாக மக்களைப் பாதிக்கின்றன என்று கூறுகின்றன. தகவல் தொடர்பு சாதன நிகழ்ச்சியின் சாரத்தைவிட தனிமனிதர்கள், தங்களைச் சுற்றியிருக்கும் மக்கள், நண்பர்கள், அண்டை அயலார், உடன் பணியாற்றுவோர் போன்றோரால் பாதிக்கப்படுகின்றனர். ஒரு படைப்பு வெளியிடப்படுகிறது. ஒவ்வொரு சிறு குழுவும் அதன் மையப் பிரதிநிதியாகத் தனிநபரைக் கொண்டிருக்கிறது. அவர்களே அக்குழுவின் சார்பாளர் (authority); அதிகாரபூர்வமானவர்; இவ்வாறு ஒருவர் இருப்பது நாகரிகமாக இருக்கலாம். அரசியலாகவும் இருக்கலாம். இந்த கருத்துரு வாக்கத் தலைவர்கள் (opinion leaders) குழுமக்களின் ஒவ்வொரு தனிமனிதர்களாலுமே தெரிந்தெடுக்கப் படுகின்றனர். இவர்கள் கருத்தை மக்கள் ஆர்வமுடன் மதித்துக் கேட்கின்றனர். எனவே பொது மக்களைத் தகவல் தொடர்பு சாதனங்கள் ஈர்க்கும் வாய்ப்புக்கள் மிகக் குறைவே. ஏனெனில் அந்த ஈர்ப்பு முறை மறைமுகமாகவே (நேரடியாக வன்றி) நிகழ்கிறது. கருத்துக்கள் தகவல் தொடர்பு சாதனங்களிலிருந்து கருத்துருவாக்கத் தலைவர்களைச் சென்று சேர்கிறது. அவர்களிடமிருந்து குறைவாகச் செயல்படும் பொது மக்களுக்குச் சென்று சேர்கிறது. தகவல் தொடர்பு சாதனங்களில் செய்திகளின் /நிகழ்ச்சிகளின் இத்தகைய விளைவு மாதிரியினை இருவழிக் கருத்து வீழ்ச்சிப் பரிமாற்றம் (Two step flow of communication) என்பர் கட்ஸ், லஸார்ஸ்ஃபீல்டு ஆகியோர். லஸார்ஸ் ஃபீல்டு, பெரில்சன், கௌடட் ஆகியோர் 1940இல் அமெரிக்காவில் நடந்த ஜனாதிபதி தேர்தலின் போது முதன்முதலில் இத்தகைய இருவழிக் கருத்து வீழ்ச்சிப் பரிமாற்ற மாதிரி தொடர்பாகக் கருத்து வெளியிட்டனர். இத்தேர்தலின்போது தகவல் தொடர்பு சாதனங்களின் வாயிலாகக் கூறப்பட்ட வேட்பாளர்களின் கருத்துக்களால் வாக்காளர்களின் வாக்கு அளித்தல் குறித்த தீர்மானமான முடிவினை மிகச் சிறிதளவே மாற்றமுடிந்தது. அதாவது வாக்காளர்கள் தாம் தேர்ந்தெடுத்த கட்சிகளின் மீது கொண்டிருந்த மதிப்புணர்வையே இவர்தம் ஆய்வு வலியுறுத்தியது. மிகச் சிறுபான்மை வாக்காளர்களே தேர்தல் பிரசாரத்தின் காரணமாக மனம் மாறினர். இவர்களை அலைபாயும் மனம் கொண்டோர் என்று குறிப்பிடுகின்றனர். தகவல் தொடர்பு சாதன அரசியல் பிரச்சாரச் செய்திகளை வாக்காளர்கள் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துவது தான் விரும்பும் கட்சி சார்ந்தவற்றை வாசித்துப் பார்ப்பதற்கே என்று இவர்கள் முடிவு கண்டனர். லஸார்ஸ்ஃபீல்டும் கட்ஸும் நான்கும் முக்கியப் பரப்புக்களில் தகவல் தொடர்பு சாதனங்களின் பாதிப்புக்கள் உள்ளன என்று அளவிட்டனர். அவை : 1) வாக்காளர்களின் அரசியல் தீர்வுகள், 2) நுகர்வோர் பொருட் தெரிவு, 3) திரைப்படத் தெரிவு, 4) நுகர்வோர் நாகரிகத் தெரிவு. தகவல் தொடர்பு சாதனங்களை விலகல் பெருக்கிகள் (amplifiers of deviance) என்று நோக்குதல் புதுமுறை. விலகல் பெருக்கம் (deviance amplification) வாயிலாகத் தகவல் தொடர்பு சாதனங்கள் உலக நடப்பில் உள்ள செய்தியை அடிக்கடி மிகைப்படுத்திக் கூறி உண்மையிலிருந்து விலகுதல் மட்டுமின்றி விலகல் பற்றிச் சித்திரிக்கும் புனைகதை, கதையல்

நிகழ்ச்சிகள் முதலியவற்றைக் கூறிச் சமூக மாற்றம் பற்றிய விழிப்புணர்வைத் தனிமனித நடத்தையில் ஏற்படுத்து கின்றன என்பர் சமூகவியலார். தகவல் தொடர்பு சாதனங்கள் இயல்புக்கு மீறிய (bizarre), அயற்பண்புடைய (exotic), வன்செயலான (outrageous) பண்புகளில் சிறிது ரசனை கொண்டுள்ளது. பொதுச் செய்திகள் இவை இவை : விலகல் செய்திகள் இவை இவை என்று அவற்றிற்குக் கொடுக்கப்படும் இடத்திலிருந்து பெரும்பாலும் அடிக்கடி வருவண ; அருகி வருவன என்று கணக் கிடலாம். விலகல் செய்திகளில் அடிக்கடி வருகை தரும் ஒன்று அறம் தொடர்பான பரவலான திடீர் அச்சம் (moral panics) ஆகும். தகவல் தொடர்பு சாதனங் களில் புனைகதை வடிவங்களில் தரப்படும் விலகல் செய்திகள் எதிர்பார்க்கப்பட்டாலும் கூட நல்ல முக்கியத்துவம் வாய்ந்த விளைவை எற்படுத்தினாலும் கூட தகவல் தொடர்பு சாதனச் சமூக வியலார் பார்வையில் குறைவுடைய தாகவே கருதப்படுகின்றன.



என்று இருவிதமாக வாதிடுவர், தகவல் தொடர்பு சாதன நிகழ்ச்சிகள் மக்களைப் பாதிக்கின்றன என்போர். மிகக் குறைந்த பாதிப்பை எற்படுத்து கின்றன என்பதைச் சில ஆய்வாளர்கள் மட்டுமே கூறுகின்றனர்.

பாதிக்காது என்போர் : நேரடித் தாக்குதல் மாதிரியின் மூன்றாம் நிலைப்படி மிக அண்மைக்காலத்தில் தான் தகவல் தொடர்பு சாதனங்கள் ஆய்வு அவைதரும் செய்தி/ நிகழ்ச்சிகளின் கருத்து அடிப்படையில் செல்ல ஆரம்பிக்கிறது. கோஹன் மற்றும் யங் தகவல் தொடர்பு சாதனங்களின் விளைவு என்பது இரண்டாந்தர அல்லது துணைமைப் பிரச்சினைதான் என்பர். இவ்விளைவுகள் நன்கு ஆராயப்பட வேண்டும். சரியான விதிமுறைகளின்படி தகவல் தொடர்பு சாதனங்கள் செயல்படும் முறையை அறியவேண்டிய கட்டாயப் பணி உள்ளது. 1) விலகல்கள் (deviations), 2) மறுவார்ப்புக்கள் (stereotypes), 3) விவாத உருவாக்கம் (agenda setting) போன்றவற்றின் அடிப்படையில் அவற்றை ஆராயவேண்டும். 1) விலகல் பெருக்கம் : (deviance amplification) ஜெர்ரி பால்மர் தகவல் தொடர்பு சாதனச் செல்வாக்குப் பெறும் படைப்புக்களில் இடம்பெறும் எதிர் நிலைப் பாத்திரப் படைப்புக்களும் காவல்துறையினர் பயன்படுத்தும் முறையற்ற தந்திரங்களும் நியாய மானவையே ; இரக்கமற்ற குற்றவாளி கள் பிரபலப்படுத்தப்பட்டுள்ள உலகில் காவல் அதிகாரிகள் பொதுமக்களைக் காக்க விரும்பினால், உயர் அரசு அலுவலர்களின் இணைப்புநராகச் செயல்படவும் சட்டத்தைக் காப்பவர் களாகவும் செயல்பட முடியாது என்று அவை பொதுமக்களை எண்ண வைத்திருக்கிறது. அதாவது உலகில் தீய சக்திகளை ஒடுக்கக் காவல்துறை அதிகாரிகள் விரும்பினால் சட்டப் பாதுகாப்புக்களை, சட்டத்தைக் கடைப்பிடிக்க முடியாது என்ற கருத்தை நாம் ஒத்துக் கொள்ளுமாறு Clint Eastwood எழுதிய Dirty Harry என்ற படைப்பில் 'Shoot first and ask questions later' என்ற கொள்கை நியாயப்படுத்தப் பட்டிருத்தல் (போன்ற கதைகளின்) மூலம் ஆக்கப்பட்டி ருக்கிறோம் என்பார்.

கோஹன் மற்றும் யங் இருவரும் விலகல் பற்றிய செய்திகள் தகவல் தொடர்பு சாதனங்களில் தரப்படுவதால் அங்கீகாரம் பெற்ற கருத்துக்கள்

ஆகிவிடுகின்றன என்பர். தகவல் தொடர்பு சாதனங்களில் தரப்படும் விலகல்களைப் பற்றிய கருத்துக்களில் எவ்வளவு தூரம் சரியானவை என்பது நேயர்களுக்குத் தெரியாது. ஏனெனில் விலகல் நபர்களுடன் நமக்கு நேரடித் தொடர்பு கிடையாது. மேலும் வில்கின்ஸ் தகவல் தொடர்பு சாதனங்கள் விலகல்களைச் சித்திரிக்கும்போது அரசின் கோணத்திலேயே விலகல்கள் குற்றமானவை ; கட்டுப்படுத்தப்பட வேண்டும் அல்லது சமுதாயத்திலிருந்து அவை நீக்கப்பட வேண்டும் என்ற முறையையே கையாளுகின்றனர். சமூகவியலார், சில குறிப்பிட்ட வகை நடத்தைகளின் மீது சமூகம் நடந்து கொள்ளும் முறையே விலகலுக்குக் காரணம் என்று கூறுவர். 2) ஒரே மாதிரியான படைப்புக்கள் மீண்டும் மீண்டும் மறு வார்ப்புக்களாகப் (stereo types) படைக்கப் படுகின்றன என்ற கருத்தும் உள்ளது. ஒரு சமுதாயத்தின் மரபுசார்ந்த படைப்புக்கள் மீண்டும் மீண்டும் அதே மாதிரியில் உருவாக்கப் படுகின்றன. இத்தகைய மறுவார்ப்புக்களைக் குறை என்று சுட்டிக்காட்டினால் விலகல் பண்பைக் காட்டுவது நியாயம் என்று ஆகி அதுவே அதிகரித்துவிடுமோ என்றும் கருதுகின்றனர். வீட்டில் இருக்கும் இல்லத்தலைவியர் தகவல் தொடர்பு சாதனங்களில் மீண்டும் மீண்டும் சித்திரிக்கப்படுகின்றனர். திருமணமான பெண்கள் (மனைவியர்) எவ்வாறு இருக்கவேண்டும் என்று காட்டி அதையே அச்சாக நடத்தையில் வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற மரபு வலியுறுத்தப்படுகின்றது. இத்தகைய மறுவார்ப்புக்கள் மீதான பிடிப்பு ஒருவருக்கு மாற்றிக்கொள்ள இயலாத ஒன்றாகும். 3) விவாதப் பொருளை நிர்ணயித்தல் (agenda setting) என்பது வெறும் எல்லைகளை அதாவது எந்த வரையறைக்குள் விவாதம் நிகழ வேண்டும் என்ற எல்லையை மட்டும் நிர்ணயிக்கிறது. தகவல் தொடர்பு சாதனங்கள் அதன் செய்திகளின்/ நிகழ்ச்சிகளின் சம்பவங்கள் குறித்த கலந்துரையாடலுக்கான ஒரு விவாதத்தை நிர்ணயிக்கின்றன. சான்றாக 'வேலை நிறுத்தம்' என்ற சம்பவம் தேசிய நலனுக்கான ஒரு அச்சுறுத்தல் என்பதை ஒரு ஊகமாகக் கொண்ட ஒன்று ஆகும். அத்தகைய ஒரு விவாத நிர்ணயித்தல் என்பது ஒரு உரையாடலையும் விவாதத்திற்கான எல்லைகளையும் (இவற்றிற்குள்ளே அடங்கும் சில கூறுகள் மட்டுமே அனுமதிக்கப்பட முடியும்) நிர்ணயிக்கிறது. வேலை நிறுத்தம் என்பது தேசிய நலனுக்கான ஒரு பெரிய அல்லது சிறிய அச்சுறுத்தல் என்பதும் உழைக்கும் மக்களின் உரிமைகளை வரையறைப் படுத்த சட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட வேண்டுமா? அல்லது நிர்வாக ஒழுங்கை நிலைநாட்டும் பொருட்டு அவர்களது நல்லெண்ணத்திலேயே நம்பிக்கை கொண்டு விட்டுவிடலாமா? என்பன போன்ற விவாதங்கள் மட்டுமே விவாதிக்கப்படுமாறு விவாத எல்லைகளை அது உருவாக்கும். பிற வினாக்கள் விவாதத்திற்கு அப்பாற்பட்டவை என ஒதுக்கித் தள்ளப்படும். அவை : தொழிலாளர் நலன் குறித்த விவாதங்களில் அது சரிசமமாக அக்கறை கொண்டுள்ளதா? தொழிலாளர்களை வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளும்போதும் அவர்களது உற்பத்தித் தரம் குறைவு என்று தாக்கும் தாக்குதலிலிருந்து தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளப் போதுமான வழிகளை வைத்திருக்கிறார்களா என்பன போன்ற பிரச்சினைகள் விவாதிக்கப் படுமாறு விவாத நிர்ணயித்தலுக்கான எல்லைகள் வகுக்கப்படுவதில்லை. தகவல் தொடர்பு சாதனங்களால் உருவாக்கப்படும் விவாதங்களுக்கான பிரச்சினைகள் முழுவதுமாக ஒத்துக்

கொள்ளப்படுமானால் பிற்தைய வினாக்கள் சமுதாய அங்கத்தினர்களால் வெளியே பேசப்பட முடியாது. மார்டன், மேக்டன் ஆகிய இருவரும் "தொலைக்காட்சியில் குற்றச் செய்திகளை அதிகமாகக் காட்டுவது இளைஞர்கள் தீவிர குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஆதரிக்கின்றது" என்று பெல்சன் என்பார் கூறிய கருத்தினை மறுக்கின்றனர். "பெல்சனின் பார்வை குறுகிய பார்வை ; பெல்சனது தரவுகள் நடுத்தரமற்றும் உழைக்கும் வர்க்க இளைஞர்கள் நிகழ்த்தும் வன்முறைச் சம்பவங்களைப் பார்க்கின்றன. இவர்கள் அதன் விளைவாகச் செய்யும் குற்ற நடவடிக்கைகளின் அளவு வேறுபட்டவை. தொலைக் காட்சியில் காட்டப்படும் வன்முறை நிகழ்ச்சிகளை அதிகம் பார்ப்பவர்கள் (கூர்ந்து கவனிப்பவர்கள்) குற்ற நடத்தையை அதிகம் செய்பவர்களாக இல்லை. எனவே அதிகம் குற்றச் செய்திகளைத் தொலைக்காட்சியில் தருதல் இளைஞர்களது குற்றத்தைக் குறைக்கும் என்று கூட இதன்மூலம் சொல்லலாம்" என்று வாதிடுகின்றனர். ஜார்ஜ் கெர்ப்னர் தொலைக்காட்சி பார்ப்போர் வாழ்வில் அவர்கள் செய்யும் குற்றத்தைவிட தொலைக்காட்சி நாடகப் பாத்திரங்கள் அதிகம் குற்றம் புரிகின்றனர் என்று கூறுகின்றார். தகவல் தொடர்பு சாதனங்கள் மக்களை ஈர்த்து வழங்கும் கருத்துக்களை மக்கள் அப்படியே ஏற்றுக் கொள்வதில்லை. அக்கருத்தை அப்படியே விட்டுவிடுகின்றனர் என்பார். அமெரிக்காவில் ஒரு பிரிவினரது கருத்துப்படி பார்வையாளர்கள் தங்களைத் தாங்களே பார்த்துக் கொள்ள முடியும். அவர்களுக்குள்ளேயே சமூக உளவியல் பாதிப்புக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் திறமை இருக்கிறது. தனிமனிதனை விரைவில் இழுத்துவிட முடியாது. பார்வையாளர்கள் தேர்ந்தெடுத்துச் சிலவற்றை மட்டுமே பார்ப்பர். தகவல் தொடர்பு சாதனங்கள் சொல்லும் செய்தி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான செய்தியாகத் தான்படும். வெவ்வேறு மனிதர்கள் வெவ்வேறு தகவல் தொடர்பு சாதனச் செய்திகள் மூலம் திருப்திப்படுகின்றனர். ஒரே தகவல் தொடர்பு சாதனத்தின் செய்தியே கூட ஒவ்வொரு விதம் சமுதாயக் குழுக்களால் வெவ்வேறு விதமாகப் பார்க்கப் படும். அக்குழுக்கள் செய்தியை வடிகட்டிவிடுவதால் செய்திகள் மக்களைப் பாதிப்பதில்லை என்பர்.

சமூகவியலார் தகவல் தொடர்பு சாதனங்களினால் அரசியல் பாதிப்பு இல்லை. ஏனெனில் வாழ்நாள் முழுவதும் கட்சிக்கு உண்மையாய் உழைத்திடும் சில வாக்காளர்கள் உண்டு என்பர். புளூமர் ஏறக்குறைய 70க்கும் அதிகமான வாக்காளர் தொகுதிகளுக்குத் தொலைக்காட்சி தான் தேர்தலுக்குரிய செய்திகளைத் தெரிவிப்பதில் முக்கியமான ஆதாரமாக இருக்கிறது என்பார். கட்ஸ் தொலைக்காட்சி பார்ப்பதில் பலர் ஆர்வம் உள்ளவர்கள், அதனால் அரசியல் செய்திகளையும் கவனிக்கிறார்கள். மற்றபடி அரசியல் ஈடுபாட்டால் அல்ல என்பார். மிக் ராபி, கார்பர், கோஹன், ராபின்ஸ், வில்லிஸ் ஆகிய பிரிட்டிஷ் மாணவர்கள் மக்கள் சார்ந்துள்ள குழுக்களாலும் துணைக் கலாச்சாரங்களாலும் தகவல் தொடர்பு சாதனங்கள் எவ்வாறு நெறிப்படுத்தப் படுகின்றன என்பதை நேயர்களின் பதில்கள் காட்டுகின்றன. எனவே மக்கள்தான் இத்தகவல் தொடர்பு சாதனங்களை நெறிப்படுத்துகின்றனர். சாதனங்கள் மக்களை நெறிப்படுத்த வில்லை என்பர். இத்தகைய தகவல் தொடர்பு சாதன நிகழ்ச்சிக் கருத்துக்கள் தொடர்பான விமர்சன அணுகு

முறை மேற்கொள்ளப்பட்டு அதன் விளைவாகத் தகவல் தொடர்பு சாதனங்களின் விளைவுகள் கணிக்கப் படுகின்றன.

Master : (முதன்மை) முதல்நிலை நாடா அல்லது பதிப்பிக்கப்பட்ட உரையாடற் பகுதிகள் இவற்றிற்கேற்பவே ஒலிப்பதிவு செய்யப்படும்.

Master control : (தலைமைக் கட்டுப் பாடு) இம்மையத்தின் வழி பல்வேறு நிகழ்ச்சி ஆதாரங்கள் செலுத்தப்பட்டு இவற்றிலிருந்து பிறிதொன்றனுக்கு மாறுதலும் தொடர்ந்து செல்லுதலும் நிகழும்.

Master scene script : (தலைமைப் பட நிகழ்ச்சி எழுத்தறிக்கை) தொலைக் காட்சி நிகழ்ச்சி எழுத்தறிக்கை(script) யுடன் தொடர்புடையது. காட்சிப்படக் கருவி எடுத்த ஒவ்வொரு படத்திற்கும் காட்சிக்குக் காட்சி அதாவது ஒவ்வொரு காமிரா படக்காட்சிக்கும் (shot) விளக்கம் எழுதி நாடக வடிவம் தரும் ஒரு முறை. மற்றொரு முறை தலைமைப் பட நிகழ்ச்சி எழுத்தறிக்கை (master-scene script). இதுவே பொது அணுகுமுறை. காமிரா, கோணம், தூரம், இயக்கம் பற்றிய அறிவின்றி எழுதுபவரும் எளிதில் பயன்படுத்தக் கூடிய முறை. நாடகக் காட்சிப் பின்னணியில் இருக்க வேண்டிய பொருட்கள் பற்றி தனித் தாளில் எழுதப்பட்ட விளக்கமாகிய தேவையானபோது கிழித்துக் கொள்ளக் கூடிய வகையில் தனித்தனித் தாள்களடங்கிய கட்டுத் தொகுதி (Riptide) கூட இம்முறையிலேயே எழுதப்படுகிறது.

Masthead : (பத்திரிகை விபரக்குறிப்பு) பத்திரிகையில் செய்தித்தாளின் பெயர், செய்தித்தாள் உரிமையாளர், ஆசிரியர் பெயர், வெளியாகும் இடம், சந்தாத் தொகை, பிற அலுவலகக் குறிப்புக்கள் போன்றன பற்றி தரப்பட்டிருக்கும் அறிக்கை. சிலசமயம் 'flag' என்பதுடனும் 'name plate' என்பதுடனும் எண்ணிப் பார்க்கப்பட்டுப் பொருள் குழப்பிக் கொள்ளப்படுகிறது.

Matrix: (ஓர் அச்சு வார்ப்புரு அல்லது அச்சுக்கரு) "அச்சுவார்ப்புரு என்பது பித்தளையாலோ, செப்பாலோ ஏறக் குறைய $1\frac{1}{2}$ அங்குலம் நீளமுள்ள துண்டாலானது. அது எழுத்தின் அளவிற்கு ஏற்ற கனம் கொண்டது" என்பார் மாக்ஸன். தற்போது வார்ப்படச் சாலைகளில் அச்சு வார்ப்புருக்கள் (matrices) ஒரே முன்மாதிரியிலிருந்து (pattern) நேரடியாக எழுத்துருவ வரைவு (pantographically) மூலமாகவோ அல்லது மின்-அச்சடிப்பு (Electro-typing) மூலமாகவோ செதுக்கப்படு கின்றன. அச்சு வார்ப்புருவில் அச்செழுத்தின் தலைப்பில் உள்ள முகப்பு வடிவம் இருக்கும். வரி வார்ப்பு இயந்திரத்தில் சிறிய பித்தளை அச்சு முனை யிலிருந்து ஒரு சிறிய எழுத்து வார்க்கப்படும்.

Matter : (அச்சுக்கோர்க்க வேண்டிய செய்தி) பத்திரிகையில் வெளிவரும் செய்திகள், கட்டுரைகள், படங்கள், கதைகள் அனைத்துமே பத்திரிகை அலுவலகத்தில் 'மேட்டர்' என்ற பெயரிலேயே குறிப்பிடப்படும்.

Meanings : (பொருள்கள் அல்லது அர்த்தங்கள்) ஒரேமாதிரியான சூழலில் குறிப்பிடப்பட்ட குறியீட்டிற்குக் கருத்துப் பரிமாறுபவர் மற்றும் கருத்து பரிமாறப்படுபவரால் மரபு வழியாகக் கொள்ளப்படும் ஒரேமாதிரியான அர்த்தங்கள்.

Measure : (அளவு) அச்சிடப்பட்ட ஒரு 'வரியின் நீளம்' என்ற பொருளில் அச்சிடுவோர் பயன்படுத்தும் சொல். வரியின் அவசியம், பத்தியின் அகலம், பக்கத்தின் அகலம், எழுத்தின் கனம்

ஆகியவற்றைக் குறிக்கும் பொதுச் சொல்லும் ஆகும்.

Mechanical : (இயந்திரமயமான தயார்த் திட்டம்) எல்லா அச்சுக் கோர்க்கப்பட்ட செய்திகள், படங்கள் முதலியன சரியான நிலைகளில் ஒட்டப்பட்டுப் படமாக்கப்படுவதற்கு அல்லது அச்சுத் தகடாக மாற்றப் படுவதற்குத் தயாராக இருக்கும் ஒரு பக்க வடிவமைப்புத் திட்டம் (layout) அல்லது மாதிரிப் பக்க அமைப்பு (dummy).

Media : (தொடர்பு சாதனங்கள்) செயதித்தொடர்பு சாதனங்கள் ; பததிரிகை, வானொலி, தொலைக் காட்சி, திரைப்படம் போன்றவை.

Media audience : (தொடர்பு சாதன நேயர்கள்) உன்ஸ்டல் என்பவர் நேயர்கள் வெவ வேறு தகவல் தொடர்பு சாதனங் களுடன செலவழிக்கும் நேரத்தைக் கணக்கில் கொண்டு நாம் நேயாகளை 3 வகையாகப் பிரிக்கிறோம் எனறு கூறுகிறார். 1) முதன்மை நேயர்கள் (primary audience) : தங்களது அன்றாடச் செய்திகளுக்குச் செய்திகளைக் கவனமாகத் தெரிந்து கொள்ளத் தகவல் தொடர்பு சாதனத்தைக் கருவியாகக் கொள்பவர்கள் இப் பிரிவில் அடங்குவர் 2) துணைமை நேயர்கள் (secondary audience) : இப்பிரிவில் அடங்கு பவர்கள் தங்கள் கவனஙகளைப் பிறவற்றோடும் தகவல் தொடர்பு சாதனத்தோடும் பகிர்ந்து கொள்ளும் நேயர்கள் ஆவர். சான்றாக வீட்டு வேலைகளைச் செய்யும்போது வானொலி கேட்டல். 3) வரையறை நேயர்கள் (territory audience) : தகவல் தொடர்புசாதனத்துடன் மிக மேலோட் டமான (vaguely) தொடர்பு வைத்திருப் பவர்கள். சான்றாக, வானொலி அல்லது தொலைக்காட்சியில் ஓடிக் கொண்டிருக்கும் ஒரு நிகழ்ச்சியில் ஏதாவது ஒரு துண்டுச் செய்தியை மட்டும் மறுஅறையில் இருந்து கொண்டே தற்செயலாகக் கேட்டுக் கொள்பவர் அல்லது ஒரு ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிக்கும் போது செய்தித் தாளின் செய்தித் தலைப்பை மட்டும் நோட்டம் விடுபவர்.

Media consumption : (தகவல் தொடர்பு சாதன நுகர்வு) தகவல் தொடர்பு சாதன நுகர்வு என்பது வயது, பால் மற்றும் காலம், நாள், நேரம் ஆகியவற்றிற்கேற்ப வேறுபடுகின்றது. 1982இல் பிரிட்டனில் வயது வந்தோர் பெரிய தகவல் தொடர்பு சாதனங் களுடன் ஒரு வாரத்தில் செலவழிக்கும் பொதுவான நேரங்கள் என்று கணக் கிடப்பட்ட விபரங்கள் (மணிக் கணக்கில்) பின்வருமாறு : (பார்க்க : ப. 191) இத்தரவுகள் டன்ஸ்டலின் வகைப் பாட்டிலிருந்து தரப்பட்டுள்ளது. **நாளின் நேரமும் மற்றும் வருடமும் :** தகவல் தொடர்பு சாதன நுகர்வு என்பது ஒரு நாளின் நேரத்திற்கேற்பக் குறிப்பிடத்தக்க அளவு மாறுகிறது. மேலைநாடுகளில் வானொலி, செய்தித் தாள் ஆகிய இரண்டுக்கும் முதன்மை நேரம் அதிகாலை. குறிப்பிடத்தக்க அளவு நேயர்கள் காலை உணவு உண்டுகொண்டே தொலைக்காட்சி கவனிக்கிறார்கள். இவை ஒவ் வொன்றுக்குமான நேயர்கள் இவை தவிர்த்த காலை நேரத்தில் குறைந்து பின்னர் மதிய உணவு நேரத்தில் கூடுகின்றனர். வானொலி நேயர்கள் மதிய நேரத்தில் பிற்பகுதியில் குறை கிறார்கள். மதிய நேரத்தில் பிற்பகுதி யிலிருந்து தொலைக்காட்சி நேயர்கள் எண்ணிக்கை திடமாக உயர்ந்து கொண்டே போகிறது. இதற்குக் குழந்தைகள் பள்ளியிலிருந்து திரும்பி விடுதல் முக்கியக் காரணம் எனலாம். மாலை நேரத்தில் வானொலி நேயர்கள்

	முதன்மைச் செயல்	முதன்மை + இரண்டாம் செயல்	முதன்மை + இரண்டாம் + வரையறைச் செயல்
தொலைக்காட்சி	18	21	35
வானொலி	2	23	30
நாளிதழ், இதழ்			
மொத்த மணி நேரம் (வாரத்திற்கு)	25	50	75

வயது : நேயர்களின் வயது அடிப்படையிலான அமைப்பு வெவ்வேறு தகவல் தொடர்பு சாதனங்களுக்கேற்ப வேறுபடுகிறது. பின்வரும் வரைபடம் வயதுக்கேற்ப நேயர்கள் தகவல் தொடர்பு சாதனச் செய்தி நுகர்தல் வேறுபடுவதை விளக்குகிறது.

வயது	சாதனம்
5-15	தொ.கா (மிகுதி)
16+	தொ.கா (குறைவு)
20 கள்	தினமும் செய்தித்தாள் (மிகுதி)
திருமணமான காலத்தினர்	தொ.கா (மிகுதி) திரைப்படம் (குறைவு)
40 கள்	வானொலி, தொ.கா. செய்தித்தாள் (மிகுதி)
60 கள்	செய்தித்தாள் (மிகுதி) 65க்குப் பின் விரைவாகக் குறைகிறது. வானொலி (குறைகிறது). தொ.கா (மிகுதி).

மேலும் குறைகிறார்கள். ஆனால் மக்கள் படுக்கைக்குச் செல்லும்போது தொலைக்காட்சி நேயர்கள் இரவு 9-10 அதிகமாகக் கூடி முதன்மை நேர மாக அமைந்து அதன்பின் உடனடி யாக தொலைக்காட்சி நேயர் குறைய ஆரம்பித்து விடுகின்றனர். செய்தித் தாள் நேயர்கள் சனிக்கிழமைகளில் குறைவாகவும் வாரத்திலேயே ஞாயிற்றுக்கிழமைதான் செய்தித்தாள் அதிக விற்பனை உடையதாகவும் அமைகிறது. சனிக்கிழமை நண்பகல் தொலைக்காட்சி நேயர்களின் முதன்மை நேரம். ஞாயிறு காலை 10-11 மணி வானொலி நேயர்களின் முதன்மை நேரம். மேலை நாடுகளில் பருவகாலங் களுக்கேறப நேயர்களின் அளவு மாறுபடுவதுண்டு. கோடை விடுமுறை களில் மக்கள் பொதுவாக தொலைக்காட்சி பார்ப்பது $\frac{1}{2}$ மணி நேரத்திற்கும் குறைவு (திரைப்படம் விதிவிலக்கு), குளிர் காலத்தில் கிறிஸ்துமஸ் விடுமுறையில் தொலைக் காட்சி நேயர்கள் மிகுதி ஆகின்றனர்.

பால் : தகவல் தொடர்பு சாதனங் களுக்கேற்ப நேயர்கள் வேறுபட்டாலும் கூட செய்தித்தாள், தொலைக்காட்சி இரண்டுக்கும் உரிய நேயர்களை

ஆண், பெண் என்று பிரிக்கலாம். விளையாட்டு + அரசியல் ஆண்களுக்கு அதிகம் விருப்பமானவை. பெண் களுக்கு விளக்கக் கட்டுரைகள் மற்றும் விளக்கப் படங்கள் (features), பொழுது போக்குச் செய்திகள்/நிகழ்ச்சிகள் மிகவும் விருப்பமானவை. இதழ் வாசிப்பு என்பது பால் வேறுபாடுகளாலேயே பிரிக்கப்படுகிறது. பாலுணர்வு இதழ்கள் மற்றும் வேலைவாய்ப்பு இதழ்கள் மற்றும் அவ்வத் தொழில்நுட்பம் சார்ந்த இதழ்கள் முக்கியமாக ஆண்களால் வாசிக்கப்படுகின்றன. அதாவது வீடு, நாகரிகம், அழகு, குடும்பம் தொடர் பான செய்திகளைத் தாங்கிவரும் பெண்கள் இதழ்கள் பெரும்பாலான பெண்களால் வாசிக்கப்படுகின்றன.

Media industry : (தொடர்பு சாதன நிறுவனம்)

Media research : (தொடர்பு சாதன ஆய்வு) தகவல் தொடர்பு சாதன நிகழ்ச்சிகள் தொடர்பான ஆய்வு.

Media researchers : (தொடர்பு சாதன ஆய்வாளர்கள்) தகவல் தொடர்பு சாதன நிகழ்ச்சி ஆய்வாளர்கள்.

Media sociologists : (**தொடர்பு சாதனச் சமூகவியலார்**) தொடர்பு சாதன நிகழ்ச்சிகளை ஆராயும் சமூக வியல் ஆய்வாளர்கள்.

Media stimulus : (**தொடர்பு சாதனப் புறத்தூண்டல்**) தொடர்பு சாதன நிகழ்ச்சியின் விளைவு குறித்த ஆய்வு நிகழ்த்துவதற்காக ஏதாவது ஒரு செய்திக் கூறினைக் கொடுத்து அல்லது ஒரு படத்தைப் போட்டு ஒரு குழு நேயர்களைப் பார்க்கவைத்து அவர்களிடம் பதில் கேட்பது உண்டு. பொதுவாக உளவியல் ஆய்வு அணுகுமுறைகளில் இவ்வாய்வு முறை கையாளப்படும்.

Medium : 1. (தொடர்பு சாதனம்), 2. (நடுத்தர எழுத்து). 1) தகவல் தொடர்பு சாதனங்கள், 2) நடுத்தரமான முகப்பைக் கொண்ட எழுத்துக்கள்.

Medium close up : (நடு அண்மைப் படக்காட்சி) அருகாமைப் படக் காட்சியையே வெகு அருகாமையில் இல்லா மல் சற்று அருகாமையில் எடுத்தல்.



Medium shot : (இடைப்பட்ட படக்காட்சி) படக் காட்சிப் படப்பிடிப்பில் ஒருவகை இது. பொருள் மிக அருகாகவோ மிக தூர மாகவோ அன்றி இடைப் பட்ட படப்பிடிப்பு அமைதல்; காமிராவுக்கும் பொருளுக்கும் உள்ள தூரம் இடைப் பட்ட நிலையில் இருந்து எடுக்கப்படும் படம் ; இரு பாத்திரங் களைக் காட்டுவதாக-பொதுவான, பார்க்கும் தூரத்தில் அவர்களது தலை, தோள், இடுப்புக்கு மேல் காட்டுவதாக அமையும். கதையோடு தொடர்புடைய, கதையை நகர்த்திச் செல்லும் செய்திக் கூட்டமுடையதான இடைப்பட்ட படக் காட்சியில் உணர்ச்சியைக் காட்டும் சித்திரிப்பு குறைவு. ஏனெனில் காட்சி வெகு அருகிலும் இல்லை. தூரத்திலும் இல்லை. காட்டப்பட்டுள்ள பொருட் களைப் பற்றி அறிந்துகொள்ளு கிறோம். தூரப் படக் காட்சியைத் (long shot) தொடர்ந்து இக்காட்சி வந்தால் கதை குறித்து நமது கவனத்தை அதிகப் படுத்துவதாய் அமையும். எந்த படக் காட்சியில் (shot) எடுக்க வேண்டும் என்று எழுத்துப் படிவத்தில் (script) குறிப்பிடப்படாத போது படம் எடுப்போர் இந்த இடைப்பட்ட காட்சியில் எடுப்பது வழக்கம். MSஎன்று சுருக்கமாகக் குறிக்கப்படும். காமிரா இக்காட்சியின் போது தனிநபர் அல்லது குழுவினர்



திரையை நிறைத்திருக்கும் அளவில் சுற்றுப்புறச் சூழல் அதிகம் காட்டப் படாத அளவுக்கு எடுத்தல் இக்காட்சி வகைப்படும்.

Megabite : (மெகாபைட்) 1000 பைட்கள்.

Mega million : (மெகா மில்லியன்) 10 லட்சம் மெஹாவாட்ஸ்-ஒரு நொடிக்கு உண்டாகும் இலட்சக் கணக்கிலான அலைவரிசையைக் குறிப்பிடுவது.

Memoir : (இறந்தவரது வாழ்க்கைக் குறிப்பு)

Memory : (கணிப்பொறிச் சேமிப்பு) கணிப்பொறியில் உட்செலுத்தப்படும் செய்திகள் சேமித்துவைக்கப்படும் நிலை.

Merge : (இணைப்பு) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இணைக் கூறுகளை ஒன்றாக இணைப்பது. கணிப்பொறி யில் ஒரு இணைப்பு மையத்திலிருந்து (terminal) மற்றொரு இணைப்பு மையத்திற்கோ அல்லது திரையில் ஒரு புறமிருந்து மறுபுறத்திற்கோ இணைப்பு மேற்கொள்ளப்படும்.

Message : (செய்தி) நிருபர்களிட மிருந்தும், செய்தி நிறுவனத்திலிருந்தும் விளம்பர நிறுவனங்களிலிருந்தும், பத்திரிகை மற்றும் வானொலி, தொலைக்காட்சி நிலையத்திற்குச் செய்தி தரப்படுகிறது. எழுதுபவர் செய்தியின் சாரத்தை மீண்டும் ஒருங்க மைத்துத் தகுந்த வடிவத்திற்கேற்ப (செய்தித்தாள் மற்றும் ஒலி/ஒளிபரப்பு நிகழ்ச்சிக்கேற்ப) எழுதுகிறார். ஒரு நாளிதழுக்கும் ஒரு இலக்கியத்துக்கும் உள்ள வேறுபாடு அவ்விரண்டன் தொடர்களில் உள்ள நீளம், அவற்றின் சொற்களில் உள்ள அசைகளின் எண்ணிக்கை முதலிய வற்றில் அல்ல ; அவை சொல்ல முயற்சிப்பது என்ன? அவை எவ்வாறு சொல்லப்பட்டுள்ளன என்பதைப் பொறுத்தே அமையும்.

Metered rule : (கோணத் தண்டு) கோணம் அமைந்த தண்டு. சரியான கோணத்தில் வெட்டப்பட்ட தண்டு.

Metre : (கோண வெட்டு) 'கோணத்தின் படி வெட்டு' என்ற குறிப்பு. நாளிதழில் பத்தி பிரிக்கும் கோட்டின் முனை எப்போதும் 45 டிகிரி கோணத்தில் வெட்டப்பட்டு இருக்கும். அப்பொழுதுதான் அடுத்த கோடு அமையும் போது இடைவெளி இல்லாமல் ஒன்றோடொன்று பொருந்தும். அப்படி இல்லாவிட்டால் அவ்வாறு வெட்டவேண்டும் என்று குறிப்பிடும் சொல்.

Metro : (மெட்ரோ) பெரிய நகரங்களில் வெளியிடப்படும் செய்தித்தாள். 'Metropolitan magazines' என்ற சொல்லும் இதே பொருளைக் குறிக்கும்.

Metro desk : (பெரிய நகர்ச் செய்தி மேசை) பெரிய நகரச் செய்தித்தாள் தயாரிப்பில் பெரிய நகரச் செய்திகளைக் கையாளும் மேசை.

M.F. : (மேலும் வரும்) 'More follows' என்ற ஆங்கிலச் சொற்றொடரின் சுருக்கம். ஒரு செய்தியின் முடிவில் இன்னும் இச்செய்தி குறித்த மேல் விவரம் வரும் என்று அச்சுக்கோர்ப்பு மேற்பார்வையாளருக்குக் கொடுக்கப் படும் குறிப்பு.

Microphone : (ஒலிவாங்கி) ஒலி அலைகளை மின் அதிர்வுகளாக மாற்றும் சாதனம் ; MIC, MIKE என்றும்குறிப்பிடப்படும். கேட்டல் தொடர்பான தயாரிப்புக்களில் எந்த ஒரு ஒலியையும் வாங்கும் செயல்

ஒலிவாங்கியில் நடைபெறுகிறது. ஒலிவாங்கி ஒலிச் சக்தியை மின் கடத்தல்களாக மாற்றுகிறது. அப்படி யானால்தான் ஒளிபரப்புப் படுவதற்கு ஏதுவாக நாடாக்களில் அல்லது இசைத் தட்டுக்களில் சேமித்து வைக்கப்பட முடியும். மற்ற ஒலிகளைக் குறிக்கும் பிற குறியீடுகளுடன் கலக்கப்பட முடியும். ஓர் ஒலிவாங்கி மட்டும் ஓர் இடத்தில் உள்ள எல்லா ஒலிகளையும் சேகரிக்கப் பயன்படலாம். ஆனால் பல ஒலிவாங்கிகளைப் பயன் படுத்தினால் பல்வேறு விதமான தொடர்புடைய ஒலிகளைச் சேகரிக்கலாம். சான்றாக கால்பந்துப் போட்டி நடைபெறும் அரங்கில் அறிவிப்பாளர்கள் ஒவ்வொரு வருக்கும் தனித்தனி ஒலி வாங்கி வைத்தல்; அதேபோல் இசைக்குழுவில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஒலிவாங்கி வைத்தல் முதலியன ஆகும். சம அளவு ஒவ்வொரு அளவிலும் ஒலி கிடைக்க ஒலிவாங்கி வழிவகுக்கிறது. துல்லிய மாக ஒலிப்பதிவு செய்யவும் (stereo recording) பல ஒலி வாங்கிகள் பயன் படுத்தப்பட வேண்டும். ஒலிவாங்கி, வானொலி ஒலிபரப்பில் தேவைப்படும் அடிப்படைச் சாதனம். பொதுவாக ஒரு காட்சியில் பயன் படுத்தப்படும் ஒலி வாங்கிகள் கணக்கற்றவை. செய்தி வாசிப்பதற்கு ஒன்றுமட்டும் போதும். வானொலி நாடகத்திற்கு இரண்டு ஒலி வாங்கிகள் தேவை. இசைக் குழு, நிகழ்ச்சி, குழு கலந்துரையாடல், விவாத நிகழ்ச்சி, பேட்டி போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஒலிவாங்கி தேவை.

நிகழ்ச்சி எழுதுபவர் நிகழ்ச்சி தருப வருக்கும் (பேசுவோர்) ஒலிவாங்கிக்கும் இடையில் உள்ள தொடர்புநிலையை அதாவது தூர அளவைச் சுட்டி எழுத வேண்டும். இரண்டும் இருக்க வேண்டிய இடங்கள் கேட்போர் இருக்கும் இடத் தொடர்பமைவைத் தீர்மானிக்கிறது. வானொலி நாடகத்தில் மகிழ்வுந்தில் செல்பவருடன் தான் இருப்பதாக நேயர் உணர்ந்து கொண்டிருக்கும்போது மகிழ்வுந்து விழும் ஓசை, பாத்திரத்தின் அலறல் இரண்டும் தான் மகிழ்வுந்தில் இருப்பதாக உணரும் நேயருக்கு எந்த அளவு தொலைவில் (மிக அருகில்) கேட்க வேண்டுமோ அந்த அளவில் கேட்க வேண்டும். ஒலிவாங்கி நிலைகள் பின்வரும் விதங்களில் உதவுகின்றன. பாத ஓசைகள் மறைதலும் (fading off) அதைத் தொடர்ந்து கதவைத் திறந்து மூடுதலும் ஒருவர் வெளியே போவதையும் அதுபோல பாத ஓசை வருதலும் (fading in) அதைத் தொடர்ந்து கதவைத் திறந்து மூடுதலும் ஒருவர் வருவதையும் காட்டு கின்றன. நாடக நிகழ்ச்சியில் நிகழ்ச்சிப் பகுதிகளைப் பிரித்துக் காட்டவும் கால மாற்றத்தைக் காட்டவும் அல்லது இட மாற்றத்தைக் காட்டவும் உதவுகின்றன. இடமாற்றத்தைக் குறிப் பதற்கு மாற்றி வைக்கப்படும் வேறு ஒலிகள் பயன்படும். பிரிவைக் குறிக்க ஒரு இரயில் வண்டி புறப்பட ஆணை பிறப்பிக்கும் விசில் சப்தங்கள் இடையே வந்து போவதாகக் (cross fade) காட்டுதல் போன்ற செயற்கையான விளைவுகளைக் காட்டவும் இசை பயன்படும். ஒலி, இசை இரண்டன் கலப்பு தேவைப்படு மிடத்துச் செயற்கையான உண்மை யற்ற இயல்பற்ற விளைவைக் காட்ட அதாவது எளிமையிலிருந்து சிக்கலுக்கு அழைத்துச் செல்லப் பயன்படும்.

Microwave : (நுண் மின்காந்த அலைகள்) பொதுவாக ஒன்று முதல் 100 செ.மீ. நீளமுடையதாய் இருக்கும் இவ்வலைகள். பார்வை ஒளிபரப்பின் கோடுகளில் நுண்மின்னணுச் சுற்றுக் களுக்கு அடிப்படையான ஒன்று இவ்வலை. விண்வெளி ஆராய்ச்சித் தொழில்நுட்பங்களுக்கும் அடிப்படை யான ஒன்று.

Middle space : (நடு இடைவெளி) நான்கு 'எம்' இடைவெளி அச்சு.

Mill : (தட்டச்சுப் பொறி) தட்டச்சுப் பொறியைக் குறிக்கும் கொச்சை வழக்கு.

Miniature : (நுண் பக்க அமைப்புத் திட்டம்) ஒரு பக்க அமைப்புத் திட்டத்தின் (layout) அல்லது பக்க அமைப்பு மாதிரியின் (dummy) சிறு அளவுக்குட்படுத்தப்பட்ட நுண் பிரதி.

Minicam : (தொலைக்காட்சிச் சிறு காமிரா) மிகச் சிறிய வடிவமாக்கப்பட்ட காமிரா. இதை எங்கும் கையில் எடுத்துச் செல்ல முடியும். ஒளிநாடா வைப் பயன்படுத்திப் படங்களை நேரடியாக நிலைய அரங்குக்கே உடனடியாக அப்படியே பயன்படுத்து மாறு இதனால் அனுப்பப்பட முடியும். மிகவும் செலவு மிக்கதும் நேரம் பிடிப்பதுமான படத் தயாரிப்பு முறையை இக்காமிரா நீக்கிவிட்டது. நிகழ்ச்சி நடக்கும் இடத்திலிருந்து படத்தைப் பிடித்து உடனே ஒலி/ஒளிபரப்பக் கூடிய ஆற்றலுடனான எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய மின்னணு காமிரா.

Minimum focussing distance : (குறை குவியத் தூரம்) காமிரா பொருளை/பொருட்களை நோக்கிப் பாரக்கக்கூடிய மிகச் சிறிய தூரம்.

Minion : (7 புள்ளி அச்செழுத்து)

Ministry of Information & Broadcasting : (இந்திய அரசின் தகவல் ஒலிபரப்பு அமைச்சகம்)

Mirror shot : (கண்ணாடிப் படக்காட்சி) காமிரா ஒரு பொருளை நேரடியாகப் பார்க்காமல் ஒரு கண்ணாடி வழியாகப் பார்ப்பதாக அமைத்து எடுக்கப்படும் படக்காட்சி.

Misprint : (பிழைப் பதிப்பு) சரியாக அமையாத அச்சு. பக்க அமைப்பில் ஏற்பட்ட தவறு.

Missing angles : (விடுபடு கோணங்கள்) அர்த்தம் தரத்தக்க வகையில் பதிப்பித்தலுடன் தொடர்பு டையது. ஒளிபரப்புப் படப்பிடிப்பின் போது கருத்தைக் குழப்பிக் கொள்ளு வதால் அல்லது சொற்களைத் தவறாகப் பயன்படுத்துவதால் சில சமயங்களில் நிருபர் செய்திக் கதையின் ஒரு முக்கிய கோணத்தை விடுபடச் செய்துவிடுவது உண்டு.

Missing explanatory meterial : (விடுபடு விளக்கப்பொருள்) அர்த்தம் தரத்தக்க வகையில் பதிப்பித்தலுடன் தொடர்புடையது. பதிப்பிக்கப்பட்ட செய்தியில் ஏதோ ஒன்று இழக்கப்பட்டு விடுகிறது. காரணம், ஒரு ஆசிரியர் தன் கருத்து தவறிவிடலாம் என்று கருதி விளக்காமல் விட்டுவிடுவார். போட்டிப் பத்திரிகைகள் நாளிதழ்த் தயாரிப்பையும் வணிகத்தையும் மொத்தப் படுத்தியிருப்பதால் குறிப்பிட்ட நாளிதழ் ஆசிரியர் தம் பத்திரிகையின் தனித்தன்மையைப் பராமரித்து வரும்போதிலும் தலைநகரில் நாளி தழின் அழிவு குறித்த வினா பேசப் படுகிறது என்று தெரிந்து விழிப்புடன் செயல்படும் ஆசிரியர் தன்னை வாசகன் இடத்தில் நிறுத்தி அதாவது செய்தி போதும் என நினைக்கும் வாசகராக மட்டுமன்றி இச்செய்திகள் அனைத்தும் எவ்வெப் பொருள் பயப்பன, இதன் விளைவுகள் என்னென்ன? என்று பார்க்கும் வாசகன் இடத்தில் தன்னை நிறுத்திப் பார்த்துச் செயல்பட வேண்டும். இதனால் சிலவற்றை அவர் விளக்காது விட்டுவிடலாம். அதன் வாயிலாகத் தனது பத்திரிகையின் அழிவை அவர் காக்கலாம்.

Mix : (கலவை) ஒரு பொருள் மறைதலும் அடுத்த பொருள் வருதலும்

ஆகிய கலவைச் சிறப்பு. காட்சியில் முதல் படம் இரண்டாம் படத்தோடு கலக்கும்.

Mixer : (கலப்பான்) ஒலிக் குறியீடு களைக் கலக்கும் ஒலிவாங்கி மற்றும் ஃபோனோகிராப் போன்ற சாதனங்கள்.

Mixing sound effects : (கலப்பு ஒலி நேர்த்தி) ஒலிக் குறிகளை அதன் நயம் வெளிப்படுமாறு கலந்து வானொலி ஒலிபரப்பிற்குப் பதிவு செய்தலைக் குறிக்கும்.

Mobile microphone : (நகரும் ஒலி வாங்கிகள்)

Modem : (குறியீடு அனுப்புக் கருவி) கணிப்பொறிக் குறியீடுகளைத் தொலைபேசி வழியாகப் பரிமாற்ற அனுமதிக்கும் MOdulator, DEMo dulator என்பதையே MODEM எனச் சுருக்கமாக அழைப்பர். கணிப் பொறியின் எண்ணுருக்களை (0,1) தொலைபேசித் தடத்தில் மாற்றுதற் கேற்ற +,-ஆக Modulator மாற்றித் தரும். மறுமுனையிலுள்ள Demodulator +,- குறிகளை மீண்டும் கணிப்பொறிக் கேற்ப 0,1 ஆக மாற்றித் தரும். ஒரே கருவி 2 பணிகளையும் செய்வதால் இப்பெயர் ஏற்பட்டது.

Moderator : (நடுவர்) விருந்தாளர் எனவும் அழைக்கப்படுவர். பேட்டியை/ கலந்துரையாடலை நடத்துபவர். இவரும் நேயர்களை வகைப்படுத்தி அவர்கள் பற்றித் தெரிந்து வைத்துக் கொண்டு அதற்கேற்றபடி பேட்டி தருபவரிடம் கேள்விகள் கேட்க வேண்டும்.

Modern type : (நவீன எழுத்து) மெஸ்லோடின்ட் எனவும் குறிக்கப் படும். 1) ஓர் எழுத்தின் கீழ்ச் சரியும் கோடுகள் பட்டையாகவும் மேல் நோக்கிச் செல்லும் படுக்கைக் கோடுகள் மெல்லியதாகவும் இருக்கும் எழுத்துக் கள். 2) அச்சுத் தகட்டின் மட்டத்திற்குச் சற்று குழிந்திருக் கின்ற எழுத்துக்கள்.

Modulation : (ஒலி ஏற்றத்தாழ்வு) ஒலிபரப்பில் அல்லது ஒலிப்பதிவில் ஏற்படும் ஒலி ஏற்றத்தாழ்வுகள்.

Moffussil : (மாவட்டச் செய்தி) மாவட்டச் செய்தி ; பத்திரிகைகள் சுற்றப்புற மாவட்ட அளவிலான செய்தி களைக் குறிக்கின்ற சொல்.

Moire : (பதிப்புப் படிமை முறை வகை) தொடர்ச்சியான பதிப்புப் (tone) படிமை முறையிலான படங்களை உரு வாக்குதலின்போது பயன்படுத்தப்படும் இரண்டு அல்லது மூன்று திரைகளை மோதச் செய்து உருவாக்கப்படும்.

Mongle : (அட்டைப் பிரதி இயந்திரம்) அட்டைப் பிரதி எடுக்கும் இயந்திரம். பாரத்தை வெற்று அட்டையில் வைக்கும் புதிய இயந்திரம்.

Monitor : 1. (திரை), 2. (ஒலிபெருக்கிக் கேட்கத்தரும் இயந்திரம்) 3. (குறிப் பெடுத்தல்). 1) தொலைக்காட்சிப் படங்களை அல்லது கணிப்பொறி ஆக்கத் தரவுகளை விரித்து வைத்துக் காட்டப் பயன்படும் திரை. 2) ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க அல்லது கேட்க உதவும் கருவி. வானொலிக் கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு டையது. ஒரு மானிடர் என்பது ஒரு ஒலிபெருக்கி மற்றும் தலைபேசி (head phone) ஆகும். அதாவது ஒலிபரப்பை

இயக்குபவர் நிகழ்ச்சி தொடர்பான வற்றைக் கேட்கும் வண்ணம் தரப்படுகின்ற அல்லது ஒலிபரப்பப் படுபவற்றை ஒருவர் கேட்க உதவும் இயந்திரக் கூறு monitor எனப்படும். இயக்குநர் இக்கருவியில் உள்ள தெரிவுப் பொத்தானின் மூலம் தான் கேட்க வேண்டியவற்றைத் தெரிவு செய்துகொள்ள முடியும். மானிடர் என்ற இக்கருவியில் ஒலி அளவுக் கட்டுப் பாட்டுப் பகுதி உண்டு. இது காற்றில் ஒலிபரப்படும் நிகழ்ச்சிகளின் ஒலி அளவைப் பாதிக்காது. கட்டுப்பாட்டு அறை மானிடரில் கேட்கப்படும் நிகழ்ச்சியின் ஒலி அளவை மட்டுமே பாதிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. 3) இச்சொல்லையே வினையாகப் பயன்படுத்தினால் ஒலிபரப்பு நிலைய நிகழ்ச்சிகளைக் கேட்டு, கவனித்து குறிப்பு எடுத்தலைக் குறிக்கும்.

Monochromo image : (கறுப்பு வெள்ளை உரு) கறுப்பு மற்றும் வெள்ளை உரு.

Monopod : (விரிவுத் துளை) காமிராவை அசையாமல் வைக்கும் பொருட்டு ஒரு காமிராவின் அடிப் பாகத்தில் பொருத்தப்பட்டுள்ள தனி விரிவுத்துளை.

Monotype : (தனி அச்சு எழுத்து வார்ப்பு இயந்திரம்) தனித்தனி எழுத்துக்களை வார்க்கின்ற அச்சு இயந்திரம். வரி வரியாக எழுத்துக் களை வார்க்கும் முறை இதில் இல்லை. எனவே இவ்வியந்திரம் பிறவற்றினின்று பெரிதும் வேறுபட்டது. தால்பர்ட்டு லான்ஸ்டன் என்பவர் 'மானோடைப்பு' என்னும் அச்சுப் பொறியைஅமைத்தார். அச்சகங்களுக்கு வேண்டியபடி தனித் தனி அச்செழுத்துக்களை உருக்கி வார்த்துத்தரும் இப்பொறிக்கு 'மானோ டைப்பு' என்று பெயர். ஒரு பாகம் அச்சடிக்கும் பொத்தான்களைக் கொண்டும் மறுபாகம் அச்செழுத்தை உருக்கி வார்க்கும் பகுதியைக் கொண்டும் 'மானோ டைப்பு' விளங்குகிறது. இதில் மொத்தம் 276 பொத்தான்கள் உள்ளன. பொறியில் பொருத்தப்பட்ட காகிகத்தில் பொத்தான்களை அழுத்தியவுடன் சிறிய வட்டமான துளைகள் ஏற்படுகின்றன. இக்காகிதம் அச்சு வார்க்கும் பகுதியில் இணைக்கப் பட்டவுடன் காற்றமுக்கத்தின் உதவியால் எழுத்துக்களுக்கு வேண்டிய அச்சுருக்கள் நெம்புகள் (lever) மூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றன. பொறி இயக்கப்பட்ட வுடன் தலைப்பில் உள்ள இருப்புச் சட்டம் தூக்கப்பட்டு சரியான எழுத்துக் கள் உருக்கி வார்க்கப்படும். பின் அவை ஒன்றன் பின் ஒன்றாக வெளியே இருக்கும் அச்சுத் தகட்டுக்குத் தள்ளப் படும். மானோடைப்பில் தனித்தனி எழுத்துக்களை வார்ப்பதால் கையச்சுக் கோப்பு முறையைப்போல் உடனுக் குடன் திருத்தம்பண்ண முடிகிறது.

Montage : (இணைப்பு ஒலி/ஒளி) ஓர் ஒட்டுமொத்த நேர்த்தியை உண்டு பண்ணும்பொருட்டு மிக விரைவாகத் தொடர்ந்து அசையும் அல்லது அசை யாப் படங்கள் தொகுக்கப்படுதல். வானொலியில் தொடர்பல்லாத ஒலி கள் ஒன்றிணைக்கப்படும் திட்டம் ஒலி இணைப்பு எனப்படும். தொடர்ந்து வரும் காட்சிகளை இணைப்பதற்கு இவை பயன்படுகின்றன. நாடெங்கும் புரட்சி வெடித்துக் கொண்டிருக்கிறது என்று அறிவிப்பாளர் கூற இதைத் தொடர்ந்து உயர்ந்த சுரத்தில் ஓர் ஒலி : அதனைத் தொடர்ந்து இசைகள், குரல்கள் அறிவிப்பாளர் இடத்திலி ருந்து தரப்படுதல் எங்கோ எதுவோ உடை வது போன்ற ஒலியைத் தரும் ; வேகமாகத் தொடர்ந்து இவை ஒலிக்கப்பட்டால் இணைப்புச் சிறப்பு (montage effect) கிடைக்கும்.

Moral compaigners : (நீதிப் பிரச் சாரக் குழுவினர்)

Moral entrepreneurs : (நீதித் தொழில் வல்லுநர்கள்) புதுச் சட்ட உருவாக்கம் மூலம் நீதி நிலைநாட்டும் தொழில் வல்லுநர்கள்.

MORE : (இன்னும்) இச்செய்திக் கதை இத்துடன் முடியவில்லை, இன்னும் வருகிறது என்பதைக் குறிக்க ஒரு பக்கத்தின் இறுதியில் பயன்படுத்தப் படும் குறியீடு. அடிப்படை வானொலி நிகழ்ச்சி வடிவத் திட்டத்துடன் (Basic Radio Layout) தொடர்புடையது. ஒரு பாத்திரம் பேசும் வரிகள் எழுத்தறிக் கையின் ஒரு பக்கத்திலிருந்து அடுத்த பக்கத்திலும் இருந்தால் எச்சரிக்கைச் சொல்லாகிய MORE MORE MORE என்பது அப்பக்கத்தின் கீழ் பயன் படுத்தப்பட வேண்டும். இவ்வெச் சரிக்கை, நடிகரைத் தன் பேச்சு முடிந்துவிட்டது என்று நினைப்பதைத் தடுக்கிறது. ஆனால் அடுத்த பக்கத்தில் முதல் வரி வேறொரு பாத்திரம் பேசுவதாக இருப்பின் முதல் பக்கத்தின் அடியில் இக்குறியீடு பயன்படுத்தப் படாது.

Morgue : (செய்தித்தாள் நூலகம்) தகவல் சேகரிக்க உதவும் நூலகம் ; நிழற்படம், நாளிதழ், இதழ் முதலிய வற்றிலிருந்து வெட்டப்பட்ட குறிப்புக் கள் போன்ற அனைத்து வகைத் தகவல் களையும் சேர்த்து வைத்திருக்கும் செய்தித்தாளின் சேமிப்பு மையம்.

Mortise : (வெட்டு படம்) வெளிப்புற ஓரங்களுக்குட்பட்ட பகுதிகளிலிருந்து ஒரு பகுதி நீக்கப்பட்ட ஒரு படம்.

Mound : (மவுண்டு அல்லது உலோகக் கட்டை) கூட்டு உலோகத்தாலான கட்டை. பக்க அமைப்புக்குப் பயன்படும். இரண்டு வகையான உயரத்தில் வார்க்கப்பட்டு இருக்கும். ஒரு பத்தி அகலத்தில் இருந்து, எட்டுப் பத்தி அகலம்வரை இருக்கும். அச்சு எழுத்தின் உயரத்தைவிடச் சற்று உயரம் குறைவாக இருக்கும். இது 'பத்தி மவுண்டு' என்று சொல்லப்படும். மற்றொன்று அதைவிடச் சற்று உயரம் குறைந்ததாக இருக்கும். இது பிளாக் மவுண்டு எனப்படும். இதை ஸ்டீரியோ பிளாக் வைக்கப் பயன் படுத்துவார்கள்.

MPA : (சஞ்சிகை வெளியீட்டாளர் சங்கம்) 'Magazine Publishers Association' என்ற சொற்றொடரின் முதலெழுத்துச் சுருக்கம்.

MTC : (மேலும் வரும்) 'More to come' என்ற ஆங்கிலச் சொற்றொடரின் முதலெழுத்துச் சுருக்கம். 'மேலும் வரும்' என்பது பொருள். ஒரு செய்தி யைப் பற்றிய விளக்கம் மேலும் வரும் என்று அச்சுக் கோர்ப்பு மேற்பார்வை யாளர்களுக்குக் கொடுக்கப்படும் குறிப்பு.

Multi image mirrors : (பல உருவக் கண்ணாடிகள்)

Multiple voice ads: (பல் குரல் விளம்பரங்கள்) பல குரல்களைப் பயன்படுத்தித் தயாரிக்கும் விளம் பரங்கள். ஒரு குரலை மட்டுமே பயன் படுத்தி விளம்பரம் தயாரிப்பது விரைவில் தயாரிக்கக் கூடியதும் செலவு குறைந் ததுமான முறையாகும். சான்று : போலியோ தடுப்பு பற்றி தமிழ்த் திரைப்பட நடிகர் ரஜினிகாந்த் மட்டுமே பேசும் முறையில் தயாரிக்கப்பட்ட சென்னைத் தொலைக்காட்சித் தமிழ் விளம்பரம். பல குரல்களைப் பயன்படுத்தி விளம்பரம் தயாரிப்பதில் பல்சுவை (variety) இருக்கும். பல குரல்களைப் பயன் படுத்தி விளம்பரம் எழுதப் பின்வரும் இருமுறைகள் கையாளப்படுகின்றன. 1) உரையாடல்

பாணி : சான்று :'என்ன ஆச்சு? குழந்தை அழுதது. அவனுக்கு உட்வார்ட்ஸ் கிரேப் வாட்டர் கொடுக்கச் சொல்லு, நீ குழந்தையா யிருக்கும் போது அதுதான் கொடுத் தேன்' என்ற சென்னைத் தொலைக் காட்சித் தமிழ் விளம்பரம் 2) ஒரு பொருளைப் பற்றிப் பலர் ஒவ்வொரு வராக வரிசையாகச் சொல்வது : சான்று : ரின் சலவை சோப் பற்றிப் பலர் தத்தம் கருத்துக்களை வரிசையாகச் சொல்வது.

Multiplexer : (ஒலி/ஒளி ஸ்விட்சுகள்) தொடர்ந்துவரும் ஒலி/ஒளி ஆதாரங் கள் ஒரே நேர்க்கோட்டில் ஒலி/ ஒளிபரப்புக்காக மிக விரைந்து செல்ல வழி அமைக்க அனுமதிக்கும் காட்சி மற்றும் ஒலி ஸ்விட்சுகள்.

Music : *(இசை) வணிக விளம்பரம்* தயாரிப்பதில் இசையைப் பயன்படுத்தித் தயாரிக்கும் முறையும் ஒன்று. இவ்விசைப் பயன்பாடு நேயர்கள் அவ்வணிக விளம்பரத்தை நினைவில் வைத்திருக்க உதவும். இசை மக்களது உணர்வைத் தூண்டும் ஆற்றல் உடையது. இசை, ஒலி முதலிய வற்றைக் கையாளும் உத்திகளைக் குறிக்கப் பலவிதமான கலைச் சொற்கள் நிகழ்ச்சி எழுதுவோரால் பயன்படுத்தப்படுகின்றன. அவை பின்வருமாறு : Segue : (ஒலி மாற்று) ஒரு ஒலியிலிருந்து மென்மையாக மெதுவாக மற்றொரு ஒலிக்கு மாறுதல், அதாவது ஒரு ஒலிக்கு அடுத்து மற்றொரு ஒலி வருதல். Cross-fade: (குறுக்கு நுழைவு) ஒரு ஒலி நுழையும் போது மற்றொரு ஒலியும் நுழைதல். Blending : (ஒலி இணைவு) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒலிகள் இணைந்து ஒரே சமயத்தில் ஒலிபரப்பப் படுதல். உரையாடல்+இசை, உரை யாடல்+ ஒலிச்சிறப்பு, ஒலிச்சிறப்பு +இசை அல்லது இவை மூன்றும கலந்தது என்று அமையும். தம்ளர்கள் உரசும் ஒலி, பின்னணியில் கோபமான பேச்சு, விளையாட்டு ஒலி முதலிய மூன்றும் கலத்தல் ஒலி இணைத்தலுக்குச் சான்று. Cutting or switching :(வெட்டுதல் அல்லது மாற்றுதல்) திடீரென ஒரு ஒலியை வெட்டிவிட்டு உடனடியாக இன்னொன்றை நுழைத்தல்.Fade-in & fade-out : (ஒலி-நுழைவு , ஒலி-மங்கல்) ஒலி அளவைக் கூட்டுதல் அல்லது குறைத்தல் ; உரையாடலின் போது குறைத்து அதன்பின் சற்று கூட்டியும் (நிகழ்ச்சி யினுள் அழைத்தல்-நிகழ்ச்சி யிலிருந்து வெளியே செல்லவைத்தல்) பயன் படுத்தல்.

Music bed : (இசைப் பின்னணி) நிகழ்ச்சியின் பின்னணியில் தரப்படும் இசை. விளம்பரத்தில் தரப்படுகிறது. உரையாடல், விளக்கம் முதலியவற்றில் இசைப் பின்னணி காட்சி மாற்றத்தை (transition) நல்குகிறது. முதன்மை நிகழ்ச்சிக்கு அடுத்து இரண்டாம் நிலையில் கவனத்தைப் பெறுகிறது. நேயர்களிடம் குறிப்பிட்ட உணர்வை ஏற்படுத்தப் பயன்படுகிறது.

Music programmes : (இசை நிகழ்ச்சி கள்) வானொலி, தொலைக்காட்சி முதலியவற்றில் மெல்லிசை, தேசபக்திப் பாடல், நாட்டுப்பாடல், குழுவிசை என்று பல்வகைப்பட்ட இசை நிகழ்ச்சி கள் அளிக்கப்படுகின்றன.

Must : (தவறாது அச்சிடுக) எழுத்துப் படியில் இச்சொல் குறிக்கப்பட்டு விட்டால் இச்செய்திக்கதை அன்றே தவறாது பயன்படுத்தப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஆசிரியரால் பயன்படுத்தப்படும் குறிப்பு ஆணை.

Mute film : (பேசாப் படம்)

MW : (மத்திய அலைவரிசை) 'Medium Wave' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம். இந்திய வானொலி நிலையங்கள் ஏறக்குறைய எல்லாமே இப்போது மத்திய அலைவரிசைகளில் தான் இயங்கி வருகின்றன. இவை நிகழ்ச்சிகளைச் சீரான அலைகளில் தாங்கிச் செல்வன.

N

Name plate : (பெயர்ப் பலகை) நாளிதழில் முதல் பக்கத்தில் மேலே பெரிய எழுத்தில் அமைக்கப் பட்டிருக்கும் நாளிதழின் பெயர். (logotype என்பதனுடன் ஒப்பிடுக. masthead என்பதனின்று வேறு படுத்துக.)

Names : (பெயர்கள்)'நபர்களின் பெயர்கள்தான் செய்திகள்' என்று கூறு மளவிற்குச் செய்திகளில் அடிபடக்கூடிய பெயர்கள் எவ்வளவு பிரபலமோ அவ்வளவுக்குச் செய்தியின் மதிப்பு அதிகரிக்கும். பெரிய தலைவர்கள் குறித்த எதுவாயினும் செய்தியாகிறது. மக்கள் பிரபலமான மனிதர்களைப் பற்றிய செய்தியை வாசிக்கப் பெரிதும் விரும்புவர். சான்று : 1) குறிப்பிட்ட விமான விபத்தில் பிரதம மந்திரி அல்லது முக்கிய தலைவர்கள் இல்லாமல் இருந்திருப்பாரேயானால் அச்செய்தி பின்னால் உள்ள பக்கங்களுக்குத் தள்ளப்படடுவிடும். 2) கார் விபத்து ஒன்று நிகழ்ந்தால் அதில்ஒன்று முதலமைச்சரின் காராக இருக்குமானால் அது முக்கியச் செய்தியாகி விடுகிறது.

NANA : (வடஅமெரிக்கச் செய்தி உரிமைக் குழு) 'North American Newspaper Alliance' என்ற செய்தி உரிமைக் குழுவின் முதலெழுத்துச் சுருககம்.

Narration : (கூற்று முறை) ஒரு நிகழ்ச்சியின் பகுதிகளையே இருவர் குரல்களில் படைப்பது பிரிப்பு விவரிப்பு முறை (split narration) எனப்படும். சான்றாக அறிஞர் பற்றிய நிகழ்ச்சியில் அவ்வறிஞர் பற்றிய உரை கூறுபவர் ஒருவர் கூறிக்கொண்டே வர இடையிடையே அவ்வறிஞரின் தேர்ந்தெடுக்கப்பட்ட மேற்கோள்களை மற்றொருவர் கூறும் முறையில் அமைத்தல் இவ்வகை. வானொலி, தொலைக்காட்சி விளம்பரங்களிலும் இவ்வணுகுமுறை அடிக்கடி பயன்படுத்தப்படும்.

Narrator : (விவரிப்பாளர்) செய்தி ஒலி பரப்பில் காமிரா செய்தி வாசிப்பவரைக் காட்டாமல் செய்தி நிகழ்ச்சியைக் காட்டும்போது அவர் குரலை மட்டுமே நிகழ்ச்சிப் பின்னணியுடன் காட்டுவது.

Narrow angle : (குறுங்கோணம்) குறுகிய கோணப் பார்வையில் காமிரா பொருளைப் படம் எடுப்பது.

National Council for Educational Research and Training : (கல்வி ஆய்வு மற்றும் பயிற்சிக்கான தேசியக் குழு)

National orchestra : (இந்தியப் பல்லியக் குழு)

Natural sound : (இயற்கை ஒலி) ஒரு படம் எடுக்கப்படும்போது அதே நேரத்தில் அங்கு உள்ள ஒலியையும் நாடாவில் பதிவு செய்தல்.

NBC : (தேசிய ஒலிபரப்பு நிறுவனம்) 'National Broadcasting Company' என்ற சொற்றொடரின் முதலெழுத்துச் சுருக்கம்.

Neck mike : (கழுத்து ஒலிவாங்கி) கழுத்தில் உள்ள ஒரு வளையத்தி லிருந்து தொங்கவிடப்பட்டுள்ள மிகச் சிறிய மென்மையான எடையுள்ள ஒரு ஒலிவாங்கி.

Needs assessment : (தேவைகள் மதிப்பீடு) தங்கள் நிறுவனத்தைப் பற்றியே அந்நிறுவன உரிமையாளர்கள்

அதன் பணியாளர்களுக்கு ஒரு ஒலி ஒளிப் படத்தைப் போட்டுக் காட்டி அதன்பின் அவர்கள் கருத்தைக் கேட்டு அதனடிப்படையில் தேவைகள் பற்றி மதிப்பிடும் முறை உண்டு.

Negative Image : (எதிர் உரு) சுழற்சியான ஈரெதிர்த் தன்மையுள்ள உருக்கள். சான்றாக கறுப்பு வெள்ளை யாக்வும் வெள்ளை கறுப்பாகவும் ஆதல்.

Network : (வலைப்பிணைப்பு) பல்பகுதியை இணைக்கும் இணைப்பு மையங்களாகிய வலைப்பிணைப்பு முக்கியமாகச் சில நிகழ்ச்சிகளைக் குறிப்பாக செய்திகள், விளக்கப் படங்கள், பொதுத்துறை நிகழ்ச்சிகள் முதலியவற்றைத் தயாரிக்கின்றன. இவ்வமைப்புக்கள் சில சுதந்திரமான தயாரிப்பு நிறுவனங்கள் தயாரிக்கும் படைப்புத் தொடர்களை விலைக்கு வாங்கி அதாவது தம் இணைப்பு வழி தஙகளுககுக் கட்டுப்பட்ட நிலையங்களுக்கு அபபடைப்புத் தொடாகளைப் பரப்பும் உரிமையை வாஙகிக் கொள்கிறது. வலைப் பிணைப்புக்களிலிருந்து தோன்றும் முதன்மை நேரப் பொழுதுபோக்குப் படைபபுக்கள் பொதுவாகச் சுதந்திரத் தயாரிப்பாளர்களிடமிருந்து பெற்ற வையே. 1970களில மாறுபட்ட பிரச்சினைகளை அடிப்படையாகக் கொணட வலைப்பிணைப்பு ஒளிபரப்புச் செயதிகள் (network coverage) நிறைய வநதன. செய்தி நிறுவனஙகளிலிருந்து மெல்ல மெல்ல விடுபட்டு நிகழ்ச்சிகள் சுதநதிரம் அதிகமுள்ள வலைப் பிணைபபுகளுக்கு வந்தன. ஆனால் தேசிய விளம்பரங்களை (national spots) இவ்வலைப்பிணைப்புக்கள் அதிகமாகச் சார்ந்திருநதன. வலைப் பிணைப்புக்கள் பொதுத் தாக்கம், பொதுக் கட்டுப்பாடு முதலியவற்றைக் குறித்து நிற்காமல் விளம்பரதாரர் களுக்குப் பதிலாக அமைந்து ஆனால் தலையாய மரபுவழிப்பட்ட சிந்தனைகள், இரசனைகளையே ஒலிபரப்பிப் பிரதிபலித்தன.

New lead : (புது முகப்பு) ஏற்கனவே அனுப்பப்பட்ட செய்தியில் அல்லது அச்சாகிக் கொண்டிருக்கும் செய்தி யில் உள்ள ஒரு பத்திக்கு முன்னர் சேர்த்துக் கொள்ளும் வகையில் புதிதாக அப்போதுதான் எழுதப்பட்ட ஒரு முகப்பு ஆகும். இந்த புது முகப்புக் கும் முன்னர் ஏற்கனவே எழுதப்பட்ட முகப்பு அமையும். இவ்வாறு எழுதப்படும் புது முகப்பு அச்செய்தி குறித்துக் கிடைத்த புதிய செய்தியை அடிப்படை யாக வைத்து எழுதப்படும். ஒரு பத்தியையோ பல பத்தியையோ கொண்டிருக்கும். ஏற்கனவே அச்சாகிக் கொண்டிருக்கும் செய்தி யில் உள்ள முகப்பினை எடுத்துவிட்டு இதைச் சேர்த்துக் கொள்ளும் வகையிலும் சிலசமயம் அமையும். New top, New lead, NL என்றும் அழைக்கப் படும்.

News : (செய்தி) North, East, West, South என்ற நான்கு திசைப் பெயர் களின் முதல் எழுத்துக்களின் தொகுப் பிலிருந்து உருவான சொல். உலகம் முழுவதும் நான்கு திசைகளிலும் நடைபெறும் எல்லாச் செயல்களையும் குறிப்பது செய்தி என்ற பொருளில் இவ்வாறு தொகுக்கப்பட்டு இப்பெயர் வழங்கப்படுகிறது. சேம்பர்ஸ் அகராதிப் படி, புதிதாகக் கேள்விப்பட்ட ஒன்று செய்தி ஆகும். அப்போதுதான் நடை பெற்ற ஒன்றனைப் பற்றி முதலில் தரப்படும் தகவல் செய்தி எனப்படும். மக்கள் அறிந்துகொள்ள ஆர்வம் காட்டும் எந்த நிகழ்ச்சியும்/குறிப்பும் செய்தி ஆகும். மற்றும் எது புதுமையாக இருக்கிறதோ, முதன் முதலில் நடைபெறுகிறதோ அது செய்தி ஆகும்.

பலருக்கும் தெரிந்த ஒரு முதுமொழி 'ஒரு மனிதன் நாயைக் கடித்தால் அது செய்தி ஆகும்' என்பது. வாசகரது ஆர்வமே செய்தி மதிப்புக்கான உரைகல் என்பதற்குச் செய்தி குறித்த சில வரையறைகளைத் தரலாம். அவை : 1) செய்தி என்பது மக்களிடையே ஆர்வத்தை மிகுதிப்படுத்தும் முக்கியச் சம்பவங்கள் குறித்த முதல் அறிக்கை ஆகும். 2) செய்தி என்பது ஒரு துல்லியமான விபரக் குறிப்பு (account). அது அதிகமான மக்களை ஈர்ப்பதாக அமையும். 3) அப்போதுதான் நடந்ததும் வாசகர்களை ஈர்ப்பதுமான எதுவும் செய்தி ஆகும். 4) வழக்கத்திற்கு மாறுபட்டதும் தனித்தன்மை உடையதுமான எதுவும் செய்தி ஆகும். இங்கு கொடுக்கப்பட்டுள்ள எல்லா வரையறை இலக்கணங்களும் மக்களுக்கு ஆர்வமூட்டுதல் என்ற வார்த்தையைக் கொண்டுள்ளன. ஒரு கூட்டத்தை ஈர்க்கும் வகையில் அமைவது செய்தி என்பதை இவ்விலக்கணங்கள் ஒப்புக்கொண்டுள்ளன. இவ்வெல்லா அடிப்படைகளையும் கருத்தில் கொண்டால் செய்தி என்பது பின்வருமாறு : செய்தி என்பது ஒரு கருத்து, சம்பவம், சிக்கல், குறித்த ஒரு உண்மையான, துல்லியமான, குழப்பமில்லாத விபரம் ஆகும். மக்கள் பெரிதும் விரும்பும் ஒன்றாகிய உண்மையான ஒன்றைப் பற்றியோ அல்லது வழக்கத்திற்கு மாறுபட்ட ஒன்றைப் பற்றியோ எழுதப்பட்ட ஒரு விபரக் கூற்று (narration) செய்தி ஆகும். நேற்று நமக்குத் தெரியாத எதுவும் இன்று செய்தி ஆகும். 'துல்லியம்', 'மக்களுக்கு ஆர்வமூட்டுதல்', 'அப்போதைய நடப்பு' என்பவையே செய்திக்கு இருக்க வேண்டிய அடிப்படைக் கூறுகள்.

News agencies : (செய்தி நிறுவனங்கள்) பத்திரிகைக்குச் செய்திகளை வழங்குவதற்காகவே உலகம் முழுவதும் இயங்கிவரும் பல்வேறு செய்தி நிறுவனங்கள். நாளேடுகளில் ஒவ்வொரு செய்தியின் தொடக்கத்திலோ அல்லது முடிவிலோ பி.டி.அய்., யு.என்.அய்., ஏ.எப்.பி., ராய்டர் போன்ற சொற்கள் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டிருக்கும். இவை செய்தி நிறுவனங்களின் பெயர்கள். பத்திரிகைகள் உடல் என்றால் செய்தி நிறுவனங்கள் இதயம் என்று கூறப்படலாம். ஏனெனில் செய்தி நிறுவனங்கள் இல்லாவிடில் பத்திரிகைகள் நடைபெறுவது கடினம் எனலாம். ஒவ்வொரு செய்தி நிறுவனத்திலும் பத்திரிகைகள் சந்தாதாரராகச் சேர்கின்றன. இவ்வாறு சந்தா செலுத்தும் பத்திரிகை அலுவலகங்களில் செய்தி நிறுவனங்கள் டெலிபிரிண்டர்களை வைத்து ஏறக்குறைய 24 மணி நேரமும் செய்திகளை அனுப்பும். இந்தியாவில் தற்போது யுனைடெட் நியூஸ் ஆஃப் இந்தியா (UNI), 2) பிரஸ் டிரஸ்ட் ஆஃப் இந்தியா (PTI), 3) ஹிந்துஸ்தான் சமாசார், 4) சமாசார் பாரதி என்ற நான்கு செய்தி நிறுவனங்கள் மிகவும் பெரியவை. இராய்ட்டர், அசோசியேடெட் பிரஸ், டாஸ், ஏ.பி.என்., ஏ.எப்.பி., யு.பி.அய்., போன்றவை வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களாகும்.

News bank : (செய்தி வங்கி) பத்திரிகை அலுவலகங்களில் முக்கியச் செய்திகளைச் சேகரித்து வைக்க இப்படி ஒரு தனிப்பிரிவு இயங்கி வரும்.

News bulletins : (செய்தி அறிக்கைகள்) வானொலி, தொலைக்காட்சி முதலியவற்றில் இடம்பெறும் செய்தி நிகழ்ச்சிகள்.

News cycle : (செய்திச் சுழற்சி) செய்தி நாள் என்பது இரண்டு சுழற்சியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று பகல் சுழற்சி. இதன் விளைவாக மாலை நாளிதழ்கள் வெளிரும்.

மற்றொன்று இரவுச் சுழற்சி. இது காலை நாளிதழ்கள் வெளிவருதற் காகப் பணியாற்றும்.

News editor : (செய்தி ஆசிரியர்) நாளிதழ் அலுவலகத்தில் பணியாற்றும் ஆசிரியர் குழுவில் இடம்பெறும் ஒருவர். ஆசிரியர், செய்தி ஆசிரியர், துணை ஆசிரியர் போன்றோர் முதல் பிரிவினர். உதவி ஆசிரியர்கள் இரண்டாம் பிரிவினர். நிருபர்கள் மூன்றாம் பிரிவினர். புரூப் ரீடர் நான்காம் பிரிவினர். அலுவலகத்திற்கு வந்துசேரும் செய்திகளைத் தம் பத்திரிகைக்கு ஏற்ற வகையில் பதிப்பித்தல் செய்தி ஆசிரியரின் முக்கியப் பணி. செய்திகளைப் படித்து எந்தச் செய்திக்கு எவ்வளவு முக்கியத் துவம் கொடுக்க வேண்டும் என்று திட்டமிடுவார் பின் அவற்றை உதவி ஆசிரியர்களிடம் பிரித்துத் தர இவர் செம்மை செய்ததை அவர்கள் மீண்டும் செம்மை செய்து அச்சுக்கோர்க்க அனுப்புவர். செய்தி நீளம், தலைப்புப் பத்தி விபரம், ஒரு செய்தியில் உள்ள செய்திகளையே முக்கியத்துவப்படி ஒழுங்குபண்ணுதல், வேண்டாத செய்திகளை வெட்டுதல், வளவள என்று எழுதப்பட்டிருந்தால் இரத்தினச் சுருக்கமாக மாற்றி எழுதுதல் முதலிய பணிகளை மேற்கொண்டு செய்தியைத் தம் பத்திரிகைக்கு ஏற்ற வகையில் செம்மைப்படுத்தல் இவர் பொறுப்பு.

News film : (செய்திப் படம்) தொலைக் காட்சியில் பயன்படுத்தபபடுவதற் கென்றே அன்றாடம் நிகழும் சமபவங் கள் பற்றிய செய்திப்படம். பொதுவாக எதிர் பதிப்பதில் (நெகட்டிவ்வில்) உருவாக்கபபடுகிறது. அதன் பின்னரே ஒருநேர் பதிப்பு (Positive print) வானில் ஒளிபரப்பப் படுவதற்கெனத் தயாரிக்கப் படுகிறது.


News hole : (செய்தி இடம்) விளம்பரங் களையும் கட்டாயம் அச்சிட்டாக வேண்டும் என்று ஆசிரியரிடமிருந்து வந்த குறிப்புக்கேற்றபடி அத்தகவலைப் பொருத்திய பின் செய்திக்கும் செய்திப் படங்களுக்கும் என்று மீதி உள்ள இடம்.

Newspaper press : (நாளிதழ் அலுவலகம்) நாளிதழ் மற்றும் சஞ்சிகை களை அச்சிட்டு வெளியிடும் பத்திரிகை அலுவலகங்கள். இன்று பத்திரிகை அலுவலகங்கள் வணிக மயமாக்கப்பட்டு விட்டன. விளம்பரங்களினால் வரும் பணம் கருதியும் இலாபம் கருதியும் வணிக நோக்கில் செயல்பட்டு 'பொதுமக்கள் வாசகத் தன்மையை' உருவாக்கிப் பொதுமக்கள் பலரைக் கவரும் வண்ணம் செய்தி தருகின்றன.

Newsprint : (செய்தி அச்சீட்டுத் தாள்வகை) நாளிதழ்கள் அச்சிடப் படுவதற்கெனப் பயன்படுத்தப்படும் தாள். தாள் செய்வதற்குரிய கூழ் தயாரிப்பிற்குப் பயன்படும் மரத்தை மூலப்பொருளாகக் கொண்டு இத்தாள் கள் செய்யப்படுகின்றன.

News reel : (செய்தி மலர்) வானொலி ஒலிபரப்பில் தொகுக்கப்பட்டு வழங்கப் படும் செய்தி மலர்.

News room hierarchy : (செய்தி அறை இதழாளர் வரிசை) செய்தி அறையில் பணிபுரிபவர்களின் முக்கியத்துவ வரிசைக் கிரமத்தைப் பின் வரும் படம் விளக்குகிறது.



News service : (செய்திப் பிரிவு) வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் போன்றவற்றில் செய்தி சேகரிப்பு, ஒலிபரப்பு தொடர்பாக இயங்கிவரும் செய்திப் பிரிவு.

News sources : (செய்தி ஆதாரங்கள் (அல்லது) செய்தி கிடைக்கும் இடங்கள்) ஒரு நிருபருக்கு மொத்த உலகமும் ஒரு செய்திச் சுரங்கம் ஆகும். முறைப்படியாகச் செய்தி சேகரிப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு வழக்கமான செய்திகளைச் சேகரிப்பதற்கென முறைப்படுத்தப்பட்ட சில செய்தி ஆதாரங்கள் உள்ளன. நிருபர்கள் தமது அன்றாடச் செய்திகளின் பெரும்பகுதிக்கு இச்செய்தி ஆதாரங்களையே சார்ந்துள்ளனர்.

வழக்கமான செய்தி ஆதாரங்கள் : எல்லா தரமான அல்லது முன்னணி நாளிதழ்களும் பின்வரும் எல்லா ஆதாரங்களுக்கும் ஒவ்வொரு நாளும் சென்று செய்தி திரட்ட வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ளுகின்றனர். 1) குற்றம் (Crime) : குற்றச் செய்திகளைச் சேகரிப்பதற்குக் காவல் தலைமை இடங்கள், காவல் நிலையங்கள், பிரேதக் கிடங்கு, நல விடுதிகள், தீயணைப்பு நிலையங்கள், காவல்துறை, நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் முதலிய இடங்கள் உதவுகின்றன. 2) சமுதாயச் செய்திகள் (Civil affairs) : மாநகராட்சி, நகராண்மைக் கழகம், போக்குவரத்துத் துறை, நீர் மற்றும் மின் நிலையங்கள், கவுன்சில் மீட்டிங்குகள். 3) அரசு : அமைச்சகம், வெவ்வேறு அமைச்சக இலாக்காக்கள், இராஜ் பவனம், திட்டக் குழு, அமைச்சர்களுடன், அவர்தம் செயலாளர்களுடன் துறைத் தலைவர்களுடன் சந்திப்பு. 4) உயர்நீதிமன்றம் மற்றும் பிற சிறிய நீதிமன்றங்கள். 5) வணிகத்துறை மையங்கள், பங்குச்சந்தை, வியாபார அங்கங்கள், சந்தைகள், நிதி நிறுவனங்கள், தொழில் நிறுவன மையங்கள். 6) அரசு விருந்தினர் இல்லம் மற்றும் பெரிய தங்கும் விடுதிகள். 7) தட்பவெட்ப நிலை தொடர்பான செய்தி அறிவிக்கும் அலுவலகம். 8) நிகழ்ச்சி அறிவிப்புத் துறை, கப்பல் மற்றும் துறைமுகப் பிரிவுகள். 9) விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகள். 10) திரைப்படப் படப்பிடிப்பு அரங்குகள் மற்றும் திரைப்படக் காட்சி அரங்குகள். 11) விமான நிலையம். 12) இரயில் நிலையம். 13) கோவில்கள், கிறிஸ்துவ ஆலயங்கள், மசூதிகள். 14) அரசியல் கட்சி அலுவலகங்கள். 15) பல்கலைக் கழகங்கள், கல்வி நிறுவனங்கள். 16) தொழிலாளர் தலைமை மையங்கள். 17) பொதுக்கூட்டங்கள், மத சம்பந்தமான கூட்டங்கள், சொற்பொழிவுகள். 18) சமுதாய நல அமைப்புக்கள். 19) அறிவியல் செய்தித் துறைகள். 20) பிற நாளிதழ்களின் அல்லது இதழின் பத்திகள். 21) நண்பர்கள். செய்தித் தயாரிப்பு மையங்களில் பல செய்தியாளர்கள் வெவ்வேறு செய்தி ஆதார இடங்களைத் தினமும் சென்று பார்த்துச் செய்தி சேகரித்து வருவதற்கென நியமிக்கப்பட்டுள்ளனர். பிற மையங்களிலிருந்தும் செய்திகள் நிருபர்களின் சிறப்புப் பணி மூலமும் உலகெங்கும் பரவுகின்றன. இவை தவிர, செய்தி நிறுவனங்கள் அவர்களுக்கென உள்ள அளவுகளின் படி செய்திகள் அனுப்புகின்றன. இவ்வாறு செய்தி அறை 1) உள்ளூர்ச் செய்திகள், 2) தந்திகள் தொலைபேசிகள் மூலமாக வெளியூர்ச் செய்திகள், 3) வெளிநாடுகளிலிருந்து கேபிள் செய்திகள் முதலியவற்றைப் பெறுகின்றன.

News value : (செய்தி மதிப்பு) ஒரு செய்தியின் மதிப்பு பொதுவாகப் பின்வரும் 4 கூறுகளால் அளவிடப் படுகிறது. அன்றைய செய்தி அல்லது கால அண்மை, இட அண்மை, பிரபல

நபர்கள் பற்றிய செய்தி, மனித நேயம் என்பன. செய்தி புதிதாகவும், அப்போதைய செய்தியாகவும் இருக்க வேண்டும். அது வாசகர்களுக்கு ஆர்வ மூட்ட வேண்டும். அச்செய்தி தொடர்பு படுத்தும் பிரபல மனிதர்களாலும் அது சமுதாயத்தின் மீது ஏற்படுத்தும் விளைவுகளாலும் அதன் மதிப்பு கணிக்கப்படும். செய்தி மதிப்பில் கணிசமான அளவைச் செய்தி நிகழ்ந்த இடங்களும் தீர்மானிக்கின்றன. வாசகர்களின் ஆர்வத்தை முதலில் உள்ளூர்ச் செய்திகளே தூண்டு கின்றன. தூர இடங்களிலிருந்து வரும் செய்திகளை விட இவையே வாசகர் களிடம் பெரிதும் செல்வாக்குப் பெறு கின்றன. வாசகரின் ஆர்வத்தை அருகாமைச் செய்தி உயர்த்தும். பெரிய அளவில் மனிதர்களின் வாழ்வைப் பாதிக்கும் எதுவும் செய்தி ஆகும்.

News writing : (செய்தி எழுதும் முறை) பத்திரிகைகளில் செய்தி எழுதும் முறை தத்தம் பத்திரிகை வாசகர்களைப் பொறுத்து வெவ்வேறு வகைகளில் அமையும். எனவே ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு முறையில் எழுதுகின்றன. ஒலிபரப்பு, ஒளிபரப்பு சாதனங்களுள்ளும் மரபு வழிப்பட்ட தொடர்பு சாதனங்களாகிய தொலைக காட்சி, வானொலி போன்றவற்றிற்கும் புது தொடர்பு சாதனங்களாகிய கேபிள் போன்றவற்றிற்கும் வெவ்வேறு வகைகளில் எழுதுதல் வேண்டும். எத்தனை அலைவரிசைகள் கூடுத லாகியுள்ளன என்பதைப் பொறுத்து செய்தி எழுதுதல் வேறுபடும். அலை வரிசைகளின் பெருக்கம் நேயர்களைப் பிரிக்கிறது. சிறு சிறு குழுக்களாக அமையும் இததகைய குறிப்பிட்ட சிறப்புக் குழு வாசகர்களுக்கென எழுத வேண்டும்.

Night effect : (இரவுச் சிறப்பு) ஒளிபரப்பப்பட்ட அல்லது பெறப்பட்ட சமிக்ஞைகளின் நுண்மை பொதுவாக சூரியன் மறைந்த பின்னர் மின்செறிவூட்டப்பட்ட துகள்கள் நிரம்பிய மேற்பரப்பில் அடிக்கடி சிறப்பான மாற்றத்திற்குள்ளாகின்றன.

Night side : (இரவுப் பிரிவு) காலைப் பத்திரிகை அல்லது ஒரு மதியப் பத்திரிகைக்காகப் பத்திரிகை ஊழியர் களால் பார்க்கப்படும் இரவு வேலை.

Night watch editor : (இரவுச் செய்தி ஆசிரியர்)

Noise : (புற ஒலி) மின்னியல் குறுக்கீடுகள் மற்றும் பின்னணி ஒலிகள். எந்த ஒரு மின் அமைப்பிலும் உருவாக்கப்படும் விரும்பத்தகாத அல்லது தேவையற்ற காட்சிச் செய்திகள். இவை திரையின்மீது பனிபோல் படர்ந்திருக்கும்.

Nonpareil : (ஆறு புள்ளி எழுத்து)

Nose for news : (செய்தி மோப்பம்) நிருபருக்கு இருக்கவேண்டிய சிறப்புக் கூறுகளுள் இதுவும் ஒன்று. ஒரு நிருபர் இது செய்திதானா என்று மதிப்பிடும் திறனும் செய்தியைத் துல்லியமாகத் தரவேண்டும் என்ற கொள்கைப் பிடிப்புடையவராகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அவர் செய்தியை ஊகித் தறியும் உள்ளுணர்வை அதாவது செய்தியை 'இது செய்தி' என உணரும் திறனையும் அதைச் செய்தி யாக வடிவமைக்கும் திறனையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

Notch : (வெட்டுப் படம்) ஒரு படம் அதன் ஒன்று அல்லது அதற்கு

மேற்பட்ட வெளிப் பரிணாமத் திலிருந்து வெட்டப்பட்ட பகுதி நீங்கலாக உள்ள ஒரு படம்.

Novelty : (புதுமை) வழக்கத்திறகு மாறானவையாக புதுமையின் அடிப்படையில் வெளிவரும் செய்திகள். அறிவியல் தொழில் நுட்பப் புதுமைகள், தனி நபர்களது புதுமையான சாதனைகள் போன்ற செய்திகளைக் குறிப்பிடலாம்.

NTSC : (என்.டி.எஸ்.சி) அமெரிக்கா விலுள்ள 'National Television Standards Committee' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம்.

Nyloprint : (இழைம அச்சு) சுழல் எழுத்தச்சு அச்சுப் பொறியால் (rotary letter press) அச்சிடு முறையில் பயன்படுத்தப்படும் மெல்லிய அச்சுப் பதிப்புத் தகடுகளின் வகைகளின் ஒன்றனுக்குப் பயன்படுத்தப்படும் வியாபாரப் பெயர்.

O

OB : (வெளிப்புற ஒலிபரப்பு) 'Outdoor Broadcast' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம். வானொலி ஒலி பரப்பில் நிலைய அரங்கிலல்லாது செய்தி நடை பெறும் களத்திலிருந்து நிகழ்த்தப்படும் கள ஒலிபரப்பு.

Obituary : (இரங்கல் செய்தி) ஒருவரது இறப்பு குறித்த இரங்கல் செய்தி ; அண்மையில் இறந்த ஒருவரின் வாழ்க்கைக் குறிப்பு; பதிவுப் பாதுகாப்பு இறப்புச் செய்திகள் (canned obits) என்பவை ஒருவரது இறப்புக்கு முன்னரே அவரது வாழ்க்கை பற்றிய குறிப்புக்கள் எடுக்கப்பட்டுத் தகவல் சேமிப்பு அறையில் கோப்பில் சேமித்து வைக்கப்பட்டிருப்பவை. 'obit' என்று சுருக்கிக் கூறப்படும்.

Objectivity : (தற்சார்பின்மை) ஒரு நிருபருக்கு இருக்கவேண்டிய சிறப்புக் கூறுகளுள் ஒன்று. ஒருபாற் கோடா மலும் தற்சார்பில்லாமலும் உள்ளபடி யேயும் உணர்ச்சி மேலிடாமலும் இருக்கும் திறனை ஒரு நிருபர் வளர்த்துக்கொள்ள வேண்டும். வாசகர் விரும்புவது தகவல் மட்டுமே. நிருபரின் கருத்துக்களையும் உணர்ச்சிபூர்வ எதிர்ச் செயல்களையும் அல்ல. எனவே அவர் தற்சார்பற்ற உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும்.


Obscenity : (ஆபாசம்) ஆபாசம் என்ற இயல்பு செய்திகளில் கூடவே கூடாது. காதல் செய்திகளை எழுதும்பொழுது மிகைப்படுத்திஎழுதக்கூடாது. எல்லா ஆசிரியர்களும் 'ஆபாசம்' என்ற கூறினை உள்ளடக்கிக் கருத்துப் பரிமாறுகிறார்களோ இல்லையோ, ஆபாசம் என்ற கூறு இக்கால கட்டத்தில் தடையில்லாமல் வளர்ந்து விட்ட சக்தியாகத் திகழ்கிறது என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்ளு கிறார்கள். ஆபாசப் பொருள் தொனிக்கச் செய்தி எழுதுவது சட்டப்படி குற்றமும் ஆகும்.

Off camera : (விளக்குபவர் தோற்றமல் விளக்கம்) தொலைக்காட்சியில் நிகழ்ச்சிக்குத் தரப்படும் விளக்கம், பேசும் நபரோடு சேர்த்துத் தரப்பட்டால் பேசும் நபர் (விளக்கம் கூறுபவர்) நேரடியாகத் திரையில் தோன்றி விளக்கம் தருதல் விளக்குபவர் தோற்ற விளக்கம் (on camera narration) எனப்படும். அவ்வாறன்றி திரையில் விளக்கம் கூறுபவரைக் காட்டாமல் அவர் ஒலி மட்டும் மறைவில் கேட்க நிகழ்ச்சியை மட்டும் காட்டினால் அது விளக்குபவர் தோற்றமல் விளக்கம் (off camera narration) எனப்படும். சான்றாக ஒரு இடத்தில் தீப்பிடித்து அதைப்பற்றிய விளக்கம் கூறப்படும் போது 'தீ மிகவும் உயரமாக எரிந்தது' என்று விளக்கம் கூறுபவர் கூறும்போது விளக்கம் கூறுபவரைக் காட்டாமல் நிகழ்ச்சியையே அதாவது தீயையே நேரடியாகக் காட்டுவது இம்முறை ஆகும். நிகழ்ச்சி எழுதுபவர் நிகழ்ச்சி யுடன் விளக்கம் கூறுபவரைக் காட்ட வேண்டும் (on camera) அல்லது நிகழ்ச்சியுடன் விளக்கம் கூறுபவர் இல்லாமல் நிகழ்ச்சியை மட்டும் (off camera) காட்டவேண்டும் என்ற குறிப்பைத் தந்து நிகழ்ச்சி எழுத வேண்டும்.

Off mike : (தூர ஒலி) எவ்வொலிக்கும் ஓர் இயல்பு நிலை உண்டு. அந்த இயல்பு அளவிலேயே ஒலிபரப்பை வைத்துக்கொள்ளல் இயல்பு ஒலி (on mike) எனப்படும். வானொலி கேட்கும்

நேயர் ஒலிவாங்கியுடன் இருப்பதாகப் படைப்பது வானொலி மரபு. ஓர் ஒலி தூர ஒலியாக (off mike) அல்லது மங்கிய தூர ஒலியாகக் (fades off mike) கேட்குமாறு செய்தால் கேட்போர் அவ்வொலி தூரத்திலிருந்து கேட்பதாக உணர்வர். இது தூர ஒலி (off mike) எனப்படும். எழுதுபவர் தூர ஒலி (off-mike) என்று குறிப்பிடா விட்டால் ஒலிப்பொறியாளர் எல்லா ஒலிகளையும் இயல்பு ஒலியிலேயே தரவேண்டும் என நினைத்துவிடுவார். சான்றாக நடிகர்-2 காட்சியிலிருந்து வெளியேறி அதன்பின் நடிகர் 1-ம் 3-ம் மட்டுமே பேசுதல். இங்கு நடிகர்-2 காட்சியிலிருந்து வெளியேறுதல் தொடர்பான ஒலி தூர ஒலியிலும் (off mike) நடிகர்-1ம், 3-ம் பேசுதல் இயல்பு ஒலியிலும் (on mike) படைக்கப்பட வேண்டும். நிகழ்ச்சி தருபவர் மைக்கிலிருந்து சற்று தூரத்தில் பேசிக் கொண்டிருப்பதான நிலையைப் பொதுவாக தூர ஒலிநிலை (off mike)காட்டும். ஒலிவாங்கிக்குப் புறம்பே இருந்து ஒரு பேச்சாளரோ அல்லது வேறு ஒலிச்சாதனமோ தரும் ஓசையைத் தூரத்து ஒலிபோல் தரும் முறை இவ்வகை ஆகும்.

Offset : (நுண்பதிவு அல்லது எதிரீட்டுப் பதிவு) அச்சிடும் முறைகளுள் ஒன்று. 'cold type' என்றும் அழைக்கப்படும். ஆப்செட் என்பது அச்சிடும் ஒரு வகை முறையைக் குறிப்பிடும் சொல். இம்முறையில் பத்திரிகை, புகைப்படக் கலை முறையில் அச்சிடப்படுகிறது. அதாவது எழுத்தச்சுப் படிமை முறையில் (lithographic) உலோகத் தகட்டில் அச்சிடப்பட்ட எழுத்துக்கள், ரப்பர் உருளையில் பதிவாகிப் பின்னர் தாளில் அச்சிடப்படுகிறது. 1) இம்முறை யில் போட்டோ எழுத்தச்சுப் படிமை முறையில் பிரிண்டிங் முறை அமையும். அதாவது மை நேரடியாக தாளின் அச்செழுத்துக்களிலிருந்து பரப்பப் படாமல் ஓர் உலோகத் தகட்டிலிருந்து அச்சை வாங்கிக் கொண்ட ரப்பர் உருளையிலிருந்து தாளுக்குப் பதிக்கப்படுகிறது. 2) அச்சிடப்பட்ட ஒரு தாளின் பின்புறம் தற்செயலாக ஒரு வடிவம் அச்சாகி விடுமானால் கிடைக்கும் அச்சிறப்பு முறைக்கும் offset என்று பெயர். இது ஒரு மறைமுக அச்சீட்டு முறை. ஒரு பக்கத்தின் நேர் வடிவம் (அதாவது ஒரு பக்கத்தின் அச்சிடப்பட வேண்டிய வடிவம்) அச்சிடப்பட்ட செய்தி, படங்கள், விளம்பரம் முதலியவற்றை ஒட்டுவதன் மூலம் கிடைக்கிறது. இது பின்னர் காமிரா அறைக்கு அனுப்பப்பட்டு அங்கு அம்முழுப்பக்கத்தின் நெகடிவ் தயாரிக்கப்படுகிறது. அந்த நெகடிவ் மறுமுறை ஒரு மெல்லிய உலோகத் தகட்டுக்கு மாற்றம் செய்யப்படுகிறது. இது ஒரு தகட்டு ஆக்கத் தானியங்கி இயந்திரத்தால் செய்யப்படுகிறது. அதன்பின்னர் ஒரு வகை எண்ணெய் கலந்த மை தகட்டின் பகுதிகளில் ஒட்டப்பட தகடு அப்பக்கத்தின் பிம்பங்களைத் தக்கவைத்துக் கொள்கிறது. பிற வேண்டாதவை நீரால் கழுவப்பட்டு விடுகின்றன. அடுத்து மை தடவப்பட்ட இந்த உருவம் ஒரு ரப்பர் உருளையில் ஒரு எதிர்படிவமாகப் பொருத்தப்படுகிறது. பின்னர் தாளுக்கு அது மாற்றப்படும்போது திரும்ப அது நேர்வடிவம் (positive) அதாவது எப்படி இருக்கவேண்டுமோ அப்படிப்பட்ட வடிவமாக விழுகிறது. இதன்மூலம் கூர்மையான, தெளிவான தோற்றம் கிடைக்கிறது.



Offset blanket : (எதிரீட்டுப் பதிவு உருளை) எதிரீட்டுப் பதிவு உருளை ரப்பரால் செய்யப்பட்டது. எழுத்தச்சுப் படிமை முறைத் (lithographic) தகட்டில் பதிந்து இருக்கும் உருவங்களை எடுத்துச் சென்று தாளில் பதிக்கிறது.

Offset gravure : (**எதிரீட்டுப் பதிவு அச்சு முறை**) படத்தின் தோற்றத்தை அப்படியே பதியவைக்கும் நேர்த்தியான பதிப்பு முறை. படங்கள் அல்லது எழுத்துக்கள் ஒரு தகட்டினால் ரப்பர் உருளைகளில் பதிப்பிக்கப்படுவது ஆ.்.ப்செட் முறை. இதில் படங்கள் தகட்டின் அடியில் பதிந்திருக்கும்.

Offset Paper : (**எதிரீட்டுப் பதிவுத் தாள்**) ஆ.்.ப்செட் தாள். உறிஞ்சும் தன்மையும் சுருங்காத இயல்பும் உடைய தரமான தாள்.

Omni directional : (**அனைத்துத் திசை ஒலிவாங்கி**) வானொலி ஒலிப் பதிவிற்கு உதவும் வகையில் எல்லாப் பக்கங்களிலும் ஒலியைப் பெறும் ஒலிவாங்கி.

On camera : (**விளக்குபவர் தோற்ற விளக்கம்**) ஒளிபரப்பில் எவை எவை நிகழ்ச்சியில் காட்டப்பட வேண்டும் என்ற எழுத்தறிக்கைக் குறியீடு ; தொலைக்காட்சியில் நிகழ்ச்சிக்குத் தரப்படும் விளக்கம் பேசும் நபரோடு சேர்த்துத் தரப்பட்டால் பேசும் நபர் (விளக்கம் கூறுபவர்) நேரடியாகத் திரையில் தோன்றி விளக்கம் கூறுதல் விளக்குபவர் தோற்ற விளக்கம் (on camera narration) எனப்படும்.
விளக்கப்படம் + விளக்கம் கூறுபவர் = விளக்குபவர் தோற்ற விளக்கம் (on camera). o.c. என்று சுருக்கிக் கூறப்படும்.

One shot : (**சிறப்பு இதழ்**) ஒரு இதழ் முறையான பருவம் தோறும் வெளியிடப்படும் பருவ இதழ்கள் போலல்லாது ஒரே ஒருமுறை மட்டும் வெளியிடப் படுமாயின் அது இவ்வாறு அழைக்கப் படும். 'Special' என்றும் குறிப்பிடப்படும்.

On-line : (**விரைவுத் தொடர்பு**) தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி தகவல் உருவாக்கம் முதற்கொண்டு தகவல் வெளியீடு, தகவல் தொகுப்பு, தகவல் சேமிப்பு, தகவல் மாற்றம், தகவல் புத்தாக்கம் முதலியவை வரை ஒட்டு மொத்தத் தகவல் அமைப்பில் ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. தொழில் நுட்ப முன்னேற்றம் கடந்த சில ஆண்டுகளில் விரைவுத் தொடர்புப் (on-line) பணிகளின் வளர்ச்சிக்கு நம்மை இட்டுச் சென்றுள்ளது. விரைவுத் தொடர்பு அமைப்புக்கள் (on-line systems)' அவற்றைப் பயன்படுத்துபவர் ஒரு சேய்மைக் கணிப்பொறியுடன் நேரடியாக ஒரு இடையீட்டு முறையில் தனது சொந்தக் கணிப்பொறி மற்றும் தொலைக்கருத்துப் பரிமாற்ற வலைப் பிணைப்புக்களைப் பயன்படுத்திக் கருத்துப்பரிமாற்றத் தொடர்பை நிலைநிறுத்திக் கொள்ள உதவுகிறது. இந்தியாவில் விரைவுத் தொடர்புத் தரவடிப்படைகளின் அணுக்கம் இருமுறைகளில் மக்களுக்குக் கிடைக் கின்றது. 1) தொலைபேசி வலைப் பிணைப்பு வழி. 2) தரவு வலைப்பிணைப்பு அணுக்கக்கிளைகள்வழி. தொலைபேசி வலைப் பிணைப்புடன் நெருக்கமானது 'தரவடிப்படை உபசரிப்பாளர் கணிப்பொறி அமைப்புடன் நேரடியாகத் தொலை பேசியில் STD அல்லது ISD மூலமாக எண்களைச் சுழற்றிப் பெறுவது ஆகும். விசேஷ சஞ்சார் நிகாப் லிமிடெட்என்ற இந்திய அரசு அமைப்பு இந்தியாவில் அகில உலகத் தரவுவலைப்பிணைப்பை இயக்குகிறது. இதன் மூலம் பல நகரங்களுக்கு இவ்வசதிகள் கிடைக்கின்றன. தகவல் தொடர்பு சாதனங்கள் போலவே அவரவர் சொந்த கணிப்பொறி-தன்னைப் பயன்படுத்து பவர்களுக்குப் பல்வேறு கணிப்பொறி வலைப்பிணைப்புக்களுடன் நெருக் கத்தை (தொடர்பை) ஏற்படுத்தித் தருகிறது. இதன்படி சொந்தமாகக் கணிப்பொறி வைத்திருக்கும் ஒரு

மக்கள் (நேயர்) கூட்டம் ஒரு மைய தரவடிப்படை நிலையத்துடன் தொடர்பு கொள்ள முடியும். காம்புசெர்வ் (compuserve) என்ற கணிப்பொறி வலைப்பிணைப்பு 1980-இல் மின்னணுச் செய்தித்தாள் வெளியீட்டில் ஒரு சோதனை செய்து பார்த்தது இதற்குச் சான்றாகும். சொந்தமாகக் கணிப்பொறி வைத்திருப் போர் மற்றும் காம்புசெர்வின் கிளைகளோடு தொடர்பு வைத்திருப் போர் இதன்வழி பல்வேறு அமெரிக்கச் செய்தித்தாள் களின் மின்னணுப் பக்கங்களைத் தேடிக் கண்டு கொள்ள முடியும்.

On mike : (இயல்பு ஒலி) எவ்வொலிக்கும் ஓர் இயல்பு நிலை உண்டு. அது இயல்பு ஒலி (on-mike) ஆகும். கேட்போர் ஒலிவாங்கியுடன் இருப் பதாகப் படைப்பது வானொலி மரபு. ஓர் ஒலி தூர ஒலியாக (off-mike) அல்லது மங்கு தூர ஒலியாகக் (fades off-mike) கேட்குமாறு செய்தால் கேட்போர் அவ்வொலி தூரத்திலிருந்து கேட் பதாக உணர்வர். பதிவு பண்ண வேண் டிய-அதாவது இன்ன அளவிலான ஒலியில் பதிவு பண்ணப்பட வேண்டும் என்று நிகழ்ச்சி எழுதுவோர் குறிப்பிட்டு எழுதாவிட்டால் அமைப் பாளர் எல்லா ஒலியையும் இயல்பு ஒலியில் (on mike) அமைத்துவிடுவார். சான்று : நடிகர்-2 காட்சியிலிருந்து வெளியேறி (தூர ஒலி) அதன்பின் நடிகர்-1,3 மட்டுமே பேசுதல் (இயல்பு ஒலி).

Onomatopoeia : (ஒலிக்குறிப்புச் சொற்கள்) ஒரு சொல்லின் வழியே பொருளை உணர்த்தும் மிக உயர்ந்த ஒலிச்சிறப்பு வாய்ந்த சொல். கேட்பு மொழிநடையில் பயன்படுத்தத் தகுந்தது. இச்சொற்கள் எத்தகைய் சிறப்புடையனவாயினும் செய்திக்கு விளக்கம் தரும் வகையில் பயன்படுத்தப் படுதல் சிறப்புடைத்து.

OOV : (காட்சிக்கு அப்பால்) 'Out Of Vision' என்பதன் சுருக்கம்.

Opague : (ஒளிபுகாத் தன்மை) ஒரு நெகடிவில் உள்ள ஒழுங்கற்ற இயல் பினை ஒளிபுகாத் தன்மையுள்ள சாந்து ஒன்றின் உதவியுடன் மறைத்து அப்பகுதியில் ஒளிபுகாமல் செய்தல்.

Open ended : (திடீர் முடிவு) வானொலி நிகழ்ச்சிகளில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன், திட்டமின்றி நிறைவு பெற்றுவிடும் நிகழ்ச்சி.

Opinion magazines : (கருத்துரை இதழ்கள்) பொது விஷயங்களைத் தம் இதழின் உள்ளடக்கமாகக் கொண்டு அவற்றை வழக்கமாக ஒரு திட்டவட்ட மான கோணத்துடன் அணுகும் இதழ்கள்.

Optical : (பார்வைச் சிறப்பு) கலவைகள் (mixes), மங்குதல்கள் (fades), மேற்பதிவு (superimposition), இரட்டை வெளிப்பாடுகள் (double exposures), பிரிப்புத் திரைகள் (split screen), நிலைப்புக் காட்சிகள் (freeze frames), நிலைப்பல் காட்சிகள் (skip frames) மற்றும் பிற பார்வைச் சிறப்பு விளைவுகளைக் குறிக்கும் பொதுவான சொல்.

Optical character recognition : (பார்வை இயல்பு ஏற்பு) ஒரு தட்டச்சுப் படியை ஊடுருவி கிரேக்க முதலெழுத்து எண் குறியீடுகளை (alpha numeric symbols) நாடாவை உருவாக்கும் கருவிகளாக மாற்றும் ஒரு அமைப்பு அல்லது ஒருதட்டச்சு இயந்திரம் மூலம் நேரடியாகக் கருத்துப்பரிமாற்றம் செய்வதன் மூலம் எழுத்துக்களைத் தானியங்கி முறையில் உருவாக்கும் ஒரு அமைப்பு. OCR என்று சுருக்கிக் கூறப்படும்.

Optical fibre cable : (கண்ணாடி இழைக் கேபிள்) கடலுக்கடியில் மூழ்கியிருக்கும் உலகின் மிக நீளமான கண்ணாடி இழை கேபிள் செய்தித் தொடர்பு அமைப்பு. 1994 அக்டோபரில் பம்பாயில் தொடங்கப்பட்டது. இதன் மூலம் உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் நேரடியாகச் செய்திகளைப் பரிமாறிக்கொள்ள முடியும். *சீ-மீ-வீ-2* என்று பெயரிடப் பட்டுள்ள இந்த செய்தித் தொடர்பு அமைப்பு தென்கிழக்கு ஆசியா, மத்திய கிழக்கு நாடுகள், மேற்கு அய்ரோப்பா ஆகிய பகுதிகளை இணைக்கிறது. இந்த கேபிளின் மொத்த நீளம் 18,190 கி.மீ ஆகும். இதற்கு முந்தைய *சீ-மீ-வீ-1* என்ற திட்டத்தில் ஒரு ஜோடி கேபிள் மூலம் ஒரு நேரத்தில் 7,500 தொலைபேசிச் செய்திகள்தான் செல்ல முடியும். ஆனால் தற்போதைய அமைப்பில் ஆப்டிகல் ∴பைபர் பயன்படுத்தப்பட்டுள்ளதால் 60,000 டெலிபோன் அழைப்புக்கள் (கால்கள்) ஒரே நேரத்தில் செல்ல முடியும். அதோடு அசையும் பிம்பங்களையும் அதிவேகத் தகவல்களையும் இதன்மூலம் அனுப்பமுடியும். ஒரு கணிப்பொறியில் இருந்து மற்றொரு இடத்தில் உள்ள கணிப் பொறிக்கும் இத்தொடர்பு மூலம் தகவல்களை அனுப்ப முடியும்.

ORACLE: (ஆரகிள்) 'Optical Reception of Announcements by Coded Line Electronics' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம். இது தனியார் தொலைக் காட்சியினரால் நடத்தப்படும் ஒரு பிரிட்டிஷ் தொலை அச்சு (teletext).

Organization of the commercial : (விளம்பர அமைப்பு) வணிகவிளம்பரம் எழுதுவோர் நேயர்களைக் கவரும் வழிமுறைக்கான அடிப்படைப் படிநிலைகளைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். முதலில்-வணிக விளம்பரம் நேயர்கள் கவனத்தைப் பெற வேண்டும். இரண்டாவது-நேயர்களிடம் ஆர்வத்தை உண்டு பண்ண வேண்டும். மூன்றாவது-ஒரு சிக்கல் உள்ளது என்றும் அது பொருளுடன் தொடர்புடையது என்பதையும் உணர்த்த வேண்டும். நான்காவது-குறிப்பிட்ட அப்பொருளைப் பயன்படுத்தினால் அச்சிக்கல் தீரக்கூடும் என்று உணரச் செய்தல். ஐந்தாவது (இறுதியாக)- உணர்ச்சித் தூண்டல் சரியான காரணங்களுடன் (புள்ளி விபரங்களுடன்) நேயர்களை-தாம் அப்பொருளை வாங்க வேண்டும் என்று உணர்வுகொள்ளச் செய்தல்.

எழுதும்முறை : எழுதுவோர் வணிக விளம்பரம் நன்கு அமைய வேண்டும் என்பதைத் தெரிந்திருக்க வேண்டும். 1) எளிய நடை, நேரடியான நடை, 2) நிகழ்ச்சியில் பங்கு கொண்டு நிகழ்ச்சி தருபவர் ஓர் உரையாடல் மூலம் பொருளை அறிவித்தல் முதலியன தேவை. அப்படியானால் தான் அப்பொருள் குறித்து நம்புவார்கள். சொற்கள் எளிதில் புரியக் கூடியதாகவும் கண்ணியமானதாகவும் இருக்க வேண்டும். சாதாரணமாக இல்லாமல் கவனத்தை ஈர்ப்பதாய் இருக்கவேண்டும். கொச்சைப் பேச்சு மொழி முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். இலக்கணப்படி தான் எழுதியிருப்பது சரியென்று எழுதுவோர் திட்டமாக உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். திட்ட வட்டமான சொற்கள், கருத்துக்கள் முதலிய வற்றைப்போல செயல் சார்ந்த வினைச்சொற்கள் வலிமை வாய்ந்தவை. வலியுறுத்த வேண்டி இருப்பின் வேறு சொல், வடிவம் மூலம் மீண்டும் திருப்பிச் சொல்லும் முறையில் எழுத வேண்டும். எழுதுவோர் முடிந்த வரை மிகச் சிறந்தது என்று கூறி எழுதுவதைத் தவிர்க்க வேண்டும்.

Organization of the News Program : (செய்தி நிகழ்ச்சி அமைப்பு) தொலைக்

காட்சிச் செய்தி நிகழ்ச்சியில் (news) ஓரே மாதிரியான செய்திக் கதைகளை ஒன்றுபடுத்தி அவ்வாறு வகைப்படுத்தப் பட்ட ஒவ்வொரு குழுவையும் வரிசைப் படுத்தி அதேமுறையில் நேயர்களுக்குத் தருதல் அவசியம் ஆகும். செய்தி தரப்படும் முறை ஏதாவது ஓர் ஒழுங்கில் அமைதல் வேண்டும். முக்கியச் செய்தியின் வரிசையில் முதலில் அயல்நாட்டுச் செய்திகள் பின்னர் உள்நாட்டுச் செய்திகள் என்று தத்தம் நேயர்களுக்கேற்ற வகையில் வரிசைப்படுத்தல் தேவை. செய்தி ஒளிபரப்பில் நாளும் நேரமும் முக்கியம்.

பிற்காலை ஒளிபரப்பு-பெண்களுக்குத் தேவையான செய்திகள்

மாலை ஒளிபரப்பு-ஆண்களுக்குத் தேவையான செய்திகள் (வேலையிலிருந்து திரும்பி இருப்பர்)

முதன்மை நேரத்திற்கு முந்திய நேரம் (Prime time) -அனைவருக்கும் தேவையான செய்திகள் ; மொத்த குடும்பமும் கவனிக்கும்.

அதிகாலையில் முந்திய நாள் செய்தியின் சுருக்கமும் கூறப்படலாம். அதே தொடர்ச்சிச் செய்திகள் அதனையடுத்து அமையலாம். பின் மாலையில் அன்றைய நடப்புச் செய்திகள் திருப்பிப் பார்க்கப்பட வேண்டும். மாலைச் செய்தியில் நேயர்கள் மறுநாள் காலை நிகழ்வுகளை எதிர்பார்க்கத் தயார் செய்யப்பட வேண்டும். வடிவ அமைப்பு வேறுபடலாம். முதலில் அறிவிப்பாளர் தலைப்புச் செய்தி கூறல் ; அதன் பின் ஒரு விளம்பரம், அதன்பின் விளக்கம் கூறுபவர் விளக்கங்களுடன் வருதல் அல்லது விளக்கம் கூறுபவர் நேரடியாகச் செய்தியைத் தொடங்குதல் என அமையும்.

Origination : (செய்தி தருதல்) ஒலிபரப்புக் கருத்துத் தொடர்பு தனிமனிதர்களுக்கிடையே நிகழும் கருத்துத் தொடர்பல்லாமல் பல்வேறு குழுக்களின் முயற்சியின் அடிப்படையில் எழுபவை. முதல் செயல்-படைப்புத் திறனுடைய செய்தி தருபவருடையது (creative originator) -எழுதுபவர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் மற்ற அனைத்துப் படைப்பாளர்களின் (வானொலி, தொலைக்காட்சி, கேபிள் அமைப்புக்கள் முதலியவற்றில் திட்டமிடுபவர்கள், தினசரி நிகழ்ச்சிகளையும் அறிவிப்புக்களையும் தயாரிப்பவர்கள்) கூட்டு முயற்சியை உள்ளடக்கிய பணி அது. இரண்டாம் செயல்-வானத்தில் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளுக்காகப் பணம் செலவழிக்கும் மக்கள், நிறுவனங்கள் முதலியவற்றோடு தொடர்புடையது. அதாவது இவர்கள் நிகழ்ச்சித் தயாரிப்புச் செலவுக்குப் பொருளாகவோ அல்லது வேறு ஏதாவது வகையிலோ உதவி செய்ய முன்வரவில்லையெனில் நிகழ்ச்சிப் படைப்புக்கள் தயாரிக்கப்பட முடியாது. ஒலிபரப்புவதில் செய்தி தருநர், செய்தி, அலைவரிசை மூன்றும் ஒன்றுக்கொன்று மிகுதியும் தொடர்புடையவை. நிலையமும் அதன் நிகழ்ச்சிகளின் உள்ளடக்கத்தால் அது தயாரிக்கும் நிகழ்ச்சிகளால் இனங்காணப்படும். ஒளிபரப்பு நிலையம் ஒளிபரப்புக் கருவியை (transmitter) இயக்க, நிகழ்ச்சிகள் காற்றில் பரப்பப்படுகின்றன. இந்த ஒலிபரப்பு (transmission) அதன் கருத்துத் தொடர்பு அலைவரிசைகளின் பயன்பாட்டின் பிரதிநிதி ஆகும். நிலையமும் தனது அலை வரிசையின் மூலம் தோன்றும் பல்வேறு நிகழ்ச்சிக் கருத்துக்களைத் தருபவர் என்றே கருதப்படும். நிலையம், வலைப் பிணைப்புக்கள் (networks), பிற நிறுவனங்கள், மற்றும் இவை போன்ற நிறுவனங்கள் ஆகிய நான்கும் நிகழ்ச்சிகளைப் பரப்பும் கருவிகளென்றாலும் அவை செயல்படும் முறையில் வேறுபாடுகள் உள்ளன.

Originator : (செய்தி தருநர்) செய்திகளைச் சேகரித்துத் தயாரிப்பதிலும் ஒலிபரப்புவதிலும் தொடர்புபடும் மனிதர்களும் நிறுவனங்களும் செய்தி தருநர் அல்லது உருவாக்குபவர் (originator) எனப்படுவர். செய்தி தருதல் என்பது 1) எழுதுதல், இயக்குதல், தயாரித்தல் போன்ற படைப்புத் தொடர்பானதும் 2) இத்தகைய படைத்தல் பணிகளுக்காக நிதி உதவி செய்தலும் என்ற இருவகையில் அடங்கும். 'sponsor' என்ற சொல்- பொதுவாக தனிமனிதர் அல்லது நிறுவனங்கள் குறிப்பிட்ட நிகழ்ச்சியை ஒளிபரப்ப நிதி உதவி அளிப்பதைக் குறிக்கப் பயன்படுகிறது. நிலையத்தார், வலைப்பிணைப்பு அமைப்புக்கள் சார்ந்தோர், கேபிள் அமைப்பு இயக்குநர்கள் போன்றோரும் ஏதோ ஒருவகையில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பணம் முதலீடு செய்யவேண்டியிருப்பதால் 'நிகழ்ச்சி வழங்குவோர்' (sponsor) எனப்படுவர். பொதுப்பணி விளம்பரங்களைப் பட்டுவாடா செய்யும் நிலையங்கள் இதில் அடங்கும்.

Outcue : (நிகழ்ச்சி இறுதிக் குறியீடு) வானொலிச் செய்தி வடிவமைப்புத் திட்டத்துடன் (layout) தொடர்புடையது. பொதுவாகச் செய்திக் கதைகளில் 3 செய்திப் பகுதிகள் அல்லது மெய்ம்மைகள் (actualities) அடங்கி இருக்கும். அவை செய்தி ஆரம்பம், செய்தி, முடிவு ஆகியன. மூன்றாவது கூறாகிய முடிவின் இறுதிப்பகுதி 'outcue' எனப்படும். இது இப்போதுள்ள பகுதி முடியப்போகிறது ; செய்தி ஒளிபரப்பின் அடுத்த பகுதி ஆரம்பிக்கப்படப் போகிறது என்பதைத் தெரிவிக்கும் குறியீடு. வானொலி மற்றும் தொலைக் காட்சியில் ஒரு நிகழ்ச்சி முடிவதை அடையாளமாக முன்கூட்டித் தெரிவிக்கும் அடையாளச் சொற்கள் ; ஒரு செய்தி அறிவிப்பின் இறுதிச் சொற்கள்.

Outline: (உருவச் சுற்றுக்கோட்டுப் படம்) இதழ்த் தயாரிப்பில், ஒரு முழு வெள்ளைப் பின்னணியின் மீது கறுப்பு வண்ணத்தில் சுற்றுக்கோடு (outline) காட்டப்பட்டிருக்கும் ஒரு படம்.

Outline cut : (பின்னணி இல் படம்) பின்னணி வெட்டப்பட்ட ஒரு நுண்பதிவுப் படம் (halftone).

Output : (வெளியிடு பொருள்) ஒரு கணிப்பொறி அமைப்பினுள்ளே செலுத்தப்படும் செய்தி உள்ளிடு பொருள் (input) ஆகும். செலுத்தப்பட்டு வெளிவந்த செய்தி வெளியிடு பொருள் (output) ஆகும். ஓர் அமைப்பின் இயக்கத்தினூடே குறிப்பிட்ட கால அளவில் இயங்கும் செய்தியின் அளவு, இடையிடு பொருள் ஆகும்.

Outside broadcast : (வெளிப்புற ஒலிபரப்பு) வானொலி நிகழ்த்தும் கள ஒலிபரப்பு, தொலைக்காட்சி நிலையம் நிகழ்த்தும் வெளிப்புற ஒளிபரப்பு முதலியவற்றைக் குறிக்கும். OB என்று சுருக்கிக் கூறப்படும்.

Outside spots : (வெளிப்புற நிகழ்ச்சிக் களம்) வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கென நிலையத்திற்கு வெளியே பிறிதொரு களத்தில் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சி ஒலிப்பதிவு அல்லது படப்பிடிப்பு நிகழ்விடம்.

Out takes : (முடிக்கப்பட்ட பட ஒளி நாடா) படம் பிடித்து எடுத்து வைக்கப் பட்டுள்ள ஒளிநாடா ;

Over-crank : (மிகு இயக்கம்) ஒரு திரைப்படக் காமிராவின் மோட்டார் இயந்திரத்தை இயல்பு வேகத்தைவிட வேகமாக ஓடச்செய்வது ; படத்தில் பார்த்தால் இவ்வாறு எடுக்கப்பட்ட காட்சி மிக மெதுவான இயக்க முள்ளதாகத் (slow motion) தெரியும்.

Overlay : 1. (மேல் அடுக்குத்தாள்), 2. (மேல் அடுக்கு ஸ்விட்ச்). 1) பின் பக்கப் பொருட்கள் தெரியும் வண்ண முள்ள ஒரு மெல்லிய ஒளியூடுருவு தாள். ஒரு படத்தின் மீது அல்லது ஒரு பக்க வடிவமைப்புத் திட்டத்தின் மீது வைக்கப்பட்டு வண்ணத்தில் அச்சிடப் பட வேண்டிய பகுதி இது என்று குறித்து நிற்கும். 2) இரு தொலைக் காட்சிகளிலிருந்து வரும் படங்களை ஒருங்கிணைக்கும் ஆற்றலுடைய ஒரு மின்னணு ஸ்விட்ச்; ஒரு பொருளானது ஓர் இயங்குநிலை வண்ணச் சாயல் பரப்பின் மீது வைக்கப்படும். அப்பொரு ளினுள் அந்த குறிப்பிட்ட வண்ணச் சாயல் இருக்காது. உடனே மேலடுக்கு ஸ்விட்ச் இயல்பாகவே தான் இயங்கி அடிப்படை வண்ணத்திற்காகப் பதிலி யாகிறது. இந்த அடிப்படை வண்ணம் என்பது வேறு ஒரு தொலைக்காட்சி காமிரா, டெலிசினி, ஒளிநாடா போன்றவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட பின்னணிக் காட்சி உள்ளதாக இருக்கும்.

Over line : (மேல்வரி) 'kicker' போன்றதொரு மேல்வரி. (காண்க : kicker).

Over night : (இரவுக்குள்) காலைப் பத்திரிகையில் 'overnight' என்பது அடுத்த நாளுக்குள் சென்று சேகரித்து முடித்து வருமாறு தரப்பட்ட பணி. அடுத்தநாள் மாலைப் பத்திரிகையில் முதல் வெளியீட்டில் வரவேண்டிய செய்தியைக் குறிக்கும். இச்சொல் ஒரு தந்திப்பணியின் ஒரு பொழுதுக்குரிய சுற்றையும் குறிக்கும்.

Over set : (மிகு அச்சுக்கோர்ப்பு) அச்சுக் கோர்க்கப்பட்டு ஆனால் பத்திரிகையில் அச்சிட இடம் இன்மை காரணமாகப் பயன்படுத்த் முடியாமல் வெட்டப்பட்டுவிட்ட பகுதி.

P

Pace : (ஆட்ட வேகம்) ஒளிபரப்பு நிகழ்ச்சிகளில் குறிப்பாக நாடகம் செல்லவேண்டிய போக்கு முறையாகிய சரியான போக்கினைக் குறிக்கும். நாடகம் மையப் பொருளிலிருந்து நகர்ந்து செல்கிறது என்ற எண்ணத்தைத் தரக்கூடிய கூறுகளை நீக்கிவிட்டால் நிகழ்ச்சி சரியான போக்கு கொண்டதாக அமையும். மிகவும் வேகமாகச் செல்லாமலும் மிகவும் மெதுவாகச் செல்லாமலும் நாடகத்தின் வேகம் அமைதல் வேண்டும். நிகழ்ச்சியைப் படைத்தளிக்கும் முறை ; கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் நிகழ்ச்சி மிக வேகமாக அமைந்திருப்பின் நேயர்களுக்குக் குழப்பம் ஏற்பட்டு வேறு ஏதாவது ஒரு நிலையத்திற்குத் திருப்பிவிடுவர் அல்லது நிகழ்ச்சியைப பார்க்காமல் தொலைக்காட்சிப் பெட்டியை மூடி விடுவர் மிகவும் மெதுவாக நிகழ்ச்சி வேகம் இருப்பின் நேயாகளுக்குப் பொறுமையினறி வேறு நிலையத்திற்குத் திருப்பி விடுவர். அல்லது சாதனத்தை இயங்காது நிறுத்தி விடுவர். எனவே மிகுந்த வேகமும் மிகுந்த நிதானமும் விருப்பத்திற்குரியதலல எனபது தெளிவ.

Pacing : (ஆட்ட வேக ஒழுங்கு) விளம்பரஙகளின் அமைப்பில் கவனிக்கப்பட வேணடிய ஒரு கூறு ஆட்டவேக ஒழுஙகு ஆகும். நேயர்களது கவனததை ஈாத்தல, ஒருமை, பல்சுவை, உசசக்கட்டம போனறன பிற கூறுகள் ஆவன விளமபரஙகளில் 'அவசரம்', 'வேகம்' பற்றிய உணர்வு இல்லாத ஒரு நிலையைக் குறைத்து வேகத்தை அமைத்தலையே குறிக்கும் இக்கூறு. ஒருதுணி விற்பனை (விலைக் குறிப்பு) பற்றிய விளம்பரம் அவசரமான பாணியில் இருக்கலாம். சான்றாக, பாம்பே டையிங் துணி விலை தள்ளுபடி குறித்த விளம்பரத்தில் தள்ளுபடி குறித்துக் கேள்விப்பட்டவுடன் எல்லோரும் வேகமாக ஓடுதல் ; சிறு குழந்தை கூட வேகமாக ஆடையைச் சரிசெய்து கொண்டு ஓடுதல் போல வேகமாக அமைத்தலைக் குறிப்பிடலாம். மாறாக, ஒரு மதுவைப் பற்றிய விளம்பரம் ஒரு பொழுதுபோக்கும் ஓய்வுமான சூழலில் மெதுவான நிலையில் காட்டப்பட வேண்டும்.

Package : (ஒலிப்பதிவு இணைப்பு) வானொலி ஒலிபரப்பிற்குத் தயாராகத் தரப்படும் முழுமையான ஒலிப்பதிவு இணைப்புக்கள்.

pad : (நிகழ்ச்சியின் முடிவுக் கூறு அல்லது முடிவுச் செய்திகள்) தொலைக்காட்சியில் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட நிகழ்ச்சி முடிய வேண்டும் என்பது விதி. இறுதியில் இருக்கும் நேரத்தைப் பொறுத்து நிகழ்ச்சிப் பங்கேற்பாளர் இறுதிச் செய்திக் கூறினை முற்றிலும் நீக்கவோ அல்லது ஒருசில பகுதிகளை நீக்கவோ அல்லது இன்னும் சிலவற்றைச் சேர்த்து மெதுவாகவோ அல்லது சிலவற்றை நீக்கி விரைவாக கூறக்கூடியதாகவோ அமையும். இவ்விறுதிச் செய்திக் குறிப்பு pad எனப்படும். வானொலியில் நிகழ்ச்சியோடு இறுதியில் இணைந்த இசைக்குறிப்பு முடிவுக் கூறு எனப்படும்.

Padding : (இட நிரப்பல்) தலைப்பைச் சொற்களால் நிரப்பிப் பெரிதாக்குவது இடநிரப்பல் எனப்படும். அச்சொற்கள் செய்திக் கதையைக் கூறுவதில் பங்கு வகிக்காத சொற்களாக இருக்க வேண்டும். இரண்டாம் அடுக்கில்

உள்ள காலியிடத்தை ஏற்கனவே முதல் அடுக்கில் கூறிய செய்தியையே வேறு சொற்களில் சொல்லுதல் இத்தகைய முறைகளுள் ஒன்று. மற்றொரு முறையாவது காலியிடத்திற்குப் பதிலாக, ஒரு சொல்லைப் போட்டு சிறிய தொடராக இருப்பதை நீளமாக்கிப் பெரிய தொடர்போல் காட்டுதல் ; சிறிய தொடர் ஒன்றே போதும் என்ற சூழலில் நிரம்ப இடத்தை விழுங்கும் பெரிய வினைச் சொற்களைப் போட்டு எழுதுதல் உண்டு.

Page brightener : (பக்கப் பொலிவூட்டி) (பார்க்க : brightener).

Page layout : (பக்க வடிவமைப்புத் திட்டம்) நாளிதழின் பக்கத் தகடுகள் தயாரிக்கப் படுவதற்கு முன்பு அவை விரித்து வைக்கப்பட்டு ஒழுங்கு பண்ணப்பட வேண்டும். தற்போது இதனை மேற்கொள்ளுவதற்கு இரு வழிகள் உள்ளன. ஒரு முறை : ஒட்டுதல் முறை. அதாவது பக்கத்தின் மீது தலைப்புகள், செய்தியின் உடற்பகுதி, ஒளிப்படம், கோடுகள், சிறு கோடுகள் முதலியவை ஒரு முழு அளவுப் பக்க மாதிரிப் பகுதியில் ஒளிப்படமாக எடுக்கப்படும் பொருட்டு ஒட்டப்படுகின்றன. அவ்வாறு எடுக்கப்பட்ட ஒளிப்படம் அவ்வப் பத்திரிகைகள் கையாளும் தகட்டு ஆக்க முறைகள் (Plate making process) எவையோ அவற்றிற்கேற்ப ஒரு தகட்டில் எடுக்கப்படும். மற்றொரு முறை : 'கலைப்பகுதி' தவிர மீதி அனைத்தையும் ஒரு தேவையான (பெரிய) அளவுள்ள அதாவது ஒரு முழுப்பக்கச் செய்தியையும் கொள்ளும் அளவுள்ள இணைப்புப் பகுதியின் (terminal) மீது தொகுத்து அதன்பின் அப்பக்கத்தை ஒரு .'.போட்டோடைப் செட்டருக்குள் செலுத்தி எடுத்து அதன் விளைவாக இறுதியில் ஒரு எதிர்வடிவம் (negative) தயாராகக் கிடைக்க, அது ஒரு தகடாக மாற்றிக் கொள்ளப்படுகிறது. இந்த முறை கணிப்பொறி உதவிப் பக்கப் படிவ விரிப்பு ஆக்கம் (computer-assisted pagination) என அழைக்கப்படுகிறது.

Page make-up : (பக்கங் கட்டல்) நாளிதழின்/இதழின் பக்கத்தைப் படங்களாலும் தலைப்புக்களாலும் செய்தி உடற்பகுதிகளாலும் அழகுபட அமைத்தல் பக்கங்கட்டல் அல்லது பக்கவடிவாக்கம் செய்தல் எனப்படும். செய்தித் தாளில் செய்தியின் அளவு, எழுத்து வகைகள், விதவிதமான தலைப்புக்கள், பொருத்தமான படங்கள், பல்துறைச் செய்திகள், கதை-கட்டுரைகள், துணுக்குகள், கருத்துப்படங்கள், விளம்பரங்கள் ஆகியவனவற்றைப் பரவலாகவும், பக்கவாரியாகவும் பொருத்தமுற அமைப்பது பக்க அமைப்பு அல்லது பக்கம் கட்டுதல் எனப்படும். பிற இதழ்களிலிருந்து தம் இதழை வேறுபடுத்திக் காட்டவும் வாசகர்களைத் தம் இதழை வாங்கத் தூண்டவும் செய்திகளின் முக்கியத் துவத்தை அறிந்து கொள்ளவும் இதழுக்குக் கலைத் தன்மை தரவும் தம் சுவைக்கேற்றவாறு வாசகர்கள் தேர்ந்தெடுத்துப் படிக்கவும் பக்க அமைப்பு உதவுகிறது.

Page proof: (பக்கப் பிழை திருத்தப் பிரதி) ஒரு முழுப் பக்கத்தினையும் அச்சுக்கோர்த்த பின்னர் பிழை திருத்து வதற்காகத் தரப்படுகின்ற பிழை திருத்தப் பிரதி :பொருந்தாத செய்திக் கதைகள், தலைப்புக்கள், படப்பதிப்புக்கள், பட விளக்கங்கள், மொத்தத் தலைப்புப் பிழைகள், பிற பக்க அமைப்புப் பிழைகள் போன்றவற்றைத் திருத்து வதற்காகத் தரப்படும் மாதிரிப் பக்கம்.

Pagination : (பக்கப் படிவ விரிப்பு ஆக்கம்) 1) பக்கமிடல் (The assign-

ment of page numbers to pages) 2) மொத்தப் பக்கங்களையும் அல்லது பெரிய பக்கப் பகுதிகளையும் தொகுப்பதற்குப் பெரிய அளவிலான காட்சிப் படங்காட்டித் திரைகளைப் (VDT) பயன்படுத்தல். முழுப்பக்கப் படிவ விரிப்பு ஆக்கம் (pagination) என்ற முறை ஒட்டு அமைப்பு (paste up) முறைக்குப் பதிலாகத் தற்போது பயன்படுத்தப்படுகிறது. இம்முறை ஒளிம அச்சுக் கோர்ப்பானிலிருந்து (photo composer) அச்செழுத்துக்களை ஒட்டித் தயாரிக்கும் முறையின் நேரத்தைக் குறைப்பதற்கு உதவும் முறை ஆகும். இது இப்போது பல வெளியீடுகளில் புழக்கத்தில் இருக்கிறது. ஏனெனில் இம்முறை பக்க அமைப்புக்கும், விளம்பரங்களை ஒரு பக்கத்தில பொருத்துவதற்கும் பதிப்பிகரும் விஷயங்கள் குறித்த வளர்ச்சிககும் உதவுகிறது. இம்முறைப் படி என்ன நடக்கிறது எனில், பதிப்பிக்கப்பட வேண்டிய (editorial text) செய்திகள் ஓர் ஒளிம அச்சுக்கோர்ப் பானில் வைக்கப்பட்டு, மின்னணு (electronic) வழிகளால் தலைப்புக்கள், படங்கள், செய்திக்கதைகள் முதலியன வைக்கப்பட்டு தேவையான அளவு நீளத்தில் ஒரு பக்க வடிவத்தில் முறையாக வரிசைப்படுத்தப்படு கின்றன. பொதுவாக பதிப்பித்தல் (editing) இங்கு காட்சிப் படங்காட்டி யால் (VDT) செய்யப்படுகிறது. பக்க அமைப்பு அல்லது பக்க வடிவாக்கம் (make up) ஒரு பககப் படிவ விரிப்பு ஆக்க வழிமுறையின் (pagination device) மீது செய்யப்படுகிறது. பதிப்பிக்கப் பட வேண்டியவற்றை ஒரு பக்கத்தில் வரிசைப்படுததி அமைப்பது என்பது வரைபடங்கள், தலைப்புக்கள் முதலிய வற்றைப பயன்படுத்த வேண்டி இருப்பதால விளம்பரம் அமைப்பதை விடவும் சிககலானது.

Pagination terminal : (பக்கப் படிவ விரிப்பு ஆக்க இணைப்புப் பகுதி) குறிப்பாக மொத்தப் பக்கங்களையும் பக்கமாக விரித்துத் திட்டம் செய்து (layout) காட்டும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு காட்சிப் படங்காட்டிப் பகுதி (visual display terminal).

Paint box : (மெருகுப் பெட்டி) வரைபடங்களை உருவாக்குவதற் கென உள்ள மின்னணு அமைப்பு.

PAL : (பி.எ.எல்.) 'Phase Alternation (by) Line' என்பதன் சுருக்கம். தொலைக்காட்சி ஒலி ஒளிப்பதிவு செய்து ஒளிபரப்பும் வகைகளுள் ஒன்று.

Pan : (திரும்பு அசைவு) காமிரா அசைவு முறைகளில் ஒன்று. காமிரா வை நிலையான இடத்தில் வைத்து விட்டு காமிராவைச் செங்குத்து மற்றும் கிடைமட்ட நிலைகளில் சுழற்றினால் அது திரும்பு அசைவு (pan) ஆகும். ஒரு மக்கள் கூட்டத்தின் குறுக்கே கிடைமட்ட நிலையில் (horizontal) நகர்ந்து அரங்கின் வடிவம், மக்கள் எண்ணிக்கை, அவர்களின் உணர்வுநிலை முதலியவற்றை இம்முறை அசைவால் காட்ட முடியும். ஒரு பாத்திரம் அறையில் நடப்பதைக் காட்டவும் ஒரு மகிழ்வுந்து மலைச் சரிவில் வளைந்து வளைந்து செல்வதைக் காட்டவும் இம்முறை பயன்படுகிறது. மகிழ்வுந்தின் வேகத்திற்கு இணையாக இவ்வசைவு முறையின் வேகமும் அமைந்து, காட்சிக்கு வேகத்தைத் தரவேண்டும். வேகமாகச் செல்வதானால் காமிராவும் வேகமாக இவ்வசைவு முறையைக் கையாள வேண்டும். மெதுவாகச் செல்வதைக் காட்ட வேண்டுமானால் மெதுவாகக் கையாள வேண்டும். காமிரா செல்லும் வேகத்தில் பல்வேறு பொருட்கள் காட்சிகளைக் காட்டும் வகையில் காமிராவை இடைநிலைக் கோணத்தில் இயக்குவது ; வேறுபட்ட

செங்கோட்டுக்கோணத்தில் (vertical) கீழ்மேல் இயக்கு (tilt) மற்றும் முன்பின் இயக்கு (zoom) முதலிய வற்றால் உணர்ச்சி அளவினைக் கூட்டும் இம்முறை.

Panel discussion programme : (குழு கலந்துரையாடல் நிகழ்ச்சி) வானொலி, தொலைக்காட்சி முதலியன தயாரிக்கும் பேச்சு (talks) நிகழ்ச்சிகளில் இதுவும் ஒருமுறை. தலைப்பைப் பொறுத்து இந்நிகழ்ச்சியின் சிறப்பு அமையும். பலர் கலந்து கொண்டு ஒரு கருத்தைப் பற்றிப் பல கருத்துக்களைச் சொல்லிக் கலந்துரையாடுதல் இவ்வகை.

Pan left: (இடப்புற திரும்பு அசைவு) காமிரா அசைவு முறைகளில் ஒன்று. இம்முறை காமிரா இடது கோணத்தில் (axis) நகர உதவுகிறது.

Pan right : (வலப்புற திரும்பு அசைவு) காமிரா அசைவுகளில் ஒன்று. இம்முறை காமிரா வலது கோணத்தில் (axis) நகர உதவுகிறது.

Pantronage : (நேயர் கருத்து ஆய்வு) வானொலி நேயர்களது வானொலி நிகழ்ச்சி குறித்த எண்ணங் களை ஒரு குறிப்பிட்ட காலத்தின் போது ஆய்ந்தறிவது.

PAR : (பத்தி) வானொலிக்குச் செய்தி எழுதுகையில் பாரா என்ற பொருள்படும் 'PARAGRAPH' என்ற சொல்லைக் குறிப்பிடப் பயன்படுத்தும் எழுத்துக்கள்.

Parabolic reflector : (பேரபாலிக் ரி.ஃப்ளெக்டர்) வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பில் நேரடி ஒலி அலைகளைப் பெற ஒலி வாங்கியோடு இணைக்கப் படும் உணர்கருவி. இது கள நிகழ்ச்சிகளில் பயன்படுகின்றது.

Parody lead : (நையாண்டிப் போலி முகப்புச் செய்தி) இந்த முகப்புச் செய்தி உருவகத்தைப் பயன்படுத்தி எழுதப் படுகிறது. சான்றாக, oh' where has my King Keshave gone! என்பதைக் குறிப்பிடலாம். இங்கு இச்செய்தி ஒரு தொலைந்துபோன யானையைப் பற்றியது. இம்முறைக்கு உவமையை உருவகப்படுத்துவது தேவைப்படு வதனால் சரியான பொருளைத் தெரிவிப்பதில் போதுமான கவனம் எடுக்கப்பட வேண்டும்.

Parsimony principle : (பொருளாதாரச் சிக்கனக் கொள்கை) வலைப் பிணைப்புக்கள் (networks) தரமான தொலைக்கூறு நிகழ்ச்சி தயாரித்தல், மற்றும் வணிக நோக்கில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரித்தல் (syndication) ஆகிய இரு வழிக்கும் மிகச் சிறந்த சக்திவாய்ந்த திருப்தியளிக்கும் வழி இது. 'Parsimony' என்பது நிகழ்ச்சியின் கருத்தைப் பல மணி நேரங்களுக்கு விரிவுபடுத்துவது மட்டுமல்ல. நிகழ்ச்சித் தயாரிப்பாளர் தயாரிப்புக்கான பணச் செலவைப் பல்வேறு நிலையங்கள், ஒலிபரப்புக்கள், நேயர்கள் முதலானோருக்குப் பகிர்ந்து தருதலும் ஆகும். (சான்று : ஏற்கனவே பதிந்து வைக்கப்பட்டிருக்கும் பாடலை, நிகழ்ச்சியைத் திரும்பத் திரும்ப ஒலிபரப்பித் தயாரிப்புச் செலவைக் குறைத்தல்).

Participation advertising : (பங்கு கொள்ளல் விளம்பரம்) தொலைக் காட்சி நிகழ்ச்சிகளிடையே சில வெற்றிடங்கள் விளம்பர தாரர்களுக்கு விற்கப்படும். இம்முறைப்படி விளம்பர தாரர்களுக்குத் தன் விளம்பரம் இடம்பெறும் நிகழ்ச்சியோடு எவ்விதத் தொடர்பும் இல்லை. சில நிமிடங்கள் தன் விளம்பரம் அதில் இடம்பெறும் உரிமையை வாங்கி இருக்கிறார்.

அவ்வளவுதான். நிகழ்ச்சிகளை எழுதுவோர் நிகழ்ச்சியை வாசகர்களை நன்கு ஈர்க்கும் வகையில் எழுத வேண்டும். சோதனை ஓட்டத்தின் போது பல வாசகர்களை நிகழ்ச்சி கவர்ந்தால், அதன்பின் வெற்றிடங்கள் கலந்துகொள்ளும் விளம்பரதாரர் களுக்கு விற்கப்படலாம். விளம்பரம் எழுதுவோர் தன் பொருள் நேயர்களை ஈர்க்கும் வண்ணம் விளம்பரம் எழுதுவாரேயன்றி நிகழ்ச்சி பற்றி அறிந்திருக்க மாட்டார். இத்தகைய விளம்பரங்கள் பங்கு கொள்ளல் விளம்பரங்கள் எனப்படும்.

PASB : (ஒலிபரப்பு நிகழ்ச்சிக் குறிப்பு) வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பாகத் தயாரானவுடன் அல்லது ஒலிபரப்பான வுடன் அந்நிகழ்ச்சியின் கால அளவு குறித்த இணைப்புக்கள், பேச்சாளருக்குத் தரப்படவேண்டிய பணம் முதலானவை பற்றிய குறிப்புக்களைத் தரும் ஆவணம். 'Programme as broadcast' என்பதன் சுருக்கம்.

Passing shot : (செலுத்து காட்சி) ஒரு செய்திக் கதையில் புதுச் செய்தி ஒன்றை இணைத்து அதைத் தொடர்ந்ததாக அடுத்த காட்சியும் அமைந்து இதனால் கதையில் அதிக நேரம் செலவழிக்காமல் செய்திக் கதைக்குள் செல்வதாக அமையுமே யானால் அது செலுத்து காட்சி (passing shot) ஆகும்.

Paste down : (ஒட்டு முறை) ஒளிம அச்சுக்கோர்ப்புக்கான (photo litho graphy) அச்சுக்கோர்ப்பு விரிப்பு (composing display) வகை முறை இது. அச்சுக்கோர்ப்பவர் பசையைப் பின்புறம் கொண்டுள்ள அகர வரிசை எழுத்து களிலிருந்து எழுத்துக்களைத் தெரிவு செய்து அவற்றை ஒட்டுகிறார்.

Paste up : (ஒட்டு அமைப்பு) அச்சுக் கோர்த்து பின்னர் பிழை திருத்தப்பட்டு அச்சிடப்பட்டு ஒரு பக்கத்தில் குறிக்கப்பட்ட இடங்களில் ஒட்டப்பட்டு அமைக்கப்பட்ட பக்கங்கள் paste-ups எனப்படும். நுண் அச்சுப் படிமையிலும் (offset) பிற அச்சீட்டு முறைகளிலும் உள்ள இச்செயல் காமிராவுக்காக ஒரு பக்கத்தைப் பக்க வடிவாக்கம் செய்தல் ஆகும். பிழை திருத்தப்பட்ட தலைப்புக் கள், செய்தியின் உடற்பகுதி, வரை கோட்டுப் படங்கள் முதலியவற்றை ஒட்டுதல் இங்கு நடைபெறுகிறது.

Pauses : (இடைவெளி) தொலைக் காட்சி, வானொலி நிகழ்ச்சிகளுக்கும் அதன் கூறுகளுக்கும் இடையில் மிகவும் வேகமாகவோ மிகவும் மெதுவாகவோ அன்றி குறிப்பிட்ட இடைவெளி தரப்படுமாறு அமைக்கப் பட்டால்தான் கேட்போர் அதனோடு ஒத்துப்போய்க் கேட்க முடியும். சரியான முறையில் இடைவெளி தரப்படா விட்டால் நேயர்களது கவனம் வேறுபிறவற்றில் சென்றுவிடும்.

PBS : (பொது ஒலிபரப்பு அமைப்பு) 'Public Broadcasting System' என்பதன் சுருக்கம். 'பொது ஒலிபரப்பு அமைப்பு' என்பது இதன் பொருள்.

Peak programme meter : **(உச்ச நிகழ்ச்சி உணர்த்து கருவி)** ஒரு நிகழ்ச்சி இயக்குநருக்கு ஒலி மட்டங் களின் உச்சநிலைகளை உணர்த்தி மிகை அதிர்வுகளை மற்றும் சிதைவ களைத் தவிர்க்க உதவும் வகையில் பயன்படும் கருவி.

P.E.N. : (பி.இ.என்.) Association of Poets, Play writers, Editors, Essayists & Novelists என்பதன் சுருக்கம். அனைத்து உலகக் கவிஞர்கள், நாடக ஆசிரியர்கள், பத்திரிகை ஆசிரியர்கள்,

கட்டுரை ஆசிரியர்கள், நாவலாசிரியர்கள் ஆகியோரின் கழகம்.

Perfect binding: (ஒழுங்கு இணைப்பு) உருக்கினால் நெகிழ்வுத் தன்மையுடையதும் பின்னர் இறுக்கும் தன்மையுடையதுமான பசைப் பொருளை ஓர் இதழின் ஓர இணைப்புப் பகுதியாகப் (பின்னெலும்பாகப்) பயன்படுத்திச் செய்யப்படும் பைண்டிங் முறை.

Period : (முற்றுப்புள்ளி) முற்றுப்புள்ளிக்கான மறுபெயர் முழுப்புள்ளி.

Periodicals : (பருவ இதழ்கள்) குறிப்பிட்ட இடைவெளியில் தொடர்ந்து வெளிவரும் மாதமிருமுறை, வார இதழ் போன்ற (நாளிதழ் அல்லாத) இதழ்கள்.

Perseverance : (விடா முயற்சி) ஒரு நிருபருக்கு இருக்க வேண்டிய சிறப்பியல்புகளுள் ஒன்று. தகவல்கள் யாருக்குத் தெரியும் என்பதைக் கண்டு பிடிக்க வேண்டியதும் அவர்களை இணங்கச் செய்து பேசவைப்பதும் அவர்கள் உண்மையைத்தான் பேசுகிறார்களா என்று தீர்மானித்தலும் ஒரு நிருபருக்குரிய கடமைகள் ஆகும். தன் முழுச் செய்திக்கதைக்கும் உரிய தகவல்களைப் பெறுவதற்குரிய எல்லா வாய்ப்புக்களையும் பெறுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். தேவையற்ற எந்த அவசரமும் அவரது புலனாய்வைச் சேதப்படுத்தி அவரது செய்திக்குரிய மையப் பகுதியை அவர் பெறாமல் செய்துவிடும்.

Personal: (உள்ளூர்ச் செய்தி) ஒரு சிறிய செய்தி ; பொதுவாக ! பாரா உடையதாக இருக்கும். ஒரு குறிப்பிட்ட குழுவினர் குறித்து வழக்கமாக வந்துபோகும் செய்தி என்று பொதுவாக அழைக்கப்படுகிறது.

Personality lead : (ஆளுமை முகப்புச் செய்தி) குறிப்பிட்ட நபர் என்ன சொல்லுகிறார் என்பதைவிட அவரது தனி இயல்புகள் குறித்த அவரது அடையாளக் குறிப்புக்களைக் கூறுவதற்கு இத்தகைய முகப்புச் செய்தி பயன்படும். சான்று : Mahatma Gandhi expressed himself in favour of country-wide total prohibition.

Personalization : (வட்டாரப்படுத்தல்) நேயர்களுக்குத் தெரிந்த இடம், தெரிந்த உள்ளூர் மக்கள், உணர்வு பூர்வத் தொடர்புள்ள மதம், பொருளாதாரம் பற்றிய ஆர்வமூட்டும் செய்திகள் முதலியவை வாசகரை ஈர்ப்பன. எங்கேயோ நடக்கும் செய்தியைவிட உள்ளூர்ச் செய்தி வாசகரை ஈர்க்கும். நமது ஊரில் ஒரு பண்ணை மற்றும் உள்ளூர் நல மையத்தில உள்ளவருடன் பேட்டி போன்றன வாசகரை ஈர்க்கும்.

Personal lead : (சுய முகப்புச் செய்தி) செய்தி எழுதுதலில் தன்மை ஒருமையைப் பயன்படுத்தி எழுதுதல் ஒரு பிரிவினைக்கூறு என கூறப்பட்டு வேண்டாம் என ஒதுக்கப்படுகிறது. எங்கு தன்மை ஒருமை பயன்படுத்தப் படலாம் என்றால், கட்டுரையாளர்களாலும் சலுகைகள் உடைய பிற இதழாளர்களாலும் பயன்படுத்தப் படலாம். தொலைக்காட்சியில் வரும் செய்தி அறிவிப்பாளா போன்றோர் தங்களை New Journalists என்று குறிப்பிட்டுக் கொள்ளுகின்றனர். அவர்கள தமககுத் கொடுததுக் கொள்ளும் சிறப்பின் ஒரு பகுதியே இத்தகைய முகப்புச் செய்தி எழுதுதல் ஆகும்.

Perspective sound : (சிறப்பு ஒலி) ஓர் ஒலி ஆதாரத் தூரததின் மாயை.

Perspective vision : (சிறப்புக் காட்சி) மேடை, ஒலி, லென்ஸின் கோணத் தெரிவு முதலியவற்றைப் பயன்படுத்து வதன் மூலம் உண்டாக்கப்படும் இடம், தூரம் பற்றிய மாயை. படம், ஒலி இரண்டனுக்கும் தொடர்புச் சிறப்பு இருந்தால்தான் ஒரு ஒருங்கிணைந்த விளைவு கிடைக்கும். இது மிக முக்கிய மானது.

Persuasive appeals: (**இணங்கு விக்கும் கூறுகள் அல்லது இணங்கு விக்கும் சிறப்பம்சங்கள்**) நிகழ்ச்சி வழங்குபவரின் நோக்கங்களை நேயர்கள் நிறைவேற்றுமாறு தூண்டு வன வாசகர்களை இணங்குவிக்கும் கூறுகளும் வாசகர்களை ஒருமுகப் படுத்தும் கூறுகளும் (motivational appeals) ஆவன. நிகழ்ச்சிகளுள் இணங்கு விக்கும் இச்சிறப்பம்சங்கள் வணிக விளம்பரதாரர்களின் சார்பில் நேயர்களைப் பொருட்களை வாங்கவைக்கும் நோக்கில் பொதுநல நிறுவனங்களை ஈர்க்கும் நோக்கில்-நிலைய நிர்வாகத்தினரின் தலையங்கத்தை ஒத்துக்கொள்ளும் நோக்கில்-மத நிறுவனங்களுக்கு நிதி அளிக்கும் வகையில்-நிறுவனங்களின் கொள்கைகளை ஏற்கும் வகையில்-ஓர் அரசியல் நபருக்கு வாக்களிக்கும் வகையில்-எந்தச் சூழலிலும் வழங்கு வோர் நோக்கத்திற்கு நேயர்கள் செயல்பட வைக்கின்றன. இச்சிறப்பம் சங்கள் 1) ஈட்டப்பட்ட பொருள் மற்றும் சேமிப்பு, 2) சாதனை மற்றும் பரபரப்பு, 3) விவாதம், 4) தோழமை, 5) படைப்பு, 6) ஆர்வம், 7) அழிவு, 8) அச்சம், 9) குற்ற உணர்வு, 10) நலம் மற்றும் பாதுகாப்பு, 11) போலச் செய்தல், 12) சுதந்திரம், 13) நேர்மை, 14) சுய சிலாகிப்பு, 15) அதிகாரம், 16) பெருமை மற்றும் வீண் தற்பெருமை, 17) பயபக்தி அல்லது வழிபாடு, 18) திடீர் நிலைமாற்றம், 19) பால் ஈர்ப்பு, 20) இரக்கம், பரிவு போன்றன ஆகும். இக்கூறுகள் அல்லது சிறப்பம்சங்கள் தனியாக வராமல் இணைந்து வரவேண்டும். இவை அதிக எண்ணிக்கையில் ஒரு நிகழ்ச்சியில் சேர்க்கப்பட்டாலும் நிகழ்ச்சியின் சிறப்பு குறைந்துவிடும். எவை தேவையோ அவைமட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். சான்றாக, 'பால் ஈர்ப்பு' என்ற சிறப்பம்சம் குழந்தைகள் நிகழ்ச்சிக்கு வலுவூட்டும் ஒரு சிறப்பம்சம் அன்று. விளம்பர தாரருக்காக நேயர்களை ஈர்க்கும் பொருட்டு நேயர்களை ஈர்க்கும் மற்றும் ஒருமுகப்படுத்தும் கூறுகள் சிலவற்றை வைத்து எழுதுதல் வேண்டும். 6 சிறப்பம்சங்கள் வரை ஒரு விளம்பரத்தில் இருக்கலாம். 3 சிறப்பம்சங்கள் இருக்குமாறு கவனித்து எழுதுதல் சிறப்புடைத்து. அவை இலக்கு நேயர்களுக்கு (target audience) ஏற்ற மாதிரியும் பொருளுக்கு ஏற்ற மாதிரியும் பொருந்தும் வகையில் இருக்க வேண்டும். சான்று : உயர் இரத்த அழுத்தத்திற்கான காரணம் கூறும்போது அதனை மக்கள் வழக்கமாகக் கூடும் தெரு, ஆஸ்பத்திரி, திரையரங்கு போன்ற பின்னணியில் குறிப்பிடுதல்.

Photocomposition : (ஒளிம அச்சு) ஒளிப்படக் கலவை மூலமாக அச்செழுத் துக்களைக் கோர்க்கும் எந்த முறையும் இவ்வகைப்படும். புகைப்படம் எடுக்கும் முறையில் தாளின் மீது அச்சிடும் ஒரு அச்சீட்டு முறை இது. உருக்கு உலோக அச்சு மற்றும் லைனோடைப்பு அச்சு இயந்திரம் முதலிய பழைய முறைகளான அச்சீட்டு முறைகளை இடம்பெயரச் செய்துவிட்டது இம்முறை. பதிலாக, ∴போட்டோ கம்போஸிஷன் இயந்திரம் ஆகிய ஒளிம அச்சு இயந்திரம் மின்னணுக் குறியீடுகளைப் பெற்று அச்சிடப்பட வேண்டியவற்றை வடிவாக்கம் செய்து பின் அவற்றைத் தாள் மற்றும் ∴பிலிமுக்கு ஒளிப்பட வழிகள் மூலம்

மாற்றுகிறது. பின்னர் பத்தி நீளமுள்ள தாள், பக்க வடிவத்தாளில் வல்லுநர்களால் ஒட்டப்படுகின்றன.

Photoelectric cell : (ஒளிம மின்கலம்) ஒளியோடு மிகவும் மாறுபடுகின்ற ஒருவிதப் பொருளை உள்ளடக்கிய மின்கலம். இம்மின்கலம் மின்னணுக் கத்தோடு ஒளிக் குழாயிலிருந்தோ அல்லது தன்னை ஒத்த ஆதாரத்திலிருந்தோ மின்னணு வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்துகிறது.

Photo engravings : (ஒளிமச் செதுக் கல்கள்) ஒளிமக் கலை மற்றும் அமில அரிப்பு மூலமாக உயர்த்தப்பட்ட உருவங்கள் உள்ள பரப்பை உள்ளடக்கிய உலோகத் தகடுகள். இம்முறை 'புகைப்படச் செதுக்கல்' என்றும் குறிப்பிடப்படும். வரியாகவோ அரிப்புச் சித்திரப் பதிப்பு முறையாகவோ இம்முறை நடைபெறுகின்றது.

Photo lithography : (புகைப்பட எழுத்தச்சுப் படிமைமுறை) மை நேரடியாக அச்சிலிருந்து தாளுக்குப் பரப்பப் படாமல், ஒரு ரப்பர் உருளையிலிருந்து பரப்பப்படும் அச்சுமுறை ஆகும். இரப்பர் உருளை அச்சிடப்பட வேண்டிய படிவத்தை ஒரு தகட்டிலிருந்து பெற்றிருக்கும். புகைப்பட எதிர்வடிவை (negative) ஒரு கல்லில் பதித்துத் தட்டையான அச்சுப் பொறியால் அச்சடிக்கப்படுகிறது.

Photo polymer plate : (ஒளிப்பட மீச்சேர்மத் தகடு) நாளிதழ்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் ஒரு கடின குழைம (பிளாஸ்டிக்) அச்சிடும் தகடு. அது ஒரு ஆழ்ந்த-செதுக் குருவத் தகடு ஆகும். ஒட்டும் முறையிலிருந்து ஒளிப்படமாகத் தயாரிக்கப்பட்டது. நீண்டநாள் பயன்படுத்தப்படக் கூடிய ஒன்று.

Photostat : (படவுருப் படிவமைவு) நிழற்பட அமைவினால் எடுக்கப்பட்ட ஆவணங்களைப் பிரதி எடுக்கும் இயந்திரத்திற்கு வைக்கப்பட்ட பெயர். நிழற்பட அமைவினால் எடுக்கப்பட்ட ஆவணப் பிரதிக்கும் இப்போது அதுவே பெயராக வழங்கப்பட்டு வருகிறது.

Pi: (கலைப்பு அச்செழுத்துக்கள்) கூட்டுக் குவியலாகத் தாறுமாறாகக் கலைக்கப்பட்டு கலந்து வைக்கப் பட்டுள்ள அச்செழுத்துக்கள்.

Pica : (பைகா) 12 புள்ளி அல்லது ஒரு அங்குலத்தின் (inch) ஆறில் ஒரு பாகம் என்று அச்சீட்டாளர் பயன்படுத்தும் ஒரு அடிப்படை அளவு.

Pica em : (பைகா எம்) நீளம் மற்றும் பரப்பின் ஒரு அடிப்படை அலகு.

Pick up : (சேர்) ஏற்கனவே அச்சிடப் பட்டுவிட்ட ஒன்றனோடு மேலும் சிலவற்றைச் சேர்த்தல். அவ்வாறு சேர்க்கப்பட்டவை 'PICK UP'எனப்படும். 'pick up line' என்ற குறியீடு புதுச் செய்தியின் எவ்விடத்தில் பழையது சேர்க்கப்பட வேண்டும் என்று நெறிப் படுத்துகிறது. pick up என்று அச்சிடு வோரால் சுருக்கமாக எழுதப்படுகிறது. வேறு செய்திப்பகுதியுடன் அல்லது ஒரு புது முகப்பின் இறுதியில் சேர்க்கப் பட வேண்டும் என்று கூறப்படும் செய்திப் பகுதிக்கு 'pick up' என்ற பெயர் வழங்கப்படுகிறது. தந்திச் சேவைப் பிரதிகளில் மேலே குறிக்கப்பட்டுள்ள வரி. இவ்வரி 'சேர்' (add) என்ற சொல்லை உள்ளடக்கி இருக்கும். செய்திக் கதையின் தோற்றுவாய் மற்றும் முந்திய பக்கத்தின் சில இறுதிச் சொற்கள் முதலியவற்றைக் குறிப்பிட்டு இன்ன இடத்தில் சேர் என்று குறிப் பிடுகிறது. மொத்தச் செய்திக் கதையையும் வரிசைப்படி தொகுக்க இக்குறியீடு பயன்படும்.

Picture tube : (தொலைக்காட்சி உருக்குழாய்) ஆடி ஒரு காட்சியைச் சிறியதாகவும் தெளிவாகவும் ஓர் உருவில் காட்ட தொலைக்காட்சியில் அவ்வுரு தோன்றும் குழாய் தொலைக் காட்சி உருக்குழாய்.

Picturisation : (படத்தன்மைப் படுத்தல்) படக்கோவை ஆக்கும் கலை.

Piece : (செய்தித் துண்டு) ஒரு செய்திக்கதை அல்லது ஒரு செய்திக் கட்டுரை.

Piece to camera : (காமிரா செய்தித் துண்டு) காமிராவிற்காக ஒருவர் நேரடியாகக் களத்திலேயே பேசி அளித்த செய்திப் படைப்பு.

Pie chart : (எளிய வரைபடம்) அளவு பற்றிய தொடர்புகளை விளக்கு வதற்குப் பகுதிகளாகப் பகுத்துக் காட்டிய ஒரு வட்டத்தைப் பயன்படுத்தி விளக்கும் ஒரு விளக்க வரைபடம்.

Pi line: 1. (கலப்பு அச்செழுத்து வரி), 2. (குறிப்பு வரி). 1) அச்சு இயந்திரமே உருவாக்கிய ஒரு வரி ; அவ்வரி இன்ன அச்சு எழுத்துகள் என்றில்லாமல் ஓர் ஒழுங்கற்ற முறையில் பல்வேறு எழுத்துக்களினால் ஆக்கப்பட்டி ருக்கும். 2) இச்செய்திக் கதை குறித்த செயதிகள் இன்னும்வரும் என்று குறிக்கும பொருட்டு மேற்பகுதியிலோ அல்லது கீழ்ப்பகுதியிலோ தரப்படும் தலைப்பைக் குறிக்கும்.

Pitch : (சுரம்) குரலின் இயல்பு வகை ; நிகழ்ச்சிக்கேற்பக் குரலின் சுரவிசை அமைய வேண்டும். அதுபற்றிய குறிப் பைத் தந்து எழுதவேண்டும். ஒவ்வொரு பாத்திரம் வரும்போது ஒவ்வொரு வகைக் குரல் அளவு தேவை.

Pix : (படங்கள்) 'pictures' என்ற ஆங்கிலச் சொல்லின் சுருக்கச் சொல்.


Pixel: (படக்கூறு)

Plain rule : (சாதாக் கோடு) வெறும் சாதாரணக் கோடு ; அலங்கரிக்கப் படாத கோடு.

Planer : (சமதளப் பலகை) ஒரு பக்கத்தைச் சேர்த்து நெறித்துக் கட்டும் போது அப்பரப்பை ஒரு மரச்சம் மட்டியால் சமப்படுத்த அச்சீட்டாளர் களால்சமப்படுத்தத் தட்டப்படும் மரக் கட்டைகள். ஒரே மட்டமுள்ள சிறிய மரக்கட்டைத் துண்டு ; பக்கம் மேக் அப் செய்து முடிந்ததும் அச்சு எழுத்துக்கள் ஒரே மட்டமாக இருக்க அச்சுகளின் மீது இக்கட்டையை வைத்து சுத்தியால் தட்டிச் சரிப்படுத்தப்படும்.

Plate : (உலோகத் தகடு) 1) அரை வட்ட வடிவ அச்சு உலோகத் தகடு. இதுதான் தாளில் அச்சுகளைப் பதிக் கிறது. சிலிண்டர் வடிவிலும் இருக்கும். 2) படப்பதிமை (பிளாக்) செய்யப் பயன் படும் தகடு. சிங்க் என்ற உலோகத்தால் ஆனது. எழுத்தச்சு முறையில் நேரடி யாகவும் எதிரீட்டுப் பதிவுமுறையில் மறை முகமாகவும் 'plate' எனப்படும் ஒரு தனி உலோக அல்லது பிளாஸ்டிக் தகட்டிலிருந்துதான் ஒரு பக்கம் அச்சிடப்படுகிறது. அத்தகட்டிற்கு 'plate' என்று பெயர்.

Platen press : (தட்டை அச்சுப்பொறி)



அச்சிடப்படும் இடமும் தட்டும் சமதளமாக அமைக்கப்பட்டிருந்த இவ்வச்சுப்பொறி 1862-இல் ஜி.பி கோர்டன் என்பவரால் செய்யப்பட்டது. கை யினால் இயக்கும் அச்சுப்பொறி இது. (படம் : a) தட்டை அச்சுப்பொறி, b) தட்டை உருளி அச்சுப்பொறி, c) சுழல் அச்சுப் பொறி).

Play : (வைப்பு முறை) ஒரு செய்திக் கதைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நிலையும் அச்சாக்கத் தகுதியும் அதன் வைப்பு முறையை நிர்ணயிக்கும். ஒரு செய்திக் கதைக்கு 'heavy', 'big', 'light', 'little' ஆகிய வைப்பு முறைகளுள் ஏதாவது ஒன்று கொடுக்கப்படலாம். ஒரு படம் அல்லது செய்திக்கதை வெளியிடப்பட்டுள்ள முறை. ஆசிரியர்கள் பலர் ஒரு செய்திக் கதையை வைப்பு முறை மூலம் உயர்த்துதல் அல்லது தாழ்த்துதல் என்பது குறித்தே பேசுகின்றனர். இத்தகைய தற்போதைய விளக்கங்கள் (Playing it up or down) பொதுவாக பொது மக்களால் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன.

Play back: (திரும்பப் பார்த்தல்) ஒலிநாடா நிகழ்ச்சிகளைத் திரும்பப் போட்டுப் பார்த்தல்.


Play structure : (நாடக அமைப்பு) வானொலி அமைக்கும் நாடக நிகழ்ச்சி களில் மூன்று முக்கிய உறுப்புக்கள் உள்ளன. அவை பாத்திரம், கதைப் பின்னல், உரையாடல் முதலியன. எல்லாம் ஒருங்கிணைந்து தெளிவான கருத்தில் நிலையாக இருக்க வேண்டும். அப்படியானால் தான் அந்நிகழ்ச்சியில் ஓர் ஒருமை இருக்கும்.

Play up : (பரப்பி வை) எல்லாச் செய்திகளையும் அவ்வப் பக்கங்களில் நிரவி வைத்தல்.

PM : (மாலைப் பத்திரிகை) மாலையில் வெளியாகும் பத்திரிகை.

Point : (புள்ளி) 1) அச்சு எழுத்துக் களின் வடிவம் அமைக்கப்படுவதற்குக் கையாளும் அளவின் அலகு. பொதுவாக ஓர் அகலத்தின் (inch) 1/72 பகுதி அல்லது ஒரு பைகாவின் $\frac{1}{2}$ பகுதி ஆகும். 2) முற்றுப்புள்ளியைக் குறிக்கும் சொல்.

Point of view : (பார்வை நிலை) காமிரா ஒரு பொருளைப் பார்க்கும் கோணமே நாம் பார்க்கும் கோணமும் ஆகும். அரங்கில் ஒவ்வொருவரும் சிறிது வேறுபட்ட இடங்களிலிருந்து பார்த்தாலும் காமிராவின் கோணமே அவர்கள் பார்க்கும் கோணமும் ஆகும். காமிரா பல கோணங்களில் மாறி மாறி நகரலாம். எனவே குழப்பத்தைத் தவிர்க்கப் பயன்படுத்தப்படும் ஒரு குறிப்பிட்ட வகையான நிலையான படப்பிடிப்பே 'பார்வை நிலை' எனப்படும். ஒரு பாத்திரத்தின் கண்கள் பார்க்கும் கோணத்திலேயே காமிராவும் பார்ப்பதாகப் படைப்பது பார்வை நிலைப் படப்பிடிப்பு எனப்படும். இவ்வகைப் படப்பிடிப்பில் பாத்திரத்தின் இடத்தில் நாமும் இருப்பதாக ஆகிவிடுகிறோம். சான்றாக, ஒரு பெண்ணைத் தேடும் ஒருவன் திடீரென 'நான் கண்டு பிடித்துவிட்டேன்' என்று கூற அவன் பார்வை கிணற்றுக்குள் செல்ல நாமும் அவனுடனிருந்து அவனுடன் சேர்ந்தே கிணற்றுக்குள் பார்ப்பதாக உணர்தல் பார்வை நிலைப் படப்பிடிப்பைக் கொண்டது. ஒரு தலைப்பை ஒருவரது கோணத்திலிருந்து பார்ப்பது ; நிகழ்ச்சிகளை ஏதாவது ஒரு கோணத்தில் நோக்கி அமையுமாறு எடுத்தல் என்பது ஒருமை, உள்ள டக்கத்தை ஓர் ஒழுங்குக்குள் கொண்டுவரல், இலக்கு நேயருக்கு ஏற்ப அமைத்தல் முதலியவற்றிற்கு உதவுகிறது. விளக்கப்படமும் இதற்கு விதிவிலக்கல்ல. சான்றாக ஒரு இசை நிகழ்ச்சி பற்றிய விளக்கப்படம் 3 பார்வை நிலைகளைக் கொண்ட தாகலாம்.



Polar : (துருவம்) ஒலிவாங்கியின் அதிகபட்ச ஒலிபெறும் பகுதியைக் குறிப்பிடுவது.

Polarity reversals : (துருவ மாற்றங்கள்)

Police blotter : (காவல்துறைச் செய்திப் பதிவேடு) அன்றாட சம்பவங்கள் எல்லா காவல் நிலையங்களிலும் பதிவு செய்து வைக்கப்பட்டிருக்கும். அதற்கு 'police blotter' என்று பெயர். பொதுவாக எல்லா காவல் நிலையச் செய்தி சேகரிப்பு நிருபர்களுக்கும் செய்தி சேகரிப்பதற்கென அவர்கள் கேட்கும்போது தரப்படும்.

Police story : (ஒழுங்கு நிலைநாட்டுச் செய்திக் கதை) ஒரு பிரச்சினையின் மீதான தம் பத்திரிகையின் கருத்தின் நிலைப்பாட்டைப் பிரபதிபலிக்கும் செய்திக் கதை ஒழுங்கு நிலைநாட்டுச் செய்திக்கதை எனப்படும்.

Pool : (இதழாளர்ச் சிறு குழு) ஒரு பெரிய குழுவினரைச் சந்தித்துச் செய்தி தயாரிப்பதற்கெனத் தெரிந்தெடுக்கப்பட்ட ஓர் இதழாளர் அல்லது ஒரு சிறிய இதழாளர் குழு.

Pool reporting : (குழுச் செய்தி சேகரிப்பு) பல்வேறு பத்திரிகைகளின் செய்தியாளர்கள் கூட்டாகச் செய்தி சேகரிப்பது.

Popping : (மூச்சுவாங்கல்) வானொலி நிகழ்ச்சிப் பதிவில் ஒலிவாங்கிக்கு மிக நெருக்கமாய் ஓசை உண்டாக்கும் மூச்சுவாங்கல்.

Portopak : (ஒலி ஒளிக் கைக்காமிரா) ஒருவகை காமிரா. எளிதாக இடம் விட்டு இடம் கையில் எடுத்துச் செல்ல முடியும் (portable) என்பதாலும் காமிரா, ஒலிவாங்கி இரண்டும் ஒரே கூட்டுக்குள் இணைக்கப்பட்டுள்ளதாலும் (packed) இக்காமிராவிற்கு 'portopak' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

Poster : (சுவரொட்டி) செய்திக் குறிப்பு. பத்திரிகையின் உட்பக்கங்களில் இடம் பெற்றுள்ள சிறப்புச் செய்திகள், முக்கியச் செய்திகள் பற்றிய குறிப்பு. கடைகளில் மாட்டி வைக்க ஏற்ற வகையில் தயாரிப்பது.

Poster type : (கொட்டை எழுத்து) மரத்தால் செய்யப்படும் பெரிய எழுத்துக்கள் ; சிலர் ஈயத்திலும் வார்த்துவைப்பதுண்டு. சுவரொட்டிகள் அச்சடிக்கப் பயன்படும் எழுத்துக்கள்.

Potential audience : (சாத்திய நேயர்கள்) நேயர்கள், சாத்திய நேயர்கள் (potential audience), நேயர்கள் (actual audience),இலக்கு நேயர்கள் (target audience) என்று மூன்று வகைப்படுவர். இதன்மூலம் நேயர்களின் மொத்த அளவு (size) அவர்களுக்கிடையே உள்ள சமரச உணர்வு, தொலைக்காட்சி வானொலி நேயர்களின் அவ்வச் சாதனங்கள் தொடர்பான நடத்தை முதலியன பற்றிக் கணிக்கலாம். ஒரு நாட்டின் மொத்த மக்கள் எண்ணிக்கை அந்நாட்டு ஒளிபரப்பின் சாத்திய நேயர்கள் எனப்படலாம். சான்றாக, அமெரிக்காவில் எல்லா மக்களும் தொலைக்காட்சியின் சாத்திய நேயர்கள் ஆவர். ஏனெனில் அங்கு தொலைக்காட்சிப் பெட்டியுடன் தொடர்பு இல்லாமல் இருப்பது ஏறக்குறைய 1 அல்லது 2 சதவிகித மக்கள்தான். நிலையத்திற்கு நிலையம் சாத்திய நேயர்கள் வேறுபடுவர். நிலையங்களின் ஒளிபரப்பு எல்லைக் கேற்பவும் நகரப் பகுதிகள், கிராமப் பகுதிகள் என இடங்களுக்கு ஏற்பவும் சாத்திய நேயர்கள் வேறுபடுவர். யார் யார் வீடுகளில் கேபிள் டி.வி. மூலம்

காட்சி தெரியுமோ அவர்கள் கேபிள் டி.வி.யின் சாத்திய நேயர்கள் எனப் படலாம். அமைப்பு வழி உள்ள அலைவரிசைகளின் எண்ணிக் கையைப் பொறுத்துத் தரப்படும் சேவைக்கு (service) ஏற்பவும் சாத்திய நேயர்கள் இருப்பர். ஒரு சேவை எப்பொழுது ஒருநேயருக்குத் தொலைக் காட்சிப் பெட்டியில் கிடைக்கிறதோ அதைப்பொறுத்து அவர் அதற்குப் பணம் கட்டத் தீர்மானிப்பார். கேபிள் பணியில் சாத்திய நேயர்கள் எண்ணிக்கை-வலைப்பிணைப்பு அல்லது விளம்பர நோக்கு நிகழ்ச்சி வரிசையைத் தரும் நிலைய எண்ணிக்கையைப் பொறுத்து அமையும். சில சமயம் மாறுபட்ட வலைப்பிணைப்பைத் தந்த சாத்திய நேயர்களைக் குறைத்துக் கொள்ள விரும்புவதில்லை. பெரும்பாலான நேயர்கள் நிகழ்ச்சித் தரம் என்று பார்க்காமல் எந்த அளவு முதன்மை யான இடத்தில் பரவலாக ஒளிபரப்பப் படுகிறது என்பதையே பார்க்கின்றனர்.

Precede : (முற்படு குறிப்பு) ஒரு செய்திக் கதையினைப் பற்றிய புதிய வளர்ச்சிகள். அச்செய்தியின் தோற்ற நிலை பற்றி வேறுபட்ட கோணத்தி லிருந்து அணுகி எழுதப்பட்டிருக்கும். ஒரு செய்திக்கதையை அறிமுகப் படுத்தும் வகையில் ஆனால் ஒரு சிறு கோட்டின் மூலம் செய்திக் கதையிலிருந்து பிரித்துக் காட்டப் பட்டுச் செய்திக்கதைக்கு முன்னர் தரப்படும் அறிவிப்பு வெளியீடு ஆகும். ஒரு சிறு வெளியீடாக இது இருக்கும்.

Pre conception : (முன் தெளிவு) ஒன்று குறித்து ஏற்கனவே மனதில் உள்ள மதிப்பீடு.

Predate : (முன் வெளியீடு) ஒரு வெளியீடு அதன் அறிவிக்கப்பட்ட வெளியீட்டு நேரத்திற்கு முன்னரே வெளியாதல்.

Prefade : (முன் சோதிப்பு) வானொலி ஒலிபரப்புக்கென ஒலிநாடாவில் பதிவான நிகழ்ச்சியை அல்லது இசைத்தட்டு நிகழ்ச்சியை ஒலிபரப்புக்கு முன்னர் கேட்டுச் சேகரித்துக் கொள்ளும் வசதி.

Prefade to time : (கால முன்னுணர்வு) நேயர்கள் நிகழ்ச்சி முடிவின்போது ஒலிப்பதிவாகியுள்ள அடையாள இசையை அறிதல் ; இது நிகழ்ச்சியின் சரியான நேரத்தை முன் கூட்டி அறிந்திருந்தாலே இயலும்.

Preferred position : (விருப்ப நிலை) விளம்பரத் துறை பயன்படுத்தும் சொல். இதன்படி குறிப்பிட்ட அளவு அதிகமாக விதிக்கப்பட்டுள்ள விளம்பரக் கட்டணத்தைச் செலுத்துவாரேயாயின் விளம்பரதாரர் விளம்பரத்திற்கென உள்ள சில இடங்களில் எவ்விடத்தில் தனது விளம்பரம் வரவேண்டும் என்று விரும்புகிறாரோ அவ்விடத்தில் அவரது விளம்பரம் இடம்பெறும். இல்லை யெனில் நாளிதழில் ஏதாவதொரு இடத்தில் அவரது விளம்பரம் இடம்பெறும்.

Premium Pay Cable Service : (கட்டண கேபிள் ஒளிபரப்பு) கேபிள் அமைப்பு இயக்குநரிடமிருந்தும் ஒவ்வொரு மாதமும் சேரும் சந்தா தாரர்களைப் பொறுத்தும் கிடைக்கும் பண வருவாய், இலாபம் போன்ற வற்றின் அடிப்படையில் கட்டண கேபிள் ஒளிபரப்பு இயங்கும். மாதாமாதம் சேரும் சந்தாதாரர்களைப் பொறுத்துச் சந்தா பெறும் கேபிள் அலைவரிசையும் உண்டு. ஒரு நிகழ்ச்சிக்கு இவ்வளவு என்று தாங்கள் விரும்பும் நிகழ்ச்சி களுக்கு மட்டும் சந்தாதாரர் ஆகும் முறையும் உண்டு.

Prepare a copy : (செய்திப்படி தயார் செய்) குறிப்பிட்ட செய்தி சேகரித்

தலுக்கென நியமிக்கப்பட்ட நிருபர் சேகரித்த செய்தியைக் கொண்டு அச்செய்திக் கதையை எழுதி வந்திருப்பார். பதிப்பிக்கப்படாத இந்த செய்திக்கதை நிருபராலேயே எழுதப்பட்டது. நிறைய ஓரப்பகுதி விட்டு பாராவை அதிகமாக உள்ளே தொடங்கி, இன்னும் இச்செய்தி வரும் எனில் 'MORE' என்பதை இறுதியில் குறிப்பிட்டு மேலே தலைப்பு, நாள், இடம் முதலியவற்றையும் குறிப்பிட்டு எழுதியிருப்பார். இது செய்திப்படி தயார் செய்தல் ஆகும்.

Prerecorded : (முன் பதியப்பட்டவை) முன்பே பதிவு செய்யப்பட்ட ஒலி நிகழ்ச்சிகள் ; முன்பே பதிவு செய்யப் பட்ட காட்சித் தொகுப்புக்கள்.

Presence filter : (இருப்பு ஒலி வடிகட்டி) ஓர் ஒலி அலைவரிசையின் அலை அதிர்வு வெளிப்பாட்டின் ஒரு பரப்பினை மட்டும் வெளிப்படுத்திக் காட்டும் சுற்று. இது ஒரு குறிப்பிட்ட ஒலி ஆதாரம் அதன் பின்னணியிலிருந்து தனிப்பட்டு நிற்கிறது என்ற தோற்றத்தை அடிக்கடி வெளிப் படுத்தும்.

Press agent : (பத்திரிகைப் பிரதிநிதி) ஒரு நிறுவனத்தால், அல்லது வணிக நிலையத்தால் அலலது தனிமனிதரால் வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பவர். இவரது பணி பத்திரிகையில் தான் சார்ந்திருக்கும் நிறுவனம், வணிக நிலையம், தனிமனிதர் குறித்து அதற்கு நல்ல விளம்பரம் தேடித் தரும் பொருட்டு அது தொடர்பான விளம்பரத்தைப் பத்திரிகையில் வரச்செய்தல் ஆகும்.

Presses : (பத்திரிகை அலுவலகங்கள்) பத்திரிகைகளை அச்சிடும் அலுவலகங்கள். பத்திரிகைகள் அளவிலும், விற்பனையிலும் அதிகமானதாக விரிந்தபோது பெரிய, விரைவான அச்சு இயந்திரங்கள் தேவைப்பட்டன. அதற்கேற்றவாறு பத்திரிகை அலுவலகங்கள் வளர்ந்தன.

Press freedom : (பத்திரிகைச் சுதந்திரம்) (காண்க : Freedom of the press).

Press run : (அச்சு ஓட்டம்) ஒரு பத்திரிகை அலுவலகத்தில் தேவையான எண்ணிக்கைப் பிரதிகளை உருவாக்குவதற்கு நிகழும் செயல்பாடு. 10,000 பிரதிகள் விற்பனையில் உள்ளதும் இருவண்ணங்களில் அச்சிடுவதுமான ஒரு பத்திரிகையை அச்சிட அவ் அலுவலகம் ஒவ்வொரு 10,000ற்கும் இருமுறை 'அச்சு ஓட்டம்' நிகழ்த்தும்.

Primary movement : (அடிப்படை நடமாட்டம்).

Prime time : (முதன்மை நேரம்) மிகச்சிறந்த முக்கியமான வர்த்தக ஒலி/ஒளிபரப்பு நேரம். சான்றாக, தொலைக்காட்சி அதிகமாகப் பார்க்கப் படும் நேரம் மாலை நேரமாக அமையும். அந்த நேரம் தொலைக்காட்சியின் முதன்மை நேரமாகும்.

Print : (அச்சு).

Printing process : (அச்சிடும் வழிமுறைகள்) கை மூலமாகவோ அச்சுக்கோர்க்கும் பொறிகள் மூலமாகவோ அச்சுக்கோர்த்து பின்னர் அச்சுப் பொறிகளில் அச்சிடும் வழிமுறைகள்.

Print media : (அச்சுத் தகவல் தொடர்பு சாதனங்கள்) இயந்திரங்கள் மூலம் அச்சிடப்பட்டு வெளியாகும் நாளிதழ்கள், சஞ்சிகைகள் முதலியன அச்சுத் தகவல் தொடர்பு சாதனங்கள் ஆவன.

Print out : (அதிவேக வெளியீடு) பார்க்க : 'hard copy'.

Problem solution : (சிக்கல் தீர்வு) விளம்பர உத்திகளுள் ஒன்று. இவ் வரிசைமுறை விளம்பரங்களில் பொது வாகக் கையாளப்படும். ஒரு பிரச்சினை கவனத்தை ஈர்க்கும் வகையில் சித்திரிக்கப்பட வேண்டும். 2 நபர் அல்லது 1 நபர் குறிப்பிட்ட பிரச்சினைக்குத் தீர்வே இல்லை என்பதுபோல் கூற அடுத்து ஒரு சூழல் சித்திரிக்கப் பட்டு அதில் பிறிதொருவர் அப்பிரச்சினை விளம்பரதாரரின் பொருளால் தீர்க்கப்பட முடியும் என்று கூறுவார். கடைசிக் காட்சியில் முதல் நபர்/நபர்கள் அப்பொருளைப் பயன்படுத்திப் பிரச்சினை தீர்வதாகக் காட்டப்படும்.

சான்று : 2 முறைகள்.

1. நேரடியாக : Do you have dandruff? Use this shampoo.

2. மறைமுகமாக : Do you have a problem of getting girls to pay attention to you? It may be your hair ; Use this shampoo.

Procedure : (செயல்முறை) ஒலிபரப்பு சாதனங்களுக்கு நிகழ்ச்சி தயாரிக்கும் முறை ; ஒரு தலைப்புத் தெரிவின் பின் அதுகுறித்து ஒரு மாதிரி உருவாக்கி அதனை ஆய்வு பண்ணுதல்-ஆய்வு செய்யும்போதே படம் எடுக்கப்போகும் எழுத்தறிக்கை தயாரித்துவிடுதல் ; விளக்கப்படத்திற்கு முதலில் எழுதுபவர் ஒரு கருத்து (idea) வைத்திருக்க வேண்டும். நோக்கம் தீர்மானித்தல்-பார்வை நிலை தீர்மானித்தல்-உண்மையாக வேலையை ஆரம்பித்தல் -நூலகத்தில் ஆய்வு செய்தல்-இடம், மக்கள் முதலியவற்றைச் சந்தித்தல்-அவ்விடத்தில் ஒலி ஒளிப்பதிவு பற்றிப் பரிசோதித்துப் பார்த்தல்-ஒரு வடிவம் தயாரித்து வைத்துக்கொள்ளல்-எழுத்துப்படிவம் (outline) எழுதத் தொடங்குதல்-டேப்பில் படம் எடுத்தல் ; அதாவது படப் பதிவு செய்தல்-இதற்கிடையில் கிடைக்கும் வேறு செய்திகளையும் எழுதிச் சேர்த்தல் ; ஆரம்ப விளக்கக் கூற்றினைத் தயாரித்தல்-அதன்பின் உள்ள செய்திக் கூறுகளைச் சேர்த்து இறுதிப் படிவத்தை எழுதித் தயாரித்தல்-இறுதியாகத் தொகுத்து ஒளிநாடாவில் தயாரித்தல் முதலியன ஒளிபரப்பு நிகழ்ச்சித் தயாரிப்பில் அடங்கும் செயல்முறைகள் ஆவன.

Process color : (விதிமுறை வண்ணம்) முதன்மை வண்ணங் களையும் கறுப்பு வண்ணத்தையும் பிரிப்பதன்மூலம் உருவாக்கப்பட்ட நான்கு தகடுகளிலிருந்து அச்சிடப்படுவதன் மூலம் உயிரோட்ட வண்ணம் கிடைக்கிறது.

Process engraving : (வழிமுறைச் செதுக்கல்) பிளாக் செய்யப்படும் புகைப் படத்தை ஓர் உலோகத் தகட்டில் பதியச் செய்யும் முறை.

Producer : (தயாரிப்பாளர்) வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பில் ஈடுபடும் பொறுப்பாளர்/அமைப்பாளர்/தயாரிப் பாளர். ஒட்டுமொத்தத் திட்டமிடல், தயாரித்தல், கலை வடிவம் தருதல் முதலிய அனைத்துப் பணிகளின் ஆக்கப்பொறுப்பு இவரைச் சார்ந்ததே.

Production : (தயாரிப்பு) ஒலி/ஒளிபரப்பு நிகழ்ச்சித் தயாரிப்பு.

Production assistant : (உதவித் தயாரிப்பாளர்) ஒலி/ஒளி நிகழ்ச்சித் தயாரிப்பில் தயாரிப்பாளருக்கு உதவும் உதவி அமைப்பாளர். PA என்றும் சுருக்கிக் கூறப்படுவார்.

Production control room : (தயாரிப்புக் கட்டுப்பாட்டு அறை)

Production schedule : (தயாரிப்பு அட்டவணை) ஒரு தயாரிப்பில் பல்வேறு நிலைகளில் நேரத்தைக் குறிக்கும் அட்டவணை.

Programme advertising : (நிகழ்ச்சி விளம்பர முறை) விளம்பர வகைகளுள் ஒன்று. தனிநபர் ஒருவர் ஒரு நிகழ்ச்சியை உள்ளூர் நிலையத்திலிருந்து அல்லது வலைப்பிணைப்பு மையத்திலிருந்து வாங்கித் தங்கள் கம்பெனிப் பொருள் பற்றிய விளம்பரங்களை நிகழ்ச்சியில் சேர்த்துத் தரும் வகையில் தருதல் நிகழ்ச்சி விளம்பர முறை எனப்படும். இம்முறைப்படி, 1) விளம்பரதாரர் பெயர் நிகழ்ச்சித் தலைப்புடன் தரப்படும். நிகழ்ச்சியின் இடையிடையே அடிக்கடி வணிக விளம்பரம் இடம்பெறும். 2) இதில் நிகழ்ச்சியையும் விளம்பர உள்ளடக்கத்தையும் ஒன்றிணைக்க முடியும். 3) முழு நிகழ்ச்சியிலும் தன் விளம்பரத்தைத் தர ஒருவர் உரிமை வாங்கும் போது நிகழ்ச்சி உள்ளடக்கத்திலும் அவர் தலையிட உரிமை உண்டு. இம்முறைப்படி விளம்பரம் செய்பவரே முக்கியமானவர். சில சமயம் நிகழ்ச்சி விளம்பரதாரருக்குத் திருப்தி தந்தால் போதும் என்ற நிலையில் பெரிதும் வாசகனைத் திருப்திப்படுத்தாததாகக்கூட இருக்கும்.

Programme element : (நிகழ்ச்சிக் கூறு) நிகழ்ச்சியினுள் அமையும் பல கூறுகள் சிறியனவாய் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு மாறுவது தெரியாமல் நேயர்களின் கவனத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் முறையில் அமைக்கப்படுதல் வேண்டும். 1) நிகழ்ச்சிக் கூறுகளின் எண்ணிக்கை. 2) ஒவ்வொன்றின் உள்ளடக்கம் பற்றிய விளக்கம்) 3) ஒன்றுக்கும் இன்னொன்றுக்கும் உள்ள மாற்றத்தைக் காட்ட உதவும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் 4) ஒவ்வொரு நிகழ்ச்சிக் கூறும் ஆரம்பிக்கும் நேரம். 5) ஒவ்வொரு நிகழ்ச்சிக் கூறின் நீளம். போன்ற இந்நிகழ்ச்சிக் கூறுகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகள் விறுவிறுப்பாக இருக்கும்.

Programme exchange service: (நிகழ்ச்சிப் பரிமாற்றப் பணி) அகில இந்திய வானொலியின் டெல்லித் தலைமையகத்தின் ஒரு பிரிவாக நிகழ்ச்சிப் பரிமாற்றப் பகுதி செயல்படுகிறது. இங்கு ஒலிபரப்பப்பட்ட சிறந்த நிகழ்ச்சிகள், அரிய ஒலிப்பதிவுகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

Programme executive : (நிகழ்ச்சி அமைப்பாளர்)

Programme identification : (நிகழ்ச்சியை இனங்காணல்) இன்ன நிகழ்ச்சி என்று உணர்தல். வானொலி அல்லது தொலைக்காட்சிப் பெட்டியை இயக்கிய பிறகு நேயர்கள் தாம் தேடிய நிகழ்ச்சியைப் பெற்றுவிட்டோம் என்று திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள விரும்புவர் அல்லது என்ன நிகழ்ச்சி தமக்குக் கிடைத்திருக்கிறது என்று தெரிந்துகொள்ள விரும்புவர். எனவே நிகழ்ச்சியானது நிகழ்ச்சியின் வரிசை பற்றிய தலைப்புக்கள், நடிகர் பெயர்கள், துணை நடிகர்களின் பெயர்கள் முதலிய தரமான குறிப்புக்களை நல்கி, தன்னை நேயர்கள் இனங்காண உதவும் வகையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

Programme method : (நிகழ்ச்சி அமைப்பு முறை)

Programme scope : (நிகழ்ச்சிச் செல்வாக்கு) வாசகனை ஈர்க்கும் வண்ணம் நிகழ்ச்சியில் ஒரு நல்ல ஆரம்பத்தை அமைக்க வேண்டும். தொடர் நிகழ்ச்சிக்கு எப்போதும் ஒரே

போல் கவனத்தை ஈர்க்கும் பகுதி ஆரம்பத்தில் அமைந்து அதுவும் நிகழ்ச்சியின் அங்கமாக வேண்டும். உடனடியாக முடிந்துவிடும் நிகழ்ச்சிக்கு அதற்கேற்ப ஆரம்பம் இருக்க வேண்டும். நிகழ்ச்சியின் நோக்கம், (intent), சமூக வரவேற்பு (scope) ஆகியவற்றை எழுதுவோன் புரிந்திருக்க வேண்டும். மேலும் இதற்கு முன்னர் நிகழ்ச்சியில் என்னென்ன இதுவரை நடந்திருக் கிறது என்பதையும் வாசகனுக்குத் தெரிவிக்க வேண்டும். சான்றாக ஜனாதிபதியுடன் பேட்டி பற்றிய நிகழ்ச்சியாயின் அவரது சொந்த வாழ்க்கை, அவரது அயல் நாட்டுக் கொள்கைத் தீர்மானம் என்ற இருவகைகளில் அப்பேட்டி நிகழ்ச்சி அமையலாம். எனவே எதுபற்றி இந்நிகழ்ச்சி அமைகிறது என்பதை முதலிலேயே நேயர்களுக்குத் தெரிவித்து விடுதல் நேயர்களை ஈர்ப்பதாக அமையும்.

Progressive margin : (வளர் ஓரம்) நாளிதழ் மற்றும் சஞ்சிகைகளின் பக்கத்தின் ஓரம்மேலிருந்து ஆரம்பித்து மெல்ல மெல்ல வளர்ந்து ஆனால் அடிப்பாகம் மிகுதியும் பெரிய அளவில் இருக்குமானால் அது இவ்வகைப்படும்.

Projector : (ஒளி வீழ்த்தி)

Prologue : (ஆரம்பக் கூறு) தொலைக்காட்சி நிகழ்ச்சியின் ஆரம்பக் கூறு. 'epilogue'க்கு நேர் எதிர்ப்பதம்.

Prominence : (பிரபலம்) பெயர்கள், செய்தியின் முக்கியம் ; மக்களுக்குத் தெரிந்த நபர்கள்-அவர்களைப் பற்றிய செய்திகளைத் தருதல் வேண்டும். இவ்வகைச் செய்திகள் பொதுவாக மக்களை ஈர்ப்பதுண்டு.

Promo : (ஊக்குவிப்பு நோக்கு விளம்பரம்) 'Promotional announcements' என்பதன் சுருக்கம். வணிக நோக்கிலல்லாத விளம்பர வகைகளுள் ஒன்று. ஏறக்குறைய பொதுப்பணி விளம்பரங்களைப் போலவே அமையும். ஒலியாகவே தொலைக்காட்சியில் கூறப்பட்டு இறுதியில்தான் கூற வந்த செய்தி கூறப்படும். நிகழ்ச்சியின் இறுதியில் காட்டப்படும் விளம்பரம். காட்டப்படும் காட்சி அந்நிகழ்ச்சியின் முடிவில் நிகழ்ச்சிக்குச் சிறப்பூட்டும். இவ்விளம்பரங்கள் நீளமானவை. 10-20 வினாடிகள் ஒலிபரப்பப் படுவதால் வாசகர்களுக்குக் கவனிக்கும் ஆர்வம் குறைந்துவிடுகிறது. நிகழ்ச்சியின் பொருட்டு வாசகனை ஈர்ப்பதற்காகப் பல நிலையங்கள் இத்தகைய விளம்பரங்களை நிகழ்ச்சியின் இறுதியில் நன்முறையில் அமைக் கின்றன. இவ்வகை விளம்பரங்கள் சில அந்நிகழ்ச்சியின் ஒருசிறு காட்சியைப் பயன்படுத்தித் தன் விளக்கத்தைச் சிறப்பிக்கிறது. இவ்விளம்பரங்கள் ஏதாவது ஒன்றைனப் பற்றி அறிவித்து அது குறித்துப் பொதுமக்களைக் கவனிக்கச் செய்யும்.

Proof : (பிழைதிருத்தப் பிரதி) அச்சுக்கோர்க்கப்பட்டு மை தடவி அச்சு எடுக்கப்பட்ட படிவம் (impressions) செய்தித் தாளில் அச்சடிக்கப்படுவதற்கு முன்னர் அச்சுப் பிழைகளைத் திருத்தும் பொருட்டு தரப்படும். 'proof copy' என்றும் குறிப்பிடப்படும்.

Proof correction mark : (பிழை திருத்தக் குறியீடுகள்) பிழை திருத்து வதற்குக் கையாளப்படும் பல்வேறு திருத்த அடையாளக் குறியீடுகள். நிறுத்தக் குறிகளும் அடையாளங்களும் ; பொதுவாகப் பத்திரிகைத் துறையில் உள்ளவர்களுக்குப் பிழை திருத்த அடையாளங்களும் குறியீடுகளும் தெரிந்திருக்க வேண்டும்.

Proof hook : (திருத்தப் பிரதிக் கொக்கி) திருத்தப்பட்ட பிரதிகளைச்

சேகரித்து வைக்கின்ற கொக்கி. பேச்சு வழக்கில் குத்தூசி என்று வழங்கப்படும்.

Proof press: (பிழை திருத்தப் பிரதி இயந்திரம்) அச்சுப்பிழை திருத்தப்பட வேண்டியதற்கான படிவத்தை எடுக்கும் அச்சு இயந்திரம். இப்படிவம் தயாரிக்கும் முறைக்கு 'pulling' என்று பெயர்.

Proof reader : (அச்சுப்பிழை திருத்துபவர்) அச்சுக்கோர்க்கும் அறையில் பணியாற்றுபவர். இவரே அச்சுப்பிழைதிருத்தப் படிவங்களை வாசித்து அச்சுப் பிழைகளைத் திருத்திச் செய்திப்படிக்கு அது பொருந்துகிறதா என்று பார்ப்பார். அச்சுப் பிழை திருத்தும் எவரும் இவ்வாறு குறிப்பிடப் படுவார்.

Proof slip : (நீள திருத்தப் பிரதி) நீள வடிவிலான தாளில் எடுக்கப்படும் பிழை திருத்தப் பிரதி. இதையே திருத்தங்களைச் செய்தபின் பக்கங்களாக மேக்அப் செய்வார்கள்.

Prop : (பொருட்கள்) தொலைக் காட்சிச் செய்தி நிகழ்ச்சி அல்லது விளக்கப்படம் போன்றவற்றிற்கெனப் பயன்படுத்தப்பட்டுள்ள பலவிதமான மேடைப் பொருட்களைக் குறிக்கும் சுருக்கக் குறியீடு.

Propoganda broadcast : (பிழை திருத்தக் குறியீடுகள்)

Proportioning : (அளவாக்கம்) படங்களின் அளவுகளின் விரிவுகள் அல்லது குறைப்புக்களைக் கணிப் பொறிப்படுத்தும் வழிமுறை.

Proximity : (அருகாமை) செய்தியில் இருக்கவேண்டிய இயல்புகளுள் ஒன்று. அருகாமைச் செய்தியே அவ்வவ் வட்டார மக்களுக்குப் பெரிதும் முக்கியம். அதுவே அவர்களிடம் பாதிப்பை ஏற்படுத்தும். 'அருகாமை' என்ற செய்திமதிப்பைக் கொண்டி ருக்கும் செய்தி மக்களிடம் பெரிதும் ஏற்படுத்தும் விளைவோடு தொடர்பு டையது.

Public broadcasting : (பொது ஒலிபரப்பு) சில பொது நிலையங்கள் வணிக நோக்கிலான நிலையங்களைப் போல அல்லாமல் தாம் தரும் நிகழ்ச்சி கள் தொடர்பான தொழில்நுட்பச் செலவுகளுக்காகப் பிறரிடமிருந்து நிதி பெறும் கட்டாயத்தில் உள்ளவை. இவை அரசின் தேசிய, மாநில, உள்ளூர் அளவுகளில் சில தனி நபர்களிடமிருந்து நிறுவன மக்களிடமிருந்து நிதி உதவி பெறுகின்றன. வணிக நிறுவனங்கள், தனிநபர்கள், நிதி உதவி அளிப்பவர் போன்றோர் நிகழ்ச்சித் தயாரிப்பிற்கு ஆகும் செலவை மட்டும் தரும் வகையில் (இலாபம் அல்ல) நிதி உதவி அளிப்பர். நிகழ்ச்சியின்போது யார் நிதி வழங்கியவர் என்று மட்டும் கூறப்படும். ஆனால் நேரடியாக நிதி உதவி அளிப்பவர்களது விளம்பரக் கருத்து கூறப்படாது. இத்தகைய பொது ஒளிபரப்புக்களின் நோக்கம் மக்கள் மனதில் அந்த நிறுவனம் பற்றிய நல்லெண்ணத்தை உருவாக்குவதே.

Public opinion : (பொதுமக்கள் கருத்து) தகவல் தொடர்பு சாதனங் களில் ஒலி/ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் மக்களின் மனதிலும் செயலிலும் தாக்கம் ஏற்படுத்தி அதனால் பொதுமக்களிடம் ஒட்டு மொத்தமாக எழும் ஒரு கருத்து. சமுதாயப் படுத்துதல் (socialising) அல்லது மக்களை மூளைச் சலவை செய்யும் பணி (brain washing) தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் நிகழ்கின்றன. விமர்சகர்கள் கருத்துப்படி படக்கதைகள் மக்களைச் சமுதாயப் படுத்துதல் அல்லது தன் கருத்துக்குக் கொண்டு வருதல் என்ற விளைவை

ஏற்படுத்தும். பொதுவாகவே மறுவார்ப்புக்களாக வரும் படைப்புக்கள் எத்தகைய செய்திகளை நாம் தெரிவு செய்து பார்க்கலாம் ; அவற்றை எக்கோணத்தில் அணுகலாம் என்ப வற்றைத் தீர்மானித்து விடுகின்றன. ஒரு குறிப்பிட்ட எண்ணம் தொடர்பான பொது உடன்பாடுகள் தனிமனித நடத்தைகளைப் (பொது உடன்பாடு களுக்கு ஒத்துவரும் தனிநபர்களது நடத்தைகளை) பெரிதும் ஈர்க்கின்றன. இப்பொழுது உடன்பாடுகள் என்பவை ஒரு பெரிய அளவிலான மக்களின் எண்ணம், செயல் முதலியவற்றை ஒருங்கிணைக்க இயலும் அமைப்பு ஆகும்.

Public radio : (பொது வானொலி நிலையங்கள்) இத்தகைய பொது வானொலி நிலையங்கள் மேனாடு களில் நிகழ்ச்சிகளை மாநில அரசு நிதி மூலம் அல்லது மக்கள் நன்கொடை, சமூக நல அமைப்புக்கள், தொழிற் சாலைகள் முதலியவற்றின் ஆதரவின் மூலம் ஒளிபரப்புச் செய்கின்றன. இவற்றிற்கு வணிக நோக்கு விளம் பரங்கள் தேவை இல்லை. இந்நிலையங் கள் வணிக நோக்கு நிலையங் களிலிருந்து தம்மை வேறுபடுத்திக் கொள்பவை.

Public relations magazines : (பொது மக்கள் தொடர்பு இதழ்) இதழாளரின் செயல்களைச் சிறப்புற வெளிப்படுத்தி அது தொடர்பான நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் எவ்விதழும் பொது மக்கள் தொடர்பு இதழே.

Public service announcements : (பொதுப்பணி விளம்பரங்கள்) வழங்கு வோரின் நோக்கம் வணிக விளம்பரங் களைப் போலல்லாது இவ்விளம்பரத்தில் நேயர்களைத் திருப்திப்படுத்தல் என்பது சற்று குறைவு எனினும் சில செயல்கள் நேயர்கள் சார்பில் எதிர்பார்க்கப் படுகின்றன. இவ்விளம்பரதாரர்கள் கட்டணம் எதுவும் நிலையத்திற்குத் தரமாட்டார்கள். ஆதலால் இவற்றால் நிலையத்திற்கு வருமானம் இல்லை. எனவே நிகழ்ச்சிகளின் தயாரிப்பிலும் எந்த இடத்தில் இவை வைக்கப்படுவது என்பதற்குப் போதிய கவனம் செலுத்தப்படுவதில்லை. குறைவாக விரும்பப்படும் நிகழ்ச்சிகளிலேயே சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. நிறைய நேயர்களுக்குத் தரப்படுவதாய் சிறந்த தயாரிப்பு டையதாய் ஏற்கனவே ஒலிபரப்பப் பட்டதாய் இருந்தாலே இது ஒளிபரப்பில் சேர்த்துக்கொள்ளப் படுகிறது. நேயர்களைப் பாதித்த தினால் அவர்களிடம் ஏற்படும் மனமாற்றமும் அதனால் விளையும் செயல்களும் இவற்றால் எதிர்பார்க்கப்பட முடியாது. சான்றாக இரத்த வங்கியில் இரத்தம் தானம் செய்வதற்கான காரணம் ஏற்கனவே வாசகர்களுக்குத் தெரியும். ஆனால் நேரம் ஒதுக்கிப் போய் இரத்த தானம் செய்ய நேரம் கண்டுபிடிக்க இயலாது என்பதுவே வாசகர் தம் சூழலும் மனப்போக்கு நிலையும் ஆகும். சேவைக்குழுக்கள், அரசு நிலையங்கள், பொதுநல நோக்கில் சேவை செய்யும் பிற அமைப்புக்கள், பொதுநலத் துறைகள், கல்வி நிலையங்கள், ஊனமுற்றோருக்கு உதவுபவை போன்றவை தரும் சேவை விளம்பரங்கள் இவ்வகையின. சான்று : மதுரை கோட்ஸின் 'Save water' என்ற விளம்பரம்.

Pull out : (இணைப்பு இதழ்) ஒரு நாளிதழிலிருந்து எளிதாகப் பிரித் தெடுக்கப்படும் வகையில் தயாரிக்கப் பட்டுள்ள செய்தித் தாளின் ஒரு பகுதி.

Pulp : (காகிதக் கூழ்) காகிதம் தயாரிக்க மரங்களிலிருந்து தயாரிக்கப் படும் மரக்கூழ்.

Pulps : (மலிவு இதழ்) மலிவு விலைத் தாளில் அச்சிடப்பட்டு உயர் நாகரிக மக்களல்லாத பாமர மக்களால் பெரிதும் விரும்பி வாங்கப்படும் ஒரு பிரிவு இதழ்களுக்கு வழங்கப்படும் பேச்சு வழக்குச் சொல். இவை 'பாப்புலர் இதழ்கள்' என்றும் குறிக்கப்படு கின்றன.

Punch lead : (தாக்கு முகப்பு) ஒரு துப்பாக்கிக் குண்டு போல் தாக்கி ஒரு தாக்குதலைத் தரும் முகப்புச் செய்திகள் இவ்வகையின. அவசரமான சொற்கூட்டங்களால் இது மிக முக்கியச் செய்திகளைத் தெரி விக்கிறது.

சான்றுகள் :

'Dacca has fallen'
'Gandhiji is dead'
'Nixon is dethroned'

'Bullet Lead', 'Cartridge Lead'என்றும் குறிப்பிடப்படுகின்றன.

Purpose and goal : (நோக்கமும் இலட்சியமும்) செய்தி உருவாக்கு தலோடு தொடர்புடைய கூறு இது. செய்தி உருவாக்குபவரின் நோக்கம் (நிகழ்ச்சித் தயாரிப்பாளரின் நோக்கம்) குறிப்பிட்ட நிகழ்ச்சியை உருவாக்கும் குழுவாகிய தயாரிப்பாளர், நிர்வாகிகள், விளம்பரம் செய்வோர் ஆகியோரைப் பொறுத்தது. ஆர்வமூட்டுதல் - வாசகனை எடுத்த எடுப்பிலேயே கவர்தல் முதன்மை நோக்கமாக அமையும். செய்தியின் உள்ளடக்கம் தான் இங்கு முக்கியமானது. இதையும் ஆர்வமூட்டும் வகையில் கூறுவதுதான் நிலையத்தின் நோக்கம். இதன்மூலம் தன் வாசகர்களைக் கவர்ந்து நிலை நிறுத்திக்கொள்ள விரும்புகிறது. குறிப்பிட்ட அளவு வாசகன் இல்லை யெனில் - அல்லது - விளம்பரதாரர் நோக்கில் விளம்பரம் பலனளிக்க வில்லையெனில் அந்நிகழ்ச்சி விண்ணொளிபரப்பிலிருந்து நீக்கப் பட்டுவிடும். விளம்பரங்களைப் பொறுத்தவரை (பெரிய அளவில்) தயாரிப்பாளர் எழுதுவதற்கு முன் கொண்டிருக்கும் எண்ணம்-அதாவது விற்பனையைக் கூட்டுவதே அவரது இலட்சியம் ஆகும். அந்த இலட்சியத் தையே மிகக் குறிப்பிட்ட அளவில் வரையறைப்படுத்திக் கொள்வன வற்றை நோக்கம் எனலாம். சான்றாக, விற்பனையைக் கூட்டுவது இலட்சியம். நேயரைக் கடைக்கு வரச் செய்வது நோக்கம். சிலசமயம் இரண்டும் ஒன்றாகிவிடுகிறது. வணிக விளம்பரங் களின் நோக்கம் நேயர்களைத் திருப்திப்படுத்துதல் ஆகும் ; வெளிப் படையாகத் தெரியும். பொதுப்பணி விளம்பரங்கள் (PSA) மற்றும் ஊக்குவிப்பு நோக்கு விளம்பரங்களில் (promos) வாசகனைத் திருப்திப் படுத்துவதைவிட தகவல் களைத் தரும் நடைதான் நோக்கமாகக் கையாளப்படும். எப்படியாயினும் நோக்கம் என்பது நேயர்களை அச்செய்தியின் தொடர்பாக இயங்கச் செய்தல் ஆகும்.

Put to bed : (பொருத்து) அச்சுத் தகட்டை அச்சு இயந்திரத்தில் பொருத்து என்று சொல்வதன் குறிப்புச் சொல்.

Q

Q and A : (வினா-விடை) வினா-விடை வடிவத்தில் அமையும் ஒரு எழுத்துப்படி. வார்த்தைக்கு வார்த்தை அப்படியே ஒருவர் பேசியபடியே அல்லது எழுதியபடியே செய்தியைத் தந்திருக்கும் எழுத்துப்படி.

Quad : (வரித் தண்டு) 1) அச்சு முறையில் வரிகளுக்கிடையே இடைவெளி உண்டாக்கப் பயன்படுத்தப்படும் வெற்றுத் தன்மையுள்ள ஒன்று. ஒரு 'em quad' என்பது ஒரு வெற்று இயல்புடையது. அதன் உயரம் எவ்வளவோ அதே அளவு அகலம் உடையதாய் இருக்கும். ஒரு 'en quad' என்பது அதன் உயரத்தைப் போல பாதி அகலமுடைய தாய் இருக்கும். 2) வானொலியில் நான்கு பக்கங்களிலும் முன்னும் பின்னும் இடப்புறமும் வலப்புறமும் ஒலியைத் திரும்ப அளிக்கும்அமைப்பு. நான்கு முனைத் திருகு அமைப்புள்ளதும் கூர்ந்து பிரதியெடுக்கும் இயந்திர வசதியுடையதுமான ஒரு ஒளிநாடா அமைப்பு. 'Quadrature (quad) scanning' என்று இம்முறை குறிப்பிடப்படும்.

Quadruplex : (ஒளிநாடா இயந்திரம்) நான்கு காட்சிப் பதிவு முனைகளுடையதாய் ஓர் இரண்டு அகல காந்த நாடாவில் பதிவு செய்யக்கூடிய இயல்புடையதாய் உள்ள ஓர் ஒளி நாடா இயந்திரம்.

Qualifying a story : (செய்தியைத் தகுதிப்படுத்துதல்) கவனமாகச் செய்தி எழுதுபவர்கள் தங்கள் செய்தியைச் சிறப்புற தகுதி பெறுமாறு (qualify) செய்வர். அவர் என்னென்ன எழுது கிறாரோ அவற்றில் துல்லியம் இருக்கிறதா என்ற கவனத்துடன் எழுதுவதன் மூலம் செய்தியைச் சிறப்பிக்கிறார். சான்றாக, செய்தி எழுதுவதில் நிபுணராயிருப்பவர் சொற்களை அவை வெளிப்படுத்தும் அர்த்தங்களையும் கவனமாகக் கண்டுபிடித்து வைத்திருப்பார். குறிப்பிட்ட ஒரு பிரச்சினையைக் குறித்து குறிப்பிட்ட அரசியல் அதிகாரி ஒன்றும் சொல்லாத நிலையில் மட்டுமே 'அவர் குறிப்பாக உணர்த்தினார்' (he indicated) என்ற சொற்றொடர் பயன் படுத்தப்படும். எத்தகைய குறிப்பின் (செய்கையின்) மூலம் அவர் குறிப்பாக உணர்த்தினார் என்று வாசகர் கேள்வி எழுப்புவார். எனவே 'குறிப்பாக உணர்த்தினார்' என்ற சொல்லைப் பயன்படுத்திக் குறிப்பாக எழுதுவதை விட துல்லியமாக அவர் என்ன செய்கையின் மூலம் தன் கருத்தை உணர்த்தினார் என்று எழுதுவதே நன்று.

Quantel : (மின்னணுச் சாதனத் தயாரிப்பாளர்கள்) மின்னணு உற்பத்திச் சாதனங்களைக் குறிப்பாகக் கணிப்பொறி வரைபடங்களுக்கான சாதனங்களைத் தயாரிக்கும் ஒரு நிறுவனத்தின் பெயர்.

Quarter-cam : (சிறு ஒளிப்பதிவு அமைப்பு) கால் அங்குல அகல வடிவ ஒளிப்பதிவு அமைப்பு.

Quarter-inch tape : (சிறு ஒலிநாடா) கால் அங்குல அகல ஒளிப்பதிவு நாடா.

Quartz-iodine : (சிறப்பு ஒளிவிளக்கு) ஒளிக் கருவிகளில் பயன்படுத்தப்படும் மிகுந்த ஆற்றல், மிகுந்த ஒளி, நீண்ட கால உழைப்பு முதலிய சிறப்புக்களை உடைய ஒளிவிளக்கு.

Query : 1. (செய்தித் தொகுப்பு). 2. (வாசகர் வினா). 1) எதிர்பார்க்கப் பட்டுள்ள நீளத்தில் ஒரு நிருபரிட மிருந்து நாளிதழுக்கு அனுப்பப்பட்டுள்ள ஒரு செய்திக்கதையின் மிகக் குறுகிய செய்தித் தொகுப்பு. விரும்பத்தக்க சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு அச்செய்தி தொடர்பான ஆசிரியர் பதில் கூறுவார். 2) ஒரு நாளிதழ்ச் சந்தாதாரரால் கேட்கப்பட்ட வினாவைக் குறிக்கும் பத்திரிகை அலுவலகச் சொல்.

Queue : (வரிசை) ஒரு குறிப்பிட்ட பயன்பாட்டிற்கென முன்பதிவு செய்து வைக்கப்பட்டுள்ள ஒரு கணிப்பொறி யின் ஞாபகக் கூறு. சான்றாக, ஒரு செய்தி அறை அமைப்பில் ஒரு வரிசை விளையாட்டுச் செய்திக்கும் மற்றொரு வரிசை குடும்பச் செய்திப் பிரிவுக்கும் என முன்பதிவு பண்ணவைக்கப் பட்டிருக்கும்.

R

Race : (ஒரு குடும்ப அச்செழுத்துக்கள்) ஒரேவகைக் குடும்பங்களின் வரிசையில் உள்ள எல்லா அச்செழுத்துக்களையும் குறிக்கும்.

Rach : (நேயர் கணிப்பு) ஒரு குறிப்பிட்ட காலத்தில் வானொலி நிலையத்தோடு தொடர்பு கொள்ளும் நேயர்களது கணிப்பு.

Radiation : (மின் காந்த அலை ஆற்றல்) விண்ணில் எல்லாத் திசைகளிலும் வானொலி அலையைப் பரப்புதல், மின்காந்த மற்றும் செவிப் புலன் சார்ந்த மின் செறிவூட்டப்பட்ட துகள்கள் நிரம்பிய மின்காந்த அலையின் வாயிலாகப் பரப்பப்படும் ஆற்றலைக் குறிக்கும்.

Radio channel : (வானொலி அலைவரிசை) சட்டதிட்டங்களுக் குட்பட்டு ஒரு ஒலிபரப்பனுப்பீட்டுக் கருவி இயங்க அனுமதிக்கப்பட்டிருக்கும் அலை அதிர்வெண்களின் கட்டு அல்லது கட்டுக்கள்.

Radio drama : (வானொலி நாடகங்கள்) வானொலி வழியாக நேயர்களுக்கு வழங்கப்படும் நாடகங்கள்.

Radio features : (வானொலிச் சித்திரங்கள்) வானொலி வழியாக நேயர்களுக்கு வழங்கப்படும் சில கதைப் படைப்புக்கள் போன்றவை.

Radio journal : (வானொலி இதழ்) வானொலி நிலையங்களிலிருந்து ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் பற்றிய விபரங்களைத் தாங்கிய இதழ்கள். இப்போது ஆகாஷ்வாணி, வானொலி வாணி, ஆவாஸ் போன்ற இதழ்கள் பொருள் இழப்பு காரணமாக நிறுத்தப் பட்டுவிட்டன.

Radio language : (வானொலி மொழி)

Radio mic: (ஒலிவாங்கி) ஒலிவாங்கிக்கு உள்ளேயே சிறு ஒலிபரப்பியும் அமைந்துள்ள சாதனம். இது மேடை நிகழ்ச்சிகளுக்கும் ஏனைய கள நிகழ்ச்சிகளுக்கும் பயன்படும். பதிவு பண்ணும் வசதியுடனான கேபிள் தொடர்பு இதற்குத் தேவைப்படாது.

Radio sangeeth sammelan : (சங்கீத சம்மேளனம்) ஆண்டுதோறும் வானொலி ஏற்பாடு செய்யும் இசைவிழா. இந்திய இசைப் பண்பைப் புலப்படுத்தும் ஏற்பாடாகும்.

Radio wire : (வானொலிக் கம்பி) குறிப்பாக ஒரு மையச் செய்தி ஆதாரத்துடன் தொலை அச்செழுத்துக்கள் கம்பி மூலம் இணைக்கப்பட்டிருக்கும். வானொலிக்கும் தொலைக்காட்சிக்கும் எழுதப்பட்ட செய்திகளை அவற்றின் பயன்பாட்டிற்கெனக் குறிப்பிட்டு ஒழுங்கான கால இடைவெளியில் தந்து கொண்டே இருக்கும்.

Ragged right : (ஒழுங்கற்ற வலம்) இடப்புற ஓரம் ஒழுங்கு செய்யப்பட்டு ஆனால் வலப்புற ஓரம் ஒரேமாதிரி சரிசெய்யப்படாமல் ஒழுங்கற்ற முறையில் இருப்பது.

சான்று :

> காரண விளக்கம் கோரும்
> நோட்டீஸுக்கு பதில் அளிக்க
> அர்ஜீன்சிங்க்கு முதலில் 4 நாட்கள்
> தான் அவகாசம் அளிக்கப்பட்டது.

Rail road : (முந்தித் தள்ளு) எழுத்துப் படியை நன்கு தொகுக்காமலேயே தயாரிப்பு அறைக்கு அவசரமாக அனுப்பி வைத்தல் அல்லது ஒரு பதிப்பை நுணுகிப் பிழை திருத்தாமலேயே அச்சுக்கு அவசரமாக அனுப்பி வைத்தல்.

Rating : (தர வரிசைப்படுத்தல்) ஒலி/ ஒளிபரப்பு நிகழ்ச்சிகளைப் பற்றிய மதிப்பீடு. இத்தகைய மதிப்பீடுகள் நிலையத்தினால் செய்யப்படும் ; நேயர் களும் கணிப்பர்.

Rating system : (தரவரிசைப்படுத்தும் முறை) குறிப்பிட்ட நிகழ்ச்சியை எத்தனை பேர் பார்க்கிறார்கள் என்று அளவிடும் முறை.

R.B. : (மறு ஒலிபரப்பு) 'Repeat Broadcast' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம். சில நிகழ்ச்சிகள் அவற்றின் தரம் கருதியோ, காலத்தின் தேவை கருதியோ மீண்டும் நிலையத்தாரால் ஒலிபரப்படும். அவை இவ்வாறு அழைக்கப்படுகின்றன.

R.B.F. : (மறு ஒலிபரப்புக் கட்டணம்) 'Repeat Broadcast Fee' என்பதன் முதலெழுத்துச் சுருக்கம்.

Readability : (வாசிப்பு எளிமை) ஒரு செய்திக்கதை பொருள் தரும் வகையில் எழுதப்பட்டிருக்கும்போதுதான் அது வாசகர்களை வாசிக்கத் தூண்டும் இயல்புடைய எழுத்துப் படைப்பாக ஆகிறது. வாசிப்போரது ஆர்வம் என்பதிலிருந்து வாசிக்க வைக்கும் இயல்பினைப் பிரித்துப் பார்க்க முடியாது. வாசகனுக்கு வாசகன் நேரத்திற்கு நேரம் செய்தி வாசிப்பு ஆர்வம் என்பது வேறுபடுகிறது. வாசிப்பு எளிமையைக் கூட்ட ஒரு செய்திக் கதையில் சிறிய சொற்கள் மற்றும் சிறிய தொடர்களைப் பயன்படுத்த வேண்டும். பொதுமக்களுக்காக எழுதுகிறோம் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு எழுதவேண்டும். வாசிப்பு எளிமையை வரையறை செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வில் வாசிக்கக்கூடிய ஆர்வத்தை உண்டுபண்ணும் கூறுகளைத் தனியே பிரித்து எழுதும் ஒருவரது நடை எந்த அளவிற்கு வாசிக்கத் தூண்டுகிறது என்று ஆராயப்பட்டது. அறிவியல் வட்டத்தில் வாசிப்பு எளிமை கூடுவதை அல்லது குறைவதை அளந்தறியும் அளவுகோல் என்பது நடை தொடர்பான சில முக்கிய வகைகளில் அடக்கப்பட்டது. அவை : 1) சொற்கடின அளவு (level of word difficulty), 2) சொற்றொடர் கடின அளவு (level of sentence difficulty), 3) கருத்து விளங்காத் தன்மை (degree of conceptual abstraction) 4) சூழலும் பயின்றுவரலும் (context and redundancy) 5) வாசிப்பு எளிமை நோக்கிலான பதிப்பு (Editing for readability) என்பன.

Read out : (துணை அடுக்குத் தலைப்பு) பல பத்திச் செய்தித் தலைப்பு ஒன்றனுக்கு அல்லது ஒரு எட்டுப்பத்தித் தலைப்புக்குத் துணையாக வரும் ஒரு தலைப்பு அல்லது அடுக்குத் தலைப்பு. இந்தத் தலைப்பினை அடுத்தே செய்திக்கதை ஆரம்பித்துவிடும்.

Ready : (தயாராக இரு) ஒரு நிகழ்ச்சித் தயாரிப்பாளர் அல்லது உதவித் தயாரிப்பாளர் ஒரு 'தனித்துவமான ஆணை'யை உணர்த்தும் வகையில் தரும் எச்சரிக்கைக் குறிப்பு. சான்றாக, 'ready camera on' என்ற குறிப்பு அடுத்த ஆணை 'வெட்டு' (cut) அல்லது 'ஆழ்த்து' (dissolve) போன்ற காமிரா மாற்றம் தொடர்பானதாக வரப் போகிறது என்பதை உணர்த்தும்.

Realism : (நடப்பியல்) வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின்

உள்ளடக்கங்கள் உலக நடப்பியலோடு தொடர்புடையனவாய் அமைதல் நேயர்களுக்கு உலக நடப்பை விளக்கிக் காட்டு வனவாய் அமையும்.

Ream : (ஒரு 'ரீம்' தாள்கட்டு) தாள்களின் குறிப்பிட்ட எண்ணிக்கை அளவைக் குறிக்கும் சொல். 500 தனித் தாள்கள் அடங்கிய ஒரு தாள்களின் கட்டு ஒரு '*ரீம்*' எனப்படும்.

Rear projection : (பின்னொளி வீச்சு) *மின்னணுவியல் முறையிலான* தொழில்நுட்ப வகையில் காட்சிகள் அல்லது விளைவுகளை பின்னாலிருந்து ஒளிவீசிக் காட்சியாகக் காட்ட முன்புற மிருந்து காமிராக்கள் படங்களைப் பதிவு செய்யலாம். இது 'Back Projection' என்றும் குறிப்பிடப்படும். தொலைக் காட்சிக் கல்வி ஒளிபரப்பு நிகழ்ச்சி போன்றவற்றில் உயர் ஒளிவீசு கருவி களைப் (overhead projectors) பயன்படுத்திப் படங்களைத் தருதலில் சிறந்த விளைவுகளை ஏற்படுத்துதல் முக்கியம்.

Rec. : (பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சி கள்) பதிவுகள், படியெடுக்கப்பட்ட எழுத்துப் படிகள், பதிவு செய்யப்பட்ட ஒலி, ஒளி நாடாக்கள், போன்ற முக்கியமான பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள்.

Receiver : (பெறுநர்) தகவல் தொடர்பு சாதனங்கள் தரும் செய்திகளைப் பெறும் பொதுமக்கள் செய்தி பெறுவோர் ஆவர். நாளிதழ், இதழ் வாசகர்கள், வானொலி தொலைக் காட்சி நேயர்கள் இவ்வகையில் அடங்குவர். வானொலி, தொலைக் காட்சி போன்றன தம் நேயர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டி ருப்பினும் நேயர்களின் செய்தித் தெரிவிற்கேற்ப வாசகர்களின் எண்ணிக்கை குறிப்பிட்ட நிகழ்ச்சி களுக்குக் குறையும். தொலைக் காட்சியில் அப்படி குறைவதில்லை. வலைப்பிணைப்பு நிகழ்ச்சிகள் (network programmes) 30 சதவிகித மக்களைச் சென்றுசேர வேண்டும். அப்படி இல்லையெனில் அவை ஒளிபரப்பி லிருந்து நீக்கப்படும். வானொலியில் குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு நேயர்களின் எண்ணிக்கைக்கேற்ப எழுதுதல் வெற்றிக்கு வழிவகுக்கும்.

Recording : (ஒலிப்பதிவு)

Recording head : (ஒலிப்பதிவு முனை) ஒலிப்பதிவுக் கருவியில் மின்னியலைக் காந்த மாறுபாடாக்கி நாடாவில் ஒலிப்பதிவு செய்தல்.

Recording processes : (ஒலிப்பதிவு முறைகள்) ஒலிகளின்காந்த வேறுபாட் டடிப்படையில் நாடாவின் இரும்பு ஆக்ஸைடு பக்கத்தின் மீது ஒலிகளைப் பதிவு செய்தல். இரும்பு ஆக்ஸைடின் கவனமாக நுணுக்கப்பட்ட துகள்கள் பிசினூட்டப்பட்ட ஒரு இணைப்பானில் நிறுத்தி வைக்கப்பட்டு பிளாஸ்டிக் பதிவு நாடாவின் ஒருபுறத்தில் தூவப்படு கின்றன. இரும்பு ஆக்ஸைடின் ஒவ்வொரு நுண்துகளும் பல சிறிய காந்தங்களால் ஆக்கப்பட்டவை. அவை ஊசி வடி வத்தில் செய்யப்பட்டிருக்கும். பதிவு முதன்மைக் கருவி (*recording head*) ஆகிய ஒரு வலிமைவாய்ந்த மின்னணுத் தன்மை உடைய காந்தம் எல்லா காந்தங்களையும் ஒரு ஒலிப்பு மாதிரிக்குள் இழுக்கிறது. வலிமை யில்லாத ஓர் ஒலி ஒரு வலிமையற்ற மின்சக்தியை ஈர்க்கிறது. இந்த வலிமையற்ற மின்சக்தி மிகச்சில காந்த ஊசிகளையே வரிசைப்படுத்தும் இயல்புடையன. ஒரு வலிய ஒலி வலிய மின்சக்திகளை உருவாக்குகிறது. இந்த வலிய மின்சக்திகள் எல்லாக் காந்தங்களையும் வரிசைப்படுத்தி ஒரு தரம் வாய்ந்த குறியீட்டைப்

பயக்கின்றன. ஒலி அளவுக் குறிப்பானை ஒரு கட்டுப்பாட்டுப் பலகையின் மீது இயக்குவது போலவே ஒலி அளவைக் கருவியை (Vu meter) ஒலிப்பதிவுக் கருவியின் மீது இயக்குதல் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. ஒலிப்பதிவுக் கருவி console இன் மீது ஒரேநேரத்தில் இயங்கும் ஒரு ஒலி அளவைக் கருவியைக் கொண்டிருக்க வேண்டும். பதிவு செய்யும்போது ஒலி கட்டுப்பாட்டுப் பலகை வழியாகப் போனாலும் கூட, இறுதியான பலன் பதிவுக் கருவியில் கட்டுப்படுததப்பட வேண்டும்.

Re-creation : (மீண்டும் உருவாக்கல்) தொலைக்காட்சி நிகழ்ச்சியாகிய விளக்கப்படத்தில் எழுத்தறிக்கையின் ஒரு சிறுபத்தி படம் எடுககப்படாமல் விட்டுப் போயிருக்கிறதெனில் மீண்டும் படம் எடுக்கலாம். மீள் உருவாக்கத்தில் நாடகம், புனைகதைப் பாணியில் அமையும். உண்மையான சூழலைச் சிதைத்துவிடக் கூடாது. சான்றாக, சிறைக் கைதிகளைப் படம் எடுக்க அனுமதிக்க மாட்டார்கள் என்றால் நாமே அதுபோன்ற காட்சியை உருவாக்கிப் படம் எடுப்பது.

Redundancy : (திரும்பத் திரும்ப வருதல்) ஒலிபரப்பு இதழியலில் நிகழ்ச்சி எழுதுபவர் தெளிவு தருவதைக் குறைக்கும் வண்ணம் சில சொற்கள் மறித்து வந்தால் அவற்றைத் தவிர்த்து எழுத வேண்டும்.

Reel : (சுருள்) திரைப்பட அல்லது ஒளிநாடாச் சுருள்.

Reel end : (சுருளின் இறுதி) ஒரு பேப்பர் உருளையின் கடைசியாகச் சில மீட்டர் நீளம் உள்ள தாள். இதை அச்சிட முடியாது என்பதால் அத்துடன் அச்சிடுவதை நிறுத்தி அச்சிட்ட தாளை வெட்டி எடுத்து விடுவர். சுருளின் இறுதிப் பகுதியை வெட்டி துண்டுகளாக்கி வேறு வழிகளில் பயன்படுத்திக் கொள்வர்.

Reference section : (விபரச் சேகரிப்புப் பகுதி) தகவல் குறிப்புகளைச் சேர்த்து வைத்துள்ள பத்திரிகை அலுவலகப் பகுதி.

Reflected light : (பிரதிபலிக்கும் ஒளி)

Reflex projection : (பிரதிபலிக் காட்சி) லென்ஸ் கோணத்தில் ஒரு திரையின்மீது முன்னாக ஒளிநிழல் உருவங்களைக் காட்டி ஒரு இயற்கைக் காட்சிப் பின்னணியைத் தோற்றுவிக்கும் முறை. 'Front Projection' என்றும் குறிப்பிடப்படும்.

Regionalisation : (வட்டார மயமாக்கல்) ஒரு செய்தித்தாளின் கொள்கை ; அதாவது அதிக எல்லைப் பரப்பிலுள்ள (தூரத்திலுள்ள) வாசகர்களுக்குத் தனது பத்திரிகை வெளியீடுகள் மூலம் செய்தி தருதல். இதன்படி அந்தந்த வட்டார உள்ளூர்ச் செய்திகளை மட்டும் முதல் பக்கத்தில் அல்லது பத்திரிகையின் உள்ளே உள்ள ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பக்கங்களில் தருதல்.

Regional music : (வட்டார இசை) அந்தந்த வட்டாரங்களுக்குரிய இசையை அந்தந்த வானொலி நிலையங்கள ஒலிபரப்ப ஏற்பாடு செய்து அவை ஒலிபரப்பப்படுவதுண்டு.

Regional news bulletin: (வட்டாரச் செய்தி அறிக்கை) அகில இந்திய வானொலி மாநில அளவிலேயே வட்டாரச் செய்தி அறிக்கைகளை அன்றாடம் வழங்கி வருகிறது. மாவட்டச் செய்தி மடல்கள் மாதம் ஒரு முறை மட்டுமே வழங்கப்படுகிறது. தாலுகா, பிர்கா அளவிலான செய்தி அறிக்கைகள் வழங்கப்படுவதில்லை.

Register: (தயார் நிலை) 1) அச்சு இயந்திரத்தில் மார்ஜின் உட்படப் பக்கங்கள் சரியாக அமைக்கப்பட்டு அச்சிடத் தயாராக இருக்கும் நிலை. அச்சுச் செயலில் அதன் கூறுகளின் நிலைகளைச் சரியாகப் பொருத்தி வைப்பதன்மூலம் தாளில் விரும்பிய வண்ணம் நல்ல அச்சீடு கிடைக்கும். குறிப்பாக கூடுதல் வண்ணங்களைத் தாளில் சேர்த்தலுக்கு இவ்வாறு 'தயார் நிலை' கவனிப்பு தேவை. 2) வண்ண அச்சீட்டில் ஒவ்வொரு தகட்டையும் வண்ணங்கள் ஒன்றுக்கொன்று சரியாகப் பரவுமாறு சரியாகப் பொருத்தி வைத்திருத்தல்.

Regular type : (சாதாரண எழுத்து வகை) சாதாரணமாகப் பயன்படுத்தும் எழுத்து வகை.

Reinforcement theory of violence : (குற்ற நடவடிக்கைகளை வலியுறுத்தல்) தகவல் தொடர்பு சாதன விளைவுகளுடன் தொடர்புடைய ஒன்று. தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட வன்முறைக்காட்சிகள் ஏற்கனவே மக்களிடம் உள்ள நிலைப்படுத்தப்பட்ட மாதிரிகளையும் வன்முறை நடத்தைகளையும்தான் திரும்பக் காட்டுகின்றன. இதன் விளைவாகக் குறிப்பிடத்தக்க கூடுதலோ அல்லது குறைவோ நேயர்களின் நடத்தையில் இல்லை என்பதை இக்கொள்கை குறிப்பாக விளக்குகிறது. 'விளைவுகள் இல்லை' கொள்கையுடன் (No-effects theory) தொடர்புடையது.

Relay : (தொடர் அஞ்சல்) 1) வேறு ஒரு நிலையத்தில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சியை அதே வேளையில் அஞ்சல் செய்வது. 2) நடைபெறும் ஒரு நிகழ்ச்சியை அப்போதே நேரிடையாக அஞ்சல் செய்வது.

Release : (வெளியீடு) 1) ஒரு செய்திக் கதையைக் குறிப்பிட்ட நாளில் அல்லது குறிப்பிட்ட நேரத்தில் அச்சிட்டு வெளியிட அனுமதித்தல். 2) குறிப்பிட்ட செய்திக்கதை வெளியிடப்பட வேண்டிய காலம் குறித்து முன்னரேயே எழுத்துப்படியில் குறிக்கப்பட்டுள்ள குறிப்பு. 3) ஒரு விளம்பர கைப்பிரதி குறித்த பொதுச் சொல். 4) குறிப்பிட்ட ஒரு ஒளிப்படத்தின் பயன்பாடு பற்றிக் குறித்து வைக்கப்பட்டுள்ள குறிப்பு.

Remote : (சேய்மை) வானொலி நிலையத்தின் வெளியிலிருந்து துவங்கும் எந்த ஒலிபரப்பும் 'சேய்மை' என்று அழைக்கப்படுகிறது. இதற்குச் சிறப்பான சேய்மைக் கருவிகளும் அலைவரிசைகளும் தேவைப்படுகின்றன. அடுத்த கட்டடம்போல அருகாகவோ அல்லது கோள்களைப் போல மிகத் தூரமாகவோ சேய்மை என்பது இருக்கலாம். சேய்மை நுண் அலைகள் மூலமாகவோ அல்லது சேய்மைக் களத்தில் உள்ள சேய்மைக் கருவிகள் மூலமாகவோ செய்தி தெரிவிக்கப்படலாம். சேய்மைகள் ஒரு சிறப்பு ஒலி இணைக்கருவிகள் மூலமாகவும் செய்தியை அனுப்பலாம். அல்லது ஒரு தூக்கிச் செல்லக்கூடிய அளவில் உள்ள மாநாட்டுத் தொலை பேசி மூலமாக அல்லது இரண்டும் கூடிய எப்போதும் உள்ள தொலைபேசி இணைப்பு மூலமாகப் போதுமான ஒலிகள் அனுப்புதல் மற்றும் ஒலிபரப்புப் பணிக்கும் உள்ளதன் மூலமாக உள்ளீடு செய்யப்படலாம். கட்டுப்பாட்டு அறையில் கட்டுப்படுத்து அதிகாரிக்காக ஒரு இணை நிகழ்ச்சிக் குறிப்புத் தாள் (நிகழ்ச்சி வரிசை பற்றிய விபரம், கட்டுப்பாட்டுக் கருவிகள் மாற்றுதல், வரிசையை ஆக்கிக் கொள்ளும் வகையில் பரிசோதித்துக் கொள்ளும் அமைப்பு போன்ற விபரங்கள் அடங்கி இருக்கும்) தரப்பட்டிருக்கும். சேய்மை

இடத்தில் உள்ள ஒவ்வொரு நுண் ஒலிவாங்கியும் சோதிக்கப்படுகிறது. ஏற்கனவே உள்ள திட்டமிட்ட அமைப்பின்படி (எண்ணிக் கையின் அடிப்படையில்) இனங்காணப் படுகிறது. பொதுவாக அதனால் கட்டுப்படுத்து அதிகாரி எந்த ஒலிவாங்கியில் எத்தகைய ஒலி அல்லது சம்பவம் எதிர்பார்க்கப்படலாம் என்று தெரிந்து கொள்வார். ஒலிபரப்பு, ஒளிபரப்புச் செய்தி சேகரித்தலில், செய்தி எழுதுதலில், பார்த்தலில், வரிசைப்படுத்தலில் உள்ள ஒரு மிகுதியும் பரபரப்பான விபரம் என்ன வெனில் 'சேய்மை' தான். தொலைக் காட்சி, வானொலி இரண்டிலுமே சேய்மை நேயர்களை நேரடியாகக் காட்சிச் சம்பவத்துக்குள்ளேயே அது நடப்பதை அப்படியே காட்டிவிடுகிறது. சில சேய்மைகள் செய்தித்தாளில் நிருபர் தொலைபேசி மூலம் அலுவலகத் திற்குச் சொல்லும் செய்திக்கு இணையானது. பொதுவாக நிருபர் எழுதுபவராக இருப்பவரே சேய்மைக் காட்சிகளைக் கையாளுவார்.

Remote transmission : (சேய்மை அனுப்பீடு) ஒரு செய்திப் பகுதிக்குத் தூரததிலிருந்து செய்தியைத் தரும் எந்த ஒரு முறையும் இவ்வகைப்படும். மைய ஒலிபரப்பு நிலையத்துடன் தொலைபேசிக் கம்பியால் இணைக்கப் பட்டதும் எளிதில் கொண்டுசெல்லக் கூடியதுமான இணைப்பு மையங்கள். சான்றாக, முழுப் பக்கங்களையும் செய்தி அறையிலிருந்து தூரத்தில் உள்ள வெளியீட்டகத்திற்குக் கோள்கள் மூலமாகவோ அல்லது ஃபேக்ஸிமைல் மூலமாகவோ அனுப்புதல் ஆகும்.

Repetitions : (மறித்து வருவன) ஒரே கருத்து மீண்டும் மீண்டும் கூறப்பட வேண்டி இருப்பின் அக்கருத்தையே வெவ்வேறு சொற்கள், தொடர்களில் குறிப்பிடலாம்.

Replate : (மீண்டும் உருவாக்குதல்) பிந்திய செய்திகளைச் சேர்ப்பதற்கும் அல்லது இரு அடுத்தடுத்த வெளியீடு களுக்கு இடையே பிழைகளைத் திருத்தும் பொருட்டும் அச்சிட்ட ஒரு பக்கத்தை மீண்டும் ஆக்குதல். (காண்க : make over)

Reporter : (நிருபர் அல்லது செய்தி சேகரிப்பவர்) மொத்த நாளிதழுக்கும் அடிப்படை ஆதாரம் நிருபரே ஆவார். செய்தி சேகரிக்கும் ஆர்வமான பணியே அவரது பணி. சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரோடும் கலந்து பழகிச் செய்தி சேர்க்கிறார். ஒவ்வொரு நாளும் அவரது முழு உழைப்புக்கும் திறமைக்கும் கவனத்துக்கும் சவா லான நாளாக அமைகிறது. அமெரிக்கா வில் உள்ள அசோசியேடட் பிரஸ்ஸின் நிறுவனராகிய மெல்வில் இ.ஸ்டோன் என்பவர் ஒரு புத்திசாலியான ஆசிரியரை விட ஒரு புத்திசாலியான நிருபரே மிகுதியும் சிறப்புப் பெறுபவர் ஆகிறார் என்கிறார். 'செய்தி இது' என்று செய்தியை அறியத்தக்க செய்தி மோப்பம் உடையவராகவும் தகவல் களைத் துல்லியமாகவும் விரைவாகவும் தருபவராகவும் விடாமுயற்சியுடன் முழுமையாகச் செய்தியைக் கொணர் பவராகவும் திறமையுடன் செயல்பட வேண்டும். எல்லோரிடமும் நட்பு கொண்டு நம்பிக்கைக்குரியவரா வதுடன எவ்வித இலஞ்சம் பெறு வதற்கும் இடம் கொடாதவராக இருத்தல் வேண்டும். இவரே செய்தி இல்லாதவிடத்துச் செய்தி உருவாக் காதவராகவும் தேசியப் பாதுகாப்பு கருதி மட்டுமே செய்தியைத் தணிக்கை செய்பவராகவும் பிறவிடத்து அப்படியே செய்தியைத் தருபவராகவும் பிறரது சொந்த வாழ்க்கை, பணி, நேர்மை குறித்து ஆழ்ந்த மரியாதை உடையவராகவும் வேண்டும். தனது பணியில் முழு ஈடுபாட்டுடன் இவர் செயல்படுதல் அவசியம்.

Reprint : (மறு அச்சீடு) ஒரு நாளிதழின் ஒரு நாள் வெளியீட்டில் இறுதியாக வெளியான நாளிதழ்களில் சேர்க்கப் பட்ட ஒரு செய்தி அதன் மறுநாளைய அதிகாலை வெளியீடுகளில் மீண்டும் சேர்க்கப்பட்டு வெளிவரும்போது 'reprint' என்று முத்திரை குத்தப்பட்டு வெளியிடப்படும்.

Residual : (மறு ஊதியம்) வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அளிக்கப்படும் மறு ஒலிபரப்புக்காக அந்நிகழ்ச்சி தொடர்பான கலைஞ ருக்கு அளிக்கப்படும் மதிப்பூதியம்.

Responses: (பதில் உணர்வுகள் அல்லது பதில்கள்) ஒரு செய்தி அல்லது கருத்து குறித்த பரிமாற்றம் நிகழ்ந்த வுடன் அச்செய்தி அல்லது கருத்து குறித்து செய்தியைப்பெற்றோரின் வெளிப்பாடு ; ஒரு கருத்துப் பரி மாற்றத்தின்போது செய்திகளைப் பெறுவோரிடமிருந்து வெளிக் கொணரப்படும் வெளிப்பாடே பதில்கள் எனப்படும். சில வேளைகளில் இவ்வெளிப்பாடு வெளிப்படையாக இருக்கும். சான்றாக, கருத்து பரிமாறப் படுபவர் அசைதல், சிரித்தல், முகம் சுளித்தல் போன்றன. கருத்து பரிமாறு பவர் கவனிக்குமளவிற்கு வெளிப் படையாக அவரது எதிர்ச்செயல் இங்கு காட்டப்படுகிறது. பல நேரங்களில் எப்படியாயினும் பதில் வெளிப்பாடு மறைமுகமானதாக இருக்கும். சான்றாக, கருத்து பரிமாறப்படுபவர் சிந்தித்தல், கற்பனை செய்தல், உடல் செய்கை வெளிப்பாடு இல்லாமல் மறைமுகமாக உணர்தல் போன்றன. இவை நேரடியாகவன்றி குறிப்பாக கருத்துப் பரிமாறுபவரால் கவனிக்கப் பட முடியும். இவ்வாறு கருத்து பரிமாறப்படுபவரிடமிருந்து வெளிப்படை யாகவோ குறிப்பாகவோ வெளியாகும் குறியீடுகளிலிருந்து கருத்து பரிமாறு பவர் எதிரூட்டைப் பெற்றவர் ஆகிறார். பத்திரிகைகளில் வரும் வாசகர் கடிதங்கள் வானொலி, தொலைக் காட்சி முதலியவற்றில் வெளியாகும் நேயர் கடிதங்கள் இவ்வகையின.

Restructuring the story : (செய்திக் கதையை மறு அமைப்பாக்கம் செய்தல்) எழுத்துப்படி ஆசிரியர்கள் தாங்கள் பதிப்பிக்கும் செய்திக் கதையின் வடிவங்களை மாற்றுவதற்கு முழு அதிகாரம் உடையவர்கள். எழுத்துப்படி மேசைப் பணியில் இது முக்கியத் திறமை சார்ந்தபணி. எப்படி செய்திக் கதைகள் மீண்டும் வடிவமைக்கப்படுவதன் வாயிலாகச் சக்தி வாய்ந்ததாக்கப்படலாம் ; மிகுந்த பொருளுள்ளதாக ஆக்கப்படலாம் ; மறு அமைப்பாக்கம் செய்வதற்கு அதிக நேரம் செலவழிக்காமல் எப்படிச் செய் யலாம் என்பன குறித்த திறமைகள் தேவை. நிருபரது எழுத்தில் உள்ள பிழைகளையும் அவற்றை ஆசிரியர் திருத்த விழையும் முறைகளையும் பொறுத்து மறு அமைப்பாக்கம் செய்தல் பல வடிவங்களைப் பெறுகிறது.

Retail advertising : (மொத்த விற்பனை விளம்பரம்) பெரிய அளவில் மொத்தச் சரக்குகளையும் உள்நாட்டில் விற்பனை செய்யும் பொருட்டு விளம் பரத்தை வடிவமைத்தல்.

Revamps : (மாற்று அமைப்புக்கள்) செய்தியில் ஒரு பத்தியை மாற்றி அமைத்தல் ; செய்தி முழுவதையும் மாற்றி அமைப்பதையோ திருத்தி எழுது வதையோ இச்சொல் குறிக்காது.

Reverberation : (எதிர் அலைகள்) வானொலி ஒலிப்பதிவில் ஒலி உண்டாகும் இடத்தில் ஒலி முடிந்த பின்னரும் ஒலி அலைகளினால் எதிர்வரும் எதிர் அலைகள். சுவர்கள், தரை, மேற்கூரை முதலியவற்றி லிருந்து தொடர் பிரதிபலிப்புக்களின்

வாயிலாக உருவாக்கப்படும் நீண்ட நேரத் தொடர் ஒலி.

Reverberation time : (எதிர் அலை நீட்டிப்பு நேரம்) வானொலி ஒலிப்பதி வில் எதிர்வலைகள் எவ்வளவு நேரம் நீடித்து இருக்கின்றன என்று அறிதல் உண்டு.

Reverse : (மாற்று) படங்களில் கறுப்பை வெள்ளையாகவும் வெள்ளையைக் கறுப்பாகவும் மாற்றித் தருதல்.

Reverse action : (முந்திய காலச் செயல்) கால வரிசையில் பின்னதாகத் தோன்றும்படி செய்யப்படும் செயல். முந்திய காலச் செயலைப் பின்னால் காட்டுதல்.

Reverse angle : (மீள் கோணம் அல்லது திரும்புகோணம்) காமிராவின் செங்குத்துக் கோணம், (vertical angle) கிடைநிலைக் கோணம் (Horizontal angle) போன்றன பாத்திரங்களின் மூலம் எந்தப் பாதிப்பையும் ஏற்படுதது வதில்லை. ஒரு காட்சியில் நபர், பொருள் இவற்றிற்கிடையே உள்ள உறவைக் காட்ட மட்டுமே பயன்படு கிறது. மீள் கோணத்தைக் (reverse angle) கையாளும் உத்தி பெரிதும் பேட்டிகளில் பயன்படுத்தப்படுகிறது. நிருபர் அடுத்த கேள்வி கேட்கும்போது நிருபருக்குப் பேட்டி தருபவரின் முழு முகமும் தெரியும் வகையிலும் நிருபரின் முதுகு நேயர்களுக்குத் தெரியும் வகையிலும் காமிரா கோணம் எதிர்க் கோணத்திற்கு மெல்ல மாறுகிறது. ஒரு நிகழ்ச்சியின் உணர்வின் அளவு, வடிவம் முதலியவற்றை உணர்த்த இக்கோணம் பயன்படும். சான்று : அரசியல் கூட்டத்தில் தலைவர் பேசுவ தைக் காட்டி அப்படியே நேயர்களின் உணர்வை மீள்கோணத்தில் காட்டுதல்.

Reverse phase : (மாற்றும் வழிகள்) ஒளிபரப்பிற்காகத் திரைப்பட எதிர் பிலிம்களை (நெகடிவ்) நேர் பிலிம் களாக (positive) மாற்றும் மின்னணு வழிகள்.

Reverse projection: (நேரெதிர் காட்சி) தெளிவான நேர்படிவத் திரைப் படத் தகடு. தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பவரின் பின்னே ஒரு முழுத் திரையின் மீது ஒரு படத்தைக் காட்டுதல் (Projection). இதற்கு ஒரு தெளிவான நேர்படிவத் திரைப்படத் தகடு (positive transparency) தேவை. RP என்று சுருக்கிக் கூறப்படும்.

Reverse talk back : (பேச்சுத் தொடர்பு வசதி) வானொலி நிலைய நிகழ்ச்சி ஒலிப்பதிவு அறைக்குள்ளிருந்து பொறி யாளரின் கட்டுப்பாட்டு அறைக்குப் பேசும் வசதி.

Review: (மதிப்புரை) புதிதாக வெளியான புத்தகங்கள், திரைப்படங் கள் பற்றிய கருத்தைத் திறனாய்வு செய்து ஒருவர் (பத்திரிகை ஆசிரியர்) எழுதும் மதிப்புரை.

Review copy : (மதிப்புரைப் பிரதி) இதுபற்றித் திறனாய்வு அல்லது விமரிசனம் செய்து அனுப்புக என்று கேட்டு ஒருவருக்கு அனுப்பி வைக்கப் படும் புத்தகப் பிரதி.

Revise : (இரண்டாம் பிழை திருத்தப்படி) முதலில் ஒருமுறை அச்சப் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின் மீண்டும் அத்திருத்தத்தில் வேறு ஏதும் பிழை இருக்கிறதா என்று பார்ப்பதற் காக எடுக்கப்பட்ட இரண்டாம் பிழை திருத்தப்படி (புரூ.ஃப்).

Rewriting : (மீண்டும் எழுதுதல்) மீண்டும் எழுதுதல் என்பது புத்தம் புது மலர்ச்சியூட்டல் (updating) என்ற

வகையில் சாரும். அதாவது செய்தி வெளியாகும் அந்த நாள் நேரத்திற்கு ஏற்பக் குறிப்பிட்ட செய்தியை மீண்டும் எழுதுதல் 'rewriting' எனப்படும். முக்கியத்துவம் வாய்ந்த செய்தி ஒருமுறை பயன்படுத்தப்பட்ட பின்னர் மறைந்து விடுவதில்லை. அதே செய்திக்கதை தகுந்த இடத்தில் நாள் முழுவதும் பயன்படுத்தப்படும்போது நேயர்கள் அது மாநிலத்தின் முக்கியச் செய்தி என்று தெரிந்து கொள் கின்றனர். 1) அச்செய்தி தொடர்பான உடனடிச் செய்திகளைச் (hard news) சேர்க்க வேண்டுமா? தகவல் முக்கியத்துவம் மேலும் அச்செய்திக் குத் தேவையா? 2) முதல் முறைச் செய்தியாக இருப்பின் மேலும் புலனாய வேண்டுமா? அப்படிப் புலனாயப்பட வேண்டிய செய்தியா? 3) நேயர்களின் பிரதிபலிப்பு இச்செய்திக்கு எப்படி அமையும்? முதலியவற்றைத் தீர்மானித்துப் புதுமலர்ச்சியூட்ட வேண்டும். சான்றாக, நாட்டில் ஒரு தலைவர் தேர்ந்தெடுக்கப்படுதல், அல்லது போர் ஆரம்பித்தல் முதலியன் நிகழும்போது செய்திக்கதை உடனே எழுதப்படவேண்டும். முகப்புச் செய்தி சில மணித்துளிகளில் தயாராக வேண்டும். தீப்பிடித்த செய்தி, திருட்டு, விளையாட்டு, நகர்ப் பிரமுகரின் மரணம் போன்ற செய்திகளுக்கும் செய்திக் கதை மிக விரைவாக எழுதப்பட வேண்டியிருக்கும். இச் சூழல்களில் திறமையாக எழுதும நிபுணர்கள் அழைக்கபபடுவர். அச்செய்தி குறித்த கொள்கைகளை உருவாக்கவோ தத்துவ ஆராய்ச்சி செய்யவோ அது நேரமல்ல. பொழுது போக்குக் கலை நுணுக்கத்துக்கு இங்கு இடமில்லை. இச்சூழலில் மீண்டும் எழுதும் பணி அதுகுறித்த நபருக்கு அமைகிறது. ஒரு செய்தித் தாள் அலுவலகத்துக்குத் தந்திப் பணி மூலமாக வந்து சேரும் செய்திகளை மீண்டும் செய்திக் கதையாக எழுதுபவர் இருப்பார். தொலைபேசி மற்றும் தந்தி மூலம் செய்தியை நிருபர்கள் சொல்லி அனுப்ப அவர் களுக்காக ஏற்கனவே உள்ள எழுத்துப் படியை மீண்டும் எழுதுதலையும் இவரது பணி உள்ளடக்கியது. வேறு ஒரு செய்தித்தாளில ஏற்கனவே வெளிவந்த செய்தியைத் தம் பத்திரிகைக்கு ஏற்ப மீண்டும் எழுதுதலும் (revise) உண்டு.

Rhythm : (தாள லயம்) தாளலயத்தின் ஒரு வகை பேச்சுத்தாளலயம் ஆகும். இப்பேச்சுத் தாளலயமே தனித்த பேச்சு மாதிரிகளைத் தருகிறது. வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள், செய்தி வாசிப்பாளர்கள் தமக்கென ஒரு தனித்த பேச்சு மாதிரிகளைக் கொண்டவர்கள். மெல்லவும் மென்மை யாகவும் வேகமாகவும்-எப்படி எப்படி வேண்டுமோ அவ்வாறே பேச/ வாசிககக் கூடியவர்கள். நிகழ்ச்சி எழுதுபவர் இவர்களது பேச்சு தாள லயத்தைத் தான் எழுதும் சொற்கள் வாக்கியங்கள் போன்றவற்றினால் கட்டுப்படுததுகிறார். எழுத்துப்படி வத்தின் நடை மொழியின் தாளலய வீழ்ச்சியைப பெரிதும் கட்டுப்படுத்தக் கூடியது ஏனெனில செய்தி வரிகளின் இயற்கைத் தாளலயம் முறறிலுமாக நிகழ்ச்சி எழுதுபவரின் கட்டுப்பாட்டி லேயே இருககிறது

Ribbon : (எட்டுப்பத்தித் தலைப்பு அல்லது தலைமைத் தலைப்பு) காண்க : banner, streamer.

Ribbon mic : (இருபக்க உயர் ஆற்றல் ஒலிவாங்கி)

Rim: (வெளி விளிம்பு) எழுத்துப்படி வாசிப்போர் அமரும் எழுத்துப்படி மேசையின் சுற்று விளிம்பு. உள் விளிம்புக்கு எதிர்ப்புறமாக அமைந்தது. உள் விளிம்பில் அந்த மேசைக்குப் பொறுப் பானவர் தலைமையாக அமர்ந் திருப்பார்.

Ring : (சுற்று) பலர் திருத்தும் வகையில் ஒரு எழுத்துப்படியைச் சுற்றுக்கு விடுதல்.

Roll cue : (செய்திப்பட அடையாளம்) ஒளிபரப்பில் ஒரு செய்தி நிகழ்ச்சியின் போது ஒரு செய்திப் படக்கூறு காட்டப் பட வேண்டும் என்பதைக் குறிக்கும் வகையில் அது காட்டப்படும் முன்னர் அமையும் மூன்றிலிருந்து நான்கு வினாடிகள் வரையிலான அடையாளக் குறிப்பு.

Roller : (உருளை) சிலிண்டர் வடிவிலான உருளை பொருத்தப்பட்ட அச்சு இயந்திரம். இந்த உருளை ஒவ்வொரு அச்சுப் பதிவுக்கும் முன்னர் மையை ஒரு தகட்டில் பரப்புகிறது.

Roller caption : (உருள் தலைப்பு) திரையில் எழுத்துக்களைக் குறுக்காவோ நெடுக்காகவோ ஓடச் செய்து பரப்பிக் காட்டுவதற்கான இயந்திர அமைப்பு.

Roll out : (வெளிச் சுழற்சி) ஒரு பரிசோதனை செய்து பார்க்கப்பட்ட தபால் வழிப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து நிகழ்த்தப்படும் பெரிய நேரடியான தபால் வழிப் பிரச்சாரம்.

Roman numericals : (ரோமன் எண்கள்) ரோமன் எண்களைக் குறிப்பது. 1,2,3,4, என்பவற்றின் ரோமன் எண்கள் I,II,III,IV.

Roman type : (ரோமன் எழுத்து) 1) அடிப்படை வகை எழுத்துக்களுள் ஒன்று. ஒரே மாதிரியான கோட்டுருவ எழுத்து. சாய்வகள் மற்றும் சமமில் எடை முதலியன இவ்வெழுத்தின் இயல்புகள். 2) வலப் புறம் மேல் தூக்கிய எழுத்து ; சாய்வெழுத்துக்களிலிருந்து வேறு பட்டது. எழுத்துப் படிகளில் 'rom' என்று சுருக்கிக் குறிப்பிடப்படுகிறது.

Rotary press : (சுழல் அச்சுப்பொறி) சுழல் அச்சப்பொறி மிகவும் பெரியதும் வேகமும் உடையது. மணிக்குச் சுமார் 60,000க்கும் மேற்பட்ட பிரதிகள் அச்சடிக்கப்படுகின்றன. ஒரு வரிசையில் அநேக அச்சுப்பொறிகள் இருக்கும். இவை அத்தனையும் ஒரே சமயத்தில் இயங்கும். அச்சுக் கோர்க்கப்பட்ட செய்திகள் பக்கங்களாகப் பிரிக்கப்பட்டு நகல் எடுப்பதற்காகவே செய்யப்பட்ட தனியானதோர் அட்டைக் காகிதம் அதன்மேல் வைக்கப்பட்டு இயந்திரம் மூலம் அழுத்திப் பிரதி எடுக்கப்படுகிறது. பிறகு அவ்வட்டை மேல் உருகிய உலோகம் வார்க்கப் பட்டு வளைவுள்ள அச்சுப் பதிப்புத் தகடும் செய்யப் படுகிறது. இத்தகடு சுழலும் அச்சுப் பொறியில் இணைக்கப்பட்டு அச்சடிக்கப்படுகிறது.

Rotogravure : (ரோட்டோகிராவியூர்) செப்புத் தகட்டிலும் எஃகுத் தகட்டிலும் வேண்டிய உருவத்தைக் குடைதலும் புகைப்பட முறைகள் மூலம் உருவத்தை உருவாக்குதலும் ஆகிய குடைவு வகையைச் சேர்ந்தவை. இம்முறையில் செப்புத் தகட்டின் மீது இரசாயன முறையில் அரிப்புச் செய்யப்பட்டு உருவாக்கப்படும் அச்சுத் தகடு இவ்வாறு அழைக்கப்படும். 'roto' என்றும் 'gravure' என்றும் சுருக்கிக் கூறப்படும்.

Rough : (முதற்பிரதி) ஒரு முழு வடிவப் பக்கத் திட்டம் இன்னும் முழுமையாகச் செம்மையாக்கப்படாமல் சாதாரணமாக முதல் நிலையில் அமைக்கப்பட்ட பக்கத்திட்டம்.

Rough floor plan : (நகல் வரைபடம்) வானொலி தொலைக்காட்சி நிலைய முழுமை பெறாத அரங்குத் திட்டம்.

Royalty : (சன்மானம்) புத்தகம் வெளியானதும் அதை எழுதிய ஆசிரியருக்குப் பதிப்பாளரால் வழங்கப் படும் சன்மானத் தொகை.

Ruby : ($5\frac{1}{2}$ புள்ளி எழுத்து) $5\frac{1}{2}$ புள்ளி அளவிலான எழுத்து. முன்பு ரூபி என்று சொல்லப்பட்டது. (காண்க : Agate)

Rule : (ரூல்) எழுத்து அச்சின் உயர முடைய உலோகத் தகடு. பதிப்பில் கோடாக வரக்கூடியது. பெரும்பாலும் பித்தளையில் இத்தகடு செய்யப் பட்டிருக்கும்.

Ruled insert : (பெட்டிச் செருகல் அல்லது கட்டுரைப்பகுதிக் கட்டச் செய்தி) ஒரு பெரிய செய்திக் கதை தொடர்பான ஒரு சிறு செய்திக்கதை. கோடுகளுக்கிடையே அமைக்கப் பட்டுப் பெரிய செய்திக்கதையின் மையப் பகுதிக்கு இடையிலேயே தரப்படும். அவ்வாறு தரப்படும் குறிப்பு இவ்வாறு அழைக்கப் படும்.

Run in : (பத்தியாக்குக) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பத்திகளை ஒரு பத்தியாக ஆக்குமாறோ அல்லது ஒரு அட்டவணைப்படுத்தப்பட்ட செய்தியைப் பத்தி வடிவமாக ஆக்கு மாறோ அச்சுக் கோர்ப்பவருக்குத் தரப்படுகின்ற எழுத்துப்படிக் குறியீடு.

Running costs : (புத்தகத்தின் மொத்த விலை) அச்சுக் கூலி, தாள் விலை, அட்டை இணைப்புக் கூலி முதலிய செலவுகள் அடங்கிய புத்தகத்தின் அடக்க விலை.

Running order : (வரிசை ஒழுங்கு) வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சி களை ஒலிபரப்பாகும் வரிசையில் வரிசைப்படுத்தி எழுதுதல்.

Running story : (நிகழ்ந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சி) 1) ஒரு பத்திரிகையின் அன்றாடப் பல பதிப்புகளில் பதிப்புக்குப் பதிப்பு மாறுபடக்கூடிய ஒரே செய்தி. சான்றாக, விமான விபத்து போன்ற செய்தி. அவ்விபத்து குறித்த தொடர்ந்த செய்திகள் வந்து கொண்டே இருக்க ஒவ்வொரு தொடர் பதிப்புகளிலும் அப்புதிய செய்திகள் சேர்க்கப்பட்டு வெளியிடப் பட்டுக்கொண்டே இருக்கும். 2) ஒரு செய்தி பல நாள்களுக்கு, புதுப்புது விவரங்களுடன் வந்து கொண்டு இருப்பது.

Run of paper : (ஏற்புடைச் செய்தி) 1) நாளிதழின் குறிப்பிட்ட இடத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும் என்றில் லாமல் ஆசிரியரின் பக்க வடிவாக்க வசதிக்கேற்ப எங்கு வேண்டு மானாலும் அமைத்துக் கொள்ளலாம் என்ற ஒப்பந்தத்தின் பேரில் அதற்குரிய *பணம் கட்டி தரப்பட்ட விளம்பரம்*. ROP என்று சுருக்கிக் கூறப்படும். வண்ணத்தை எப்பக்கத்திலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற வாய்ப்பினை Run-of-paper color என்பது குறிக்கும்.

Run or beat reporter : (குறிப்பிட்ட களச் செய்தி நிருபர்) (காண்க : beat reporter)

Run up : (ஓடு காலம்) தொழில் நுட்ப சாதனங்கள் தன் முழு வேகத்துடன் ஓட, ஆரம்பிக்கத் தேவைப்படும் கால அளவு.

Rush : (அவசரச் செய்தி) செய்தி நிறுவனங்களால் கொடுக்கப்படுகின்ற அவசரச் செய்தி. அச்சுக்கோர்ப்பு அறை யில் இருந்து கேட்கப்படுகின்ற அவசர அச்சுப் பிரதி.

S

S : (பேச்சு) 'speech' என்பதன் சுருக்கம். பேச்சு நிகழ்ச்சியைக் குறிக்கக் குறிப்பிடப்படும் குறிப்புச் சொல்.

SA : (வலுவாதார அறிவிப்புக்கள்) 'sustaining announcements' என்பதன் சுருக்கம். வணிக விளம்பரமல்லாத அறிவிப்புக்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் குறிப்புச் சொல்.

Sacred cow : (புனிதர்) ஒரு குறிப்பிட்ட நாளிதழில் ஒரு பொருள் அல்லது ஒரு நபர் எப்போதும் நலம் சார்ந்த செய்தி அணுகுமுறையிலேயே குறிப்பிட்டு எழுதப்படுவர் என்றால் அப்பொருள் அல்லது அந்நபர் இவ்வாறு குறிப்பிடப்படுவர்.

SAP : (விரைவில் தருக) 'Soon As Possible' என்ற சொற்களின் முதலெழுத்துச் சுருக்கம். தந்திப் பணியில் 'முடிநததை விடவும் சீக்கிரமாகத் தரவும்' என்ற பொருளில் SAPPEST என்ற வடிவம் குறிப்பிடப்படுகிறது.

SB : (நேரடி ஒலிபரப்பு அல்லது ஒன்று சேர்ந்த ஒலிபரப்பு) 'Simultaneous Broadcast' என்ற பொருள்படும்; ஓரிடத்தில் நிகழ்பவற்றை அப்படியே ஒலிபரப்புவது. சான்றாக விளையாட்டுச் செய்திகளை வானொலியில் அப்படியே விளையாட்டு நடந்து கொண்டிருக்கும்போதே ஒலிபரப்புதல்.

Scamp : (அடிப்படை வடிவம்) கோட்டுருவம், வரைபட அடிப்படை, விளம்பரத்தின் அடிப்படை போன்றவற்றைக் குறிக்கும்.

Scan : (கூர்ந்து பிரதியெடு) மின்னணுக்களாலான ஒரு ஒளிக் கற்றையை ஒரு பரப்பின் மீது ஒளி அளவில் வேறுபட்ட குறுகிய கோடுகளில் தொடர்ந்து வருமாறு மிக விரைவாகச் செலுத்தப்பட்ட ஒரு படிவம் (transmitted image) அப்படியே மீண்டும் கிடைக்கிறது. பொதுவாக இம்முறையின் வேகப்படி ஒரு வினாடியில் 13இல் 1 பாகத்திற்கொரு முறை 525 ஒளிக் கோடுகள் கடக்கும்.

Scanner : (துல்லியப் பிரதி கருவி) ஒன்றன் கட்புலன் இயல்பை அப்படியே தரும் இயந்திரம் கூர்ந்து பிரதியெடு கருவி எனப்படும். இக்கருவி செயல்படுமுறை கூர்ந்து பிரதியெடு முறை அல்லது துல்லியப் பிரதியெடு முறை (scanning) எனப்படும். இது ஒலிபரப்புப் பிரிவின் வெளியே பணியாற்றும் ஒரு நடமாடும் கட்டுப்பாட்டு மையம் போன்றது.

Scanning head : (கூர்ந்து பிரதியெடு பகுதி) ஒரு கூர்ந்து பிரதியெடுக்கும் கருவியின் ஒரு பகுதி. இப்பகுதியே சிறப்புத் தட்டச்சுப் பொறியின் தட்டச் செழுத்துக்களை வாசித்து மின்னணுப் பிரதி ஆக்கத்திற்காக அதைக் குறியீடுகளாக மாற்றுகிறது.

Scene : (காட்சி அமைப்பு) ஒரு படக்காட்சி அல்லது படக் காட்சிகளின் வரிசைக்கான அமைப்பு ஏற்பாடு

Scene & sequence : (காட்சி & காட்சித் தொகுப்பு) பொதுவாக இரண்டு சொற்களும் காட்சி என்பதையே குறிக்கும். 'scene' என்பது நிகழ்ச்சி அல்லது செயல் நடக்கும் இடம் அல்லது பின்னணி முதலியவற்றைக் காட்டும் காட்சி எனப்படும் 'scene' ஒரு படக் காட்சி (shot) அல்லது ஒரு தொடர் சம்பவத்தைச் சித்திரிக்கும் பல படக் காட்சிகளின்

வரிசையைக் கொண்டிருக்கும். குறிப்பிட்ட நேரத்தில் பார்ப்போர் அதே இடத்தில் நடப்பதாக உணரும் வகையில் ஒரு செயலின் தொடர்ச்சியை அப்படியே பல படங்களை வரிசையாக வைத்துக் காட்டுவது ; 'Sequence' என்பது ஒரு பின்னணியில் அல்லது பல்வேறு பின்னணிகளில் அமைந்து தம்முள் முழுமையுடைய காட்சிகளின் (scene) அல்லது படக் காட்சிகளின் (Shots) ஒரு வரிசை ; தொடர்புடைய பல காட்சிகளைக் கொண்ட ஒரு மொத்தத் தொகுப்பு.

Schedule : (குறிப்பு அட்டவணை) 'Sked' என்று சுருக்கி உரைக்கப்படும். 1) நகர்ச் செய்தி ஆசிரியர் செய்ய வேண்டிய பணிகள் இன்னின்ன என்று பதிந்து வைக்கப்பட்டிருக்கும் விவரக் குறிப்பு. 2) எழுத்துப் படியைப் பதிப்பிக்கும் ஆசிரியர் ஏற்கனவே பதிப்பித்து விட்ட செய்திக் கதைகள் பற்றிய குறிப்புக்கள் பதிந்து வைக்கப் பட்டிருக்கும் விவரக் குறிப்பு.

Scoop : (முந்து செய்தி) ஒரு தனிப்பட்ட செய்தி, வேறெந்தப் பத்திரிகைக்கும் கிடைப்பதற்கு முன்னர் குறிப்பிட்ட ஒரு பத்திரிகைக்கு முதலில் கிடைத்துவிடும் செய்தி ; ஒரு பத்திரிகை மட்டுமே முந்திக்கொண்டு சேகரித்து பிற பத்திரிகைகளுக்கு அச்செய்தி தெரியாததால் அவை அச்செய்தியை வெளியிடாமல் இருக்கும்போது வெளியிடும் செய்தி.

Screen : (பிளாக் செய்முறைத் தகடு) பிளாக் செய்யப் பயன்படும் ஒருவகைத் தகடு. இதில் ஒரு சதுர அங்குலத்தில் பல எண்ணிக்கையில் புள்ளிகள் இருக்கும். இதன்மூலம் வெளிப்படும் வெளிச்சம் காரீயத் (zinc) தகட்டில் பதிவாகும். படத்தில் உள்ள கறுப்பு வெள்ளைகளுக்குத் தகுந்தபடி இந்தப் புள்ளிகள் மூலம் வெளிப்படும் வெளிச்சம் தகட்டில் பட்டு படம் அதில் பதியும். புள்ளிகளின் எண்ணிக்கை கூடக் கூடப் படம் மிகத் தெளிவாகப் பதியும்.

Script : 1. (கையெழுத்து அச்சுமுகம்), 2. (ஒளிபரப்பு நிகழ்ச்சி). 1) கையெழுத்துக்களை அப்படியே ஒத்திருக்கும் பாணியுடைய ஒருவகை அடிப்படை எழுத்துக்கள். 2) குறிப் பிட்ட நிகழ்ச்சி ஒலிபரப் பப்பட வேண்டிய முறை குறித்த எழுத்தறிக்கை. வானொலி, தொலைக் காட்சிகளுக்கென நிகழ்ச்சி தயாரிக் கப்பட்ட பின் அதன் அடிப்படையில் எழுதப்பட்ட எழுத்துப்படிவம். அதாவது ஒலிபரப்பப்படப் போகும் இறுதி வடிவம். இதிலிருந்து எதையும் நீக்குவதற் கில்லை. ஒத்திகை பார்க்கப் படுவதற்குப் பயன்படுத்தப்படும் எழுத்தறிக்கை நடிகர்களின் உரையாடல் வரிகள் மற்றும் சில அடிப்படை நடிப்புச் செய்கைகள் முதலியவற்றை உள்ளடக்கி இருக்கும். ஒரு காமிரா எழுத்துப் படிவம் இவற்றுடன் இயக்கம், தொழில் நுட்பம், மேடைச் செய்திகள் போன்ற தயாரிப்புப் பணிகள் தொடர்பான குறிப்புக்களைக் கொண்டிருக்கும்.

Script selection : (நிகழ்ச்சி எழுத்தறிக்கைத் தெரிவு) வானொலி ஒலிபரப்புக்கு உகந்த நிகழ்ச்சி எழுத்தறிக்கைகளைத் தேர்ந்தெடுத்தல்.

Scrolling : (முன்-பின் இயக்கு வசதி) ஒரு காட்சிப்படங் காட்டிப் பகுதியில் (VDT) அதைப் பயன்படுத்துபவர் அதனைப் பின்னாகவோ முன்னாகவோ இயக்கி ஏற்கனவே என்ன அமைப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு உள்ள வசதி ஆகும். குறைந்த அளவு முன்-பின் இயக்கு வசதி என்பது திரையில் உள்ள

வரிகளின் எண்ணிக்கை அல்லது குறிப்பிட்டு நியமிக்கப்பட்ட அதிகபட்ச வரிகளை மட்டுமே திருப்பியோ முன்னாகவோ பார்த்துக்கொள்ளலாம் என்று வரையறைப்படுத்தப்பட்ட வசதி. முழு முன்-பின் இயக்கு வசதி என்பது பயன்படுத்துபவர் ஆரம்பித்த இடத் திற்கே திருப்பிப் பார்த்துக் கொள்ளும் வசதியையும் வரையறையின்றி எவ்வளவு வேண்டுமானாலும் முன் னாகப் பார்த்துக்கொள்ளும் வசதி யையும் குறிக்கும். Pinpoint scrolling என்பது இன்ன வரி என்று குறிப்பிட்ட வரியை முன்னாகவோ அல்லது பின்னாகவோ பார்த்துக்கொள்ளும் வசதி ஆகும்.

SECAM : (ஒளிப்பதிவு, ஒளிபரப்பு முறை) 'Sequence Area Memoir Colour Television System' என்பதன் சுருககம். PAL எனபது போல தொலைக் காட்சி நிகழ்ச்சி ஒளிபபதிவு மற்றும் ஒளிபரப்பு முறையாகும். (காண்க : PAL)

Secondary movements : (இரண்டாம் நிலை இயக்கங்கள்).

Second day story : (தொடர் செய்திக் கதை) முந்தைய நாள் வெளியான செய்தி தொடர்பாக அச்செய்தியின் புதிய வளர்ச்சியாக மறுநாளும் வரும செய்திககதை. (பார்க்க : follow up story)

Second front page : (இரண்டாம் முதல் பக்கம்) இரணடாம் பகுதியின் அல்லது இரண்டாமபகுதி என்று பெயரிடப்பட்டு உட்பக்கத்திலே இடம்பெறும் பகுதியின் முதல் பக்கம். இவ்விரண்டாம் பகுதி அதிகச் செய்திப் பகுதிகளைப் கொண்டிருப்பதோடு முழுமையும் செய்திப பகுதியாக அமையும்.

Sectional story: (பகுப்புச் செய்திக் கதை) கம்பி வழிச் செய்தியில் பல பகுதிகளாகப் பெறப்பட்ட செய்திக் கதை அல்லது தயாரிப்பு அறைக்குப் பல பகுதிகளாக அனுப்பப்பட்ட செய்திக் கதை. அதிவேகக் கம்பி வழிச் செய்தி கள் இவ்வாறு பல பகுதிகளாகச் செய்தி தருவதன் அவசியத்தை இப்போது குறைத்துவிட்டன.

See copy : (எழுத்துப் படியைப் பார்க்க) தயாரிப்பு அறையில் உள்ளவருக்கு ஒரு செய்திக் கதையை எழுத்துப்படியில் காட்டியுள்ளபடி திருத்துக என்று இக்குறியீடு பொருள் உணர்த்தும்.

Segue : (மங்கு தோற்றம்) 'seg-way' என்று உச்சரிககபபடும். ஒன்று மறையும்போது மற்றொன்று தோன்றுதல். அது உரையாடலாகவோ ஒலியாகவோ இசையாகவோ இருக் கலாம். ஒரு ஒலியிலிருந்து மெல்ல மற்றொரு ஒலிக்கு மாறுதல்.

Selecting topics/guests : (நிகழ்ச்சி விபரங்கள் தெரிந்தெடுத்தல்) பேச்சு நிகழ்ச்சித் தயாரிப்பில் மூன்றாம் நிலை இது. நேயர்களின் தேவையைத் தீர்மானிக்க முடியாதவரை தலைப்பு, பேச்சு முதலியவற்றைத் தீர்மானிக்க முடியாது. நம்மால் 'ஏன் இந்த குறிப் பிட்ட தலைப்பைத் தேர்ந்தெடுத்தோம் ; இவரது விளக்கம் எந்த அளவில் தேவை' என்று விளக்கமாகக் கூறப்பட முடியவேண்டும் நிகழ்ச்சி தயாரிப் பாளரால உள்ளூர் சமபந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பான தலைப்பு தேர்நதெடுக்கப்படுதல் சிறப்புடைத்து.

Selective exposure : (தெரிந்தெடு பெறு முறை) தனி மனிதர்கள் தமக்கு ஏற்கனவே உள்ள ஆர்வம், எண்ணம் காரணமாக அவை தொடர்பான வற்றையே விரும்பி வாசிக்கின்றனர்/ பார்க்கின்றனர். இதற்கேற்றபடி

அவர்களுக்கு எவற்றில் ஆர்வமில்லையோ எக்கருத்துக்களோடு உடன்பாடில்லையோ அவற்றை உள்ளடக்கிய கருத்துப் பரிமாற்றத்தைத் தவிர்க்கின்றனர். இவ்வாறு அவர்கள் சில அடிப்படைகளில் தெரிவு செய்து குறிப்பிட்டவற்றை வாசிப்பது/பார்ப்பது 'தெரிந்தெடு பெறு முறை' எனப்படும்.

Selective perception : (தெரிந்தெடு பொருள் கொள் முறை) தகவல்களைப் பெறும்போது தனிமனிதர்கள் தாங்கள் ஏற்கனவே கொண்டுள்ள கருததுக்களுக்கு ஒவ்வாத/ஆதரவளிக்காத கருத்துப் பரிமாற்றங்களைத் தவறாக உள்வாங்கிக் கொண்டு அக்கருத்துப் பரிமாற்றத் தகவல் பற்றி தவறாகக் கருத்து விளக்கம் கூறுகின்றனர். மேலும் தாங்கள் ஏற்கனவே கொண்டுள்ள கருத்துக்களுக்கு ஆதரவாகவே பொருள் கொள்கின்றனர். இத்திறமைக்குத் 'தெரிந்தெடு பொருள்கொள முறை' என்று பெயர்.

Selective retentions : (தெரிந்தெடு நிலைபேறுகள்) தான் உடனடியாக ஒத்துக்கொள்ளும் கருத்துக்களை மட்டும் நினைவில் வைத்துக் கொண்டும் தான் ஒத்துக்கொள்ள முடியாதவற்றை உடனடியாக மறந்து விடவும் தயாராக இருககும் தனிமனித மனப்போக்கு.

Self-cover : (சுய அட்டை) இதழின் ஒரு பகுதிக்குள்ளேயே மடித்து விடப்பட்டுள்ள ஒருபெரிய தாளின் ஒரு பகுதியை அட்டையாகக் கொண்டுள்ள ஓர் இதழ்.

Semantic noise : (பொருட் குழப்பம்) தகவல் தொடர்பியலில் கருத்துப் பரிமாறுபவர் வேறுபட்ட மொழியில பேசும்போது அல்லது அக்கருத்துப் பரிமாறறம் வேறுபாடு கொண்டிருக்கும போது அல்லது நேயர்களால் புரிந்து கொள்ள முடியாத வகையில் கருத்துப் பரிமாற்ற முறை அமையும்போது 'பொருட் குழப்பம்' வரலாம்.

Semi script : (பாதி எழுத்தறிக்கை) தயாரிக்கப்பட்ட எழுத்தறிக்கையில் பாதி மட்டுமே பயன்படுத்தப்படும் எழுத்தறிக்கை இவ்வகைப்படும். பேட்டியின்போது அவ்வறிக்கையின் முதற்பகுதி, இறுதிப்பகுதி பயன்படுத்தப் பட்டு இடையில் உள்ள பகுதிகள் நேரத்திற்கேற்பவும் சூழலுக்கேற்பவும் நபருககேறபவும் பேசபபடும் செய்திக் கேற்பவும் கேள்விகள் மாற்றப்பட்டுப பயன்படுத்தப்படலாம் எழுதிவைககப் பட்ட வடிவத்தை வைத்துக்கொண்டு பேட்டி அல்லது குழுக் கலந்துரையாடல் நிகழ்ச்சி தயாரிப்பது அல்லது நடத்துவது மிகவும் அரிது. பொதுவாக ஒரு பேட்டியை எழுத்து வடிவில் தயாரித்துக் கொள்வதும் அதை வாசிப்பது போலவே செய்வதும் செயற்கையாக இயல்பாக இல்லாததாக ஆகிவிடும். தொலைக்காட்சியில் எழுததறிக்கையை நிகழ்ச்சியின் போது பயன்படுத்துவது தீமை பயப்பதே ஏனெனில் ஒரு எழுத்தறிககையை நேயர்கள் பார்வையிலிருந்து மறைத்து வாசிக்க முடியாது. அப்படி வாசிப்பதால் நேயர்கள தொடர்பு குறைந்துவிடும். நேரடி ஒலி-ஒளிக் கூறாகப் (ad lib) பேட்டி நடத்த நல்ல அனுபவ முள்ளவராக இருக்க வேண்டும். முழுமையாக எழுத்தறிக்கை வழி ஓட்டியும் அதே நேரம் முழுமையாக நேரடியாகவும் நடத்தப்படும் பேட்டிக்குப் பாதி எழுததறிககைப் பேட்டி (semi scripted interview) அலலது திட்டமிடப்பட்ட பேட்டி (outlined interview) என்று பெயர். இமமுறையில் எழுதித் தயாரிக்கப்பட்ட வினாக்கள் பேட்டி காண்பவர் அல்லது நடுவர் கையில் இருக்கும். பேட்டி தருபவர் அல்லது கலந்துரையாடல் குழு

வினர் பதில் தருவதாகவும் அமைகிறது. இம்முறை ஓரளவிற்கு இயல்பு ஓட்டத்தைத் தந்து நிகழ்ச்சியை வளர்த்துச் செல்கிறது. இம்முறை முழுவதும் எழுதித் தயாரிக்கப்பட்ட ஆரம்பம், கேட்கப்பட வேண்டிய வினாக்கள், முழுவதும் எழுதித் தயாரிக்கப்பட்ட முடிவுரை முதலியவற்றைக் கொண்டிருக்கும்.

Send down ; send out : (அச்சுக் கோர்க்க அனுப்புக) எழுத்துப்படி மேசையிலிருந்து அச்சுக்கோர்ப்பு அறைக்கு ஒரு செய்திக் கதையை அனுப்புதல்.

Separate : (தனிச் செய்தி) ஒரு செய்திக் கதை அது தொடர்பான ஒன்றிலிருந்து தனியாக அமைத்துக் காட்டப்பட்டிருக்குமானால் அது தனிச் செய்தி ஆகும்.

Sep meg : (தனி காந்த அமைப்பு) ஒலி நாடா மீது ஒலியைப் பதிவு செய்வதற்காக உள்ள தனி காந்த அமைப்பு. ஒலி ஒரு பதிவுக் கருவி ஓட்டத்தினுள்ளும் அதே நேரத்திலேயே .·.பிலிமுடனும் தனியே பதிவு செய்யப்படுகிறது

Seque : (தொடர்ச்சி) வானொலியில் ஒன்றைத் தொடரும் மற்றொரு நிகழச்சி. குறிப்பாக இரண்டு இசை நிகழ்ச்சிகளின் குறிப்பு.

Series : (வரிசைகள்) 1) ஒரு தனி அச்சு முகத்தின் எல்லா வடிவங்கள். 2) குறிப்பிட்ட பகுதியின் கீழ் பல தொடர்ந்த நாட்களில் வெளிவரும் தொடர்புடைய செய்திக் கதைகள்.

Serif: (மேற்பொறுக்கின் எடை) ஒரு எழுத்தின் மையச் சாய்வுக்கு இணையாக ஓடும் சிறிய சாய்வு; சில எழுத்துக்களின் பாணியில் அமையும். குறிப்பாக ரோமன் எழுத்துக்களில் அமையும்.

Set : (அரங்க அமைப்பு) தொலைக் காட்சிக் காமிராவால் பார்க்கப்படக் கூடிய அளவில் ஒரு காட்சியில் உள்ள சூழல்கள். தேவைப்படும் விதத்தில் *அல்லது ஒத்திகை நிலையிலும் மாற்றிக்* கொள்ளலாம்.

Set and hold : (அச்சுக் கோர்த்து நிறுத்தி வை) 'அச்சுக் கோர்க்க' ; 'அச்சிடாது நிறுத்தி வைக்க' என்பது பொருள். 'set in type' &'hold for release' என்பதன் சுருக்கம்.

Setting in small types : (சிறிய எழுத்தில் அச்சுக் கோர்த்தல்) ஒரு செய்திக் கதையைச் சொல்வதற்குரிய இடத்தைக் குறைப்பதற்கு அதன் சொல்லைக் குறைக்காமல் உள்ள மற்றொரு வழி சிறிய எழுத்துக்களில் அச்செய்தியை மட்டும் அச்சுக் கோர்ப்பது. இவ்வகைச் செய்தியை 6 புள்ளி எழுத்தில் அச்சுக்கோர்ப்பது நன்று. ஒரு பிரிவினரை மட்டும் ஈர்க்கக்கூடிய செய்திகளை அதாவது எல்லாப் பொதுமக்களையும் ஈர்க்கும் செய்திமதிப்பைக் கொண்டிராத செய்திகளை இவ்வாறு வெளியிடலாம்.

Shading : (மாறுபட்ட சமன்நிலை)

Shank : (அச்சு உடல்) ஓர் அச்செழுத்தின் முக்கிய உடற்பகுதி அல்லது ஓர் அச்செழுத்தின் தண்டுப் பகுதி.

Sheet fed : (தாள் அச்சீடு) உருளைகளின் மீது அச்சிடுவதைவிட நேரடியாகத் தாளின் மீது அச்சிடும் அச்சு இயந்திரங்கள்.

Shirt tail : (சட்டை வால்) 'follow' என்பதற்கான கொச்சை வழக்கு.

Short : (சிறு செய்திக்கதை) ஒரு சிறிய, சுருக்கமான செய்திக்கதை.

Short dash : (சிறு இடைக்கோடு) Jim dash போன்றதே. (பார்க்க : Jim dash).

Shots : (படக் காட்சிகள்) படக்காட்சி என்றால் ஒரு காமிராவால் எவ்வித இடையீடுமின்றி எடுக்கப்பட்ட ஒரு தொடர்காட்சியைக் குறிக்கும். காமிரா நகர்வினால் அல்லது லென்ஸ் மாற்றத்தால் அல்லது ஒரு மாறுபட்ட செயல் பதிவு செய்யப்பட்டதால் சூழல் ஏதாவது ஒரு வகையில் மாற்றப் பட்டால் அது அதே படக்காட்சி அல்ல. அடுத்த படக்காட்சி ஆகும். ஒரு தொடர்ச்சி யைக் காட்டுவதற்கோ அல்லது நேயர்களின் மனதில் ஒரு உளவியல் தாக்கத்தை உண்டுபண்ணவோ நிகழ்ச்சி எழுதுவோர் ஒரு குறிப்பிட்ட பொருளைச் சித்திரம்போல் காட்ட வேண்டியதன் அவசியத்தை எழுத்துப் படிவத்தில் குறிப்பிட்டு எழுத வேண்டியிருக்கிறது. அருகாமைக் காட்சியிலிருந்து நடுப்படக் காட்சி ஆகி பின்னர் தொலைவுப் படக்காட்சி ஆதல் ; நடுத்தர தொலைவுக் காட்சி மற்றும் வெகு அருகாமைக் காட்சி என்பன வாக வரிசைமுறை அமைதலும் இத்தகைய குறிப்புக்களில் அடங்கும். 'அருகாமை', 'நடு', 'தொலைவு', 'முழுமை' ஆகிய படக் காட்சிகள் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

Shot sheet : (படக்காட்சி விபரத்தாள்) தொலைக்காட்சி விளக்கப்பட நிகழ்ச்சிக்கு என எடுக்கப்பட்ட படக் காட்சிகள் பற்றிய விபரங்களைக் கொண்டது. படக் காட்சிகளின் அட்ட வணை, நீளம், அடிப்படைக் காட்சி, உள்ளடக்கம், பேட்டியாயின் பேட்டி தந்தவர் அளித்த பேட்டியின் சாரம் போன்றவை குறிக்கப்பட்டிருக்கும்.

Shoulder : (விளிம்பு) ஓர் அச்சு எழுத்தின் ஒரு பகுதியாகிய அச்சு முகத்தின் மேற்பகுதியிலோ அல்லது கீழ்ப் பகுதியிலோ அமையும் அச்சாகாத பகுதி (non printing area).

SI: (நிலைய அடையாளம்) 'station identification' என்பதன் சுருக்கம். நிலையத்தை இனங்காட்டும் ஒரு கூறு. இன்ன நிலைய ஒலிபரப்பு என்பதை இக்கூறு விளக்கி நிற்கும்.

Side bar : (கூடுதல் செய்தி) முக்கியச் சம்பவம் குறித்த மையச் செய்திக் கதையின் தொடர்பானதும் அதே செய்திக்கதை குறித்துத் தரப்படுவது மான ஒரு தனி துண்டுக் குறிப்பு. இக்குறிப்பு செய்திக் கதையுடனோ அல்லது மையச் செய்திக் கதையின் கூடுதலாகவோ வழங்கப்படும்.

Side light : (பக்க விளக்கம்) முக்கியச் சம்பவம் குறித்த செய்திக்கதை. முக்கியச் சம்பவம் பற்றி அச்செய்தி கூடவே சேகரிக்கப்பட்ட பிற வித்தியாச மான செய்திகள், அது தொடர்பான செய்தி முடிவுகள், அச்செய்தியோடு தொடர்புடைய நபர்கள் பற்றிய செய்திகள் போன்றவை சேகரிக்கப் பட்டுப் பக்க விளக்கமாக அல்லது கூடு தல் விளக்கமாக அமையும்.

Side stitch : (பக்க இணைப்பு) ஓர் இதழின் பல பக்கங்கள் சில சில பகுதிகளாகச் (sections) சேர்த்து இணைக்கப்படும் வகையில் ஓர் அகலத்தில் ஓர இணைப்புப் பகுதியி லிருந்து 108 பாகம் அளவுக்குத் தள்ளி இணைப்பு ஊக்கு போட்டு இணைக்கும் பைண்டிங் முறை.

Signal : (சமிக்ஞைகள்) இணைந்து வரும் தொடர்ந்த செய்திகளைத் தெரிவிக்கும் மின்சக்தி.

Signature : 1. (நிகழ்ச்சித் தொடக்க அறிகுறி), 2. (பெயர் விளக்கம்). 1) தொடர் நிகழ்ச்சியாயின் ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட இசை, ஒலி, குரல்கள் கொண்டதாகத் தொடங்கினால் நேயர்கள் விரைவில்

நிகழ்ச்சி இன்னது என்று தெரிந்து கொள்வர். சான்றாக, 'மஹாபாரதம்' இந்தித் தொடர் தூர்தர்ஷனில் ஒளிபரப்பப்பட்டபோது வாரம்தோறும் அந்நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் அமைந்த இசையைச் சுட்டலாம். 2) விளம்பரத்தில் தரப்பட்டுள்ள விளம் பரதாரர் பெயர்.

Significance : (செய்தி முக்கியத் துவம்) செய்தியின் முக்கியத்துவத்தை உணர்த்த அவை தரப்பட்டுள்ள பக்கம் மற்றும் அவற்றின் தலைப்பு எவ்வளவு பெரிய எழுத்துக்களில் ஆக்கப் பட்டுள்ளது என்பதையும் பொறுத்து உணர்த்தப்படுகிறது. ஒளிபரப்பு சாதனங்கள் தலைப்புச் செய்தியில் அச்செய்திகளைக் குறிப்பதன் மூலம் உணர்த்துகின்றன.

Sign tune : (முகப்பு இசை) வானொலி ஒலிபரப்பில் ஒரு நிகழ்ச்சியை அடையாளம் காட்டும் நிகழ்ச்சி முகப்பு இசை. 'signature tune' என்பதன் சுருக்கம்.

Silhouette : (பட உருவப் பதிப்பு) ஒரு படத்தை அச்சிடும் முறைகளுள் இது ஒருவகை. இதன்படி ஒரு படத்தின் பின்னணிகள் அனைத்தும் நீக்கப்பட்டுப் படத்தில் உள்ள செய்திப் பொருளை (நபரை) மட்டும் அதன் வடிவிலேயே அச்சிட இயலும்.



Single system : (தனி அமைப்பு) ஒலிப்பதிவின் போது .'.பிலிமின் ஒரு விளிம்பில் இணைக்கப்பட்டுள்ள காந்த இயல்புடைய நாடாமீது ஒலியைப் பதிவுசெய்யும் அமைப்பு. 'commag' முறை என்றும் சொல்லப்படும்.

SITE : (எஸ்.ஐ.டி.இ) 'Satellite Instructional Television Experiment' என்பதன் சுருக்கம். செயற்கைக்கோள் வழி அறிவுபுகட்டும் தொலைக்காட்சிப் பரிசோதனைத் திட்டம் என்பது பொருள். இந்தியாவில் 1975ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் 1976ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வரை ஆறு மாநிலங்களில் உள்ள கிராமங் களுக்குக் கல்வி ஒளிபரப்பு செயற்கைக் கோள் வழித் தொலைக்காட்சித் திட்டத்தின் மூலம் சோதனை முயற்சி யாக நடத்தப்பட்டது.

Situationer : (விளக்கச் செய்திக் கதை) ஒரு குறிப்பிட்ட செய்தியின் சூழலை விளக்கும் ஒரு விளக்கச் செய்திக் கதை.

Sizing : (வடிவாக்கல்) ஒரு விளம்பரம், நிழற்படம் அல்லது பிறவற்றின் பரிமாணங்களைத் தீர்மானிக்கும் செயல்முறை.

Skeletonize : (சட்டகப்படுத்தல்) மிகச் சிறிய சில சொற்களை நீக்கிவிட்டு எழுத்துப்படியை முக்கியமான செய்தி களை மட்டும் கொண்டிருக்குமாறு குறைத்தல். இவ்வாறு குறைத்தல் தலைப்புக்கான இடம் உருவா வதற்கென மேற்கொள்ளப் படுகிறது.

Skin tone : (வண்ணக் கட்டுப்பாடு) தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கு பெறும் நபரின் நிறத்திற்கேற்றவாறு ஒளி அளவைக் கட்டுப்படுத்துவதைக் குறிப்பது.

Sky line : (மேல் வரி) ஒரு தலைமைத் தலைப்பைக் (banner) குறிப்பதற்குக் குறிப்பாக பெயர் பலகைக்கு மேலாக அமையும் தலைப்புக்கு இப்பெயர் வழங்கப்படு கிறது.

SL : (ஊமைப் படம்) ஒலி இல்லாத படம். Silent film என்பதன் சுருக்கம்.

Slant : (ஒருபாற் சார்பு) 1) தகவல் களைத் துல்லியமாகவன்றிச் சார்பாகத் தருதல். 2) ஒரு செய்திக் கதையின் குறிப்பிட்ட ஒரு கோணத்தை மட்டுமே வலியுறுத்தல்.

Slave : (அடிமை) ஒரு தொலைக் காட்சி நிலையத்தின் கிளை நிலையம் (terminal) விரும்பியபடி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கான ஏற்பாடுகளுக்கு தாய் நிலையக் கருவிகளையே முற்றிலும் சாரந்திருக்கும் நிலையில் அக்கிளை நிலையம் இவ்வாறு குறிப்பிடப்படும்.

Slicks : (பள பள இதழ்கள்) வளவளப் பான தாள்களின் மீது அச்சிடப்படும் இதழ்களைக் குறிக்கப் பயன்படுத்தப் படும் கொச்சை வழக்கு.

Slip : (அச்சுப் பிரதித் தாள்) பிழை திருத்தப் பிரதி எடுக்கப் பயன்படும் பத்திரிகைக் காகிதம்.

Slip page : (பக்கப் பிரதித் தாள்) பத்திரிகையின் ஒரு முழுப் பக்கம். பக்க அமைப்பு (page make up) செய்யப்பட்ட நிலையில் எடுக்கப்படும் பிரதி.

Slot : 1. (தலைமை இருக்கை/ தலைமையாளர்), 2. (தகுதி நிலை). 1) பழைய மாதிரியான எழுத்துப்படி மேசையின் அதாவது குதிரை லாட வடிவிலான எழுத்துப்படி மேசையின் தலைமை ஆசிரியர் அமரும் இருக்கை. அவ்விருக்கையில் அமரும் எழுத்துப்படி மேசைத் தலைமையாளரும் இவ்வாறு அழைக்கப்படுவார். 2) ஓர் ஒலி/ஒளி நிகழ்ச்சி, செய்திக்கதை அல்லது ஒரு வணிக விளம்பரம் முதலியவற்றின் தகுதிநிலை.

Slug : (செய்தி வகைக் குறிப்பு) செய்தி அலுவலகத்தில் ஒவ்வொரு செய்திக் கதைக்கும் ஒரு பெயர் உண்டு. அப்பெயர்கள் slug எனப்படும். அடிக் கோடிட்ட அச்சு வரி. ஒரு செய்திக் கதையை இனங்காணும் பொருட்டு ஒவ்வொரு எழுத்துப்படியின் மீதும் வைக்கப்படும் இன்ன செய்திக்கதை என்ற குறிப்பு செய்திக் கதையை இன்ன வகைப்பட்டது என்று குறிக்கும். இக்குறிப்பு மிகச் சிறியதாக இருக்கும். 'guide', guideline' என்றும் அழைக்கப் படும். தொலைக்காட்சி போன்றவற்றில் படமாக்கப்பட்ட ஒவ்வொரு படக் கூறும் ஒரு செய்தி நிகழ்ச்சியில் பயன்படுத் தப்படு வதற்கெனத் தலைப்பிடப்படும். அத் தலைப்பு 'slug' எனப்படும். ஒவ்வொரு வானொலி/தொலைக் காட்சி/நாளிதழ் /சஞ்சிகை எழுத்துப் படியின் கூறும் அல்லது துண்டும் ஓரிரு சொற்களில் தலைப்பிடப்படும். அத்தலைப்பும் slug எனப்படும்.

Small caps : (சிறிய தலைப் பெழுத்துக் கள்) சாதாரண தலைப்பெழுத்துக் களை விட சிறிய தலைப்பெழுத்துக்கள். ஆனால் சிற்றெழுத்துக்களின் அளவி லேயே இருக்கும். மிக அரிதாகச் செய்தித் தாள்களில் பயன்படுத்தப்படும். SC என்று எழுத்துப் படியில் குறிப்பிடப் படும்.

SMATV : (எஸ்.எம்.ஏ.டி.வி.) Satellite Master Antenna Television என்பதன் சுருக்கம். செயற்கைக்கோள் தரும் படங்களைக் கேபிள் வழி ஒளிபரப்பு வதற்கு இன ஒளிபரப்புத் தட்டுக் களுக்கு (community dishes) அனுப்பும் அமைப்பு முறை.

Sneak in or out : (மெல்லத் தோன்றல் அல்லது நீங்கல்) மிக மெதுவாக அல்லது படிப்படியாக அறிமுகப் படுத்துதலும் அல்லது பின்னோக்கித் தள்ளுதல் அல்லது நீக்குதலும் ஆகும்.

Soap opera : (பகல் நிகழ்ச்சிக் கோவை) வானொலி, தொலைக் காட்சி' நிகழ்ச்சிகளில் வயது

வந்தோருக்கெனப் பகல் நேரங்களில் தரப்படும் நாடகத் தொடர்கள் ; நிகழ்ச்சிக் கோவைகள் ; இத்தகைய நிகழ்ச்சிகளை இல்லத் தலைவியரே அதிகம் பார்க்கின்றனர். வாழ்க்கைப் பிரச்சினைகள் இவற்றில் பேசப்படும். சான்று : புனியாத், ஜுனூன், சின்ன விஷயம், வண்ணக் கோலங்கள், சாந்தி, சுயஅபிமான் (சுயமரியாதை) ஆகியன.

Social categories : (சமுதாய வகை இனங்கள்) தனிமனிதர்களைப் பெருங் குழுக்களின் அடிப்படையில் வகைப் படுத்தலாம். ஒவ்வொரு குழுவிலும் அடங்குபவர்கள் சில பொது இயல்பு களை, நடைமுறைகளைக் கொண்டி ருப்பர். அப்பொது இயல்புகள் ஒரே வயது, கல்வி, பால், வருமானம், தொழில் ஆகியன. இவற்றிற்கேற்ப இவர்கள் தகவல் தொடர்பு நிகழ்ச்சிகளுள் ஒரே கருத்துக்களடங்கிய நிகழ்ச்சிகளைத் தெரிந்தெடுத்துப் பார்ப்பர். அந்நிகழ்ச்சி களுக்கேற்ப ஒரேபோல் இவர்தம் (reaction) எதிர்ச் செயல் அமையும்.

Socialization : (சமுதாயப்படுத்தல்) குழந்தைகளைச் சமுதாயப்படுத்தும் சாதனமாகத் தகவல் தொடர்பு சாதனங்கள் செயல்படுகின்றன என்று கூறுகின்றனர் ஆய்வாளர்கள், தகவல் தொடர்பு சாதனங்கள் வெளிப் படுத்தும் செய்திகள், நிகழ்ச்சிகள் அவை ஏற்படுத்தும் தாக்கம் முதலியவை ஒரு சமுதாயத்தின் பண்பாடு மற்றும் சூழ்நிலைகளின் விளைவே ஆகும். சிறு குழந்தைகளுக்கு மொழி யைப் போலவே தொலைக்காட்சியும் செய்தி பரிமாறுவதற்கும் மற்றும் சமூக நடத்தைக்குமான வழி காட்டியாக அமைகிறதுஎன்பார் புரூஸ் வாட்கின்ஸ். மேலும் அவர் காலம் செல்லச் செல்ல, சித்திரிப்புக்களின் அர்த்தங்கள் மிக முக்கியமானவை யாகின்றன : குழந்தைகள் சிக்கல் உடைய நிகழ்ச்சிகளைத் தெரிந் தெடுத்துப் பார்க்கின்றனர் ; குறிப்பாக சூழ்நிலைக்குட்பட்ட நகைச்சுவைப் படைப்புக்களும் பல்சுவை நிகழ்ச்சி களும் அவர்தம் ஆர்வத்தைப் பெறு கின்றன ; இறுதியாக வாலிபப் பருவத் துக்குள் அவர்கள் நுழையும்போது அவர்தம் தெரிவுகள் நாடகங்கள், செயல்நாடகங்கள் போன்ற பிரச்சினை மையமான நிகழ்ச்சிகளாகின்றன. தொலைக்காட்சி உலகைப் புரிந்து கொள்ளவும் வாழ்வின் உண்மைச் சம்பவங்களைப் புரிந்து கொள்ளவும் அவர்களுக்கு உதவுகிறது என்பார்.

Social relationship perspectives : (சமுதாய உறவு அமைவுகள்) தனி மனிதர்கள் தகவல் தொடர்பு சாதனங்களின் கருத்துக்களின் விளைவாக ஏற்பட்ட தாக்கத்தின் காரணமாகத் தம் நடத்தை மூலமாகத் தங்களைக் குறிப்பிட்ட குழுவைச் சார்ந்தவர்களாக உறுதிப்படுத்திக் கொள்ளலைக் குறிக்கும்.

Social responsibility theory : (சமுதாயப் பொறுப்புணர்ச்சிக் கோட் பாடு) அமெரிக்காவில் இருபதாம் நூற்றாண்டின் நடுவில் இக்கொள்கை கூறப்பட்டது. மக்கள் உரிமைக் கோட்பாட்டில் (Libertarian theory) இதன் அடிப்படை இருப்பதாக இக்கொள்கையாளர்கள் குறிப்பிட் டனர். ஆனால் இக்கொள்கை மக்கள் உரிமைக் கோட்பாட்டிற்கும் மேல் செல்கிறது. இக்கொள்கை பத்திரிகைச் சுதந்திரத்தைவிட பத்திரி கையின் சமுதாயத்தின் மீதான பொறுப்பை மிகுதியும் வலியுறுத்து கிறது. எனவே Libertarian Theory அய்விட இக்கொள்கை, கொள்கை யளவில் உயர்ந்ததாகக் காணப் படுகிறது. இக்கொள்கைச் சார்பாளர் கள் தங்களைத் தொடர்ந்து Libertar-ians என்றே கூறி வந்தனர். ஆனால் சமுதாயப் பொறுப்பை வலியுறுத்தாத

மக்கள் உரிமைக் கோட் பாட்டாளர் களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் கொண்டனர். இக்கொள்கைப்படி தற்காலச் சமுதாயத்தில் பத்திரிகையின் முக்கியத்துவம் கட்டாயம் தேவையாகின்றது. கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்தும் தகவல் தொடர்பு சாதனங்களால் சமுதாயப் பொறுப் புணர்ச்சி என்பது வற்புறுத்தப்படுகிறது. ஆசிரியர்களின் மனசாட்சி சமுதாயப் பொறுப்புணர்ச்சிக்கு எதிராகச் செயல்படுமானால் அவர் தன் வேலையிலிருந்து தானே நீக்கம் பெற வேண்டும் அல்லது சமுதாயப் பொறுப் புணர்ச்சி நோக்கினைச் செயல்படுத்த வேண்டும். தகவல் தொடர்பு சாதனங் கள் முரண்பாடுகளைக் கலந்துரை யாடல் மூலமும் மக்கள் கருத்துக்கள், நுகர்வோர் செயல்கள், தனி மனித உரிமைகள், முக்கியமான சமுதாய நலன் முதலியவற்றை முன்னேற்றம் பெறச்செய்யவும் பொறுப்பெடுத்துக் கொள்ளும் என்பது இக்கொள்கை.

Soft news : (சாதாரணச் செய்திகள் அல்லது மென்செய்திகள்) ஃப்ராங் லூதர் மோட் என்பவரது கருத்துப்படி வன் செய்திகள் அல்லது உடனடிச் செய்திகள் (hard news) என்பவை குறைந்த பரபரப்பூட்டும் பொதுமக்கள் பிரச்சினைகள், பொருளாதாரம், சமூகப் பிரச்சினைகள், அறிவியல் முதலியன குறித்து மிகுதியும் பகுத்தா ராயும் செய்திக் கதைகள் ஆகும். மென் செய்திகள் (soft news) என்பவை எந்த ஒரு ஆசிரியரும் தனது வாசகனுக்கு உடனடியாக ஆர்வத்தைத் தூண்டும் செய்திக்கதை இது ; தனது வாசகர்களுக்கு இது முக்கியமானது ; தனது பத்திரிகைக்கு முக்கியமானது என உணரும் செய்திக் கதைகள் ஆகும் என்பார். கட்டுரைகள் என்றழைக்கப்படும் செய்திக் கதைகள் போன்றன மென்செய்திகள். மற்ற செய்திக் கதைகள் போலவே தயாரிக்கப்படும். இவற்றில் சுயநிலை ஆக்கம், ஆர்வம், புதுமை முதலியன முக்கியத்துவம் வாய்ந்தனவாக இருக்கும். மென்செய்திகள் ஒரு குறிப்பிட்ட நேயர் கூட்டத்தை நோக்க மாகக் கொண்டு எழுதப்படும். சான்றாக, காலை நேர மெல்லோட்ட உடற்பயிற்சி செய்யும் நபர்கள் அணியும் காலணி பற்றிய செய்தி அத்தகையோரை மட்டுமே ஈர்க்கும். இத்தகைய செய்திக் கட்டுரைகள் பரந்த அளவு பொது மக்களைக் கவர்தல் அரிது. எனவே இத்தகையன வலைப்பிணைப்பு நிகழ்ச்சியில் தரப்படும். பொதுவாக அந்த நேரச் செய்தியாக இருத்தல் வேண்டும் என்பது மென்செய்திக் குரிய பொதுக்கூறு அல்ல. எப்போதோ உள்ள ஒரு சிற்பி அல்லது ஒரு மன்னன் பற்றிய கதையாக இருக்கலாம். நம் வாழ்வுச் சூழலோடு ஒத்துப்போதல் எவ்வாறு என்ற பொருளில் குறிப்பிட்ட பகுதியில் உள்ள துறை வல்லுநரைப் பேசச் சொல்லுதல் போல இக்கட்டுரை அமைக்கப்படும். இவ்வாறு பேசுவோர் அதிகமாக மக்களுக்குத் தெரிந்தவர் என்பதைவிட தனது பேச்சின் மூலம் மக்களை மேலும் கவனிக்கச் செய்யும் ஆர்வத்தைத் தூண்டுபவராக அமைய வேண்டும். குறிப்பிட்ட நபரும், சம்பவமும், பொருளும் வாசகனை ஈர்க்குமா என்று ஆராய்ந்து தொடங்க வேண்டும்.

Software-hardware : (மெல்லுறுப்பு-வல்லுறுப்பு) எந்த கணிப்பொறி அடிப்படையிலான அமைப்பையும் இயக்கும் கணிப்பொறி அடிப்படை உறுப்பு 'programming software' எனப்படும். கணிப்பொறியின் பகுதிகள் மற்றும் பிற மின்னணு இயந்திரங்களை 'hardware' என்ற சொல் குறிக்கும்.

Solid : (9 புள்ளி எழுத்து) 9 புள்ளி செய்தி வகைக் குறிப்புத் தலைப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள 9 புள்ளி எழுத்து.

Sound : (ஒலி)

Sound bite : (நிகழ்ச்சி விமரிசனம்) தொலைக்காட்சி நிலையத்தார் எந்த ஒரு நிகழ்ச்சி பற்றியும் தாம் எடுத்த தொலைக் காட்சிப் படத்தைக் குறிக்க 'footage shots' என்ற சொல்லையும் அந்நிகழ்ச்சியைப் பார்த்த நிருபர் அல்லாத மற்றொருவர் தரும் அந்நிகழ்ச்சி பற்றிய விளக்கத்தை 'sound bite' என்றும் குறிக்கின்றனர். நிகழ்ச்சி நடந்த இடத்தில் கேட்கப்படும் மற்ற ஒலிகள் 'natural' அல்லது 'raw sound' எனப்படுகின்றன. சான்றாக, 'தீப்பிடித்த ஒரு நிகழ்ச்சி' பற்றிய விளக்கப்படம் footage shot; அந்நிகழ்ச்சியைப் பார்த்தவர் கூற்று sound-bite; அங்கு மக்கள் அலறும் ஒலி raw sound ஆகும். நிகழ்ச்சி விமரிசனம் (sound-bite) நடந்த நிகழ்ச்சி பற்றிய செய்திக்குக் கூடுதல் செய்தி மதிப்பு, பாதிப்பு, கூறுபவரது சுயகருத்து முதலியவற்றைத் தந்து விளக்குகிறது. செய்திக் கதைக்குப் பல்சுவை சேர்க்கிறது. பெரிய செய்திக் கதைக்குப் பிற குரல்கள் படங்கள் முதலியவற்றைக் காட்டுவது நேயர்களின் கவனத்தைத் தக்கவைக்க உதவுகிறது. நிகழ்ச்சி விமரிசனம் 10 முதல் 25 செகண்டு வரை இருக்கலாம். 10 செகண்டுக்குக் குறைந்தால் அதற்குரிய பலன் இருக்காது. கூறுபவர் கருத்து நிருபர் பேசுவதை விட மக்களை ஈர்ப்பதாகவும் பெரிய அளவிலும் இருக்க வேண்டும். நிகழ்ச்சி விமர்சனத்தைத் தேர்ந்தெடுத்துச் செய்திக் கதையில் தகுந்த இடத்தில் பொருத்த வேண்டும்.

Sound effects : (ஒலிச் சிறப்புக்கள்) ஒலிப் பயன்பாடுகளை இரண்டு வகைப்படுத்தலாம். 1) பதிவு செய்யப்பட்டவை (recorded) 2) அந்தநேரம் நிகழ்பவை (recorded-live) சான்று : கதவை மூடுதல், திறத்தல். தேவையான பொழுது மட்டும் ஒலிச் சிறப்பு கொடுத்து எழுதுதல் வேண்டும். அனுபவமில்லாத எழுத்தாளர்கள் அதிகமான ஒலிச்சிறப்புக்கள் கொடுத்து எழுதிவிடுவர். தேவையான பொழுது மட்டும் பயன்படுத்தினால்தான் கேட்போர் மனதில் அதற்கான விளைவை ஏற்படுத்தும். உயர்ந்த ஸ்தாயியில் உயர்ந்த அளவில்-உச்சக்கட்டம் அல்லது பிற தொல்லைப்படுத்தும் கூறுகளுக்கு அடையாளமாக ; குறைந்த ஸ்தாயி, குறைந்த அளவில்-சில அமைதியான சூழலைக் குறிப்பதற்கு (soothing). ஒலிகள் சூழலை அல்லது இடத்தை விளக்கிக் காட்டப் பயன்படும். சான்று : அணிவகுப்பு நடையினரின் பாத ஒலிகள், உலோகக் கதவுகளின் கணீர் ஒலி, விசில் ஊதும் சத்தம் முதலியன ஒரு சிறைச் சூழலைக் காட்டும்). குறிப்பிட்ட ஒலியை வலியுறுத்துவதால் நேயர்களின் கவனத்தையும் உணர்வையும் கவரப் பயன்படும். (கொலைபடப் போகிறவன் ஒரு அறையில் இருக் கிறான் என்ற சூழலில் ஒரு பாதம் நடந்து வரும் ஒலி ; கதவைத் தட்டும் ஒலி ; ஒரு கதவு திறக்கப்படும் ஒலி நேயர்களது கவனத்தைக் கதவை நோக்கி ஈர்க்கும். தவிர்க்க முடியாது உடனடி கொலையை அங்கு நேயர்கள் மனம் எதிர்நோக்கும்). காலத்தைக் காட்டப் பயன்படும் (சேவல் கூவும் ஒலி அல்லது கடிகாரம் மணி அடித்தல்). மனநிலையைக் காட்டப் பயன்படும் (சிரிப்பொலி, அதிக சத்தமான இசை, கண்ணாடி தம்ளர்கள் உரசும் ஒலி முதலியன விருந்து நடைபெறும் சூழலில் உள்ளோர் மனநிலையைக் காட்டும்).

Sources of messages : (செய்தி தருநர்) 1) தாங்களே தயாரித்தல் (உள்ளூர் நிலையங்கள்), 2) ஒரே நேரத்தில் பல்வேறு நிலையங்களுக்குத் தங்கள் நிகழ்ச்சிகளைப் பகிரும் வலைப்பிணைப்பு அமைப்பாளர்கள். 3) வணிகநோக்குத் தயாரிப்பாளர் (syndication). கருத்து, வடிவம் என்ற இரண்டன் அடிப்படையில் வகைப்படுத்

தலாம். இவர்கள் தரும் செய்திகள் 1) விளம்பரங்கள் (வணிகநோக்கு விளம்பரங்கள், பொது விளம்பரங்கள்) 2) நிகழ்ச்சிகள் என்று அமையும்.

Sources of news : (செய்தி ஆதாரங்கள்) இதழ்களுக்குப் போலவே AP (Associated Press), UPI (United Press International) ஆகிய இரண்டும் ஒலிபரப்பிற்குச் செய்தி தருகின்றன. ஒலிபரப்பில் சுருக்கமாகவும் நேரடியாகக் கூறப்படுவனவாகவும் செய்திகள் எழுதப்பட வேண்டும். இதனுடன் தொலைக்காட்சிக்குச் செய்தி மட்டும் கூறப்படாமல் காட்சிகளும் இடம்பெறுகின்றன. அவை திரைப்படங்கள்,படவில்லைகள் (slides), புகைப்படங்கள், தந்திவழி நிழற்படங்கள் முதலியன ஆகும். சிறப்புச் செய்திகளைப் பல நிறுவனங்கள் குறிப்பாக படமாகவே தொலைக்காட்சிக்கு வழங்குகின்றன. சிறப்புச் செய்திச் சுருள் கம்பெனிகள், படக் கம்பெனிகள் ஒவ்வொரு தலைநகரிலும் தொலைக்காட்சி நிலையங்கள் உள்ள இடங்களில் செய்தித் தொகுப்புப் படச் சுருள்களையும் நிழற்படங்களையும் வழங்குகின்றன. வலைப்பிணைப்புக்கள் தங்களுக்கென்றே தனியாகச் செய்தி சேகரிக்கும் நிருபர் குழுக்களைக் கொண்டுள்ளன. சான்றாக கொலம்பியா ஒளிபரப்பு அமைப்பு சிறப்பான செய்திப் படப் பிரிவைக் கொண்டு இயங்குகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் செய்திகளை வழங்குகிறது. எல்லாத் தொலைக் காட்சி நிலையங்களும் ஒரு தனி தந்திச் செய்திப் பணியைக் கொண்டுள்ளன. சிறு நிலையங்கள் கூட உடனடியாக நகரச் செய்தி நிறுவனங்களிலிருந்து உள்ளூர்ச் செய்திகளை நிழற்படங்கள் அல்லது பொதுமக்கள் யாரிடமாவது இருந்தோ பெறுகின்றன. சிறப்புச் செய்திகளை உள்ளூர்ச் செய்திப் பத்திரிகைகளிலிருந்து பெறுகின்றன. தனது நிருபர்கள் கொண்டுவந்த செய்திக் கதைகள் கிடைத்துள்ள காட்சிப் படங்களுக்கேற்ப எழுதப்படும். பெரிய நிலையங்களில் செய்தி எழுதுவோரால் செய்தி உருவாகிறது. பொதுவாக இப்பணி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் அல்லது செய்தி அறிவிப்பாளரைச் சாரும். teletype, local sources மூலமாகக் கிடைக்கும் செய்தி தயாரிப்பாளர் அல்லது ஆசிரியரால் தொகுக்கப்படுகிறது. சிறிய நிலையங்களில் விளக்கஉரை ஒலிபரப்பாளர் இப்பணியைச் செய்வார். அறிவிப்பாளர் தனது உருவம், சொற்கள், நிலையக் கொள்கைகள் முதலியவற்றோடு தான் வாசிக்கும் செய்தி இணைந்து செல்கிறதா என்று உறுதிப்படுத்த வேண்டும். குறிப்பிட்ட நேரத்திற்குள் செய்தியின் அளவு பொருந்த வேண்டும்.

Soviet communist theory : (சோவியத் கம்யூனிசக் கோட்பாடு) ஆள்வோர் உரிமைக் கோட்பாட்டின் (authoritarian philosophy) விரிவு இது. சோவியத் பகுதிகளின் நோக்கங்களை மேலும் முன்னேற்ற அதன் தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ளுதல் இக்கொள்கையின் செயல் ஆகும். கம்யூனிசக் கொள்கையுடன் சேர்ந்த இக்கொள்கையும் இந்நூற்றாண்டின் முதல் 25 ஆண்டுகளில் எழுந்தது. இதனை உருவாக்கியவர் கார்ல் மார்க்ஸ். இவரது கருத்துப்படி தகவல் தொடர்பு சாதனங்கள் ஒரு சமவுடைமைச் சமுதாயம் எனப்படும். சமவுடைமைச் சமுதாயத்தை விரிவுபடுத்துதலும் ஆழமாக்குதலும் தகவல் தொடர்பு சாதனங்களின் பணியாதல் வேண்டும். தகவல் தொடர்பு சாதனங்கள் இக்கொள்கையின்படி, அரசின் கருவிகள் மற்றும் மாநிலத்தின் ஒன்றிணைக்கும் பகுதிகள் ஆகும். அவை மாநிலத்தின் சொந்தம் : அவை மாநிலத்தால் இயக்கப்படும். கம்யூனிஸ்ட் பார்ட்டி, மற்றும் அதன் நிறுவனங்களால் அவை நெறிப்படுத்தப்படும்.

திறனாய்வு செய்யும் உரிமை தகவல் தொடர்பு சாதனங்களுக்கு உண்டு. நோக்கங்களைச் சென்றடைவதில் ஏற்பட்ட பின்னடைவைத் திறனாய்வு செய்யலாம். ஆனால் கம்யூனிஸ அடிப்படைக் கொள்கையைத் திறனாய்வு செய்வதற்கு உரிமை இல்லை. இக்கொள்கையும் ஆள்வோர் உரிமைக் கோட்பாடு போலவே பொதுமக்கள் பெரிதும் அறியாமை உடையவர்கள் : அரசின் பொறுப்புக்களைப் பற்றிச் சிறிதும் கவனம் கொள்ளாதவர்கள் என்ற கருத்தின் அடிப்படையிலானது. இவ்வாறு, தகவல் தொடர்பு சாதனங்கள் அரசின் செயல்கள் மற்றும் அதன் தலைவர்களைப் பற்றி அதிகம் செய்தி தருதலைப் பற்றி கருத்தில் கொள்ள வேண்டிய அவசியமில்லை. தகவல் தொடர்பு சாதனங்கள் மாநிலம் மற்றும் கம்யூனிஸ்ட் பார்ட்டியின் தலைவர்கள் தீர்மானிப்பவற்றையே செய்ய வேண்டும். ரஷிய அச்சகங்கள் மற்றும் பிற ரஷியத் தகவல் தொடர்பு சாதனங்கள் 1917இல் ஏற்பட்ட புரட்சிக்குப் பின்னர் மார்க்ஸ், ஏங்கல்ஸ் மற்றும் லெனின் பொருத்திப் பார்த்த விதிகள் ஆகியவற்றின் அடிப்படைக் காரண காரியத் தொடர்பின்படி வருவித்த ஒரு கொள்கையோடு முற்றிலுமாக மறு ஒழுங்குபடுத்தப் பட்டன. இக்கொள்கையின் மிக முக்கியக் கருத்துக்கள் பின்வருமாறு : முதலில், உழைக்கும் வர்க்கம் அதன் வரையறைப்படி ஒரு சோஷலிஸச் சமுதாயத்தில் சில அதிகாரங்களைக் கொண்டிருக்கவும் பயன்படுத்தவும் உரிமை பெற்றிருப்பதுடன் அறிவு சார்ந்த வெளியீட்டு வழிகளைக் கட்டுப்படுத்தும் உரிமையும் பெற்றிருக்கிறது. இவ்வாறு எல்லா தகவல் தொடர்பு சாதனங்களும் உழைக்கும் வர்க்க நிறுவனங்களுக்கு முதன்மையாகக் கம்யூனிச பார்ட்டிக்குக் கட்டுப்பட்டவை.

இரண்டாவது, சோஷலிஸச் சமுதாயங்கள் வகுப்புவாதமற்ற சமுதாயத்தை உருவாக்க விளைவதனால் வகுப்பு முரண்பாடுகள் அற்றவை. எனவே அச்சகங்கள் இதன் தொடர்ச்சியாக அரசியல் முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்ட அமைப்புக்களைக் கொண்டிருத்தல் வேண்டும். பத்திரிகைகளில் வரும் செய்திகளில் ஒழுங்கான வேறுபாடுகளின் அளவு சோஷலிஸம் தொடர்புடைய சமுதாய அடிப்படை அரசியல் அமைப்புக்களுக்கு வரலாற்றுப் பிழைகளாகவும் திருகுகளாகவும் அபாயம் விளைவிப்பனவாகவும் கருதப்படும் கூறுகளுக்கு மற்றும் விவாதம் விரிவாக்கப் பெறக் கூடாது. மூன்றாவதாக, பத்திரிகைகள் சமுதாய உருவாக்கத்திலும் கம்யூனிஸத்தை நோக்கிய நகர்விலும் ஓர் உடன்பாடான செயல்பாடு கொண்டுள்ளன. எனவே பல்வேறு முக்கியச் செயற்பாடுகளைத் தகவல் தொடர்பு சாதனங்கள் பெறுகின்றன. அவை : சமுதாயப்படுத்தல், மறைமுகச் சமுதாயக் கட்டுப்பாடு, திட்டமிட்ட சமுதாய மற்றும் பொருளாதாரக் குறிக்கோள்களை நோக்கி இயக்குதல் முதலியன. குறிப்பாக இச்செயற்பாடுகள் சமுதாய மற்றும் பொருளாதார மாற்றத்தோடு தொடர்புடையவை. நான்காவதாக, மார்க்ஸியம் வரலாற்றின் குறிக்கோள் விதிகளை முன்னரே ஊகிப்பதால் குறிக்கோள் நடப்பையும் காட்டுகிறது. அதனைப் பத்திரிகைகள் பிரதிபலிக்க வேண்டும். எனவே தனிமனிதனது கருத்து விளக்கத்திற்கான வாய்ப்பை இது குறைக்கிறது. அதுமட்டுமல்ல குறிப்பிட்ட சில செய்திமதிப்புக்களையும் தந்துவிடுகிறது. இச்செய்தி மதிப்புக்கள் சுதந்திர பத்திரிகை அமைப்புக்கள் பின்பற்றும் முறைகளிலிருந்து மாறுபட்டிருக்கும். இறுதியாக, சோவியத் அரசின் பொதுக் கொள்கை தகவல் தொடர்பு சாதனங்கள் அரசின் மற்றும் அதன்

அங்கங்களின் முழுமையான கட்டுப் பாட்டிற்கு ஆட்பட்டதாகப் பல்வேறு நிலைகளில் மற்றும் அரசியல் வாழ்வின் பல் வேறு சாதனங்களுடன் ஒருங்கிணைந்ததாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறது. இத்தகைய வரன்முறைகளுக்குட்பட்டு தகவல் தொடர்பு சாதனங்கள் சுய ஒழுங்குள்ளதாகவும் குறிப்பிட்ட அளவு சுதந்திரத்துடன் மட்டுமே செயல்பட்டும் தொழில் நடத்தை சார்ந்த விதிமுறை களை வளர்க்கவும் பின்பற்றவும் இயலும் வகையிலும் வாசகர்கள்/நேயர்களின் தேவைக்கும் விருப்பத்திற்கும் ஏற்பப் பொறுப்பாகச் செயல்படும் விதத்திலும் நடந்துகொள்ள வேண்டும். இக்கொள் கைப்படி அரசுக்கு எதிராக வரும் செய்திகளைத் தகவல் தொடர்பு சாதனங்கள் முன் தணிக்கை செய்தல், பத்திரிகைகளே அவதூறுகளுக்கான தண்டனை தருதல் முதலியன நியாயப்படுத்தப்படுகின்றன. ஆள்வோர் உரிமைக் கோட்பாடு(authoritarian theory) மற்றும் கம்யூனிசக் கோட்பாடு இரண்டும் அப்போது உள்ள சமுதாய ஒழுங்கு குறித்த ஆதரிப்பைக் கட்டாய மாக வலியுறுத்தலில் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. வேறுபாடுகளும் உள்ளன.

Space bonds : (இடைவெளிக் கூறு) வரி வார்ப்பு இயந்திரத்தில் பயன்படுத்தப் படும் மெல்லிய கூறு. சொற்களுக்கு இடையில் இடைவெளி உண்டாக் கவும் வரிகளை ஒழுங்கு பண்ணவும் பயன்படும்.

Space out : (இடைவெளி ஏற்படுத்துக) 1) வார்த்தைகளுக்கு இடையே இடைவெளி ஏற்படுத்தல். 2) வரிகளுக்கு இடையில் இடைவெளி உண்டாக்குதல்.

Special audio programme : (வானொலிச் சிறப்பு நிகழ்ச்சிகள்) வானொலித் தனி நேயர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகள்.

Special lens prisms : (சிறப்பு ஆடிப்பட்டைகள்)

Special mikes : (வடிகட்டி ஒலிவாங்கி) தொலைபேசி வழிக் குரல் வருவது போல வருதல். எதிரொலி அரங்கு எதிரொலிக்கப்பட்ட ஒரு குரலின் வெவ்வேறு ஒலி அளவுகளைப் பிரதிபலிக்கிறது. அவை ஒரு நபர் ஒரு அறையில் பூட்டி வைக்கப்பட்டசூழலில் அமையும் ஒலி, விரிந்து பரந்த ஒரு தனி இடத்திலிருந்து வரும் ஒலி என பல நிலைகளில் அமையும்.

Specimen : (நகல்) 1) உண்மைப் பிரதியிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரி. 2) ரேடியோ அலைகள் மூலம் அல்லது மின்சார அலைகள் மூலம் ஓரிடத்திலி ருந்து மற்றோர் இடத்திற்குச் செய்திப் பத்திரிகையின் ஒருமுழுப் பக்கத்தை அனுப்பும் முறை. அந்தப் பிரதியிலிருந்து மீண்டும் பத்திரிகையை அச்சிடு வார்கள்.

Spike : (அழி) ஒரு செய்திக் கதையை அச்சிடுவதற்கு வேண்டாம் என அதை அழித்துவிடுதல் ; இவ்வாறு அழிக்கப் பட்ட எழுத்துப்படி வைக்கப்படும் ஒரு இடமும் இவ்வாறே அழைக்கப்படும்.

Split page layout : (பகுப்புப் பக்க வடிவமைப்பு) தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கென இரண்டாகப் பிரித்த பக்க அமைப்புத் திட்டம். ஒரு பக்கத்தையே இரண்டாகப் பிரித்து எழுதப்பட்ட அமைப்புத் திட்டம் பல நேர்முக அஞ்சல் நிகழ்ச்சிகளுக்குத் தொலைக்காட்சியில் பயன்படுத்தப்படு கிறது. சான்றாக செய்தி விளம்பரம், எளிய நிகழ்ச்சிகள் போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்படும். தொலைக்காட்சி ஒரே நேரத்தில் காட்சி, ஒலி ஆகிய இரு கூறுகளையும் காட்ட வேண்டு மாதலால் ஆடியோ, வீடியோ என்ற இரு தலைப்பிட்ட இரு அட்டவணைகளைக் கொண்டதாக இவ்வமைப்புத் திட்டம் அமையும். ஆடியோ பகுதியில்

நிகழ்ச்சியில் பங்கு கொள்பவருக்கான மேடை வழி காட்டிக் குறிப்புக்கள் அவர்கள் பேச வேண்டிய பகுதிகளுடன் சேர்த்துக் காட்டப்படும். வீடியோ பகுதி இயக்கு நரால் இயக்கப்பட வேண்டிய காமிரா குறிப்பு, தொழில் நுட்பக் குறிப்புக் களைக் கொண்டதாக அமையும். சான்றாக, புது ஹார்லிக்ஸ் விளம்பரத் தயாரிப்பின் டி.வி. பகுப்புப் பக்க வடிவமைப்பு பின்வருமாறு அமைகிறது எனலாம்.

வீடியோ	ஆடியோ
CU (Close up) ஹார்லிக்ஸ் கரைசலுக்குள் இருந்து ஹார்லிக்ஸ் பாட்டில் மேலெழும்புதல். New என்ற சொல் வடிவம் கீழிருந்து திரையின் இட ஓர மேற்புறத்திற்குச் செல்லுதல்.	ஆண்குரல் : (அறிவிப்புத் தொனி) அறிமுகப்படுத்துகிறோம் ... புது ஹார்லிக்ஸ்.
MS (Medium shot) இல்லத்தலைவி	இல்லத் தலைவி குரல் : அது இதுன்னு பார்த்துட்டு நான் ஹார்லிக்ஸ்க்கே வந்துட்டேன். ஏன்னா ....
XCU (Extreme close up)பாட்டிலின் மீது New Horlicks, Minerals, Proteins என்று மூன்று விதமான லேபிள்கள் அடுத்தடுத்து ஒவ்வொன்றாக தானாகவே ஒட்டச் செய்தல்	ஆண்குரல் (அறிவிப்புத்தொனி) புது ஹார்லிக்ஸ் அதிக மினரல் அதிக கார்போஹைடிரேட் அதிக ஊட்டச்சத்து.
MS இல்லத்தலைவி	இல்லத்தலைவி குரல் : அவருக்கு ஆபீஸ்ல டென்ஷன் குழந்தைகளுக்கு ஸ்கூல்ல. அவுங்க ஹெல்த்த நான் தானே கவனிச்சுக்கணும்
XCU இல்லத்தலைவி	டேஸ்டா ..... நல்லா இல்லேன்னா குழந்தைங்க குடிப்பாங்களா?
CU இல்லத்தலைவி	இப்பெல்லாம் கிச்சன்ல ஒரே கியூ. ஹார்லிக்ஸ் கியூ (சிரிப்புடன்).
XCU ஹார்லிக்ஸ் பாட்டிலும் ஒரு கப்பும் ; திரையின் இட ஓர மேற்புறத்தில் SB (Smith Clime Beecham) என்பது அமைதல்.	ஆண்குரல் : புது ஹார்லிக்ஸ் அதிக ஊட்டச்சத்து
	END

Spoils : (மோசமான அச்சு) மோசமாக அச்சிடப்பட்டிருக்கும் பக்கம். புத்தகத்தை பைண்டு செய் வதற்கு முன்பு நீக்கப்பட வேண்டிய பக்கம். பைண்டிங் செய்யும்போது நீக்கப்பட்ட பக்கங்கள்.

Spokespersons : (கருத்துக் கூறியவர்கள்) பொதுவாக ஒன்றனைப் பற்றிக் கருத்துக் கூறும் இவர் எதைப்பற்றிக் கருத்துக் கூறுகிறாரோ அந் நிறுவனத்தோடு அல்லது அப்பொருளோடு தொடர்புடை யவராக இருப்பார். தான் கூறும் ஒன்றனைப்பற்றி அதிகாரபூர்வ மாகவும் திட்டவட்டமாகவும் கூறும் தகுதி வாய்ந்தவராகக் குறிப்பிட்ட நிறுவனம்/ பொருள் இவற்றின் பிரதிநிதியாக இவர் இருப்பார். சான்றாக ஒரு கல்லூரியைப் பற்றிய செய்தியைக் கூறும் ஒருவர் அங்கு பணியாற்று பவராக நெருங்கிய தொடர்புடை யவராக இருப்பார்.

Sponsor : (நிகழ்ச்சியை வழங்கு வோர்) விளம்பரதாரர்கள், தகவல் தொடர்பு சாதன நிலையத்தார், வலைப் பிணைப்பு நிலையத்தார், பொதுப்பணி நிறுவனங்கள் என பலர் தொலைக் காட்சி நிலைய நிகழ்ச்சிகளை வழங்கு வோராக இருப்பர்.

Sponsored programme : (விளம்பர தாரர் வழங்கும் நிகழ்ச்சி)

Spot colour : (வண்ணப் பதிப்பு முறை) வண்ணத்திற்காகத் தனி பிளாக்குகள் தயாரிக்காமல், ஒரே பிளாக்கில் மெஷின் ஓடும்போதே தேவையான வண்ணம் பாய்ச்சப்பட்டு வண்ணப் படம் பதிவாகும். இதைக் 'கலர்டு சில்' என்றும் சொல்லலாம்.

Spot light : (பாயும் ஒளி) ஒரு சின்ன இடத்தின் மீது குறிப்பாகச் சென்று பளிச்சென விளக்குவது.

Spot news : (களச் செய்தி அல்லது உயிருள்ள முக்கியச் செய்தி) சம்பவம் நடந்த இடத்திலேயே கிடைத்த செய்தி. எனவே அப்போதுதான் உள்ள செய்தி யாகவும் உயிருள்ள செய்தியாகவும் இருக்கும். எதிர்பாராத சம்பவங் களைக் குறிக்கப் பொதுவாகப் பயன் படும்.

Spread : (பரப்புக) 1) ஒரு செய்திக் கதையையும் அதன் தொடர்பான செய்திக் கதைகளையும் படங்களையும் நன்றாகத் தெரியும் வகையில் நாளி தழில் பரப்பி வைத்தல் (display). 2) எந்த பெரிய அமைப்புத் திட்டமும் 'ஸ்பிரெட்' எனப்படும். குறிப்பாக ஒரு விரிவான அமைப்புத் திட்டம் (layout) இவ் வகைப்படும். 3) ஒரு உள் பக்கத்தின் மேலே பெரிய தலைப்புடன் இடம்பெறும் எந்த செய்திக் கதையும் 'ஸ்பிரட்' ஆகும்.

Staccato lead : (தொடர்பல் முகப்பு) பயன்பாட்டில் அதிகம் இல்லாத முகப்புச் செய்தி. 'staccato' என்ற சொல்லுக்குச் சட்டென்று, தொடர்பற்ற முறையில் அமைக்கப்பட்ட ஒரு இசைக்கூறு (musical note) என்று பொருள். ஒவ்வொரு இசைக் குறிப்புக்கும் ஒரு தனித்த ஒலி உண்டு. இந்த முகப்புச் செய்தி 'அவசரமான தொடர்ச்சியாக சட்டென்ற செயல் தேவை' என்று வலியுறுத்தல் தேவைப்படும்போது பயன் படுத்தப்படுகிறது.
Ex : 'Down Down' shouted demonstrators ; Police lathis cracked ; bursting teargas shells boomed ; Defant men yelled 'Burn the Police station'.

Standard graphics : (நிலையான வரைவு அட்டைகள்) தொலைக்காட்சி ஒளிபரப்பில் இடையிடையே அறிவிப்பு தொடர்பாகப் பயன்படுத்தப்படுவன.

Standard type : (பொது இயல்பு அச்செழுத்து) பொதுவான அகலத்தில் உள்ள அச்செழுத்து.

Stand by : (நகல் பிரதி) தொலைக் காட்சி ஒளிபரப்பில் ஒரு சம்பவத்தைப் பற்றி எழுதி வைத்திருந்த குறிப்பு ஒன்று பயன் படுத்தப்படுவதற்கென வைத் திருந்து, திரைப்படமாக்கப்பட்ட கூற்று எக்காரணம் கொண்டோ ஒருவேளை ஒளிபரப்பப்பட முடியாமல் போனால் நகல் பிரதி (stand by copy) வாசிக்கப் படும். எதற்கும் உதவும் என்று தயாரித்து வைக்கப்பட்டிருக்கும் மற்றொரு பிரதி இது.

Standing : (கையிருப்பு மூலப் பிரதி) ஒரு வெளியீட்டிலிருந்து மறு வெளி யீட்டிற்கென அச்சில் தக்கவைத்துக் கொண்ட எந்த செய்தியும் 'கையிருப்பு மூலப் பிரதி' எனப்படும்.

Standing matter : (தயார் நிலைச் செய்தி) தேவையை முன்னிட்டுச் சில செய்திகள் அச்சுக் கோர்க்கப்பட்டுப் பிழை திருத்தப்பட்டு, பக்கம் மேக்கப் செய்யும் வகையில் தயாராக வைக்கப் பட்டு இருக்கும்.

Stand microphone : (நிலைக்கோல் ஒலிவாங்கி/கோல் ஒலிவாங்கி)

Stand ups : (கள நேரடி நிருபர் காட்சி) ஒரு செய்திக் கதைக்குப் போதிய காட்சிப் படம் (visual content) கிடைக்கவில்லையெனில் அல்லது அப்பொழுதுதான் நடந்த செய்திக்குப் படம் வரவில்லையெனில் பயன் படுத்தப்படும் உத்தி stand ups ஆகும். நிருபர் சம்பவம் நடந்த கட்டிடத்தின் முன் நிற்பதாகக் காட்டப்பட்டு கட்டிடத்தினுள் நடைபெறும் அச்செயல் பற்றிய குறிப்புக்களை அவர் அங்கு நின்று கூறுவதாகக் காட்டப்படும். முழுச் செய்திக் கதைக்குமே அவர் அவ்வாறு நின்று கூறும் முறை கையாளப் படலாம். செய்தி பற்றி எந்தக் காட்சியும் நேயருக்குக் காட்டப்படாமல் நிருபரே கூறுவதாகக் காட்டுவது. கட்டிடத்தின் முன் நிருபர் பேசிக்கொண்டிருக்கும் போதே ஒரு படக்காட்சி கட்டிடத்தில் நேயர்கள் குறிப்புக்கள் எடுப்பதை அல்லது அந்நிகழ்ச்சியைக் கவனிப்பதைக் காட்டும் ; தொடர்பு டையோரை நிருபருடன் பேசச் சொல்லியும் சாட்சியாகப் பயன்படுத்துவதுண்டு.

Starting the action : (முன் நிகழ்ச்சி யில் ஆரம்பித்தல்) சம்பவம் நடந்து முடிந்த பின்னர் அதுபற்றி வாசகன் கேள்விப்படும் சூழலில் கையில் எடுத்து நாளிதழை வாசிக்கும்போது அலுப்புத் தட்டாமல் இருக்க அச்சம்பவத்தின் முன் நடந்த ஏதாவது ஒரு நிகழ்ச்சியில் எழுத ஆரம்பித்து சம்பவம் எவ்வாறு? என்ன சூழலில்? என்ற ஆர்வத்தை வாசக னிடம் தூண்டச் செய்யும் வகையில் பின்னர் சம்பவத்தை எழுதுவது : இங்கு சம்பவத்தை வாசகன் ஆர்வத்துடன் எங்கே என்று எதிர்நோக்குகிறான். இந்த உத்தி squinting leadஅய் எழுதுவதால் இடம்பெறுகிறது. மையப் பகுதியில் சம்பவம் சற்று பின்னர் கூறப்படும். அதாவது சம்பவம் கூறப்படப் போகிறது என்று வாசகன் உணர் வான்.

State editor : (மாநிலச் செய்தி ஆசிரியர்) மாநிலத்தின் பல்வேறு பகுதி களில் நடைபெறும் செய்திகளைச் சேகரிக்கும் நிருபர்களை மேற்பார்வை பார்க்கும் ஆசிரியர்.

Static : (நிலை மின்சக்திகள்) மின்னணு பெறு கருவிகளில் ஒலியை இடையூறு செய்யும் ஊறுவிளை விக்கும் மின்சக்திகள், இவை காற்று மண்டல 'மின் வகைகளினால் ஏற்படுபவை.

Status conferral : (சமூகத் தகுதி ஏற்றல்) இது தகவல் தொடர்பு சாதனங்களின் திறமை ஆகும். அதாவது தனி மனிதர்களுக்கு, அல்லது ஒரு நிறுவனத்திற்கு அல்லது ஒரு சமுதாயப் பிரச்சினைக்கு அல்லது ஒரு சமுதாய இயக்கத்திற்கு அதன் மீது மக்களின் கவனத்தை ஏற்படுத்துவதன் மூலம் அதற்குச் சமூகத் தகுதியை ஏற்றுதல்.

Stereotype : (மறுவார்ப்பு) உருக்கப்பட்ட ஒன்றிலிருந்து அல்லது உருக்கு அச்சின் ஒரு பக்கத்தின் வடிவத்திலிருந்து உருக்கி உருவாக்கப்பட்ட தகடு. நாளிதழ் பக்க வடிவத்தை ஒரு பாதி வடிவ சிலிண்டரின் உலோகத் தகட்டினுள் செலுத்தி ஒரு உருள் அச்சு இயந்திரத்திற்குள் பொருந்தும் வகையில் மாற்றுதல். அதன்பின்னர் ஒரு பக்கத்தின் 'வடிவம்' செய்யப்படுகிறது. அதன் பின் அதுவே வார்க்கப்படுகிறது.

Stet : (தக்கவை ; அழித்து விடாதே) 'அது இருக்கட்டும்' என்ற பொருளில் ஆசிரியர் அல்லது அச்சிடுபவர் தரும் குறிப்பு : 'ஒரு பிழை திருத்தம் தவறாக உள்ளது ; எழுத்துப் படியில் எப்படி எழுதப்பட்டிருக்கிறதோ அல்லது அச்சிடப்பட்டிருக்கிறதோ அப்படியே இருக்கட்டும்' என்பது பொருள்.

Stick : 1. (அச்சுப்பலகை), 2. (அளவை அலகு). 1) ஓர் உலோகத் தட்டு. அதில் அச்செழுத்துக்கள் வைக்கப்பட்டிருக்கும். கையால் எடுத்து அச்சுக் கோர்க்கும் வகையில் அது அச்செழுத்துக்களை வசதியாகக் கொண்டிருக்கும். அச்சுப் பலகை (composing stick) என்றும் கூறப்படும். ஒரு பக்கம் திறந்தநான்கு பக்கங்களைக் கொண்ட உலோகத் தட்டு. இவை பலவித அளவுடையவையாக இருக்கும். 2) நீளத்தைக் குறிப்பதற்கான ஒரு அலகு. இரண்டு 'இன்ஞ்ச்', நீளத்தில் உள்ள அச்சிட்ட பகுதியை அல்லது 100 முதல் 150 சொற்களுக்குள் உட்பட்டதாக இருக்கும் அளவைக் குறிக்கும். இது ஒரு 'stick ful' எனப்படும்.

Still : (தனி நிழற்படம்) தொலைக் காட்சியில் பயன்படுத்தப்படும் தனி புகைப்படம். பொதுவாக 8x10 அகல அளவில் வழவழப்பாக இருக்கும். மிகவும் திருப்திகரமானதாக இல்லாவிட்டாலும் தேவையான நேரங்களில் பயன்படுத்தவும் படுகிறது.

Stock music : (இருப்பு இசைத் தட்டு) வானொலி நிலையத்தில் உள்ள இசைத்தட்டு அல்லது ஒலிநாடாக்களின் நிலையம்.

Stock shots : (இருப்பில் உள்ள காட்சிகள்)

Stone : (இரும்பு மேசை) உருக்கு உலோகச் செய்தித் தயாரிப்பு அறைகளில், ஒரு இரும்பு மேற்புறம் உடைய மேசை இருக்கும். அதன்மீது பக்க வடிவங்கள் அமைக்கப்படும். 'stone' என்று அழைக்கப்படுவது எதனாலெனில் முன்பு அது மார்பிளாலான மேற்புறத்தைக் கொண்டதாய் இருந்தது.

Stone hand : (பக்கம் மேக் அப் செய்பவர்) பக்கம் மேக் அப் செய்பவரைக் குறிக்கும் சொல்.

Stone sub : (செய்திப் பிரிவாளர்) பக்கம் மேக்அப் செய்யும் இடத்திற்கு அருகிலேயே நின்று சில வழிமுறைகளைச் சொல்லும் செய்திப் பிரிவைச் சேர்ந்தவர். தேவையானால் செய்தியின் நீளத்தைக் குறைத்துக் கொடுப்பார். தலைப்பைக் குறைந்த புள்ளியில் அமைக்கச் சொல்வார்.

Story : (செய்திக் கதை) பத்திரிகையில் வெளிவரும் கடிதம், படங்களைத் தவிர மற்றவை செய்திக்கதை (Story)என்றே குறிப்பிடப்படும்.

Straight lead : (நேரடி முகப்பு) செய்தி முகப்பு வகைகளுள் ஒன்று. நேரடியாகச் செய்திகளை வாசகனைச் சடாரென கவரும் வகையில் கூறும் முகப்புச் செய்தி இது. பொதுவாக இந்த முகப்புச் செய்தியே நாளிதழ்களில் கையாளப்படுகிறது. என்ன நடந்தது என்பதைச் சிறப்பாகத் தொகுத்துச் சொல்லும்.

Straight news : (நேரடிச் செய்திகள்) நிகழ்ச்சியைப் பற்றி நேரில் கண்டதை மட்டும் செய்தியில் குறிப்பிடுவது. சொந்தக் கருத்தைக் கொண்டு விளக்காமல் அல்லது வார்த்தை ஜாலங்கள் செய்யாத முறையில் எழுதப்பட்ட செய்தி.

Straight sell : (நேரடி விற்பனை முறை) வணிக விளம்பரத்திற்குத் தலையான அமைபபுக்களாக 5 வகைகள் உள்ளன. அவற்றுள் நேரடி விற்பனை முறையும் ஒன்று. பொருளைப் பற்றி தெளிவான எளிமையான கூற்றினைக் கொண்டதாகவும் கூறுவோருக்கும் பொருளுக்கும் இடையே வலுவான தொடர்பு கொண்டதாகவும் (என் பொருள், என் கடை போன்ற சொற்கள் தவிர்க்கப் பட்டதாகவும்) நல்ல தெரிந்த நபர் விளக்கிச் சொல்வதாகவும் (testimonial & straight sell) உத்தி அமையுமாயின் அது இவ்வகைப்படும். இவ்வுத்தி நல்ல பாதிப்பை உண்டாக்கும். தொடரும் எளிமை ; பொருளும் எளிமையாக விளங்கக் கூடியது எழுதுவோர் ஒரு விளக்கத்தை வலியுறுத்துகிறார். பொருளின் உள்ள தன்மை, சிறப்புத் தன்மை, குறிபபுத் தன்மை விளக்கப படலாம்.

Streamer : (எட்டுப்பத்தித் தலைப்பு)

String : (சேர்ப்புக்கள்) 1) ஒரு நூலில் ஒட்டியோ அல்லது முனைக்கு முனை மட்டும் ஒட்டப்பட்டோ சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் நாளிதழ் குறிப்புக்கள் (clippings). 2) கொடுக்கப் பட்ட ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு தனி நிருபரின் மொத்த வேலையின் விளைவு.

Stringer : (பகுதி நேர நிருபர்) வெளியிடப்பட்ட ஒரு செய்திக் கதையின் இட அளவைப் பொறுத்துச் சம்பளம் தரப்படும் அவ்வப்போதைய நிருபர். செய்திகள் அல்லது தனிப்பட்ட நிகழ்ச்சிகள் ஆகியவற்றை வெளியிலிருந்து எழுதித் தருபவர்கள் இவர்கள்.

Style book : (கையேடு) ஒவ்வொரு பத்திரிகையும் தனது செய்தி வெளியீட்டு முறை தொடர்பாகப் பின்பற்றும் குறிப்பேடு. இத்தகைய கையேட்டினை ஒரு நாளிதழ் வைத்திருப்பது குறித்து செய்தி நிறுவனமாகிய APக்கு உடன்பாடான கருத்து உண்டு. அச்சிடப்பட்டுள்ள சொல் எழுதப்பட்டுள்ள முறை துல்லியமாகவும், நெறிமுறைக்குட்பட்டதாகவும் ஒழுங்காகவும் கண்ணுக்குக் குளுமை பயப்பதாகவும் இலக்கண விதிகளுக்கு ஒத்து வருவதாகவும் (conform) இருக்கவேண்டும். சான்றாக, ஆதித்தனாரின் 'நாள் தாள் கையேடு' தினத்தந்தி நாளிதழ் பின்பற்றும் அப்பத்திரிகைக் கையேட்டு நூல்.

Style sheet : (கையேடு) தம் பத்திரிகையில் ஒருசீர்மையும் நல்ல ரசனையும் குறிப்பிட்ட வெளியீட்டில் அல்லது செய்திப் பணியில் இருக்கும் வகையில் உதவும் அச்சு, சொற்களில் உள்ள எழுத்துக்கள், தடித்த எழுத்தில் தருதல், இலக்கணம் போன்ற பிற விதிகளை வெளிப்படுத்தும் நடைத்தாள்.

Sub head : (துணைத் தலைப்பு) பொதுவாக 1 வரியில் இருக்கும். தடித்த எழுத்துக்களில் உடற் பகுதியில் இருக்கும். சிறிய எழுத்துக்களில் அமைந்த நிறைந்த பத்தியின் ஒரேமாதிரியான அமைப்பைச் சற்று மாற்றுவதற்குப் பயன்படும். அதன் கீழ் உள்ள செய்திக் கதையைப் பற்றிய தலைப்பாய் இருக்கும்.

Sub urban copy : (புற நகர்ச் செய்திப் படி) நகரை விட்டு தொலைதூரப் பகுதியில் உள்ள செய்திகளை உள்ளடக்கிய செய்திப்படி.

Super : (மேற்பதிவு) FONT CHIRONக் குப் பதிலாக சில நிலையங்கள் இக் குறியீட்டைப் பயன்படுத்துகின்றன. வரைபடங்களைச் (graphics) செருகுவதற்குரிய ஒரு புதிய முறை. மேற்பதிவு என்பதைக் குறிக்கும் super imposition என்ற சொல்லின் சுருக்கம்.

Superimposition : (ஒன்றன் மீது ஒன்றான படப்பதிவு) தொலைக்காட்சி ஒளிபரப்பில் ஒரு உருவத்தின் மீது (image) மற்றொரு உருவத்தை இடம் பெறச் செய்வது இம்முறையினாலேயே. நனவோடை உத்தி தொடர்பான உத்திகளைப் பயன்படுத்தும் போது இம்முறைப் படப்பதிப்பு பயன்படுத்தப் படும். ஒரு படத்தின் மீது எழுத்துப் போடுவது, விளம்பரதாரர் பெயரைப் போடுவது முதலியவற்றிற்கு இம்முறை பயன்படுத்தப்படும். செய்தி வாசிப்பவரின் உருவத்தின் படக் காட்சியில் கீழ்ப் பகுதியில் அவர் பெயரை அவர்தம் உருவத்தின் மீதே வெளியிடுதல் இவ்வகை உத்தியாலேயே.

Superintending engineer : (கண்காணிப்புப் பொறியாளர்) சென்னை போன்ற உயர் ஒலிபரப்பு உள்ள நிலையங்களில் பணியாற்றும் உயர்நிலை கண்காணிப்புப் பொறியாளர்.

Surrogate : (கருத்து ஈர்ப்பு) நேயர்கள் சார்பில் பேட்டி நடத்துபவர், நடுநிலையாளர், எழுதுவோர் போன்றோர் பேட்டி தருபவரிடமிருந்து கருத்துக்களை ஈர்ப்பர். அவர்களது பணி-வினாக்கள் தயாரித்துச் செய்திகளைத் தானே பார்வையாளராக ஆகி பார்வையாளர்கள் கேட்க விரும்பும் கேள்விகளைக் கேட்டு தேவையான பதிலை வெளிக்கொணர்தல் ஆகும். சிறப்பான கருத்து வெளிக்கொணர்பவராக இருப்பதற்கு நேயர் பற்றி நல்ல அறிவும் அவர்களது பின்னணி, அவர்களுக்குள்ள அறிவு, அவர்கள் நிகழ்ச்சியிலிருந்து தெரிந்து கொள்ள விரும்பும் செய்திகள் பற்றித் தெரிந்து வைத்திருப்பவராகவும் இருக்க வேண்டும்.

Surveillance : (சுற்றுக் கண்காணிப்புச் செய்தி) சூழலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் பற்றி அறிக்கை செய்யும் கருத்துப் பரிமாற்றங்கள் இத்தகைய பெயரில் அழைக்கப்படுகின்றன. செய்தி ஒலிபரப்பு, வெப்ப நிலை அறிக்கை போன்ற செய்தி தரும் நிகழ்ச்சிகளில் கவனக் கண்காணிப்பினைக் காண முடியும்.

Sustaining announcement : (வணிக விளம்பரமல்லாத அறிவிப்பு) பொதுநல சேவைத் தலைப்புகளுக்கென அடிக்கடி கூறப்படும் அறிவிப்புக்கள் இத்தகையன. பாதுகாப்பு, சேமிப்பு, இராணுவப் பதவி உயர்வு, அறக்கட்டளை நிதி உயர்வு போன்றவை (highway safety, savings bonds, military recruitment, fund raising for charities) தொடர்பான அறிவிப்புக்கள் சான்று களாவன.

Sustaining programme : (வணிக விளம்பரமல்லாத நிகழ்ச்சிகள்) விளம்பரங்கள் ஏதும் இல்லாமல் சில வணிக நோக்கு நிலையங்கள் மற்றும் வலைப் பிணைப்பு மையங்களால்

பரப்பப்படும் நிகழ்ச்சிகள் இவ்வகையின. விளம்பரம் இல்லாமல் இருப்பதற்கான காரணங் கள் : 1) பங்கு கொள்ளல் விளம்பரதாரர்கள் நிலையத்திற்கு நிறைய கிடைக்காமல் போயிருக்கலாம். அல்லது நிகழ்ச்சி புதியதாக இருந்து நேயர்களைக் கவராமல் போயிருக் கலாம். எனவே விளம்பரதாரர்கள் அதில் விளம்பரம் தர முன்வராதிருக்கலாம். அல்லது விளம்பரகட்டணம் கூடியிருக் கலாம். 2) கருத்து வேறுபாடான கருத் துக்களைக் கொண்ட நிகழ்ச்சியாக இருக்கலாம். இந்நிகழ்ச்சியில் சேர்ந்தால் தன் பொருள் விற்காமல் போய்விடலாம் என அஞ்சியிருக்கலாம் (Potential advertisers). 3) நிலையம் அல்லது வலைப்பிணைப்பு இடையிடையே விளம்பரம் வந்தால் நிகழ்ச்சியின் (தலையங்கம், சில விமர்சனங்கள், கலை நிகழ்ச்சிகள், மத நிகழ்ச்சிகள்) உள்ளடக்கத்துடன் வாசகனுக்குத் தொடர்பு குறைந்துவிடும் என நினைக்கலாம்.

Swelled : (தடித்த கோடு) கோட்டின் ஒருவகை அமைப்பு. இரு முனை களிலும் அகலம் குறைந்தும் நடுவில் உள்ள பகுதி அகலமாகவும் இருக்கும் ரூல்.

Symbols : (குறியீடுகள்) செய்தி கூறுவோரிடமிருந்து தூண்டற்காரணி யாய் அவரால் வெளிப்படுத்தப்படுபவை குறியீடுகள் ஆகும். அக்குறியீடுகள் பொருளுடையவை. அப்பொருள் ஏறக்குறைய கூறுவோர், கேட்போர் ஆகிய இருவராலும் பகிர்ந்துகொள்ளப் படுகிறது. படங்கள், சொற்கள், உடல் அசைவுகள் போன்றவை இச் சமிக்ஞைகளின் வகைகள் ஆகும். கேட்கக் கூடிய சமிக்ஞைகள் மட்டும் வானொலி கருத்துப் பரிமாற்றத்தில் பயன்படுத்தப்படும். வானொலி நல்ல மிகச் சிறப்பான இசைச் சமிக்ஞை வகைகளையும் உடல் அசைவில்லாத செய்கையுடன் கூடியதல்லாத பேச்சுச் சமிக்ஞைகளையும் பயன்படுத்தும்.

Symposium Interview : (குழுப் பேட்டி) பேட்டி எடுப்பவர்கள் (interviewee) பலரை வைத்து தனியாகவோ குழுவாகவோ ஒரு கருத்து குறித்துப் பேட்டி எடுத்து எழுதப்பட்ட பேட்டிச் செய்தி ஆகும்.

Syndicate : (செய்திப் பட நிறுவனம்) எல்லா வகையான கட்டுரைச் செய்தி கள், விளக்கப் படங்கள் (feature material) போன்றவற்றை வாங்கி விற்கும் ஒரு நிறுவனம். அது ஒரு செய்தித் தாளோடோ அல்லது பல செய்தித் தாள்களுடனோ அல்லது தந்திச் சேவைகளுடனோ தொடர்பு கொண்டி ருக்கலாம் அல்லது தொடர்பு கொள்ளா மலும் இருக்கலாம்.

Syndication : (வணிக நோக்கு நிகழ்ச்சித் தயாரிப்பு நிலையங்கள்) இந்நிறுவனம் தேசிய நிகழ்ச்சிப் படைப்புக்களை உருவாக்கும். சிறந்த நிகழ்ச்சி தயாரிக்கும் வலைப்பிணைப்பு மைய நிலையத்திற்குப் (network) பதிலாக இவை பயன்படுத்தப்படும். பொதுவாக ஆர்வத்தைத் தூண்டும் வணிக நோக்கு நிறுவனங்களின் படைப்புக்களும் அந்நிறுவனத்தாரால் தனியாக தனி நபருக்கு ஒவ்வொரு சந்தையில் விற்கப்படும். அப்படைப்புக் கள் இருவகையின. 1) வணிக நோக்கு விற்பனைப் படைப்புகள் 2) ஒலிபரப்பு முடிந்த சிறந்த நிகழ்ச்சிப் படைப்புக்கள் (ஏற்கனவே ஒலிபரப்பப்பட்டவை, நகைச்சுவைப் படைப்புகள், தொடர் நாடகங்கள் முதலியன).

T

Tabloid : (குறு செய்தித் தாள் அல்லது சிறு பத்திரிகை) சிறிய பக்க வடிவத்தில் வழக்கமாக 4 அகன்ற பத்தி அல்லது 5 குறுகிய பத்திகளைக் கொண்டதாய் 16 முதல் 18 அங்குல உயரம் உள்ள ஒரு செய்தித்தாள். ஒரு பத்திரிகையின் பாதி அளவில் இருக்கும்.

Tabular sub routines : (அட்டவணை ஆக்க முறைகள்) கணிப்பொறி அடிப்படையிலான சொல் ஆக்க அமைப்பு. ஏற்கனவே டைப் போன்று அச்சடிக்கப்பட்டு உள்ளே கோர்க் கப்பட்ட செய்திகளை உடனே தயாராக அட்டவணை வடிவத்தில் தர இவ்வமைப்பு பயன்படுத்தப்படும். தந்திப் பணிகள் இத்தகைய வாய்ப்புக்களை மார்க்கெட் நிலவரம் போன்றன தயாரிப்பதற்குப் பயன்படுத்துகின்றன.

Tabulated lead : (வகைப்படு முகப்பு) செய்தி முகப்பு வகைகளுள் ஒன்று. தேதி வரி இல்லாத செய்திகளுக்கு இந்த முகப்பு பயன்படுத்தப்படுகிறது. ஒரு செய்திக் கதை பல கோணங்கள் உடையதாக இருந்து பல்வேறு நிலைகளில் தோற்றம் பெற்றிருக்குமானால், பல நிருபர் களைக் கொண்டு சேகரிக்கப்பட்டி ருக்குமானால் இந்த முகப்புச் செய்தி விரும்பப்படுகிறது.
சான்று : கடந்த மூன்று ஆண்டு களாகத் தொடர்ந்து பருவமழை பொய்த்ததால் தமிழ்நாட்டின் பல தென் மாவட்டங்களில் பஞ்சம் நிலவுகிறது.

take : 1. (செய்திக்கதைப் பகுதி அல்லது எழுத்துப்படிவப் பகுதி), 2. (படக்காட்சி எடு). 1) ஒரு செய்திக் கதையின் தவணை. எழுத்துப்படியின் ஒரு பக்கம். எழுத்துப்படியின் ஒரு சிறு பகுதி. அது ஒரு செய்திக் கதையின் முழுமை அல்ல. ஒரு ஓடிக்கொண்டி ருக்கும் பகுதி ; செய்திக் கதையின் தயாரிப்பு அறைக்குச் சிறிது சிறிதாகக் கொடுக்கப்படுகிறது. இயந்திரங்கள் வழி இன்னும் அச்சுக் கோர்க்கப்படும் சூழலில் இம்முறை கையாளப்படுகிறது. 2) காட்சி எடுப்பு.

Talk back : (தொடர்புக் கருவி) வானொலி நிலைய அறை, கட்டுப் பாட்டு அறை ஆகிய இருபுறங் களிலுமிருந்து ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் சாதனம்.

Talking head : (பேசும் நபர்) தொலைக்காட்சியில் தோன்றும் உருவங்கள் எண்ணற்றவை. அவர் களுள் ஒருவகையினர் பேசும் நபர் (talking head) ஆவர். நேரடியாக நேயர்களிடம் பேசுபவர்கள் செய்தி சேகரிப்பாளர், விளம்பர அறிவிப்பாளர் கள், விரிவுரையாளர்கள், விளக்குபவர் கள் போன்றோர் ஆவர். இவர்களை நேரடியாகக் காட்டுவது ஆர்வ மூட்டாது. ஆயினும் நிகழ்ச்சி நடக்கும் இடத்தைப் படம் பிடிப்பதைவிட இவர் களைக் காட்டுவதற்கு ஆகும் செலவு குறைவு. இவ்வாறு பேசும் நபரைக் காட்டுவது குறைந்த தொகைச் செலவில் கிடைக்கும் ஒரு காட்சி உத்தி. சான்று : ஒரு நபர் விளக்குதல், விவரித்தல், பேட்டி, குழுக் கலந்துரையாடல் முதலியன. நன்கு பேசுபவராய், மதிப்புடையவராய் களத்தில் வைத்து அவர் பேசுவதாய் அமையும். களத்தில் ஒலியற்ற வண்ணம், காட்சிப் படப்பிடிப்புக்கள் மற்றும் உண்மைக் காட்சிகளைச் செய்தி போலப் பயன்படுத்துதல், உரையாடல்களைப் பயன்படுத்துதல்,

எதிரெதிர்ப்பட்ட பார்வைக் கோணங்களைப் பயன்படுத்துதல் முதலியன இக்காட்சியின் தன்மைகளுள் சில.

Talks : (உரைகள்) தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சி வகைகளுள் ஒன்று. ஈர்த்தல், பொழுதுபோக்கு, செய்தி அறிவித்தல்என மூன்று வகைப்படும். வானொலி, தொலைக் காட்சி இரண்டின் உள்ளடக்கத்தில் முக்கியமான ஒன்று பேச்சு அல்லது உரை. மற்றவகை நிகழ்ச்சிகளைத் தயாரிப் பதைவிட செலவு குறைந்தது. படைப்பாளிகள், தயாரிப்பாளர்கள் இவர்களால் பலவகை வேறுபாடுகள் வளர்ந்திருப்பது ஆச்சரியமில்லை. 3 வகைகள்: 1) நேரடிப் பேச்சு (the straight talk), 2) பேட்டி (the interview), 3) கலந்துரையாடல் நிகழ்ச்சி (the discussion programme). செய்தி ஒலிபரப்பு, விளக்கப்படம், அறிவுறுத்தும் நிகழ்ச்சிகள் போன்றவற்றில் பேச்சு என்பது இருப்பினும் பேச்சு என்பது முதன்மை உள்ளடக்கம் அல்ல. துணைமையே. ஆய்வு, எழுத்து, உற்பத்தி, பதிப்பித்தல் என்ற 4 தொடர்நிலைப் பணிகளைப் பேச்சு நிகழ்ச்சி கொண்டது. மத ஆராதனைகள், அரசியல் கூட்டம் போன்ற பேச்சு நிகழ்ச்சிகளில் ஈர்ப்பு என்பது இருக்க வேண்டிய ஒன்று. சான்றாக செஞ்சிலுவைச் சங்கத்தில் கலந்துகொள்ள ஊக்குவித்தல், நன்கொடை தர ஊக்குவித்தல், பங்குகொள்ள அழைத்தல் முதலியனவும், அரசியல் உரையை ஆர்வமாகக் கேட்பவர்கள் ஏற்கனவே அக்காட்சியின் மீது ஈடுபாடு கொண்டவர்கள் மீண்டும் மீண்டும் கேட்கச் செய்தலும் மதம் தொடர்பான கூட்டங்களில் குறித்த இலக்கு நேயர்களது உணர்ச்சியைத் தூண்டும் வண்ணம் பேச்சைத் தரப்படுத்தி அதற்கென்றே உரிய நடையமைப்புடன் சிறிய பிரசங்கமாக அமைத்தலும் ஆகும்.

பேட்டி, பேச்சு நிகழ்ச்சியின் அடிப்படை நோக்கத்தில் ஒரு பகுதியாவது பொழுதுபோக்கு என்பது உண்டு. மிகத் தெரிந்த நபர் பேட்டியில் பிரபல நபரின் வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்வதே நேயர்களின் நோக்கம். எனவே அதுவே முக்கிய முதன்மைப் பொருளாகும். பொழுது போக்கு-முதன்மை இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படும். கருத்து உரையில் செய்தியை வெளிக் கொணர்தல் முதன்மை. கருத்துப் பேட்டியில் அரசியலிலிருந்து வெளி நாட்டுச் செய்தி வரை அனைத்தும் கருத்தாகலாம். பேட்டி காணப்படுபவர் ஒரு துறையில் வல்லுநராக இருப்பார். சில சமயம் தெருவில் போபவரிடம் கூட கேட்கப்படலாம். அவர்களிடமிருந்து கருத்தை வரவழைத்து மக்களுக்குத் தருதல் நோக்கம். தனிநபர் சாதனைப் பேச்சு அல்லது அதுகுறித்த விளக்கப் படப் பேச்சில் பேட்டி கையாளப்படுவது வாடிக்கை. பேட்டி காணப்படுபவர் பிரபலமான நபர் அல்ல. ஆனால் மாறுபட்ட ஒன்றைச் செய்திருப்பவர். விலங்கு ஆய்வு நடத்தியவர் ; உலகம் சுற்றித் திரும்பி வந்தவர் போன்றவை. இங்கு புதுமை முக்கியமாகும். கருத்துப் பேட்டியில் குறிப்பிட்ட கருத்தைப் பரப்புவதற்குப் பேட்டி உத்தியைக் கையாண்டு கேள்வி பதில் முறையில் வாசகனை ஈர்க்கின்றனர். குழுப் பேட்டியில் பலர் கலந்துகொண்டு ஏதேனும் ஒரு தலைப்பு பற்றிப் பல கருத்துக்களைச் சொல்லிக் கலந்துரையாடல். இங்கு ஒரு பொருள் குறித்த தலைப்பு முக்கியமாகிறது. நேயர் கலந்துகொள்ளும் பேச்சு 'செய்திப் பேச்சு' என்ற பெயரில் வானொலி, தொலைக்காட்சியில் கையாளப்படுகிறது. குறிப்பிட்ட தலைப்பில் ஏதாவது ஒரு பகுதியை விருந்தினர் தேர்ந்தெடுத்துப் பேசுதல் உண்டு. தொலைபேசி மூலம் கேட்டு தொலைபேசி மூலமே பெற்ற பதில்களும் கருத்துரை

களும் நிகழ்ச்சியைக் கவனித்துக் கொண்டிருக்கும் நேயர்களுக்குத் தரப்படும். இவற்றுள் பல நிகழ்ச்சிகள் நேர்முக அஞ்சலாகச் செய்யப்படு கின்றன. செய்தி அல்லாத, விளக்கப்பட மல்லாத, நாடகம் அல்லாத, இசை அல்லாத, விளம்பரங்கள் அல்லாத வகைச் செய்திகள் பேச்சு அல்லது உரை நிகழ்ச்சி (talk programme) எனப்படும். பேட்டி, கலந்துரை யாடல், உரை, வினாடி வினா, நேயர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சி, பெயர் பெற்றவர்கள் குழுக் காட்சி (Celebrity panel) முதலியவற்றை உரை நிகழ்ச்சி என்கிறோம். பேச்சு என்பது முழுவதும் தயாரிக்கப்பட்டது. தயாரிக்கப்பட வேண்டும். பேட்டி கலந்துரையாடலில் ஏற்கனவே ஒரு திட்டம் (outline) வைக்கப்பட்டிருக்கும். ஏனெனில் இவை முழுவதும் முழு வடிவத்தில் எழுதித் தயாரிக்கப்பட முடியாது. ஏனெனில் கருத்துக்கள், உணர்வுகள் முதலியன பேட்டி தருபவர் அந்த நேரம் வெளிப்படுத்துவன. கலந்துகொள் வோர் துறை வல்லுநராக இல்லாத போது எழுதித் தயாரித்ததை மனப்பாடம் செய்வதோ, வாசிப்பதோ அவர் மிகக் கஷ்டப்பட்டு நிகழ்ச்சி தருவதாகச் செயற்கையாகத் தோன்றி விடும். உரை நிகழ்ச்சிக்கு எழுதுபவர் சிறிதாவதுமுன்கூட்டியே தயாரித்துக் கொள்ளவேண்டும்.

talk table : (பேச்சு மேடை) பேச்சு ஒலிபரப்பின் பேச்சாளர் அமரும் சுற்று மேடை.

Tally light : (அடையாள விளக்கு)

Tansen Music Festival : (தான்சென் இசை விழா) இசைமேதை தான்சென் நாளில் ஏற்பாடு செய்யப் படும் ஆண்டு விழா இசை நிகழ்ச்சிகள்.

Tape : (காந்த படிம ஒலி நாடா) காந்த படிமம் கொண்ட ஒலிப்பதிவுக்குரிய நாடா. பேப்பர் நாடா : பேப்பர் ரிப்பன் (நாடா) டெலிபிரிண்டரில் டைப் செய்யும் பொழுது இந்த டேப் நாடாவில் எழுத்துக்கள் சிறு சிறு துவாரங்களாகப் பதிவு ஆகும். இதைப் பிரிண்டரில் இணைக்கப்பட்டுள்ள மற்றொரு பகுதியில் செலுத்தினால் டைப் செய்யப்பட்ட பிரதி தானாகவே டைப் ஆகும். இப்படி எத்தனை முறை வேண்டுமானாலும் அதைப் பயன் படுத்தலாம். ஒருவர் ஒவ்வொரு முறையும் ஒரே மேட்டரைத் திரும்பத் திரும்ப டைப் செய்ய வேண்டியதில்லை.

Tape recorders : (ஒலிப்பதிவுக் கருவி) பல்வேறு வானொலி நிலையங்கள் 3 வடிவான (வகையான) ஒலிப்பதிவுக் கருவிகள் உள்ளன. அவை : reel to reel, cartridge, cassette. சில நிலையங்கள் ஒரு முழுமையான பதிவுக் கருவிக்குப் பதில் பல அடுக்குகளை வரிசையாக உபயோகிக்கின்றனர். ஒரு பதிவு டெக் என்பது ஒரு பதிவுக் கருவி ஆகும். அது உள்ளுக்குள் கட்டப்பட்ட சக்தி வாய்ந்த ஒலிபெருக்கி சொந்தமாக இல்லாதது. அது மற்றொரு அமைப்புக்குள் செலுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் செய்யப்பட்டது. இப்படிப்பட்ட சூழலில் அது ஒரு கட்டுப்பாடு(console) ஆகும். $\frac{1}{4}$ இன்ஞ்ச நாடா நிலையாகத் திறந்த துளை பதிவு இயந்திரங்கள் உள்ளன. பல வழி இயந்திரங்கள் அன்றாடம் ஒளிபரப்பும் பணிக்கு என்பதைவிட பதிவு ஸ்டுடியோக் களுக்கு வடிவமைக்கப்பட்டவை. பல திறந்த துளை ப்திவுக் கருவிகள் கையில் தூக்கிச் செல்லக் கூடியவை. எளி தாகத் தூக்கிச் செல்லலாம். பல உயர்தரக் கருவிகள் நிலையான அலமாரிகளில் கட்டுப்பாட்டு அறையில் வைக்கப்பட்டிருக்கும். அவையும் நிலையான உருளும் கட்டுப்பாட்டுப் பலகைகளில் தயாரிப்புப் பணிக்கெனப் பொருத்தப்பட்டிருக்கும். பதிவுக் கருவியின் வேகம் ஒரு செகண்டுக்கு

15,16 இன்ஞ்ச் அளவுக்கு உரிய டேப் ஓட ஆரம்பிக்கும். அதன்பின் படிப்படி யாக இரட்டிக்கும். 1, 3, $7\frac{1}{2}$, 15, 30 என்று வேகம் அதிகரிக்க அதிகரிக்க தரமும் அதிகரிக்கும்.

Tapped programmes : (ஒலிப்பதி வான நிகழ்ச்சிகள்)

Target areas : (குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கான நிகழ்ச்சி எல்லைகள்)

Target audience : (இலக்கு நேயர்கள்) நிகழ்ச்சி வழங்குவோர் ஒரு நிகழ்ச்சி அல்லது விளம்பரம் தன் நோக்கம் நிறைவேறும் வகையில் யார் யாருக்குக் கிடைக்க வேண்டும் என்று இனங்காணுகிறாரோ அவரே இலக்கு நேயர்கள் எனப்படுவர். இவர்களைக் கணிக்கப் புள்ளி விவரக் குறிப்புக்கள் (demographic terms) உதவும்.
சான்று : சலவை சோப் : 20–35 வயதில் உள்ள பெண்கள் சிறு குழந்தைகள் உள்ள குடும்பங்களில் அதிகமாக வாங்குவர். (பால், வயது, குடும்பத்தினர் எண்ணிக்கை) ; கார் ஸ்டீரியோ : 17–30 வயது ஆடவர், பணமுடையவர், இசையில் ஆர்வம் உடையவர், கார் வைத் திருப்பவர்.

TCU : (மிகு அண்மை) Tight close up என்பதன் சுருக்கம்.

Team-spirit : (குழு உணர்வு)

Tear sheet : (கிழித்தெடு இயல்புத் தாள்) ஒரு நாளிதழிலிருந்து கிழிக்கப் பட்ட ஒரு முழுப் பக்கம் வாசகரால் பூர்த்தி செய்யப்பட்டு பகுதி ஆதார மாகக் குறிப்பிட்ட விளம்பரதாரருக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படும் வகையில் சில விளம்பரங்கள் தரப்படுவதுண்டு.

Teaser : (ஈர்ப்புக் குறிப்பு) 1) ஒரு நிகழ்ச்சியை முடிக்கும்போது நேயர் களை அந்நிகழ்ச்சியின் அடுத்த பகுதிக்குக் கவரும் வகையில் மற்றொரு நாளில் தொடரும் அதே நிகழ்ச்சிக்கு நேயர்களைப் பிடித்து வைக்கும் வகையில் சில குறிப்புகள் வைக்கப்படும். இது ஈர்ப்புக் குறிப்பு என அழைக்கப்படும். இரவு ஒலிபரப்பப் படும் நிகழ்ச்சிக்கு மதியம் கூட ஈர்ப்புக் குறிப்பு கூறப்படலாம். 2) சிறப்புக் கட்டுரைக்கு அல்லது விளக்கப் படங்களுக்குத் தலைப்பை இரு தன்மை உடையதாக ஆக்குவதுண்டு. தலைப்பை இரு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு முதல்பகுதி ஈர்ப்பு எனவும் 2-ஆம் பகுதியை விளக்கப் பகுதி என்றும் ஆக்குவதுண்டு. ஈர்ப்புக் குறிப்பு ஒருபோதும் செய்திக் கதையின் சாரத்தைச் சொல்லுவதில்லை. அவை ஆர்வத்தை ஊட்டுவதாக மட்டுமே அமையும். விளக்கப் பகுதி செய்திக் கதையின் பொருளை உடனடியாகத் தெரிவிக்கும். விளக்கப் படத்தின் சுழற்சி மற்றொரு கோணத் திலிருந்து அதாவது பிறர் பார்வை யிலிருந்து சொல்வதுபோல தலைப்பை அமைக்கும். இது வாசகனை அதை வாசிக்கத் தூண்டுவதாக அமையும். சட்டென்று தாக்கும் வகையிலோ அல்லது இயல்பற்ற முறையிலோ பிற தலைப்புக்களின் குறைந்த மாறுபட்ட வகையிலோ அமையும்.

Technical director : (இயந்திர நுட்பப் பொறியாளர்)

Technique : (உத்தி) வானொலி ஒலிபரப்பில் பயன்படுத்தும் ஸீக்-வே (seg-way), குறுக்கு மங்கு (cross fade), கலப்பு (blending), வெட்டு அல்லது மாற்று (cutting or switching), உள் மங்கு ; வெளிமங்கு (fade in & fade out) முதலியன முக்கிய உத்திகள் சாரந்த கலைச்சொற்கள். இவை ஒலி சார்ந்த உத்திகள். இசை, ஒலி முதலிய வற்றைக் கையாளும் உத்திகளைக் குறிக்கப் பலவிதமான கலைச்சொற்கள்

எழுதுவோரால் பயன்படுத்தப்படு கின்றன. அவை பின்வருமாறு :

1) Seg-way : (ஸீக்-வே) ஒரு ஒலியிருந்து மெல்ல மென்மையாக மற்றொரு ஒலிக்கு மாறுதல்.

2) Cross fade : (குறுக்கு மங்கு) ஒரு ஒலி நுழையும்போது மற்றொரு ஒலியும் நுழைதல். (முதலது ஒன்றை அடுத்து உடனே வந்துவிடுதல்)

3) blending : இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட ஒலிகள் இணைந்து ஒரே சமயத்தில் ஒலிபரப்பப்படுதல் 1) உரையாடல் + இசை, 2) உரையாடல் + ஒலிச் சிறப்பு, 3) ஒலிச்சிறப்பு + இசை, 4) இவை மூன்றும் கலந்தது என்றும் அமையும். தம்ளர்கள் உரசும் ஒலி, பின்னணியில் கோபமானபேச்சு, வாத்திய இசை முதலிய மூன்றும் கலத்தல் கலப்புக்குச் சான்று.

4) cutting or switching : (வெட்டு அல்லது மாற்று) திடீரென ஒரு ஒலியை வெட்டிவிட்டு உடனடியாக இன்னொன்றை நுழைத்தல்.

5) Fade in & fade out : (உள்மங்கு அல்லது கூட்டுதல், வெளிமங்கு அல்லது குறைத்தல்) ஒலி அளவைக் கூட்டுதல் அல்லது குறைத்தல். உரையாடலின் போது குறைத்து அதன்பின் சற்று கூட்டியும் (நிகழ்ச்சியினுள் அழைத்தல்-நிகழ்ச்சியிலிருந்து வெளியே செல்ல வைத்தல்) பயன்படுத்தல்.

Tele-club : (தொலைக்காட்சிக் குழு)

Telegraph editor : (தந்திச் செய்தி ஆசிரியர்) தந்திகள் மற்றும் தொலைபேசிச் செய்திகள் (wire news) முதலியவற்றைக் கையாளும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட இதழாளர். தம் நாளிதழின் அயல்நாட்டு மற்றும் உள்நாட்டுச் செய்திகளையும் மேற்பார்வை பார்க்கலாம். பெரிய நாளிதழ்களில் பணிகள் ஒரு மாநில ஆசிரியர், ஒரு கேபிள் ஆசிரியர், தந்தி ஆசிரியர்கள முதலியோரால் பகிர்ந்து கொள்ளப்படலாம்.

Tele news : (தொலைக்காட்சிச் செய்திகள்) தொலைக்காட்சியில் காட்டப்படும் செய்திப் படம், வணிக நோக்குப் படம், முன்பு தலைப்பிடப்பட்ட அன்றைய செய்திகள் முதலியன இவ்வகைப்படுவன.

Tele type : (தொலை அச்சு) வெகு விரைவு தந்திச் செய்திப் பணிகள் வருதற்கு முன்னர் தந்திச் செய்திகளைப் பெறுவதற்கு இருந்த தானியங்கி அச்சு இயந்திரம்.

Television : (தொலைக்காட்சி) மக்கள் தகவல் தொடர்பு, சாதனங்களுள் ஒன்று தொலைக்காட்சி. ஆங்கிலத்தில் 'டெலிவிஷன்' என்பதற்கு இணையாகத் தமிழில் கையாளப்படும் சொல். 1970களில் நியூயார்க்கில் ஒளிப்பதிவு செய்தல் ஆகிய செல்வாக்குள்ள போக்கு உருவாகி அது தொலைக்காட்சிக் காட்சிகளிலும் பயன்படுத்தப்பட்டது. திரைப்பட உத்திகள் தொலைக்காட்சி நாடகங்களிலும் கையாளப்பட்டன. தற்போது செல்வாக்குப் பெற்றுள்ள தகவல் தொடர்பு சாதனமாகத் தொலைக்காட்சி உள்ளது. இருப்பினும் திரைப்படத் தாக்கம் உண்டு. தொலைக்காட்சி உத்திகள் பல திரைப்பட உத்திகளாகவே உள்ளன. எழுதுபவர் ஒருவகை நிகழ்ச்சிக்கு ஒருவகை உத்தியையும் மற்றொரு வகை நிகழ்ச்சிக்கு மற்றொரு வகை உத்தியையும் கையாளுகிறார். தொலைக்காட்சி நிகழ்ச்சி எழுதுவோர் பின்னணி ஆக்கம், ஒளி, உடை, ஒப்பனை, பங்கு பெறுவோரின் நடிப்பு (அசைவு) முதலியன பற்றியாவது தெரிந்திருக்க வேண்டும். வானொலி போலவே ஒலி பற்றிய குறிப்புக்களையும் மனதில் கொண்டு எழுதவேண்டும். தொலைக்காட்சிச் சாதனத்தின் இயந்திர, மின்னணு பற்றிய அறிவாவது இவருக்கு இருக்க வேண்டும். அரங்கு,

காமிரா, கட்டுப்பாட்டு அறை, சிறப்பு ஒளி உத்திகள், தொகுத்தல், ஒலி முதலியன பற்றி அவர் அறிந்திருக்க வேண்டும்.

Television-story board : (**தொலைக் காட்சிக் கதைத் தொகுப்பு**) வணிக விளம்பரம் தயாரிப்போர் முடிந்தவரை காட்சி முழுமையையும் உள்ளடக் கத்தைக் காட்சி மூலம் வணிக விளம்பரத்தை அமைக்கும் நோக்கில் ஆரம்ப காலத்தில் பார்க்க விரும்புவர். இதற்காக ஒரு கதைத் தொகுப்பு பயன்படுத்தப்படுகிறது. கதைத் தொகுப்பு என்பது இன்னும் செம்மைப்படுத்தப்படாத வரைபடங் களின் தொடரை உள்ளடக்கியது. வரைபடங்களின் தொடர்-படச் செயல், காணும் காட்சியின் காட்சி விளைவு (optical effect), பின்னணி, படக் கருவிக் கோணம், எழுத்துக்கள் (உரையாடல் வசனம்), கேட்கப்போகும் ஒலி, இசை முதலியவற்றை விளக்கிக் காட்டும்.

Television studio : (**தொலைக் காட்சிப் படப்பிடிப்பு அரங்கு**) சாதனங் கள், அறை அளவு இவற்றைப் பொறுத்துத் தொலைக்காட்சி அரங்கு கள் வேறுபடுகின்றன. வலைப்பிணைப்பு நிலைய அரங்கில் (network studio) தொடர் நாடகங்கள் அடிக்கடி படமாக் கப்படும். எனவே அங்கு தொழில்நுட்ப வசதிகள் இருக்கும். பரந்த எல்லையை உள்ளடக்கிய அரங்கிற்குச் சில கிளை அரங்குகள் இருக்கும். அரங்கு வசதி களைப் பற்றி (நிறை, குறை) எழுதுபவர் அறிந்திருக்க வேண்டும். எழுதுவதற்கு முன்பாக குறிப்பாக எங்கு படப்பிடிப்பு வீடியோ டேப்பில் எடுக்கப்படப் போகிறதா அல்லது நேர்முக அஞ்சலாக நடப்பது அப்படியே காட்டப்படப் போகிறதா என்பதை அறிந்திருக்க வேண்டும். பெரிய நிறைய பின்னணி அமைப்பு போடுவதைப் பொருளாதார வசதியற்ற நிலையில் விலக்கலாம்.

Telling a story : (**விளம்பர வெளிப் பாடு**) ஒரு தனிக் கதை வரியை விரி வாக்கி அதில் விளம்பரப் பொருளும் இணைந்திருப்பதாகக் காட்டும் ஒரு முறை, விளம்பரத்தில் கையாளப்படு கிறது. இதுவும் பிரச்சினை தீர்க்கும் வெளிப்பாட்டு முறை, செய்து காட்டல் வெளிப்பாட்டு முறை போன்றே ஒரு பாத்திரம் தன்னைப் பற்றிச் சொல்லி, தனக்கும் பொருளுக்கும் உள்ள உறவினைச் சொல்லுதல் ஆகும்.
சான்று: 1) காட்ரேஜ் பீரோ ஏற்கனவே உள்ள துணிகளைவைக்கப் போதாமல் போதல்-புது குழந்தை வரவு-அப்பா தனி பீரோ வாங்கி வைத்திருத்தல்.
2) வி.அய்.பி. ஸூட்கேஸ்-ஒரு குடும்பத் தினர்-அன்றும் இன்றும் என்றென்றும் பயன்படுத்தப்படுதல்.

Tension : (**பதட்டம்**) ஒரு காட்சி 15 முதல் 16 படக் காட்சிகள் கொண்டதாக இருக்கலாம். ஒவ்வொரு படக்காட்சி யிலும் ஒரு புதுச் செய்தி இருக்க வேண்டும். ஒரு செய்தி முடிந்ததை உணர்த்த அடுத்த படக்காட்சியை அகன்ற படக்காட்சியாகத் தொடங்குதல் பதட்டத்தைக் குறைக்க வழிபண்ணும்.

Tertiary movement : (**மாற்ற நடமாட்டம்**)

Testimonial: (**பொருள் விளக்க விளம்பரம் அல்லது பொருள் விளக்கம்**) விளம்பர வெளிப்பாட்டு முறைகளுள் ஒருவகை. பொருளைப் பற்றி ஒருவர் விளக்கம் கூறும் முறையில் அமையும் விளம்பரம் பொதுவாக 3 நிலைகளில் அமைகிறது. அப்பொருளைப் பற்றி நன்கு அறிந்தவர் கூறுதல் (ஒரு ஓட்டுநர் காரைப் பற்றிச் சொல்லுதல்), பொருளுக்கும் கூறும் நபருக்கும் சம்பந்தம் இருக்கவேண்டிய அவசிய மில்லை என்ற நிலையில் ஒரு நபர் கூறுதல் (அவர் மக்களுக்கு அதிகம்

தெரிந்தவராக இருப்பார்-அவரோடு தொடர்புகொள்ளக் கூடிய மதிப்பும் முக்கியத்துவமும் உடையதாக பொருள் இருக்கும்), சாதாரண மனிதன் ஒருவன் கூறுதல். மூன்றாவது முறையே சிறந்தது. பொருளை இனங்காணும் நோக்கிலேயே திருப்திப்படுத்தும் கவர்ச்சி இதில் பேசப்படும். வீட்டில் உள்ள ஒரு சாதாரண ஆள் கூறுவதால் பொரு ளோடு கூறுபவரை நேயர் இணைத்துக் காணுகிறார். வீட்டில் உள்ள சாதாரண நபர் சிக்கலைத் தீர்க்கிறார். சரியாகப் பயன்படுத்தப் பட்டால் இம்முறை சிறப்பாக அமையும். ஒருபிரபல நபர்-நன்றாகத் தெரிந்த நபர்-சாதாரண நோக்கரைவிட சமுதாய அளவில், பொருளாதார நிலையில் சிறிதள வாவது உயர்ந்தவர் (celebrity) அப்பொருளைப் பற்றிச் சான்று கூறினால் உணர்ச்சிக் கூறுகளாகிய அந்தஸ்து, அதிகாரம், சிறந்த ரசனை முதலிய உணர்வு நேயர்கள் மனதில் தோன்றும்.

Think piece : (செய்திக் கணிப்பு) ஒரு பின்னணி அல்லது கருத்து பற்றிய கட்டுரைச் செய்திக் கணிப்பு ; செய்தி யைப் பற்றிய கணிப்பு.

Thin lead : (தின் லெட்) மெல்லிய லெட். ஒன்றரைப் புள்ளி அளவு கன முள்ள மெல்லிய ஈயத்துண்டு.

Thirty : (முப்பது) ஓர் எழுத்துப்படியின் இறுதியில் அதன் முடிவைக் குறிக்கும் பொருட்டு தரப்படும் குறியீடு. XXX போன்ற குறியீடுகள் மிகவும் பொதுவானவை. சில செய்தித்தாள் அலுவலகங்களில் '30' என்பது ஒரு செய்திச் சுற்றின் அல்லது அன்றைய அலுவலகப் பணி முடிவைக் குறிக்கிறது.

Throaway lead : (தாமத முகப்பு) ஒளிபரப்புச் செய்தி அறிக்கைகளில் இவ்வமைப்பில் செய்தியின் ஒரு சிறு பகுதி மட்டும் சொல்லப்பட்டு ஒரு எழுச்சியூட்டும் தொடர் அல்லது வினா கூறப்படும். அது நேயர்களைக் கவனிக்க வைக்கும். அவ்வினா முடிந்த பின் சில செகண்டுகள் அமைதி, அதன் பின்னர் செய்தி கூறப்படும். சிக்கலான செய்திக் கதைக்கு இத்தகைய முகப்பு கொடுக்கப்படக் கூடாது. தாமத முகப்பு (delayed lead) அல்லது ஏற்பு முகப்பு (set up lead) எனவும் அழைக்கப்படும். இந்த முகப்பு நேயர்களைக் கேலி பண்ணுவது போன்றதாகும். செய்தி ஒலி/ஒளிபரப்பில் சிறிது இடை வெளியைக் (pace) கையாள்வது சிறந்த உத்தி.

Throughout : (முழு ஆக்கம்) ஒரு அமைப்பின் மூலம் குறிப்பிட்ட ஒரு அளவு நேரத்தில் தயாராகும் செய்தி அளவு.

Tie-back : (முன் இணைப்பு) ஒரு செய்திக் கதையின் ஒரு பகுதி : முந்தைய சில சம்பவங்களோடு தன்னை இணைத்துக்கொள்ளும்.

Tie-in : (அக இணைப்பு) ஒரு செய்திக் கதையின் ஒரு பகுதி ; அது தன்னைப் பிற ஒன்றனோடு, குறிப்பாக மிக முக்கியச் செய்திக் கதையோடு இணைத்துக்கொள்ளும். உள்ளூர்ச் செய்திகள் பொதுவாக தேசியச் செய்திகளோடு இணைத்து எழுதப்படு வதுண்டு.

Tight : (நெருக்கம்) மிகவும் நிரம்பிய அதிகக் கூட்டமுடையது. அச்சு, பக்கங் கள், பகுதிகள், முழு வெளியீடு முதலிய வற்றின் வரிகளுக்குப் பொருந்தும்.

Tight cheif : (திறமையான துணை ஆசிரியர்) செய்தியில் தேவையற்ற பகுதிகளை நீக்குவதில் கைதேர்ந்த துணை ஆசிரியர்.

Tight close up : (மிகு அண்மைக் காட்சி)

Tight writing : (புனைவல் செய்தி எழுதுமுறை) செய்தியை மட்டுமே நேரடியாக எவ்விதப் புனைவுமின்றி, தேவையற்ற சொற்களின்றித் தர வேண்டும் என்ற தந்திப் பணியின் விருப்பம், புனைவற்ற இத்தகைய செய்தி எழுது முறைக்கு வழிவகுத் துள்ளது. மொத்தத்தில் செய்தித்தாள் வாசிப்பிற்கு அது ஒரு வரப்பிரசாதமாக அமைந் துள்ளது. புனைவல் செய்தி எழுதுமுறை எளிய தொடர்களின் ஓட்டத்தில் எவ்விதத் தடையும் இன்றி எழுதப்படுவது.

Tilt down: (கீழே சாய்) காமிரா அசைவு முறைகளுள் ஒன்று. காமிராவைக் கீழ்நோக்கிக் கொண்டுவர, ஒரே நிலை யிலிருந்து காட்சியை அதே பரப்பிலேயே கீழ்நோக்கி மாற்ற இத்தகைய காட்சி முறை உதவும்.

Tilt up : (மேலே நிமிர்த்து) காமிரா அசைவு முறைகளில ஒன்று. காமிரா வை மேலநோக்கிக் கொண்டுவர-ஒரே நிலையிலிருந்து காட்சியை அதே பரபபிலேயே மேல்நோக்கி மாற்ற இததகைய காடசி முறை உதவும

Time copy : (முக்கியச் செய்தி) எநத நேரத்திலும பதிப்பிக்க வேண்டிய செய்தி

Timeliness : (கால அண்மை) செய்திக் கூறுகளுள் ஒன்று முதன் முதலில் ஒரு செய்தி வெடிக்கும்போது அது முககியச் செயதி. இன்றைய செய்தியைவிட நாளை என்ன நடக்கப் போகிறது என்பதே முக்கியம். இருபத்து நான்கு மணி நேரத்திறகுள நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தருவது செய்திகளை முந்தித் தருவதை ஒவ்வொரு பத்திரிகையும் தம் தலையாய கடமையாகக கருதும்.

Timing adjustments : (நேரச் சரி செய்தல்கள்) ஒலி/ஒளி நிகழ்ச்சி முடிவோடு தொடர்புடையது. நிகழ்ச்சி முன் கூட்டியே ஒலி/ஒளிப் பதிவு செய்யப்பட வேண்டுமெனில் இறுதி நேரம் பதிப்பித்தலின் ஒரு பகுதியாகக் கணக்கிடப்பட வேண்டும். நேர்முக அஞ்சலுக்குச் சரியான நேரத்தில் முடிப்பதற்காகச் சில ஒத்துப்போகும் செயல்கள் இறுதிப் பகுதியில் செய்யப்பட வேண்டும். சிலவற்றை விட்டுவிடலாம் அல்லது தேவைப் பட்டால் சேர்க்கலாம். நிகழ்ச்சி நேரத்தைச் சரிப்படுத்தி அதற்குள் அமையுமாறு வைக்க நிகழ்ச்சியின் உடற் பகுதியையும் சரி செய்யலாம்.

Tip : (செய்தித் துளி) ஒரு செய்திக் கதைக்கு உள்ளே இழுத்துச் செல்லும் ஒரு செய்தித் துளி. அது செய்தி ஆசிரியர்களிடமிருந்தோ அல்லது வேறு எங்குமிருந்தோ தொடங்கலாம்.

Title page : (வலப்பக்கம்) 1) ஒரு பக்கத்தில்-வலது பக்கம் வருகின்ற பக்கங்கள் பொதுவாக முக்கியமான செய்திகள் விளம்பரங்கள், படங்கள் இடம்பெறும் பக்கம். 2) ஒரு புத்த கத்தில் அதன் தொடக்க வரிகள் வலப்பக்கத்திலேயே தொடங்கப்படும்.

Tone : (ஒலி அடையாளம்) வானொலி ஒலிபரப்பு தொடங்கும் முன்னர் ஒரு குறிப்பிட்ட ஒலியையே அடை யாளத்திற்காகத் தருவது.

Top : (செய்தி ஆரம்பம்) ஒரு செய்திக் கதையின் ஆரம்ப பாராக்கள். பத்திரிகை நிறுவனங்கள் குறிப்பாக இவற்றை "புதிய செய்தி ஆரம்பங் களுக்கு விடுக" என்ற ஒழுங்கு முறையிலேயே பயன்படுத்து கின்றன.

Top deck : (முதல் அடுக்கு) ஒரு செய்தித் தலைப்பின் முதன்மை மற்றும் மிக முக்கியப் பகுதி.

Top line : (மேல்வரி) கிடைத்தலைப்பு (banner) ஒன்றுக்கு மேற்பட்டு அமையுமாயின் முதலில் (உச்சியில்) எது உள்ளதோ அது.

Tr : 1. (இடம் மாற்றுக), 2. (சுழல் தட்டு மேசை). இடம் மாற்றுக என்ற பொருள்படும் பிழைதிருத்தக் குறிப்பு. transpose என்பதன் சுருக்கம். 2) சுழல்தட்டு மேசைக்கு (turn table) உரிய எழுத்துப் படிவக் குறியீடு.

Tracks & channels : (வழியும் அலை வரிசையும்) இரண்டுக்கும் முக்கிய வேறுபாடு உண்டு. ஒருஅலைவரிசை என்பது ஒலிவாங்கியிலிருந்து ஒலி பெருக்கி வரைக்கும் உள்ள தனியான முழுவதுமான இடைவழி ஆகும். ஒரு 'வழி' என்பது ஒரு டேப்பில் ஒரு அலைவரிசைச் செய்தியிலிருந்து பதிவு செய்யப்பட்ட செய்தி ஆகும். ஒரு உள்ளீட்டிலிருந்து ஒரு நேரத்தில் ஒரு 'பதிவு' தான் செய்யப்பட முடியும்.

Transcript : (ஒலிபெயர்த்தல்) ஒலிபரப்பின் போது ஒலிப்பதிவ செய்து அதனை எழுத்தால் எழுதுதல்.

Transcription : (ஒலிபெயர்ப்பு) ஓர் இசைத்தட்டையோ நாடாவையோ மறு ஒலிபரப்புக்காக வேண்டி உயர்நிலையில் ஒலிப்பதிவு செய்தல்.

Transmission problem : (ஒலிபரப்புச் சிக்கல்கள்) ஒலிபரப்பாகும் வேளையில் எதிர்ப்படும் சிக்கல்கள்.

Transmission quality : (நிகழ்ச்சி ஒலிபரப்புத் தரம்)

Transmitters : (ட்ரான்ஸ்மீட்டர்கள்) ட்ரான்ஸ்மீட்டர்கள் ட்யூப் வடிவிலோ அல்லது சிறியதாகவோ அல்லது இரண்டன் கலவை ஆகவோ இருக்கும். அவற்றின் மின்சக்தி மிகவும் கீழே அதாவது 10 வாட்ஸ் ஆக இருக்கும். அல்லது மிகவும் உயர்ந்ததாக 50 கிலோ வாட்ஸ் கொண்டதாக இருக்கும்.

Trial : (முன்னோட்டம்) வரப்போகும் நிகழ்ச்சிகளை முன்னோட்டமாய்த் தருவது.

Truck : (கிடைநிலை அசைவு) காமிரா அசைவு முறைகளில் ஒன்று. காமிராவின் ஒட்டுமொத்த நகர்வைக் கொண்டது. கிடைநிலையாக-செயலுக்கு இணையாக, ஒரு குழுவினர் சாலையில் ஓடும்போது முன்னே, பின்னே அனைவரையும் உள்ளடக்கும் வகையில் அவர்கள் ஓடும் வேகத்தில் எடுப்பது. செயலுக்கும் நேயர்களுக்கும் இடையில் நல்ல தொடர்பு பாதுகாக்கப்படும்.

Turn table : (சுழல் தட்டு மேசை) 12 முதல் 16 இன்ஞ்ச் வரை விட்டமுள்ள அமைப்புடையது. நவீன சுழல் தட்டு மேசைகளில் 3 வேகத் தெரிந்தெடுப் பான்கள் உள்ளன. அவை மேசையின் முன்னால் பொருத்தப்பட்டுள்ளன. இவை சுழல் தட்டுக்களின் பதிவச் சுற்றுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் அமைக்கப்பட்டுள்ளன. வானொலி நிலையத்தில் ஒலிபரப்புப் பணியில் சுழல்தட்டு மேசைகள் அடுத்தடுத்து இசைத்தட்டுக்களைக் குறிப்பிட்ட ஒலிவேகக் கட்டுப் பாட்டுடன் சுழல வைத்து ஒலிபரப்ப உதவுகின்றன.

Two step flow communication : (இருபடி கருத்துப் பரிமாற்றம்) தகவல் தொடர்பு சாதனத்தில் ஒரு படைப்பு வெளியிடப்படுகிறது. சமுதாயக் குழுக்களாகிய ஒவ்வொரு சிறு குழுவும் அதின் மையப்பிரதிநிதியாகத் தனிநபரைக் கொண்டிருக்கிறது.

அவர்களே அக்குழுவின் அதிகார பூர்வப் பிரதிநிதி (authority) ஆவர். இவ்வாறு ஒருவர் இருப்பது நாகரிக மாகவோ அல்லது நியாயப்படுத்தப்பட்ட ஒருவகைப் பகுப்பாகவோ இருக்கலாம். இந்தக் கருத்துருவாக்கத் தலைவர்கள் (opinion leaders) குழுக்களின் ஒவ்வொரு தனிமனிதர்களாலுமே தெரிந்தெடுக்கப் படுகின்றனர். இவர்களது கருத்துக்கள் பெரிதும் மக்களை ஈர்ப்பதாய் அமைகின்றன. மக்கள் இவர்களது கருத்தை மதித்து ஆர்வமுடன் கேட்கின்றனர். பொது மக்களைப் பொதுமக்கள் தொடர்பு சாதனங்கள் ஈர்க்கும் வாய்ப்புக்கள் மிகக் குறைவே. ஏனெனில் அந்த ஈர்ப்புமுறை மிகவும் மறைமுகமாகவே (நேரடியாகவன்றி) நிகழ்கிறது. கருத்துக்கள் பத்திரிகை களிலிருந்து வானொலியிலிருந்து தொலைக் காட்சியிலிருந்து, கருத்துருவாக்கத் தலைவர்களைச் சென்று சேர்கின்றன. அவர்களிடமிருந்து குறைவாகச் செயல்படும் பொது மக்களுக்குச் சென்று சேர்கின்றன. என்பர் கட்ஸ் மற்றும் லஸார்ஸ்.:.பீல்டு ஆகியோர். மக்கள் தொடர்பு சாதனங்களின் இத்தகைய விளைவு மாதிரி இருபடி கருத்துப் பரிமாற்றம் (Two step flow communication) எனப்படும்.

Two way : (இருவழி) ஒரு நிலைய அறையிலிருந்து வேறு ஒரு நிலைய அறைக்குள் இருப்பவருடன் நேர்முகம் காண்பது அல்லது உரையாடுவது.

Type area : (அச்சுப் பகுதி) பத்திரிகையின் எழுத்துப்பகுதி. ஒரு பக்கத்தில் செய்திகள் (மேட்டர்கள்) உள்ள பகுதியைக் குறிப்பது.

Type cage : (அச்சுமானி) எழுத்தின் பருமனைக் கணக்கிடும் அளவு.

Type design : (அச்சு அமைப்பு) அச்சு அமைக்கப்பட வேண்டிய முறை. எழுத்தின் கனத்திற்குத் தகுந்தாற் போல் அச்சின் கனம் மாறுபடும். ஆனால் உயரம் மாறாது. நான்கு பட்டையாக இருக்கும் ஒரு அச்சின் மொத்த உயரம் 2.4 செ.மீ இருக்கும். எல்லா எழுத்துக்களும் இதே உயரம் தான் இருக்கும். எழுத்தைத் தலை கீழாக மாற்றி கோர்க்கக் கூடாது என்பதற்காக அடையாளம் கண்டு பிடிக்க அச்சின் அடி மட்டத்தில் இருந்து 1 செ.மீ தள்ளி ஒரு பள்ளம் இருக்கும். இதை நெக் என்பார்கள். அடிமட்டம் ஒரே சமமாக இருக்கும். மேல் மட்டத்தில் எழுத்து தலைகீழாக இருக்கும் ; அச்சில் நேராக வரும்.

Type face : (அச்சு எழுத்து வகை) பலவிதமான எழுத்து வகையைக் குறிப்பது. தமிழ் மீடியம், தமிழ் ஆண்டிக், டைட்லிங், ஆங்கிலத்தில் யுனிவர்ஸ், லைட், மீடியம், போல்டு, எக்ஸ்ட்ரா, மீடியம் இட்டாலிக், மீடியம் கன்டென்ஸ்டு, போல்டு கன்டென்ஸ்டு, ராக்வெல் லைட், ராக்வெல் போல்டு, டைம்ஸ் போல்டு, டைம்ஸ் ரோமன், இட்டாலிக், ஆப்டிமா மீடியம், ஆப்டிமா போல்டு, சோவினியர் லைட், சோவினியர் மீடியம், சோவினியர் போல்டு, சோவினியர் எக்ஸ்ட்ரா போல்டு போன்ற பல்வேறு எழுத்து வகைகள் இருக்கின்றன.

Type family : (அச்சுக் குடும்பம்) குறிப்பிட்ட அச்சு எழுத்துக்களைக் குறிக்கும் சொல். அச்சின் அகலம், குறுக்கம், விரிவாக்கம், தன்மை ஆகியவற்றையும் குறிக்கும்.

Type high : (அச்சு உயரம்)

Type mark : (அச்சுக் குறிப்பு) கையெழுத்துப் `பிரதியில் கம்பாசிடருக்குக் கொடுக்கப்படுகின்ற விளக்கம். எந்த வகை எழுத்து,

எத்தனை புள்ளி எழுத்து போன்ற விவரக் குறிப்பு.

Type measure : (அச்சு அளவு) ஒரு பத்தியின் 12 புள்ளி எழுத்தில் பக்கத்தை மேக் அப் செய் என்று அச்சு எழுத்தின் அளவைக் குறிப்பது.

Type metal : (அச்சு உலோகம்) ஈயம், வெள்ளி, ஆன்ட்டிமனியம் ஆகிய உலோகங்கள் கலந்த ஒரு கூட்டு உலோகம், விரைவில் தேயாது. மீண்டும் உருக்கிப் பயன்படுத்தலாம்.

Type rules : (அச்சுக் கோடு) ஒரு 'எம்' அளவு நீளம் உள்ள கோடு. நிறுத்தக் குறிகளில் 'டாஷ்' குறிக்குப் பயன் படுகிறது.

Type scale : (அச்சுக் கோர்ப்பான்) பத்தியின் அளவுக்கு ஏற்ப எழுத்துக் களைக் கோர்த்து அடுக்க உதவும் கருவி. ஸ்டிக் என்றும் சொல்லப்படும்.

Type smith or type molder : (அச்சுத் தயாரிப்பவர்) அச்சு உருவங்களை வார்ப்பவர்.

Type specimen sheet : (அச்சு மாதிரிப் படம்) எழுத்து வகையைக் காட்டும் மாதிரிப் படம். எண்கள், நிறுத்தக் குறிகள் ஆகியவையும் இடம் பெற்றிருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்து வகைகளும் குறிக்கப்பட்டு இருக்கும்.

Typographical error : (அச்சுக் கோர்ப்புத் தவறு) எழுத்துக் கோர்க்கும் போது ஏற்படுகின்ற தவறு.

Typography : (அச்சுக் கலை) எழுத்து முகங்களைக் குறித்து ஆயும் கலை.

U

Undated story : (தேதி இல் செய்திக்கதை) ஒரே நேரத்தில் பல இடங்களில் நிகழும் செய்திக் குறிப்பு. சான்றாக தட்பவெப்பக் குறிப்பினைக் குறிப்பிடலாம். இத்தகைய செய்திக் கதைகள் தேதி வரியோ அல்லது குறிப்பு வரியோ கொண்டிருப் பதில்லை. அதற்குப் பதிலாக 'By the Associated press' என்பது போன்று செய்தி தந்த நிறுவனக்குறிப்பு குறிக்கப் பட்டிருக்கும்.

Under-dash matter : (சேர்க்கப்படு செய்தி) தயாரிக்கப்பட்ட, விளக்கமான செய்தி. இன்றைய செய்திக்கதை யுடன் சேர்க்கப்படக் கூடியது. சான்றாக, செய்திக் கதையை இடவல ஒழுங்கு பண்ணும் பொருட்டு ஒரு இறப்பு குறித்த சிறிய விளம்பரத் தினுடன் அது சேர்க்கப்படலாம். அத்தகைய குறிப்பு முன்பு புதுச் செய்திக் கதையினின்று ஒரு சிறு கோடு மூலம் பிரிக்கப்பட்டது.

Universal desk : (பொது மேசை) வாழ்க்கைக் குறிப்பு, விளையாட்டு போன்ற சிறப்புக் கட்டுரைகளின் எழுத்துப் படி தவிர எல்லா எழுத்துப்படியும் கையாளப்படும் மேசை.

Updating : (அன்றைக்குரியதாக்கல்) பழைய செய்திகளைப் பொலிவூட்டுதல் ; ஒரு 2ஆம் நாள் கோணத்,த்தைப் பயன்படுத்தும் முறை என அழைக்கப் படுகிறது. சான்றாக ஒரு நபரின் இறப்பு ஒரு காலை நாளிதழில் விளம்பரப் படுத்தப்பட்டால் மாலை நாளிதழ் அச்செய்தியைத் திரும்ப எழுதி வெளி யிடும் முறை அவரது ஈமக்கிரியைக் கான ஏற்பாடுகள் குறித்த விளக்கங் களைக் கொண்டதாக அமையலாம்.

UPI : (யு.பி.அய்.) யு.பி.அய் எனப்படும் செய்தி நிறுவனத்தின் சுருக்கக் குறியீடு. அமெரிக்கச் செய்தி நிறுவனம் இது. 1909 இல் தொடங்கிய யுனைடெட் பிரஸ் அசோசியேசன் மற்றும் 1915 இல் தொடங்கிய இண்டர்நேஷனல் நியூஸ் சர்வீஸ் ஆகிய இரு நிறுவனங்களும் இணைந்து உருவான நிறுவனம் ஆகும். மெக்சிகோவைச் சேர்ந்த மரியோ வாஸ்கிஸ்ரானா என்பவர் 1960இல் இவ்விணைப்பு நிறுவனத் தைத் தொடங்கினார். இந்தியா, ரஷ்யா தவிர மற்றைய நாடுகளுக்கு யு.பி.அய் நேரடியாகச், செய்திகளை அனுப்பு கிறது. இதன் தலைமை இடம் நியூயார்க்.

Upper case : (தடித்த எழுத்துக்கள்) ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களான தலைப்பு எழுத்துக்களைக் குறிக்கும்.

Up style : (பெரிய எழுத்தச்சு) நிறைய தலைப்பு எழுத்துக்கள் உபயோகித்து எழுதப் பட்டுள்ள ஒரு செய்தித் தாளின் நடையைக் குறிக்கும்.

V

Variety : (பல்சுவை) நிகழ்ச்சிக் குள்ளேயே அமையும் பல்சுவை. நன்றாகத் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி ஒருமையுடைய நிகழ்ச்சிக்குள்ளேயே பல்சுவையைக் கொண்டுவர இயலும். சான்றாக இசை தொடர்பான ஒரு நிகழ்ச்சியிலேயே பல்வகை நிகழ்ச்சிகள் அமைத்தல்.

Vawn-up : (தயார்ப்படுத்தல்) நேயர்கள் நிகழ்ச்சியைக் கேட்கவைக்க அவர் களைத் தயார்ப்படுத்துவது.

VCR : (வி.சி.ஆர்) தேவையான நிகழ்ச்சிகளைக் காட்சியுடனும் ஒலியுடனும் பதிவு செய்து வைத்துக் கொண்டு தேவைப்பட்ட நேரங்களில் பார்க்க உதவும் கருவி. நேரடியாக மக்களுக்குத் தேவையான திரைப்படம் போன்றவற்றை விநியோகம் செய்ய உதவி செய்து தொலைக்காட்சி நிலையங் களை முந்திக்கொள்கிறது.

VCU : (வெகு அருகாமைக் காட்சி) Very extreme Close-Up என்பதன் சுருக்கம்.

VHF : (மிக உயர்ந்த அதிர்வு) 30 மெகா ஹெர்ட்ஸிலிருந்து 300 மெகா ஹெர்ட்ஸ் வரை வானொலி தொலைக் காட்சிகளின் ஒலி/ஒளிபரப்புக்கள். Very High Frequency என்பதன் சுருக்கம்.

Video : (காட்சி) ஓர் உருவைப் பெற்று தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்கு உரிய வசதி. வீடியோ-'நான் பார்க் கிறேன்' என்ற பொருளைத் தரும் இலத்தீன் சொல்.

Video console : (வீடியோ கட்டுப்பாடு) தொலைக்காட்சி நிலையத்தில் உள்ள பார்த்தல் தொலைசாதனக் கட்டுப் பாட்டுத் திட்டம். உள்ளே அனுப்பும் செய்திக் கூறுகளைத் தெரிவு செய்யவும் பொதுவாக பல்வேறு படத் தொடர் நிகழ்ச்சிகள் உள்ளே அனுப்பப்படுவனவற்றில் ஒரு படத் தொடர் நிகழ்ச்சியைத் தெரிவு செய்ய தேவையானபடி தொகுக்கவும் அதனைச் சரிப்படுத்தவும் எல்லாவித சிறப்பு விளைவுகளையும் உருவாக் கவும் பயன்படும். சில நேரங்களில் கன்சோல் ஒரே நேரத்தில் இரண்டு காட்சிப் படங்களைக் காட்ட உதவும். சான்று : 1) செய்தி வாசிப்பவர்+ பின்னணிப் படம் 2) தொலைபேசி உரையாடல்கள் (2 பேர் பேசுவதை ஒரே நேரத்தில் திரையில் காட்ட)

Video display terminal : (காட்சிப் படங் காட்டி) காட்சிப் படங்காட்டி ஒரு டைப்ரைட்டர் போன்ற விரிவாக்கத்தை ஒரு சிறிய தொலைக் காட்சித் திரை போன்ற ஒரு அமைப்புடன் சேர்த்துக் கொண்டுள்ளது. எழுதவும், திருத்தவும், மாற்றவும் செய்திக் கதைகளைத் தொகுக்கவும் செய்திகளைக் கணிப்பொறி அமைப்பு வழியாக அச்சுக்கோர்ப்பு அறைக்கு வழிப்படுத்தி அனுப்பவும் பயன்படுகிறது. ஞாபக வங்கிகளில் செய்திகளைச் சேமித்து வைக்கவும் செய்கிறது. (காண்க : Cathode ray tube).

Video tape : (ஒளிப்பதிவு நாடாக்கள்)

ஒளிப்பதிவு நாடாக்கள் 1950இல் வந்தன. அப்போது ஒரு புரட்சி எதிர்பார்க்கப் பட்டது. தொலைக் காட்சித் தயாரிப்பின் பல துறைகளில் ஒளிப்பதிவு நாடா திரைப்படத்தை இடம் மாற்றியது. ஆயினும் திரைப்படங்கள்- பொழுதுபோக்குத் துறை நிகழ்ச்சி களில், (குறிப்பாக நாடகம், செய்தி,

வணிக விளம்பரம்) நிலைத்து நிற்கின்றன.

Vision mixer : (காட்சிக் கலப்பாளர்)

Visualization : (படமாக ஆக்கும் கலை)

Visual literacy : (காட்சி எழுத்தறிவு) கிரீன்.'.பீல்டு அண்மையில் நடத்திய ஆய்வின்படி தொலைக்காட்சி வாசிப்பு, எழுத்தறிவு முதலியவற்றையும் பார்வை எழுத்தறிவின் புதிய உத்தி களையும் போதிக்கத் தூண்டும் ஒன்று என்பார்.

Voice over : (ஒலிஇல் காட்சி ஓட்டம்) தொலைக்காட்சிச் செய்தி அமைப்புத் திட்டத்துடன் தொடர்புடையது.. செய்திப் பகுதியிலேயே நிகழ்ச்சித் தொடக்கம் முதலில் அமைந்திருக்கும். சில சமயம் காட்சிக் கூறு அமைதியாக எவ்வித சப்தமுமின்றி ஓடுமாறு செய்தி அமையும். செய்தியாளர்கள் பேச வேண்டாத இப்பகுதி voice-over என்று குறிப்பிடப்பட்டிருக்கும். சில சமயம் இடத்தை மட்டும் காட்டி நிருபரின் குரல் பின்னணிக் குரலாக ஒலிபரப்பப் படலாம் (நிருபர் காட்டப்படு வதில்லை). செய்திக் கதையின் பெரும் பகுதி இவ் வுத்தியைப் பயன்படுத்தித் தொலைக் காட்சியில் காட்டப்படுகின்றன. படங்கள் அசையாத படங்களாகவோ, வரைபடங்களாகவோ, புள்ளி விபரப் படங்களாகவோ இருக்கலாம். நிகழ்ச்சி நடந்த இடத்தில் எடுக்கப்பட்டு ஸ்டூடியோவில் தொகுக்கப்பட்ட தாகவும் இருக்கலாம்.

Voice report : (நிருபர் செய்தி வாசிப்பு) நிருபரின் சொந்தக் குரலில் செய்தியை ஒலிபரப்புக்காகத் தருதல்.

Volume : (ஒலி அளவு) எழுதுபவர் எழுத்தறிக்கையில் அளவைக் குறிப்பிடு வதன் மூலம் ஒலி அளைவக் கட்டுப் படுத்துகிறார். சத்தமாக அல்லது இரகசியமாக என எழுதாவிடில் எல்லாமே ஒரே அளவில் பேசப்பட்டு விடும். சான்றாக ஆட்டோமொபைல் காட்சி. கார் ஒலி காட்டப்படுவதன் மூலம் காட்டப்படுமானால் அதைக் குறைத்துப் பின்னணி ஒலியாக மட்டும் ஆக்கி பாத்திரத்தின் செயலுக்கு இடையூறு இல்லாமல் ஆக்குதல்.

Vu meter : (வால்யூட் யூனிட் மீட்டர்) ஒலி அளவையைக் குறிப்பிடும் கருவி.

W

Wave length : (வானொலி அலை வரிசைகள்) ஒலி அலையின் நீளம்.

Web : (காகித உருளச்சு) தொடர்ந்து காகிதச் சுற்றாலான உருளையில் அச்சிடும் அச்சு இயந்திரம்.

Wide angle : (அகல் கோணப் பார்வை) விரிந்த பார்வை (எ.கா. மனிதக்கண்). தொலைக்காட்சிக் கண்ணான காமிராவுக்கு இது இல்லை.

Widow : (தனிச்சொல்) ஒரு பாராவின் இறுதிவரியில் இறுதியில் தனித்து நிற்கும் ஒரு சிறு சொல் அல்லது சொல்லின் பகுதியைக் குறிக்க அச்சு அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் சொல். குறிப்பாக அது பிறழ்பிரிப்பாக வரும்போது இவ்வாறு குறிப்பிடப்படும்.

Wild : (தனி) தனியாக இருக்கும் ஒரு செய்திக்கதை நாளிதழில் எந்த ஒருஉள் பக்கத்திலும் வைக்கப்படும்.

Wild track : (தனிப்பதிவு) திட்டமிடாமல் ஒலிக் குறிகளை ஒலிப்பதிவு செய்து வைத்துக்கொள்வது.

Wipe : (அழி) தொலைக்காட்சிகளைப் பதிப்பிக்கும் உத்திகளுள் ஒன்று. ஒரு படத்தை மற்றொரு படம் வந்து அழித்தல். எந்தத் திசை, கோணத்திலிருந்தும் அழித்தல் நிகழலாம். தொலைக்காட்சியில் காட்சி மாற்று முறையில் மிகவும் சக்திவாய்ந்த முறை. ஒரு காட்சி மற்றொன்றை இடம்பெயரச் செய்கிறது. தொடர்ச்சியில் எந்தவித இடையீடும் இன்றி ஒன்று மற்றொன்றைத் தள்ளுவது போன்ற தோற்றம் ஏற்படுகிறது. முதல் காட்சி இருப்பது போலத் தோன்றும். அதை மேலும் நேயர்கள் பார்க்க முடியாவிடினும் அழிக்கும் இடத்திலிருந்து வலதுக்கு அல்லது வலதிலிருந்து இடதுக்கு அல்லது மேலிருந்து கீழ் அல்லது கீழிருந்து மேல் நகரும். அல்லது நடுவிலிருந்து நீர்ச்சுழல் போல (கல்லெறியப்பட்ட நீரலைபோல) அமையும். அழித்தல் தோற்ற உத்தியின் வடிவத்திற்கு முடிவில்லை. மின்வசதி உத்திகளைப் பயன்படுத்துகிறது இம்முறை. எலெக்ட்ரானிக் ஸ்விட்சர் இவற்றை உருவாக்கப் பயன்படுகிறது.

Wireless links : (கம்பியில்லாத் தொடர்புகள்)

Wrap : (செய்தித் தொடர்ச்சி) ஒரு பத்தியிலிருந்து அடுத்த வலப்பக்கம் பத்திக்குச் செய்திக்கதையைத் தொடர்ந்து அமைத்தல்.

Wrap up : (முடித்தல்) பொதுவாக முடித்தலைக் குறிக்கும். அனைத்து எழுத்துப் படிகளும் எழுத்துப்படி மேசையிலிருந்து அச்சுக்கோர்ப்பு அறைக்குச் சென்ற பின்னர் ஒரு வெளியீடு முடிவுக்கு வருகிறது. ஒரு செய்திக் கதை அதன் அனைத்துக் குறிப்புக்களும் செய்திக் கதைக்குள் அமைக்கப்பட்ட பின்னர் முடிகிறது. 'round up' என்றும் அழைக்கப்படுகிறது.

Wrong font : (தவறான அச்சு) அச்சுக் கோர்க்கப்பட்ட ஒரு சொல்லில் ஒரு எழுத்து மட்டும் தவறாக வேறு ஒரு அச்சாக அமைதல்.

X

X-correct : (எக்ஸ்-கரெக்ட்) ஒரு செய்திக்கதையின் பிழை திருத்தப் பிரதி. அதாவது மாற்று எழுத்துப் படியுடன் இப்பிழைதிருத்தப்பட்ட பிரதியும் அனுப்பப்படும். அச்சுக்கோர்ப்பு அறையில் உள்ளவர்களுக்கு, எங்கே எப்படி மாற்று எழுத்துப்படி கையாளப் பட வேண்டும் என்பதைக் காட்டும் குறிப்புக்கள் இதில் இடம் பெற்றிருக்கும்

Y

YUVA VANI : தமிழில் இளையபாரதம் என்ற தலைப்பில் ஒலிபரப்பாகும் வானொலி நிகழ்ச்சிகள்.

Z

Zoom : (நெகிழ்வு அசைவு முறை) காமிரா அசைவு முறைகளில் ஒன்று. காமிராவில் ஒரு குறிப்பிட்ட லென்ஸால் (ஜூம் லென்ஸ்) உண்டாக்கப் படுகிறது. காட்சியைத் தொடர்ச்சியாக ஓடிக்கொண்டிருக்கும்போதே அருகாக அல்லது தூரமாக மாற்ற அனுமதிக் கிறது இம்முறை. அகன்ற படக்காட்சி யிலிருந்து (wide shot) அண்மைக் காட்சிக்கு மாற்றுவதால்-நெகிழ்ந்து நெருங்குவதால் (zoom in) காட்சியில் ஒரு ஆழ்ந்த தொடர்பை வாசகனுக்கு உண்டுபண்ணி வாசகனைக் காட்சிக்குள் இழுக்கிறது. காட்சியைக் குறுக்கி வாசகனைக் காட்சிக்குள் கொண்டு வருகிறது. முந்திய படக்காட்சிக்கும் இதற்கும் இடையில் ஒரு இடையீடு (cut) உண்டு பண்ணினால் முந்திய காட்சிக் கருத்துக்களை இக்காட்சியில் வாசகன் பொருத்திப் பார்க்க இடர்ப்படுவான். நெகிழ்வு அசைவு முறை இதைத் தவிர்த்து அப்படியே அகல் (wider) காட்சியிலிருந்து குறுகிய (narrow) காட்சி எடுக்க உதவுகிறது.

Zoom out : (ஜூம் அவுட்) நெகிழ்ந்து நெருங்குதலுக்கு நேர்மாறுதல். இம்முறை பெரிய இடத்தில் உள்ள ஒவ்வொரு பொருளையும் முதலில் பக்கத்தில் காட்டி விளக்கிவிட்டுப் பின் இணைத்துப் பொருளையும் அவ் விடத்தில் இருக்கும்படி அகன்ற இடமாகக் காட்டுதல். செயலை உணர்வுபூர்வமாகக் காட்டி பின் முடிவை இடத்தோடு காட்டுதல்.

Zoom in - நெகிழ்ந்து நெருங்குதல்
Zoom out - நெகிழ்ந்து அகல்தல்
Zoom ratio - நெகிழ்வு விகிதம்

துணை நூற் பட்டியல்

நூல்கள்

தமிழ்

1. அறந்தை நாராயணன், *தமிழ் சினிமாவின் கதை*,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, முதற்பதிப்பு, நவம்பர் 1981.

2. ஆதித்தனார், *இதழாளர் கையேடு*,ராணிமுத்து வெளியீடு, சென்னை, மூன்றாம் பதிப்பு, ஜூலை 1986.

3. காந்திநாதன், மு., *அச்சு இயல்*, சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழக வெளியீடு, சென்னை, முதற் பதிப்பு, நவம்பர், 1985.

4. குருசாமி, மா.பா. *இதழியல் கலை*, வண்ணன் வெளியீடு, திருச்செந்தூர், முதற் பதிப்பு, ஏப்ரல், 1988.

5. கோதண்டபாணி, இரா., *இதழியல்*, கற்பகம் வெளியீடு, மதுரை, இரண்டாம் பதிப்பு, நவம்பர், 1987.

6. சச்சிதானந்தன், வை., *மேலை இலக்கியச் சொல்லகராதி*,மாக்மில்லன் இந்தியா லிமிடெட், சென்னை, முதற் பதிப்பு, 1983.

7. சம்பந்தன்,மா.சு., *அச்சுக்கலை*, தமிழர் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, மே, 1976.

8. நல்லதம்பி,வெ., *தொலைக்காட்சியும் பிற தகவல் துறைகளும்*, வள்ளுவன் வெளியீட்டகம், சென்னை, டிசம்பர் 1989.

9. முனுசாமி நாயுடு,சி.வி., *அச்சுத் தொழில் என்னும் பதிப்பிலக்கண வினா விடை*, சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழக வெளியீடு, சென்னை, முதற் பதிப்பு, செப், 1985.

10. லேனா தமிழ்வாணன்(பதிப். ஆசி.), *பத்திரிகையுலகக் கலைச் சொற்கள்*, மணிமேகலைப் பிரசுரம், சென்னை, முதற் பதிப்பு, 1987.

11. விஜயராணி,ஆர்., ரெங்கநாதன்,என்., *விளம்பரக் கலைச்சொற்கள்*, சங்கப் பலகை வெளியீடு, மதுரை, முதற்பதிப்பு, 1995.

12. *Aggarwal, S.K., Press at the cross roads in India,* UDH Publishing House, Delhi, First Publication, 1988.

13. Ahuja, S.P., *Paper Industry in India,* The Institute of Economic and Market Research, New Delhi.

14. Bruch H. Westley, *News Editing,* Oxford and I.B.H. Publishing House, New Delhi, 1968.

15. Chaturvedi, J.P., *The Indian Press at the cross roads,* Media Research Associates, New Delhi, First Edition, Jan. 1992.

16. David Barrat, *Media Sociology,* Tavistock Publications, New york, 1986.

17. David Keith Cohler, *Broadcast Journalism,* A Guide for the presentation of Radio and Television News, Prentice Hall Inc., New Jersey, 1985.

18. Denis Mcquail, *Mass Communication Theory, An Introduction,* SAGE Publications, New Delhi, Second Edition, 1989.

19. Durga Das Basu, *Law of the Press in India,* Prentice Hall of India Pvt Ltd., New Delhi, 1980.

20. John Hohenberg, *The Professional Journalist,* Oxfor of IBH Publishing Co. P. Ltd., New Delhi, Fourth Edition, 1978.

21. John R. Bittner, *Mass Communication An Introduction,* Prentice Hall, Inc. New Jersy, Fifth Edition, 1989.

22. Kevel J. Kumar, *Mass Communication in India,* Jaico Publishing House, Bombay, Second edition, 1989.

23. Mary B. Casstia & Molefi K. Asante, *Mass Communication Principles and Practices,* Macmillan Publishing Co. USA, 1979.

24. Mehta, D.S., *Mass Communication and Journalism in India,* Allied Publishers Pvt. Ltd., Madras, First Edition, 1979.

25. Philips Davision, W., (et al), *Mass Media Systems and Effects*, Praeger Publishers, New York, 1976.

26. Puri, G.K., *Journalism*, Competition Success Review Pvt. Ltd. New Delhi.

27. Ramachandra Aiyar, R., *Quest for News*, The Macmillan Company of India Ltd., Madras, First Edition, 1979.

28. Robert L. Hillard, *Writing for T.V. & Radio*, Hastings House Publishers, New york, 1976.

29. Roger L. Walters, *Broadcast Writing Principle and Practice*, Random House, New york, First Edition, 1988.

30. Shrivastava, K.M., *Radio and TV Journalism*, Sterling Publishers Pvt. Ltd., New Delhi, 1989.

31. Tim Madge, *Beyond the BBC, Broadcasters and the Public in the 1980s*, The Macmillan Press Ltd., London, 1989.

32. William Click, J., & Russel N. Baird, *Magazine Editing and Production*, w.m.c. Brown Publishers, Dubuque, Lowa, Fourth edition, 1986.

கட்டுரைகள்

32. செல்வம், கோ., *"வானொலியுள் வழங்கு சொற்கள்"*மக்கள் தகவல் தொடர்பியல் புத்தொளிப் பயிற்சி வகுப்பு, தமிழியல் துறை. பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி. 30.3.1990.

34. நல்லதம்பி, வெ., *"தொலைக்காட்சியில் பயன்படுத்தப்படும் கலைச் சொற்கள்"*மேற்குறிப்பிட்ட பயிற்சி வகுப்பில் வழங்கப்பட்டது. 30.3.1990.

35. *"தொலைக்காட்சி அமைப்புக்கள்*, பல்வேறு வகையான ஒளிபரப்பு மற்றும் உத்திகள்" மேற்குறிப்பிட்ட பயிற்சி வகுப்பில் வழங்கப்பட்டது. 30.3.1990.

அகராதிகள்

36. *Dennis Longley and Michael Shain, Macmillan Dictionary of Information Technology*, Macmillan Press, London, Second edition, 1985.

37. *Gurmeet Singh Maan, Dictionary of Journalism and mass comunication,* Harnam pulications, New Delhi, First Editon, 1990.

38. James Watson and Anne Hill, *A Dictonary of Communication and Media Studies,* Edward Arnold Publishers Pvt. Ltd., England, 1989 (First Indian Reprint 1991).

39. *Mc Graw-Hil Encylopaedic of Science and Technology,* MC Graw. Hill Book Company, New York, Vol 10, 5th Edition, 1982.

ஆய்வேடு

40. ச. அருண்பிரசாத், *வலைப்பின்னல்கள்,*இளம் அறிவியல் பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு, இதழியல்மற்றும் அறிவியல்தகவல் தொடர்புத் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ஏப்ரல், 1995.

41. Arulselvan, S., *A Study on the Typography and make-up strategies adopted in a vernacular daily,* Unpublished M.A., Dissertation submitted to the Dept. of Communication, PSG College of Arts & Science, Coimbatore, April, 1985.

இதழ் சார்ந்த பிற வெளியீடுகள்

42. இதழியல், ஆரத்தி இதழியல் பயிற்சிக் கழக வெளியீடு, மதுரை.

43. கிருஷ்ணமூர்த்தி (பதிப்.ஆசி.), *தினமலர் இயர் புக்,* திருநெல்வேலி, 1994.

44. *மனோரமா இயர் புக்*5-ஆம் ஆண்டு வெளியீடு, மலையாள மனோரமா, கோட்டயம், கோழிக்கோடு, 1995.

45. *The Hindu Cares for you, New Technology in Action,* A booklet published by Hindu.

இதழ்

46. *குங்குமம்,* 1-7 மார்ச், 1991